www.padippakam.com

இருபதாம் நூற்றாண்டுத் தமிழன்

# கிழக்கும் மேற்கும்

அனைத்துலகத் தமிழ்ப் படைப்புகளின் தொகுப்பு



TWAN

தமிழர் நலன்புரி சங்கம்

லண்டன், சித்திரை 1997

படிப்பகம்

www.padippakam.com


# Rai & Co.

## SOLICITORS

158 High Road, Willesden, London NW10 2PB

Legal Aid

LEGAL AID

Legal Aid

**We undertake Legal Aid Work**

- CIVIL & CRIMINAL COURT WORK
- IMMIGRATION
- MATRIMONIAL/DIVORCE/DOMESTIC VIOLENCE
- LANDLORD & TENANT
- PROPERTY TRANSACTIONS
- POLICE STATION ATTENDANCE
- ACCIDENT/INJURIES

For more details, please ring

*Mr. S. Rai. Sivakadacham Attorney-at-Law*

*or*

*Mrs. Gowri Sivakadacham LL B., B.A., B.L. (Madras)*

**158 High Road, Willesden**
**London NW10 2PB**

**Tel: 0[illegible]30 4540 Fax: 0181-830 1948**


படிப்பகம்

www.padippakam.com

இருபதாம் நூற்றாண்டுத் தமிழன்

# கிழக்கும் மேற்கும்

அனைத்துலகத் தமிழ்ப் படைப்புகளின் தொகுப்பு

TWAN

Tamil Welfare Association (Newham) U.K.

தமிழர் நலன்புரி சங்கம் (நியூஹாம்) ஐ.இ.

லண்டன், சித்திரை 1997

படிப்பகம்

www.padippakam.com

TWENTIETH CENTURY THAMILAN
# EAST AND WEST

**a book of international tamil writings**


| | |
|---|---|
| **Published:** | April 1997 |
| **Publishers:** | Tamil Welfare Association (Newham) UK<br>33A Station Road<br>Manor Park<br>London E12 5BP<br>United Kingdom |
| **Phone:**<br>**Fax:** | 0181- 478 0577<br>0181- 478 0577 |
| © | Authors |
| **Compilation:** | R Pathmanaba Iyer |
| **Editorial Board:** | V Janarthanan<br>M Jeyakumaran<br>K Krishanarajah<br>R Pathmanaba Iyer<br>M Pushparajan<br>Yamuna Rajendran |
| **Layout, Illustrations, Cover Design:** | K Krishnarajah |
| **Typesetting:** | Transnews International Ltd.<br>P O Box 895, Harrow, Middlesex HA2 0YU |
| **Consultation:** | S Mahalingasivam<br>N Kannan (Germany) |
| **Printers:** | Ability Printing<br>236 Imperial Drive<br>Rayners Lane<br>Harrow, Middlesex HA2 7HJ |




படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே...


| | | | |
|---|---|---|---|
| 01. கி.பி. 2000இற்குப் பிற்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தில் புலம்பெயர் தமிழர்கள். | கி. செ. துரை | டென்மார்க் | 01 |
| 02. அடுத்த ஆயிரத்தாண்டில் | மைத்ரேயி | நோர்வே | 05 |
| 03. புலம்பெயர்ந்த சூழலில் எங்கள் மொழியும், குழந்தைகளும் | சி. சிவரஞ்சித் | நோர்வே | 06 |
| 04. புலம்பெயர்ந்த தமிழர்களின் எதிர்காலம் - அடுத்த தலைமுறையினர் பற்றி ஒரு கேள்வி | அர்ச்சுனா | நோர்வே | 07 |
| 05. எல்லையும் தொல்லையும் | அழகுக்கோன் | கனடா | 09 |
| 06. நாராய் நாராய் | சி. சிவசேகரம் | இங்கிலாந்து | 09 |
| 07. விசாரம் | மு. பொன்னம்பலம் | இலங்கை | 10 |
| 08. துடிப்பு | சன்னதமாடி | டென்மார்க் | 12 |
| 09. கவிதை | ஆதவன் | டென்மார்க் | 12 |
| 10 தகவல், தமிழ், வாழ்வு | நா. கண்ணன் | ஜேர்மனி | 13 |
| 11. கருக்கல் பொழுதும் காத்திருப்பும் | என். கே. மாகாலிங்கம் | கனடா | 17 |
| 12. பார்த்திபனின் பதின்னான்கு சிறுகதைகளை முன்வைத்து புலம்பெயர் தமிழ் இலக்கியம் குறித்து | யமுனா ராஜேந்திரேன் | இங்கிலாந்து | 21 |
| 13. வாழ்தலும் இருத்தலும் | மு. பொன்னம்பலம் | இலங்கை | 37 |
| 14. காதலை விடுதலை செய்த கவிஞர் | சி. சிவசேகரம் | இங்கிலாந்து | 38 |
| 15. பெண்கள் எனப்படும் உடல்கள்: பால், இனம், நாடு பற்றிய சில சிந்தனைகள் | ஸி. எஸ். லக்ஷ்மி | இந்தியா | 39 |
| 16. ஓவியம் | போஸ் | சுவிற்சர்லாந்து | 46 |
| 17. பாரதி ஒரு மறுவாசிப்பு | இந்திரா பார்த்தசாரதி | இந்தியா | 47 |
| 18. A Breach of Trust - The Poetics of Translation | செல்வா கனகநாயகம் | கனடா | 51 |




படிப்பகம்

www.padippakam.com




| | | | |
|---|---|---|---|
| 19. Faces From My Travels | செல்வராஜா குணாளன் | இங்கிலாந்து | 54 |
| 20. எலுமிச்சை | அ. முத்துலிங்கம் | கென்யா | 59 |
| 21. ஆரம்ப காலக் கவிதைகள் | அம்பை | இந்தியா | 65 |
| 22. விருந்து | லெ. முருகபூபதி | அவுஸ்திரேலியா | 69 |
| 23. இயேசுவுக்கு பொலிஸ் காவல் | ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் | இங்கிலாந்து | 73 |
| 24. கண்ணீர் சிந்தும் நேரம் | அ. பாலமனோகரன் | டென்மார்க் | 77 |
| 25. ஓவியம் | போஸ் | சுவிற்சர்லாந்து | 80 |
| 26. கவிதை | முல்லை அமுதன் | இலங்கை | 82 |
| 27. முள் | சூதிலன் | இலங்கை | 82 |
| 28. வண்ண ருதுவும் வண்ண மலர்களும் | நா. கண்ணன் | ஜேர்மனி | 83 |
| 29. துணையக்தி | ஸ்ரீதரன் | அமெரிக்கா | 88 |
| 30. வீழ்ச்சி | மு. புஷ்பராஜன் | இங்கிலாந்து | 94 |
| 31. காலமுதிர் | அ. இரவி | ஜேர்மனி | 97 |
| 32. ஓவியம் | போஸ் | சுவிற்சர்லாந்து | 100 |
| 33. கருவினுள் உயிராய் | சு. வில்வரெத்தினம் | இலங்கை | 103 |
| 34. இழவுக்கும் தொழிலுக்கும் வ. செ. | பார்த்திபன் | ஜேர்மனி | 104 |
| 35. காலம் | சோதியா | | 107 |
| 36. அன்னை | ஜெயமோகன் | இந்தியா | 108 |
| 37. புகைப்படங்கள் | சாந்தன் | இங்கிலாந்து | 111 |
| 38. திரும்புதல் | மனுஷ்ய புத்திரன் | இந்தியா | 112 |
| 39. பானுக்குட்டி | புவனன் | பிரான்ஸ் | 113 |
| 40. ஓவியம் | மகா | நோர்வே | 115 |
| 41. போதிமரம் | கருணாஹரமூர்த்தி | ஜேர்மனி | 117 |
| 42. புகைப்படம் | காயத்ரி கொன்ஸ்ரன்ரைன் | இங்கிலாந்து | 122 |
| 43. புலம்பெயர்ந்து வந்ததனால் | வேலணையூர் பொன்னண்ணா | டென்மார்க் | 125 |
| 44. சொற்களும் பொருளும் | மு. புஷ்பராஜன் | இங்கிலாந்து | 125 |
| 45. வேஷம் | குமார்மூர்த்தி | கனடா | 126 |
| 46. பயணம் | ரவீந்திரன் | சுவிற்சர்லாந்து | 128 |
| 47. புகைப்படம் | காயத்ரி கொன்ஸ்ரன்ரைன் | இங்கிலாந்து | 132 |
| 48. Valentine's Day | இராஜமோகனா | நோர்வே | 133 |
| 49. இரண்டு | கிருபா | இங்கிலாந்து | 134 |
| 50. நாளை அது விலை போகும் | ராஜன் வரதராஜா | இங்கிலாந்து | 134 |
| 51. ஓவியம் | போஸ் | சுவிற்சர்லாந்து | 135 |
| 52. தீக்குளிப்பு | தா. பாலகணேசன் | பிரான்ஸ் | 136 |
| 53. நாடோடிகள் | கி. பி. அரவிந்தன் | பிரான்ஸ் | 137 |
| 54. வேலை இழந்து.... | அமுதன் | சுவிற்சர்லாந்து | 144 |




படிப்பகம்

www.padippakam.com

# தொகுப்புரை

மனிதகுலம் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நின்று கொண்டிருக்கிறது. அடுத்து வரும் ஆயிரமாண்டுகளை வரவேற்கவும், அந்த ஆயிரமாண்டுகளில் மனிதகுல மேம் பாட்டிற்கான செயற்திட்டங்களை வகுப்பதிலும் மேற்கு நாடுகள் ஈடுபட்டுள்ளன. மூன்றாம் உலகின் மனிதனான தமிழன், இக்காலப்பரப்பில் எங்கு காலூன்றி நிற்கின்றான்?

நம்முன் விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சியின் சாதக, பாதகங்கள் விரிந்து கிடக்கின்றன. விடுதலை அரசியல் நிலவிய சமூகப் பிரதேசங்கள் சிதறுண்டு கிடக்கின்றன. தமிழன், இந்த நூற்றாண்டின் பல்வேறு நிகழ்வுகளை எவ்வாறு சுவீகரித்துக்கொண்டான், எவ் வாறு எதிர்வினை கொண்டான்?

தேசியம், சூழலியல், தகவல் தொழில்நுட்பப் புரட்சி, புலம்பெயர்வு, பெண்நிலைவாதம் போன்றன இதுவரை அவன் வாழ்வில் ஏற்படுத்திய பாதிப்புக்கள் என்ன?

இருபத்தியோராம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய மேம்பாட்டிற்கு, ஈழத் தமிழ், இந்தியத் தமிழ், மலேசியத் தமிழ் என்ற பிராந்திய வேறுபாடுகளை எல்லாம் தாண்டி, தமிழன், இன்று சிந்திக்க வேண்டிய காலத்தில் வாழ்கிறான்.

இப்படியான சிந்தனைகளின் விளைவாகவே, எங்கெங்கு தமிழர்கள் வாழ்கிறார்களோ, அங்கங்கெல்லாம் நிலவும் சிந்தனைகளை, படைப்புகளைத் திரட்டித் தர முயன்றோம். பல்வேறு சமூக, கலாசார, அரசியல் நம்பிக்கையுள்ளவர்களிடமிருந்தும் படைப்புகளைக் கோரினோம்.

எமது எதிர்பார்ப்புகள் முழுமையும் நிறைவேறாவிட்டாலும்கூட, கணிசமான எண்ணிக்கை யில் படைப்புகளைத் திரட்டித் தர முடிந்திருக்கிறது. இத்தொகுப்பில் 11 கட்டுரைகள், 19 சிறுகதைகள், 15 கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

தமிழர்தம் கலாசார வாழ்வில் அதிகம் கவனிப்புப் பெறாத ஓவிய, புகைப்படக் கலைகள் குறித்தும் அக்கறை காட்டியுள்ளோம். மூன்று கலைஞர்களது புகைப்படங்களும், தம் வாழ்வின் நெருக்கடிகளை ஓவியங்களில் வெளியிடும் மூவரின் படைப்புக்களும், இங்கு இடம்பெறுகின்றன.

இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, சுவிற்சர்லாந்து, கென்யா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடாத் தமிழர்களின் படைப்புகள் இத்தொகுப் பில் இடம் பெறுகின்றன. சிங்கப்பூர், மலேசியா, தென்னாபிரிக்கா, பிஜித்தீவுகள், அந்த மான் போன்ற இடங்களிலிருந்தும் நாம் படைப்புகளை பெற விரும்பினாலும் கூட நடைமுறை யில் எம்மால் அதைச் சாத்தியப்படுத்த முடியவில்லை. அதில் எமக்கு வருத்தமே.

இந்தப் படைப்புகள் தொடர்பாக ஆசிரியர் குழு ஒரு கருத்தொத்த அணுகுமுறையை கைக்கொண்டது. படைப்புகளை அனுப்பிவைத்த அனைத்துப் படைப்பாளிகளினதும் ஆக்கங்கள் இங்கு இடம்பெறுகின்றன. சில அடிப்படையான சொற்கள் சொற்றொடர்கள் எழுத்துக்கள் என்பவற்றை மட்டும் நாங்கள் படைப்பாளிகளோடு தொடர்பு கொண்டு அவர்களின் ஒப்புதலின் பின் மாற்றியுள்ளோம். படைப்பின் உள்ளடக்கம், அரசியல் போன்றன பற்றிய விவாதங்களின்றும் எம்மை விலக்கி நிறுத்திக்கொண்டோம்.

இடம்பெற்றிருக்கும் படைப்பாளிகளில் ஏற்கனவே சாதனை படைத்த படைப்பாளிகளும், நேற்றுத்தான் எழுதத் தொடங்கிய படைப்பாளிகளும் இருக்கிறார்கள். படைப்பில் கையா ளப்படும் மொழியில், வெளிப்பாட்டில் நிச்சயமாக இதன் தாக்கமும் பாதிப்பும் இருக் கின்றன என்பதை நாம் அறிந்தே இருக்கிறோம்.

கட்டுரைகளில் புலம்பெயர் வாழ்வில் தமிழ்மொழிக் கல்வி, கற்பித்தலில் உள்ள பிரச் சினைகள், தகவல் தொழில்நுட்பம், புலம்பெயர் சர்வதேச இலக்கியம், பெண்நிலைவாதம், பின் நவீனத்துவம் என பலதிறப்பட்ட பார்வைகள் வெளிப்பட்டிருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்ப் படைப்புகள் சர்வதேச அளவில் அறிமுகமாகவில்லை என்பது கசப்பான உண்மை. உலகின் பல பாகங்களிலும் தமிழன் வேரூன்ற முயற்சிக்கும் இக்காலகட்டத்தில், தமிழ் படைப்புகளை சர்வதேச அளவில் அறிமுகப்படுத்தும் அவசியமும் அதற்குகந்த சூழலும் உள்ளன. இச்சந்தர்ப்பத்தில் மொழிபெயர்ப்புக் கலை இன்றியமையாதது. எனவே, அத்துமீறி ஓர் ஆங்கிலக் கட்டுரையும் இடம்பெறுகிறது.

பொதுவாக கவிதைகள் குறித்த கிலேசமான அனுபவத்தையும் நாம் பெற முடிந்தது. கவிதைகளில் தேக்கம் நேர்ந்திருக்கிறது. இந்தியத் தமிழுக்கும், ஈழத் தமிழுக்கும் இது பொருந்தும். இந்தத் தேக்கத்திற்கான அரசியல், சமூக, கலாசாரக் காரணிகள் ஆராயப்பட வேண்டும்.

சிறுகதைகளில் புலம்பெயர் அனுபவமும் நெருக்கடிகளும், வாழ்தலின் தத்துவ, ஆன்மீகச் சிக்கல்களும் பேசப்பட்டிருக்கின்றன. வன்முறை, அறங்களின் வீழ்ச்சி, இருத்தலியல் அவலம் போன்றன வெளிப்படுகின்றன. உலகத்தரமான கதைகள் இத்தொகுப்பில் உண்டு. புலம்பெயர் எழுத்தாளர்கள் படைப்பு மொழி குறித்த அக்கறையில், தீவிரமாக ஈடுபடவேண்டிய தேவை இருக்கிறது என்பதை நாம் அவதானிக்கிறோம்.

சென்ற ஆண்டு நாம் வெளியிட்ட தொகுப்பிற்குக் கிடைத்த வரவேற்பும்கூட, இந்த ஆண்டும் இத்தகைய தொகுப்பினைக் கொண்டுவரும் உற்சாகத்தை தமிழர் நலன்புரி சங்கத்திற்குத் தந்தது. இத்தொகுப்பினை அச்சிட ஆகும் பெரும் பொருட்செலவினையும் பொருட்படுத்தாது, புலம்பெயர் சூழலில் கலை இலக்கிய மேம்பாட்டிற்கான செயற்பாடுகளும் அவசியம் என்பதை உணர்ந்து, இத்தொகுப்பினை வெளியிட தமிழர் நலன்புரி சங்க இயக்குநர்கள் தீர்மானித்ததோடு, அதற்கான முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் தந்தனர். அவர்களுக்கு எனது பெருநன்றி உரியது.

இம்மலருக்கான கணணிப் பதிவு *நாழிகை, அஞ்சல்* அலுவலகத்தில் செய்யப்பட்டது. பத்திரிகைகளின் ஆசிரியர் திரு. மகாலிங்கசிவத்தினுடைய முழு ஆதரவும் ஒத்துழைப்பும் இருந்ததாலேயே இது சாத்தியமாகியது.

ஒரு வாரத்திற்கும் மேலாக, இரவு பகல் பாராது, அட்டைக்கான அழகிய வர்ண ஓவியத்துடன், ஏராளமான கறுப்பு வெள்ளை ஓவியங்களுடனும் அழகுற வடிவமைத்துத் தந்த ஓவியர் கே கிருஷ்ணராஜாவிற்கு நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

கணணிப் பதிவுகளை முழுமையாகவும் விரைவாகவும் உற்சாகத்துடனும் செய்த பெருமைக்குரியவர் திருமதி செல்வநாயகி செல்வகுமார்.

இத்தொகுப்பினை முன்கூட்டியே தமிழ் தகவல் இணைவலையில் அறிமுகப்படுத்தியதோடு அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கியவர் நா. கண்ணன். இத்தொகுப்புப் பணியில் படைப்புகளை வாசித்தும், விவாதித்தும், ஆலோசனை வழங்கியும், ஆசிரியர் குழுவாகவும் செயற்பட்டவர்கள் யமுனா ராஜேந்திரன், கே கிருஷ்ணராஜா, மு புஷ்பராஜன், ம ஜெயகுமாரன். இவர்களின் முழுமையான ஒத்துழைப்பின்றி இத்தொகுப்பின் சிறப்பு சாத்தியமில்லை. அவர்களுக்கு தொகுப்பாளர் என்ற முறையில் எனது நன்றி.

இம்மலரைத் திட்டமிடுவதில் தொடங்கி, அதன் நிறைவு வரையிலான பல்வேறு கட்டங்களிலும் திரு வா ஜனார்த்தனனின் பங்களிப்பு முக்கியமானதாகும். அவருக்கு எனது நன்றி. இம்மலர்த் தயாரிப்பில் பல்வேறு வகையிலும் உதவிய வரதராஜா ராஜேந்திரன், திருமதி அருணா ராமச்சந்திரனுக்கும் எனது நன்றி.

படைப்புகள் இன்றேல் இம்மலர் இல்லை. எமது வேண்டுகோளை ஏற்று, மிகக் குறுகிய காலத்துள் சிறப்பான படைப்புகளை அனுப்பிவைத்த படைப்பாளிகள் அனைவருக்கும் எனது நன்றி. இத் தொகுப்பினை அச்சிடவாகும் செலவினை ஈடுகட்டுவதில் இதில் காணப்படும் விளம்பரங்களின் பங்கு முதன்மையானது. விளம்பரங்களைத் தந்துதவிய அனைத்து நிறுவனங்களுக்கும் எமது நன்றி. அழகுற அச்சிட்டுத் தந்த *Ability Printing* அச்சகத்தார்க்கும் எமது நன்றி.

இறுதியாக ஒரு வார்த்தை. இந்தத் தொகுப்புக்கு ஆசிரியர் குழுவினரான நாங்கள் வாசகர்களாகவே இருந்தோம். நீதிவான்களாக இருக்கவும் விவாதிக்கவும் கருத்துச் சொல்லவும் சகவாசகர்களையும் படைப்பாளிகளையும் நாங்கள் அழைக்கின்றோம்.

அன்புடனும் நன்றியுடனும்


**இ. பத்மநாப ஐயர்**

தொகுப்பாளர்



படிப்பகம்

www.padippakam.com



# கி.பி. 2000இற்குப் பிற்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தில் புலம்பெயர் தமிழர்கள்

கி. செ. துரை




ஐரோப்பிய மக்கள் ஐரோப்பா ஒன்றியமாவதற்கு முன் சிந்தித்தமைக்கும், அது ஒன்றாக இணைந்தபின் சிந்திக்க முற்படுவதற்கும் அடிதலையான வேறுபாடுகள் தென்படும் என்பது முன்னரே எதிர்பார்க்கப்பட்டது. இப்பொழுது அந்த வேறுபாடுகளை ஐரோப்பாவிற்குள்ளேயே வாழ்ந்து, கண்கூடாகவே கண்டுகொள்ளும் அனுபவம், புலம்பெயர் தமிழ் மக்களுக்கு நேரடியாகவே வாய்த்திருக்கிறது. ஒன்றுபட்ட ஐரோப்பா என்ன முடிவெடுத்தாலும் அதற்குத் தலையாட்டுவதைத் தவிர மாற்று வழியில்லாத புலம்பெயர் ஈழத் தமிழர்களின் ஐரோப்பிய எண்ணிக்கை இப்போது ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டது. புலம்பெயர்ந்தோர் வாழ்வை மேம்படுத்துவது பற்றியும், அதன் அகவயப்பட்ட சிக்கல்கள் பற்றியும் இதுவரை நிறையவே பேசப்பட்டுவிட்டது; எழுதப்பட்டதும் அப்படியே. ஆயினும் புலம்பெயர் மக்களின் வாழ்வு, ஐரோப்பிய ஒன்றிய அமைவுக்கு முன்பிருந்த சூழலில் வைத்து எப்படிச் சீர்தூக்கப்பட்டதோ, அப்படியே ஒன்றிய அமைவிற்குப் பின்னரும் நோக்கப்பட்டு வருவதானது, கூர்ந்து கவனிக்கப்படவேண்டிய நுட்பமான உண்மையாகும். உள்ளீட்டு ரீதியாக மேலும் மேலும் பிரிந்து செல்லும் முரண்பாடுகளையே கடைப்பிடித்து வரும் புலம்பெயர் வாழ்வை மதிப்பீடு செய்யும் எவரும், ஐரோப்பிய ஒன்றியத்தில் நிகழும் மாறுதல்கள் எவையும், புலம்பெயர் தமிழரிடையே எத்தகைய விழிப்புணர்வையும் ஏற்படுத்திவிடவில்லை என்ற உண்மையை விளங்கிக்கொள்ளல் என்பது இனியும் கடினமான பணியல்ல.

ஒன்றுபட்ட ஐரோப்பாவின் மூலக் கோட்பாடு, கூட்டு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் வளங்களின் உச்சப் பயன்பாட்டை எட்டிப் பிடிப்பதும், வாழ்க்கைத் தரத்தின் உயர் புள்ளியைத் தொட்டபடியே அடுத்த நூற்றாண்டுக்குள் புகுந்து விடுவதுமாகும். இதற்காக அவர்கள் அபிவிருத்தி, பொருளாதாரம், பாதுகாப்பு, உயர்கல்வியென, பல்வேறு தளங்களிலும் அடையக்கூடிய முன்னேற்றங்களுக்கு ஏற்பதாகத் தமது சமூகத்தை அணிவகுக்கத் தொடங்கி விட்டார்கள். விரும்பியோ விரும்பாமலோ நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்படும் ஏகோபித்த மாறுதல்களைக் காண மறுத்து, கண்களை மூடுவதால் உலகம் இருண்டுவிடுமென எண்ண முடியாது. ஐரோப்பா நம்மைப் பற்றி தனது இணைவிற்குள் சிந்திக்காவிட்டாலும், ஒன்றியப் பின்னணியானது நம்மை மேலும் சீர்குலைத்து விடாதிருப்பதற்காக இணைந்த



படிப்பகம்

www.padippakam.com



சிந்தனைகளும், கூட்டு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவேண்டியது, நம் முன்னுள்ள கட்டாய பணிகளாகத் தெரிகின்றன.

இச்சிறு கட்டுரை எல்லாவற்றையும் உள்ளடக்கியதல்ல. மேலே சுட்டிக்காட்டிய பல்வேறு விடயங்களில் ஒருசில அடிப்படை விடயங்கள் பற்றியே ஆராய முற்படுகிறது. இறுதியாக நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றார் என்பது நமக்கு முக்கியமல்ல; தேர்தலில் என்ன கொள்கை முக்கியமாகப் பேசப்பட்டது என்பதே முக்கியமானது. அங்கு பிள்ளைகளின் பாடசாலைக் கல்வியானது இனி என்னென்ன உட்கூறுகளைக் கட்டாயமாகக் கொண்டிருக்க வேண்டுமென்பதே, அதிக கவனமெடுத்துப் பேசப்பட்ட விடயம். அது போலவே ஐரோப்பிய ஒன்றியமும் பாடசாலைக் கல்வியில் பல அபரிமிதமான முன்னேற்றங்களை கட்டாயமாக உள்ளடக்கத் தொடங்கியிருக்கிறது. இது ஐக்கிய அமெரிக்காவினது அடுத்த தலைமுறைக்கும், ஐக்கிய ஐரோப்பாவினது அடுத்த தலைமுறைக்கும் இடையேயான அடுத்த நூற்றாண்டு வளர்ச்சிக்குரிய பனிப்போரின் அடையாளங்களாகும். இணைவலை (INTERNET) பாடசாலைக்குள் கட்டாயமாகக் கொண்டுவரப்படுகிறது. வீடியோ படப்பிடிப்பு, எடிட்டிங், ஒளிப்பதிவு, அதற்கான தனித் தொழில் நுட்பக்கூடம், கணணித் தொழில் நுட்பங்களில் நடைபெறும் அசுர மாற்றங்களையெல்லாம் உடனடியாகச் சேர்த்துக் கொள்ளல், இயந்திர பாவனைகளைக் கூடுதலாக அறிமுகப்படுத்துதலென, இதில் எண்ணற்ற வேலைத்திட்டங்கள் அடங்குகின்றன. டென்மார்க்கிலுள்ள எல்லாப் பாடசாலைகளிலும் தற்போது மேற்சொன்ன மாற்றங்களே மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. ஒவ்வொரு பாடசாலை அதிபரும், அடுத்த ஆண்டில் தமது பாடசாலை எப்படி மாற்றியமைக்கப்படவிருக்கிறது, அங்கு என்னென்ன மாற்றங்கள் நிகழவுள்ளன என்பது பற்றியே பெற்றோர்களை அழைத்துப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த அசுர வளர்ச்சி இப்போதைய ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கும் ஐரோப்பாவிற்குமிடையே பேரிடைவெளியை ஏற்படுத்தி வைக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய விடயமல்ல. இந்த அபரிமிதமான வளர்ச்சியை ஐரோப்பிய மாணவர்கள் சுலபமாக எட்டிப் பிடிக்க வேண்டுமானால் அவர்களிடையே பல நுண்பாகத் தகுதிகளை ஏற்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. எல்லா நவீனத்துவங்களையும் அறிவதற்கும், அதில் நுண்பாகத் தகுதி பெறுவதற்கும் ஊடகமாக உள்ளதானதாய் மொழிக் கல்வியே முதலில் அவசியமென வலியுறுத்தப்பட்டுள்ளது. மற்றக் கற்கைளுக்கு ஒதுக்கப்படும் நேர அளவைவிட கூடுதலான பாடநேரத்தை தாய்மொழிக்கு ஒதுக்க வேண்டியது அவசியம் என்னும் கல்வி வெள்ளை அறிக்கை இங்கு இரண்டாண்டுகளுக்கு முன்னரே அமுலுக்கு வந்து விட்டது. இந்தத் தாய்மொழிக் கல்வியென்பது டென்மார்க்கில் வாழும் தமிழ் மாணவர்களுக்கும் டெனிஸ் மொழியே தாய்மொழி என்ற கொள்கையாகியிருப்பது வேடிக்கையான உண்மையாகும். இதுபோலவே இதர ஐரோப்பிய நாடுகளுக்கும் அமையுமென நம்பலாம்.

டென்மார்க்கில் தமிழ்ப் பிள்ளைகளுக்கான தமிழ் மொழிக் கல்வி பெரும்பாலும் அவ்வப் பாடசாலைகளிலேயே கடந்த பத்தாண்டுகாலமாக நடைபெற்று வருகிறது. குறைந்தது பன்னிரெண்டு பிள்ளைகள் இருக்கும் இடங்களிலெல்லாம் நகரசபைகளால் தமிழாசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்குரிய பயிற்சி வகுப்புகளானது கல்வியமைச்சாலும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையாலும் வழங்கப்பட்டும் வருகிறது. இந்த வாய்ப்பு தமிழுக்கு மட்டுமல்ல, இதர புலம்பெயர்ந்தோர் மொழிகளுக்கும் ஏற்புடையதாகும். இவ்விதம் புலம்பெயர் தேசிய இனங்களின் தாய்மொழிக் கற்றலுக்காக ஒதுக்கப்படும் பணத்தை திசை திருப்பி, அதன் மூலம் புலம்பெயர் தமிழ்ப் பிள்ளைகளுக்கு டெனிஸ் மொழிக் கல்வியை மேலும் அதிகரித்தல் வேண்டும் எனும் ஓர் வாதம் டென்மார்க்கில் தற்போது முன்னைவிட வேகமாக நடைபெறுகிறது. இது வெளிப்பார்வைக்கு மிக அழகானதும், நேர்த்தியானதுமாகத் தென்பட்டாலும், அதன் சுயமுகம் மிகவும் பாதகமானது. அரசியல் ஆதாயத்திற்காக புலம்பெயர் மக்களைப் பலிக்கடாக்களாக்கும் நீர்த்துப்போன அரசியல் சூத்திரத்தின் பாற்பட்டதாகும். இத்தகைய சட்டங்களின் பாதகம்பற்றி புலம்பெயர் தமிழ் மக்களிடையே ஆரோக்கியமான சிந்தனைகள் இன்னும் வளர்த்தெடுக்கப்படவில்லை. டென்மார்க்கின் உற்பத்தித்துறையில் தமிழ் மக்கள் கொண்டுள்ள பங்கு, அவர்கள் செலுத்திவரும் உயர்ந்த வரி ஆகிய விடயங்களைச் சீர்தூக்கிப்பார்த்தால் அவர்களின் நல்வாழ்வுக்காக ஒதுக்கப்படும் நிதியில் எந்தவிதமான மாற்றமும் செய்தலாகாது என்ற வாதம் பல டெனிஸ் மக்களிடையே உள்ளது. ஆனால், அது தமிழ் மக்களிடையே சரியான முறையில் புரிந்து கொள்ளப்படவில்லை.

நம் பிள்ளைகள் கூடுதலான நேரம் ஐரோப்பிய மொழிகளையே கற்கிறார்கள். அவர்களுடைய வகுப்புத் தோழர்களுடன் அந்தந்த நாட்டுத் தேசிய மொழிகளிலேயே உரையாடுகிறார்கள். அத்தோடு நாம் தமிழைப் பாவனைப்படுத்தும் நேரத்தின் விகிதமும் வருடா வருடம் குறைவடைந்தே செல்கிறது. எனவே பிள்ளைகளுக்கு தாய்மொழியில் அக்கறை ஏற்பட வாய்ப்புக்கள் இல்லை என்பது ஐரோப்பாவில் உள்ள பெரும்பான்மையான தமிழ்ப் பெற்றோரதும், பிள்ளைகளதும் பொதுவான குரலாகும். ஆனால் இத்தகைய கூற்றுக்களில் ஓர் மகத்தான பலவீனம் மறைந்திருப்பதைச் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு ஐரோப்பியரைச் சார்ந்ததல்ல. உண்மையில் தம்மிடையேயுள்ள குரலின் பலவீனத்தைக் கண்டுபிடித்துச் சீர்படுத்திக்கொள்ள வேண்டியது புலம்பெயர் தமிழ்ப் பெற்றோர்களது தலைமைப் பணியாகும். ஓர் பிள்ளை பெற்றுக் கொண்டுள்ள பாடசாலைக் கல்வி ஆரோக்கியமாகவும், சரியான திசையிலும் அடுக்கப்பட்டிந்தால் அதற்கு கல்வியின் துணையுடன் ஒளிக் கீற்றுப்போல ஓர் உண்மையை பிள்ளையின் அறிவு பற்றிக் கொள்ளும். அப்போது தன்னுடைய தாய்மொழி தனது உயர்வுக்கு தலையாய முக்கியம் என்ற தெளிவு, தவிர்க்க முடியாத நியதியாக தம் முன்வந்து நிற்கக் காண்பார்கள். அந்த இடத்தை நோக்கிப் பிள்ளையை நகர்த்த வேண்டியதே எந்தவொரு பாடசாலைக் கல்விக்கும் உள்ள தலையாய கடமையாகும். இதை வலியுறுத்தும் பொருட்டே டெனிஸ் மொழிக் கல்வியைக் கற்பிப்பதற்கான நேரம் மேலும் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்ற உண்மையைக்



படிப்பகம்

www.padippakam.com



கண்கூடாகக் கண்ட பின்னரும்கூட, "தாய் மொழிக் கல்வியைக் கற்பதற்கு தம் பிள்ளைகளிடையே தயக்கமிருக்கிறது!" என்ற நொடித்துப்போன கூற்றையே பேசிக்கொண்டிருப்போர், தமது பிள்ளையின் வகுப்பறைக் கல்வி அதன் தாய்மொழியை சரியான முறையில் அடையாளங் காட்டத் தவறியிருக்கிறது, அல்லாவிடில் அந்தப் பணியை மௌனமாகவே தவிர்த்துச் சென்றிருக்கிறது என்ற உண்மையை அடையாளங் காணத் தவறிவிடுகிறார்கள்.

சென்ற ஆண்டு டென்மார்க்கில் சில பாடசாலைகளில் ஒன்பதாம், பத்தாம் வகுப்புக்களுக்கான பரீட்சையில் சில தமிழ் மாணவர்கள் டெனிஸ், ஜேர்மன், பிரெஞ்சு போன்ற பிறமொழிகள் உட்பட இதர பாடங்களிலும் அதிகூடிய (100:100) புள்ளிகளைப் பெற்று பாடசாலையிலேயே முதல் மாணவர்களாகத் தேறியிருந்தார்கள். இவர்களுடைய வெற்றிக்குக் காரணம் யாதென ஆய்வு செய்தபோது அவர்களிடையே சிந்தனை மொழியாகத் தாய்மொழியிருந்ததும், தாய்மொழியில் அவர்கள் மிகச்சிறந்த தகுதி பெற்ற மாணவர்களாக இருந்தமையுமே, அவர்களின் வெற்றிக்கு அடிப்படையென அறியப்பட்டது. மேலும் அவர்கள் தாய் மொழியில் நாட்டங் கொள்வதற்கான விசையை அவர்களின் டெனிஸ் வகுப்பறைக் கல்வியும் வழங்கியிருந்தமை தெரிந்தது. சில இடங்களில் இதற்குப் புறநடையான உதாரணங்களும் இருந்திருக்கலாம். ஆனால் பிள்ளையின் சரியான வெற்றிக்கு தாய்மொழி முக்கியமான அடித்தளம் என்பதை ஏற்றுக்கொள்ளாத உலகக் கல்வியாளர்கள் எங்குமே கிடையாது. எனினும் இந்த உதாரணமானது தாய்மொழியை உரியமுறையில் கற்கும் வாய்ப்பில்லாதிருக்கும், அல்லது வாய்ப்பைத் தவறவிட்ட பிள்ளைகளிடையே நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திவிடப் பயன்படுத்தப் படலாகாது. மனித மூளை ஒரு நொடிப்பொழுதிற்குள் எண்ணற்ற திசைகளில் பிரயாணம் பண்ணுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட பல காரியங்களைப் புரிகிறது. இந்த நேரத்தில் அதனுள் இயற்கையாகவே அமைந்துவிட வேண்டிய சமநிலையை எட்டிப் பிடிக்க, அச்சாணிபோலிருக்கும் தாய் மொழிக் கல்வி அவசியம் என்ற உண்மையை உணர்த்துவதற்கே இப்படிப்பட்ட உதாரணங்களைப் பயன்படுத்த வேண்டியது முக்கியமானதாகும். எப்போதும் சமூக வளர்ச்சிக்குரிய விடயங்களை கேலிப்பாங்கில் காணமுற்படுவது எதிர்விளைவுகளையே ஏற்படுத்திவிடும் என்பது தெளிவாகக் கிடைத்துவிட்ட முக்கிய புலம்பெயர் அனுபவமாகும்.

இதுபோல 18 வயதுக்கு மேற்பட்ட தமிழரிடையே டெனிஸ் மொழியைப் போதிப்பதற்கான மொழிப் பாடசாலைகளிலும் புலம்பெயர் மக்கள் குறித்துப் பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவங்கள் திரட்டப்பட்டு விட்டன. இதன்படி பெரும்பான்மையான தமிழர்கள் தாய்மொழியைப் பேச, எழுத, வாசிக்கத் தெரிந்தவர்களாகவே உள்ளார்கள். ஆனாலும் ஒரு சிலரால் மட்டுமே டெனிஸ் மொழியில் தகுதிபெற்று, தமது தொழில் வாய்ப்புக்களைச் சிறந்த முறையில் மேம்படுத்திக் கொள்ள முடிந்திருக்கிறது. மற்றவர்களால் இந்த இலக்கை எட்டிப்பிடிக்க முடியாமல் போனமைக்குரிய பிரதான காரணம் யாது? இதற்குரிய விடையைக் கண்டுபிடிக்க மேற்சொன்ன பத்தாண்டுகால அனுபவங்களே போதுமானதாக இருந்தன. எப்போதுமே பாஷையை அறிந்திருப்பதென்பது வேறு, அந்தப் பாஷையானது எப்படிக் கட்டியமைக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளும் அறிவென்பது வேறு. தாய்மொழிக் கட்டமைவுபற்றிய விளக்கமே ஒருவருக்கு பிறமொழியைக் கற்பதற்குரிய அடிப்படையை வழங்கும். தமிழ் மக்களிடையே தமிழ் இலக்கண அறிவானது மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தமையே டெனிஸ் மொழியை பாடசாலை வழியே கற்பதற்கு பிரதான தடையாக இருந்தமை தெரிய வந்தது. எனவேதான் நேர்த்தியான தாய்மொழிக் கல்வியென்பது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, புலம்பெயர் சூழலில் பெரியவர்களுக்கும் அவசியமானதென்ற உண்மை தற்போது சந்தேகத்திற்கிடமின்றி நிதர்சனமாகியிருக்கிறது.

இந்த இடத்தில் வைத்துத்தான் நாம் தமிழ் இலக்கணத்தின் மீதும் ஓர் பார்வையை வீசிச் செல்ல வேண்டியிருக்கிறது. காரணம், தமிழ் இலக்கணமானது தொல்காப்பியர், நன்னூலார், சாமிநாததேசிகர், நல்லைநகர் ஆறுமுகநாவலர் ஆகியோரின் இலக்கணக் கொள்கைகளிலிருந்து இன்னும் தன்னை விடுவித்துக் கொள்ள முடியாத நிலையிலேயே இருந்துவருகிறது என்ற வருத்தத்தை இங்கு சுட்டிக்காட்டாவிட்டாலும், மொழி இலக்கணம் விஞ்ஞான யுகத்தின் மாணவரைக் கவரக்கூடிய விதமாகவும், அவர்கள் களைப்படையாமல் கற்கக் கூடியவாறும் மாற்றியமைக்கப்படவில்லையே, என்ற ஏக்கம் நியாயமானதே. எனவேதான் தொழில் நுட்பம் சார் ஐரோப்பிய வாழ்வை வெற்றிகொள்ள புதிய தமிழ் இலக்கணம் கட்டியமைக்கப்பட வேண்டும் என்பதும், விஞ்ஞானத்திற்கு இயைபாக்கமடையாத இலக்கண இடர்களிலிருந்து மொழி தன்னை எவ்வாறாயினும் விடுவித்துக்கொள்ள வேண்டியதும் இங்கு அவசியமாகிறது.

இதற்காக ஆரோக்கியமான கூட்டு வேலைத் திட்டங்கள் அவசியம். எனினும் சில முன்மொழிவுகளை மட்டும் இங்கு மேலோட்டமாகச் சுட்டிக்காட்டிச் செல்ல முடியும். தமிழ் மொழியில் கிடையான தளம் கொண்ட X அச்சில் உயிர் எழுத்துக்களும், குத்தான தளம் கொண்ட Y அச்சில் மெய்யெழுத்துக்களும் அமைக்கப்பட்டு, அவை இரண்டையும் இணைப்பதன் மூலமே உயிர் மெய்யெழுத்துக்கள் பெறப்படுகின்றன. உண்மையில் இந்த முறையானது கணிதத்தில் ஆள்கூற்றுத் தளம் என்னும் (CO. ORDINATE SYSTEM) முறைமை சார்ந்தது. இன்றைய ஐரோப்பாவின் ஏவுகணை செலுத்தும் தொழில் நுட்பமோ, அல்லது நிலப்பயன்பாடோ, அல்லது கணனி விளையாட்டுக்களோ எதுவாக இருப்பினும், அங்கு அடிநாதமாக இயங்குவது கணிதத்தின் இவ் ஆள்கூற்றுத்தள முறையே. இதையே நமது மாணவர்கள் டெனிஸ், ஆங்கிலம் போன்ற மொழிகளின் வழியே கற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாம் எதிர்பாராத விதமாக, தமிழ் இலக்கணத்தின் ஆரம்பக்கூறே விஞ்ஞானத்துடன் கை குலுக்கக்கூடிய விதத்தில் அமைந்திருப்பது புது நம்பிக்கை தருவதாயுள்ளது. எனவேதான் தமிழ் இலக்கணத்தை இப்படிப்பட்ட பின்னணியோடு எதிர்கொள்வது ஐரோப்பியச் சூழலில் ஆரோக்கியமானதாக அமையலாம். மேலும் இந்த வழியாகச் சென்றால் புணரியலில் உள்ள பெரும்பாலான பின்னடைவுகளை மாணவர்கள் குறுக்காகக் கடந்து சென்றுவிடவும் முடி



படிப்பகம்

www.padippakam.com



கிறது. இத்தகைய நவீன மொழி இலக்கணமொன்றை எடுகோளாகத் தயாரித்து, டென்மார்க்கிலுள்ள 14 வயதுக்கு மேற்பட்ட, தமிழில் பின்தங்கிய நிலையில் இருந்த மாணவரிடையே பயன்படுத்தியபோது, சில சாதகமான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. எனவேதான் மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் பேசும் மொழிக்கற்கை நிலையிலிருந்து விடுபட உதவும் புத்தம்புதுத் தமிழ் இலக்கண நூல் ஒன்று ஐரோப்பிய ஒன்றியத்திற்குட்பட்ட புலம்பெயர் வாழ்வுக்கு மிக மிக அவசியமாகிறது.

இதுபோல குழந்தைகளுக்கு 0-3 வயதுக்குட்பட்ட ஆரம்ப நிலையிலேயே தாய்மொழி அறிவை ஏற்படுத்தி, அதன்பின் அவர்களை ஐரோப்பிய மொழிக்குத் தயாராக்கும்போது இருமொழிகளிலுமே அசாதாரண வீச்சுக்கொண்டவர்களாக அவர்கள் மேம்படுவதை, பிள்ளைகள் பராமரிப்பு நிலைய அனுபவங்களினூடாகப் பெற்றுக் கொள்ள முடிந்தது. எனவேதான் பிள்ளைகளை வளர்ப்பது எப்படியென்பதற்காக ஏற்கனவே வேறு வேறு நாட்டுச் சூழல்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட நூல்களையே இங்கும் பாவனைப்படுத்துவதை விட, ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் அமைவு பெற்றுள்ள பின்னணிகளுக்கேற்ப புலம்பெயர் தமிழ்ப் பிள்ளைகளை வளர்ப்பது எப்படி என்ற பிள்ளை வளர்ப்பு நூல்களைப் புதிதாகத் தயாரிக்க வேண்டியது அவசியமாகிறது. நானூறு ஆண்டுகாலமாக சந்திக்க நேர்ந்துவிட்ட காலனித்துவப் பின்னடைவுகளை நிரவுசெய்து, தலை நிமிர்ந்து நிற்கக்கூடியதும், தாய்த்தமிழ் நிலத்திற்கு மேன்மை தரக்கூடியதுமான ஓர் சந்ததியை உருவாக்க, ஐரோப்பிய ஒன்றியத்தை நாம் எப்படிப் பயன்படுத்துவது என்பதற்கான வேலைத்திட்டம் புலம் பெயர்ந்தோரிடையே உருவாக்கப்படல் வேண்டும். ஐரோப்பிய ஒன்றியமானது கடந்த காலங்கள் பற்றி வெளிப்படையாகப் பேசுகிறது. ஆனால் அதன் செயற்பாடுகள் யாவும், எங்கு வளங்கள் கிடைக்கின்றனவோ, அவற்றை முந்திச் சென்று பறித்துவிடுவது என்ற கொள்கையில் மட்டும், அது கடந்தகாலம், கோபம், பகை எதுவும் பார்பதாகத் தெரியவில்லை. இதைத் தவறான கொள்கையெனப் பேசுவதிலும், மனமுடைவதிலும் பலநூற்றாண்டுகளை இழந்த அனுபவம் ஆசிய நாட்டவர்களுக்கு இருக்கிறது. உண்மையில் இதைத் தவறாகப் பார்க்காது, பிரபஞ்சத்தில் நிலைத்திருப்பதற்கான தலைமைக் கொள்கையாக நோக்கும் பழக்கம் ஐரோப்பியரிடம் உள்ளது. எனவே வளங்களைப் பயன்படுத்துவது எப்படியென்ற கொள்கையில் நம்மிடையே போதிய தெளிவுநிலை ஏற்படுத்தப்பட வேண்டியதும் இங்கு அவசியமாகும்.

கி.பி. 2000 இற்குப் பின் ஐரோப்பிய மக்களின் வாழ்வு எப்படி அமையவேண்டும் என்பது குறித்த பணிகளில் ஐரோப்பியர் கண்ணுறங்காது ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால் ஐரோப்பாவில் தமிழ் மக்கள் ஆற்ற முற்படும் கருமங்களிலோ இத்தகைய தேவை உணரப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. மேலும் பத்திரிகைகளில் வரும் சமூக அக்கறையுள்ள கட்டுரைகளின்படி பார்த்தால் ஐரோப்பாவில் தமிழர்கள் மேற்கொள்ளும் பல காரியங்கள் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்துப் பெருமைகளை நிலைநிறுத்த ஆசை கொள்வதாகவே தென்படுகிறது என்ற வருத்தமே, அவைகளில் மேலோங்கி நிற்கக் காண்கிறோம். இருப்பினும் நமது வாழ்வை பெருமையுடன் பார்க்கவேண்டியது நமது பணிகளில் ஒன்றுதான். ஆனால் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருமைகளில் பல இன்னும் பாவிக்கப்பட முடியாத புதுமைகளாக, வெறுமனே ஏட்டளவில் மட்டுமே பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றைத் தெரிவுசெய்து 2000 இற்குப் பிற்பட்ட மேன்மைகளுக்கு எப்படிப் பயன்படுத்துவது என்ற கோணத்தில் சிந்திக்கும்போதுதான் பழமைகூட சமூகத்தில் உயர்வான மரியாதையைப் பெறுகிறது என்பதை மறுத்தல் முடியாது. இவ்விதம் எதிர்பார்க்கும் சகல மாற்றங்களையும் ஒரேயடியாக நிகழ்த்திவிடல் முடியாத காரியம். முன்னேறிய சமூகங்களுக்கும் நமக்கும் இடையே உள்ள பல மைல்கள் தூர இடைவெளி உடனடியான முன்னேற்றத்திற்கு மிகப்பெரிய தடையாகும். எனினும் அபிவிருத்தியையும், முன்னேற்றத்தையும் எட்டிப் பிடிக்கக்கூடியவாறு, சமூகத்தை சீர்குலைய விடாமலே அடிமட்டத்தில் இருந்தே தயார்படுத்த வேண்டியது தாமதத்திற்குரிய காரியமல்ல.

நாம் வாழும் தற்போதைய சூழல் வேறுபட்டது, வாழ்வு வேறுபட்டது, கல்வி வேறுபட்டது. எனவேதான் சிதறிக் கிடக்கும் புலம்பெயர் சமூகம் அடுத்த நூற்றாண்டுக்காக சிந்திக்கும் புள்ளியை நோக்கியாவது தனது கரங்களை இணைவுபடுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அப்படிப்பட்ட தயார் நிலை புலம்பெயர் வாழ்வுக்கு மட்டுமல்ல, தாயகத்தின் மேம் பாட்டிற்கும் அவசியமானதாகும். தாயகம், புலம்பெயர் நாடுகள் ஆகிய இரு தளங்களிலும் நிலைபெறக்கூடிய வல்லமை கொண்ட சந்ததியினரால்தான் இன்றைய சர்வதேச மாற்றங்களை எதிர்கொண்டு வாழமுடியும். அபிவிருத்தி, முதலீடு, தொழில் நுட்பம், சந்தை வாய்ப்பு போன்ற பல துறைகளில் தமிழர்களின் மொத்தச் சக்தியால் வெற்றி கொள்ளக்கூடிய எண்ணற்ற வாய்ப்புக்கள் மறைபொருளாக உள்ளன. அவற்றை உள்வாங்கக் கூடிய அகலித்த அறிவும், அதற்கான வேலைத் திட்டங்களும் அவசியம். அடுத்த நூற்றாண்டின் புதிய விடயங்களை புரிந்து, வாசித்து, அதன்படி செயற்படுவதற்கு ஏற்றவாறு கொள்ளளவு அதிகரிக்கப்படாத காட்டிஸ்குகள் (hard discs) பாவனைப் படுத்தப்படாது விடப்படுவது, கணணி உலகுக்கு மட்டுமல்ல, அந்த உதாரணம் மனித வாழ்வுக்கும் பொருந்தும் என்ற குரல் இப்போது மேலைத்தேயச் சமூகங்களிடையே ஒலிப்பதை நாமும் கவனித்தல் வேண்டும். இவ்விதமான சங்கடங்கள் எத்தனையோ வழிகளில் இருந்தாலும் நமக்குச் சாதகமான கேள்விகளும் பல இருக்கின்றன. உதாரணமாக இரண்டாம் உலக யுத்தம் இல்லாவிட்டால் யப்பானையும், மேற்குஜேர்மனியையும் இவ்வளவு புத்தம் புதிதாகக் கட்டியமைத்திருக்க முடியுமா என்பது சந்தேகமே. அதுபோலவே நாமும் இப்போது சந்தித்துவிட்ட அழிவுகளும், அவலங்களும், அகதிவாழ்வும் இன்னொரு தடவை அழுவதற்காக அல்ல, ஒரு மகத்துவத்தை எட்டுவதற்காக நாம் செலுத்திக் கொண்டிருக்கும் உயர்ந்த கொடுப்பனவுகளே என்பதை அடுத்த நூற்றாண்டு பேசவேண்டும். பேசாவிடில் பேச வைத்தல் வேண்டும். இந்த வழியில் கால்களை முன்வைப்பதே, கி.பி. 2000 இற்குப் பிற்பட்ட வாழ்க்கையைச் சந்திப்பதற்குரிய புலம்பெயர் ஈழத் தமிழர்களின் பிரதான கடமைகளில் ஒன்றாகும். ❑



படிப்பகம்

www.padippakam.com




# அழிந்த அபிவிருத்தியில்

மைத்ரேயி

புற்றரையும், பசும் காடும்
சலசலத்து நகர்ந்த சிற்றாறும்
கீச்சிட்டுச் சிறகடித்த புள்ளினமும்
ஊர்வனவும் விலங்கினமும்
காளானென முளைக்கும்
தொடர்மாடிக் கட்டிடங்களில்
காணாமற் போயின.

நிலவும், கறுப்புப்பட்டில்
வெள்ளிக் கோலமிட்ட
நட்சத்திரங்களும்
நகரத்துத் தெருவிளக்கில்
"வாங்கு வாங்கு" என
விளம்பரிக்கும் நியோன்விளக்கில்
மறைந்து போயின.



தொழிற்சாலைக் கழிவில்
வாகனப் புகையில்
விமான செய்மதிப் போக்குவரவில்
பஞ்சபூதங்களில் நாலுடன்
தொலைந்தது சூழல்.

நேரடிச் சந்திப்பு
தொலைபேசியிலும்
தொலைபேசித் தொடர்பு
இலத்திரனியற் கடிதத்திலும்[1]
ஓய்வு நேரம்
தொலைக்காட்சியிலுமாய்த்
தொலைந்தது உறவும் நட்பும்

தொடர்பு சாதனம்
கக்கும் குப்பையில்
மூளை சலவை பெற
ரசனை கரைய

எண்ணியப் படுத்தப்பட்ட[2]
கலை இலக்கியத்தில்
கணணி வரையும்
ஓவியத்தில்
இயந்திர மனிதன் செதுக்கும்
சிற்பத்தில்
அழகியல் தொலைய

உலகளாவிய இணைவலையூடு[3]
கணணித் திரையில் மினுங்கும்
மாய யதார்த்தத்தில்[4]
நிஜ யதார்த்தம் தொலைய

எஞ்சுமா
மனித நேயமும்
மானிட இருப்பும்? □

---

1. e-mail - கணனியூடு அனுப்பப்படும் கடிதம்
2. digitalized
3. World Wide Web, Internet
4. virtual reality



படிப்பகம்

www.padippakam.com



# புலம்பெயர்ந்த சூழலில் எங்கள் மொழியும், குழந்தைகளும்

சி. சிவரஞ்சித்

மொழி எங்களோடு கூடப்பிறந்தவொரு சொத்து. மனிதருக்குக் கிடைத்த மிகவுன்னதமான தொடர்புச் சாதனம். இந்த மொழியின் ஊடாகவே நாங்கள் எங்களுடைய விருப்பு-வெறுப்புகள், சமூக மதிப்பீடுகள், கலாசார விழுமியங்கள், கொள்கைகள் என்பனவற்றினை மற்றவர்களுடனும், அடுத்த சந்ததியினருடனும் பரிமாறிக் கொள்கின்றோம். இவ்வாறு நாங்கள் சக மனிதர்களுடன் தொடர்புகொள்ளும்போதும், இணைந்து செயலாற்றும்போதுந் தான், அது மானுடச் செயற்பாடாக உருவாகிறது.

இத்தகைய அனைத்துச் செயற்பாடுகளுக்கும் மொழியே மிக முக்கிய ஊடகமாகவும், கற்பதற்கும் சிந்திப்பதற்குமுரிய ஒரு கருவியாகவும் இருக்கிறது. மொழி, ஒருவருக்கில்லை எனில், மொழிசார்ந்த ஒரு சமூகத்தில் அவர் தன்னையொரு அங்கத்தினன் எனக் கூறமுடியாது.

புலம்பெயர்ந்த சூழலில், ஒரு சிறுபான்மை மொழிநிலைச் சூழலில் வாழ்கின்ற எங்கள் குழந்தைகளுக்கு இளம்பருவத்து கருத்துருவாக்கமும் எண்ணக்கருவும் தமிழ்மொழி மூலமே ஏற்படுத்தப்படவேண்டும். புலம்பெயர்வுச் சூழலில், சூழ்ந்திருக்கும் பெரும் சமூகத்தினைச் சார்ந்த மொழி என்ற வகையில், அவர்கள் புலம்பெயர்ந்த நாட்டின் மொழியைப் பயில்வதென்பது அங்குள்ள கல்வித்துறையிலும், தொழில்துறையிலும் அவர்கள் தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்கு உரியதாகும்.

அப்படியெனில், புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் எங்கள் குழந்தைகளுக்கு அடிப்படையில் கற்றுக்கொள்வதற்குரிய மொழியாயிருப்பது எது? சந்தேகமின்றி அது தமிழ்மொழியாகத்தான் இருக்க முடியும்.

இதுவொன்றும் கடினமான ஒரு காரியமல்ல. ஏன், உலகம் முழுவதிலும் ஒரு சிறுபான்மை மொழிநிலைச் சூழலில் வாழ்கின்ற குழந்தைகளின் நிலைமை இதுதான். அதனாற்றான், இன்று பலவிடங்களிலுமுள்ள கல்வித்துறை சார்ந்த அமைப்புக்கள் இருமொழிக் கல்வியூட்டலின் அவசியத்தினை உணர்ந்து செயலாற்றிவருகின்றன.

அதேசமயம் புலம்பெயர்ந்து வாழும் குழந்தைகள், தாங்கள் வாழ்கின்ற நாட்டினது மொழியினை தொடர்புசாதன மொழியாகவும், சிந்தனைக்குரிய மொழியாகவும் விருத்தி செய்துகொள்ள வேண்டும்.

இந்தவிடத்தில் இரு கலாசாரச் சூழலில், இரு மொழிநிலைச் சூழலில் வாழ்கின்ற எங்கள் குழந்தைகள், இரு கலாசார நிலைமையிலிருந்தும் பாதுகாப்பானதொரு சுய அடையாளத்தினை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இரு மொழி - இரு கலாசாரம் என்ற சூழலில் தொழில்படுவதற்குரிய ஒரு பாதுகாப்பான அடையாளமின்றி இக்குழந்தைகள் தங்கள் ஆளுமைகளைப் பரந்து வெளிப்படுத்தமுடியாது. அது, அவர்களுக்குப் பாதுகாப்பானதும் அல்ல.

இரு கலாசாரச் சூழலில் வாழ்கின்ற இக்குழந்தைகளுக்கு இரு கலாசாரத்திலிருந்தும் எதைக் காப்பது, எதைக் கழிப்பது என்பது ஒன்றும் எளிதானதல்ல. இங்கே ஒரு முதிர்ந்த நடைமுறையைக் கையாள வேண்டியது அவசியமாகிறது. இது குழந்தைகள் வாழ்கின்ற சமுதாயத்தின் பண்பாட்டு முதிர்ச்சி, கல்வி நிலைமை, வாழ்வியல் வளர்ச்சி என்பவற்றினைப் பொறுத்தே அமையும். இதனைப் பாரதியார் கூட

"நன்மையும் அறிவும்
எத்திசையாயினும், யாவரே காட்டினும்
மற்றவை தழுவி வாழ்வீராயின்
அச்சமொன்றில்லை"

எனக் கூறுகிறார்.

சர்வதேச ஆய்வுகளின் மூலம், குழந்தைகளும், சிறுவர்களும் உரிய நிலைமைகளிருப்பின் இரு மொழி, இரு கலாசார அடையாளத்தினை வளர்த்துக்கொள்ளும் இயல்பு உடையவர்களாக உள்ளனர் என்பதை நாம் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

எங்கள் குழந்தைகள் கற்பதற்குரிய சிறந்த ஊடகமாக தமிழ் மொழியினை விருத்தி செய்துகொள்ளும் அதேசமயம், தாங்கள் புலம்பெயர்ந்து வாழும் நாட்டின் மொழியையும் பயிலவேண்டும். அவர்கள் தமிழ்மொழியினைக் கற்பதே, அவர்களின் இரு கலாசாரத் தன்மைக்கும் பலம் சேர்க்கும். இதுவே, எங்கள் குழந்தைகள் பாடசாலைகளிலும், அதனைத் தொடர்ந்த கல்வித்துறையிலும் அவர்கள் திறமையாகச் செயற்பட வழிவகுக்கிறது.



குழந்தைகளின் இருமொழித் தன்மையின் மேம்பாட்டிற்கு பெற்றோரின் பங்களிப்பு மிகவும் அவசியமானதாகும். குழந்தைகளின் தாய்மொழி அறிவின் வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு இன்றியமையாதது. ஏனெனில், பெற்றோரே குழந்தைகளின் முதல் ஆசிரியர்கள். எனவே, பெற்றோரே தங்கள் குழந்தைகளிற்கு தமிழ்மொழியின் தேவையையும், முக்கியத்துவத்தினையும் உணர்த்தவேண்டும். இவைகளைத் தொடர்ந்து, புலம்பெயர்ந்த நாடுகளில் இயங்கிவரும் தமிழ்ப் பாடசாலைகளும் பெற்றோர்களும் இணைந்து இப்பணியினை மேற்கொள்ளலாம். இவ்வாறு, குழந்தைகள் இரு மொழிகளிலும் ஊக்குவிக்கப்பட்டாலேயே அவர்கள் இரு மொழி, இரு கலாசார மேம்பாட்டினை அடைய வழிவகுப்பதுடன், தங்கள் அடையாளங்களைத் தொலைத்த சந்ததியினராக வாழாமல், தங்களுக்கென்றொரு அடையாளத்தினைப் பேணி, பாதுகாப்புடன் வாழக்கூடிய ஒரு சூழலை உருவாக்கும். ❑




படிப்பகம்

www.padippakam.com



# புலம்பெயர்ந்த தமிழர்களின் எதிர்காலம் – அடுத்த தலைமுறையினர் பற்றி ஒரு கேள்வி



அர்ச்சுனா

போலந்திலிருந்து வந்திருந்த ஜிப்சீஸ் (GYPSIES) *130 பேர் கடந்த டிசம்பரில் நோர்வேயில் அரசியல் தஞ்சம் கோரியிருந்தனர். எதிர்பார்த்தது போலவே, நோர்வேயிலிருந்து ஒரு வாரத்தினுள் அவர்கள் வெளியேற்றப்பட்டதுடனும், அந்த ஒரு வாரத்தினுள் அவர்களால் அரசுக்கு ஏற்பட்ட செலவுகளை பத்திரிகைகள் முன் பக்கச் செய்திகளாக வெளியிட்டதுடனும் அந்த ஜிப்சிகளின் கதை தற்காலிகமாக முடிந்துபோனது. தாம் வாழும் நாடுகளில் தொடர்ந்து இன ஒடுக்குமுறைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாகி வரும் ஜிப்சிகளின் அரசியல் தஞ்சம் கோரும் உரிமையின் நியாயப்பாடுகள் பற்றியோ, அன்றி அரசியல் தஞ்சம் வழங்குவதில் நோர்வே அரசு காட்டிவரும் கடுமையான போக்கைப் பற்றியோ விமர்சிப்பதல்ல இக்கட்டுரையின் நோக்கம். மாறாக, தமக்கென ஒரு சொந்த நாடின்றி அலைந்து திரியும் ஜிப்சிகளின் அரசியல் தலைவிதி பற்றிச் சில குறிப்புகளை முன்வைப்பதும், அதன்பால் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் சிந்தனையைத் தூண்டுவதுமே இக்கட்டுரையின் நோக்கமாகிறது.*

*14ஆம், 15ஆம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குக் குடிபெயர்ந்த ஜிப்சிகளில் 3 மில்லியன் வரையானோர் இன்றும் அந்நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் கிழக்கு*



படிப்பகம்

www.padippakam.com



ஐரோப்பிய நாடுகளிலும் ஜேர்மனி, ஒஸ்ரியா, ஸ்பெயின் போன்ற நாடுகளிலும் பல நூற்றாண்டுகளாகவே வாழுகின்றபோதும், அந்நாடுகளில் எல்லாம் இன்றும் திட்டமிட்ட இன ஒடுக்குதலுக்கு முகம்கொடுத்தே வாழ்ந்து வருகின்றனர். இரண்டாம் உலக யுத்தத்தின்போது யூதர்களுக்கு இணையாக ஐந்து இலட்சம் வரையான ஜிப்சிகள் வதை முகாம்களில் வைத்து நாசிகளால் படுகொலைக்கு உள்ளானதும், மேலும் பலர் பலவந்தமாக மலடாக்கப்பட்டதும் 50 வருடங்களுக்கு முந்திய வரலாற்றின் அழுக்குப் படிந்த சம்பவங்கள். இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்திய 50 வருடங்களில் 'ஜனநாயகம்', 'மனித உரிமை' என உலகம் எப்படித்தான் மாறிவிட்டதாகக் கூறிக்கொண்டாலும் ஜிப்சிகளைப் பொறுத்து, இவ் 50 வருடங்களும் புதிதாக எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிடவில்லை.

ஸ்லோவாக்கியாவின் பிரதமர் Vladimir Meciar 'அங்கீகரிக்க முடியாததும், புத்திமந்தமுமான' ஜிப்சிகள் பலம் பெறுவதைத் தடுக்கவேண்டும் என்று கூறியே, அவர்களுக்கான அரச உதவிகளை அண்மையில் குறைத்தார். ஜிப்சிகளை நாட்டைவிட்டு வெளியேற்றக் கோரும் சுவரொட்டிகளும், குரல்களும் இன்றும் ஒஸ்ரியாவில் இருந்துகொண்டே உள்ளன. ஹங்கேரியின் புகழ்பெற்ற பொப் இசைக்குழுவின் பாடல் "ஜிப்சிகளைக் கொல்லுங்கள்.... பெரியவரையும்.... சிறுவரையும்" என்றே தொடங்குகின்றது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் நாசிகளால் படுகொலைக்குள்ளான யூதர்களுக்காக அழுத மேற்குலகம், ஜிப்சிகளை வேண்டுமென்றே மறந்துபோனதுமின்றி, தொடரும் இன்றைய இன ஒடுக்குமுறைகளையும் கண்டும் காணாததாகவே இருந்து வருகிறது. எனினும், இதற்கான முழுப் பொறுப்பையும் மேற்கு நாடுகள் மீது முற்றுமுழுதாகச் சுமத்திவிட முடியாது. ஏனெனில், தம்மீதான இன ஒடுக்குதல்களுக்கெதிராக தாம் வாழும் எந்நாட்டிலும் ஜிப்சிகள் போராடியதாகவோ அன்றி, சிறு குரலைத்தானும் எழுப்பியதாகவோ செய்திகள் ஏதுமில்லை. மாறாக, அவ்வவ் நாடுகளின் இன ஒடுக்குதல்களுக்கும் மிரட்டல்களுக்கும் அடிபணிந்து தமது இன, மொழி அடையாளங்களை இழந்துவரும் சம்பவங்களே எல்லா நாடுகளிலும் நடந்துவருகிறது.

இரண்டாம் உலக யுத்த காலம் வரை தமக்கென ஒரு நாடின்றி ஐரோப்பா எங்கும் சிதறி வாழ்ந்த யூதர்கள், பின்னர் தமக்கென ஒரு அரசமைத்து உலகின் கௌரவமான பிரஜைகளாக இன்று வாழ்ந்து வருவதையும், யூதர்களைப் போன்றே நாசிகளால் பெருமளவில் படுகொலைக்குள்ளாகியும் கூட, நூற்றாண்டுகளாக தாம் வாழும் ஐரோப்பிய நாடுகளில் எவ்வித அரசியல் பாதுகாப்புமின்றி இன்றும் அரசியல் தஞ்சம் கோரி ஜிப்சிகள் அலைவதையும் ஒப்புநோக்குதல் வேண்டும். இஸ்ரேலின் உருவாக்கம் பற்றி என்ன தான் மாறுபட்ட கருத்துகள் இருப்பினும், அதற்கென அவர்கள் சிந்திய குருதியும் கொடுத்த விலையும் மதிக்கப்பட வேண்டியதே. தமது உரிமைகளுக்காக வீரம் செறிந்த போராட்டங்களை நடத்திய யூதர்களையும், எதுவித போராட்டத்தையும் நடத்தாது நாடோடிகளாய் அலைந்த ஜிப்சிகளையும், வரலாறு அவர்களுக்குரிய இடத்திலேயே வைத்திருக்கிறது. தமது உரிமைகளுக்காக துணிந்து போராடாத காரணத்தால்தான், தாம் வாழும் நாடுகளின் குடியுரிமைகளைப் பெற்றிருந்தும் கூட இன்றும் அரசியல் தஞ்சம் கோரி வேறு நாடுகளுக்கு அலையும் நிலை உருவானது.



ஈழத்தமிழர்கள் இன்று தாம் புலம்பெயர்ந்த நாடுகளில் நிரந்தரமாக வேரூன்ற முயல்வதை அவதானிக்க முடிகிறது. கனடா, நோர்வே போன்ற நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரி வந்த தமிழர்கள் பலர், இன்று குடியுரிமை பெற்று அந்நாடுகளின் பிரஜைகளாகி வருவதையும் மிச்சம் மீதியிருந்த உறவுகளையும் இங்கு அழைத்ததோடு மட்டுமின்றி போராட்டம் பற்றிய சிந்தனையிலிருந்து மெல்ல விடுபட்டுச் செல்வதையும் காணமுடிகிறது. அதேவேளை புதிதாக அரசியல் தஞ்சம் கோரி வரும் தமிழர்களின் எண்ணிக்கையும் குறைந்தபாடாய் இல்லை. தொடரும் யுத்தமும் யுத்தத்தின் தொடர்ச்சியான நெருக்கடிகளும், ஆயிரக்கணக்கான தமிழர்களைப் புதிது புதிதாக இடம்பெயரத் தூண்டுகிறது. இவ்வாறு அரசியல் தஞ்சம் கோரும் முயற்சிகளின் போது, பயணவழிகளில் இவர்கள் எதிர்கொள்ளும் அவலங்களும் கொடுத்து வரும் உயிர் விலையும், இனம், சமூகம் பற்றிய அக்கறைகொண்டோரைக் கவலைக் குள்ளாக்கிவருதல், புலம்பெயர் வரலாற்றின் இன்னொரு பக்கம். இந்நிலையில் அரசியல் தஞ்சம் கோரி, புலம்பெயர்வதற்கும் புலம்பெயர்ந்த நாடுகளில் நிரந்தரமாக வேரூன்ற முயல்வதற்குமான எல்லா நியாயங்களுக்கு மத்தியிலும் ஒரேயொரு கேள்வி உண்டு. சுயவிசாரணை என்று கூடச் சொல்லலாம். அது அடுத்த தலைமுறை பற்றியது.

கேள்வி இதுதான். எமது அடுத்த தலைமுறை இந்நாடுகளில் எப்படி வாழும்? யூதர்களைப் போலவா...? இல்லை... ஜிப்சிகளைப் போலவா? ❑



படிப்பகம்

# எல்லையும் தொல்லையும்

அழகுக்கோன்

மாலைப் பொழுதும் காலைச் சூரியனும் கூட
எங்கள் இரத்தத்தைக் கொதிப்படையச் செய்கின்றன இக்காலம்


கோடுகள் கிழித்து கிழுவைகள் நட்டு
வேலிகள் அடைத்து எல்லைகள் போடும்
பழக்கம் எமக்கு

எல்லைகள் அதிகம்

நமக்கு இன்று அவை அரணாக இல்லை
அடக்குமுறையாகிப் போயின

மொழியும் சமயமும் கூட எம்மை
மிக மிகத் தாழ்த்தி விட்டன

கோவில் மணியும் நாதஸ்வரமும்
இழவு வீட்டில் இசைக்கின்றன இன்று! □



# நாராய்... நாராய்...

சி. சிவசேகரம்

நாராய் நாராய் செங்கால் நாராய்

பழம்படு பனையின் கிழங்கு பிளந்து
பயன்மிக அறிந்த பனைசெறி நாட்டார்
வழிபல சென்றே பலதிசைப் பரந்தார்.
வருகுவ தெந்நாள் அறிவையோ நாராய்

திரைகடல் ஓடித் தம்முயிர் பேணத்
திரிந்தவர் தமக்கோ எங்கணும் அவலம்
கரியவர் அயலார் எனவசை கேட்போர்
கவலைகள் நீயும் உணர்வையோ நாராய்

அகதியின் வாழ்வின் இழிநிலை தாங்கி
அந்நிய மண்ணில் அண்டிக் கிடந்து
மிகநலி மாந்தர் தம்நகர் மீளும்
வகையென ஒன்றேன் மொழிவையோ நாராய்

பெருங்குளிர் வருமுன் கடல்பல தாண்டிப்
புலம்பெயர் புள்நீ கிளையுடன் மீண்டும்
வருகுவை நின்மண் தவறுதல் இன்றிப்
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
நாராய் நினக்கோ யாதும் ஊரே
நாராய் நின்இனம் யாவருங் கேளிர்
பாராய் எங்கள் மனிதரின் நிலையை
நாராய் நமக்கோர் நல்வழி கூறாய். □

www.padippakam.com



மு. பொன்னம்பலம்

# விசாரம்

இன்று தேசிய இனப்பிரச்சினைகளும், அவை சம் பந்தப்பட்ட போராட்டங்களும் முன்னெப் பொழுதுமில்லாத விதத்தில் பரவலாக அதிகரித் துள்ளமை எதைச் சுட்டுகின்றன என்பீர்?

மனிதன் தன் அறிவியல் சிந்தனை ரீதியாகச் சாதித் துள்ளவை அளப்பரியவை. இன்றைய நவீன உலகு, அறிவியல் சிந்தனையின் வெளிப்பாடே. ஆயினும் இன்று தலைதூக்கியுள்ள தேசிய இனப் போராட்டங் களும், அவை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளும், இன் றைய அறிவியல் சிந்தனையை ஒதுக்கிக்கொண்டு, மனித உணர்வுகளும் இயல்பூக்கங்களும் மேலோங்கி யுள்ளமையையே சுட்டுகின்றன என்பேன்.

உணர்வு, இயல்பூக்கங்களுக்கு மாறான, அறிவியல் சிந்தனை வயப்பட்ட போராட்டங்களுக்கு உதாரண மாக எவற்றைக் கூறுவீர்?

மார்க்சிய சிந்தனை வழிவந்த புரட்சிகளையும் போராட்டங்களையும் இதற்கு உதாரணமாகக் காட்ட லாம். ரஷ்யப் புரட்சி, சீனப் புரட்சி, கியூபப் புரட்சி போன்றவை இதற்குரியவையே. இவை மனித அறிவு திட்டமிட்டுப் போட்ட கோட்பாட்டை செயல்படுத்த வந்த புரட்சிகளும் போராட்டங்களுமே.

ஆனால் இந்த மார்க்சிய அறிவுச் சிந்தனையில் கட்டி யெழுப்பப்பட்ட சோவியத் யூனியன் உடைந்து போய் விட்டது. அதனோடு இணைந்திருந்த நாடுகள் தேசிய இன ரீதியாகப் பிரிந்து போய்விட்டன. இன்று சீனா மார்க்சியப் பொருளாதாரக் கொள்கைகளைக் கைவி ட்டு முதலாளித்துவ மாற்றங்களுக்குள் புகுந்து கொண் டிருக்கிறது. கியூபாவின் சோஷலிஸ ஆட்சியை எதிர் த்து மக்கள் அங்கிருந்து தப்பி வெளியேறிக் கொண்டி ருக்கின்றனர். இவையெல்லாம் எதைச் சுட்டுகின்றன?

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட, அறிவைப் புறந்தள் ளிய மனித உணர்வு, இயல்பூக்கங்களின் மேலோங்க லையே காட்டுகின்றன இவை.

அப்படியானால் மனித உணர்வு இயல்பூக்கங்க ளுக்கு முன்னுரிமை வழங்கி அவற்றின் எழுச்சியின் அடிப்படையில் நடைபெறும் தேசிய இனப் போராட் டங்களும் புரட்சிகளும் பிரிவினைகளும் மனித வர லாற்றில் ஒரு பிற்போக்கான பாத்திரத்தையே வகிக் கப்போகின்றன என்று கூறினால் பிழையா?

ஏன் அப்படிக் கூறுகிறாய் ?

'தேசியம்', 'இனம்' என்பவை மனிதன் (மனித இனம்) என்னும் பெருவட்டத்தைக் குறுக்கும் சிறுவட்டங்களா கவும், அவை விரியவிடாது கட்டுப்படுத்தும் பிற்போக் குக் கோட்பாடுகளாகவும் ஏன் கொள்ளக் கூடாது?

இப்படி நீங்கள் சொல்வது அவசர முடிவின்பால் பட்டது. மேலோட்டப் பார்வையில் அவை அப்படித் தெரிந்தபோதும், அடிப்படையில் அவை விடுதலை அம்சங்கொண்டவை. உதாரணமாக ஹிட்லரின் நாஸிப் படைகள் ஸ்ரலின்கிறாட் நகரை முற்றுகை யிட்டு ரஷ்யாவை ஆக்கிரமிக்க முற்பட்டபோது, ரஷ்யா தவிர்க்கமுடியாத வகையில் அறிவார்ந்த மார்க் சியக் கோட்பாட்டுச் சுலோகங்களை எல்லாம் கைகழு விவிட்டு, பழைய தேசிய இன விழுமியங்களையே சுலோகங்களாக முன்வைத்தது. 'வீர ரஷ்ய மக்களே', 'வீர ஸ்லாவ் இனத்தவரே' என்னும் இன, தேசிய ரீதி யான சுலோகங்களே போராட்டத்திற்குக் கைகொ டுத்தன.

இது குறுக்கமாகத் தெரியவில்லையா? இது பிற் போக்கு இல்லையா?

இல்லை, இதன் பின்னணியை விரித்துப் பார்த்தால் அது அப்படித் தெரியாது. செவ்விந்தியர்களின் நில த்தை அமெரிக்க அரசாங்கத்திற்கு விற்றுவிடும்படி செவ்விந்தியத் தலைவனான (CHIEF SEATTLE) சீவ் சியேற்றலை ஆபிரகாம் லிங்கன் கேட்டுக்கொண்ட போது, அது சம்பந்தமாக சியேற்றல் தன் மக்களுக்கு ஆற்றிய சொற்பொழிவு புகழ்மிக்கது. "ஒரு செவ்விந் தியனுக்கு அவனது மண்ணையும் அங்குள்ள மரஞ் செடி, கொடி, மலை, விலங்கு, பறவைகள், ஆறுகளை யும் அவனிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. ஆற் றில் ஓடுவது வெறும் நீரல்ல. அது அவனதும், அவனது மூதாதையரினதும் இரத்தம். காற்று அவன் சுவாசிக்கும் மூச்சு" என்று சியேற்றல் கூறிய புகழ்மிக்க வார்த்தைகள் நான் கூறவருவதை நன்கு விளக்கும். அறிவு ரீதியான சிந்தனைகளைவிட மனிதனோடு காலாகாலமாக ஒட்டிவரும் அவனது இனம், தேசம், மொழி பற்றிய சிந்தனைகள் சக்தி மிக்கவை. தாய் ஒருத்தியோடு ஒட்டி வரும் தாய்ப் பாசம், தாய்மை என்பவை போல் ஒரு மனி தனுக்கு அவனோடு ஒட்டிவரும் இனத்துவ, தேசிய, மொழி உணர்வு சக்தி மிக்கது மட்டுமல்ல, விடுதலை முகம் கொண்டதும்கூட.

விடுதலை முகமா? அதை விளக்க முடியமா?

ஒரு செவ்விந்தியனுக்கு அவனது நிலத்தில் உள்ள இயற்கையை விட்டு அவனது விடுதலையை உணர முடியாது என்றான் சியேற்றல். அவ்வாறே ஒவ்வொரு இனமும் தனது மண், மொழி, கலாசாரம் மூலமாகவே தனது விடுதலையை அனுபவிக்கிறது. குறுக்கமாகத் தெரியும் மண், மொழி, இனப் பற்றுக்கள் ஒவ்வொரு மனிதஇனத்தின் விடுதலைக்கும் ஊடகங்களாக மாறும் போது முற்போக்கான பாத்திரத்தை தாங்குகின்றன. மனிதன் மூக்கினால் சுவாசிப்பதுபோல், மீன்கள் அவ ற்றின் பக்கவாட்டுத் தாடைகளால்(GILLS) சுவாசிப்பது போல் ஒவ்வொரு இனக்கூட்டமும் தத்தமது கலாசாரம், மொழி, மண் எனும் ஊடகங்கள் மூலமாகத்தான் தமது விடுதலையை உணர்கின்றன. ஆகவே இன்றைய



படிப்பகம்

www.padippakam.com



தேசிய இனப் போராட்டங்கள் என்பவை ஒவ்வோர் இனக்கூட்டத்தின் உண்மையான விடுதலை அனுபவிப்புக்குத் தேவையானவையே. இனங்களின் விடுதலை என்பது அவற்றின் மொழி, மண், கலை கலாசாரம் பேணப்படும்போதுதான் ஏற்படுகிறது.

உண்மை. நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் மனிதனின் விடுதலை ஊடகங்களாக விளங்கிய மதம், மொழி, இனம், நாடு, கலை இலக்கியம் போன்றவை இன்று அதற்கெதிராக இயங்கத் தொடங்கியுள்ளதை நீங்கள் பார்க்கவில்லையா? இந்து மத அடிப்படைவாதம், இஸ்லாமிய அடிப்படைவாதம் இன்னும் ஏனைய அடிப்படைவாதங்கள் இதற்கு உதாரணம், இல்லையா?

ஒப்புக்கொள்கிறேன். இதை நான் ஒப்புக்கொள்ளும்போது நான் மனித விடுதலையின் இன்னோர் உயர்ந்த கட்டத்திற்குத் தாவவேண்டியுள்ளது.

*அப்படியானால்?*

எவை எவை மனித இனத்தின் ஒரு காலகட்ட விடுதலையின் ஊடகங்களாக இயங்கி வந்தனவோ அவையே இன்னோர் கட்டத்தில் அவற்றையும் விட உயர்தள விடுதலைக்கு தடையாக மாறக்கூடிய சந்தர்ப்பமும் ஏற்படுவதுண்டு. அந்நேரங்களில் அவை கடக்கப்பட வேண்டியவையாகின்றன. இத்தகைய புதிய தள விடுதலைக்கு எதிராக மாறும் பழைய தள விடுதலையின் ஊடகங்கள் கடக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தமும் விரைவில் ஏற்படவே போகின்றது. அதற்கு உதாரணமாகவே இன்றைய மத அடிப்படைவாதப் போக்குகளைப் பார்க்க வேண்டும். 'எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்ட வேண்டும், எல்லோரும் இறைவன் முன்னிலையில் ஒருவரே' என்ற பரந்த விடுதலைப் பார்வையைத் தந்த சமயங்கள், இன்று மனிதனை மனிதன் கொல்லவும் அவன் விடுதலையைப் பறிக்கவும் காரணமாகும்போது அவை கடக்கப்பட வேண்டியவையாகின்றன. இதை இப்படியும் விளக்கலாம்.

*எப்படி?*

நம் சமூகத்தில் காணப்படும் சாதிஅமைப்பு ஆரம்பத்தில் அறிவின் அடிப்படையில், வேலைப் பிரிவின் (DIVISION OF LABOUR) அடிப்படையில்தான் ஏற்படுத்தப்பட்டது. அதனால்தான், எந்தத் தாழ்ந்த வகுப்பில் பிறந்தவனும் அவன் அறிவின் மேன்மையைப் பொறுத்து பிராமணன் ஆகும் உரிமையை, விடுதலையைப் பெற்றிருந்தான். ஆனால் பின்னர் அது சுயநலமிகளின் ஆளுகைக்குட்பட்டு, தன் விடுதலை முகத்தை இழந்து, மனிதனை மனிதன் சுரண்டுவதற்குக் காரணமாக அமைந்தபோது அது கடக்கப்படவேண்டியதொன்றாயிற்று. அந்த நிலைக்குத்தான் இன்றைய மதங்களும் வந்துள்ளன. அதனால் அவையும் கடக்கப்பட வேண்டிய நிலைக்கு வந்துள்ளன.

*மதங்களைக் கடப்பதா? எப்படி?*

தனித்தனி மதங்களைப் பேணுவதென்பது, தெய்வீகத்தைப் பேணுவதற்குப் பதிலாக, இனிமேல் வெறும் மனித குறுக்கத்தைத்தான் பேணுவதாக முடியும். ஆகவே இனிமேல் தனி மதக் கூட்டுகள் உடைக்கப்பட வேண்டும். இப்படி தனித்தனி மதக் கூட்டுகள் உடைக்கப்படும்போது எல்லா மதங்களும் போற்றும் தெய்வீக ஒருமையின் அடிப்படையில் ஓர் முழு மதப் பார்வை (TOTAL RELIGION) ஏற்படும். இதுவே இனிமேல் எதிர்கால மதநோக்காக அமையப் போகிறது. இந்தப் புதிய பார்வை ஏனைய துறைகளையும் பாதிக்கும்.

*ஏனைய துறைகளைப் பாதிக்குமா? அவை என்னென்ன துறைகள்? எப்படிப் பாதிக்கும்?*

முழு மதப் பார்வை எப்போதோ கீழைத்தேய சமய ஞானிகளால் முன்வைக்கப்பட்ட தொன்றாகும். சகல இயக்கமும் ஓர் பேர் உண்மையின் வெளிக்காட்டலே என்ற கீழைத்தேய சமய ஞானிகளின் கூற்று, இன்று மேலைத்தேய நவீன பௌதீக இயலைப் பாதித்துள்ளது. இன்று அவற்றில் ஏற்பட்டுவரும் ஆய்வுகள் கீழைத்தேய சமய ஞானிகளின் கூற்றுக்களை ஏற்றுக்கொள்ள வைத்துள்ளன. இதன் அடிப்படையில் ஏனைய கல்வி, கலாசார, சமூகத் துறைகள் பாதிப்படையவுள்ளன. (பார்க்கவும்: The Tao of Physics, Mysticism And New Physics) மேலும் Extra Sensory Perception (ESP) எனப்படும் ( புலன் கடந்த தரிசனம்) உளவியல் ஆய்வுகள், Para Psychology பல எனப்படும் பேர்மன உளவியல் ஆய்வுகள் எல்லாம் இவற்றை வலியுறுத்துவனவாகவே வெளி வந்துகொண்டிருக்கின்றன. அண்மையில் வாழ்ந்த கீழைத்தேய ஞானிகளான சுவாமி விவேகானந்தர், ஸ்ரீ அரவிந்தர், மேலைத்தேய விஞ்ஞானிகளான ஜூலியன் ஹக்ஸ்லி, ரெஹார்டி சாடெயின் (Julian Huxley/ Tehar De Chardin) போன்றவர்கள் இனி மனித இனம் எடுக்கப் போகும் பாய்ச்சல்கள் பற்றி கூறிச் சென்றுள்ளவை முக்கியமானவையாகும்.

*அவர்கள் கூறிச் சென்றவை எவை?*

ஜடத்தில் (உடல்) இருந்து உயிரும், உயிரிலிருந்து மனமும் என்று வளர்ந்து வந்த மனிதனின் பரிணாம வளர்ச்சி (Evolution), இனி பேர்மனம் (Super mind) என்ற புதிய தள வளர்ச்சியை எட்டப்போகிறது என்பதே அவர்களின் அறிவுறுத்தலாகும்.

*இதனால் ஏற்படப்போவது என்ன?*

மனிதனின் இந்தப் பேர்மன வளர்ச்சிக்கு எந்த இனம் தன்னைத் தயார்படுத்துகிறதோ, அந்த இனமே எல்லா இனத்துக்கும் தலைமைதாங்கக் கூடியதாகவும் அதன் மொழி, கலை கலாசாரமே எதிர்காலத்துக்குரிய வீரியம் மிக்க மொழியாகவும் கலை, கலாசாரமாகவும் அமையும். இந்த மனித பரிணாம வளர்ச்சிக்கு எதிராகவோ அல்லது அதற்கு ஏற்ப தம்மை விரிய வைக்க முடியாதவையாகவோ நிற்கும் எந்த இனம், மொழி, கலை, கலாசாரம் சமயமும் அழிபடப்போபவையாகவும் கடக்கப்பட வேண்டியவையாகவும் மாறும். ஆனால் இவை எல்லாவற்றுக்கும் முதல் நாம் ஆரம்பத்தில் கூறிய ஒன்றை மீண்டும் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

*என்ன அது?*


மனிதனின் இப்பேர்மன வளர்ச்சி பற்றி உணர்ந்துகொள்வதற்கும் அதைப் புரிந்துகொள்வதற்கும் ஒவ்வொரு இனமும் முதலில் பூரண சுயாதீனம் உடையதாய், பூரண விடுதலையை அனுபவிப்பதாய் இருக்க வேண்டும். இந்த அடிப்படையில்தான் சிறுபான்மை இனங்களை அடக்கி ஒடுக்கும் பேரினவாதத்திற்கு எதிராகப் போராடும் தேசிய இனப் பிரச்சினை முக்கியத்துவம் பெறுவதோடு முற்போக்குக்குரியதாகவும் கொள்ளப்படுகிறது. ❑



படிப்பகம்

www.padippakam.com






## சன்னதமாடி

ஒரே ஒரு தீவாம்
அங்கு
அவர்கள் மட்டும்
பெருமை கொள் மதத்தோடு.

இன்னொரு இனத்திற்கு
உரிய இடந்தரின்
பேரினம் கடலில் மூழ்கிடும்.

இதுவே
இப்போது
பல்கலைக் கழகத்தாருக்கும் பரப்புரை.

உரிமைப் போர் யுத்தமானது
படைகளும் விமானங்களும்
ஆக்கிரமிப்பும் அவலங்களும்
எல்லாம்
அவர்கள் கடலில் விழாதிருக்க.
பட்டினிக் கொடியேற்றி
போர் முடிசூடியது.

இருப்பது
ஒரே ஒரு உலகம்.
அங்கு மட்டும் மனித இருப்பு.
நடப்பது
மனிதனுக்கும் போருக்குமான போர்.
அறிந்தும்
அமைதியாய் கிடக்கும் அகிலம்.

போர் வெற்றி கண்டால்
பரிசு
மனிதனில்லா உலகம்.

எங்கோ எப்படியோ எதன்வழியோ
சொல்லிவிட
தேசமில்லா சீவனொன்றின் துடிப்பு. □

ஒரு சமயம்
நீ மூச்சற்றிருந்தாய்.
நான் பதறிப்போனேன்.
சுற்றமும்...... சீட்டும்..... வட்டியும்
உன்னைக் கூறுபடத்தின.

நீ வாழ்ந்த பூமியும்.. உன் சுற்றமும்
உனது நம்பிக்கைகளும்...
யாருக்காகவோ வாழ்ந்து
ஏதோ நம்பிக்கையில் துவழ்ந்து
"காதல்" என்பதை ஆருக்காகவோ
காறித் துப்பி....
சரி,
நீ செத்துப் போனாய்
நான்...?
என்ன செய்யக்கூடும்?
உன்னை உனக்கே உரிய
நானை, யான் காணக் கூடுமா?
கண்டாலும் நீ பேசுதல் கூடுமோ?
உனது நீ யை நீ காணுதல் கூடும்
விடு... விட்டுவிடு...
சொல்கிறேன் கேள், விட்டுவிடு!
இனியேனும்;
இறந்த பின்பேனும்
காதலுக்காய்
வாழ்வோம் வா! - ஏனெனில்
நான் இன்னமும் சாகவில்லை
நாடு நமக்காகக் காத்துக் கிடக்கிறது.
□

**ஆதவன்**





படிப்பகம்

www.padippakam.com




# தகவல், தமிழ், வாழ்வு

நா. கண்ணன்

மனிதன் இன்று உலகலொம் பரந்து பரிணாம வளர்ச்சியில் வெற்றிநடை போடுவதற்கு இரண்டு விடயங்கள் முக்கியமானவை. ஒன்று உயிரியல் சார்ந்த மாற்றம். அதாவது, நான்கு கால் விலங்கிலிருந்து உரு கொண்டு இருந்தாலும், இரண்டை நடப்பதற்கு வைத்துவிட்டு, இரண்டைக் கைகளாக மாற்றிய வித்தை. இம்மாற்றம் படிப்படியாக மனிதனை கைவினைஞனாக மாற்றியது. இந்த இயற்கை மாற்றத்திற்கு ஈடுகொடுக்க அவனது மூளையில்-நிறைய மாற்றங்கள் நிகழ வேண்டியதாயிற்று. மனிதனின் மூளை விரிவடைந்து, உடலில் நிகழும் செய்திப் பரிமாற்றத்தின் பிரதான கேந்திரமானது. படிப்படியாகப் பேச்சு வளர்ந்தது. மனிதன் குழுவாகச் செயற்பட்டான். தனி மனிதனை விட, குழு பலம்பொருந்தியதால் மனித சக்தி விலங்கு சக்தியை வெல்ல முடிந்தது. உள்ளே தோன்றும் எண்ணங்கள் புறத்தே பேச்சாக மலரும்போது, அதே எண்ணங்கள் எழுத்தாக வடிவெடுக்க நீண்ட நாட்கள் ஆகவில்லை. எழுத்து - அதுதான் மனித வரலாற்றின் இரண்டாவது பெரிய உந்து சக்தி. எண்ணம் புத்தகமானதுதான் மனித பரிணாமத்தின் மாபெரும் வெற்றி. இதை, கலாசார பரிணாமம் என்ற தனிப் பெயரிலேயே அறிஞர்கள் அழைக்கின்றனர்.

மின் வலையில் சில தமிழ் பக்கங்கள்






மனித எண்ணங்கள் எழுத்தானபோது அவை சாகா வரம் பெற்றுவிட்டன. தனி மனிதன் இறக்கிறான். ஆனால் அவன் எண்ணங்கள் அழிவதில்லை; தொடர்கின்றன. வள்ளுவன் போய்க் கால, காலமாகிவிட்டது, அவன் சொன்னானே:

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து உலகு

என்ற சொல், அது இன்னம் வாழ்கிறது. இதுதான் உலகின் பெருமையுங்கூட.

எண்ணம் என்பது செய்தி. எழுத்து, பேச்சு இவை இத்தகவலைப் பரப்பும் ஊடகங்கள். கவனமாகப் பார்த்தால் இப்பிரபஞ்சம் என்பதே செய்தியாக நிற்கிறது. பிரமன் அண்டத்தைப் படைத்தபோது அவனுக்கு தகவல் (information) தேவையாய் இருந்தது. அத்தக வல்தான் வேத மந்திரங்கள். அவை காற்றில் மிதந்து கொண்டு இருந்தன என்கின்றனர், இந்தியர்கள். முதலில் தோன்றியது சொல் என்கிறது விவிலியமும். அதா வது தகவல் எல்லாவற்றிற்கும் முன்னால் நிற்கிறது. இத் தகவலை வைத்துக்கொண்டு பிரபஞ்சம் தோன்றி, மறைந்து, தோன்றி...(ஊழிதோறும் தன்னுள்ளே படைத்து, காத்து, கெடுத்து உழலும், ஆழி வண்ணன் எம் அம்மான் – பிரபந்தம்) பிரபஞ்சம் ஒரு வெடிப்பில் தோன்றியது என்கிறார்கள் அறிவியலார். இவ்வெடிப்பின் தகவல் யுக, யுகமாக காற்றில் கதிர்வீச்சாக தவழ்கிறது. இக்கதிர் வீச்சைக் கொண்டு இப்பிரபஞ்சத்தின் வயதைக் கணக்கிடுகின்றனர் பண்டிதர்கள். வான்வெ ளியில் தவழும் பிரமாண்ட தொலைநோக்கிகள் இன்னும் நட்சத்திரங் களும், சூரிய மண்டலங்களும், கிரகங் களும் தோன்றிய



படிப்பகம்

www.padippakam.com





வண்ணம் இருக்கின்றன என்கின்றன. சூரியனின் குழந்தையாக பூமி தோன்றுகிறது. பூமியின் புதல்வனாக உயிர் தோன்றுகிறது. சூரிய ஒளி பூமியை ரட்சிக்கிறது (ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும் - சிலப்பதிகாரம்).

உயிர் வளர்ச்சியின் தகவல்கள் மூலக்கூறுகளில் புதைந்து கிடக்கின்றன. கல்லுக்குள் தேரை போல், (cell) செல்லுக்குள் புதைந்து இருக்கும் டி ஆக்சி ரை போஸ் அமினோ அமிலங்கள் (DNA) இத்தொடர்புக்குச் சான்று பகல்கின்றன. வியக்கத்தக்க ஆராய்ச்சிகள் இத்த கவலைக்கொண்டு, இவ்வுலகின் ஆதித்தாய் எங்கு பிறந்திருப்பாள் என்றுகூட, கண்டு சொல்லுகின்றன. அத்தாய்க்கும் முந்திய தொடர்புகளையும் சொல்லும் தகவல்களும் இம்மூலக்கூறுகளில் உண்டு. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி போல் இம்மூலக்கூறுகளை அறிய, அறிய நம் பண்டைத் தொடர்புகள் புலப்படுகின்றன. மனிதம் முழுவதற்கும் ஒரே மூலம் இருக்கிறது (சாதிகள் இல்லையடி பாப்பா - பாரதி). மனிதம் தாண்டி மற்றைய உயிரினங்களுக்கும் ஒரே மூலம் இருக்கிறது (அதொன் கிடந்து பன்றியாய் நன்று சென்ற நாள் அவற்றுள் நல்லுயிர் படைத்து - பிரபந்தம்). உயிர் இனம் தாண்டி அனைத்து பொருட்களுக்கும் ஓர் மூலம் இருக்கிறது (உலகம் யாவையும் தாமுள ஆக்கலும் நிலை பெறுத்தலும், நீக்கலும் - கம்பராமாயாணம்). எல்லா வற்றிற்கும் மூலமாக தகவல் வந்து நிற்கிறது. தகவல் தான் அண்டம், தகவல் தான் அதனுள் உள்ள உயிர்கள், தகவல் தான் வாழ்வு. எல்லாமே தகவல்தான்.




கோழி முட்டை கோவிந்தனாக மாறாமல் இருப்பது அதனுள் உள்ள தகவலால். கல்லுக்குள் தேரை கஷ்ட மில்லாமல் இருப்பது, சில்லு வண்டு பதினாறு ஆண்டுகள் மண்ணில் புதைந்து இருந்து பின் உயிர் மீள்வது, கரடி கூதலில் தூங்கி வசந்தத்தில் விழிப்பது எல்லாம், உயிரினங்களுக்கும் இயற்கைக்கும் இடைவிடாது நடக்கும் தகவல் பரிமாற்றத்தால்.

மனிதனை சந்திரனுக்கு அனுப்பி விட்டு விநாடி தவறாமல் அவனை அங்கே நடக்க வைத்து சாதனை புரிந் தது தகவல் பரிமாற்றத்தால். கையில் நடமாடும் தொலைபேசியை வைத்துக் கொண்டு நடக்க முடிகிறது, நடக்கும் போது பேச முடிகிறது. தகவலின் ரகசியங்கள் வெளிப்பட வெளிப்பட தொலைவு என்பது திடீரென சுருங்கி விட்டது. யாரும் யாருக்கம் தொலைவே இல்லை போல் தோன்றுகிறது.

கலைஞர் வீட்டில் கன்னுக்குட்டி பிறந்தால் சன் டீவியில் ஒளிபரப்பாகிறது. ஆயிரம் வீடுகளில் அதுவே அன்றைய தகவலாகி ஆனந்திக்க முடிகிறது. தொலைக் காட்சிப் பெட்டி இல்லையெனில் வாழ்வு ஓடுவ தில்லை, நவீன உலகில். நல்லது கெட்டது எல்லாம் பெட் டியில் அடங்கிவிடுகிறது. கண்ணாடி அணிந்தவருக்கு அது அங்கமாகிப் போவது போல், தொலைக்காட்சிப் பெட்டி மனித வாழ்வின் அங்கமாகிப் போய்விட்டது. மனிதனின் மூன்றாவது கண்ணாக அது இப்போது செயற்படுகிறது. வளைகுடாவில் போரா? ஆபிரிக் காவில் பட்டினிச் சாவா? இந்தியாவில் சாதிச் சண் டையா? அமெரிக்காவில் தண்ணீர்த் தொட்டியில் பிள்ளை பெறுகிறாளா? எல்லாம் டிவிக்கு வந்து விடு கின்றன. பண்டைய ஞானதிருஷ்டி இன்றைய டிவி கேமிரா.

தொலைபேசி, தொலைக்காட்சி இவையிரண்டிற்கும் அடுத்தாற்போல் மனித வாழ்வின் அங்கமாகப் போகும் அடுத்த தொழில்நுட்பம் கணனித் தொடர்பால் அமையும் மின் வலை இணையம் (eletronic web: internet).



படிப்பகம்

www.padippakam.com



தொலைபேசியும், தொலைக்காட்சியும் உருவான காலத்தில் அதன் அபரிமித வளர்ச்சியை யாரும் எதிர்பார்க்கவில்லை. முதல் இரண்டு வருடங்களில் நாலைந்து சதவிகித வளர்ச்சி, எட்டாவது வருடத்தில் பத்து சதவிகித வளர்ச்சி, அடுத்த தசாப்தத்தில் 80 இலிருந்து 90 சதவிகித வளர்ச்சி. இது அப்படியே தொடர்கிறது மின் இணைய வளர்ச்சியில். இந்தப் போக்கை இனங்கண்டு இத்தொழில் நுட்பத்தால் விளையப்போகும் எதிர்கால சந்தையில் நிரந்தர இடம்பெற மைக்ரோ சாப்ஃடு நிறுவனத்தினர் நூறு மில்லியன் டாலர் தொகையை மென்பொருளாக விநியோகிக்கத் தொடங்கி உள்ளனர்.

மின் வலை தகவல் தொடர்பு பன் ஊடக (multimedia) தொழில்நுட்பமாக மலர்ந்துள்ளது. தேவையானவை ஒரு கணணி, தொலைபேசி இணைப்பு, மென்பொருள் ஆகியன. இவை சேரும்போது உலகம் இணைகிறது. ஒளி நூலிழை (optic fibres) தடங்கள் கடல் கடந்து நாடுகளை இணைக்கின்றன. இது தகவல் பாய்ந்தோடும் இரத்தக்குழாய்கள். இதன் வழியே அதிவேக தகவல் சாத்தியமாகிறது. மின் அஞ்சலாக நாம் எழுதும் கடிதங்கள் சில நிமிடங்களில் பெறுபவரை அடைகின்றன. வலைத் தொலைபேசி மூலம் இரண்டு கணனிகளின் ஊடாகப் பேசிக்கொள்ள முடிகிறது, சொற்ப பணத்தில். ஏனெனில் கணனிகள் இயங்குவது உள்ளூர்த் தொலைபேசி கட்டணத்தில். பேச்சையும், எழுத்தையும் மின் அஞ்சலாக அனுப்ப முடிகிறது. துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா என கவிதையுடன் இசையையும் இணைக்க முடிகிறது இப்போது. தனிமையிலே இனிமை காண முடியுமாவென இனி யாராவது கேட்டால், அது முடியும் என்பதுதான் பதில். இணையத்தில் சேர்ந்துவிட்டால் பொழுதுதான் போதாது. தகவல் உலகம் மகா பெரிதாக விரிகிறது. ஒன்றைத் தொட்டால் ஒன்று என தகவல் உலகங்கள் விரிகின்றன. இணையத்தில் சருக்கி மகிழ்ந்தவர்களுக்கு இதன் அர்த்தம் புரியும்.

வளர்ந்துவரும் இந்த தொழில்நுட்பத்தில் தென் ஆசிய பங்களிப்பு நிறையவே உள்ளது. குறிப்பாக தமிழர்களின் பங்கு கணிசமாக இருக்கிறது. கையில் கணனியும், தட்ட ஓர் எழுத்தும் கிடைத்தவுடன் இவர்கள் செய்த முதல் காரியம், தமிழை கணனிக்கு சொல்லித்தந்ததுதான். அதன் பலன், இப்போது கணனிகள் தமிழ் பேசத் தொடங்கி உள்ளன. சர்வதேசமுகம் கொண்டுள்ள தமிழ்ச் சமுதாயத்திற்கு இது முக்கியமான தேவையும்கூட. தமிழர்கள் ஒன்று சேர பல இணையங்கள் தோன்றிய வண்ணம் உள்ளன. தனி மனிதர்கள் தங்கள் படைப்புகளை, திறமைகளை உலகிற்குச் சொல்லும் வண்ணம் அமையும் தனிமின் பக்கங்கள் (home page) நிறைய வந்துகொண்டு இருக்கின்றன. சமீபத்தைய தேடலில் தமிழ் என்ற சொல்லைக் கொடுத்து கணனியைத் தேடச் சொன்னதில் 10,000 மின் இணைப்புகளைத் தந்தது. ஒவ்வொன்றையும் காண ஒரு வாழ்நாள் போதாது. தமிழர்கள் கூடி அமைத்திருக்கும் இணையங்களில் மிக பர, பரப்பாகி உள்ளது மலேசிய முத்து எழிலனும், அவுஸ்திரேலிய பாலபிள்ளையும் சேர்ந்து அமைத்துள்ள தமிழ் இணையம் ஆகும். இவர்கள் செய்த பெருந்தொண்டு கணனியில் தமிழ் எழுதக்கூடிய மென்பொருளை எல்லோருக்கும் இனாமாக வழங்கி, அவர்கள் கூடிப்பேச ஓர் மின் வலையை உருவாக்கியதுதான். உவப்பத் தலைகூடி என்ற வள்ளுவனின் சொல் சர்வதேச பொருள் கொண்டுள்ளது இப்போது. சென்னைத் தமிழர் எழுப்பும் வினாவிற்கு, சில மணித்துளிகளில், அமெரிக்க வானவியல் அறிஞரும், ஜேர்மனியில் வாழும் வைத்தியரும், சிங்கப்பூர் தமிழ் வாத்தியாரும், மலேசிய தொழில் அதிபரும், அவுஸ்திரேலிய கணனி நிபுணரும் பதில் கூறமுடிகிறது. ஒரு அறிஞன் தனியாகப் பல வருடங்கள் ஆழ்ந்த யோசித்த உள்ளொளியை (insight) சில நிமிடங்களில் உலகத்துடன் பகிர்ந்துகொள்ள முடிகிறது.

இத்தமிழ்ப் பரிமாற்றத்திற்கு வித்தாக அமைவது தமிழ் வரிவடிவங்களை கணனியில் எழுதுவதும், அதற்கென பிரத்தியேக விசைப்பலகை இட ஒதுக்கீடு செய்வதும் ஆகும். இம்முயற்சியில் பல அறிஞர்களும், தொழில்நுட்ப வினைஞர்களும் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் முயற்சிகள் இன்னும் சரியாக காலக்கிரமமாக பதிவு செய்யப்படவில்லை. கணனி உபயோகிப்பாளர்களுக்கு மிகவும் பிரபலமான முயற்சி முனைவர் கே.ஸ்ரீநிவாசனிடமிருந்து வருகிறது. இவர் ஆதமி, ஆதவின், திரு முதலிய மென்பொருள்களை அளித்து ரோமானிய விசைப்பலகையை வைத்தே தமிழ் எழுதும்படி செய்தார். இம் மென்பொருள்களை கல்வி மற்றும் தனிப்பட்ட உபயோகத்திற்கு இலவசமாக வழங்கினார். இவரின் சளைக்காத முயற்சியால் முதன் முதலாக நாலாயிர திவ்யபிரபந்தமும் மின் எழுத்தில் பதிவாகிறது. இவரது முயற்சிகள் எம்.எஸ்.டாஸ் மற்றும் விண்டோஸ் என்னும் இயங்கு தளங்களில் பயன்படும் மென்பொருளாக அமைகின்றன. மெக்கின்டாஷ் என்னும் கணனிகளுக்கான தமிழ் வரிவடிவத்தை (மயிலை) பிரபலமாக்கியவர் முனைவர் குப்புசாமி கல்யாணசுந்தரமாவார். இவ்விருவரும் சேர்ந்து விண்டோஸ் தளத்திற்கு மயிலைஸ்ரீ என்ற வரிவடிவத்தையும் வழங்கி உள்ளனர். தமிழ் இணையம் அமைத்தது மட்டுமல்லாமல் அஞ்சல், இணைமதி போன்ற அழகிய வரிவடிவங்களை அமைத்து முற்றும் இலவசமாக வழங்கியவர் முத்தெழிலன் அவர்கள். இது தவிர முனைவர் குப்புசாமி அணங்கு என்ற வரிவடிவத்தையும், திரு. சிவகுருநாதன் நளினம் என்ற வரிவடிவத்தையும் பிரபலமாக்கி வருகின்றார். பின்னவர் அமைத்திருக்கும் விசைப்பலகைத் திட்டம் தமிழில் அதிகமாகப் பயன்படும் எழுத்தை கணக்கில் கொண்டு, பலவகையில், தொட்ட கையை பல நிமிடங்கள் எடுக்கவேண்டிய அவசியமில்லாமல் அமைகிறது. இவர்கள் முயற்சிகள் தவிர கீழ்க்கண்ட பெருமக்களும் தனித்தனியாகப் பல முயற்சிகள் செய்துள்ளனர்: கோபிநாத், டி.கோவிந்தராஜ், பால சுவாமிநாதன், ஞானசேகர் சுவாமிநாதன், விஜயகுமார், நா. கண்ணன்.

இவ்வரிவடிவங்களின் துணையால் தமிழ் இலக்கியங்கள் மெது மெதுவாக மின் வடிவில் வந்துள்ளன. உதாரணமாக குறள் பாக்கள், ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், அபிராமி அந்தாதி மற்றும் பிரபலமான பாரதியின் கவிதைகள். இம்முயற்சி தொடர்ந்தால் சங்க காலம் தொடங்கி சுந்தர ராமசாமி வரையிலான தமிழ் இலக்கியம் காந்தத்தகடுகளாகக் கிடைக்க வாய்ப்புள்ளது. இது தமிழ் இலக்கியங்களை நொடிப் பொழுதில் அணுகவும், ஆராயவும், ஆனந்திக்கவும் வைக்கும்.

தமிழக நெடுங்கணக்கும், எழுத்துக்களும் வளரும் தொழில்நுட்பத்திற்கு பெரிய இடையூறாக இருக்கும் என்று எண்ணினார்கள் நம் முன்னோர்கள் (உ-ம். பாரதி, ரா.பி. சேதுப்பிள்ளை, தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மு.வ., கி.வா.ஜ., கா.அப்பாத்துரை, ஈ.வே.ரா). சமீபகாலத்தில் கூட ஐராவதம் மகாதேவன், வா.செ. குழந்



படிப்பகம்

www.padippakam.com



தைசாமி, எம்.ஏ. நுஃமான் போன்ற அறிஞர்கள் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிப் பேசி வருகிறார்கள். தட்டெழுத்து இயந்திரம், அச்சுக் கோர்க்கும் தொழில் இவைகளுக்கு இம்மாற்றம் அனுகூலமாக இருந்திருக்கும். சில எழுத்துக்களை மாற்றியதுடன் தமிழக அரசு இத்திட்டத்தை கிடப்பில் போட்டு விட்டது. இந்த மெத்தனத்தில் காலம் கடந்து போனது. ஆனால் இக்குறையை புதிய கணனித் தொழில் வளர்ச்சி நிவர்த்தி செய்துவிட்டது. உதாரணமாக, ஆங்கில விசைப்பலகைக்கு பழகியவர்களுக்கு கே.ஸ்ரீநிவாசனின் ஆதவின், முத்தெழிலனின் முறைகள் மிக ஏதுவாக அமைகின்றன. மேலைக் கலாசாரத்தில் வளர்ந்த தமிழ் பேசத் தெரிந்த பிள்ளைகளுக்கு இம்முறை ஒத்து வருகிறது. ஆங்கிலத்தில் சிந்தித்து எழுதும் பல தமிழ் அறிஞர்களுக்கும் இது பயன்படுகிறது. ஆனாலும் இதன் நோக்கு தமிழை முதல்மொழியாகக் கொள்ளும் இந்திய, இலங்கைத் தமிழனுக்கு மிகவும் அந்நியமாகப்படும். இதை நிவர்த்திக்க சிங்கப்பூரைச் சேர்ந்த நா. கோவிந்தசாமி ஒரு விசைப்பலகை முறையைக் கொண்டு வந்துள்ளார். தமிழ் கணனித் துறையில் பெரும் பங்களித்துவரும் சுஜாதா இம்முறையை வெகுவாகப் பாராட்டுகிறார். விசைப்பலகை அமைப்பை செந்தரமாக்கும் முயற்சி சென்னையில் தொடங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் பழக்கத்தில் இருக்கும் பல வரிவடிவங்களையும், முறையையும் கையாண்டு மின் எழுத்துத் தொகுப்புக்களும், மின் பத்திரிகைகளும் வர ஆரம்பித்துள்ளன. உதாரணமாக, மயிலை முறையில் தினபூமி என்ற நாளிதழும், கணையாழி என்ற இலக்கிய இதழும், நக்கீரன் என்ற அரசியல் இதழும், ஆதமி முறையில் வானவின் என்ற இலக்கிய இதழும், இணைமதி முறையில் தமிழ் முரசு, ஆனந்த விகடன், குயில் மற்றும் தமிழ் இணையத்தின் வெளியீடுகளும் வெளிவருகின்றன. இம்முறைகள் எதுவுமில்லாமல் ஓவியமுறையில் குமுதமும், ஜீவ ஒளியும் வெளியாகின்றன. தமிழ் வலை என்ற புதிய இயக்கம் தனிமனித உணர்வுகளைக் காக்கும் வண்ணம் தனி அறைகளில் (எல்லாம் கணனிக்குள் தான்) பேச வரிவடிவம் ஒன்றை அமைத்து இயங்கி வருகிறது.


இவ்வளவு முறைகள் இருந்தால் குழப்பம் வராதோ? வரத்தான் செய்யும். ஆனால் தொழில்நுட்பம் அதற்கும் விடை வைத்திருக்கிறது. வெவ்வேறு வரிவடிவங்களை ஒன்றுக்கொன்று மாற்றும் மாற்றான்களை திரு. முத்தெழிலன் அறிமுகப்படுத்தியுள்ளார். இதை வைத்துக்கொண்டு ஆதமியிலிருந்து மயிலைக்கோ, மயிலையிலிருந்து இணைமதிக்கோ எளிதாக மாற்றிக்கொள்ள முடியும். மெக்கின்டாஷ் கணனிகளுக்காக மாற்றான்களை நா. கண்ணன் மற்றும் கிரிஸ் கோயன்க செய்து வருகின்றனர்.

எழுத்தைக் கூட்டுவதா, குறைப்பதா என யோசித்துத் தெளிவதற்குள் நவீன தொழில்நுட்பம் விடை கொண்டு வந்து விட்டது. நெடுங்கணக்கில் சில உகர, ஊகார குறியீடுகளை மாற்றினால் தமிழை இரண்டாம் மொழியாகப் பயிலும் வெளிநாட்டு மாணவர்களுக்கு ஏதுவாக இருக்கும் என இனி எவ்வளவுதான் சொன்னாலும் அது செவிடன் காதில் ஊதிய சங்காய்த்தான் முடியும்.

தொழில்நுட்பம் என்பது எப்போதும் மேலிருந்து தான் கீழே பாய்கிறது. இக்கட்டுரையின் பயன் முழுவதும் பாமரனை அடையப் பல வருடங்கள் ஆகலாம். ஆனாலும் தொலைக்காட்சி பிரபலமாகிவரும் வேகத்தைப் பார்த்தால் இணைய வலை என்பது எல்லோர் மீதும் வீழ அதிக நாள் ஆகாது என்றும் தோன்றுகிறது.

இத்தகவல் புரட்சியின் நன்மை தீமைகளை ஆராய முற்பட்டால் அதுவே ஒரு கட்டுரை ஆகிவிடும். பொதுவாக எந்தத் தொழில்நுட்பத்திலும் நன்மையும் இருக்கிறது, தீமையும் இருக்கிறது. உலகம் எதிர்பாரா வண்ணம் தகவல் திடீரென பொதுவுடைமை ஆகிப்போய் விட்டது. இத்தகவல் புரட்சி இரும்புத் திரை நாடுகளையும் தகர்த்துக் கலக்கிவிட்டது. வருங்கால பொருளாதார, கல்வி, அரசியல் பரிமாற்றங்களையெல்லாம் வழி அமைக்கக்கூடிய இத்தொழில் புரட்சியில் பங்கு கொள்ள முதல் மற்றும் மூன்றாம் உலக நாடுகள் விரைந்து செயல்படுகின்றன. மக்களின் மடைமையில் காலந்தள்ளும் அரசியல்வாதிகள் நாட்களை எண்ணவேண்டிய காலம் வந்தாகிவிட்டது. இது நன்மை.

தகவல் பொதுவுடைமை ஆனால் எல்லாத் தகவல்களும் உலாவரத்தான் செய்யும். பாலியல், தீவிர இடதுசாரி, தீவிர வலதுசாரி கருத்துக்களும், சமயமும் வலைக்குள் நுழைந்துள்ளன. பாலியல் தகவல்களை சென்சார்



செய்யும் மசோதாவை அமெரிக்க அரசு அனுமதித்துள்ளது. பல மத, இனத்தவர் வாழும் நாடுகளில் இவை விஸ்வரூபம் எடுக்கலாம். அச்சில் வரும் எழுத்தை வைத்து ஆசிரியரின் உயிருக்கு பணயம் வைக்கும் காலம். ஆனால் கணனி வலையில் உள்ளே புகுந்து ஆளைத் தேடினால் அது மனிதனாகவே இல்லாமல் இருப்பதற்கும் வாய்ப்புக்கள் உண்டு. அதை நினைத்து சல்மான் ருஷ்டிகள் ஆசுவாசப்படலாம்.

கடைசியாக, கணனிக்குள் புகமுயலும் ஆர்வலர்களுக்கு சில இணைய முகவரிகள் தரலாம் என முதலில் எண்ணினேன். தகவல் வலையில் மாற்றங்கள் மின்னல் வேகத்தில் நடக்கின்றன. ஒவ்வொரு பதினெட்டு மாதத்திலும் கணனியின் செயல் திறன் இரட்டிப்பாகும் என்றொரு விதி உண்டு. வலையைப் பொறுத்தவரை விநாடிகளில் மாற்றங்கள் நிகழ்கின்றன. எனவே நீங்கள் வலைக்குள் புகுந்தவுடன் முதலில் தமிழ் என்ற சொல்லைக் கொடுத்துத் தேடிப்பாருங்கள். நான் எழுதும்போது **10,000** முனைகள் பிடிபட்டன. நீங்கள் தேடும் போது அது இரட்டிப்பானால் ஆச்சரியம் அடையாதீர்கள். ❑




படிப்பகம்

www.padippakam.com



# கருக்கல் பொழுதும் காத்திருப்பும்



என்.கே.மகாலிங்கம்

அநேக மாலைப்பொழுதுகள் வந்து போய் விட்டன. சில மாலைப்பொழுதுகள் குறிப்பிட்டுப் பேசப்படக்கூடியவை. பெப்ரவரி 22 மாலையும் அப்படியான ஒன்று. அது ஓர் பயனுள்ள மாலை. அந்த மாலையில் நாம் பார்த்த 'கருக்கல் பொழுதும் காத்திருப்பும்' என்ற நாடகம் - ஞானம் லம்பேட்டின் நெறியாள்கையில் மனவெளி நாடக அரங்கத்தினர் நடத்தியது. சாமுவேல் பெக்கற்றின் 'வெயிற்றிங் ஃபோ கொடொ' நாடகத்தின் தமிழ் மொழியாக்கம் - எம்மைச் சில நாட்கள் அதைப் பற்றியும் அது எம்முள் கொணர்ந்த எதிர்வினைகளைப் பற்றியும் பேசத் தூண்டியது. பெக்கற்றின் நாடகம் ஃபிரெஞ்சிலும், ஆங்கிலத்திலும் வெற்றி பெற்றது மட்டுமில்லாமல் தமிழிலும் தமிழ்ச் சூழலிலும் கூட வெற்றி பெற்றதற்குக் காரணம் என்ன என்று இலக்கிய, சமூக கண்ணோட்டத்தில் பலர் ஆராய வேண்டும். அந்த ஆராய்ச்சியைப் பிறருக்கு விட்டுவிடுவோம். தமிழிலும் தமிழ்ச் சூழலிலும் பெக்கற்றின் நாடகத்தின் வெற்றிக்கு ஞானம் லம்பேட் ஆதார சக்தியாக இருந்திருக்கிறார். அவருக்கு எனது மனம் திறந்த பாராட்டுக்கள்.

அடுத்து நாடகத்துக்கு வருவோம்.

சாமுவேல் பெக்கற்றின் வெயிற்றிங் ஃபோ கொடோ நாடகம் பற்பல வியாக்கியானங்களைக் கோரி நிற்பது. பல விமர்சகர்கள் பலவாறாக விமர்சித்திருக்கின்றனர். இருப்பியல்வாதக் கருத்து இதில் மேலோங்கித் தெரிவது. அதையே பலரும் பிரதானப்படுத்தியும் சொல்வர். இருப்பியல்வாதத்திலும் பலவகை உள்ளன என்பது உங்களுக்குத் தெரியும். அபத்தமாக முடிவதிலிருந்து தேடல், ஒன்றுமே இல்லை, நிகழ்காலத்தை விட வேறொன்றுமே இல்லை, உண்பது, உறங்குவது, உரையாடுவது, விளையாடுவது, காத்திருப்பது - இவை இருப்பியல்வாதத்தில் காலத்தைக் குறிப்பன. அவற்றை விட எல்லாமே நடந்து முடிந்த விசயம், சூன்யவாதம் ஈறாகப் பலவற்றை இந்த நாடகத்தில் நாம் காட்டலாம்.

இந்த நாடகத்தை பொதுவாக இரண்டு வகையாகப் பிரிப்பர். ஒன்று: ஒன்றுமே இல்லை என்ற சூன்யவாதம். இரண்டாவது: அனைத்தும் உள்ளது என்பது. அதைப் பூரணவாதம் என்று வசதிக்காகச் சொல்வோம். சூன்யவாதம், வாழ்க்கை



படிப்பகம்

www.padippakam.com



அபத்தமானது, அர்த்தமற்றது என்பதைக் காட்டும். பூரணவாதத்தில் தொகையான அர்த்தங்கள் நிறைந்த வாழ்க்கை, சிக்கல்கள் நிறைந்தது. அதற்கு இலகுவான பதில்கள் என்றுமே கிடைத்ததில்லை. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையானதை எடுத்துக் கொள்ளலாம் என்ற கருத்து, இந்த நாடகம் இருவகை வியாக்கியானங்களுக்கும் இடம் கொடுக்கிறது.

பெக்கற் இந்த நாடகத்தை எழுதியபோது இதற்குக் கொடுத்த பெயர் வெயிற்றிங் ஃபோ கொடோ. கொடோவுக்காகக் காத்திருக்கிறார்கள். ஈரங்கத்தில் ஓர் துன்ப இன்பியல் நாடகம். கிரேக்க நாடகங்களை துன்பியல் இன்பியல் என்று பிரிப்பர். அதன் பின் சேக்ஸ்பியர் நாடகங்களை துன்பியல், இன்பியல், துன்ப - இன்பியல் கொண்டவை என்று மூன்றாகப் பிரிப்பர். இந்த மூன்றாவதையே பெக்கற்றும் கொடுத்தார். நண்பர் ஞானம் லம்பேட் இதை விளம்பரப்படுத்தியபோது அபத்த நாடகம் என்றும் இருப்பியல்வாதக் கருத்தில் மட்டும் கூறியது இந்த நாடகத்தின் வியாக்கியானத்தை ஓரளவு திசை திருப்புகிறது என்பது என் கருத்து. தியேட்டர் என்ற சொல்லுக்கு தமிழில் நேரடி அர்த்தத்தில் ஒரு சொல் இல்லாதபடியால் ஏற்பட்ட பிரச்சினையாக இருக்கலாம். ஏனெனில் ஆங்கிலத்தில் பிறெஷ்டின் நாடகங்களை எபிக் தியேட்டர் என்றும், இப்படியான நாடகங்களை அப்சேட் தியேட்டர் என்றும் சொல்வது போல குறுல்ரி தியேட்டர், டொகுமென்ரறி தியேட்டர், புவர் தியேட்டர், புரோட்வே தியேட்டர், ஓஃவ் புரோட்வே தியேட்டர், ஓஃவ் ஓஃவ் தியேட்டர், ஒல்ரநேற் தியேட்டர் என்று பலவகை. அந்த வகைப்பிரிவில் இதுவும் ஒன்று. ஆனால் அப்பெயர்கள் பார்வையைக் குறுக்கிவிடும் என்பது என் கருத்து. பார்வையாளனின் கற்பனைக்கும் அறிவுக்கும் தரிசனத்துக்கும் அதனை விட்டுவிடுவது சிறந்தது என்பது என் அபிப்பிராயம். இந்த நாடகத்தின் வியாக்கியானங்களையும் பார்வைகளையும் ஆராயும்போது இது துலக்கமடையும். மேலும் போவோம்.

இந்த நாடகத்தை இருப்பியல்வாதத்திலும், கடவுள் கொள்கையை மறுக்கும் இருப்பியல்வாதமே இருக்கிறது. எதெஸ்ரிக் எக்ஸிஸ்ரன்சலிசம். அதாவது எதுவித அர்த்தமும் அற்ற மனித வாழ்க்கையை பற்றிய மனித நிலைமை பற்றிய வாக்குமூலம் அல்லது செய்தி ஸ்ரேற்மென்ற். வாழ்க்கை அபத்தம் நிறைந்தது. பயனற்றது. சோர்வு அடைவது மனித இயற்கை. அதனால் நாங்கள் வாழ்வதில் சில வேளை ஆர்வம் காட்டுவதில்லை. இவை அனைத்தும் சூன்யவாத, ஒன்றுமே இல்லை என்ற வியாக்கியானங்களுக்கு இந்த நாடகத்தை தள்ளிச் செல்கின்றது. இதுவே நண்பர் லம்பேர்ட்டையும் அள்ளிச் சென்றுள்ளது.

இந்த நாடகத்தை கிறிஸ்தவ அலிகோரி (தொடர் உருவகம் அல்லது உருவகக் கதை) என்று வியாக்கியானப்படுத்தும் திறனாய்வாளரும் இருக்கின்றனர் என்பதையும் மனதில்கொள்ள வேண்டும். அதாவது இந்த நாடகம் நவீன மனிதனின் வாக்குமூலம் அல்லது செய்தி. அவன் எதற்காகவோ காத்திருக்கிறான். தேடுகிறான். தேடல் நித்தியமாக நடந்து கொண்டிருக்கின்றது. தேடியதைக் கண்டுபிடித்து விடுவானா இல்லையா என்பதல்ல முக்கியம். ஆனால் தேடுதல் என்ற செயற்பாங்கு (process) சதா நடந்து கொண்டிருக்கின்றது. அது ஒரு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. வேறு ஏதோ ஒன்று வாழ்க்கையில் இருக்கின்றது என்ற நம்பிக்கை. அதைக் காணும் நம்பிக்கை. அடைந்து விடலாம் என்ற நம்பிக்கை. அந்த நம்பிக்கையே அவனை வாழ வைக்கிறது; இயங்க வைக்கிறது. உண்ண, உறங்க உடலுறவில் ஈடுபட வைக்கிறது. அந்த நம்பிக்கை இல்லாவிட்டால் அவனுக்கு வாழ்க்கை அர்த்தமற்றதாகி விடும். ஆனால் அந்த நிரந்தர நம்பிக்கை அழியாதது. அதனால் மனித உறவுகள் கூட அவனுக்கு அர்த்தமாகின்றன. தேவைப்படுகிறது. எஸ்றகனுக்கும் விளாடிமருக்கும் இடையே உள்ள அன்பு நெருக்கம், விசுவாசம், ஒருவரைப் பற்றி மற்றவர் கவலைப்படுவது, அக்கறைப்படுவது எல்லாம் அர்த்தமாவது இந்த நம்பிக்கையால்தான்.

இந்த நாடகத்தில் உள்ள பல சொற்றொடர்கள், உரையாடல்கள், சில பாத்திரங்கள்கூட இந்த வியாக்கியானத்துக்குச் சான்றாகின்றன. சிலவற்றை மட்டும் இங்கு பார்க்கலாம். நால்வரில் ஒருவர் மட்டும்தான் கள்வனைக் காப்பாற்றியது பற்றிச் சொல்கின்றார். மற்றவர் யார் அந்தக் கள்வன் என்று சொல்லவில்லை. இந்த உதாரணங்கள் பைபிள் எழுதியவர்கள் சம்பந்தப்பட்டது. யேசுநாதர் ஒரு கள்வனை மட்டும்தான் காப்பாற்றினார். கள்வர் இருவர் இருந்தனரே. அப்படியானால் எப்படி ஒருவனை மட்டும் அவர் காப்பாற்றுவது என்ற பிரச்சினை அவருக்கு வந்திருக்காதா? அதுவும் எந்தக் கள்ளனைக் காப்பாற்றுவது? அது மட்டுமல்ல இந்த விசயத்தைப் பற்றி சுவிஷேச கர்த்தாக்கள் நால்வரில் ஒருவர் மட்டும்தான் சொல்லியும் இருக்கிறார். அப்பயானால் அது உண்மையில் நடந்ததா? இல்லையா? என்பன போன்ற கேள்விகள், தேடலுக்குரியவனின், நம்பிக்கையைத் தேடிச் செல்பவனுக்குரிய ஒரு குணம் இது. இன்னொரு உதாரணம், நாடகத்தின் இறுதிப் பகுதியில் வரும் பையன். அவனை விளாடிமர் கேட்கும் கேள்விகள், அவன் தான் தூதுவன், சேர்ச். அவன் தான் கொடொவுக்குப் பணிபுரிபவன். கொடொவுக்கு தூது கொண்டு செல்பவன். ஆனால் அவன் வார்த்தைகள் குளறுபடியானவை. சந்தேகங்கொள்ள வைப்பவை. ஆடு, செம்மறி போன்ற மரபுரீதியான சொற்கள் அவனிடம் இருந்து வருகின்றன. அண்ணனைப் பற்றிக் கதைக்கின்றான். நீயா அவன்? நான் இல்லை. அவன் வேறு. நான் வேறு என்பவை. அவர்கள் இருவரும் பைபளில் வரும் ஆதாமின் மக்கள். கெயின் மூத்தவன். ஏபல் இளையவன். இரு சகோதரர்கள் என்பர் கிறிஸ்தவ அலிகோரி என்று சொல்லும் விமர்சகர்கள். காத்திருத்தலின் முடிவில் கிடைப்பது ஆண்டவனின் தரிசனம். திருவுருத் தோற்றம். அதாவது எபிஃபானி.

குழந்தை யேசுவைத் தேடி வரும் மூன்று அறி



படிப்பகம்

www.padippakam.com



வாளிகளில் இருவராகக் கூட இவர்கள் - எஸ்ரகினும் விளாடிமரும் - இருக்கலாம். அவர்கள் கிழக்கில் இருந்து வந்தவர்கள். இங்கு வேறொன்றையும் குறிப்பிட வேண்டும். விளாடிமர் ரஷ்யப் பெயர். எஸ்ரகின் ஸ்பானியப் பெயர். லக்கி ஆங்கிலப் பெயர். பொஸ்ஸோ இத்தாலியப் பெயர். இந்தப் பெயர்களின் முக்கியத்துவம் பற்றி சொல்லிய விமர்சகர்கள் ஐரோப்பிய மக்களையும் அவர்கள் குணாதிசயங்களையும் இவர்கள் எவ்ரிமானின் குறியீடாகக் குறிக்கின்றனர் என்பர்.

வாழ்க்கையின் அபத்தம் பற்றிப் பேசுபவர்களும் இந்த நாடகம் முழுக்க முழுக்க அபத்தமே என்று சொல்லும் விமர்சகர்களும், லக்கியின் பாத்திரத்தையும் அவன் எஸ்ரகின் கொடுக்கும் தொப்பியை அணிந்தவுடன் ஆரம்பிக்கும் அபத்தமான நீண்ட உளறலை - இடைக்கிடையே சில நல்ல கருத்துக்களையும் தெளித்து மூச்சு விடாமல் பேசுவதை - உதாரணமாகக் காட்டுவர்.

இந்த நாடகத்தை அங்கத நாடகமாகவும் சிலர் சொல்வர். புத்திஜீவிகளை நையாண்டி செய்தல், மனம், கடவுள், இருப்பு, தேடல் போன்றவற்றைப் பற்றி அலட்டிக் கொள்பவர்கள் எந்த இலக்கையுமே அடைவதில்லை. சும்மா அலம்பிக்கொண்டே அலட்டிக்கொண்டே காலத்தை வீணாக்குகிறார்கள் என்ற கருத்து. பகுத்தறிவு, விஞ்ஞானம், வைத்தியம், இறைமையியல், இலக்கியம், மெய்யியல், விளையாட்டு விமோசனத்தைத் தரும் என்ற கருத்து இவை பற்றிய நையாண்டி அங்கதம். இவை (நொன் லீனியர்) நேர் கோட்டுச் சமன்பாடற்றவை. அளக்க முடியாத ஆழம் நிறைந்த கருத்துக்கள் என்பர்.

அடுத்தது இந்த நாடகத்தில் வரும் பாத்திரங்களை எதிர் எதிராக நிறுத்தியும் பார்க்கலாம். பொஸ்ஸோவும் லக்கியும் பொஸ்ஸி முதலாளி வர்க்கம். லக்கி தொழிலாள வர்க்கம். லக்கியை அடிமையாக பொஸ்ஸோ நடத்துகிறான். அடுத்த சோடி எஸ்ரகினும் விளாடிமரும். சிக்மன்ட் ஃப்ரொய்ட்டின் இட் என்ற சாதாரண மனித அடிப்படைத் தேவைகள் - உணவு, உறங்கல், விளையாட்டு செக்ஸ் போன்றவை - அவற்றால் திருப்திப்படுபவன் எஸ்ரகின். விளாடிமர் அவனை விட உயர்ந்தவன். ஈகோ, சுப்பர் ஈகோ என்ற விசயங்களுக்காக அலைபவன். அதாவது இத்தேவைகளுடன் திருப்திப்படாதவன். தேடலில் ஈடுபட்டுள்ளவன். கொடோவைத் தேடுபவன். இந்த இரு சோடி மனிதர்களுமே ஒருவகையில் ஒருவரில் ஒருவர் தங்கி வாழ்பவர்களே. ஒட்டுண்ணிகளே. ஒருவர் இல்லாவிட்டால் மற்றவர் வாழ முடியாதவரே. ஒருவருக்கொருவர் தேவையான வரே. இட், ஈகோ, சுப்பர் ஈகோ எல்லாம் ஒன்றில் ஒன்று பற்றி வளர்பவை. பரிணாமம் அடை பவை. அந்த இரு சோடிகளும் மனித இயற்கையின் குறியீடுகள். பொஸ்ஸோவும் லக்கியும் அற்லஸ் யுபிற்றர் என்ற இரு கிரேக்க கடவுள் குறியீடுகள். கிரேக்க பகுத்தறிவு (இமாஜரி) உருவத் தொகுதி. அற்லஸ் உலகத்தை தாங்கிக்கொண் டிருக்கும் கடவுள். யுபிற்றர் கடவுட்கெல்லாம் கட வுள். மறுபக்கத்தில் விளாடிமரும் எஸ்ராகினும் கிறிஸ்தவ இமாஜரியைக் குறிப்பவர்கள். நான் உன்னைத் தூக்கிச் செல்வேன் என்ற நிலை. இறு தியில் லக்கியும் பொஸ்ஸோவும் பகுத்தறிவுவா திகள் இறுதியில் குருடனாகவும் ஊமையாகவும் ஆகின்றனர். நம்பிக்கைவாதிகள் எந்த மாற்றமும் அடையாமல் தங்கள் தேடலைத் தொடங்குகின்றனர். என்றோ ஒருநாள் தேவன் வருவார் என்ற நம்பிக்கையில் வாழுகின்றனர். இதுவே எவ்ரிமான் என்ற சாதாரண மக்கள் வாழும் வாழ்க்கையின் இரகசியம்.

இறுதியாக இந்த நாடகத்தில் வந்த சில குறியீடுகள் பற்றிச் சொல்லி இந்தக் கட்டுரையை முடிக்க எண்ணுகிறேன். ஆரம்பத்தில் உள்ள மரம், இலைகள் இல்லாதவை. அது சாவை, வெறுமையைக் குறிக்கின்றது. பின்னர் அதில் சில இலைகள் துளிர்த்துள்ளன. அது வாழ்க்கையின் நம்பிக்கை, புனர்வாழ்வு போன்றவற்றைக் குறிக்கின்றது. தொப்பி மனதையும் ஆத்மாவையும் (சுப்பர் ஈகோ) சப்பாத்து உடலையும் அதனுடன் ஒட்டிய தேவைகளையும் இட்டை குறிக்கின்றது. கிராமப் பாதை நீண்ட எம் பயணத்தை குறிக்கின்றது. முடிவில்லாத பாதை. அதில் ஓரிடத்தில் நிற்கிறோம். அது எந்த இடம் என்று எமக்குத் தெரியாது. நேரம் தெரியாது. சில வேளை தெரிந்ததாகக் காட்டிக் கொள்கின்றோம். அது சனிக்கிழமையாகவும் இருக்கலாம். ஞாயிற்றுக்கிழமையாகவும் இருக்கலாம். இடம் எதுவானால் என்ன?

பல வியாக்கியானங்களுக்கு இடம் தரும் இந்த (யுனிவேர்சல் தீமை) உலக முழுதளவிலும் பொருத்தும் ஆய்வுப் பொருளைத் தரும் இந்த அற்புதமான நாடகத்தை தமிழில் அற்புதமாக மொழிபெயர்த்து எஸ்ரகன் விளாடிமர் என்ற மறக்க முடியாத பாத்திரங்களை எமக்கு அறிமுகம் செய்து தொய்யாமல், சில இடங்களில் நீண்டு போகின்றதே என்று அங்கலாய்ப்பு ஏற்படுகையில் கதையை நகரச் செய்த லம்பேட் மிக மிகப் பாராட்டுக்குரியவர். இத்தனை திறமைகள் எங்களுக்கு மத்தியில் இருந்தும் மிக அருமையாகவே அருந்தலாகவே வெளிவரும் நாடகங்களைப் பார்க்கும்போது இன்னும் இப்படியான நாடகங்களைப் போடமாட்டார்களா? தமிழ் வளர. எம் மனம் சிந்திக்க, தமிழ் கலாசாரம் உயர, என்று நான் எண்ணுகிறேன்.

பார்வையாளர் இப்படியான நாடகங்களைப் பார்ப்பதற்கு தயாரா? அவர்களுக்குப் புரியாது என்று முன் எடுகோள் கொள்வது போன்ற கேள்விகள் வணிக நோக்குடையவரின் சிந்தனைக்குரியவை. நாங்கள் கொடுப்போம். ஒருவனாவது புரிந்துகொண்டால் போதும். புதுமைப்பித்தன், காஃப்கா, ஜோய்ஸ், பெக்கற் போன்றவர்கள் அனைவருக்கும் புரியும் என்ற நம்பிக்கையில் எழுதியே இருக்கமாட்டார்கள். அப்படி நினைத்திருந்தால் மாபெரும் இலக்கியங்கள் எங்களுக்குக் கிடைத்திருக்கவே மாட்டா. ❑



படிப்பகம்

www.padippakam.com

*With Compliments*

# IVAN KRAMA & CO

## SOLICITORS
ADMINISTRATORS OF OATHS

*We Specialise in*

★ IMMIGRATION & NATIONALITY
★ CRIME
★ GENERAL LITIGATION
★ CONVEYANCING
★ WELFARE BENEFITS

**LEGAL AID WORK UNDERTAKEN**

**Contact for All Your Legal Sevices**
**348A Kilburn High Road**
**London NW6 2RT**

**Tel: 0171-624 8814 Fax: 0171-624 8813**

படிப்பகம்


www.padippakam.com



## பார்த்திபனின் பதினான்கு சிறுகதைகளை முன்வைத்து

# புலம்பெயர் தமிழ் இலக்கியம் குறித்து

யமுனாராஜேந்திரன்




**1984** ஆம் ஆண்டு பிற்பகுதியிலிருந்து ஜேர்மனியில் வாழ்ந்துவரும் பார்த்திபன் இதுவரையில் 23 சிறுகதைகளும் நான்கு குறுநாவல், நாவல்களையும் எழுதியிருக்கிறார். இவரது படைப்புக்கள் இதுவரை தொகுக்கப்படவில்லை. தமிழகத்தில் எஸ்.பொ., இ.பா.தொகுத்த 'பனியும் பனையும்' எனும் புலம்பெயர்ந்தோர் சிறுகதைகள் நூலில் இவரது கதைகளேதும் இடம்பெறவில்லை.

இங்கு, இவரது படைப்புக்களில் இருந்து 14 சிறு கதைகளை மட்டுமே எனது அக்கறைக் குரியதாகத் தேர்ந்து கொள்கிறேன். 'கனவை மிதித்தவன்' நாவலை நான் முக்கியமானதாகக் கருதினாலும், 'தூண்டில்' பத்திரிகையில் தொடராக வந்த அந்த நாவல் பார்த்திபன் சொல்கிறபடி எழுதிமுடிக்கப்பெறாத, என்றேனும் எழுதிமுடிக்க நினைத்திருக்கிற படைப்பாகவே இருக்கிறது. ஆகவே, அதை இங்கு நான் விமர்சனத்துக்கு எடுத்துக் கொள்ளமுடியவில்லை. இந்தச் சிறுகதைகளை நான் தேர்ந்து கொண்டதற்கான அடிப்படைகள்: இப்படைப்புகள் புலம் பெயர்ந்த வாழ்வின் அனுபவங்களையும் தாய் நாட்டு நினைவுகளையும் ஒரு சேரக் கொண்ட படைப்புகள்; நினைவும் நிகழ்வும் சேர்ந்த படைப்புக்கள். இவரது பிற்காலத்தையதும் முதிர்ச்சியுள்ளதுமான எழுத்துக்களாக இப்படைப்புக்கள் அமைகின்றன.

புலம்பெயர் இலக்கியத்தின் நுண் அறைகளுக்குள் சென்று பார்க்கும் முயற்சிகளில் ஒன்றாகவே இங்கு நான் பார்த்திபனின் 14 கதை களை முன் வைத்து புலம்பெயர் தமிழ் இலக்கியத்தின் கோட்பாட்டு அடிப்படைகளைக் காணமுயன்றிருக்கிறேன். படைப்புக்களைத் தேடி எடுத்துத் தந்த பார்த்திபனுக்கும், தன்னிடம் இருந்த பார்த்திபன் கதைகளை அனுப்பி உதவிய அரவிந்தனுக்கும் என் நன்றிகள் உரியன.



படிப்பகம்

www.padippakam.com



# I

# நூறு நாக்குகள்

எங்கேயோ பிறந்தோம்
நான்கு திசைக் காற்றிலும் சிதறினோம்
நூறு குழந்தைகள்
நூறு நாவுகளோடு பேசுகின்றன
நாளை
நாம் நாட்டுக்கு மீளவும் திரும்புவோமாயின் நமது
கண்ணீரின் பொது மொழியில் பேசுவோ மென
நம்பிக்கைகொள்வோம்.

வியென் லின் , வியத்நாமியக் கவி
in Landscape and Exile

புலம்பெயர் இலக்கியம் குறித்து நிறைய விவாதங்கள் மேற்கிலும் காலனியாதிக்கத்துக்குட்பட்ட நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1982ஆம் ஆண்டு எழுதப்பட்ட சல்மான் ருஷ்டியின் 'கற்பிதத் தாய்நாடுகள்' (Imaginary Homelands) எனும் கட்டுரை இந்தப் பிரச்சினையை மிகுந்த துக்கத்துடனும், உணர்ச்சியுடனும் அணுகுகிறது. 1985ஆம் ஆண்டு வெளியான Landscape and Exile எனும் புத்தகமும், புலம்பெயர் எழுத்தாளனின் தாய் நாட்டைப் பிரிந்த சோகத்தையும், புலம்பெயர் நாடுகளில் அவன் தேடிச் செல்லும் பிரபஞ்ச மனிதன் குறித்த அவஸ்தையையும் வெளியிடுகிறது. மரணத்திலிருந்து தப்பிப் பிழைக்கப் புலம்பெயரும் எழுத்தாளன், தனக்குள் நேர்ந்த கலாசாரத்தின் - தன் சொந்த நிலப்பரப்புகள், காற்று, சில்வண்டுகள், நினைவுகள் - மொழி போன்றவற்றுக்கு நேர்ந்து கொண்டிருக்கும் - மரணத்தை தான் சென்ற விடமெங்கும் உயிர்ப்புடன் தாங்கித் திரிந்து ஜீவனுடன் வைத்திருக்க முயற்சி செய்து கொண்டேயிருக்கிறான்.

தனது வேர்களைப் பிரிந்த இந்த ஏக்கம், இந்த இழப்பு போன்றன அவன் தாய்மண் குறித்த நுட்பமான அவதானங்களையும் கற்பிதங்களையும் கோருகிறது. திரும்பத் திரும்ப அவன் கற்பிதத் தாய் நாடுகளைப் படைத்துக்கொண்டே இருக்கிறான்.

'அதிகாரத்துக்கு எதிரான போராட்டம் என்பது, மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டம் தான்' என்று செக்கோஸ்லாவாக்கிய எழுத்தாளன் மிலான் குந்த்ரா குறிப்பிட்டதை நினைவு கூர்கிறார் ருஷ்டி. நினைவுகள் இறக்கும்போது (When Memory Dies)* மனிதன் உயிர்ப்பற்ற பிணமாகிவிடுவான்.

இந்த நினைவுகளை உயிர்ப்பித்துக் கொள்வது ஒரு போராட்டம்தான்; புதிய மனிதனுக்கான போராட்டம். நினைவுகள் காலனியாதிக்க வடுக்களையும் கொண்டிருக்கின்றன. தாய்நாட்டில் நடந்த இரத்தச் சிந்துதலையும் ஒடுக்குமுறையையும் நினைவுகள் சுமந்திருக்கின்றன. புலம்பெயர்ந்த எழுத்தாளனின் தாய்நாடு கற்பிதமானது என்பது போலவே புலம்பெயர்ந்த நாடும் அவனுக்கு கற்பிதங்களை நோக்கியதுதான். இவனது இருத்தல் ஒரு நிலப்பரப்பில் காலூன்றியது அல்ல. இவனுக்குள் கார்ல் மார்க்சும் ரஸ்ஸலும் இருப்பது போலவே ஆதிசங்கரனும் முகமதும் தமது தொல் கடவுள்களும் இருக்கிறார்கள். இவன் ஒரே சமயத்தில் காலனியாதிக்கம் நிறவெறிக்கு எதிரானவன், அதேவேளை தனது சொந்த தொலைதூர நாட்டின் மூடநம்பிக்கைகளுக்கும், கொலைகளுக்கும், பெண் அடிமைத் தனத்துக்கும் எதிரானவன். இவன் வந்த நாட்டிலும் அதிகார அரசியலுக்கு எதிரானவனாகவே இருப்பான். தனது தூரத்துச் சொந்த நாட்டிலும் அதிகார அரசியலுக்கு விமர்சகனாகவே இருப்பான். தனது நாட்டில் 'ஒருமாதிரி' பையனாக (Funny Boy) இருந்தவன் இங்கு சமபாலுறவு எழுத்தாளனாக அறிவார்ந்தவனாக எழுந்து நிற்பான்.

ஸல்மன் ருஷ்டியின் நாவல்கள் இந்தியா, பாகிஸ்தானில் தடைசெய்யப்படுகிறது. ஈரான் மதகுரு கொலைத் தண்டனை விதிக்கிறார். பிரிட்டனில் கன்ஸர்வேட்டிவ் கட்சி அறிவுஜீவிகளும் பத்திரிகைகளும் இந்த 'பாக்கி' எழுத்தாளனுக்கு பாதுகாப்புத் தருவதை விலக்கிச் சொல்கிறது.

ரிறினிடாட் இல் இந்திய வம்சாவழியினராகப் பிறந்த வித்யாதர் சுரஜ்பிரசாத் நைபால் ஆபிரிக்க கொடுங்கோலர்க்கிடையில் வாழ்வது குறித்து எழுதுகிறார். அதேவேளை ஆர்ஜெண்டீனா மக்களின் வழிபாட்டுக்குரியவரான ஈவா பெரானை அலன் பார்க்கர் 'வேசை' என சித்தரிக்கும் போது, நைபாலின் அபிப்ராயங்கள் ஈவாவின் புகழுக்கான காரணங்களை லத்தீன் அமெரிக்காவின் ஆண் பெருமிதக் கலாசாரம் தியாகம் செய்யும் பெண் புனித நிலைபாட்டிலிருந்து காண முயற்சிக்கிறது.

இதுதான் புலம்பெயர்ந்த எழுத்தாளனின் சிருஷ்டி மனதுள் செயல்படும் கருத்துநிலை.

ஒடுக்கப்பட்ட மக்களின் நினைவுகளைச் சுமந்தவன் எனும் அளவில், தனது சொந்த நாட்டு ஒடுக்கப் பட்ட மக்களுக்காகவும், எங்கெங்குமிருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், புலம்பெயர்ந்த நாட்டின் நிராகரிக்கப்பட்ட மக்களுக்காகவும் புலம்பெயர்ந்த எழுத்தாளன் பேசுகிறான்.

புலம்பெயர்ந்தவர்கள் பல்வேறு தரப்பினர். அசியல் தஞ்சம் கோரியவர்கள். காலனியாதிக்க விளைவுகளின் பொருட்டு குடிபெயர்ந்த முதல் தலைமுறையைச் சார்ந்தவர். குடியேறிய வசதி படைத்தோர். குடியுரிமை பெற்றோர். இங்கேயே பிறந்து வளர்ந்தோர் என எல்லோருமே பொதுவான வரையறைக்குள் புலம்பெயர்ந்தோர்தான். தம் சொந்த வாழ்க்கையின் மேல்நோக்கிய நலன்களுக்குத் தடையாயிருக்கிற நிறவெறி ஒதுக்கலுக்கு எதிராக நிற்கும் பெரும்பாலானோர், புலம்பெயர்ந்தோரில் ஒடுக்கப்பட்டோரிலும் கடைக் கோடியினராகவுள்ளவர்களுக் கெதிரான பொருளியல் சுரண்டல், வன்முறை போன்றவற்றைப் பற்றிக் கவனங் கொள்வதுமில்லை. அக்கறைப்படுவதுமில்லை. ஜிப்சிகளைப் பற்றி நாடோடிகள் பற்றி


*பிரிட்டனில் வாழும் இலங்கையரும் நிறவெறிக் கோட்பாடும் நடவடிககையாளருமான எ. சிவானந்தனின் இலங்கைபற்றிய சமீபத்திய நாவல்: When Memory Dies. கனடாவில் வாழும் சியாம் செல்வதுரையின் Funny Boy நாவல்



படிப்பகம்

www.padippakam.com






இவர்கள் கவலைப்படுவதில்லை. ஆகவே புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் எல்லோரதும் நோக்கமும் இயல்பும் ஒரே பொதுத்தன்மை கொண்டவையாக இருக்க முடியாது.

புலம்பெயர்ந்த எழுத்துக்கள், புலம்பெயர்ந்த நாட்டு மொழியிலும் எழுதப்படுகின்றன. தாய் நாட்டு மொழியிலும் எழுதப்படுகின்றன. சில வேளை அவைகள் மொழியாக்கமும் பெறுகின்றன. தாய்மொழியில் எழுதும் எழுத்தாளனின் வாசகப் பரப்பென்பது, புலம்பெயர்ந்த நாட்டில் புலம் பெயர்ந்து வாழும் மேல்வர்க்கத்தவரையோ வசதி படைத்தவர்களையோ உட்கொண்டது அல்ல. புலம்பெயர்ந்த நாட்டிலும் சரி, தாய் நாட்டிலும் சரி எழுத்தின் அனுபவ சாத்தியங்களைக் கொண்டவர்களே தேடப்படுகிறார்கள். புலம்பெயர்ந்த நாட்டில் எழுதப்படும் எழுத்துக்களை புலம்பயர்ந்தோரிடையில் உள்ள பிரக்ஞையுள்ளவர்களும், புலம்பெயர்ந்தோர் பால் அக்கறையுள்ள பழைய காலனியாதிக்க நாட்டவர்களுமே படிக்கிறார்கள்.

இன்று மிகமுக்கியமான உலக இலக்கியங்கள் இத்தகைய படைப்பாளர்களிடம் இருந்தே வருகின்றன. இவர்களின் படைப்புக்களில் வரலாற்றின் சாராம்சமும் போராட்டங்களும் எதிப்புணர்வும், புதிய மனிதனுக்கான விழைவுகளும் சங்கமிக்கின்றன. இந்த உலகம் இன்று எதிர்கொள்ளும் நெருக்கடிகளை அதனின்று விடுவித்துக்கொள்ளும் எத்தனங்களை இப்படைப்புக்கள் பேசுகின்றன. இவன் தான் இதுவரை அறிந்திராத மூடுண்ட கதவுகளை எங்கெங்கும் திறந்து விடுகிறான். பென் ஒக்ரி, செர்கே பேகஸ், ஆரியல் டோப்மேன், ஜீன் ஜோர்டன், இல்மேஸ் குணே, மிலான் குந்த்ரா, பிராட்ஸீகி, வோலே ஸோயிங்கா, ஸல்மான் ருஷ்டி, சுஜாதா பட், ஜீன் அரசநாயகம் என படைப்பாளிகள். காலனியாதிக்கம் , நிறவெறி, பாலியல் நெருக்கடி, தேசியம், சூழலியல் அழிவு, நாடோடி வாழ்வு, அறங்களின் வீழ்ச்சி, பொய்மை, பேரழிவு, எதிர்ப்புணர்வு, விடுதலை, தத்துவச் சீரழிவு, சோசலிஷம், முதலாளித்துவம், ஜனநாயகம், உலகெங்கும் நிராகரிக்கப்பட்ட மக்களின் மீதான பரிவு போன்றவற்றை இவன் படைப்புக்கள் தழுவிச் செல்கின்றன. பிரபஞ்சமயமான பிரச்சினைகளை இவன் படைப்புக்கள் பேசுகின்றன.

இவ்வகையில் தமிழனும், தமிழ்ப் படைப்பாளிகளும் இத்தகைய படைப்பு சூழலுக்குள் இப்போது நுழைந்திருக்கிறார்கள். இவர்களது பயணம் நீண்டது. இப்போதுதான் துவங்கியிருக்கிறார்கள். இன்னும் நெடுந்தூரம் போகவேண்டும். இலக்கியம், வாழ்வு, புலம்பெயர் சமூகம், உலகம் குறித்த இவர்களது தேடுதல் பெருகிச் செல்லும்போது, ஆற்றலுள்ள தமிழ்ப் படைப்பாளிகள் உலகப் பரப்பில் வைத்து பேசப்படுவார்கள்.

கடந்த 15 ஆண்டுகளில் தமிழர்கள், விரல் விட்டு எண்ணக் கூடிய தமிழகத்தைச் சார்ந்தவர்கள் தவிர முழுக்கவும் ஈழத்தமிழர்கள் புலம்பெயர் தமிழ் இலக்கிய வெளியைத் திறந்திருக்கிறார்கள். நிறைய சிறுபத்திரிகைகள் வந்தன. நின்றுபோயின. மறுபடி வருகின்றன. குறிப்பிடத்தக்க சில படைப்புகளை அவர்கள் தந்திருக்கிறார்கள். மேதைமை கொண்ட தனித்துவமுள்ள படைப்பாளிகள் இனி இதனின்று எழுவார்கள்.

அதற்கு மனம் திறந்த விவாதங்களும் விமர்சனங்களும் உரையாடல்களும் மட்டுமே வழிவகுக்கும். ஆனால் மேதைமையின் தடயங்களும் வேர்களும் கொண்ட படைப்பாளர்கள் உருவாகி விட்டார்கள். அற்புதமான சிருஷ்டிகளையும் அவர்கள் தந்திருக்கிறார்கள். அத்தகைய படைப்பாளிகளில் ஒருவர் ஜேர்மனியில் வாழும் பார்த்திபன்.

## II

# பதினான்கு சிறுகதைகள்

சரியாக நள்ளிரவு பன்னிரெண்டுமணி
மிகச்சரியாக
குர்திஸ்ரானும் துயரமும் போல
கோர்த்துக் கொண்ட இருகைகள்

சரியாக நள்ளிரவு பன்னிரெண்டுமணி
எனது கற்பனைபோல
சுத்தமான வெளிர்ந்த சாப்பாட்டு மேசை
இருபது சிகரெட்டுகள் ஒரேஒரு
திறப்பு வார்த்தை

ஒருமணிக்குப் பின் என்னையும் எனது



படிப்பகம்

www.padippakam.com



நாட்டு விழியும் போல
இரு வேறு கடிகாரக் கைகள்
இரண்டு மணிக்குப் பின்னால்
நாடு கடந்தவர்களும்
அகதி விண்ணப்பதாரர்களும் போல
பேனா காகிதம் மேசையிலிருக்கும் எல்லாம்
குழம்பியபடி சிதறியபடி

மூன்று மணிக்குப் பின்னால்
ஆஸ்ட்ரே நிறைய சிகரெட் துண்டுகள்
புகையிலைச் சாம்பல்
அறை நிறைந்த புகை

அதன் அருகே தூங்கும் கவி
விழித்தகவிதை


*செர்கே பேகஸ், மீட்சி டிசம்பர் 1997*

தொண்நூற்று ஐந்தாம் ஆண்டு ஆரம்பத்தில் எனது நண்பர் நகுலேந்திரன் நூலகத்தில் புத்த கங்களைக் கிளறிக் கொண்டிருந்தபோது சில 'தூண்டில்' இதழ்களையும் 'கனவை மிதித்தவன்' நாவலின் சில பகுதிகளையும் நின்ற நிலையில் வாசிக்க முடிந்தது. பிற்பாடு அவரது சிறுகதைகள் மூன்றை (முறையே 'தெரியவராதது', 'வந்தவள் வராமல் வந்தால்', 'பனி எரியும் காலம்') நிறப் பிரிகை, சரிநிகர் போன்றவற்றில் வாசிக்கக் கிடைத்தன. 'தெரிய வராதது' கதை எனக்குள் மிகுந்த துக்கத்தையும் மனக்கிலேசத்தையும் கிளர்ச்சி யையும் தோற்றுவித்தது. எனது அபிப்பி ராயங்களை அப்போது 'மீட்சி' இதழில் குறிப்பிட்டி ருந்தேன். அதன்பின் பார்த்திபனின் முழுக்கதைக ளையும் படிக்கவேண்டும் என்கிற ஆர்வம் எனக் குள் இருந்துகொண்டே இருந்தது. பல்வேறு பிர தேசம், மொழிசார்ந்த புலம்பெயர்ந்த எழுத்தாளர் களை நான் அவ்வப்போது வாசித்து என்னைப் பாதித்தவற்றை மொழிபெயர்த்தும் வந்தேன். பார்த் திபனின் மூன்று கதைகளுமே அத்தகைய பொது அனுபவிப்புப் பரப்புக்குள் வருவதை உடனயா கவே என்னால் அவதானிக்கக் கூடியதாக இருந் தது. இதுவன்றியும் எனக்குக் கிடைத்த எல்லா புலம் பெயர்ந்த எழுத்துக்களையும் என்னால் முடிந்த வரை தேடிப் படித்து வந்தேன். புலம்பெயர்ந்த இலக்கியம் குறித்த விவாதங்களும், கடுமையான அபிப்ராயங்களும் இவ்வகையிலும், ஐரோப்பா வில் அவ்வப்போது எழுந்தது. தீவிரமாக கோட் பாட்டு அடிப்படையில் விவாதிக்கும் களம் அப் போது இல்லாதிந்தது.

இச்சூழலிலேயே சுவடுகளில் என் குறிப்புக் களை எழுதினேன். எதிர்வினைகள் விவாதத்தை மேலெடுத்துச் செல்லும் தொனியில் அமைய வில்லை. ஒரு குறிப்பிட்ட படைப்பாளியின் படைப்புக்களை எடுத்துக்கொண்டு நுண்தளத்தில் பேசலாம் என நினைத்தபோது எனக்கு உடன டியில் ஞாபகம் வந்தவர் பார்த்திபன். பார்த்திபன் தேர்ந்துகொள்ளும் புலம்பெயர் வாழ்வின் பிரச்சி னைகள், இங்கு வாழ நேர்ந்த புலம்பெயர் மனி தர்கள் அனைவருமே எதிர்கொள்ளும் பிரச்சினை கள். நான் வாசித்த பெரும்பாலான பிறமொழி எழுத்தாளர்களின் படைப்புலகமும் பார்த்திபனின் படைப்புலகமும் ஒன்றுதான் என்கிற அவ தானிப்பை நான் பெற்றிருந்தேன்.

தொடர்ந்து தேடி வாசித்தேன். இத்தொகுப்புக்கு ஒரு கட்டுரை எழுதநேர்ந்தபோது பார்த்திபனின் முழுப்படைப்புக்களையும் முன்வைத்து புலம் பெயர் இலக்கியம் எனும் அகண்ட பின்னணியில் பேசலாம் என்னு முடிவு செய்தேன். பார்த்திப னின் மொத்தச் சிறுகதைகள் 23. நாவல், குறுநா வல்கள் ஐந்து. எனது தேர்வின் அடிப்படையில் பதினான்கு கதைகளை மட்டுமே இங்கே எடுத்துக் கொள்கிறேன்.

அன்னியமொழி, அன்னிய நிலப்பரப்பு, கால னியமனப்பான்மை, நிறஒதுக்கல், பாலுறவு அதி ர்ச்சி, தனிநபர் சுதந்திரம், போலிப் பெருமை, தாய் நாட்டுக்கான ஏக்கம், நிரந்தரமற்ற தற்காலிக மிதப்பு வாழ்நிலை போன்றவற்றோடு சொந்த நாட்டு அழிவுகளும், புதிய வழிதேடிய கனவுக ளுமே புலம்பெயர் இலக்கியத்தின் படைப்பு செயல் படுதளமாக அமைகிறது. இங்கு எடுத்துக் கொண் டுள்ள பார்த்திபனின் பதினான்கு கதைகளில் 1. இந்த நாடுகளுக்கு வந்து சேருவதற்கான பயண கால, இடைவெளியில் நேரும் அனுபவங்களைக் குறித்த விசாரணை இருக்கிறது. 2. மேற்கத்திய சூழ லில் வாழ நேர்ந்தாலும் கூட தமது அசிங்கமான, நிராகரிக்கத்தக்க மரபுகளைத் தொடர்ந்து பேணு தல் பற்றிய கோபமான விசாரணை இருக்கிறது. 3.


எ. சிவானந்தன்



படிப்பகம்

www.padippakam.com



மேற்கின் விடுதலைபெற்ற பாலுறவு பழக்கங்களும் எமது பாலியல்பு வக்கிரங்களுக்கும் இடை யிலான தொடர்பு விசாரிக்கப்படுகிறது.


கல்யாணக் கணவன், மனைவி இறக்குமதி, வந்தவள் வராமல் வந்தாள், இழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை வ.செ., போன்ற கதைகளில் ஆண் பெண் உறவுச் சிக்கல்கள் புலம்பெயர் சூழலில் எடுக்கும் புதிய வடிவங்களைப் பேசுகிறது. மேற்கின் தனிநபர் சுதந்திரம் எனும் கருத்தமைவு, சமூக உத்தரவாதம் பெண்களுக்குத் தரும் சுதந்திரத்தையும், ஆக்கபூர்வமான பண்பையும் இக்கதைகள் சொல்லும் அதே போது பயண அவகாசங்களில் பெண் உடல்கள் சீரழிகிற பொருளியல் அவலத்தையும் சொல்கிறது.

'அம்பது டொலர்ப் பெண்ணே' கதை அடையாளப் பிரச்சினையையும், வேர் பிடுங்கப்பட்ட வாழ நேர்ந்த சிறுவனின் துயரத்தை அத்திவாரமில்லாத கட்டிடங்கள் கதையும் சொல்கிறது. 'தூள்' கதையும் மேற்கின் ஒருபக்கம், ஒரு காதல் நிராகரிக்கப்படுகிறது கதையும் மேற்கத்திய சமூகத்தின் குரூரத்தையும் அதே வேளை ஒடுக்கப்பட்ட மனிதர் பாலான பரிவையும் நேசத்தையும் வெளியிடுகிறது. மாறவே மாறாத உடமை மனப்பான்மையும் அழுக்கு மனமும் உள்ள தமிழனையும் அது கேலி செய்கிறது.

'பனி எரியும் காலம்', 'ஒரு அம்மாவும் அரசியலும்', 'விபத்தை மறந்துவிடு' போன்ற மூன்று கதைகளும் புலம்பெயர்ந்தவனின் மனதை நாடு நோக்கிய நினைவுகளாக புரட்டிப் போடுகிறது. பாலியல் பலாத்காரம் ஏற்படுத்தும் தொடர் விளைவுகளை விடுதலைக் கண்ணோட்டத்துடன் பார்க்கிறது விபத்தை மறந்துவிடு. அம்மாவின் துக்கம் உலகம் உள்ளளவும் தீராதது. பிரபஞ்சமயமான துயரத்தை உள்ளடக்கிய கதை ஒரு அம்மாவும் அரசியலும். பனி எரியும் காலமும் இதே வகையிலான தனி மனிதனின் பிரபஞ்சத் துயரம் தான். ஒரு தொழிலாளியும் ஒரு தொழிலாளியும் கதை தனது சொந்த மக்களுக்கும் தனது சொந்த நாட்டுக்கும் பொறுப்பேற்கும் ஒரு சுயவிசாரணை உள்ளவனின் கழிவிரக்கம் தான். தெரிய வராதது என அறிந்து கொள்ளாமலேயே காத்திருப்பவர்கள், தம் சொந்த நிலைமை மரணம் எழுப்பும் கொடுமை பற்றி அறிந்து கொள்ளாமலேயே ஜீவித்திருப்போர் தென் அமெரிக்க நாடுகள் தொடங்கி இலங்கை வரைக்கும் ஆயிரக் கணக்கானோர். ஆயுதமேந்திய அரச படைகளால் 'காணாமல் போனோர்' மட்டுமல்ல ஆறுகள், ஆகாயம், பனிவெளி என காணாமல் போவோரும் நூறு நூறு பேர்கள் இருக்கிறார்கள். 'தெரிய வராதது' கதை இந்த நூற்றாண்டின் மனித ஆன்மாவை தொட்டு உலுக்கிவிடும் கதை.

பார்த்திபனின்- கதைகளில் ஆழ்ந்த துக்கமும் சமூகம் மற்றும் மனிதர்களின் பொய்முகங்கள் குறித்த அமுங்கின எள்ளலும் அருகருகே இருக்கின்றன.

'மனைவி இறக்குமதி', 'ஒரு காதல் நிராகரிக்கப்படுகிறது', 'அத்திவாரமில்லாத கட்டிடங்கள்', ஒரு தொழிலாளியும் ஒரு தொழிலாளியும், வந்தவள் வராமல் வந்தால், இழவுக்கும் தொழிலுக்கும் கதைகளில் வெளிப்படையாகச் செயல்படும் இந்த மௌனமான எள்ளல் கதையில் இறுதியில் நம்மை உருக்குலைக்கின்ற துக்கமாக ஆகிவிடுகிறது.



சல்மான் ருஷ்டி

பார்த்திபன் கதைகளில் இடம்பெறும் மனிதர்கள் எல்லோருமே வாழ்வில் துக்கத்துக்கு, வன்முறைக்கு, பிரிவுக்கு, ஒடுக்குதலுக்கு உள்ளானவர்கள். கல்லான கணவனின் உடல் ரீதியான வன்முறைக்காளாகும் லட்சுமி அண்ணி, மனைவி இறக்குமதியில் ஆண் உடல் ஒடுக்குமுறைக்காளாகும் சுகந்தி, நாட்டில் பலவேறு ஆண்களால் பலாத்காரத்துக்கு உள்ளாகும் தோழி, தனது நம்பிக்கைகள் சிதற அருவருப்பான தமிழனைப் பார்க்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் பால் பரிவுகாட்டும் டச்சுப் பெண் ஸில்வியா, நடுவானில் வெடித்துச் சிதறி தெரிய வராமல் போன பாலுவின் மரணம், பெற்ற மகன்களும் பெறா மகன்களும் கொலை செய்யப்படக் கண்டு செத்து செத்து மறுகும் அம்மா, மார்க்கோசால் 'கறுப்பன்' என எட்டி உதைக்கக் கனவு காணும் குழந்தை. தனது தேசத்துக்காக தன் தோழர்களுக்காக தன்னை இழக்கும் குர்திஸ் போராளி இல்கான், அடையாளம் தேடி அலையும் கறுப்பு டச்சுப் பெண், தற்கொலை செய்து கொள்ளும் மைதிலி, இருபது மார்க் தரமாட்டாயா என புலம்பி தெருவில் வீசப்பட்ட கிளாவ்டியா, மனசும் உடலும் இளகி இறுதியில் கண்களும் ஈரமாகும் பனிஎரிகிற காலத்துக் கண்ணன், அனாதையாகி மாஸ்கோ தெருவில் இருந்து கிடக்கும் புனிதா என



படிப்பகம்

www.padippakam.com




எல்லோருமே நிராகரிக்கப்பட்ட மனிதர்கள்தான்.

பார்த்திபனின் இந்தப் பதினான்கு கதைகளில் இடம்பெறும் மனிதர்கள் அவர்கள் நாட்டில் உள்ளவர்கள் ஆனாலும் சரி, புலம்பெயர் இடத்தில் இருந்தாலும் சரி, பார்த்திபனின் மனிதர்கள் நிராகரிக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகத்தின் கடைக்கோடியில் வாழப் போராடிக் கொண்டிருக்கும் மனிதர்கள்தான்.

பார்த்திபனின் மனிதர்கள் பெரிதாக எவர் மீதும் கோபப்படுவதோ குற்றம் சாட்டுவதோ இல்லை. தமது விடுதலையைத் தாமே தேடிக் கொள்ள, தமது சுதந்திரத்தைத் தாமே எடுத்துக் கொள்ள முனைபவர்கள். கட்டுதளைகளில் இருந்து விடுவித்துக் கொள்ளும் மனிதர்களாகவே பார்த்திபனின் ஆண்களும் பெண்களும் இருக்கின்றார்கள். பார்த்திபனின் மனிதர்கள் எழுப்பும் துக்கம் வாசகனின் கோபத்தையும் விடுதலையுணர்வையும் கோருபவை.

இந்த விடுதலை உணர்வும் மனிதர்களின் மீதான பரிவுணர்வும்தான் பார்த்திபனின் கதைகளை சிருஷ்டி நிலை நோக்கி உயர்த்துகின்றன.




## III

# ஒரே உலகம் : மாறும் காட்சிகள்

எவ்வாறு இறுகிப்போய் விடாமல் ஒரு கலாசாரத்தை தக்க வைத்துக்கொள்ள முடியும்? எமக்குள்ளும் எமது சமூகத்துக்குள்ளும் மாற்றம் வரவேண்டியதன் தேவையை நாம் விவாதிக்கும்போது எவ்வாறு நமது நிற, இனவாத எதிரிகளின் கையில் பயன்பட்டுவிடாமல் அம்முயற்சிகளை மேற்கொள்ள முடியும்? ஆன்ம அளவிலும் அரசியல் ரீதியிலும் இம்முயற்சியை மேற்கொள்ளும்போது, மேற்கின் கருத்துக்களுக்கும் நடைமுறைகளுக்கும் எந்தவித விட்டுக்கொடுத்தலும் இல்லாது மேற்கொள்ளும்போது ஏற்படும் விளைவுகள் என்னவாயிருக்கும்? இவைகளை இந்த கருத்துக்களையும் நடைமுறைகளையும் தழுவிக் கொள்ளும்போது, நாம் இங்கே நம்மோடு கொண்டுவந்தவைகளை புறக்கணிப்பதாக இருக்குமே அதன் விளைவுகள் என்ன?
இவை அனைத்துமே ஒரே ஒரு கேள்வி சார்ந்ததுதான். இருத்தலியல் கேள்விதான் அது. எவ்வாறு நாம் இந்த உலகில் ஜீவனுடன் வாழப் போகிறோம்?.

சல்மான் ருஷ்டி
in Imaginary Homelands.

கணேசனின் அண்ணன் அண்ணியை அடிக்கத் தொடங்குகிறான். தன்னைவிடவும் அடுத்த மாப்பிளைக்க வரதட்சணை அதிகம் கொடுத்தால், தான் கேவலப்பட்டதாக உணர்கிறான். ஒரளவு வளர்ந்த பிள்ளைகள் இருந்தாலும் புதிதாகப் புலம்பெயர்ந்த நாட்டில் இந்தப் பிரச்சினை. தினமும் குடித்துவிட்டுவந்து அடிதடி. அண்ணிக்கு கணேசன், ஆலோசனை தருகிறான். மேற்கில் சுயமரியாதையுடன் வாழ நேரும் எவருக்குமான ஆலோசனைதான் அது. அண்ணனுக்கு அதிகாரம். பாலஸ்தீனியர்கள் மீது இஸ்ரேலியர்கள் அடிக்கும் தொலைக்காட்சி பிம்பங்கள் மாதிரியான அதிகாரம்.

"ஏ, அங்க ஏன் நிற்கிறாய்? இஞ்சால வா. திறப்பு எங்க எண்டு கட்டாயம் உனக்குத் தெரிய வேணுமோ?" சுந்தரலிங்கம் கதிரையொன்றின் பின் பக்கத்தைக் கைகளால் பிடித்தபடி தன்னை நிலைப்படுத்திக்கொள்ள முயன்று கொண்டிருந்தான்.
தொலைக்காட்சியில் இஸ்ரேலிய இராணுவம் பாலஸ்தீனியர்களை அடித்து, நொருக்கி காயப்படுத்திக் கொண்டிருந்தது.
"நான் கேட்கிறன் பேசாம நிக்கிறாய் காது செவிடே?" (கல்யாணக் கணவன்)

கடைசியில் அண்ணி பெண்கள், குழந்தைகள் வாழுமிடத்திற்கு போவதென முடிவுசெய்கிறாள்.

அழகான மனைவிவேண்டும். சீதணம் வேண்டும். அவளே காசுபோட்டும் வரவேண்டும். ஸ்ரீகாத்திருக்கிறான்.
கிட்டத்தட்ட பதினொரு மாதங்களாக காத்திருந்து ஸ்ரீ பொறுமையிழந்தானே தவிர, தான் பயணத்திற்கு காசு தருவதாகவோ, ஏஜண்டை ஏற்பாடு



படிப்பகம்

www.padippakam.com



செய்து தருவதாகவோ, சீதனத்தைத் தரவேண்டாம் என்றோ மாமாவுக்குச் சொல்லவில்லை. அப்படிச் சொல்லவில்லை. அவனது 'நான்' இடம் கொடுக்கவில்லை.
வந்த சுகந்தி என்ன சொல்கிறாள்? தொலை தூரப் பயணமும் வீடு துறந்த வந்த விடுதலை உணர்வும் மேற்கின் தனிநபர் சுதந்திரமும் அவருக்கு உருவாக்கி வைத்த நம்பிக்கையும், வாழ்வை எதிர்கொள்ளம் பிரக்ஞையும் தோன்ற சுகந்தி பேசுவது சிறிக்கு அவமானம்தான். அது தவிர்க்கவே இயலாத அவமானம்.

"ஊரில வீடுவளவு இன்னும் உங்களுக்கு எழுதல, சீதனக் காசும், நகையும் நான் கையோடு கொண்டுபோறதென்று சொன்னதால அதுவும் குடுக்கேல, உண்மையாக இருந்தால்தானே குடுக்கிறதுக்கு. அதால எங்களுக்கு பெரிசா நட்டம் வரேல"

"எனக்கு களைப்பாக இருக்குது. இனி கதைக்கத் தேவையில்லையெண்டு நினைக்கிறன். இனி நீங்க என்ன சந்திக்கிறதும் அவசியமில்லை. முடிஞ்சா மனுசனாப் பாருங்கோ அப்ப பார்ப்பம்"
(மனைவி இறக்குமதி)

கெட்டுப்போனவள் செத்துப் போகலாம் அல்லது மின்கம்பத்தில் சுட்டுக் கொல்லப்படலாம் அல்லது அக்கினியில் இறங்கி வெந்து சீதையாகலாம் ஆனால் ஜேர்மனியில் வாழ்கிற பிரக்சைளுள்ள பெண் அப்படிச் செய்ய முடியுமா என்ன? கற்பென்னும் மடமையை உதாசீனிக்கிறாள். மிருகங்களின் நடத்தையைக் காறி உமிழ்கிறாள். அன்றாட வாழ்வில் வன்முறையே தொடர் நிகழ்வாகி பாலியல் பலாத்காரமே வாழ்வாகின தேசத்துப் பெண்களுக்கு ஜேர்மனியில் வாழும் தோழியின் கடிதம்

நினைவுகள் மட்டுமே எங்களை இங்கே வாழ வைக்கின்றன. அவைகளும் இல்லையெனில் நாங்கள் வெறும் ஜடங்களே.
உனக்கு மரணதண்டனை வழங்கும் நீதிபதிகளாக எல்லோரும் மாறிவிடுவார்கள். உன்னைக் குழப்பி விடுவார்கள். மற்றவர்களின் முடிவை எடுக்க வேண்டியது தாமே என்பது போல் நடந்து கொள்வார்கள்.
உன்னை இம்சித்தது மிருகம்தான். மிருகமே தான். உன்னைவிட மிருகம் பலம் வாய்ந்திருந்ததென்பதால் உன்னால தப்பித்துக்கொள்ள முடியவில்லை. அதற்காக உயிரைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்பதைப் போல பைத்தியக்காரத்தனம் வேறேதும் இல்லையே.
அநியாயத்தால் இம்சிக்கப்பட்ட இதயங்கள் சேர்வதற்கு எந்த தடைகளும் இருக்காது. நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்துகொண்டால் அப்புறம் மற்றவர்களின் பலம் குன்றிவிடும்.
இவர்களைப் பற்றிக் குறிப்பிடக் காரணம் இங்கிருப்பவர்கள் திரும்பிவந்து பெரிதாக ஏதாவது செய்வார்கள் என்று அங்கிருப்பவர்கள் எதிர்பார்க்கக்கூடாது என்ற கவலையினால் தான். அன்புத் தோழியே, மற்றவர்களை ஒரு போதும் எதிர்பார்க்காதே.
நடைமுறைப் பிரச்சினைகளால் உன்னிடமிருந்து எனக்கு கடிதம் வராவிட்டாலும் நான் தொடர்ந்து எழுதிக்கொண்டேயிருப்பேன். எனக்குத் தெரியும் என்றாவது ஒருநாள் உன்னிடமிருந்து கடிதம் வருமென்று....
(விபத்தை மறந்துவிடு)

வெள்ளைப் பெண் அவளது உடம்பு. ஸிட்டிஸன்சிப் எல்லாம் வேண்டும் ஜீவனுக்கு. அவள் தருகிற மண்டேலாவின் புத்தகமும் மூன்றாம் உலகுபற்றிய புத்தகமும் அவனுக்கு வெறுக்கிறது. அந்த ஜேர்மானியப் பெண் மூன்றாம் உலகின் மனித துயரங்களைப் பகிர்ந்து கொள்பவள். தமிழன் சுயநலக்காரன். அவனுக்கு புத்தகம் கூட காதல் கடதாசி வைத்துக் கொடுக்கத்தான் உபயோகிக்கத் தெரியும். பெண் உடல் மீது ஆதிக்கம் படைத்தவன்.
ஸில்வியா மெல்லத்தான் பேசுகிறாள். நிதானமாகப் பேசுகிறாள். அந்த மௌன மொழியில் உள்ளது செருப்பாலடித்தது போன்ற சங்கேத மொழி.

"நான் உன்னைக் காதலிப்தாக ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. அதற்குள்ளேயே என்னைக் கட்டுப்படுத்தவும், உரிமை கொண்டாடவும், சந்தேகப்படவும் முனைந்து விட்டாய், உன்னைப் போன்றவர்களை திருமணம் செய்து கொண்டு, வாழ்நாள் முழுவதும் சேவகம் செய்யும் கூண்டில் அடைய நான் என்ன முட்டாளா?

உனக்கு என்மேல் இருப்பது காதலல்ல. இச்சை. உனக்கு இரண்டு தேவைகள் இருக்கின்றன. ஒன்று இந்த நாட்டின் குடியுரிமை. இரண்டாவது என்னுடைய வெள்ளை உடம்பு. உன்னுடைய முதலாவது தேவைக்கு என்னால் எதுவும் செய்ய முடியாது. இரண்டாவதற்கு வேண்டுமென்றால் சில முகவரிகள் தருகிறேன். உன்னோடு வெறும் நண்பியாகப் பழகவே எனக்கு அருவருப்பாக இருக்கிறது. உனது நாட்டுக்கத் திரும்பிப்போகும் போதாவது உனது அழுக்கு மனதை சலவை செய்து கொண்டுபோ"
(ஒரு காதல் நிராகரிக்கப்படுகிறது)

ஊரில் நிறைப் பொறுப்புக்கள். அக்கா தங்கைகள் தம்பி தாய் தகப்பனுக்கான பொறுப்புக்கள்.
ஜேர்மனியில் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட நாய் வாழ்க்கை. கனடா களவுகளின் தேசம்.
சிவகுமார் நிறையத் தத்துவம் பேசுகிறான். அவன் நேசிக்கத் தெரிந்தவன்.
பாலு பொய் சொல்லிவிட்டு, அவமானம் கருதி மறைத்துவிட்டு கனடா போகிறான். வானத்தில் காணாமலே போகிறான். அவனை நேசித்தவர்க்கு பல கேள்விக்கான பதில்களை எப்போதுமே தெரிய வராமலேயே விட்டுப் போகிறான்.

அமெரிக்காவில் சீவிக்கும் ஒரு கறுப்பனின் பாஸ்போட் எப்படியோ தனக்குரிய வழிகளில் கிடைத்தது. முகம் சுமாராகப் பாலுவைப் போலவே. தலைமயிர் கூடச் சுருட்டத் தேவையில்லை. சென்றகுறையின் பாக்கி இருந்தது. மொத்தத்தில் மாறுவேடம் இல்லாமல் அப்



படிப்பகம்

www.padippakam.com



படியே போக இயலக் கூடியதாகவிருந்தது.

" தெரிஞ்ச பெடியனிட்ட வேற சிற்றிக்குப் போறன். சிலவேளை அங்கேயிருந்து ஸ்விசுக்குப் போனாலும் போவன். போனா போன் பண்ணிறன்" என்று சிவகுமாருக்கும் பொய் சொல்லிவைத்தான்.
விமானம் இலண்டன் விமான நிலயத்தில் தரித்து, சிறிதாக இளைப்பாறி, மீண்டும் பறந்து பல நிமிடங்களின்பின் வானத்தில் வெடித்துச் சிதறி சிதையல்கள் லொக்கபே எனும் இடத்தில் வீழ்ந்தன.
இரவு முழுவதும், போதை வஸ்தும், கும்மாள முமாய் இருந்து நேரம் கழித்து வந்துபடுத்து, இன்னும் எழும்பாமல் இருக்கும் கிரிஸ்டோபர் பீலியைத் திட்டியபடி வாசலுக்கு வந்த அம்மா எலாக்பே விமான நிலையத்தில் கிரிஸ்டோபர் பீலி இறந்துவிட்ட செய்தியை ஆழ்ந்த கவலையுடன் தெரிவிப்பதாக வந்த தந்தியை வாங்கி வைத்துக்கொண்டு ஒன்றும் புரியாமல் குழம்ப -
பாலகிருஷ்ணன் எங்கே என்ற உண்மை தெரியாமல் அவன் சுவிஸ் போய் நிற்பதாக ஜேர்மனியில் இருந்த நண்பர்கள் நினைத்துக் கொள்ள-
இலங்கையில், நடுமூலையில் உழைத்துக்களைத்துத் தளர்ந்து போன அப்பாவும் ஔவையாராகிக்கொண்டிருக்கும் அக்காவும், துப்பாக்கிகளுக்குப் பயப்படும் அண்ணாவும், எதிர்காலக் கனவுகள் பற்றிய ஆரம்பங்களுடன் தம்பி தங்கையும் பாலுவின் கடிதம், பணத்திற்காக காத்திருந்தார்கள். காத்திருப்பார்கள்.
(தெரியவராதது)

தாசனின் அம்மாவுக்குத் தெரியுமா அரசியல் தஞ்சம் (Political Asylam) என்றால் என்ன வென்று? மற்றவர் நாட்டில் சாக இங்கு தமது நிரந்தர வதிவிடம் பற்றி கனவு காண்போர் பற்றி அம்மாவுக்கு என்ன தெரியும்? அம்மாவுக்கு என்னதான் அரசியல் தெரியும்?

"எனக்கு இப்போதுதான் வேலைகிடைத்திருக்கிறது. இந்த நிலையில் இப்படியான செய்திகளை கேட்பது கவலையாக இருக்கிறது. இங்கேயுள்ள நீதிமன்றத்தில் எனது அரசியல் தஞ்சத்தை விசாரிக்க திகதி தந்துவிட்டார்கள். இதனால் பக்கத்து வீட்டு பரமேசக்காவின் உடைந்த வீட்டின் கலர்ப்படமொன்றும், வேலுப்பிள்ளையைச் சுட்டுக் கொன்ற பத்திரிகைச் செய்தியையும், உடனே எனக்கு அனுப்பிவையுங்கள்.
முதற் கடிதத்திலும் இதைப்பற்றி எழுதியிருந்தேன். இன்னும் பதிலே வரவில்லை. எங்க சித்தப்பாவிற்கும் பெயர் வேலுப்பிள்ளை என்றபடியால், ஒருமாதிரியாகச் சரிக்கட்டலாம். எனவே உடனே அனுப்பிவையுங்கள்".

சாரதா, சின்னமணி என்கிற அங்கிருந்த சிநேகிதிகள் தாய்களின் பிள்ளைகள் தமக்குள் தாமே அரசியலென கொலை செய்து கொள்வது பற்றித்தான் இந்தத் தாய்களுக்கு என்ன தெரியும்!
நாசமாய்போன அரசியல் கோதாரி விழுந்த அரசியல் என்று புலம்பி தமது மகவுகளின் உயிர்களுக்காக அழுது மார்பிலடித்துக்கொண்டு மாயவே தெரிந்த தாய்கள்தான் அவர்கள்.
இதனாலல்லாம் நின்றுவிடுகிற அரசியல் அல்ல அது என்பதும்கூட அவர்களுக்குத் தெரியாது.
ராஜன் என்னடா இது? திக்பிரமையடைந்த சின்னமணி கேட்டாள்.
"அம்மா" நீ இதில் தலையிடாத, இது அரசியல். உனக்குத் தேவையில்லாத விசயம். சொன்னாலும் விளங்காது" ராசன் ஆணித் தனமாகச் சொல்லி விட்டுப் போனான்.
அடுத்த நாள் சாரதாவின் ஒப்பாரியுடன் காலை புலர்ந்தது.
பாதையின் அருகே, பற்றைக்களுக்குள் சந்திரன் ரத்தமாக இறந்து கிடந்தான். கண்கள் விரியத் திறந்திருந்தன....
ஒரு வருடத்திற்குமுன், சாரதாவின் மகன் சந்திரன் உடல் கிடந்த அதே இடம். அதே பற்றை. இப்போது உடலில் பல பொத்தல்களுடன் ராசன் பரவியிருந்தான்.

"நாசமாய்ப் போன அரசியல் கோதாரி விழுந்த அரசியல் "ஐயோ என்ர பிள்ளையைக் கொண்டு போயிட்டாங்களே"
வேறிடத்தில் சாரதாவின் பெருமகனை சிலர் தீவிரமாகத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.
(ஒரு அம்மாவும் அரசியலும்)

புலம்பெயர்ந்து வந்தாயிற்று. தினமும் வீடியோ பார்ப்பதுவும் சாப்பிடுவதும் கவலை. குழந்தை பிறந்தால் என்ன, அவன் பள்ளிக்கூடத்தில் அடையும் துக்கங்கள் ஆயிரம் இருந்தால் என்ன? அவனது உள் உலகங்கள் பற்றி, அத்திவாரமில்லாத கட்டிடங்கள் பற்றி எத்தனை பெற்றோர் இங்கு அக்கறையோடு கவலைப்படுகிறார்கள்.?


தனது கலாசாரம் தனது வேர்கள் பற்றி ஓயாது தனக்குள் கேட்டுக் கொள்கிற குழந்தையை மார்க்கோஸ் கனவில் எட்டி உதைத்து அவன் நாட்டுக்குப் போகச் சொல்கிறான்.
வினோத்துக்கு இந்த நாடே பிடிக்கவில்லை. இங்குள்ளவர்களை விட பல வகைகளில் தாங்கள் வித்தியாசம் என்பதை அவன் அறிந்திருந்தான். இந்த வித்தியாசங்கள் அவனுக்கொரு தாழ்வாகவே இருந்தது. எப்போதோ பார்த்துப் பழகிய கறுப்பு முகங்களும், உருண்டு விளையாடிய புழுதி மண்ணும், குத்தி உப்புப் போட்டுத் தின்ற பச்சை மாங்காயும் மங்கலான ஞாபகங்களாக இருந்தன. அவை நிஜமா அல்லது இப்போதிருக்கும் நிலைதான் நிரந்தரமா என்று அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதற்கான எந்த சாத்தியமும் அவனுக்கில்லை.
"உன்னுடைய நாட்டுக்குத் திரும்பிப்போ"
பின்னால் மார்க்கோஸ் கத்துவது வினோத்துக்குக் கேட்டது. கண்ணீர்த் துளியொன்று கன்னத்தை தடவிவிழுந்தது.
"எந்த நாடு?"
"நான் எங்கே போகவேணும்?"
"நான் ஏன் இங்க இருக்க வேணும்?"



படிப்பகம்

www.padippakam.com






அவனுக்கொன்றுமில்லை. அவனுக்கொன்றும் ஒன்றுமில்லை. எல்லாவற்றையும் யாரோ தீர்மானிக்கிறார்கள். யாரோ செய்கிறார்கள். வினோத் களைதுத் தூங்கிப் போயிருந்தான். கனவில் மார்க்கோஸ் வந்து "கறுப்பனே உனது நாட்டுக்குப் போ" என்று காலால் உதைத்தான். (அத்திவாரமில்லாத கட்டிடங்கள்)

சகமனிதன் போராடும்போது, மற்றவன் ஒற்றுமையில்லாது தன் நலன் பார்ப்பது நாட்டில் மட்டும் தான் இருக்கிறதா? புலம்பெயர்ந்த நாட்டுத் தமிழனும் தன்னைப் போலவே சக தொழிலாளியான குர்த்திஸ் காரன் வேலை நீக்கம் செய்யப்படும் போது வெறுமனே கதைக்க மட்டுமே யோசித்துக் கொண்டிருக்கிறான். நிறையத் தத்துவங்கள் பேசத் தெரிந்திருக்கிறான்.

விஞ்ஞானத்தால் அநியாயமாகப் பாதிக்கப்பட்ட வெய்யில் உக்கிரமாயிருக்க, பலர் இயலுமானவரை தங்கள் உடம்பைப் பகிரங்கப் படுத்திக் கொண்டிருந்தார்கள்.
எத்தினை சனங்களை வீடில்லாம தெருவுக்கு அனுப்பிப்போட்டு கட்டிடங்களை உயத்திக் கொண்டு போறாங்கள். அந்தப் பதினைஞ்சாவது மாடியில், மூலையில, கதிரையால குத்திக் கொண்டு, பத்து ரொலிபோனில ஒண்டை எடுத்து, இன்னொரு கட்டிடம் வாங்கிறதைப் பற்றிக் கதைச்சிக் கொண்டிருக்கிறவனுக்கு எப்படி உவ்வளவும் முடிஞ்சிது? பிறக்கேக்கேயே மொலரையும் எண்ணிக் கொண்டா பிறந்தவன்? ஒன்றில் உவன் தானே சொந்தமாய் மற்றவையை தட்டிச்சுத்திச் சேத்ததாய் இருக்க வேணும். அல்லாட்டா அவன்ரை பரம்பரை தாங்கள் சுருட்டிக்கட்டினதை வாரிசுக்கு விட்டுப் போட்டு கல்லறைக்கை கிடக்க வேணும். உவன் ஒருத்தனை பதினைஞ்சாவது மாடியில் வைக்கிறதுக்கே எத்தனை சனத்தை நாசமாக்கியிருப்பாங்கள்.
மேற்கு நாடுகளின் அணு, இரசாயனக் கழிவுகளை தென்னாப்பிரிக்காவின் ஒருமூலையில் ஆஃறுதலாக இறக்கிக் கொண்டிருந்தார்கள்.
.....ரவீந்திரனுக்கு மட்டும் சீனியை குறைத்துப் போட்டான். ஏனெனில் அவன் டொச் பெட்டையை சிநேகிக்கிறான்.
வாழ்வை அர்த்தத்தோடு வாழ்கிறதும், தனது சொந்த மக்களுக்குப் பொறுப்பாக இருப்பவனும் இரவுகளை வெறுமனே வீணாகப் போகச் செய்துவிடுவதில்லை.

".....இரவுகள் எனக்கு முக்கியமானவை. அவற்றை இந்த வேலைக்காக என்னால் இழக்க முடியாது. நீ பாதைகளில் நடந்து போகும் போது பார்த்திருப்பாய் குர்டிஸ்தான் மக்கள் பற்றிய சுவரொட்டிகளை. வேறுபல பிரசுரங்களையும் நான் அவ்வப்போது காட்டியிருக்கிறேன். இவற்றையும், இன்னும் பலவற்றையும் எங்கள் மக்களுக்காகச் செய்வதற்கு எனக்கும், நண்பர்களுக்கும் இரவுகள் தேவைப்படுகின்றன. எனது குடும்பத்திற்காக நான் அகதியாக இங்கு வந்திருக்கலாம். ஆனால் ஏனைய மக்களையும் நேசிக்கும் மனிதனாகவே எனது இயல்பை இங்கு அமைத்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கு இருக்கும் வரையும்" - இல்கான் பத்திரங்களை நிதானமாக மடித்தான்.

தன்னைத்தானே கேள்விகேட்டுக் கொள்கிறனால் கடைசியாகச் செய்ய முடிவதுதான் என்ன?

..... ஒரு சக தொழிலாளிக்கு அநியாயம் நடக்கிறது ஏன் முக்கியமாய் படலே? இல்கானும் ஒரு மனுஷன் தானே? அவனுக்கேன் தன்னை நம்பியிருக்கிற மனுசி, பிள்ளையள் முய்கியமாய் படலே?

காந்தன் வீட்டுக்குப் போகவேண்டும். அங்கே சண்முக நாதனும் யோகேஸ்வரனும் ரவீந்திரனும் இருப்பார்கள்.
கதைக்கலாம்!
(ஒரு தொழிலாளியும் ஒரு தொழிலாளியும்)


விற்பனையாகிற பெண் குழந்தைகள், தாய் தந்தை இனம் மொழியற்ற குழந்தைகளின் எதிர்காலம் என்ன? நிறவெறிச் சூழலில் தமது வேர்கள் குறித்த அடையாளங்கள் அற்ற குழந்தைகளின் எதிர்காலம் எத்தகையது?
இப்போது இங்கே வளர்ந்துவரும் வெளிநாட்டவர் எதிப்பில் எனது மகளும் பாதிக்கப்படுகிறாள். நிறப்



படிப்பகம்

www.padippakam.com






பாகுபாட்டை அவளும் எதிர்கொள்ளவேண்டி யிருக்கிறது. எல்லோரும் வெள்ளைநிறமாக இருக் கும்போது நான் மட்டும் ஏன் கறுப்பாக இருக்கி றேன் என கேட்டுக்கொண்டிருக்கிறாள்: உன் னைச் சந்தித்ததுமுதல் அவள் இன்னும் குழம்பிவிட் டாள். தான்அந்நியன் போலவும் சமயத்தில் அவள் உணர்கிறாள். அவளிடம் நான் உண்மையைக் கூற வேண்டித்தான் வரும். எப்போது எப்படி என்பது தான் தெரியவில்லை.

இந்த அடையாளப் பிரச்சினை எல்லோர்க்கும் உரி யது. அப்போதுதான் வந்து தன் எதிர்காலத்துக்கா கக் காத்திருக்கும் எல்லோருக்கும் உரியதுதான்.

..... தலை வலித்தது. சமையலறைக்குப்போய் தேநீர் தயாரித்தேன். சமையலறை அசிங்கங்களும் நாற றத்துக்கும் இத்தனை நாளில் பழகிப் போய்விட்டது. இப்போது பாதிக்கவில்லை. எல்லாக் கண்ரா விக ளுக்கும் பழகி சுரணை போய்விட்டதால் தான் என்ன செய்ய வேண்டும் என்று யோசிப்பதில்லை போலும்.
தேநீர் குடிக்கிறேன். நாளை பாஸ்கரன் வரலாம். (அம்பது டொலர்ப் பெண்ணே!)

தாய் தந்தை உறவுகளை விட்டு முன்பின் அறியாத அவனுக்கு விலைபோக பெண் கடல்கடந்து தனியே நாடு விட்டு வருகிறாள். மிருகங்களினால் தினம் தினம் விழித்து நாட்களைக் கழிக்கிறாள்.

"சாப்பாடில்லாவிட்டாலும் பரவாயில்லைய ண்ணா, ஆனா, இஞ்சை நிக்கற பெடியள் சேட்டை விடுராங்கண்ணே, அரியண்டப்ப டுத் துராங்கள். காசுதரலாம் வா, வெளியில் நியூஸ் போகாது வெண்டு வா ...." மேலே முடியாமல் விம்மி வெடி த்தாள் மைதிலி.

காத்திருக்கிறவன் மரபு மாறாத தமிழன். புதிய சூழ லுக்கு வந்தும் தனது அசிங்கங்களை மாற்றிக் கொள் ளாத தமிழன். நட்பும் காதலும் நேசமும் எல்லாமும் அவனுக்குப் பண்டம்தான். அவன் பொறுமையாகப் பேசக் கூட முடியாதபடி காரியவாதியாகிவிடுகிறான்.

விளக்கமாய் கதைக்கேலாது. சிலோனிலிருந்து டிரெக்டா இஞ்ச வாற பிள்ளையைத்தான் நான் கலி யாணம் செய்வன், மற்றது நீயும் நானும் எப்பவும் பிறெண்ட்தான்.

கதாசிரியன் புரட்சிகரமாகக் கதையை முடிக்கி றான். பல்வேறு விமர்சனங்களை புத்திசாலித் தனமாக எதிர்கொள்ளும் முடிவுடன் கதை எழுதும் சாதுரியம் அவனுக்கு இருக்கிறது.

உதுக்கேன் யோசிக்கிறாய் அண்ணை. அந்தாள் இல்லையொன்டாப்போல எனக்கு கலியாணமே இல்லையே. உன்ரை சிநேகிதர் தன்ரை முடிவை இப்பவே சொன்னது நல்லதாப் போச்சு. உப்பிடி யெல்லாம் ஐமிச்சப்படுகிறவன் நாளைக்குக் கலியா ணம் கட்டினாப் பிறகு, நான் தற்சேலா வெளியில போய் பஸ்ஸில்லாம பிந்தி வந்தாலும் ஆரோடயன் படுத்திட்டு வாரன் எண்டுதான் நினைப்பான். உங் களைப் போல ஆம்பிளைகள்..... தூ. மைதிலி துப் பியது சமூகத்தின் மேல் விழுந்தது.
நிஜத்தில் - என்று கதையை முடித்தேன்.
அவள் தற்கொலை செய்து கொண்டு விட்டாள்.
கதாசிரியனின் பிரச்சினைதான் என்ன? தனது மேதமையை எப்படி நிலைநாட்டலாம்?
பெடிச்சி குளிகையை விழுங்கிட்டது.
- என்ன புனைபெயரில் எழுதலாம்? பீம்சிங்கிற்கு பாவன்னா வரிசைப்படங்கள் எல்லாம் வெற்றி. பாண்டியன்? பாக்கியநாதன்?? பார்த்திபன்??
(வந்தவள் வராமல் வந்தாள்)

துக்கம் தமிழர்க்கு மட்டும் உரியதல்ல. பிரிவு பாலியல் பலாத்காரம், சீரழிவு, யாருமற்ற தனிமை, ஜேர்மனியப் பெண்களுக்கும் உரியது. விபச்சாரிகள், தூள் அடிப்பவர்கள் என கேவலப்படுத்தப்படும் மனிதர்களின் உள்ளில் இயங்கும் சோகங்கள் அவர்கள்பால் பரிவுள்ள மனிதனுக்கு மட்டுமே புரியும்.

அம்மா திடீரென அறிமுகப்படுத்திய புதுச்சிநேகி தன் அம்மா இல்லாத நேரங்களில் அவன் தன் னுடன் படுக்க கிளவ்டியாவை வற்புறுத்தியது. சந் தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் அவள் உடம்பில் அவன் தொட்டு விளையாடியது. துன்பம் தாங்க முடியாமல் ஒரு நாள் அம்மாவிடம் சொல்லியழுதது. தங்களைப் பிரிக்கவே இந்தச் சதி என்று சி நகிதன் சொன்னதையே அம்மா நம்பியது. அவர் ட மிரு



படிப்பகம்

www.padippakam.com



ந்து தப்புவதற்காய் வீட்டைவிட்டு தெருவுக்கு வந்தது. அந்திரியாசுடன் சந்தோசமாயிருந்தது. அவனும் போனபின் முற்றாய் தணித்தது. இன்றுவரை அம்மா தேடிவராதது.....

பொறுக்கிகள் உலகம் முழுக்க உண்டு. சட்டத் துக்குட்பட்ட கனவான்கள் அவர்கள்தான். சட்டமும் அவர்களுக்காகத்தான்.

அவன் சிரித்தான். "சட்டப்படி பதிவு செய்யாமல் விபச்சாரம் செய்தது உனது குற்றம். நீ புகையிரத நிலையத்தில் நின்று பிச்சையெடுப்பது பொலிசுக்குத் தெரியும். நீ ஹசிஸ் புகைப்பதும் அவர்களுக்குத் தெரியும். நீண்ட நாட்களாக எல்லாம் அவதானித்திருக்கிறேன். சட்டம், பொலிஸ் எல்லா வற்றிற்கும் நாங்கள் தான் வரி கட்டுகிறோம். அவர்கள் எங்களுக்கேதான். உன்னைப்போல் தெருப் பொறுக்கிகளுக்கல்ல." அவன் கார் கண்ணாடிகளை மேலே ஏற்றினான்.

"தயவு செய்து இருபது மார்க்காதல் தரமாட்டாயா"

(தூள்)

கண்ணனது வருமானத்தை எதிர்பார்த்து, வயசுக்கு வந்த தங்கை, அக்காவை விட்டு காசுகேட்டு லாரி வாங்க நினைக்கும் அத்தான், இவர்களுக்காக கடிதாசி எழுதிப் போட அம்மா.

ப்ளீச்சிங் பௌடரில் கை பொசுங்கி, நள்ளிரவில் பியர்மட்டும் குடித்து பட்டினியில் கிடந்து, தான் கல்யாணம் செய்ய நினைப்பதாக எழுதிய கடிதத்துக்கு அம்மாவின் பதிலை எதிர்பார்க்கும் கண்ணனை நினைக்க எவருக்குமே நேரமோ அவசியங்களோ தருணங்களோ இல்லை.

மறந்து போச்சினமோ?

வேணுமெண்டு விட்டிட்டினமோ?

சீ.... ஏனிப்படி நினைப்பான். அவை ஆர்....? என்ரை அம்மா. என்ரை சகோதரங்கள். அநேகமாய் போட்ட கடிதம் கிடைச்சிருக்காது. வெளிநாட்டுக் கடிதம் என்றபடியால் உள்ளுக்கை காசு கிடந்தாலும் கிடக்குமெண்டிட்டு ஆரென் உடைச்சிருப்பாங்கள்....

சேகர் இப்ப என்ன செய்து கொண்டிருப்பான்...?

கசியும் முனகல்களில் ரி.வி.யின் காட்சிகளில் உடலின் வெக்கையில் அறை திமிறியது.

கை சாரத்திற்குள் நழுவியது.

மனசும் உடலும் இறுகி இறுகி ... திகைத்து... இளகத் தொடங்குகையில்....

கண்களும் ஈரமாகின.

(பனி எரியும் காலம்)

மிக இயல்பாக சந்தோசமாக ஆக வேண்டிய பெண் உடம்பின் வெப்பம் தொலைக் காட்சிப் பிம்பங்களில் நிலைத்து கண்ணனின் கண்களில் ஈரமாகும் போது மனம் கனக்கிறது.

வியாபாரிகள் எதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. ஆற்றில் புதைந்து போனவர்கள். பனியில் மாண்டு போனவர்கள். மூச்சுத்திணறிப் பிணமானவர்கள் என எதைப் பற்றியும் கலைப்படுவதில்லை.

மனிதர்கள் அவர்களுக்கு ஆடுமாடுகள் போல ஏற்றுமதிக்கான மிருகங்கள். அவர்களின் வியாபார அறமெல்லாம் இலாபம். இலாபம் மட்டும்தான்.

நான் இன்னும் முடிக்கவில்லை. உனக்கு ஒரு சந்தர்ப்பம் தரப்படுகிறது. வெளிநாட்டிலிருக்கின்ற உனது உறவினர்களிடமிருந்து நான் கேட்கின்ற தொகையைப் பெற்றுத்தா. பத்திரமாக வெளியில போகலாம். இப்படிப் பல தமிழருக்கு நான் உதவி செய்து அவர்கள் இப்போது வெளிநாடுகளில் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்...

.... நன்றாகக் கேள். இன்று வெள்ளிக்கிழமை. தற்செயலாக எந்த சட்டத்தரணியாவது வந்தாலும் திங்கட் கிழமைதான் உன்னை நீதிமன்றத்தில் நிறுத்த முடியும். இடையில் இரண்டு நாட்கள் இங்குதான் இருக்கப் போறாய். இந்த இரண்டு நாட்களிலும் எதுவும் நடக்கலாம். நீ தப்பியோடுறபோது சுடப்படலாம். அல்லது அதோ பார் உன்னையே கோபமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் சக கைதி உன்னை அடித்தே கொல்லலாம். இல்லையென்றால் தலையில்லாமல் மொறட்டுவ கடற்கரையில் கண்டெடுக்கப்படலாம். இரண்டு நாட்கள் என்பது அதிகம். எதுவும் நடக்கலாம்....

(இழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்!)

மேற்கத்திய அரசுகளின் நிறுவனங்களின் ஒழுங்கு, ஒழுங்கின்மை என எல்லாம் பிரச்சினைகளும் இருத்தலுக்கான பிரச்சனைகள் ஆகிவிட்டது மிஹெலுக்கும் பார்த்திபனுக்கும். மேற்கின் ஜனநாயகம் குறித்தும் மிஹெல் கொஞ்சநஞ்ச நம்பிக்கையையும் உடைத்து விட்டான்.

எதுதான் ஜனநாயகம் என மிஹெல் கேட்கிறான்.

இந்தக் குளிரிலும் கடும்பனியிலும் அவர்களை அலைய விட்டிருப்பதுதான் ஜனநாயகமா? சந்தேக நபர் களை சுட்டுக் கொல்வது சனநாயகமா? நோட்டீஸ் ஒட்டுபவர்களை சுட்டுக் கொல்வது ஜனநாயகமா?

.... இந்த ஒழுங்குக்கு எங்களைக் கட்டிப்போடப் பார்க்கிறது. அரசு எங்களை உற்றுக்கவனிக்க, தனது கண்காணிப்பில் எப்போதும் வைத்திருக்க, தான் விரும்பியபடி எம்மீது நடவடிக்கை எடுக்க.... இப்படிப் பல வழிகளில் இந்த ஒழுங்கு அரசுக்கு நன்மையளிக்கிறது.

இந்த ஒழுங்கு புலம்பெயர்ந்த தமிழனுக்கு சரிப்பட்டுவரும் ஒழுங்கல்ல.

இவைகள் எமக்கு சரிவருமா என்ன?

மத்தியானம் துயில் கலையிறதும் சாமத்தில் உலை வைப்பதும், எப்போதும் பலர்கூடி சந்தோசமாயிருக்க முயற்சிக்கிறதும் எங்கள் வாழ்க்கையே வேறு. இந்த ஒழுங்குகளுக்கு கட்டுப்படமுடியுமா?

தனிமையிலும் விரக்தியிலுமே செத்துப்போவோம்.

புகையிரத நிலையத்திலிருந்து குளிருக்கு ஒண்டியவனை விரட்டி அவனைத் துன்புறுத்தி வெளியேற்றி பனியில் பகலில் நனையவிட்டுச் செல்லும் போலீசின் ஒழுங்கு மிஹெலுக்கும் சரிப்பட்டு வராது புலம்பெயர் தமிழனுக்கும் சரிபட்டுவராது.

அமைதியாக மிஹெலிடம் பேப்பரும், பொயிலையும் வாங்கி சுருட்டி, ஒட்டி வாயில் வைத்துக் கொண்டு கேட்டேன்....

(மேற்கின் ஒருபக்கம்) (கிழக்கு டிசம்பர் 1994)

என்னதான் மனித ஏற்றுமதி இறக்குமதி வியாபார



படிப்பகம்

www.padippakam.com





சுஜாதாபட்

மானாலும் மனசாட்சி கொஞ்ச நஞ்சம் உள்ளவனும் இருக்கத்தான் செய்கிறான். கைவிடப்பட்ட பெண்கள் நடுவீதியில் அனாதைப் பிணமாக கிடக்கக் கேள்வியுறுகிறபோது நெஞ்சு கனக்கத்தான் செய்கிறது.

இஞ்சை பார். இதெல்லாம் நான் படிக்கிற விசயமில்லை. முந்தி மாதிரியில்லை இப்ப. ஊருப்பட்ட ஏஜென்சியள். சாட்டற் பிளைற்றிலை அள்ளிக் கொண்டு வந்து கொலண்டிலை இறக்கிறளவுக்கு தொழில் முன்னேறிவிட்டது. ஒவ்வொரு ரூட்டும் நாற நாற எங்களுக்குத்தான் நட்டம். அதனாலை நாங்கள் முந்தவேணும்......
நீயே யோச்சுப்பார். எங்கடையாக்கள் கூட்டியாந்ததிலை எத்தனை சனம் யூகோ காட்டுக்கை காணாம போயிருக்குது? போலந்து ஆத்துக்கை தாண்டிருக்குது? ஒஸ்ரியா சினோவுக்கை புதைஞ்சிருக்கு. இதுக்கெல்லாம் நீ பதில் வைச்சிருக்கியே? நாங்கள் சனத்தைக் கரை சேர்க்கிற நல்லதைத்தான் செய்யிறம். ஆனா வாற சனத்தின்ரை விதி நல்லாயில்லாம அதுகள் மண்டையைப் போடுறதுக்கு நாங்கள் என்ன செய்யிறது?

ஒரு உரையாடல்:

ஆர்....?
அது நான் சிவா கதைக்கிறன்.
எந்தச் சிவா?
ராங்கிசிவா. இஞ்சை மாஸ்கோவிலை நிற்கிறன்.
என்ன புதினம்?
கேட்ட காசு தராததாலை புனிதாவை கோட்டல்லை விட்டிட்டு வந்தனாங்கெல்லே
அவருக்கென்ன? றெட்லைட் ஏரியாவிலே கொண்டு போய் விட்டிட்டாங்களே?
அவள் செத்துப் போனாள். ஒரு குறுக்கு றோட்டிலை கிடந்து பொலிஸ் சவத்தை கண்டுபிடித்திருக்கு.
தங்களுக்குத் தெரிந்த பெண். அவளது சாவை நண்பர்கள் மூலம் ஊரிலுள்ள அவளது பெற்றோர்களுக்குத் தெரிவிக்கலாமே என சிவா சொல்கிறான்.
....பேப்பு** மண்டைக்க ஒரு கொட்டையும் இல்லை. ஒண்டையும் நாத்தாம உன்ரை அலுவலைப்பார்.

வியாபாரம் நிற்கவில்லை. மனிதர்கள் மிருகங்கள் பழைய கப்பல்கள் நகர்ந்தபடியே இருக்கின்றன.

அடுத்துவந்த நாட்களில் லாவோசிலிருந்து புறப்பட்ட ஆதிகால உக்ரேயன் கப்பல் ஒன்றில், பிள்ளை குட்டிகளுடன் இருந்த முன்நூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் வண்ணக்கனவு கண்டு கொண்டிருந்தனர். கொழும்பிலிருந்து பலர் லாவோசுக்கு கொண்டு வந்து இறக்கப்பட்டனர்.
(இழவுக்கும் தொழிலுக்கும் வ. செ.)

# IV

# அடையாளம் குறித்த கலவரம்

1. இப்போது நான் பின்நோக்கிப் பார்க்கையில்
அவுஸ்திரேலியா எனக்கு என்னென்ன கொடுத்தது
என உணர்கிறேன்.
ஆனாலும் எனது இதயம் சிந்தனை எல்லாவற்றிலும்
நான் எனது
முதல் பிறப்பினால் நிறைந்திருக்கிறேன்

நான் சொன்னேன்:
"அம்மா, அன்பு அம்மா
ஒரே ஒரு இரவுக்கு குர்திஸ்தான் கல்லறைகளை
என்னிடமிருந்து பிரித்து வை"

ஆழ்ந்த நிதானத்துடன் அம்மா வினவினாள்:
"நிஜமா நீ உறங்க முடியுமா?
என்மகனே–"
எனது இதயத்தை அன்பாகத் தடவினாள்
குர்திஸ்தானுக்கு
திரும்பவும் அதை எடுத்துச் சென்றாள்.

ஸகின் ஸோரக்லி , குர்திஸ் கவிஞர்

2. பிறரைவிட உன் பாதைதான் உயர்ந்தது
என நினையாதே
நீதி வழங்க முனையாதே
திறந்த நிர்மலமான விழிகளோடு
எல்லாவற்றையும் பார்



படிப்பகம்

www.padippakam.com



கண்டனம் செய்யாதே
உன்னால் முடியுமானால் பாராட்டு
முடியவில்லையானால் மௌனமாயிரு

காலம் உனக்கு இப்போது ஒரு அன்பளிப்பு
சுதந்திரத்தின் கொடை
என்றென்றும் குழப்பமான கடந்த காலத்தைப்பற்றி
நினைவுகூர சிந்திக்க
புரிந்து கொள்ள
காலத்தை மாற்றும் பொருட்டு
உன்னைப் புதிதாய் மறுபடைப்புச் செய்துகொள்ள

நீ உயிரோடிருக்கும்போது வாழ்ந்து விடு

*பென் ஒக்ரி , நைஜீரியக் கவி.*

புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் ஒரே வேளையில் நொடிக்கு நொடி தமது தாய் நாட்டுக்குப் போய் வருகிறார்கள். புலம்பெயர்ந்த நாட்டிலும் வாழ்கிறார்கள். ஒரு புதிய உலகத்தை உருவாக்கும் பொருட்டு சுய முரண்களை திரும்பத் திரும்ப உடைத்துக் கொள்கிறார்கள். தமக்கு வெளியிலுள்ள சகல அதிகாரங்களையும் உடைக்கிறார்கள். காலனித்துவ நாட்டிலும், காலனியாதிக்க நாட்டிலுமுள்ள அதிகாரங்களை தொடர்ந்து உடைக்க முயற்சிசெய்து கொண்டேயிருக்கிறார்கள்.

கலப்பினக் குழந்தையாகப்பிறந்த ஹனிப் குரேஸி (வெள்ளை முஸ்லீம் பெற்றோர்) தனது Budhdha of Subarhia நாவலில், சினிமாவில் புத்த மதம் பற்றிப் போதித்துவிட்டு அங்கேவரும் பெண்களுடன் உறவு கொள்ளும் தனது தகப்பனை மகன் ஏளனமாகப் பார்க்கிறான். பொய்யான ஒழுக்கங்களை உள்ளொன்று வைத்து புறமொன்றாகச் செயல்படும் போலி அறங்களைக் கேள்வி கேட்கிறார். நிறவாதத்தைத் தோலுரிக்கிறார். My sister wife படத்தில் முஸ்லீம்களின் பலதார மணம் ஏற்படுத்தும் மனித சேதாரத்தை கேள்வி கேட்கும் மீரா ஸயால் Bajji on the Beach நாவலில், சினிமாவில் பெண்களின் மீதான பாலியல், நிறவெறி ஒடுக்குமுறையைக் கேள்வி கேட்கிறார்.

பார்த்திபனின் கதைகளில் புராணீகங்களும் தொல்மரபுகளும் இசையும் நளினங்களும் இடம் பெறுவதில்லை. சந்தோசத்தில் வீசுகிற சொற்கள் பார்த்திபனுக்கு அன்னியமானது. மலம் போன்ற சொற்கள் மனதின் வெக்கையை வெளிப்படுத்த தலித் கலைவெளிப்பாடுகளில் எடுத்துக்கொள்கிற இடத்தை இங்கு பார்த்திபனின் கெட்ட வார்த்தைகளும் துக்கம் பீரிடும் உணர்ச்சிகளும் எள்ளலும் கோபமும் எடுத்துக்கொள்கின்றன.

தனது லௌகீக ஆன்மீக முரண்பாடுகளைக் கடந்துபோகும் சுயவிசாரணையாக The satanic verses நாவலைக் குறிப்பிடும் ஸல்மான் ருஸ்டி, மார்கரட் தாட்சரை Mrs. Torture (திருமதி சித்திரைவதை) என்றே குறிப்பிடுகிறார். காந்திபட விமர்சனத்தில் காந்தியின் சமரச அரசியலையும், பெண்கள் தொடர்பான அவரது நடைமுறைகளையும் கடுமையாக விமர்சிக்கிறார். புலம்பெயர்ந்த எழுத்தாளனின் படைப்புலகமும் விசாரணையும் செயல்படும் கருத்துலகம் இதுதான்.

நைஜீரிய எழுத்தாளரான பென் ஒக்ரி, குர்திஸ் எழுத்தாளரான ஸோரக்லி போன்றோர் பகிர்ந்து கொள்ளும் கருத்துலகமும் இதுதான். பார்த்திபனின் பதினான்கு கதைகளும் செயல்படும் கருத்துலகமும் இதுதான்.

பார்த்திபனின் கதைகள் யதார்த்தவாதக் கதைகள் தான். பார்த்திபன் தொழில் முறையிலான எழுத்தாளன் இல்லை. உலக இலக்கியங்களையெல்லாம் அகண்ட பரப்பில் தேடிப்படித்தவர் இல்லை; பேராசிரியரோ பிறமொழிகளில் படிப்போ கொண்டவர் இல்லை. மேஜிக் ரியாலிஸம் அவர் படைப்புக்களில் இல்லை. மொழி பற்றி அவர் ஆழ்ந்த பயிற்சிகள் ஏதும் மேற்கொள்ளவில்லை. ஆனால் புலம்பெயர்ந்த இலக்கியத்தின் குறிப்பிடத்தக்க படைப்புக்களில் வெளியாகும் இரு உலகங்களுக்கிடையிலான பதட்டமும், விடுதலைக்கான தேட்டமும்அவருடைய படைப்புக்களில் இடம் பெறுகிறது.

பார்த்திபன் கையாளும் மொழி மிகமிகச் சாதாரணமான மொழி. தொழில் நேர்த்தியாளர்களால் செம்மைப்படுத்தத் தக்கதான மொழி. 1986இல் எழுதத்துவங்கிய பார்த்திபனின் கதைகளில் மொழி பண்பட்டுக் கொண்டே வந்திருப்பதை காலநோக்கில் அவர் கதைகளைப் படிப்பவர்கள் உணரமுடியும்.

பார்த்திபன் கதைகளின் சிறப்பு அவரது ஆழ்ந்த அனுபவங்கள் மிகச் சாதாரணமான மொழியில் ஆழ்ந்த அதிர்வுகளை தொடர்ந்து எழுப்புபவையாக இருப்பதுதான்.

பாலியல்பு அதிர்ச்சி, கலாசாரப் பதட்டம், அடையாளம் என்ன என்பது குறித்த கலவரம், மனிதர்களின் பாலான தீராத நேசம் போன்றவற்றை பார்த்திபனின் கதைகள் வெளியிடுகின்றன.

பார்த்திபன் வெளியிடும் அனுபவங்கள் இருவேறு உலகங்களின் நெருக்கடிகளை ஸ்வீகரித்தது. சமகால மனிதனின் அவலங்களை அசிங்கங்களை வன்முறைகளை போதைமருந்து மயக்கங்களை ஆட்டோ நாம்களின் கவுச்சை மணத்தை உள்வாங்கிய சாதாரண மனிதனின் மொழி பார்த்திபனின் மொழி. இந்த எளிமையான மொழியின் வீச்சமும் நாற்றமும் கெட்ட வார்த்தைகளும் குழந்தையின் தொப்புள் கொடி இரத்தத்தின் வாசம் போல பிரகாசிப்பது மனத்தைக் இரங்கடித்து விடுகிற மயக்கம் கொண்டது. இதுவே பார்த்திபன் கதைகளில் வெளிப்படும் மொழியின் சிறப்பு.

*அப்பா ஆணைக்கோட்டை. அம்மா குரும்பசிட்டி. க.பொ.த.உ.த வில் எல்லாப் பாடங்களும் பெயிலாகிக் கடைசி வாங்கில் யாம் பெற்ற இன்பம் வசாவிளான் ம.ம.வித்தியாலயத்தில். 84 பிற்பகுதியில் ஜேர்மனியில் குப்பை கொட்டல். ஆரம்பத்தில் சுடலையில் கிடங்கு வெட்டல். பிறகு பேக்கரியில் பாண் சுட்டது. இப்பொழுது ஜேர்மனியின் லொறியிலிருந்து சாமான்கள் ஏற்றிப் பறிப்பது. தனியன். நாளை பற்றி சுமாரான கனவுகள்! கையடையாளம் உட்பட மேலதிக விபரங்களை ஜேர்மன் பொலிசிடம் பெற்றுக் கொள்ளலாம்.*

என்று தன்னைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்களாகக் குறிப்பிடும் சொற்களில் இருக்கும் எள்ளல் தொனி நமக்குக் கண்ணீரை வரவழைக்கும் உயிர்ப்புத்தன்மை கொண்ட மொழியாக, சிருஷ்டி பூர்வமான மொழியாக ஆகிவிடுகிறது. தனிமனிதனின் சோகமும் விசாரமும் இங்கு வரலாற்றின் சோகமாக ஆகிவிடுகிறது.


பார்த்திபன் அனுபவிக்கிற வாழ்வும் அவரது உலகின் மீதான நேசமும் மாபெரும் படைப்புக்களைத் தருவதற்கான உக்ரத்தைக் கொண்டது. இந்த பதினான்கு



படிப்பகம்

www.padippakam.com





ஆரியல் டோப்மேன்:
Widows நாடகம்

கதைகளும் அவை சொல்லிச் சென்றிருக்கிற வாழ்வுக்காக உலகில் இன்றிருக்கும் பல்வேறு மொழி புலம்பெயர் எழுத்தாளர்களின் பொதுவுலகத்தைப் பகிர்ந்து கொள்கிற தன்மை வாய்ந்தது.

திறக்கப்படாத கதவுகளும் சொல்லப்படாத வாழ்வின் பக்கங்களும் இன்னும் இருந்து கொண்டேதான் இருக்கும். பார்த்திபனின் படைப்புலகு அதனை நோக்கி தன்னை விரித்துக் கொள்ளும் என்பதற்கான ஆதாரங்கள் இந்த பதினான்கு கதைகளில் இருக்கிறது.

புலம்பெயர் தமிழ் இலக்கியம் உலகின் புலம்பெயர் இலக்கியத்தின் ஒரு பகுதிதான். அவ்வகையில் பார்த்திபன் காட்டும் தமிழ் மனிதனின் உலகம். சர்வதேச புலம்பெயர் இலக்கியத்தின் படைப்புலகுக்குள் நிச்சயமாகவே நுழைந்து விட்டது.

பிற்சேர்க்கை: 1.1

விமர்சனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சிறுகதைகள்:
1. கல்லான கணவன், தூண்டில், 1988, ஜேர்மனி
2. மனைவி இறக்குமதி, தேனி, ஜேர்மனி
3. விபத்தை மறந்துவிடு, தூண்டில், 1988, ஜேர்மனி
4. ஒருகாதல் நிராகரிக்கப்படுகிறது, தூண்டில், ஜேர்மனி
5. தெரியவராதது, 1990, தூண்டில், ஜேர்மனி
மறுபிரசுரம் நிறப்பிரிகை, தமிழ்நாடு, இந்தியா
6. அம்மாவும் அரசியலும், சிந்தனை, ஜேர்மனி
7. அத்திவாரமில்லாத கட்டிடங்கள், தூண்டில், ஜேர்மனி
8. ஒரு தொழிலாளியும் ஒரு தொழிலாளியும், தூண்டில், ஜேர்மனி
9. அம்பது டொலர்ப் பெண்ணே, சக்தி, நார்வே, 1991
மறுபிரசுரம் புதிய கலாச்சாரம், தமிழ்நாடு, இந்தியா
10. வந்தவள் வராமல் வந்தால், சரிநிகர், கொழும்பு, இலங்கை
11. மேற்கின் ஒரு பக்கம், கிழக்கு, டிசம்பர் 1994, தமிழ்நாடு, இந்தியா
12. தூள், 1995, ஜேர்மனி
13. பனிபெய்யும் காலம், 1995, நிறப்பிரிகை, தமிழ்நாடு, இந்தியா
14. உழவுக்கும் தொழிலுக்கும் வ.செ., 1997, தமிழர் நலன் சங்கத் தொகுப்பு, இலண்டன், பிரித்தானியா

பிறபடைப்புக்கள்
பிற்சேர்க்கை: 1.2

1. நிஜங்கள்
2. குற்றமில்லாத கொலைகள்
3. ஒரே ஒரு ஒரிலே
4. உயரம் பறக்கும் பறவைகள்
இச்சிறுகதைகள் நான்கும் 'நிஜங்கள்' எனும் பெயரில் தென்னாசிய நிறுவனத்தால் (ஜேர்மனி) வெளியிட்டது, 1986
5. அம்மா பாவம்
6. பசி , தூண்டில், ஜேர்மனி
7. ராதா பெரிதான பின், நமது குரல், ஜேர்மனி
8. ஒரு நாள், தூண்டில், ஜேர்மனி
9. ஒரு பிரஜை ஒரு நாடு, பிரசுரமாகாத கதை அல்லது பிரசுரத்துக்கு அனுப்பப்படாத கதை

நாவல்கள்:
1. ஜனனம்
2. வித்தியாசப்படும் வித்தியாசங்கள்
3. பாதி உறவு
4. ஆண்கள் விற்பனைக்கு
இந்த நான்கு குறுநாவல்களையும் ஜேர்மனி தென்னாசிய நிறுவனம் வெளியிட்டது.
5. கனவை மிதித்தவன் (நிறைவு பெறாத நாவலின் முதல் பாகம்) தூண்டிலில் 58 அத்தியாயங்கள் வெளியாகி பத்திரிக்கை நின்று போனதால் முற்றுப்பெறாமல் இருக்கும் நாவல். பின் எப்போதேனும் இதை முடிக்க நினைத்திருப்பதாக பார்த்திபன் குறிப்பிடுகிறார்.

பிற்சேர்க்கை: 1.3
தமிழல்லாத புலம்பெயர் எழுத்தாளர்கள் பற்றிய குறிப்புக்கள்:

1. ஸல்மான் ருஸ்டி : இந்தியாவில் பிறந்து பிரித்தானியாவில் வாழ்கிறவர்.
குறிப்பிட்ட நூல்கள் : Santanic Verses, Midnight chil-



படிப்பகம்

www.padippakam.com



dren, shame நாவல்கள்
Imaginary Homeland: விமர்சனக் கட்டுரைகள்
Jagur Journey: நிகரகுவா பயணநூல்

2. V. S. நைபால் : டிரினிடாட்டில் பிறந்தவர். பிரிட்டனில் வாழ்கிறவர்.
முதல் நாவல் : Mystic masseur (1957)
A Bend in the River ஆபிரிக்க சர்வாதிகார கட்சியின் கீழான பிரச்சினைகளை விவரிக்கும் நாவல்.
Amons the Believes : An Islamic Journey (1981)

3. பென் ஓக்ரி : இங்கிலாந்தில் வாழும் நைஜீரிய எழுத்தாளர். முக்கியமான நாவல் : The Famished Road புக்கர் விருது பெற்றது. இவரது சிலகவிதைகள் என்னால் மொழியாக்கம் செய்யப்பட்ட பிரான்ஸ் மௌனம் இதழில் வெளியானது.(மௌனம். 4. 1994)

4. ஆரியல் டோப்மேன் : சிலி நாடகாசிரியர், கவிஞர். பிரபலமான நாடகங்கள்: Death and the maiden, Widows இவரது 'காணாமல் போனோர் பற்றிய 8 கவிதைகள்' எனது மொழி பெயர்ப்பில் நோர்வே சுவடுகள் பத்திரிகையில் வெளியானது. அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் சிலகாலம் கழித்த இவர் தற்போது ஹாலந்தில் வாழ்கிறார்.

5. ஜுன் ஜோர்டன் : ஆப்ரோ அமெரிக்க கவி. நூல்கள் : 1. Huruko love poetry 2. Lyrical compaigns. இவரது கவிதைகள் சில என் மொழிபெயர்ப்பில் 'ஆபிரிக்கப் பெண் கவிகள்' தொகுப்பில் இடம் பெறுகிறது. (1997) அமெரிக்காவில் வாழ்கிறார்.

6. இல்மஸ் குணே : துருக்கி நாட்டைச் சேர்ந்த சினிமா இயக்குனர். பாரிஸில் அகதியாக கான்ஸர் நோயினால் மரணமானார். இவரது திரைப் படங்கள் குறித்த எனது கட்டுரை இலண்டனிலிருந்து வெளியான தாகம் பத்திரிகையில் வெளியானது.
முக்கியமான படம் : Wall, yol. எனது வரவிருக்கும் 'அரசியல் சினிமா' தொகுப்பிலும் இடம் பெறுகிறது.

7. மிலான் குந்த்ரா: செக்கோஸ்லாவாக்கிய நாட்டினர் நாவலாசிரியர். இவரது படைப்புக்கள் பல திரைப்படமாகி இருக்கின்றன. முக்கியமான படம் JOKE பிரான்ஸில் அகதியாக வாழ்கிறார். பிறநூல்கள் : 1. The party 2. The unbearable lightness of being

8. ஜோசப் பிராட்ஸ்கி : ரஷ்யாவைச் சேர்ந்தவர் நோபல் பரிசாளர். அமெரிக்காவில் மரணமுற்றார். ஸ்டாலினிசத்தின் கொடுமைக்குட்பட்ட படைப்பாளர்.

9. சுஜாதாபட் : குஜராத்தில் பிறந்து பிரிட்டனில் வாழ்கிறவர். இவரது கவிதைகள் சில ஆசியப் பெண் கவிகளின் தொகுப்பான 'எனக்குள் பெய்யும் மழை' தொகுப்பில் இடம் பெறுகிறது.
முக்கிய நூல் : 1. Monkey Shadows 2. Stinking Roses.

10. வோலே ஸோயிங்கா : நோபல் பரிசாளர். நைஜீரியர் அகதியாகி தற்போது மேற்கில் வாழ்கிறார். கவிஞர் நாடகாசிரியர் விமர்சகர். நாவல் : The Interpreters (1990) The Men-died (prison notes)


11. தஸ்லிமா நஸ்ரீன் : பங்காளதேஷில் பிறந்தவர். கவிஞர் நாவலாசிரியர். தற்போது மேற்கில் வாழ்கிறார். நாவல் : லஜ்ஜா. இவர் 'பூச்சியின் கதை' கவிதை எனது மொழிபெயர்ப்பில் இலண்டன் நாழிகையில் வெளியானது (டிசம்பர் 94) நாவல் சுருக்கம் பிரான்ஸ் ஈழமுரசில் வெளியாகியது. (14 Feb 1996)

12. சியாம் செல்வதுரை : இலங்கையில் பிறந்து அகதியாக கனடாவில் தப்பி வாழ்கிறார். நாவல் : Funny Boy. இது தொடர்பான எனது அறிமுகம் நோர்வே சுவடுகளில் எழுதப்பட்டிருக்கிறது. (1996)

13. ஏ. சிவானந்தன் : இலங்கையில் பிறந்தவர் 50களில் பிரிட்டன் வந்தவர். நாவல்: When memory dies. ஆசிரியர் : Race and Class. ஆசிரியர் : Communities in resistance (Verso, London)

14. ஜீன் அரசநாயகம் : இலங்கையில் பிறந்த தமிழ்ப் பெண் கவிஞர். இவரது கவிதைத் தொகுப்பொன்றை Unesco/Rerest பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது.

15. செர்கே பேகஸ் : குர்திஸ் கவி. ஸ்வீடனில் வாழ்கிறார். இவரது கவிதைகள் சில எனது மொழிபெயர்ப்பில் மீட்சி பத்திரிகையில் வெளியாகி உள்ளது. (டிசம்பர் 1996) ❑



ஓவியம்: மகா



படிப்பகம்

www.padippakam.com


# DAK Travels

369 High Street North, Manor Park,
London E12 6PG

*Book With Us And Enjoy* A TENSION-FREE HOLIDAY

*At Competitive Prices on All Airlines Throughout the World*

❏ Ticket on Departure (TOD) ❏ Pre-Paid Travel Advice (PTA) ❏ Low Cost Travel Insurance

Open 7 days a week from 0900 till 1900 hours

**We Promise to Meet All Your Travel Needs!**

Credit Card payments accepted with minimum charges

*For More Information Call Us Now On*

**0181-471 7800/0181-471 7242**

**0956 111 370 Or Fax Us on 0181-471 7800**

# EURO-INDO Property Mart

**369 High Street North, Manor Park, London E12 6PG**

The Dream Holiday Resort
Site Costs only £3,000
Attractive Discounts for
Full or Two Half Payments
Payment in
Monthly Instalments accepted.

Buy Your Own LAND In Madras
For Your Bright Future!!

★13.75 cents i.e. 6,000 sq. ft. (60' x 100')
★Access Roads
★Developed with 11 coconut trees and 6 different fruit trees
★ Space for Construction of Your House
★ Protected Water ★ Electricity
★Compfortable Conveyance to and from Madras
24 Hours Security with Watch and Ward Staff


படிப்பகம்

www.padippakam.com



# வாழ்தலும் இருத்தலும்

மு. பொன்னம்பலம்



நான் என் வாழ்க்கையைக் கண்டவன்
ஆனால், என் இருப்பைக் காணாதவன்.
நான் இப்போ இங்கே, வாழ்தலை
என் இருப்பாகக் கொள்கிறேன்.
ஆனால் அதில் நான் எங்கேனும் இருந்தேனாவென்றால்
இல்லவே இல்லை!
அதில் என் இருப்பை நான் கண்டதே இல்லை!

ஐம்பதுக்கு மேலாகியும் நான் வாழ்வதாய் நினைக்கிறேன்
அப்படியே மற்றவரும் மதிக்கிறார்.
சுருக்கேறிய முகம், பல்லிழந்த வாய்
தளர்ந்துபோன உடல் - ஐம்பதுக்கும் மேலான என்
வாழ்தலின் அத்தாட்சி.
ஆனால் என் வாழ்க்கை எங்கே இருக்குது?
இந்த அரை நூற்றாண்டு வாழ்க்கையில் நான்
எங்கே இருக்கிறேன்?

சிறுவனான எனக்கு ஞாபகம் முளைத்தபோது அங்கே
இருந்தேனா?
கொடிய ஆஸ்துமாவில் மூச்சுத் திணறியபோது?
என் நண்பர்கள் பலர் தந்த வாக்குறுதிகளை நம்பியபோது?
கலவியல் களியின்போது?
என் உன்னதக் கலைச் சிருஷ்டியின்போது?
என் ஆருயிர் அண்ணன் இறந்தபோது?
அல்லது மின்கம்பத்தில் கட்டப்பட்ட ஒருவனின் தலை
இரத்தம் வழியத் தொங்கியதைக் கண்டபோது?
அஞ்சி வந்தவர்களுக்கு அபயம் அளித்தபோது?
அல்லது அகதிகளோடு அகதியாய் நானும் ரோட்டில்
அலைந்தபோது?
அல்லது இப்போது நான் வாழ்வதற்காய்
இன்சுலின் ஊசி செலுத்தியபின் இதை எழுதிக்கொண்டிருக்கும்
இக்கணத்தில்?

இல்லை. இல்லை. இல்லவே இல்லை!
எல்லாம் கிளி கோதிய பழங்களாய், எலிகொறித்த
நெற் பதர்களாய்
காலம் கோதிக் கோதி பறக்கவிடும் நினைவுப் பதர்கள்
நான் அவற்றில் இல்லை!
என் இருப்பு எதிலும் இல்லாமல் காலம் கொறித்துப் பறக்கவிடும்
இலவம் பஞ்சு!
என் இருப்பெங்கே?
என் வாழ்தல் ஒவ்வொன்றையும் விளாம்பழக் கோதுகளாய்
உள்ளுறுஞ்சி உருட்டி, விளையாடி,
முளைகொள்ளும் இருப்புணர்வை
கிள்ளிப் பறக்கவிடும் காலத்தை
ஒரு நாள்
மிகுந்து முயன்று
என் தியான மின் பொறியில் சிக்கவைத்தேன்!
மறுகணம் அது மின் கிளர்த்தி,
இடம் பொருள் என விரிந்த இறக்கை அடித்துத் துடித்து சிலிர்த்து
அடங்கி ஒடுங்கிற்று!
எல்லாம் விழுங்கி எழுந்த சூனியத்தில்
என் இருப்பின் இன்விழிப்பு
அது சகஜமாகையில்
அது வெளித்தள்ளி விளையாடும் நீர்க்குமிழாய்
மேலே காலம் கோதும் வாழ்க்கை மிதந்தது.... □




படிப்பகம்

www.padippakam.com



மனிதரிடையிலான இயல்பான நேய உணர்வுகளிற் காதல் முக்கியமானது. அதிலே தெய்வீகமானது என்று ஒன்றும் இருப்பதாக நான் எண்ணவில்லை. புனிதம், தூய்மை, அமரத்துவம் என்றெல்லாம் கதைகட்டும் அளவுக்குக் காதல் அமானுஷ்யமான ஒரு விஷயமும் இல்லை. அது உடல் சார்ந்தது, உள்ளமும் சார்ந்தது. புறக்கணிக்க இயலாதவாறு அது நம் மத்தியில் உள்ளது. எனவே காமமும் கலவியும் குற்ற உணர்வுடன் அணுகப்பட்டு வந்த காலங்களிற் கூடக் காதல் பற்றிய கவிதைகளும் கதைகளும் வழக்கில் இருந்தே வந்தன. சில சமூகச் சூழ்நிலைகள் மனிதரிடையிலான இந்த நேயத்தை வெளி வெளியாகப் பேசுவதற்குத் தடையாக அமைந்தபோது, படைப்பிலக்கியம் வேறு பாதைகளைத் தேடிக் கண்டுள்ளது. கடவுளர் மீதான காதலாகக் காதல் உணர்வு சித்தரிக்கப்பட நேர்ந்ததும் இதற்குள் அடங்கும். இதைப் புரிந்து கொண்டால் நமது மரபில் ஆண் - பெண் உறவு பற்றிய கருத்துக்கள் எவ்வாறானவை என்பதை 'ஆன்மிக' இலக்கியங்களிலிருந்தும் அறியலாம்.




எப்பொழுதும், நாயகியே நாயகனை நினைந்து நினைந்து உருகுவதும், நாயகனிடம் பணிந்து போவதும், திரும்பத் திரும்பக் கேட்டும் பார்த்தும் சலித்துப் போகும் விஷயங்கள். நாயகன் தெய்வமாக இருந்தால், நாயகி தெய்வமாகவோ சாதாரண மனுஷியாகவோ இருக்கலாம். நாயகி தெய்வமானால், நாயகன் சாமான்யனாக இருப்பது இயலாது. இவையெல்லாம் ஆணாதிக்கத்தின் பலவேறு வெளிப்பாடுகளில் ஒரு சில. இந்த உண்மைகட்கு நாம் முகங்கொடுக்க ஆயத்தமாக இல்லை என்பதாலோ என்னவோ, நாயகன் என்றால் பரமாத்மா, நாயகி என்றால் ஜீவாத்மா என்கிற மாதிரியான வரட்டு வியாக்கியானங்கள் மூலம் நமது ஆணாதிக்கப் பார்வை நியாயமாக்கப் படுகிறது. ஏன் நாயகி பரமாத்மாவாகவும், நாயகன் அவரை நினைந்துருகும் ஜீவாத்மாவாகவும் இருக்கக்கூடாது என்ற கேள்வி இலகுவாகப் புறக் கணிக்கப்படுகிறது.

நமது காவிய மரபு, முக்கியமாக இந்து மதப் பிரிவுகள் சார்ந்தது. ஆணாதிக்க நோக்கில், மனிதரிடையிலான காதலைத் தெய்வங்கள் வாயிலாகவும் பக்தி என்ற பேரிலும் சித்தரித்து உள்ளன. இவற்றைச் சரிவர விளங்கிக்கொள்வதற்கான தேவை நம் முன் உள்ளது. நமது மரபைச் சரிவர அறிவது அதை ஏற்பதோ எதிர்ப்பதோ என்றவாறான நோக்கங்கட்கும் அப்பாலானது. மரபை ஏற்போராயினும் மறுப்போராயினும் முதலில் அதை அறிய வேண்டும். நமது சமய இலக்கிய மரபிற் காதல் பற்றிய பார்வையை நெடுகலும் ஜீவாத்மா - பர மாத்மா கதைகளால் மழுப்ப முடியாது.

இந்த விதமான மழுப்பலுக்கு எதிரான குரல்கள் பகுத்தறிவுவாத, நாத்திகக் கண்ணோட்டத்துடன் எழுந்துள்ளன. ஆயினும் அவை பெரும்பாலும் மரபைப் புரிந்துகொள்ளும் அக்கறையுடன் அமைந்தவையா என்பது ஐயத்துக்குரியது. இந்துக் கடவுட் கொள்கையுடன் முரண்படாமலே இந்த ஜீவாத்மா - பரமாத்மா குளறுபடிகட்குச் சவாலாக அமைந்த நல்ல கவிதைகளை பாரதியின் காதற் கவிதைகளிடையே காணலாம்.

கண்ணன், பாரதிக்குக் கடவுள் மட்டுமல்ல. தோழன், சேவகன், காதலன் போன்ற பல தளங்களிலும் உறவு கொண்ட ஒரு பாத்திரமாக அமைவது, பக்தி இலக்கிய மரபு சார்ந்தது. ஆயினும், பாரதியின் காதற் கவிதைகள் சில, பெண் தெய்வங்கள் மீதான காதல் உணர்வின் வெளிப்பாடுகளாக அமைவது, பாரதியைப் பிறரிடமிருந்தும் மிகவும் வேறுபடுத்துகிறது.

வள்ளி மீதான அவரது (வள்ளிப் பாட்டு) கவிதையை ஆபாசம் என்று கூடச் சிலர் விமர்சிக்குமளவுக்கு அதிற் காம ரசம் இருக்கிறது. "பிள்ளைப் பிராயத்திலே அவள் பெண்மையைக் கண்டு மயங்கிவிட்டதாக" கூறுவது, சரஸ்வதி மீதான காதல்தான். ஒரு பெண், ஒரு ஆண் தெய்வத்தைக் காதலிப்பதாகக் கூறுவதை நம்மால் ஏற்க முடியும். ஆண்டாள், மீரா போன்ற அனைவருக்கும் நமது அங்கீகாரம் உண்டு. ஒரு பெண் தெய்வத்தை ஒரு ஆண் பக்தன் அதே விதமாக நேசிப்பதாகக் கூறுவது நமக்கு இன்னமும் ஏற்புடையதல்ல. கற்பு, பெண்மை போன்ற நமது கோட்பாடுகள் மலைகள் போல நம்மை மறிக்கின்றன. இந்த வகையில் பெண் தெய்வங்கள் தொடர்பான பாரதியின் காதற் கவிதைகள் விடுதலைக்குரிய அனுபவங்கள் என்றே நினைக்கின்றேன். பாரதி காட்டிய இந்தத் திசையில் நமது படைப்பிலக்கியம் அதிக தூரம் போகவில்லை. இது பற்றி நாம் மேலும் ஆழமாகச் சிந்திப்பதும் உரக்கப் பேசுவதும் நல்லது. ❑



படிப்பகம்

www.padippakam.com



# பெண்கள் எனப்படும் உடல்கள்: பால் இனம் நாடு பற்றிய சில சிந்தனைகள்

ஸி. எஸ். லக்ஷ்மி

என்.எஸ்.கிருஷ்ணன், டி.ஏ. மதுரம் என்ற மிகவும் பிரபலமான இரு தமிழ்க் கலைஞர்கள் மொஸ்கோவுக்கு 1951இல் கலாசாரத் தூதுவர்களாகச் சென்றார்கள். அவர்கள் அங்கு அளித்த நிகழ்ச்சியில் ஒரு தமிழ்ப் படப் பாட்டும் இருந்தது(1). ஒரு நல்ல பெண்மணியின் லட்சணங்களைச் சொல்லும் அந்தப் பாட்டு, "நல்ல பெண்மணி, மிக நல்ல பெண்மணி; தாய் நாட்டு நாகரீகம் பேணி நடப்பவள் எவளோ அவளே - (நல்ல பெண்மணி)" என்று துவங்கும்.

ஒரு நல்ல பெண்மணி விடிகாலையில் கோழி கூவும் வேளையில் எழுந்து குளித்து சேலை துவைப்பவள்; பள்ளி செல்பவள்; நல்ல பழக்க வழக்கம் உடையவள்; அம்மாவுக்குச் சமையலில் உதவுபவள்; அப்பா சொல் கேட்பவள்; அச்சம், மடம், நாணம், மானம் உடையவள் என்று விவரிக்கிறது இப்பாடல். அவள், கணவன் வீட்டில் எப்படி இருக்க வேண்டும்; எப்படிப் பழக வேண்டும் என்று மேலும் பல வரம்புகளைச் சித்தரித்தவாறு முடிகிறது பாடல்.

> இந்த "நல்ல பெண்மணி" நாட்டுப் பண்பாட்டைப் பேண எந்த அரசியல் முயற்சிக ளையும்செய்ய வேண்டியதில்லை, "சரியான" பெண்ணாக இருந்தால் போதும் என்று சுட்டிக் காட்டுகிறது.

குறைந்தது ஒரு பத்து வருடங்களுக்கு இந்தப் பாடல் மிகவும் பிரபலமாக இருந்தது. என் பள்ளி நாட்களில் இப்பாடலுக்கு அபிநயம் செய்த சிறுமிகள் பலர். சாத்வீகமான ஒரு பாவத்தை 'நல்ல பெண்மணி' என்ற பதத்துக்கு காட்டி அபிநயம் செய்தது இன்னமும் நினைவிருக்கிறது.

இந்தப் பாடலில் பல கருத்துக்கள் அடங்கியுள்ளன. சுதந்திரம் கிடைத்த நான்கு ஆண்டுகளுக்குப் பின் வரும் இப்பாடல் பல விஷயங்களை ஒரு நோக்கிற்கு உட்படுத்துகிறது. இப்பாடல் வரிசைப் படுத்தப்பட்ட விதமும் பெண்களின் வாழ்க்கையை மாறுபட்ட நியதியில் அமைக்கும் முயற்சியாகப் படுகிறது. கல்வி, மற்றும் நாட்டின் கலாசாரத்தைப் பேணுவதை முதன்மைப்படுத்துகிறது பாடல். அதன் பிறகு பெண்ணுக்குரியவை என்று கருதப்படும் திறமைகள் சொல்லப்படுகின்றன. கல்வியைப் பற்றிக் கூறிவிட்டு உடனே, இத்திறமைகளை விவரிப்பது கவனிக்க வேண்டியது. படித்த பெண், பெண்மைக் குண நலன்களை இழக்கிறாள்; அவள் குனிந்து நிமிர்ந்து வீட்டு வேலை செய்ய மாட்டாள் என்ற பொதுவான பயம் ஒன்று இருந்தது. அதனால்தான் 'இடுப்பு வளைத்து' வேலை செய்யச் சொல்கிறது பாடல். கடைசி இரண்டு பாராக்கள் அவள் கடமைகளை விவரிக்கும் விதம், இந்த "நல்ல பெண்மணி" நாட்டுப் பண்பாட்டைப் பேண எந்த அரசியல் முயற்சிகளையும் செய்ய வேண்டியதில்லை, "சரியான" பெண்ணாக இருந்தால் போதும் என்று சுட்டிக் காட்டுகிறது. புகுந்த வீட்டில் அவள் எப்படிப் பழக வேண்டும் போன்ற அறிவுரைகள் - புகுந்த இடத்தில் பிறந்த இடத்தைப் புகழக் கூடாது; கொண்ட புருஷனோடு வம்புச் சண்டை போடக் கூடாது போன்றவை - தெளிவாகக் காட்டும் கருத்து ஒன்றுதான்.



படிப்பகம்

www.padippakam.com



அதாவது நாட்டின் பண்பாட்டைப் பேண ஒரு பெண் செய்ய வேண்டியதெல்லாம், பெண்ணுக்கே உரிய கடமை என்று கருதப்படும் வீட்டைப் பேணல்தான்.

இந்தப் பாடல் அந்தக் காலகட்டத்தைப் பிரதிபலிக்கிறது என்பது கண்கூடு. ஆனால் அது மட்டுமல்ல, காலம் காலமாகப் பெண்களைப் பற்றி நிலவி வரும் கருத்துக்களைத் தாங்கிவரும் ஒன்றாகவும் இந்தப் பாடல் அமைந்திருக்கிறது. காலப்போக்கில் பெண்ணோடு இணைக்கப்படும் சில பண்புகள் மாறுவதையும் பாடல் காட்டுகிறது. பெண் கல்வியைக் குறிப்பிட்டிருப்பது பெண் கல்விக்காகப் பலர் நடத்திய போராட்டங்களின் நினைவுகளை எழுப்புகிறது. மேலும், தாய்நாட்டின் நாகரீகம் அல்லது பண்பாடு என்ற கருத்தாக்கம், தனிப்பட்ட முறையில் நோக்கிப் புரிந்து கொள்ள வேண்டிய கருத்தாக்கமாக பெண்களின் வாழ்க்கையில் இணைந்து கொண்டது இந்தப் பாடலுக்கு முன் உள்ள சில தசாப்தங்களில்தான். பண்பாட்டைப் பேணல் என்பது பெண்ணின் பொறுப்பாகவே இருந்து வந்திருக்கிறது. இருந்தாலும், இந்தப் பாடல் குறிப்பிடுவது அதை அல்ல. இந்தப் பாடலில் அது தேசத்துடன் இணைக்கப்பட்டு "நல்ல பெண்மணி" யின் குணநலன்களில் ஒன்றாக மாறிவிடுகிறது. தாய்நாட்டு நாகரீகத்தை பேணுவது பெண்ணின் குணநலன்களில் ஒன்றாக இதற்கு முன் அறியப்படவில்லை. ஒரு செயல் இங்கு இயல்பாக்கப்படுகிறது. நாட்டின் சுதந்திரம் என்ற சரித்திர நிகழ்வை ஒட்டி வரும் பண்பாட்டு அச்சங்களுக்கான தீர்வுகள் இங்கு பெண்ணின் உடல் மேல் ஏற்றப்பட்டு, உடலை ஒட்டி வரும் இயல்புகள் எனப் பார்க்கப் படுகின்றன.

நிலையானவை என்று குறிப்பிடக்கூடிய சிலவற்றை ஒட்டியே அமைந்திருக்கிறது பாடல். நிலையானவை என்று கருதப்படும் இவை, வயது வித்தியாசம் இல்லாமல் எல்லா வயதுப் பெண்களுக்கும் பொதுவானவை. அதனால்தான் சிறுமிப் பருவம் முதல் பெண்மணி என்று குறிக்கக் கூடிய வயது வரை இந்தப் பாடல் ஒரே வீச்சில் தொட்டுவிடுகிறது. காலம், சரித்திரம் இரண்டும் தொடாத,

> **தேசியப் போராட்டமானாலும், இனப் பண்பாட்டு அடையாளப் போராட்டமானாலும், எப்படி ஒரு பெண் உயிரை உருவாக்குகிறாள், எப்படி உடை உடுக்கிறாள், எப் படி வாழ்கிறாள், எதைப் படிக்கிறாள் – அவள் உடலை அவள் என்ன செய்கிறாள் – என்பது மிகவும் முக்கியமான விவாதங்களுக்கு உட்படுத்தப்படுகிறது.**

வயது வித்தியாசம் ஏதுமற்ற ஒரே உடம்பாக மாறிப் போகிறார்கள் அத்தனை பெண்களும். சில செயல்பாடுகள் மாறினாலும், பெண்களாக இயங்க ஒரு அத்தியாவசிய "அடித்தளம்" உண்டு என்ற கருத்தைப் பாடல் சுட்டிக்காட்டுகிறது. இந்த "அடித்தளம்" பெண்மை, பெண்மை இயல்பு, பெண்மை உணர்வு என்று கூறப்படுகிறது. எவை இவற்றை உருவாக்குகின்றன என்பது பல நேரங்களில் பலவிதமாக மாறினாலும், எல்லாவற்றையும் தோலை உரிப்பது போல் நீக்கிப் பார்த்தால் உட்பருப்பு போல் உள்ள ஒரு சாரத்துடனேயேதான் ஒரு பெண் பிறக்கிறாள் என்ற உணர்வு பொதுவாக நிலவுகிறது. இந்தச் சாரம்தான் பெண்ணைப் பற்றிய "உண்மைகளை" உள்ளடக்கியது; இந்தச் சாரம்தான் "நிஜமான" பெண் என்று கொள்ளப்படுகிறது. விளக்கப்பட்ட, மாறாத, நிர்ணயிக்கப்பட்ட இந்த "அடித்தளம்" (உடல்) பெண்களின் வாழ்க்கையை அமைப்பதிலும், பெண்கள் தங்கள் வாழ்க்கையை உருவாக்குவதிலும், அதீத தாக்கத்துடன் செயல்படுகிறது. அதாவது, பண்பாடு என்பது வரையறுக்கப்பட்ட நிலையான ஒன்றல்ல, அதன் உள்ளடக்கம் மாறிய வண்ணம் உள்ளது; அதனை எதிர்ப்பதற்கான அம்சங்கள் அதனுள்ளேயே அடங்கியுள்ளன. அதன் எல்லைகள் அழிக்கப்பட்டவாறும், மாறியவாறும் உள்ளன. ஆனால் பண்பாடு என்பது சங்கிலித் தொடர்பு போல் உடையாத ஒன்று என்ற பிரமை தொடர்ந்து நீடித்து வருகிறது. இதனால்தான் பெண்ணின் உடல் என்பது பல வகைப்பட்ட காலம், சரித்திரம், இடம் இவற்றினூடே புகுந்து புறப்பட்டாலும், இந்த உடலின் மேல் இந்தப் பிரமை - பண்பாடு என்பது நிலையான, உடையாத, பங்கப்படுத்தாத, மாறாத ஒன்று என்ற பிரமை - எழுதப்பட்டு, உடலின் இயக்கம், தேவைகள், உடை, விருப்பங்கள், வாழும் நிலைகள் இவற்றைச் செலுத்துகிறது. இதற்குக் காரணம், பெண்கள் ஒரு கலாசார அல்லது தேசிய அடையாளத்தை ருசுப்படுத்துபவர்களாகவும், அந்த அடையாளத்தின் தூய்மையைப் பாதுகாப்பவர்களாகவும் நோக்கப்படுவதுதான். தேசியப் போராட்டமானாலும், இனப் பண்பாட்டு அடையாளப் போராட்டமானாலும், எப்படி ஒரு பெண் உயிரை உருவாக்குகிறாள், எப்படி உடை உடுக்கிறாள், எப்படி வாழ்கிறாள், எதைப் படிக்கிறாள் - அவள் உடலை அவள் என்ன செய்கிறாள் - என்பது மிகவும் முக்கியமான விவாதங்களுக்கு உட்படுத்தப்படுகிறது(2).

தேசியப் போராட்டம் என்ற செயல்பாட்டமைப்புத் திட்டம் கலாசாரத் தளத்தை உள்ளே, வெளியே, அதாவது, வீடு,வெளி என்று இரு கூறுகளாக்கியது. இதில் பெண் வீட்டைக் குறிப்பவளாகி, வீடு என்பது நாட்டின் அடையாளமாகிப் போனது. காரணம், வீடு என்பது நாட்டின் ஆத்ம சக்தியின் உறைவிடமாகப் பார்க்கப்பட்டது. வெளியில் உள்ள உலகம், வெளியிலிருந்து வரும் தாக்கங்கள், அரசியல், சூழ்ச்சிகள் இவை எல்லாம் உறையும் இடமாகவும், இவற்றிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாக வீடு (நாட்டின் ஆத்ம சக்தி) காணப்பட்டது என்று பார்த்தா சாட்டர்ஜி போன்ற ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கிறார்கள். பெண்களின் வாழ்க்கை பற்றிய எடுத்துரையாடல்களிலும், எழுத்துக்களிலும், பெண்களைப் பற்றிய மற்றவர்களின் எழுத்துக்களிலும் நாம் காண்பது இதைவிட மிகவும் சுவாரஸ்யமான, அதீத சிக்கலானதொன்றாகும். இவற்றிலிருந்து நாம் அறிவது என்னவென்றால், அன்றாட வாழ்க்கை ஓட்டத்தில் இந்த இரு



படிப்பகம்

www.padippakam.com



உலகங்களும் - வீடு,வெளி என்ற உலகங்கள் - ஒன்றில் ஒன்று பாய்ந்தவாறிருக்கின்றன; இவற்றின் எல்லைக்கோடுகள் தெளிவாக இல்லை. ஆனால் இவை இரு வேறு உலகங்கள் என்ற கருத்து மட்டும் எப்போதும் ஸ்திரமாக வைக்கப்படுகிறது. பெண்களின் எல்லாச் செயல்பாடுகளும் பெண்மையூட்டிய பிறகே ஏற்கப்படுகின்றன. இந்தச் செயல்பாடுகளைப் பற்றி மற்றவர்களின் விவரணைகளும் விமர்சனங்களும், பெண்களே இவற்றை விவரிக்கும் விதமும் இவற்றுக்கு ஒரு உள்ளீட்டுத் தன்மையை உண்டாக்குவது தெரிகிறது. அதாவது, இந்தச் செயல்பாடுகளை நியாயப்படுத்தும் முயற்சிகள், வீட்டை மையப்படுத்தும் தேர்ந்தெடுத்த சில பிம்பங்கள் மற்றும் நினைவுகளுடன் இச்செயல்பாடுகளை ஒட்ட வைத்தே பார்க்கும் முயற்சிகள். இந்த முயற்சியில், சில சமயம், வெளி உலகில் பெண்கள் நுழைவதற்கு அந்த வெளி உலகம் வீட்டின் நீட்சியாக்கப்படுகிறது. வெளி உலகில் பெண்களின் செயல்பாடுகள், பெண்மை என்று குறிக்கக்கூடிய ஒன்றில் அடங்குபவையாக ஆக்கப்படுகின்றன. பெண்களின் சரித்திர மற்றும் பண்பாட்டு ரீதியான பங்கெடுப்பில் எந்த வித மாற்றமுமில்லை; அது தொடர்ந்து எந்த முறிவுமில்லாமல் இருந்து வருகிறது என்ற எண்ணத்தை ஊட்டவே இம்முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வேறு வேறு உலகங்கள் என்ற இந்தக் கருத்து, பெண்கள் குறிப்பிட்ட ஒரு காரணத்துக்காக "வெளியே" வந்து மீண்டும் "உள்ளே" போகும் பிம்பத்தை மனதில் தோற்றுவிக்கிறது. "உள்ளே" போவது என்பது அவர்களுக்கேயான இடத்தை நோக்கித்தான் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்துகிறது. வீடு மற்றும் அதைச் சார்ந்த பண்புகளுடன் கருத்து ரீதியில் எந்தவித முறிவையும் ஏற்படுத்திக்கொள்ளாமலேயே வெளி உலக அரசியலில் பெண்கள் பங்கேற்க இத்தகைய பிம்ப இணைவுகள் வழிகோலின. வெளி உலகம் பழக்கப்பட்டுப்போன, குடும்பபூர்வமான இடத்தின் நீட்சியாகிப் போனதால், அதிலுள்ள ஆளுமை உறவுகளும், பெண் - ஆண் உறவுகளும், குடும்ப உறவுகள் போலவே அமைந்தன. தலைவர்கள் தந்தைகளாகவும், அண்ணாக்களாகவும் இன்னும் பலர் தம்பிகளாகவும் மாறினர். ஒரு இயக்கம் அல்லது போராட்டத்தில் பெண்களின் பங்கேற்பு இத்தகைய ஆணாதிக்கச் சொல்லாடல்களினூடேதான் வடிவமைக்கப்பட்டது. இத்தகைய குடும்ப உறவுகள் போன்ற பிணைப்புக்கள் ஒரு இயக்கம் அல்லது போராட்டத்தில் பங்கேற்கும் ஆண்களுக்குமானது என்றாலும், ஆண்களைப் பொறுத்தவரை அது ஒருவித பந்தத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் பெண்களின் பங்கேற்பு அவர்கள் பெண்கள் என்ற ஒரே ஒரு நிதர்சனத்தில் மட்டும் தொக்கி நிற்கிறது. இத்தகைய முயற்சிகள் நின்று போனதாகத் தெரியவில்லை. சமீப காலத்தில் கூட அதிகார நோக்குடன் இயங்கிய பெண் அரசியல்வாதிகள் துர்க்கை அல்லது வேறு ஏதாவது கடவுள் அல்லது அன்னை, அம்மா வடிவங்களில் காண நேரிட்டிருக்கிறது. இந்திரா காந்தி மற்றும் ஜெயலலிதாவை இதற்கு உதாரணமாக்கலாம்.

> சமீப காலத்தில் சில புலம்பெயர்ந்த தமிழர்கள் பண்பாட்டைப் பாது காப்பது என்றால் அது எதைக் குறிக்கிறது என்று கேட்க முற்பட்டிருக்கிறார்கள்

இந்தக் கட்டுரையின் நோக்கம், ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் மற்றும் அதன் அரசியலில் பெண்கள் நிலையும், நாட்டு அரசியலில் அவர்கள் பங்கேற்பும், இவற்றுடன் இணைந்துவரும் சிக்கலான பேரங்கள், ஒப்பந்தங்கள், வெகுமதிகள், தண்டனைகள் இவற்றுடன் பெண்களின் நேரடிச் சந்திப்பும், இவை சேர்ந்து உருவாக்கும் பெண்கள் பங்கேற்பு பற்றியுமான படிவத்தைப் புரிந்துகொள்ளும் முயற்சியுமாகும். இப்படிவத்தில் பின்னப்பட்ட, நுழைவு மற்றும் வெளியேற்றம், முன்னேற்றம் மற்றும் பின்வாங்கல், எதிர்ப்பு மற்றும் ஏற்பு, ஒப்புக்கொள்ளல் மற்றும் உடன்படாமை போன்ற மாறு இழைகளைக் கண்டறிவதும் இக்கட்டுரையின் முயற்சியாகும். பெண்கள் ஆளுமையூட்டப்பட்டார்களா இல்லையா அல்லது "பெண்கள் பிரச்சினை"க்கு தீர்வு ஏற்பட்டதா என்று அறிவதல்ல நோக்கம். எது ஆளுமையூட்டும் முயற்சி என்று நிர்ணயிப்பது எளிதான காரியம் அல்ல. அப்படி நிர்ணயிப்பது சாத்தியம்தானா என்பதும் ஒரு கேள்வி. ஒரு நபரை ஆளுமையூட்டும் ஒன்று அடுத்தவரை ஆளுமையிழக்கச் செய்யலாம். சரித்திரத்தின் ஒரு காலகட்டத்தில் ஆளுமையூட்டும் ஒன்று, பின்னொரு கட்டத்தில் ஆளுமையிழக்கச் செய்யலாம். அது மட்டுமல்ல. எது ஆளுமையூட்டல் என்று யார் நிர்ணயிக்கிறார்கள் என்பதும் அரசியலுக்கு அப்பாற்பட்டதல்ல.

"தீர்வு" களும் எளிதானவை அல்ல. தேவையானது மற்றும் செய்யக்கூடியது என்னவென்றால், சிக்கலான வாகன இணையங்கள் மோதிக்கொள்வது போலவும், பின்னடைவது போலவும், இணைக்கோடுகளாகச் செல்வது போலவும், மொட்டைச் சந்தில் முடிவது போலவும் உருவாகும் ஒரு சிலந்தி வலை போன்ற தோற்றத்துடன் அமைந்து போகும், பண்பாடு மற்றும் அரசியல் படிவத்தை வரைபடமாக்குவதுதான். வரைபடங்களின் உதவியுடன் தான் பயணங்களை மேற்கொள்ள முடியும்.

### தமிழ்ப் பண்பாடு, தமிழ் அடையாளம் மற்றும் தமிழ்ப் பெண்கள்:

எது தமிழ்ப் பண்பாடு என்பது விளக்க முடியாத ஒன்று. எந்தெந்த அம்சங்கள் பண்பாட்டை உருவாக்குகின்றன என்று கணிக்க முயலும் முயற்சி தப்பாகாமல் போவது கடினம். சமீப காலத்தில் சில புலம்பெயர்ந்த தமிழர்கள் பண்பாட்டைப் பாதுகாப்பது என்றால் அது எதைக் குறிக்கிறது என்று கேட்க முற்பட்டிருக்கிறார்கள் (3). சாதரணமாகத் தமிழர் உடை என்று கொள்ளப்படும் சேலை கூட



படிப்பகம்

www.padippakam.com



கிரேக்கர்களிடமிருந்து வந்தது என்று கூறப்படுகிறது. தமிழ்நாட்டின் நெசவுத் தொழிலின் மேன்மையான ஒரு அங்கமாக உள்ள மதுரைச் சுங்குடிப் புடவை சௌராஷ்டிரத்திலிருந்து வந்து தமிழ் நாட்டில் குடியேறிய நெசவாளர்கள் தங்களுடன் கொண்டுவந்த கலைவடிவாகும். ஆகையால் நாம் தமிழ்ப் பண்பாடு என்று கூறும்போது நாம் உண்மையில் குறிப்பிடுவது தமிழ்ப் பண்பாட்டு நினைவில் தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்திவரும் சில புனைந்துரைகள், குறியீடுகள், பழமொழிகள், நாட்டுக் கதைகள், காவியங்கள், இலக்கியம், மொழி, வழிமுறைகள் மற்றும் சில குறிப்பிட்ட பிம்பங்களும் தான். ஆனால் நாம் தமிழ் அடையாளம் பற்றிப் பேசும்போது, நாம் குறிப்பிடுவது தேர்வு எனப்படும் அரசியல் பற்றி; பலவற்றைத் தவிர்த்துச் சில வற்றைத் தேர்வு செய்து, அவற்றை ஒரு குறிப்பிட்ட நோக்குடன் அணுகி, அவற்றை அடையாளத்தின் அடிப்படை அம்சங்களாக மாற்றுவது பற்றி. பண்பாட்டின் நினைவில் சில அம்சங்கள் நிலைத்திருப்பதும், தேர்வைக் குறுக்கும் அரசியலும், காலந்தோறும் மாறிவரும் ஆளுமை உறவுகளின் சாணக்கியப் பொம்மலாட்டக் கயிற்றின் இழுப்பில் இயங்குபவைதான். பெண்கள் பண்பாட்டைத் தங்கள் உடலில் தாங்குவதும், பண்பாட்டு அடையாள அரசியலில் பங்கேற்பதும் இந்தக் குறுக்கப்பட்ட தேர்வு முறையின் வழியேதான்.

பெண்களைப் பற்றிய சில பிம்பங்கள் தமிழ்ப் பண்பாட்டின் நினைவு தளத்தில் மறையாது இருக்கின்றன. இந்தப் பிம்பங்களின் தாக்கம் எப்போதும் இருக்கிறது என்று கூற முடியாவிட்டாலும், இந்தப் பிம்பங்கள் பண்பாட்டின் நினைவில் உறைந்திருக்கின்றன என்பது என்னவோ உண்மை. இந்தப் பிம்பங்களின் தன்மையை ஆழமாக நோக்கும் போது, இந்தப் பிம்பங்களின் அம்சங்கள் என்று தேர்வு செய்யப்பட்ட சில அம்சங்களோடு, வேறு பல கணிப்பில் ஏற்காத அம்சங்களும் தெரிய வருகின்றன. இந்த முறையில் நாம் பார்க்கும்போது பண்பாட்டில் செய்யப்படும் தேர்வுகள் புலனாகின்றன; தெளிவாகத் தெரிகின்றன.

தமிழ் மொழி மற்றும் இலக்கிய வழிமுறைகளில்

> ஆனால் நல்லதங் காள் கதையின் இல க்கு பத்தினித்தன்மை குறித்தது. கணவன் சொல் கேளா மனைவியின் துன்பங்கள் பற்றியது. யானையேற்றம், குதிரை யேற்றம்,விற்பயிற்சி, கல்வி எல்லாவற்றி லும் சிறந்த ஒரு பெண் பத்தினியாக உருமாறி கிணற்றில் குதித்துச் சாவைத் தீர்வாக்கிக்கொள்ளும் கதையாக இதை யாரும் நினைப்பதில்லை.

அதிக தாக்கத்துடன் செயல்படும் பிம்பங்கள் மூன்று எனலாம். அவையவாவன: பதினெட்டாம் நூற்றாண்டின் நல்லதங்காள் கதையின் நல்லதங்காள்; சிலப்பதிகாரத்துக் கண்ணகி மற்றும் புறநானூற்றுத் தாய். இவை, தனித் தனியே இயங்கும் பிம்பங்கள் அல்ல; ஒன்றோடொன்று கலப்பவை. இவைகளின் தன்மைகள் பொதுவானவை. ஆனால் ஒரே காரணத்துக்காக இந்தப் பிம்பங்கள் நினைவு கூரப்படுவதில்லை.

நல்லதங்காள் பலவகைகளில் துன்பப்படும் பெண்களின் குறியீடாக இருக்கிறாள். "நல்ல தங்காள் மாதிரி கஷ்டப்படுகிறேன்" என்பது அன்றாட வாழ்க்கையில் நாம் கேட்கும் பேச்சு. நல்ல தங்காள் ஒரு பத்தினியும் கூட. அவள் பத்தினித்தன்மையால் அவளால் மூடிய கதவுகளைத் திறக்க முடியும்; வாழைத் தண்டை எரிக்க முடியும். நல்லதங்காளின் துன்பங்கள் அனைத்தும் அவள் தன் கணவன் சொல் கேட்காமல் நடந்ததற்கான சரியான தண்டனையாகக் கொள்ளப் படுகின்றன. இறந்த பின் உயிர்த்தெழும் போது அவளே தன்னை இவ்வாறுதான் கடிந்துகொள்கிறாள்:

> **பார்த்தாவே பார்த்தாவே பாராளும் பார்த்தாவே**<br>
> **உன் பேச்சை நான் கேளாமல் வகை மோசம் போனேனே**<br>
> **வார்த்தை நான் கேளாமல் மோசம் போனேனே**<br>
> **பெண் புத்தியாலல்லோ பிழை மோசம் வந்த தென்றாள்.**<br>
> **தப்பாமல் வானம் பார்த்தா தலையிலிடிந்ததிங்கே**

நல்லதங்காளின் கதை மிகவும் வேறுமாதிரியாகத் துவங்குகிறது. அவளும் நல்லதம்பியுடன் யானையேற்றம், குதிரையேற்றம், அம்பெய்தல் எல்லாம் கற்கிறாள். எல்லாவிதக் கல்வியையும் அவனுடன் பயில்கிறாள். கல்வியும், திறமையும் உடைய இந்த நல்லதங்காள் இந்தக் கதையில் எங்கே தொலைந்துபோய் விடுகிறாள்? காட்டில் தனியே நடக்கப் பயப்படும், தான் வீட்டை விட்டு வெளியே வராததால் கண்ணன் வீட்டிற்கு வழி தெரியாது எனும் நல்லதங்காள் எங்கிருந்து வருகிறாள்? வீட்டிற்குள்ளா அவள் யானையேற்றம், குதிரையேற்றம் பயின்றாள்? ஆனால் நல்லதங்காள் கதையின் இலக்கு பத்தினித்தன்மை குறித்தது. கணவன் சொல் கேளா மனைவியின் துன்பங்கள் பற்றியது. யானையேற்றம், குதிரையேற்றம், விற்பயிற்சி, கல்வி எல்லாவற்றிலும் சிறந்த ஒரு பெண் பத்தினியாக உருமாறி கிணற்றில் குதித்துச் சாவைத் தீர்வாக்கிக்கொள்ளும் கதையாக இதை யாரும் நினைப்பதில்லை. பெண்புத்தி பற்றிப் பேசி அழும் நல்லதங்காளும், சாவின் குறியீடாக மாறிவிடும் கிணறுமே மேலெழும்பி நிற்கின்றன. இதை ஒரு முறை ஒரு பேச்சில் குறிப்பிட்ட போது, இரவெல்லாம் நடத்தப்படும் இம்மாதிரிக் கதைகளின் ஆரம்பத்தில் இம்மாதிரிப் பயிற்சிகளைக் குறிப்பிடுவது ஒரு இலக்கண வழக்கு; அதற்கு முக்கியத்துவம் தரக் கூடாது என்று வாதாடினார் ஒரு கல்விமான். இவ்வாறு, நல்லதங்காளின் கல்வியும் பயிற்சியும் மொழி வழக்கைச் சார்ந்த ஒன்றாகவும், அவள் துன்பங்களும், பத்தினித்தன்மையும் வாழ்க்கையைச் சார்ந்ததாகவும் காணப்படுகின்றன.

தமிழ்ப் பண்பாட்டின் சின்னமாகக் காணப்படும் சிலப்பதிகாரத்துக்கு வருவோம். கண்ணகி நீதி கேட்கும் ஒரு பெண். தார்மீகக் கோபம் உள்ள பெண்ணாக மட்டுமல்ல ஒரு பத்தினியாகவும் அவள் பார்க்கப்படுகிறாள். தன் கோப ஜ்வாலையால் மதுரையை எரிக்கும் ஒரு பெண்ணின் பிம்பம் மிகவும் தாக்கம் உள்ள பிம்பம்தான். சில



படிப்பகம்

www.padippakam.com



கேள்விகள் மனதில் எழுகின்றன. இத்தனை கோபத்தையும் கண்ணகி எங்கே ஒளித்தாள் இத் தனை காலமும்? வேறு பெண்ணிடம் செல்லும் கணவன் ஒவ்வொரு முறையும் இவள் நகையைப் பெற வரும்போது நகரத்தையே எரிக்கும் சினத்தீ இந்தச் சந்தர்ப்பத்தில் செயல்படுவதில்லை. ஒரு குச்சியைக் கூட அவள் இந்தச் சந்தர்ப்பத்தில் எரிப்பதில்லை. கோவலன் நடத்தையில் எந்த வகை நீதிப் பிறழ்வும் அவள் உணருவதில்லையா? சிலப்பதிகாரத்தைத் தமிழரின் கௌரவத்துக்கும், பெருமைக்கும் "சிறப்பை"த் தரும் முறையில் திருத்தி எழுதிய அடையாள அரசியல்வாதிகள் கூட இந்தக் கேள்விகளைக் கேட்பது தமிழருக்குப் பெருமை சேர்ப்பதாகக் கருதவில்லை. கேட்காமல் இருப்பது தமிழர் பெருமைக்கு இழுக்கைச் சேர்க்கும் என்றும் நினைத்தாகத் தெரியவில்லை. விளக்க முடியாத வற்றையும், தேவையில்லாதது என்று நினைக்கக் கூடிய சில சம்பவங்களையும் மாற்றி சிலப்பதிகார நாடகக் காப்பியம் எழுதிய கருணா நிதியின் காப்பியத்துக்கு முன்னுரை தரும் அண் ணாதுரை, இத்தகைய மாற்றங்கள் அவசியம்தான் என்கிறார். ஆனால் மூலக் காப்பியம் இலக்கியச் சிறப்புடைய ஒன்றாக இருப்பதால், சரியில்லை என்றாலும் கண்ணகியின் பொறுமையும், மாதவி யுடன் கோவலன் உறவும் ஏற்றுக்கொள்ளக்கூடி யதாக இருக்கிறது என்கிறார். காப்பியத்தின் மொழி நயம் இதைச் சாதித்து விடுகிறது. ஆனால் மொழி நயம், இலக்கியச் சிறப்பு எல்லாம் இதை மட்டும்தான் ஏற்க வைக்கிறது. "விளக்கமுடியாத, தேவையில்லாத" வேறு பல மாற்றப்படுகின்றன. மாற்றப்படும் நிகழ்வுகள் யாவை என்று பார்ப் போம். முதலாவது கோவலன் மாதவியை நாடும் விதம். மாதவியின் அழகுக்கும், கலைக்கும் கோவ லன் வீழ்வது தமிழனுக்குப் பெருமை சேர்க்காது எனக் கருதும் ஆசிரியர் ஒரு கிரேக்க வணிகனைக் காப்பியத்தில் புகுத்துகிறார். வயதான, நயமற்ற அவன் மாதவியை விலைபேச முயலும்போது, ஒரு தமிழ்ப் பெண் வெளிநாட்டானின் கைகளில் அகப்படுவதைத் தடுக்கவே கோவலன் மாதவியை ஏற்கிறான். மாதவியுடன் உறவு மேற்கொள்ளும்

**கண்ணகியின் பத்தினித் தன்மையைப் பொறுத்தவரை எந்தவிதக் கேள்விகளும் எழுப்பப்படவேண்டிய தேவையில்லை என்ற உணர்வுடனேயே இக்காப்பியத்தின் மறு வாசிப்பு நேர்கிறது.**

எந்த எண்ணமும் அவனுக்கு இல்லை. கண்ண கியே அவனை அவன் நிலையை விளக்கும்படி மாதவியிடம் அனுப்புகிறாள். மாதவியின் அதீத அன்பு அவனை அங்கே முடக்கிப் போடுகிறது. தன்னிச்சையாகச் செயல்படுபவனாகவே கோவ லன் இல்லை. கண்ணகியும் மாதவியும் அக்காள் - தங்கை உறவுகளை ஏற்று கோவலனை "அவளிடம் போ" "இவளிடம் போ" என்று ஆணையிடுகிறார் கள். என்னதான் செய்யமுடியும் கோவலன்? தமி ழ்ப் பெண்களின் மானத்தைக் காக்க அவன் இதை யெல்லாம் செய்ய நேரிடுகிறது. பேராசை பிடித்த மாதவியின் குடும்பத்தாரே நகைகளைக் கவர்ந் ததாகவும் மாற்றப்படுகிறது. சிலம்பைத் திருடும் பொற்கொல்லன் பாத்திரம் பொற்கொல்லர் இனத் தைச் சேர்ந்தவர்களுக்கு இழுக்கைச் சேர்ப்பதாகக் கருதும் ஆசிரியர் இந்த இழுக்கை அகற்ற ஒரு அர சவைக் காவலாளி சிலம்பைத் திருடுவதாக மாற்றம் செய்கிறார். (இந்தக் காவலாளி எந்தச் சாதி என்று சொல்வதில்லை.) கண்ணகியின் பத்தினித் தன்மையைப் பொறுத்தவரை எந்தவிதக் கேள்வி களும் எழுப்பப்படவேண்டிய தேவையில்லை என்ற உணர்வுடனேயே இக்காப்பியத்தின் மறு வாசிப்பு நேர்கிறது. பெண்கள் மாறாமல், நிலை யாக நிற்கவேண்டும் என்ற இந்தக் கருத்து இலக் கியத்தில் மட்டு மல்ல அன்றாட வாழ்விலும் காண நேரிடுகிறது. பத்தினி என்ற சொற்பிரயோகம் அன்றாடச் சொல்லாடல்களில் ஒன்றாகவே உள் ளது. இதனால்தான் குறிப்பிட்ட சில பெண்க ளையோ, சிலதரப்பட்ட பெண்களையோ, சில இனத்துப் பெண்களையோ விமர்சிக்க நேரும் போது அவர்கள் பத்தினித்தன்மை அல்லது உடற் றூய்மை ஐயத்துக்கு உள்ளாக்கப்படுகிறது.

புலியின் குகை போல் கருப்பை அமைந்த புறநா னூற்றுத் தாய், மகனைப் போருக்கு அனுப்பும் தாய் இன்னொரு நிலைத்திருக்கும் பிம்பம். அவன் முது கில் அடி பட்டு - உயிர் துறந்திருந்தால் அவனுக்குப் பாலூட்டிய முலைகளை வெட்டி எறிவதாகச் சப தம் பூணும் தாய். இந்த வீரத்தாய்மார்கள் மகன் களுடனும், போர்க்களத்துடனும்தான் இணைக் கப்படுகிறார்கள். இவர்களின் இந்தப் புலிக்குகைக் கருப்பையிலிருந்து பெண்கள் உருவானார்களா, அவர்களுக்கு இவர்கள் முலையூட்டினார்களா போன்ற கேள்விகளுக்குரிய பதிலில்லை.

திருமணவாழ்வையும், தாய்மையையும் வலியு றுத்தும் இந்தப் பிம்பங்கள் வீட்டையும், வீட்டைப் பேணலையும் மட்டுமே அர்த்தமுள்ள, புனிதமான செயல்களாகக் காண்பதோடு நில்லாமல், ஒரு பெண்ணை ஆணுடன் சம்பந்தப்படுத்தியே, அவ னுடன் ஏதோ ஒரு உறவைப் பூண்டவளாகவே பார்க்கிறது. இந்தப் பிம்பங்களின் பல அம்சங்க ளும், பிம்பங்களுமே கூட பல நிலைக்களன்களில், பல சந்தர்ப்பங்களில் நினைவெழுப்பப்படு கின்றன.

தமிழ்ப் பெண்கள் இந்தப் பிம்பங்களில் உள்ள மதிப்பீடுகளின் பிரகாரம்தான் தங்கள் வாழ்க்கை யின் ஒவ்வொரு கட்டத்தையும் அமைத்துக் கொள் கிறார்கள் என்றில்லை. இந்தப் பிம்பங்களில் உறை யும் லட்சியங்கள் எல்லாக் காலத்திலும் செயல் ஊக் கிகளாக இல்லை. ஆனால் இவை மறக்கப்படுவ தும் இல்லை. போரில்லாக் காலத்திலும் பாதுகாக் கப்படும் அணு ஆயுதங்கள் போல் இவை தொட ர்ந்து இருந்தவாறிருக்கின்றன. ஆனால் இவை சங் கிலிகளாகவும், ஆயுதங்களாகவும் மட்டுமே எப் போதும் உணரப்படுவதில்லை. இவை உருமாறி அன்பு, பாசம், வாத்சல்யம் கலந்த உபதேசம், பாது



படிப்பகம்

www.padippakam.com



காப்பு, அரசியல் தத்துவம், மதம் என்ற பல ரூபங்களில் வருகின்றன. இவற்றின் இயல்பு வேண்டுமென்றே மறைக்கப்பட்டும், சிலசமயம் இயல்பு புரிபடாதபடியும் இவை வடிவெடுக்கின்றன.

பெண்களைச் சக்திகளாகவோ, பலியாட்களாகவோ பார்க்கும் விருப்பம் ஏற்படலாம். ஆனால் அன்றாட வாழ்க்கை, இத்தகைய எளிதான இரு கூறுப் பிளவுகளைச் சாத்தியமாக்குவதில்லை. போர்க்களத்தில் அமைக்கும் வியூகங்களைப் போல் மாறி, மாறி அமையும் இந்த மதிப்பீட்டு வியூகங்களில், பல முறைகள், பெண்களே வியூகங்களை அமைப்பதில் பங்கேற்பவர்களாகவும், வியூகங்களில் சிக்குபவர்களாகவும் திகழ்கிறார்கள். பெண் எங்கே முடிகிறாள், வியூகம் எங்கே துவங்குகிறது என்று பிரித்துப்பார்க்க முடியாதபடி யதார்த்த வாழ்க்கையும், வியூகங்களும் பின்னிப் பிணைந்து போவதால், இவையே பெண்ணின் "இயல்பு" என்று நோக்கப்படுகிறது. பெண்கள் இந்த வியூகங்களை உடைத்ததுண்டு; வியூகங்களால் நெருக்கப்பட்டு அபிமன்யு போல் மரித்ததுமுண்டு. வியூகங்கள் உள்ளன என்பதுதான் நாம் நினைவில் கொள்ளவேண்டிய யதார்த்த உண்மை.

இது இப்படி இருப்பதால்தான், பல நபர்கள், குறிப்பிட்டுச் சொன்னால் ஆண்கள், எல்லா சரித்திர காலகட்டங்களிலும் பெண்களுக்கு அறிவுரை கூற முற்படுகிறார்கள். பெண்களை "உய்விக்கும்" இந்த முயற்சியில் பண்டிதர் முதல் கான்ஸ்டபிள் வரை எல்லோரும் பங்கேற்கிறார்கள். அச்செழுத்து வந்தவுடனேயே பல்வேறு சிறு அச்சுக்கூடங்கள் மற்றும் சிறு ஊர்களிலிருந்து வெளிவரத் துவங்குகின்றன இந்த அறிவுரைகள். சோரம் போகும் பெண்ணுக்கு இவை வகைப்படுத்தும் தண்டனைகள் க்ஷயரோகம், குஷ்டம், மேகநோய் என்று தொடங்கி, நாயாகவும், பன்றியாகவும் மறுபிறப்பு எடுப்பது வரை செல்கின்றன. நாவு இழுபடுதல், முலைகளை இழுத்துத் தொங்கவிடல் போன்ற தண்டனைகளும் உண்டு. மனைவி படைத்த நல்லுணவில் திருப்தி அடைந்த ஒரு ஆண், அதன் பின் ஆற அமர யோசித்து இத்தண்டனைகளை எழுதியிருக்கலாம் என்று நினைக்கும் போது உடல் சிலிர்க்கிறது (4).

**பெண்களைப் பற்றியும், பெண் கல்வி பற்றியும் மிகவும் கனிவுடன் நினைத்தவர்கள் கூட வன்முறை மணவாழ்வின் ஒரு இயல்பான அங்கம் என்று கருதி அதை இயற்கையின் செயல்களோடு இணைக்கிறார்கள்.**

பெண்களைப் பற்றியும், பெண் கல்வி பற்றியும் மிகவும் கனிவுடன் நினைத்தவர்கள் கூட வன்முறை மணவாழ்வின் ஒரு இயல்பான அங்கம் என்று கருதி அதை இயற்கையின் செயல்களோடு இணைக்கிறார்கள். பல சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளையும், பெண்ணுக்குப் போதனைகளையும் எழுதிய வேதநாயகம் பிள்ளையின் பாடல்களில் பல ஒப்புவமைகள் உண்டு. கணவனுடன் உறவு பற்றிக் கூறும் பாடல் ஒன்றில் இவ்வாறு கூறுகிறார்.

அடித்தாலும் வைதாலும்அவரே துணையல்லால்
ஆர் துணையடி மானே
மடித்தாலும் அவருடன் வாய் மிதமிஞ்ச லாமோ?
வனத்தின் கீழிருந்து மழையிடிக்கஞ்சலாமே?

இந்த அறிவுரைகளில் எடுப்பாக உள்ள ஒரு அம்சம் என்னவென்றால் பெண்ணின் உடல் சிதைபடுவது மட்டுமின்றி அது மிருகநிலைக்கு இறக்கப்படுவதுதான். உடல்மேல் ஏற்றப்படும் வன்முறை ஒரு பெண்ணின் வாழ்க்கையின் தேவையான அங்கமாகவே காணப்படுகிறது.

தமிழ்ப் பெண் இந்த எல்லா பிம்பங்களின் கலவையாக இருக்கிறாள். யார் திராவிடன், யார் தமிழன் என்பது பலவகைகளில் அர்த்தப்படுத்தப்பட்டாலும், யார் தமிழ்ப் பெண் என்பதில் ஒருவித ஐயமும் இல்லை. இந்தப் பிம்பங்களைக் கிழித்தெறிந்தவர் பெரியார்தான். பண்பாட்டுப் பிம்பங்களைப் பெரியார் கேள்விக்குட்படுத்தி, தாய்மையே தேவையற்றது, அதுவும் ஒரு அடிமைப்படுத்தும் ஆயுதம்தான் என்று பலவாறு கூறியிருந்தாலும், இயக்கத்தின் அன்றாட நடப்பில், மற்றும் இயக்கத்திலிருந்து பிறந்த எழுத்துக்களில் இந்தப் பிம்பங்களின் தாக்கத்தைக் காணலாம். இவை இயக்கத்தின் மொழியிலும், இயக்கத்திலுள்ள பெண்கள் மற்றும் ஆண்களின் செயல்பாடுகளிலும் கலந்து போகின்றன. இயக்கத்தின் லட்சியத்தை முறிப்பதாகவோ அதை அமுக்குவதாகவோ இல்லாவிட்டாலும் அதனுடன் இணைந்தும், கலந்தும், பங்கேற்பவர்களின் சிந்தனையில் இருந்தவாறும் இந்தப் பிம்பங்களும், அவற்றினின்றும் பிறக்கும் மொழியும் உள்ளன. வீரத் தாய்மார்கள், தாய்மை, போன்ற பதப் பிரயோகங்களை இயக்கத்தைச் சேர்ந்த பத்திரிகைகளில் காண நேரிடுகிறது. இயக்கத்தைச் சேர்ந்த பெண்களைக் குறிக்கும் போதும் அவர்கள் தாய்மைப் பண்பு முக்கியமாகக் குறிக்கப்படுகிறது. (காண்க: இறையன், சுயமரியாதைச் சுடரொளிகள், 1981)

இந்த இயக்கத்தில் பெண்கள் பங்கு பற்றியும், அதன் தன்மை பற்றியும் புரிந்து கொள்வது மிகவும் அவசியமானது. காரணம், மற்ற பல இயக்கங்கள் புண்ணுக்கு மருந்திடும் சீர்திருத்த வேலைகளை மட்டுமே செய்தபோது, பெரியார் ஒரு புதிய பெண்ணை உருவாக்குவதற்கு இயக்கத்தை வழிப்படுத்தினார். இந்தப் புதிய பெண் மொழி, சடங்குகள், பழக்கவழக்கங்கள் எதுவும் தன்னைப் பிணைப்பதை விரும்பாத பெண். அப்படி இருந்தும் சில பண்பாட்டு விலங்குகளைப் பூட்டிக்கொள்கிறாள். ஆண்வழிச் சமுதாய மொழிச் சொல்லாடல்களுடனேயே பெண்களின் பங்கேற்பு நடைபெறுகிறது. மணியம்மையைப் பற்றிய குறிப்பு வரையும்போது கூட, அவர் தலைமைப் பொறுப்பில் செய்தவற்றைக் குறிப்பிட்ட பின், அவர் தாய்மை அன்பு பற்றியும், அவர் அடக்கம்



படிப்பகம்

www.padippakam.com



பற்றியும் குறிக்க நேரிடுகிறது. தீவிர லட்சியவாதிகளான பெரியாரியக்கப் பெண்களே பலவித இடர்பாடுகளிடையே செயல்பட்டபோது, தமிழ் அடையாளத்தை முதன்மைப்படுத்திய, தேர்தல்-அரசியலில் இறங்கிய மற்றவர்களுடன் இருந்த பெண்களுக்கு வாய்ப்புக்கள் இல்லாமல் போனதில் வியப்பில்லை. தமிழ்ப் பெண் என்ற நபரை பிரச்சினைக்குட்படுத்தினார் பெரியார். காப்பிய, காவிய, புராண பிம்பங்களில் உள்ள ஒட்டைகளைக் காட்டினார். இத்தகைய லட்சியம் எதுவும் இல்லாத திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற அமைப்புகள், அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் விவாதங்களை விட்டொழித்தது. திராவிட முன்னேற்ற இயக்கத் தலைவர்கள் பெண்களை வீட்டினுள் அல்லது வீடு சார்ந்த பண்பாட்டு மதிப்பீட்டிற்குள்ளேயே வைக்க விரும்பினர். பெண்களின் அரசியல் பங்கேற்பு இந்த மதிப்பீடுகளுடனேயே இயங்கி, இவற்றாலேயே நியாயப் படுத்தப்பட்டன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எல்லாப் பெண்களும் ஒரே தன்மையுடையவராகவே நோக்கப்படுகின்றனர். இந்தத் தன்மை அவர்கள் உடலைச் சார்ந்தது; சிந்தனையை அல்ல. பொதுப்படையான, ஒரே ஒரு முகம் கொண்டவளாகவே தமிழ்ப் பெண் அறியப்படுகிறாள். பலருக்கும் பயோ-டாட்டா எழுதும் ஒரு வெகுசனப் பத்திரிகை, பெண்களைப் பொறுத்தவரை சராசரித் தமிழ்ப் பெண் என்று ஒருத்தியை உருவாக்கி அவளுக்கு ஒரு பயோ-டாட்டா எழுத முற்படுவது பெண்களின் பன்முகங்கள் மறைக்கப்படுவதால்தான். சராசரித் தமிழ்ப் பெண்ணை இவ்வாறு நோக்குகிறது இப் பத்திரிகை:

பெயர் : சராசரித் தமிழ்ப் பெண்
வேலை : பிள்ளை பெறுதல்
கூடுதல் வேலை : சமையல்
விருப்பமான பொருள் : தங்கம்
சமீபத்து சாதனை : கேபிள் டி.வி. படங்கள்
நீண்டகால சாதனை : ஸ்டவ் வெடிப்புக்கள் இடையே வாழ்வது

முன்பு தண்டனைகளை வகைப் படுத்திய ஆண்கள் எப்படிப்பட்ட சிந்தனை உடையவர்கள் என்பது நமக்குக் கண் கூடாகத் தெரிகிறது. ஆனால் குடும்ப வாழ்க்கையில் கலந்து விட்ட வன்முறை பற்றி இவ்வாறு துணுக்கு எழுதி பெண் உயிர்வாழ்வதே ஒரு சாதனை என்று குறிக்கும் இப்பத்திரிகையின் பின்னே உள்ள சிந்தனைக் கொடூரம் பல பூச்சுகளுடன் மறைந்து செயல்படுகிறது. (காண்க: குமுதம், 27 அக்டோபர் 1994) இக்குறிப்புடன் உள்ள படம் ஒரு பெண் தூளியை ஆட்டுவது போல் உள்ளது. எத்தகைய மாறுபட்ட வேலைகளிலும், செயல்களிலும் பெண்கள் ஈடுபட்டாலும் இந்த ஒரு முகத்துடனயே, இதில் பொதிந்துள்ள மதிப்பீடுகளை வைத்தே அவர்கள் நோக்கப்படுகின்றனர். திருமணமாகாத, அன்னையாகாத, அதிகாரம் செலுத்தும் தலைவி ஒருத்தியைக் கூடக் கடவுளாக்கி, அம்மாவாக்கி அதன்பின்தான் ஏற்க முடிகிறது.

> **திருமணமாகாத, அன்னையாகாத, அதிகாரம் செலுத்தும் தலைவி ஒருத்தியைக் கூடக் கடவுளாக்கி, அம்மாவாக்கி அதன்பின்தான் ஏற்க முடிகிறது.**

## உடல், சரித்திரம், நாடு:

சட்டச் சீர்திருத்தங்கள் கொண்டு வருவதிலும், சுதந்திரப் போராட்டத்திலும் ஈடுபட்ட பெண்கள் பலர் தமிழ் நாட்டவர்கள். ஆண்வழிச் சமுதாயத்தின் மதிப்பீடுகளுக்குட்பட்டே இவர்கள் பங்கேற்பும் இருந்தது. ஒரு பெண் என்பவள் எப்படி அறியப்படவேண்டும் என்பது பற்றி இவர்களுக்கும் மற்ற இயக்கப் பெண்களுக்கும் மாறுபட்ட நோக்கு இல்லாவிடினும், மொழி, சாதி, அரசியல் சம்பந்தப்பட்ட போராட்டங்களில் இவர்கள் வேறு, வேறு தளங்களில் இயங்கி வந்தனர். குழுக்களாக இயங்கியபோதும், பெண்களுக்கான பத்திரிகைகள் நடத்திய போதும், கற்பு, தாய்மை என்ற சதுரத்தை விட்டு வெளிவராத கோட்பாடுகளை ஒட்டியே இவர்கள் இயங்கினர். உதாரணமாக பெண் கல்வி பற்றிய விவாதங்களில் மையமாக்கப்பட்டது பிள்ளைப் பேறடையும் உடல்தான். இந்த உடலை ஒட்டிப் பிறந்த இரு தன்மைகள்தான் சேவை மற்றும் தியாகம். கல்விக்கும், மற்றச் செயல்பாடுகளுக்கும் இந்த இரண்டு தன்மைகளே ஆதாரமாக்கப்பட்டன. தேசியப் போராட்டத்தில் இவர்கள் நுழைவும் வீட்டைச் சார்ந்த இடத்தில் நுழைவு என்று சொல்லக்கூடிய விதத்திலேயே அமைந்தது. தந்தை உருக் கொண்ட ஒருவராகவே காந்தி நோக்கப் பட்டார். இவர்கள் போராட்டத்திற்கெனத் தேர்ந்தெடுத்த விஷயங்களும் பெண்கள் என்ற விதத்தில் இவர்களைப் பாதிக்கும் விஷயங்களாகக் கருதப்பட்டு இவர்களிடம் போராட்டம் செய்ய ஒப்படைக்கப் பட்டவைதான். உப்புச் சத்தியாக்கிரகத்தில் ருக்மணி லக்ஷ்மிபதி போன்ற பெண்களும், மேலும் கூட்டங்களிலும், ஊர்வலங்களிலும் பல பெண்களும் பங்கேற்றுச் சிறை சென்றிருந்தாலும், பெண்களின் முக்கியமான பங்கேற்பு கள்ளுக்கடை மறியலிலும், விதேசித் துணி பகிஷ்கரிப்பிலும்தான். தந்தை உருவை ஏற்று, புராணங்களில் உள்ள சீதை போன்ற பெண்களை முன்னுதாரணங்களாகக் கொள்ளும்படி சொன்ன காந்திதான், இப்போராட்டங்கள் பெண்களுடையது என்றார். குடி, வேலையில்லாத் திண்டாட்டம் இரண்டுமே வீட்டை நேரடியாகப் பாதிக்கும் விஷயங்கள். 1921 இல் ஆண்கள் இப்போராட்டங்களில் ஈடுபட்ட போது வன்முறை வெடித்தது. இப்போராட்டத்தை சாத்வீகமான முறையில் மேற்கொள்ள பெண்களுக்கு அழைப்பு விடுக்கப் படுகிறது. மேலும், வீட்டைப் பாதிக்கும் எதற்கும் பெண் தானே எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்? பெண்களின் பங்கேற்பு இப்படித்தான் அமைய வேண்டும்



படிப்பகம்

www.padippakam.com



என்ற கருத்தே நிலவியது. அயர்லாந்து நாட்டுப் போராளியான மார்கரெட் கஸின்ஸ் இது பற்றி எழுதும்போது, வீட்டிற்கான உடைகளை வாங்குபவர்கள் என்ற முறையில் பெண்கள் சுதேசி எனும் ஆயுதத்தை உபயோகித்தார்கள் என்றும், நாட்டின் ஒழுக்கமுறைகளைப் பாதுகாப்போர் என்ற முறையில் கள்ளுக்கடை மறியல் செய்தார்கள் என்றும் குறிப்பிடுகிறார் (5).

"பெண்மை"யுடன் ஒட்டியதாகவும், வீடு என்ற அமைப்பை ஸ்திரப்படுத்தவும் பெண்களின் சுதந்திரப் போராட்டப் பங்கேற்பு அமைந்து போனதால், இதன் வீச்சு குறுக்கப்பட்டது. போராட்டத்தின் போதும், அதன் பின்பும் பாதைகளில் இடையூறுகளும், தொடர்ந்த தொந்தரவுகளும் நேர்ந்த வண்ணம் இருந்தன. சில பாதைகள் பயணப் படாமல் போயின. சில பாதைகளைக் கடப்பது எளிதாயிற்று. சுதந்திரம் அடைந்த பின்னர் ஏற்பட்ட அதீத உற்சாகத்தில் பல பெண்கள் இருந்த போதும், முந்தைய செயல்பாட்டின் குறுகலை உணர்ந்த ஒரு பெண் இது குறித்து 1948 இல் எழுதியது இன்னும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகவே இருக்கிறது. பெண்கள் முன்னேற்றம் என்பது, சுதந்திரப் போராட்டத்தின் மிகவும் முக்கிய அங்கமாகக் கருதப்பட்ட தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தின் தோல்வியையே தழுவியுள்ளது என்று இவர் எழுதுகிறார். பெண்கள் முன்னேறி இருக்கிறார்கள் என்பது தீண்டாமை இப்போது நாட்டில் இல்லை என்று சொல்வது எவ்வளவு பொய்யோ அவ்வளவு பொய் என்கிறார். பெண்கள் கோருவது தேவிகளாக்கப்பட்டு வணங்கப்படுவதை அல்ல; அவர்கள் மதிக்கப்பட விரும்புகிறார்கள் எனக் கூறி விட்டு, பெண்கள் இப்படியே இருந்தார்கள் என்றால் இந்தியா சுதந்திரம் அடையவில்லை எனலாம், என்றார். (6)

தன் பெயரைக் கூறாமல் இப்பெண்மணி எழுதிய இவ்வரிகள் அடிக்கடி மனதில் ஒலிக்கின்றன. மேம்பாட்டுத் திட்ட விவாதங்களில் பங்கு பெற்று, விதவைகளுக்கு தையல் மெஷின், பெண்களுக்கு காய்கறித் தோட்டம் போன்ற திட்டங்களைப் பரிசீலனை செய்யும்போது, இதுவல்ல நாம் வேண்டுவது என்ற அறைகூவலை எழுப்பத் தோன்றுகிறது. இத்தகைய அறைகூவல்கள் சரியான வடிவெடுக்கும் வரை பெண்ணின் உடலும், அது ஆக்கிரமிக்கும் இடமும், அதன் சரித்திரமும் மொழியால் எட்டா தூரத்திலேயே இருக்கும்; சரித்திரத்தை ஒட்டிய நினைவுகளும் தெளிவில்லாமலே இருக்கும். உடல் பயணப்பட்ட தூரத்தையும், அந்த பயணத்தின் சின்னங்களையும் நாம் தேடிய வண்ணமே இருக்கிறோம். ❑

குறிப்புகள்

1) 'நல்ல பெண்மணி' பாடல் மணமகள் படத் தில் வருவது.

2) உதாரணத்திற்கு ஜெரால்டின் மீனியின் அயர்லாந்துப் பெண்கள் அவர்கள் கலாசாரத்திலும் அரசியலிலும் பங்கேற்பதைப் பற்றிய கட்டுரை. Irish Women's Studies ed., E.Smyth, 1993/ pp. 230 - 244.

3) தேவா, ஊதா (2) தை – சித்திரை 1993, "கலாசாரம் எனும் பூச்சாண்டி", ". 13 –14

4) ஹெட் கான்ஸ்டபிள் ராமலிங்கம் பிள்ளை, மாதர் நீதி அம்மானை (சென்னை, 1895); "கற்பு" ஆனந்தவிகடன் மே மற்றும் ஜூன் 1926;

மீரான் அலி ஸாஹிப், நஸீகதுனிஸா எனும் தோகையருப தேசம் (நெல்லை, 1930)

5) மார்கரெட் கஸின்ஸ், Indian Womanhood Today/ (அலகாபாத், 1941)

6) "பேதை", "ஐயோ, பெண்ணா?" குமரி மலர், ஜூன் 1948, ப.45 – 48.

இந்தக் கட்டுரை Economic and Political Weekly (India) இல் வெளிவரப்போகும் ஒரு விரிவான கட்டுரையின் தமிழாக்கம் செய்த, சுருக்கப்பட்ட வடிவம்.



ஓவியம்: போஸ்



படிப்பகம்

www.padippakam.com





# பாரதி ஒரு மறுவாசிப்பு

இந்திரா பார்த்தசாரதி

பாரதியின் கவிதைக் காதலிக்கு ஒரு மறுவாசிப்புத் தேவை. ஒரு முனிவன் பன்றியாகப் போகும்படி சபிக்கப்படுகின்றான். அவன் பன்றியாக மாறியதும், முனிவனின் மைந்தன் அவனைக் கொல்ல முற்படுகின்றான். தந்தை மகனிடம் சொல்வான்: 'மைந்தனே என்னைக் கொல்லாதே. சில நாட்கள் நான் பன்றியாக இருக்க விரும்புகிறேன். இவ்வநுபவம் எனக்குத் தேவை. பிறகு நீ வந்து கொல்லலாம். சில நாட்கள் கழித்து மகன் அவனைக் கொல்ல வரும்போது, பன்றி உருவிலிருந்த ரிஷி கூறுகின்றான், 'மகனே பன்றியாக இருப்பது எவ்வளவு சுகமான வாழ்க்கை! இவ்வாழ்க்கையை விட்டுவிட எனக்கு மனமில்லை. நான் பன்றியாக இருப்பது உனக்குப் பிடிக்கவில்லை என்றால், நீ தற்கொலை செய்து கொள்!...

பாரதி இக்கதையைச் சொல்லிவிட்டு முத்தாய்ப்பாகக் கூறுவதுதான் பாரதியைப் பற்றி மறுபரிசீலனை தேவை என்று நமக்கு அறிவுறுத்துகிறது.

பாரதி சொல்கிறார்:

வாராய்! கவிதையாம்
மணிப் பெயர்க் காதலி!
அந்த நாள் நீயெனை
அடிமையாகக் கொள
யாம் மானிடர் குழாத்தின்
மறைவுறத் தனி இருந்து
எண்ணிலா இன்பத்து
இருங்கடல் திளைத்தோம்

(ஆனால்)
அடிநா முள்ளினை
அயல் சிறிது ஏகி
களைந்து பின் வந்து
காண்பொழுது அய்யகோ!
மறைந்தது தெய்வ மருந்துடைப்
பொற்குடம்!

சின்னாள் கழிந்தபின்
யாதெனச் செப்புகேன்
நின்னொடு வாழ்ந்த நினைப்புமே
தேய்ந்தது ....?

இவ்வாறு மனம் வருந்திக் கூறுகிறவர், இப்புராணக் கதையை எடுத்துரைக்கிறார்.

இக்கவிதையில் அவர் எட்டையபுர அரசரிடம் பணி புரிந்ததைப் 'பன்றி வாழ்க்கை'யாகக் குறிப்பிட்டாலும், பாரதியின் ஏக்க எல்லை இவ்வளவுதானா என்ற கேள்வி எழுகின்றது.

'நின்னொடு தமிழனால் நீயே உயிரெனத் தெய்வமும் நீயென நின்னையே பேணி நெடுநாள் போக்கினேன்' என்று வருந்தவதைப் பார்க்கும்போது, ஓர் அற்ப ராஜ சேவையைத் தவிர, அவர் துயருறுவதற்கு வேறு பல அடிப்படையான காரணங்களும் இருந்திருக்கக்கூடுமெனத் தோன்றுகிறது.

இருபத்திரெண்டாம் ஆண்டு வரை நாமகளிடம் காதல் பூண்டு (மூன்று காதல்) கவிதைக்காகவே தம் வாழ்க்கையை அர்ப்பணிக்கத் துணிந்த அவர், பின்னர் வேதனை உறுவதற்கான காரணங்கள் என்ன?

'பாரதி தேசியக் கவிஞர்: நாட்டு விடுதலைக்காக மக்களைத் தம் கவிதைகள் மூலம் தட்டி எழுப்பியவர்; சமூக



படிப்பகம்

www.padippakam.com



சிறுமைகளைச் சாடியவர்; சரித்திரம் இதற்காகவே அக்காலகட்டத்தில் அவரைத் தேர்ந்தெடுத்திருந்தது....' என்றெல்லாம் நாம் பாரதியைப் பற்றிக் கூறுகிறோம்.

பாரதி தம்மைப் பற்றி இந்தக் கருத்துத்தான் கொண்டிருந்தாரா? இந்தக் கருத்து இருந்திருக்கக் கூடுமென்றாலும், அவருக்குள்ளிருந்து வேறு குரல் ஒலித்திருக்கக் கூடிய வாய்ப்பு உண்டா?

அதாவது பாரதியின் அந்தரங்கக் குரல் எது? பகிரங்கக் குரல் எது?

'பராசக்தி' என்ற கவிதையில் பாரதி கூறுகிறார். 'நாட்டு மக்கள் பிணியும் வறுமையும் களையப் பாட நான் நினைத்தபோது, கூட்டி மானிடச் சாதியை ஒன்றெனக் கொண்டு வையம் முழுதும் பயனுறப் பாட்டிலே அறங்காட்ட நான் முற்பட்டபோது, அன்னை பராசக்தி ஏழையேன் கவிதை யாவும் தனக்கெனக் கேட்கின்றாள்.

பராசக்தி! யார்? 'அல்லினுக்கம் பெருஞ்சுடர் காண்பவர் அன்னை சக்தியின் மேனி நலம் கண்டார்! கல்லினுக்குள், அறிவொளி காணுங்கால், கால வெள்ளத்திலே நிலை காணுங்கள். புல்லினுள் வயிரப்படை காணுங்கால், பூதலத்தில் பராசத்தி தேவி தோன்றுமோ!'

இன்னோரிடத்தில் பாரதி கூறுகிறார். 'பாட்டினில் வந்த களியே சக்தி! கவிதையும் தெய்வமும் வெவ்வேறில்லை! கவிதையே தெய்வம் என்று உணர்ந்து வாழ்வதுதான் வாழ்க்கை' என்பது பாரதி கருத்து. 'பாட்டினில் வந்த களி' என்பதற்குச் சான்றாக அவருடைய 'ஊழிக்கூத்தை'க் கூறலாம். இக்கவிதையில் சொல்லும் பொருளும், சிவனும் சக்தியும் போல் இரண்டறக் கலந்துள்ளன. பேருவகையின் எல்லை நிலத்தில்தான் இத்தகைய கவிதை உருவாக முடியும்.

பாரதியின் குரல் இத்தகைய கவிதைகளை இயற்றும்போது, உலகுக்கு ஏதோ உபதேசம் செய்ய வேண்டியது, அவர் சமூகப் பொறுப்பு என்பது போல் ஒலிக்கவில்லை. கவிதைக் காதலிக்கும் அவருக்குமிடையே நிகழ்கின்ற அந்தரங்க உரையாடலாகத்தான் காண முடிகிறது.

கடமை புரிவார் இன்புறுவார்
என்னும் பண்டைக் கதை
பேணோம்
கடமை அறியோம்
தொழிலறியோம்
கட்டென்பதனை
வெட்டென்போம்
மடமை, சிறுமை, துன்பம் பொய்
வருத்தம் நோவு மற்றிவைபோல்
கடமை நினைவும் தொலைத்திங்கு
களியுற்று எங்கும் வாழ்குவமே!

என்று பாடுகின்றவர், 'அன்பு செய்தல்' என்ற கவிதையில் கூறுகின்றார்.

இந்தப் புவிதனில் வாழும் மரங்களும், இன்ப நறுமலர்ப் பூஞ்செடிக் கூட்டமும், அந்த மரங்களைச் சூழ்ந்த கொடிகளும், ஓடை, மூலிகை, பூண்டு, புல் யாவையும் எந்தத் தொழில் செய்து வாழ்வனவோ?

மானுடர் வாழாவிடினும் விந்து நடா விடினும்
வரம்புக் கட்டாவிடினும் அன்றி நீர் பாய்ச்சாவிடினும்
வானுலகு நீர்தரு மேல் மண்மீது மரங்கள்
வகை வகையா நெற்கள் புற்கள் மலிந் திருக்கு மன்றே?
யாரெதற்கும் அஞ்சுகிலேன், மானுடரே நீவிர்.

நான் சாம்பலாகப் போனாலும் போவேனே தவிர புழுதியில் இருக்க விரும்ப மாட்டேன். மனிதனுடைய வேலை வாழ்வதே தவிர சும்மா உயிரோடு இருப்பது அல்ல.

- ஜாக் லண்டன்.

என் மதத்தைக் கைக்கொள்மின்: பாருடல் வேண்டா
ஊனுடலை வருத்தாதீர் உணவியற்கை கொடுக்கும்
உங்களுக்குத் தொழிலிங்கே, அன்பு செய்தல் கண்டீர்!

ஆகவே பாரதியிடம் ஒன்றுக் கொன்று முரணான இருவகை மன நிலைகள் தொடக்கத்திலிருந்தே இருந்து வந்திருக்கின்றன என்பது புலனாகிறது. கவிஞன் என்ற நிலையில் அழகுணர்ச்சிக் கோயிலின் கர்ப்பக்கி ருகத்தில் அழகின் பூசாரியாயிருந்து அழகை உபாசிப்பது தான் தம் வாழ்க்கை நெறி என்று அவர் நினைக்கின்றார். ஆனால் அரசியல் கொந்தளிப்பு மிகுந்த சூழ்நிலையில், காலத்தின் சவால்களை ஏற்க வேண்டிய சமூகப் பொறுப்பு உணர்ந்த ஒரு சமுதாய மனிதனாக வாழ வேண்டுமென்ற இன்னொரு உணர்வும் அவரை அலைக்கழித்திருக்கின்றது.

கவிஞன் என்ற நிலையில் அவர் தமக்குத்தாமே சொந்தமானவராகவும், அடிமையுற்ற நாட்டின் குடிமகன் என்ற வகையில் வரலாற்றுக்குச் சொந்தமானவராகவும் அவர் இருந்துதான் சுவாரஸ்யமான விஷயம். இதனால் அவருக்கு ஓர் அந்தரங்கக் குரலும் பகிரங்கக் குரலும் உருவாகியிருக்க வேண்டும். அந்தரங்கக் குரலில் பாடியபோது உருவான கவிதைகளில் மிகவும் முக்கியமானது 'குயில்பாட்டு' அவருடைய 'தேசியகீதங்கள்' பகிரங்கக் குரல் ஒலிக்கும்போது இயற்றப்பட்டவை.

பாரதியின் வரலாற்றைப் பார்க்கும்போதுதான் இவ்விரு குரல்களின் பரிணாம வளர்ச்சியை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

பாரதி 1910 இல் தம் சுயசரிதை எழுதினார். அவருக்கு அப்பொழுது வயது 8 . அது ஒரு 'பரிசோதனைக் கவிதை' என்று அவரே கூறுகின்றார். தம்மைத் தாமே அறிந்துகொள்ள முயலும் இவ்வற்புதக் கவிதை, அவருடைய இளமைப் பருவமானதை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. பாரதி ஐந்து வயதில் தம் தாயை இழக்கின்றார். பிற குழந்தைகளோடு விளையாடுவதை அவர் தந்தை விரும்பவில்லை. இதனால் அவருக்குத் தனிமையே சொர்க்கமாக இருக்கின்றது. கனவு காண்பது அவர் மனப்பழக்கமாக ஆகிவிடுகின்றது. பத்து வயதில் அவர் ஓர் ஒன்பது வயதுப் பெண்ணின் மீது காதல் கொள்ளுகின்றார் - அல்லது காதல் கொண்டதாக நினைக்கின்றார்.

பாலுணர்வோடு சம்பந்தப்படாத தெய்வீகக் காதல் இது. அவர் தந்தை அவரை ஆங்கிலப் பள்ளி ஒன்றில் சேர்க்கிறார். இக்கல்வி அவருடன் ஒட்டவேயில்லை. அவருக்கு பனிரெண்டு வயதில் திருமணமாகின்றது. இதனால் தந்தை மீது அவர் வெறுப்புக் கொள்கின்றார். திடீரென்று தந்தை வறியவராகின்றார். வியாபாரத்தில் பெரும் நஷ்டம். குடும்பப் பொறுப்பை ஏற்க வேண்டியது பாரதியின் கடமையாகின்றது.

பாரதி பத்து வயதில் காதல் கொண்டதாகக் கூறுவது உண்மையில் நடந்திருக்குமா இல்லையா என்று சொல்



படிப்பகம்

www.padippakam.com



லவியலாது. அவர் அவ்வாறு நடந்ததாகத் தீவிரமாகக் கற்பனை செய்து பிறகு ஒரு நிலையில் அவரே அதை நம்பி இருக்கவும் கூடும். பாரதியின் பாடல்களிலும் சரி, வசனங்களிலும் சரி, இந்தக் கனவுகள் அடிக்கடி வருகின்றன. ஞானரதத்தில் ஒரு பெண் அவருக்கு வழி காட்டியாக வருகின்றாள். இந்தப் பெண் - வழிகாட்டி தோற்றமே பாரதி இயற்றிய கவிதைகளின் அடி நாதம்.

இத்தாலியக் கவிஞர் தாந்தே இயற்றிய 'லாவிட்டன் நோவா' என்ற அற்புதமான கவிதையிலும் நம்மால் இதைக் காணமுடிகின்றது. பியாட்ரிஸ் என்ற ஒன்பது வயதுப் பெண், பாரதியின் கதாநாயகி போல் அவருக்கு ஒளிவிளக்காக இருக்கின்றாள். பாரதி இந்த 'இளம் பெண் தோற்றத்தை' இந்திய மரபுக்கேற்ப தம் கவிதைகளில் ஒருங்கிணைத்துக் காண்கின்றார்.

ஜான்ஸ்கார் என்பவர் எழுதிய நாம் பாவனை செய்யும் கற்பனையூர் என்ற கவிதையை பாரதி மொழிபெயர்த்துள்ளார் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இக்கவிதையில் ஒரு நிரந்தர குழந்தை மனோபாவம் மனிதனுக்கு இருக்க வேண்டுமென்று ஜான்ஸ்கார் கூறுகின்றார்.

பாரதியின் கவிதைகளின் ஜீவசக்தி இந்தப் பெண் தோற்ற படிமந்தான். அவருடைய மனநிலைக்குத் தகுந்தாற் போல் இத்தோற்றம் வெவ்வேறு வடிவம் கொள்கின்றது. அவர் வழிபடும் சக்தியாக, அவர் காதலிக்கும் கண்ணம்மாவாக, அவர் தம் வாழ்க்கையை அர்ப்பணித்த பாரத மாதாவாக, ஐந்து வயதில் தாயை இழந்த பாரதியை, அவர் அன்னை பல வடிவங்களில் பாவனைகளில் அவருடைய நினைவாக இருந்து வந்திருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது.

கட்டுப்பாடற்ற ஒரு கற்பனை நாட்டின் பிரஜையாக, பேதமையும் குடும்ப சமூகப் பொறுப்பு ஏதுமில்லாத ஒரு கவிஞனாக வாழவேண்டுமென்பதுதான் பாரதியின் அந்தரங்கக் குரல். ஆனால் குடும்பப் பொறுப்பு அவர் மீது விழுகின்றது. அதுவும் மிக இளைய வயதில் மனச் சுதந்திரத்தை வேண்டி நின்ற அவரை, நாட்டின் அடிமைத்தனம் வெகுண்டு எழச் செய்கிறது. இது அவரின் சமூகப் பொறுப்பு. பாரதியின் பாடல்களில் இம் மனப்போராட்டத்தை நம்மால் காணமுடியும்.

'குயில் பாட்டு' அவர் அந்தரங்கக் குரலின் வெளியீடு. 1912இல் பிரசுரிக்கப்பட்ட இக்கவிதையை அவர் பட்டப்பகலில் பாவலர்க்கு தோன்றுவதாம் நெட்டைக் கனவு என்று குறிப்பிடுகின்றார்.

இக்கவிதையில் காணும் இறுதி வரிகள் மிகவும் முக்கியமானவை.

ஆன்ற தமிழ்ப்புலவீர், கற்பனையே யானாலும்
வேதாந் தமாக
விரித்துப் பொருளுரைக்க யாதானும் சற்றே
இடமிருந் தாற் கூறிரோ?

அவ்வளவுதான், தமிழ்ப் பண்டித உலகம் ஆன்ற தமிழ்ப்புலவீர்! என்ற விளிக்கப்பட்டதைப் பெருமையாக நினைத்து, 'குயில் பாட்டு'க்குப் பலவிதமான பொருள்களைக் காணத் தொடங்கியது. ஆன்மீகப் பொருள், அறிவுஜீவித்தனமான பொருள், சமுதாயப் பொறுப்பு, உணர்வு மிகுந்த பொருள், உளவியல் பகுப்பாய்வு பொருள் என்று பல்கலைக்கழக பாரதித் தொழிற்சாலையினின்றும் பல கருத்துக்கள் விரித்துரைக்கப்பட்டன.

பாரதி இதைக் 'கனவு' என்று குறிப்பிடுகின்றார். கால்ரிட்ஜின் 'குப்ளாகான்' போன்ற ஒரு கவிதை நிகழ்வன அனைத்தும் 'தோற்றங்கள்', தோற்றத்துக்குள் ஒரு தோற்றம், சக்கரத்துக்குள் சக்கரம் போல் தொடர்ந்து செல்கிறது. இறுதியில் எது தோற்றம், எது நடப்பு என்று ஒன்றும் விளங்கவில்லை.

யதார்த்தத்தைக் குறிக்கும் சொற்கள் 'பண்டைச் சாவடி' எழுதுகோல், பத்திரிகைக்கூட்டம், பழம்பாய் அவ்வளவுதான். நடப்புக்கும் கற்பனைக்குமிடையே காணும் பெரும் இடைவெளியில் குழப்பமடைந்தவர் போல் பாரதி தாம் கண்ட கனவின் பொருள் என்ன என்று கிண்டல் இழையோட, ஆன்ற தமிழ்ப் புலவீரை நோக்கிக் கேட்கின்றார்.

'குயில்பாட்டு' ஒரு 'பரிபூரணக் கவிதை' இலக்கிய, விமர்சன மரபுத் தளை ஏதுமின்றி, ஒரு 'பிரபஞ்ச மொழியில்' இயற்றப்பட்ட அழகுணர்ச்சிக் காவியம். கவிஞன் தன்னில் தான் ஆழ்ந்து இதைப் பாடியிருக்கிறான். உலகை உய்விக்க வேண்டிய நோக்கம் இதில் எதுவும் கிடையாது. அழகு என்ற, அநுபவம் சொல்லோடு இயைந்து படிக்கின்றவர்களின் அழகுணர்வோடு நேரடியாகத் தொடர்பு கொள்கின்றது. இதில் கதை எதுவுமில்லை; தேவையுமில்லை. சொல்லப்படும் கதையும் நம் உள்மனத்தின் நினைவு ஊற்றுக்கண்ணாக, காலம் காலமாக இருந்து வரும் நிகழ்வுக் கோவைதான் தமிழ் - இலக்கியமாயிருக்கும். அகம், புறம் என்ற பிரிவுகளில் இக்கவிதை 'அக' மரபைச் சார்ந்தது. அகத்திணைக் கவிதைகள் யாவும் அடிமன வெளிப்பாடுகள். சமூகச் செய்தியோ அல்லது புலவனின் சமூகப் பொறுப்புக்குச் சான்று வேண்டுமென்றாலோ, புறத்திணைக் கவிதைகளைப் படிக்க வேண்டும். அகத்திணையில் இத்தகைய நிர்ப்பந்தங்கள் இல்லை. சங்ககாலக் கவிஞர்கள் இரு திணைகளிலும் கவிதை இயற்றியுள்ளனர்.

அகத்திணைக் கவிதைகளில்தான் ஒரு கவிஞனின் அழகுணர்வு பளிச்சென்று புலப்படுகிறது. இதனால் தான் ஆரிய அரசனுக்குத் தமிழ்க் கவிதையின் சிறப்பு உணர்த்த, கபிலர், அகத்திணைப் பாடல்களாக "குறிஞ்சிப்பாட்டை" இயற்றினார் என்று எண்ண வேண்டியிருக்கிறது.

"அகம்" ஒரு கவிஞனின் 'அந்தரங்கக் குரல்'; புறம் அவனுடைய 'பகிரங்கக் குரல்'.

பாரதியின் 'குயில்பாட்டு'ம் அகத்திணைக் கவிதை தான். 'குறிஞ்சி'யைப் பின்புலமாகக் கொண்ட கவிதை. சம்ஸ்கிருதத்திலுள்ள 'காதம்பரி' யும் ஹிந்தியிலுள்ள 'பத்மாவதி'யும் பாரதியைப் பாதித்திருக்கக்கூடுமென்று தெரிகிறது.

இன்னொரு வகையில் பார்க்கப்போனால், அண்மைக்காலத்தில் அதிகமாகப் பேசப்படுகின்ற, பின் நவீனத்துவத்தைச் சார்ந்த கவிதையாகவும் 'குயில்பாட்டை'க் கொள்ளலாம்.

இது ஒரு நேரடிப் பாதையில் செல்லவில்லை. பின்னும் முன்னும் என்று காலம் பிறழ்ந்து மாறி மாறி வருகிறது. யதார்த்தக் கதைகளுக்குத் தேவையான தர்க்க நோக்கு எதுவும் கிடையாது. எது நடப்பு, எது கற்பனை என்று எதுவும் விளங்கவில்லை. நாம் கனவு காண்கிறோமா, அல்லது நாமே மற்றவர் கனவில் தோன்றும் கதாபாத்திரங்களா? ('Alice in the wonder - land) என்ற மயக்கம் தோன்றுகிறது. இதுவே இக்கவிதையின் வெற்றியாகவும் கொள்ளலாம். ❑



படிப்பகம்

www.padippakam.com


# SKY WINGS LTD

## TRAVEL AGENTS

**Instant Ticketing**

**We are holding July & August Tickets**

**"WE ARE ATOL BONDED FOR THE PROTECTION OF OUR CLIENTS"**

**119 Tooting High Street, London SW17 OSY**

TOOTING BROADWAY

**MAIN AGENT FOR**

**AIRLANKA**

ROYAL JORDANIAN الملكية الأردنية

*Call: Bala, Shankar or Dash*

ATOL

73782

**Tel: 0181-672 9111 (6ines),**
**0181-682 4747**
**Mobile: 0850 876921**
**Fax: 0181-672 0951**

**Open 7 days a week from 09. 30 till 21. 30hrs**

www.padippakam.com






# A Breach of Trust - The Poetics of Translation

**Chelva Kanaganayagam**

In spite of all the theorising about translations that has taken place in the last few decades, the scepticism of the American poet Robert Frost about the possibility of meaningful translation still retains a measure of validity. With characteristic wit and insight, Frost maintained that poetry is what is lost in translation. For those familiar with his poetry, his emphasis on metre and rhythm, and his preoccupation with the lyrical aspect of poetry, the reluctance to believe that a poem would survive in translation is hardly surprising. Very much outside the experiments introduced by T.S. Eliot, Ezra Pound and modernism in general, Frost remained consistently a lyrical poet whose poems derive their meaning at least partly from their metrical patterns. These are patterns that are very much a part of the English tradition and while it is obvious that other languages would have analogous forms, the precise rendering of one into another is hardly possible.

The implications of Frost's assertion are in fact, far more profound than one involving prosodic patterns. In the process of maintaining that what is lost in translation in fact the poem itself, Frost is making a statement about the meaning that resides in the poem. He is making the claim that given the symbiotic relation between form and content, there is no meaning outside the structure of the poem. Since it is possible, even in an imperfect manner, to communicate a sense of the literal meaning enshrined in the poem, Frost is probably suggesting that to compromise on the total meaning of the poem is tantamount to ruining the poem itself. In short, the poem is the meaning, in its totality, according to the poet.

It is hardly new to claim that translations have rarely been on the same level as the original, although this is not to maintain that translations are by definition inferior. Quite often translations have conveyed a bald sense of the content of the original, thereby prompting the more adventurous readers to learn the language of the original. At times, the reverse has happened, of which Edward Fitzgerald's *Rubaiyat* is an example, where the translation has exceeded the strength of the original. Here the original provides the impetus for the translator to create a work for his her own times, in a manner that the translated work acquires a life of its own and is only minimally indebted to the original.

None of these assertions makes the task of translation any easier or gets us closer to creating a theoretical matrix for such projects. Nor is it possible to define the attributes that a translator must possess in order to succeed. Perhaps there is no universal standard for translations and that impediments and successes are contingent upon a variety of social, cultural and linguistic considerations. But it is, nonetheless, true that a general awareness about the task of translation is likely to serve the purpose of circumventing the more obvious problems that a translator is likely to face. It is equally important to be aware that the theory that a bad translation is better than no translation at all is hardly tenable. As D.G. Jones points out, "to give the poem what is a normal straightforward translation is not to translate the meaning - since this text in an English context changes its meaning" (7). A bad translation is counterproductive in that it diminishes the author and the literature of the language, particularly in situations where a fluent bilingual community is not readily available.

To say that a poem has no meaning outside itself is not to claim that poetry lives in its own self-sufficient world,



படிப்பகம்

www.padippakam.com



unconcerned with the lives of its readers. On the contrary, poetry is very much a product of the times, as is evident in Tamil poetry through the ages. Paradoxically, however, what strikes the reader about a poem is its discontinuity. Its physical appearance on the page is often a reminder of its discontinuity, its fictive structure, as against prose. The novel works on the basis of continuity in that it creates a world that is self-sufficient in itself which then becomes in some way reflective of the world of its readers. Poetry, on the other hand, moves through association. In a very general sense, the impact of a poem depends on its metaphoric streangth, the manner in which it combines, juxtaposes, positions and counterpoints the various elements that constitute the poem. The external reference points of a poem are filtered and transformed within the structure of a poem to impart its meaning.

We are used to speaking of poetry in relation to individual poets and to individual acts of the imagination. This is in fact true and when we identify good and bad poets, this is exactly the assumption we make. In doing so, we often forget that the poet hardly ever works in isolation. He or she is the product of a whole literary tradition which gives to the poetry its particular texture. The influence could be at the level of metre and rhythm or it could be that the subject itself has been treated by different poets at various times. Even in free verse, which is the more favoured mode among contemporary writers, the influence is hardly escapable. Free verse is, at best, only partially free, and what the accomplished poet often does is to mould inherited traditions to offer new meanings. Among western critics, Eliot in his famous essay "Tradition and the Individual Talent " and Harold Bloom in his influential book *The Anxiety of Influence* have dealt with this aspect of intertextuality in great detail. To quote Jones again: "The meaning of a poem does not reside in the poem alone, but in its relation to other poems, other forms of language the whole semiotic code in which the author lives. Its meaning is largely a matter of the way it confirms, nuances, or subverts that code" (6).

The influences are not entirely literary, although this is what one often overlooks. One might also perceive a wide range of traditions - oral, mythical, religious etc. - that provide the layering of a poem. These are the cultural baggage of the people who read the poem, and the poet, in adopting a discontinuous mode, draws heavily on this layering and expects the reader, at some level, to respond to these multiple influences. For most readers, the response is at least partly instinctual, and it is this that determines the richness of a poem.

If one grants these general observations, then it would follow that translation is also an ideological act. It is not the relatively straightforward task of communicating an experience available in one language to a reader who is not familiar with the language. Particularly for those of us who translate contemporary Tamil poetry from Sri Lanka, there is an immediate sense of the urgency of the project. The poetry that has appeared in the last three decades have drawn from the past to produce a body of literature that is remarkable in its depth of understanding and its intensity of vision. Living and writing in the midst of political upheaval, dispossession, and cultural change, the writers reflect a radical relation between literary practice an ideology. In fiction and in poetry, the changes have been dramatic, and in their own way they reflect the momentous changes that have taken place in the lives of the people.

In this context, translation is more than intellectual pursuit. It is a celebration of the richness of a people and their literary achievements. It is a celebration of the consciousness of a people who have been radically transformed by suffering, by hardship, and by exile. This, then, is what translation is all about. The translator is in this scheme a spokesperson for his or her culture whose task is not much easier than that of the author. If what is lost in translation is to be offset by a corresponding gain, the translator needs to be aware of the significance of his endeavour, the responsibility it entails and the far-reaching effects of success or failure. An over-hasty or perfunctory translation trivialises the original and the new creation.

By way of illustration, I have given below a poem entitled "Ahalikai" written by S. Sivasekeram and published in an anthology entitled *Nathikarai Moongil* . The poem is not a particularly difficult one to comprehend and remarkably resistant to translation, and in that sense serves that present purpose well.

**அகலிகை**

கற்கள்.
மண்மேலும் மண்கீழும்
குன்றாய் நெடுமலையாய்த்
துண்டாய்த் துணிக்கையாய்
நின்றுங் கிடந்துங்
கற்கள்.

முனிவன் கணவன் கல்.
தேவன் கயவன்
ஆனாலும் அல்லன்இ கல்.
சபித்துப் பிழைத்திட்ட
ஆண்பிள்ளை.
கல்லாக வாழ்ந்து
கணநேரம் உயிர்த்தவளோ
கல்லாகவே ஆனாள்.

பின்னாளில்
கடல் கடந்து மீட்டதொரு
காதலியைத் தீப்பிழம்புட்
தள்ளியவன்,
ஊரார் சொல் அஞ்சித்
தூர ஒதுக்கியவன்
கல்தொடவும் தகுதியிலாக்
கடவுள் அவதாரம்
காலிடறக்,
கல்மாறிக் கல்லோடு
கல்லாக வாழ்வதற்காய்க்
காரிகையாய் ஆகாமல்

கல்லாய் இருந்திருந்தால்
காலத்தால் அழியாத
நெடுமலையாய் நிலைத்திருப்பாள்.

The title of the poem is a deliberate attempt to draw



படிப்பகம்

www.padippakam.com



together a whole tradition of literary writing on the topic. From its very inception in the *Ramayana* to its various versions in Tamil literature, the reader is made aware that the poem locates itself in a long tradition of poetry. Even among its more immediate predecessors, one is reminded of the poem by Mahakavi which deals with the same theme, although from a very different perspective. The whole cluster of associations thus becomes an integral part of the meaning of the poem.

As one moves to the formal structure of the poem, one is struck by its internal coherence, its slow beginning, the lyricism of its first stanza which is framed by the abruptness of the first and last line. The notion of stones in all its associations, including those of gender relations, becomes a motif and a subtext that runs through the poem. As we move to the second stanza, the lyrical impulse remains in the form of alliterations and repetition of sounds, but except for the moment of spontaneity in the woman's response, the prose is choppy, deliberately fragmented to show the harshness of a world dominated by patriarchy.

The third stanza is probably the most subversive in the entire poem, calling into questions a whole cosmic system that has collaborated in the suppression of women. Each line enacts a slow, tortured movement as the focus shifts from Ahalikai to Rama whose magnificient gesture of forgiveness is held up as yet another instance of male dominance. To be inanimate, to remain a stone, is then a far better alternative to living among stone-hearted men.

The poem, a sample of the richness of the poetry that has been written in recent times, is also an example of how the poem is simultaneously derived from a whole tradition around it and is at the same time enclosed within its own internal structure. The duality is what makes translation of poetry a challenge and a necessary endeavour. To translate such poetry is also to provide a window to the outside world in a manner that propaganda can hardly achieve. But it is important to remember that the irony and the impact of the poem derives from the presence of a discursive community that responds to myth as a real presence in everyday life.

That said, the actual translation is by no means easy. Granted that glossing terms that are inaccessible to the western reader is both necessary and inevitable, if the translation is to succeed, then it must locate itself in a tradition that the western reader would understand. If the process of defamiliarisation - of alerting the reader to an alien experience - is part of the intention of the translation, for the reader to respond, the translation needs to be aware of the traditions within which the reader functions. Given the various traditions of religious and secular poetry in English, the reader will bring to the poem a frame of reference that she is familiar with. If this does not find an echo in the translation, then the work will have little more than sociological interest. An important challenge in the translation derives from the fact myths in the western tradition operate in a way that is very different from a South Asian community.

How much does one include and how much does one alter is often a matter of individual choice. It is also determined, one would suspect, by the poem itself. To legislate in precise terms about the extent to which the translation must remain faithful to the original is to create an arbitrary system that would be counterproductive. But the least one could expect from the translator is an awareness of how poetry functions in English, its various metrical patterns, its contemporary trends, the various ways in which the lyric has survived in recent times. Since there is no real consensus about what form is superior, the translator must make the choice about the kind of reader he chooses to address. And this would determine the manner in which the translation is done.

If, for instance, the poem given above is translated, a supplementary note would be inevitable to alert the reader to the mythical tradition that inspires the poem. And the reader who understands the context will hardly be in a position to respond with the same subjective intensity that a native reader would to the various allusions in the poem. If that is what the western reader would lack, she would be in a far better position to respond to the gender issue of the poem. Thus there is loss and gain. And the translator works with this awareness to create a poem that succeeds on its own terms. George Woodcock is right when he says that "the secret of a good translation is to keep the bones of structure and the flesh of content, but ruthlessly to change the verbal structure until the work is, as it were, skinned afresh" (75).

John Donne ends one of his religious sonnets with the lines,

> Except you enthral me, never shall be free,
> Nor ever chaste, except you ravish me
>
> (Sonnet 14)

In this paradox one finds an analogy for the process of translation as well. If a translation is to remain faithful to the original, it also needs to move away from it, to accommodate itself to the practices and conventions of a non-Tamil reader. If a translated poem allows the reader to read it as if it were a part of her tradition, and then recognise with a shock its alienness and relevance, then the purpose of the translation is achieved.

**Works Cited**


Jones, D.J. "Text and Context: Some Reflections on Translation with Examples from Quebec Poetry." *Canadian Literature* 117 (Summer): 6 - 10.

Sivasegaram,S. Nathikkarai Moongil. Madras: National Arts and Literary Association, 1995.

Woodcock, George. "More than an Echo: Notes on the Craft of Translation. " *Canadian Literature* 117 (Summer 1988): 72-79.




படிப்பகம்

www.padippakam.com



## Faces From My Travels

Photographs by S F T Kunalan



Hello There




1942ஆம் ஆண்டு இலங்கையில் பிறந்த செல்வராஜா குணாளன், தொழிற் பயிற்சிக்காக 1967இல் பிரித்தானியா வந்தார். புடவைத்தொழில் தொழில்நுட்பத்தில் தேசிய உயர் டிப்ளோமா பட்டம் பெற்று, சில வருடங்கள் புடவைத்தொழில் துறையில் பணிபுரிந்தார். தற்போது உள்நாட்டு வருமான வரித்துறையில் பணியாற்றுகிறார்.
சிறு வயது முதலே புகைப்படக் கலையில் ஈடுபாடு கொண்ட குணாளன், 1983 முதல் லெஸ்ரஷையர் புகைப்படக் கழகத்தில் சேர்ந்து, புகைப்படக் கலையில் தீவிரமாக ஈடுபட்டு வரலானார். இவரது கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள், Slides பலவற்றிற்காகப் பரிசில்கள் பல பெற்றுள்ளார்.
புகைப்படச் செய்தியாளராக ஆவதே இவரது அவா. இலங்கை, இந்தியா, எகிப்து போன்ற கீழைத்தேய நாடுகளில் பயணம் செய்து, மக்களின் வாழ்வைப் பதிவு செய்வதே இவரது அக்கறையாகும்: பதிவு செய்தும் உள்ளார்.
1995 செப்டம்பரில் இவரது புகைப்படக் கண்காட்சி ஒன்றினை இலங்கை பிரிட்டிஷ் கவுன்சில் ஒழுங்கு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com





Evening Shadows



படிப்பகம்

www.padippakam.com



Pot-seller





Ships of the Desert




படிப்பகம்

www.padippakam.com



The Pyramids at Giza, Egypt





Fisherman's Hut, Sri Lanka




படிப்பகம்

www.padippakam.com



The Pyramids at Giza, Egypt



Evening Shadows



படிப்பகம்

www.padippakam.com



# எலுமிச்சை

அ. முத்துலிங்கம்

(கதைகளுக்கு முன்னுரை எழுதுவது எனக்குப் பிடிக்காது. அதென்ன கட்டியம் கூறுவதுபோல என்று கிண்டல் செய்வேன். கதையென்றால் சொல்ல வந்த விஷயத்தை கதையிலேயே சொல்லிவிட வேண்டியதுதானே! இது என்ன முன்னுரை? அறிவுரை?

ஆனால் இந்த முன்னுரை எழுதுவதில் ஒரு காரியமிருக்கிறது. கு. அழகிரிசாமி எழுதிய 'குமாரபுரம் ஸ்டேஷன்' என்ற கதையை நீங்கள் படித்திருப்பீர்கள். அதில் ஒரு பாத்திரம் மூலமாக, 'நாங்கள் ஒன்றை மனதில் நினைத்து செய்யும் செயல் எப்படி எங்களை அறியாமல் இன்னொரு காரியத்துக்கு உதவுகிறது' என்று சொல்லியிருக்கிறது. நான் சிறுவனாக இருந்தபோது நடந்த இந்த உண்மைச் சம்பவமும் அப்படித்தான். இனி, சற்று தள்ளி நில்லுங்கள், கதை வருகிறது.)

செடியாக இருந்த அந்த எலுமிச்சை இப்பொழுது மரமாக வளர்ந்து விட்டது.


அம்மா அதைக் கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தாள். சதிருக்கு வந்த தேவடியாள் கையைக் காலை விசுக்கி ஆடுவதுபோல அந்த மரம் கிளையெல்லாம் வீசி வளர்ந்துவிட்டது. ஆனால் பேச்சுக்கு ஒரு பூ இல்லை; ஒரு காய் கிடையாது. ஓவென்ற மலட்டு மரம்.

அம்மாவும் செய்யாத வித்தையில்லை; பார்க்காத வைத்தியமில்லை. மண்ணை வெட்டி, கொத்தி பசளையெல்லாம் போட்டு அலுத்துவிட்டது. அது அசையவில்லை. வடக்கு வீதிக்கு வந்த மஞ்சவனப்பதி தேர்போல தன்பாட்டுக்கு நின்றது.

இப்படித்தான் முன்பு ஒரு கறிவேப்பிலைச் செடி. அம்மா அதைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தாள். ஒரு சாண் உயரத்துக்கு வளர்ந்த பிறகு ஒருநாள் சொல்லாமல் கொள்ளாமல் செத்து விட்டது. அம்மாவும் 'விடேன் தொடேன்' என்று ஒன்பது தரம் ஒன்றன்பின் ஒன்றாய் செடிகளை நட்டு தன் கையால் தண்ணி ஊற்றி வளர்த்துப் பார்த்தாள். சரிவரவில்லை. கடைசியில் செல்லாச்சிக் கிழவி சொன்ன மந்திரம்தான் பலித்தது.

சூதகமாய் இருக்கிற நேரம் பார்த்து, பல பலவென்று விடியமுன் ஒட்டுப்போடாத ஒற்றைத் துணி உடுத்தி, கிழக்குப் பார்த்து செடியை நட்டால் அது பிய்த்துக்கொண்டு வளர்ந்துவிடும் என்பது தான் அது.

அம்மாவும் அப்படியே செய்து பார்த்தாள். என்ன ஆச்சரியம்! பார்த்துக் கொண்டிருக்கும் போதே மரம் வளர்ந்துவிட்டது. வளர்த்தியென்





படிப்பகம்

www.padippakam.com



றால் அப்படி ஒரு வளர்த்தி. ஊர்ச்சனம் எல்லாம் கறிவேப்பிலை கேட்டு வரத் தொடங்கி விட்டார்கள். கையாலே பறித்துக் கொடுத்தது போய் கொக்கத்தடி வைத்து ஒடித்துக் கொடுக்கவேண்டி வந்துவிட்டது. அவ்வளவு உயரம்.

காலை, பகல், இரவு என்றுகூட ஆட்கள் கறிவேப்பிலை கேட்டு வரத் தொடங்கினார்கள். அம்மாவும் சலிக்காமல் கொடுத்துவந்தாள். 'இது புண்ணியம் ஆச்சே!' என்று சொல்லிக் கொள்வாள்.

அந்த நேரம் பார்த்துத்தான் நாங்கள் நாய் வளர்க்கத் தொடங்கினோம். 'வீட்டுக்காரர், நாயைப் பிடியுங்கோ' என்று படலையில் இருந்து கூக்குரல் அடிக்கடி கேட்கத் தொடங்கியது. நாயென்றால் ஏதோ சந்திரகுலம், சூரியகுலத் தோன்றலில்லை. சாதாரண ஊர் நாய்தான். நான் பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போது வழியிலே பொறுக்கியது. என்னுடைய கையையும், முகத்தையும் நக்கி என்னை அது ஆட்கொண்டுவிட்டது.

வீட்டிலே அம்மா அடிபிடியென்று சத்தம் போட்டாள். பிறகு அது பால் குடித்த வேகத்தைப் பார்த்து அம்மாவின் மனது மாறிவிட்டது. பலூன் மாதிரி ஊதிப்போன வயிற்றைத் தூக்கிக் கொண்டு அது தள்ளாடித் தள்ளாடி நடந்தபோது அம்மாகூடச் சிரித்துவிட்டாள். இப்படித்தான் இந்த நாய்க்குட்டி எங்கள் வீட்டுச் சங்கதியானது.

குட்டியாயிருக்கும்போது அது செய்த வீர சாகஸங்களை வைத்து வீரன் என்று பெயர் வைத்தோம். அதுவும் கறிவேப்பிலை மரம்போல கிடுகிடென்று வளரத்தொடங்கியது. சாப்பாடு என்றால் வீரனுக்கு இதுதான் என்ற வரைமுறை கிடையாது. முருங்கக்காய்ச் சக்கையிலிருந்து சோறு, பருப்பு, பனங்காய் நார் என்று சாதி வித்தியாசம் பாராமல் சாப்பிட்டு பரிபூரண சந்தோசமாக இருந்தது.

என்னுடைய வாய் அசைந்தால் என் பின்னாலேயே சுற்றிக்கொண்டிருக்கும். அதற்கும் கொடுத்தபடியே சாப்பிடவேண்டும். கடைசியில் வெறும் கையைக்காட்டி, தொடையில் தட்டினால்தான் தன் வழியில் போகும். பள்ளிக்கூடத்து பாணில் இதற்கு ஓர் அளவுகடந்த மோகம். பள்ளி மணி அடித்ததும் காதல் வயப்பட்ட கன்னிப்பெண் போல உள்ளுக்கும், வாசலுக்குமாய் பறந்து திரியும். நான் வந்தேனோ இல்லையோ என் மீது பாய்ந்து பாணையும் சம்பலையும் பறித்துக் கொண்டு போய்விடும்

அதற்கு வயதுக்கு வந்த போது பக்கத்து வீட்டு கண்ணகியைச் சேர்த்துக்கொண்டது. வீரனின் முதுகில் நான் சவாரி செய்யும் அளவுக்கு குதிரை போல வளர்ந்துவிட்டது. நான் அதோடு இருக்கும் போது பெரியவர்கள் கூட பயபக்தியோடு தூர தேசமாய் செல்வார்கள். எனக்கு கர்வம் தலைக்கு மேலேறிவிடும்.

இப்படித்தான் ஒரு நாள் இரவு. கண்ணகி வந்து விட்டது. கண்ணகி என்றால் கற்பின் திருவுருவம் என்று அவசரப்பட்டு நினைத்துவிடக் கூடாது. எங்கள் ஊரில் அரைவாசி ஆண் நாய்கள் அதற்கு பின்னால்தான். அதனுடைய கருநீலச் சடையையும், மதுரையை எரித்த கண்களையும் வைத்து அப்படிப் பேர் வைத்திருப்பார்கள் போலும். கண்ணகியின் பின்னாலேயே வீரன் ஓடத்தொடங்கியது. குரைத்துக் குரைத்து துரத்தும் ஒலி. பிறகு 'பொதக்' என்று ஒரு சத்தம். அதற்குப் பின் மௌனம். மௌனம் என்றால் ஆயிரம் பேருடைய மௌனம்.

அப்ப அம்மா கூவினாள், 'இஞ்சருங்கோ, நாய் கிணத்துக்கை விழுந்திட்டுது போல கிடக்கு'. நாங்கள் அரிக்கன் விளக்கை எடுத்துக்கொண்டு அடித்துப்பிடித்து கிணற்றடிக்கு ஓடினோம். உண்மைதான். கிணற்றுக்குள்ளே இருந்து 'சதக் புதக்' என்ற சத்தம் வந்து கொண்டிருந்தது. அவசரமாக ஒரு கயிற்றிலே அரிக்கன் விளக்கைக் கட்டி கீழே இறக்கிப் பார்த்தோம். ஒரு மண்ணும் தெரியவில்லை.

இந்தக் கலவரத்தில் ஊர் அரைவாசி கிணற்றடியில் கூடிவிட்டது. பக்கத்து வீட்டு சிவப்பிரகாசம் பத்து பற்றறி போட்ட ரோர்ச் லைட்டை கொண்டு வந்தார். பெரிய எழுத்து நல்லதங்காளை தினமும் பெரிய குரலில் படித்து தொண்டையை வளமாக வைத்திருப்பவர். ரோர்ச்சை அடித்துப் பார்த்தால் வீரன்தான் கிணற்றைச் சுற்றி சுற்றி ஓயாமல் நீந்திக் கொண்டிருந்தது. அவர் ஒருவரிடமே ரோர்ச் லைட் இருந்தபடியாலும், உரத்த குரல் வளத்தில் அவருக்கு நிகர் எவரும் இல்லை என்றபடியாலும் நாய் மீட்பு பணிக்கு அவரே அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வாளியும் கயிறுமாக நாய் எடுப்பதற்கு நாங்கள் செய்த முதல் முயற்சிகள் தோல்வி அடைந்தன. அடுத்ததாக, பனைநாரில் செய்த பட்டை கிணற்றில் இறக்கப்பட்டது. நாய் இந்த விசித்திரமான ஏற்பாட்டை 'இந்தா, இந்தா' என்று வந்து மணந்து பார்த்துவிட்டு திரும்பிவிடும். பட்டையில் ஏறினால் உயிர் தப்பிவிடலாம் என்று ஒருமுறை அதற்குப் பட்டதுபோலும். ஏறிவிட்டது. நாங்கள் எல்லாம் கூக்குரல் இட்டு அதைப் பதனமாக இழுத்தெடுக்கும்போது, அது என்ன நினைத்ததோ மனதை மாற்றிக்கொண்டு மறுபடியும் பாய்ந்துவிட்டது.

கடைசியில் தொட்டில் யோசனையச் சொன்னது பாவாடை சண்முகம்தான். இவர் படு அப்பாவி. ஒருமுறை கிணற்றடியில் மனைவியின் உள்பாவாடை தோய்க்கும்போது கையும் களவுமாகப் பிடிபட்டுவிட்டார். அன்றிலிருந்து அவர் பிரக்கியாதி இப்படி பரவிவிட்டது. இந்த ஒரு குற்றத்தைத் தவிர அவர் அவ்வப்போது அருமையான யோசனைகளை தர வல்லவர்.

எங்கள் ஊரில் எதற்கு குறைவிருந்தாலும் தொட்டிலுக்கு குறைவில்லை. மழையோ, வெய்யிலோ குழந்தை விளைச்சல் அமோகமாக இருக்கும். 'நீ, நான்' என்று தொட்டில்கள் வந்துவிட்டன. நாலு மூலையிலும் கயிறு கட்டி வெகு கவனமாக தொட்டிலை இறக்கினோம். தொட்டில் தண்ணீரில் அமுங்கியபடியே இருந்தது. சிவப்பிரகாசம் ரோர்ச் லைட்டை கண்வெட்டாமல் அடித்துக் கொண்டிருந்தார். நாய் தொட்டில் பக்கம் நீந்தி வந்தபோது சொல்லி வைச்சதுபோல நாலுபேரும் கயிற்றை இழுத்துவிட்டார்கள். நாய் தொட்டிலில் வசமாய் மாட்டிவிட்டது.

வெளியே வந்ததுதான் தாமதம் நான் அதை ஆசை தீரக் கட்டிப்பிடித்தேன். அது ஒரு சிலுப்புச் சிலுப்பி தண்ணியைச் சிதறடித்தது. பிறகு ஒரே பாய்ச்சல்.



படிப்பகம்

www.padippakam.com



இந்தச் சம்பவத்திற்குப் பிறகு வீரன் கண்ணகியை கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. எதிர் வீட்டு வண்டார்குழலியிடம் அதற்கு மையல் ஏற்பட்டுவிட்டதும் ஒரு காரணமாக இருக்கலாம். (எங்கள் ஊரில் தமிழ்ப் பற்று கரைபுரண்டு ஓடிய காலகட்டம் இது. பற்பன்கூட தன் அணில் குஞ்சுகளுக்கு பரிமேலழகர், லோபாமுத்திரை என்று பெயர் வைத்திருந்தாக ஞாபகம்.)

எங்களுக்கு கணக்குப் பாடம் எடுப்பது கந்தையா வாத்தியார்தான். இவர் ஒரு தீவிரவாதி. இவர் பாடம் நடத்தும்போது நாங்கள் எல்லாம் கை விரல்களை ஒன்றுகூடத் தவறாமல் மேசை மேலே வைத்திருக்கவேண்டும். மனக்கணிதம் என்றால் மனதால் சொல்லவேண்டும், கையால் சொல்லக் கூடாது என்பது இவருடைய அற்புதமான சித்தாந்தம்.

பதின்நான்கிலிருந்து ஒன்பது போனால் மிச்சம் எவ்வளவு. இதுதான் கேள்வி. நாங்கள் உயிரைக் கொடுத்து இதற்கு விடை தேடிக்கொண்டிருந்தோம். அப்பொழுதுதான் வீரன் வந்து என் காலை நக்கியது. அதுமாத்திரமல்ல. விரகதாபக் கதாநாயகியைப் போல கொஞ்சம் முக்கல், முனகலையும் சேர்த்துக்கொண்டது.

கந்தையா வாத்தியார் எவ்வளவுதான் சுத்த வீரர் என்றாலும் அவருக்கும் நாய்க்கும் ஒரு சொந்தம் இருந்தது. அவர் வேட்டியைத் தூக்கினால் கணுக்காலில் இருந்து முழங்கால்வரை எல்லாம் நாய்க்கடி தழும்புகள்தான். இது புன்னாலைக்கட்டுவன் நாய், இது பெரிய கடை நாய், இது சித்தங்கேணி என்று வகைவகையான தழும்புகளை பொறாமைப்படும் படி காட்டுவார்.

நாயைக் கண்டதும் அவர் அஞ்சும் கெட்டு, அறிவும் கெட்டு, 'ஆர், ஆர் அந்த நாயைப் பிடி; கொண்டுபோ, கொண்டுபோ' என்று கத்தத் தொடங்கிவிட்டார். ஒரு கால் நிலத்திலும், மறுகால் கதிரையிலுமாக எந்தத் திசையிலும் பாய்வதற்கு ஏதுவாக யுத்தசன்னத்தனாக நின்றார். நானும் இதுதான் சாட்டு என்று நாயை இழுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டேன். வாத்தியாரைப் பயங்காட்ட என்னிடம் ஓர் அஸ்திரம் இருக்கிறது என்பதில் எனக்கு அளவுகடந்த மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சி வெள்ளத்தில் அமுங்கி பள்ளிக்கூடத்திற்கு திரும்பிப் போக வசதியாக மறந்துவிட்டேன்.

அதற்கு பிறகுதான் அம்மா வீரனை பள்ளி நாட்களில் நான் திரும்பி வரும்வரை கட்டி வைக்கத் தொடங்கினாள். ஆனால் இரவு நேரங்களில் வீட்டை காக்கும் duty இருப்பதால் அது சுதந்திரமாக உலாவந்து காவல் வேலைகளைப் பார்த்தது.

அன்று சனிக்கிழமை. தலை முழுகவார்க்கும் நாள். வீடு முழுக்க தடபுடல் பட்டது. உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை எண்ணெய் தேய்த்து என்னைத் தயார் நிலையில் வைத்திருந்தார்கள். அடுத்த கட்டம், அரைத்து களியாக்கிய சீயாக்காயைப் பிரட்டுவதுதான்.

அம்மா எலுமிச்சை மரத்தை பார்த்தபடியே நின்றாள். அம்மாவின் முகத்துக்கு கவலை தோதுப்படாது. அவவுடைய கண்களில் என்றுமில்லாத சோகம் கப்பியிருந்தது. ஐந்து சதத்திற்கு பத்து எலுமிச்சம்பழம் சந்தையிலே விற்ற காலமது. ஆனாலும் அம்மாவுக்கு அந்த மரத்தில் அப்படி ஒரு மோகம். அதை எப்படியும் காய்க்க வைத்துவிட வேண்டும் என்ற பிடிவாதம்.

அதற்கு முதல் நாள்தான் செம்பட்டையன் வந்து மண்ணைப் பிரட்டிக் கொத்தி, தண்ணியும் பாய்ச்சி விட்டிருந்தான். மலட்டு மரங்களுக்கே உரித்தான ஒருவித அலட்டலோடு அது நின்று கொண்டிருந்தது. அம்மாவுக்கு சலிப்பாக வந்தது. இடுப்பிலே கையை வைத்து யோசித்துக் கொண்டிருந்தாள்.

அம்மாவின் நிறமே எலுமிச்சம்பழ நிறந்தான். அவள் அப்படி அண்ணாந்து பார்க்கும்போது நெற்றியில் இட்ட குங்குமத்தின் ஒரு துளி மூக்கிலே ஒட்டிக்கொண்டு இருந்தது. அது ஒரு சிவப்புக்கல் மூக்குத்திபோல அழகாகத் தெரிந்தது. அம்மா அந்தக் கணம் என்ன நினைத்தாளோ, கனத்த பெருமூச்சொன்று வெளியே வந்தது.

அம்மா அப்படி கவலைப்பட்டிருக்கத் தேவையில்லை. அந்த மரத்தின் விதியை மாற்றப் போகும் ஒரு சம்பவம் சீக்கிரமே அங்கே நடப்பதற்கு இருந்தது. அப்போது அது அம்மாவுக்கு தெரியாது. எனக்கும் தெரியவில்லை.

எனக்கு கண்ணில் எண்ணெய் வழிந்து எரிந்து கொண்டிருந்தது. நான் அம்மாவின் கையைப் பிடித்து இழுத்தபடியே இருந்தேன். அம்மா இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. அந்த மரத்தைப் பார்த்தபடியே இருந்தாள்.

அப்போதுதான் அது நடந்தது. எங்கள் வேலைக்காரப்பெட்டை இளைக்க இளைக்க ஓடி வந்தாள். 'அம்மா, வாருங்கோ, வாருங்கோ; சுறுக்கா வாருங்கோ. விதானையாரை நாய் கடிச்சிட்டுது' என்று கூக்குரலிட்டாள்.

எங்கள் ஊரில் நாய் கடிப்பது என்பது சர்வ சாதாரணம். நுளம்புக் கடி, மூட்டைக் கடி போலத்தான் இதுவும். எனக்கு எட்டு வயது முடிவதற்கிடையில் நான் மூன்று தரம் நாயிடம் கடி வாங்கியிருக்கிறேன். ஆனால் இதை எங்கள் வகுப்பில் சொல்லுவதற்கு வெட்கம். என்னோடு படிக்கும் கூட்டாளிகள் பற்பனும், கிட்ணனும் இரணை வாழைப்பழம்போல ஒட்டிக்கொண்டு திரிவார்கள். பற்பன் கறுத்து மெலிந்துபோய் இருப்பான்; கிட்ணனோ இரண்டு ஆட்டில் ஊட்டிய குட்டிபோல தளதள வென்று இருப்பான். இந்தக் கிட்ணனுக்கு எட்டுத் தடவையும், பற்பனுக்கு பதினாலு தடவையும் நாய் கடிச்சிருக்கு. நாங்கள் எங்கள் விழுப்புண்களை ஆளுக்கு ஆள் காட்டி மகிழ்ந்திருக்கிறோம்.

நாய்க்கடிக்கு வைத்தியமும் அப்படித்தான். நவசியரிடம்தான் போவோம். அவர் மந்திரித்துக் கொண்டே பச்சிலைச் சாறை தலையிலே தேய்த்து நடு உச்சி மயிரையும் மூன்று தரம் இழுத்துவிட்டு, பச்சிலையையும் கடிவாயில் கட்டிவிடுவார். அவ்வளவுதான்.

என்னைப்போல ஒரு மகாசாது உலகத்தைப் பிரட்டிப் போட்டாலும் கிடைக்காது. மற்றவர் சோலிக்கு போனதில்லை.அப்படிப்பட்ட என்னை மடக்க கண்ணகி ஒரு தந்திரம் செய்தது.

வழக்கம்போல மருந்துச் சிரட்டையை எடுத்துக்கொண்டு முலைப்பால் வாங்கிவர கிளம்பினேன். அழகம்மாக்கா வீட்டுக்குத்தான் முதலில்



படிப்பகம்

www.padippakam.com



போனேன். அங்கே பால் தீர்ந்துவிட்டது. உடனே வடிவக்கா வீட்டுக்குத் திரும்பினேன். அது வற்றாத ஊற்று. இருபத்து நாலு மணி நேரமும் பால் பொங்கியபடி இருக்கும். என் தலையை தூரத்தில் கண்டவுடனேயே ரவிக்கையை தளர்த்தி வாசலுக்கு வந்துவிட்டார், வடிவக்கா.

சிரட்டை நிறைய சுடு பால் தளும்ப ஏந்திக் கொண்டு மெள்ளத் திரும்பும்போது கண்ணகி கண்டுவிட்டது. ஒருவித புளகாங்கிதத்தோடு என்னைத் துரத்தத் தொடங்கியது.

கண்ணகிக்கு சிறுவர்களின் பிருட்டச் சதையில் அப்படி ஓர் ஈடுபாடு. அதுவும் எனக்காக இவ்வளவு நாளும் விரதம் காத்திருந்தது. நான் சிரட்டையைக் கடாசிவிட்டு ஓடிப்போய் வேலியில் பாய்ந்து ஏறுமுன் எட்டிக் கடித்துவிட்டது. நான் அழுதுகொண்டே அம்மாவிடம் ஓடிப்போனேன். அம்மா களிசானை இழுத்துப் பார்த்துவிட்டு 'ஐயோ! மூன்று பல்லு பதிஞ்சிருக்கு' என்று ஓலமிட்டாள். நான் பட்ட அவஸ்தையெல்லாம் அந்தக் கணம் பஞ்சாய்ப் பறந்துவிட்டது. மூன்று பல் என்றதும் பற்பனைப் பார்த்து புளுகுவதற்கு என்னிடம் ஒரு அபூர்வ விஷயம் கிடைத்ததென்பதில் என் மனம் குதித்தது.

வீரன் கிராமத்து நாய்க்குரிய சகல லட்சணங்களையும் கொண்டிருந்தது. கிடைத்ததைச் சாப்பிட்டு, தானுண்டு தன் வாசலுண்டு என்று கிடக்கும். தூங்குகிற நேரத்தில் தூங்கி, விழிக்கிற நேரத்தில் விழித்து காவல் கடமைகளைச் சரிவரச் செய்யும். தன் குல ஆசாரம் தவறாமல் அவ்வப்போது தெருசண்டைகளில் கலந்து கொள்ளும். மற்றும்படி, ஆட்களைக் கடித்ததென்பது அதன் bio data வில் கிடையாது.

இப்படிப்பட்ட வீரன் விதானையாரைப் போய் கடித்துவிட்டது. இப்ப இரண்டு நாளாய் அது சுரத்தில்லாமல்தான் இருந்தது. சும்மாட்டுத் துணிபோல சுருண்டுபோய் கிடந்தது. மயிலை நிறக் கண்கள் மஞ்சளாகி விட்டன. பெரிய சிரமத்தோடு தன் பாரிய உடம்பை சுமக்க முடியாமல் சுமந்து கொண்டுதான் அது நடந்தது.

பள்ளிக்கூடத்தில் என் யோசனை முழுக்க வீரனைப் பற்றியே இருந்தது. ரத்தினேஸ்வரி அக்கா என்றால், இடைத்தொடர் குற்றியலுகரம் பற்றி இடைவிடாது உருவேற்றிக் கொண்டிருந்தார். 'என் சொல்லை ஒருபோதும் தட்டாதே! என் வாசக் கட்டி! எதற்காக விதானையாரைப் போய் கடித்தது. அதற்கு ஏதாவது நடந்துவிடுமோ?' என்று ஒரே பயமாக இருந்தது. அப்பொழுதே ஓடிப்போய் கட்டிப்பிடித்து முத்தம் கொடுக்க வேண்டும்போல பட்டது.

நான் பயப்பட்டது சரிதான். நான் திரும்பி வந்த போது எங்கள் வீட்டுப் படலையில் ஒரு சிறு கூட்டம் கூடியிருந்தது. எனக்கு துணுக்கென்றது. எங்களுடைய ஐயா, நவசியர், சிவப்பிரகாசம், வல்லியர், சிவக்கொழுந்து என்று முக்கியமானவர்கள் எல்லாம் சேர்ந்துவிட்டார்கள். அம்மா காத்திருந்து என்னுடைய கையைப் பிடித்து திண்ணைக் குந்தில் ஏற்றிவிட்டாள்.

நாய்க்கு விசர் பிடித்துவிட்டதாம். அது கடித்தால் ஆட்கள் சாவது நிச்சயமாம். என்னைக் கிட்டப்போகவேண்டாம் என்று அச்சுறுத்தி வைத்தார்கள்.

அப்போதுதான் நான் வீரனைப் பார்த்தேன். அது வேலியோரத்தில் நின்றுகொண்டிருந்தது. தலை தோளுக்குக் கீழே தொங்கியது. இரைத்து, இரைத்து குலைத்தது. வால் கால்களுக்கிடையில் சுருண்டுவிட்டது. நாக்கைத் தொங்கப்போட்டபடி நிலை குத்தாமல் பார்த்தது. வீரன் போலவே இல்லை. நாலு நாளில் குருக்கடித்த வாழைபோல உருத்தெரியாமல் மாறிவிட்டது.

ஊர் முழுக்க இந்தப் புதினம் பரவிட்டது. அப்பொழுது பறவைக்காவடி எடுத்ததுபோல பறந்து வந்தார் பற்பனின் அப்பா. இவர் பாட்டு வாத்தியார். சங்கீத ஞானம் கொஞ்சம் முன்னே பின்னே இருந்தாலும் வீட்டுக்கு வீடு 'வரவீணாவை' பிரபலப்படுத்தி வரலாறு படைத்தவர். ஆரபி ராகத்தில் அளவில்லாத பக்தி. எப்பவும் அதை வெளியே விடாமல் வாய்க்குள் வைத்து முணுமுணுத்துக் கொண்டு இருப்பார். ஏகப்பட்ட குஷி பிறந்துவிட்டால் மட்டும் வாயால் பாடுவார். சொல்லாமல் கொள்ளாமல் மேல் ஸ்தாயிக்குப் போய் அங்கேயே நின்று அவஸ்தைப் படுவார். கீழே வரவே மாட்டார்.

இவ்வளவு கீர்த்தி இருந்தாலும் மிகவும் இரக்க சுபாவம் கொண்டவர். 'நாய்க்கு விசரில்லை; பாவம், ஏதோ வருத்தம்' என்று முதன்முதலாக துணிந்து நாயின் கட்சியைப் பேசியவர் அவர் தான்.

இப்ப கூட்டம் இரண்டு கட்சியாகப் பிரிந்து விட்டது. வாதப் பிரதிவாதங்கள் சூடு பிடித்தன. நாயைக் கொன்றுவிட வேண்டுமென்பது ஒரு கட்சி. இன்னும் கொஞ்சநாள் வைத்துப் பார்க்க வேண்டுமென்பது அடுத்த கட்சி. ஒருவரும் விட்டுக் கொடுப்பதாயில்லை. அந்தக்காலத்தில் நாங்கள் மூன்றாவது அம்பயருக்கு எங்கே போவது?

அப்பொழுதுதான் எடுப்பான குரலில் நவசியர் பேசத் தொடங்கினார். இப்படியான சங்கதிகளில் எங்கள் ஊருக்கு அவர்தான் 'வேதநூலறிந்த மேதகு முனிவர்'. திருப்பித் திருப்பி ஒத்திகை பார்த்த பட்டாளத்து வீரர் நடைபோல அவருடைய சொற்கள் ஒரு நிதானத்துடன் தாளம் தவறாமல் வந்து விழுந்து கொண்டிருந்தன.

'இஞ்ச கேளுங்கோ! நான் சொல்லுறதை வடிவாய்க் கேளுங்கோ! நாய் தண்ணியைக் காட்டினால் குலைத்தபடியே இருக்கு; குடிக்குதில்லை. நாக்கு தொங்கிப்போயிருக்கு; நல்லாய்ப் பாருங்கோ, தண்ணி கொட்டினபடியே கிடக்கு. நாய்க்கு விசர்தான்; ஐமிச்சமே இல்லை!' என்று அடித்துக் கூறிவிட்டார். விசாரணைக் கூட்டம் முடிவு பெற்றது. மன்னர் பேச்சுக்கு மறு பேச்சுண்டோ?

இப்படியாக எங்கள் வீட்டு நாயின் எதிர்காலத்தை நாயை ஒரு வார்த்தைகூடக் கேட்காமல் தீர்மானித்தது எனக்கு தர்மமாகப் படவில்லை.

வேலைக்காரப் பெட்டை தோன்றினாள். அவள் அப்படித்தான் சாமி வரம் தர வருவது போல திடுதிப்பென்று காட்சி தருவாள். தன் கன்னத்தில் விரலை வைத்து தலையை சிறு அசைப்பு அசைத்து என்னைப் பார்த்தாள். 'நாயை அடிக்க செல்லத்தம்பி வரப்போறான்' என்று மொய் அறி



படிப்பகம்

www.padippakam.com



விப்பு செய்வது போலச் சாதாரணமாகச் சொல்லி விட்டு மறைந்துவிட்டாள், பாதகத்தி.

கிராமங்களில் ஒவ்வொருவருக்கு ஒவ்வோர் பேர் வந்துவிடுகிறது. இது எப்படி என்ற பூர்வீகம் யாருக்கும் தெரியாது. மாட்டுக்குச் சரி, குதிரைக்குச் சரி லாடம் அடிப்பதென்றால் சின்னையன்தான். தென்னை மரத்திலேறி பருவம் தாண்டாத ஆட்டுச் செவிப் பதம் இளநீர் வெட்டுவதென்றால் அதற்கு மாணிக்கம்தான். அந்தக் கலையில் அவனை மிஞ்ச ஆள் இல்லை. விசர் நாயை அடிப்பது என்றால் அது செல்லத்தம்பிதான். அவனுக்கு அப்படி ஒரு கீர்த்தி.

இவர்கள் எல்லாம் எந்தப் பயிற்சி மையத்தில் கற்றுத் தேர்ந்தார்கள். நாய் அடிப்பதில் ஒருவன் கியாதி பெறுவதென்றால் எத்தனை நாயைக் கொன்றிருக்க வேண்டும்?

செல்லத்தம்பி பின்னுக்கு கைகளைக் கட்டிய படி நிலம் அதிராமல் நடந்து வந்தான். அவன் புஜத்தின் தசைகள் திரண்டு திரண்டு கிடந்தன. தோளிலே போட்ட துண்டு முதுகிலே இருந்த வாள் வெட்டுக் காயத்தை முற்றிலும் மறைக்க முடியாமல் கிடந்தது.

வீரனை இப்ப பிடித்துக் கட்டிவிட்டார்கள். கழுத்திலே இரண்டு சுருக்கு கயிறு; ஒன்று ஒரு மரத்தில் கட்டப்பட்டிருந்தது. மற்றது ஒரு வேலிக் கதியாலில். வீரன் கால்களைப் பரப்பிக்கொண்டு நடுவிலே அசையமுடியாமல் நின்றது. ஏதோ அனர்த்தம் நடக்கப் போகிறது என்று அதன் உள்ளுணர்வுக்கு தெரிந்திருக்க வேண்டும். ஒரு சத்தம் இல்லை; முனகல் இல்லை. சுற்றியிருந்த அந்த முகங்களில் ஒரு சிநேகமான முகத்தை அது தேடியிருக்கவேண்டும். மஞ்சள் பழுத்த அந்தக் கண்கள் பரிதாபகரமாக என்னை ஒரு கணம் பார்த்து மீண்டன.

சுயம்வரத்துக்கு ஆள்விட்டு அழைத்ததுபோல கூட்டம் சேர்ந்துவிட்டது. ஊர் இளந்தாரிகள் எல்லாம் நெருக்கி அடித்தார்கள். நாய்அடி என்பது ஒவ்வொருநாளும் பார்க்கக் கிடைக்கிற சங்கதியா? செல்லத்தம்பி மேல் துண்டை ஒரு மரக்கிளையில் மாட்டிவிட்டு வேட்டியை மடித்துக் கட்டினான். இரும்புப் பூண்போட்ட உலக்கையை யாரோ அவன் கையில் கொடுத்தார்கள். அதை ஒற்றைக் கையால் பின்னால் பிடித்தபடி வியூகத்தை உடைத்துக்கொண்டு நாய் இருந்த திக்கில் பராக்குப் பார்த்தபடி மெள்ள அடிவைத்து நடந்தான்.

எனக்கு அந்த நேரம் பச்சாத்தாப உணர்விலும் பார்க்க இந்த நாய்அடி எப்படி இருக்கும் என்ற ஆவல் ஒரு கணம் தோன்றியதை நினைத்து வெட்கமாக இருந்தது.

கிட்டவந்த செல்லத்தம்பி காலை அகட்டி வைத்து வாகாக நின்று கொண்டு கண் இமைக்கும் நேரத்தில் உலக்கையைச் சுழற்றி நாயின் மண்டையில் ஒரு போடு போட்டான். 'ங்கா' என்ற ஈனமான கதறல் ஊர் முழுவதும் கேட்டது. நாய் சுருண்டுபோய் விழுந்தது.

நான் கொஞ்சம் கிட்டவந்து பார்த்தபோது அதன் தலையிலே ஒரு சொட்டு ரத்தம் சிந்தியிருந்தது. கபாலம் வெடித்து வெள்ளைக் களிபோல மூளை ஓடிக்கொண்டிருந்தது. கண்கள் அகலமாகத் திறந்துபோய் கிடந்தன. நாயின் பற்கள் ஆவென்று என்னைப் பார்த்துச் சிரித்தன. என்னுடைய இருதயம் மெதுவாகக் கிளம்பி தொண்டைக் குழியை வந்து அடைத்துக் கொண்டது.

செல்லத்தம்பி நாய் அடித்த கதை அட்ட திக்குகளிலும் பரவிவிட்டது. அந்தப் பிரதாபத்தையே எல்லாரும் கதைத்தார்கள். அவன் உலக்கையை எடுத்த விதத்தையும், விசுக்கியதையும், ஒரேயடியில் நாயை வீழ்த்தியதையும் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனார்கள்.

ஆட்கள் எல்லாம் போன பிறகு அம்மாவைப் பார்த்து ஐயா 'என்ன செய்வம்?' என்று கேட்டார். அம்மா கண்ணைத் துடைத்தபடி, 'அந்த எலுமிச்சை மரத்தடியில் தாட்டு விடுங்கோ' என்றாள்.

நாயை அடித்துக் கொன்றுவிட்டாலும் ஊரில் விதானையாருக்கு என்ன நடக்குமோ என்ற பயம் இருந்து கொண்டுதானிருந்தது. ஊர்ச்சனங்கள் எல்லாம் அடிக்கடி போய் 'இன்னும் இருக்கிறாரா' என்று நோட்டம் பார்த்து வந்தார்கள். விசர் பிடிக்க பதினாலு நாள் ஆகும் என்று மெல்லிய குரலில் பேசிக்கொண்டார்கள். விதானையார் என்னவென்றால் பச்சிலையைக் கட்டிக்கொண்டு பேசாமல் இருந்துவிட்டார். வண்டி கட்டி பெரியாஸ்பத்திரிக்கு போகும்படி சிலர் வற்புறுத்தியும் அவர் தலையைப் பலமாக ஆட்டிவிட்டார்.

சனியோட சனியெட்டு, ஞாயிறு ஒன்பது என்று பதினாலு நாள் கழிந்துவிட்டது. ஒன்றுமே நடக்கவில்லை. விதானையார் என்றால் மழைக்கு வெடித்த மரவள்ளிபோல விளைந்துபோய் இருந்தார். காயம் ஆறின இடம்கூடத் தெரியவில்லை. முன்புபோல அவர் தன் காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்தார்.

இப்படித்தான் நான் எனது பால்ய காலத்து அத்தியந்த நண்பனை மூடசனங்களின் அறியாமையால் இழக்கவேண்டி நேர்ந்தது. அதனுடைய ஓவென்ற அவலக்குரல் எனக்கு பல இரவுகள் தொடர்ந்து கேட்டன. அதை இழுத்துக்கொண்டு போனபோது மஞ்சள் பூத்த கண்களால் அது என்னை இரந்து பார்த்தது திருப்பித் திருப்பி ஞாபகத்துக்கு வரும். இனி என்ன? அது திரும்பவா போகிறது!

இந்த அநியாயக் கதையில் சொல்லுவதற்கு இன்னும் ஒன்று மிச்சமிருக்கிறது.

அந்த வருடம் அம்மாவின் எலுமிச்சை மரம் இலை தெரியாமல் பூத்துக் குலுங்கியது. கொத்துக் கொத்தாய்க் காய்த்தது. காலை நேரங்களில் நிலம் முழுவதும் வெளிர் மஞ்சள் பந்துகளாக எலுமிச்சம் பழங்கள் பரவிக் கிடந்தன. பேய்க் காய்ச்சல் என்று சொல்வார்களே, அப்படி. அம்மா விழுந்து விழுந்து பொறுக்கினாள். அள்ள அள்ள வந்துகொண்டே இருந்தது. ஆசைதீர ஒரு பெரியசாடி நிறைய ஊறுகாய் போட்டாள், அம்மா.

எல்லாரும் வட்டமாக இருந்து சாப்பிடும்போது அம்மா ஊறுகாயைப் பரிமாறினாள். ஐயாவுக்கு, அம்மாவை லேசிலே பாராட்ட மனம் வராது. அன்று என்னவோ ஐயா, 'ஊறுகாய் அருமையாய் விழுந்திருக்கு' என்றார். எல்லோரும் சப்புக்கொட்டி அதை ரசித்து சாப்பிட்டார்கள்.

ஒருவருக்காவது வீரனுடைய ஞாபகம் வரவில்லை. ❑



படிப்பகம்

www.padippakam.com


# Prompt World Wide Travel Ltd.

## THE ONE STOP SHOP FOR ALL YOUR TRAVEL NEEDS

**Whole Agents as well as Retail Agent in Europe**

- We cover major cities and major Airlines as well as charter flights
- We offer 20% discount on Travel Insurance
- Our Credit Card charge is 1.49% only
- Our refunds will be honoured within 24 hrs (subject to terms and conditions)
- We do Ticket On Departure (TOD)
- We do Pre Paid Travel Advice (PTA)
- Tours and Hotel Bookings
- Car Hire

OUR ULTIMATE AIM IS THAT EVERY MINUTE ONE OF OUR PASSENGERS SHOULD CHECK IN

Please always check with us before ordering your Tickets

*Offers are subject to amendment by ourselves*

The Best Price in Town
Fully Bonded
ATOL & IATA
Agent

EGYPTAIR

Main Agent

ROYAL JORDANIAN

ATOL 4307

IATA

IATA BONDED
INSTANT TICKETS
AVAILABLE

CALL US ON:
0181-578 0000
FAX: 0181-813 2000

**PWT Ltd.**

**Prompt House**
Western Avenue,
Greenford, Middlesex
UB6 8EU

GERMANY BRANCH:
Neheimer Marktz
59755 ARNSBERG
GERMANY 700211
Tel: 01714757614

CALL FREE ON
**0800 00 00 08**

உங்கள் பிரயாண தேவைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்


படிப்பகம்

www.padippakam.com



அம்பை

# ஆரம்பகாலக் கவிதைகள்



ஞானம் பெற எல்லா முயற்சிகளையும் அவள் மேற்கொண்டாயிற்று. மூன்று நாட்கள் தொடர்ந்து அழுதால் கடவுளைக் காணலாம் என்று ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சொல்லியிருக்கிறார் என்பதால் மூன்று நாட்கள் தொடர்ந்து அழ வசதிப்படா விட்டாலும் (ஒவ்வொருவருக்கும் தனி அறை இல்லாத வீட்டில், காலையில் எழுந்ததிலிருந்து இரவு தூங்கும் வரை அம்மாவின் கட்டளைகளோ அப்பாவின் குரலோ துரத்தும் வீட்டில், தொடர்ந்து எதைத்தான் செய்ய முடியும்?) விட்டு விட்டு ஆறு நாட்கள் அழுதும் எந்தக் கடவுளும் தரிசனம் தரவில்லை. அதில் ஏமாற்றம் தான். ஞானத்தைத் தேடி அலையும், ஒரு பதினாறு வயதுப் பெண் வேறு என்னதான் செய்ய முடியும் என்று தெரியவில்லை. எதுவும் தெளிவாகப் புரியவில்லை. அவள் ஒரு பாவமும் செய்யவில்லை என்றுதான் அவள் நம்பினாள். ஆனால் சில விஷயங்கள் பாவத்தில் சேர்த்தியா என்று தெரிய வில்லை. சின்ன வயதில் ஒரு முறை அக்காள் பத்மாவுக்கும் இவளுக்கும் ஆளுக்கொரு தர்பூஷிணிப் பழத்துண்டு தந்த போது இவள் தன்னுடையதை உடனே தின்கவில்லை. பத்மா முடிக்கும் வரை காத்திருந்துவிட்டுப் பிறகு தன் பழத்துண்டை நக்க ஆரம்பித்தாள். "ஏய், எனக்குக் கொஞ்சம் தாடீ" என்று பத்மா கெஞ்சிய போது, பழரசம் முகவாயில் ஒழுக, "மாட்டேன்" என்று



படிப்பகம்

www.padippakam.com



மறுத்தாள். ஒருமுறை அம்மாவை மனதிற்குள் "சனியனே" என்று திட்டியிருக்கிறாள். எப்போது பார்த்தாலும், முடி சீவிக்கொள்ள, பாட, பால்குடிக்க, சாப்பிட, தூங்க, எண்ணெய் தேய்த்துக் கொள்ள என்று கண்டித்தவாறிருக்கும் அம்மா 'பட்' டென்று இறந்து அம்மா இல்லாத அனாதையாகத் தன்னைக் கற்பனை செய்திருக்கிறாள். ஒரு "கெட்ட" புத்தகத்தைக் கூட அவள் மூன்று முறைகள் வாசித்துப் பின்னால் குளியலறை வெந்நீர் அடுப்பில் போட்டு எரித்து விட்டாள். இதை எல்லாம் எந்தக் கணக்கில் சேர்ப்பார்கள் என்று தெரியவில்லை. சேர்ப்பவர்கள் யார் என்றும் தெரியவில்லை. ராஜா காலத்து உடையணிந்த சித்ரகுப்தர் இந்தக் கணக்கெல்லாம் வைத்துக் கொள்கிறார் என்றால் மாறிவரும் காலம் பற்றி அவருக்கு எடுத்துச் சொல்ல - அதுவும் பெண்கள் வெகுவாக மாறி விட்டதை விளக்க - யாராவது நம்பகமான நபர் உண்டா போன்ற கேள்விகள் அடிக்கடி மனதில் எழுந்தன.

இவ்வாறு ஞானத்தைத் தேடி அலைந்து, தானும் தன் மூலம் உலகமும் உய்வதற்கான முயற்சிகளை அவள் மேற்கொண்டிருந்த போதுதான் அந்தப் பெரிய அளவு நீல டயரி வீட்டுக்கு வந்தது. இவர்கள் குடும்ப டாக்டருக்கு யாரோ தந்து, அவர் இவர்கள் வீட்டுக்கு அனுப்பி வைத்தது. குழந்தைகளுக்கான பால் பவுடர் தயாரிக்கும் நெஸ்லே கம்பெனியாரின் டயரி. அன்னை மற்றும் மகவு புகைப்படங்களுடன் தாய்மை மருத்துவ வல்லுநருக்கான குறிப்புகளுடன் கூடிய டயரி அது. யாக்கை நிலையாமை பற்றிய சிந்தனைகளில் அவள் மூழ்கியிருந்த வேளையில், யாக்கை உருவாவதுடன் சம்பந்தப்பட்ட டயரி தன் வீடு தேடி வந்தது இறைவன் தன் மனோபலத்தைச் சோதிக்கச் செய்யும் முயற்சி என்று அவள் திடமாக நம்பினாள். "ஒரு பக்தருக்குச் சூலை நோய், எனக்கு தாய்மை மருத்துவ வல்லுநரின் டயரியா? ஹூம்!" என்றவாறு இறைவனின் சோதனைகளை எண்ணி வியந்தாள். பூசை அறைக்குச் சென்று ரவிவர்மாவின் கடவுள் ஓவியங்களை நேர் கொண்ட பார்வையுடன் நோக்கி ஒரு ஞானப் புன்முறுவல் பூத்தாள். நடிகை மதுபாலாவின் கோணல் புன்சிரிப்பிலிருந்து இவள் தன் ஞானப் புன்முறுவலைக் கடன் வாங்கியிருந்தாள். இந்தப் புன்முறுவல் அவள் முகத்தில் தோன்றும்போது முகத்தில் ஒளி கூடுகிறது என்று அவளுக்குத் தோன்றியது. ஆனால் சில காரணங்களினால் அதை மற்றவர் முன் செய்வதைத் தவிர்த்தாள். "என்ன, பல்வலியா?" என்று அம்மா ஒரு முறை கேட்டு விட்டது ஒரு காரணமாக இருக்கலாம். ஞான வேட்கை இல்லாதவர்களுக்கு இந்தப் புன்முறுவலை இனம் காணும் பக்குவம் ஏது?

அந்த டயரியின் நீல நிறம் அவளை மிகவும் ஈர்த்தது. நீலம் அவளுக்குப் பிடிக்கும். காரணம் வான் நீலம். கடல் நீலம். பண்ணுருட்டியிலிருந்து வந்த இரண்டடி உயர குழலூதும் கண்ணன் பொம்மையும் நீலம். அவளிடம் ஒரு நீலப் பட்டுப் பாவாடையும் இருந்தது. ஆனால் உலக வாழ்க்கையுடன் இணைந்த ஒன்றாக அது இருந்ததால் நீலம் பிடிப்பதற்கான காரணங்களின் கணக்கில் அவள் அதைச் சேர்ப்பதில்லை. நீல டயரி யாராலும் உபயோகப் படுத்தப் படாமல் கிடந்ததால் அதை அவள் தன் உபயோகத்துக்கு எடுத்துக் கொண்டாள்.

அதை எதிரில் வைத்துக் கொண்டு, அதன் வழுவழுப்பான வெற்றுப் பக்கங்களைப் புரட்டியபோது, அவளுக்கு முன் பல பக்தர்கள் செய்ததைத் தானும் செய்ய வேண்டும் என்ற அவா எழுந்தது. பக்திக் கவிதைகளை எழுதும் அவா. இரண்டொரு நாட்களுக்குப் பின் சிறிது முயற்சி செய்து 'கடவுள் எங்கே?' என்று தலைப்பிட்டு ஒரு கவிதை எழுதினாள். "எங்கே இறை எனக் கேட்காதே பேதையே, ஆங்கே உன் உள்ளத்தே உறைவான் இறைவன்!" என்று ஆச்சர்யக் குறியுடன் முடிந்தது கவிதை. தன்னை கைவிடக் கூடாது என்றும் தன்னை ஆட்கொள்ள வேண்டும் என்றும் இறைஞ்சல் தொனியில் சில கவிதைகளை எழுதினாள். தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போல் கவிதைகள் அமையவில்லை என்று தோன்றியது. அது குறித்துச் சிறிது வருத்தமாகவும் இருந்தது. சற்றுக் கோபமாகவும் இருந்தது. ஞானத் தேடலில் இவர்கள் எங்கெல்லாம் அலைந்திருக்கிறார்கள் காடு, மேடு, கழனி என்று இரவு பகல் பாராமல்? திருட்டு, விபத்துக்கள் என்றிருக்கும் நகரத்தில் வாழும் பதினாறு வயதுப் பெண் எப்படி அது போல் அலைய முடியும்? வீட்டுத் தோட்டத்தை வேண்டுமானால் அவள் சுற்றி வரலாம். மற்றபடி அதிக தூரம் செல்ல அனுமதியும் கிடையாது. தோழிகளுடன் 'பாசமலர்' படம் பார்க்கப் போனதற்கே காலம் கெட்டுக் கிடக்கிறதென்றும், இப்படி இவள் போவதில் அவளுக்கு உடன்பாடில்லை என்றும் அம்மா கடிந்து கொண்டாள். மேலும், அந்தப் பக்தர்களுக்கு எல்லாக் கட்டங்களிலும் இறைவன் துணை நின்றிருக்கிறார். நரியைப் பரியாக்கி, பரியை நரியாக்கி, பிட்டுச் சுமந்து என்று அநேக வழிகளில் ஒத்துழைத்திருக்கிறார். இவளைப் பொறுத்த வரையில் அநியாயமாக நடந்து கொள்கிறார் இறைவன் என்று தோன்றியது. ஒரே ஒரு அற்புதத்தைக் கூட இவளுக்காகச் செய்யவில்லை. ஒன்றுமில்லை. ஒரு ரயில் இத்தனை வேகத்தில் இந்தப் பக்கத்திலிருந்து வருகிறது, இன்னொரு ரயில் வேறு வேகத்தில் எதிர்ப்புறத்திலிருந்து வருகிறது, கடக்க வேண்டிய தூரம் இவ்வளவு, இரண்டு ரயில் வண்டிகளும் எந்தக் கட்டத்தில் சந்தித்துக் கொள்ளும், அல்லது ஒரு தொட்டியில் ஓட்டை உள்ளது. அதில் விழும் நீரின் வேகம் இத்தனை, ஓட்டை வழியாக நீர் வெளியேறும் வேகம் இத்தனை, தொட்டி நிரம்ப எவ்வளவு நேரமாகும் போன்ற கணக்குகளுக்கு விடைகள் கிடைக்கும் சிறு அற்புதம் கூடவா செய்யக் கூடாது? அது மட்டுமல்ல. கீழே விடப்பட்ட குழந்தை பாலுக்கு அழுகிறது என்று ஞானப் பாலூட்டி, அந்தக் குழந்தையை அற்புதமான கவிதைகளை எழுத வைத்த போது, சுதந்திரம் அடைந்த ஒரு நாட்டின் கோயமுத்தூர் என்ற ஊரின் கொசுக்கடி பிடுங்கும் ஆஸ்பத்திரி ஒன்றில் பிறந்ததற்



படிப்பகம்

www.padippakam.com



காக இவளுக்கு ஞானப்பால் மறுக்கப்பட வேண்டுமா என்ன?

ஒரே ஒரு முறை மட்டும் அவள் வாழ்வில் ஒரு அற்புதம் நிகழ்ந்தது என்பதை இவ்வாறு நினைக்கும்போது அவள் நினைவுபடுத்திக் கொள்வாள். அவள் தந்தை பெண்களுக்கு கணக்கு, விஞ்ஞானம் இரண்டும் வராது என்று திடமாக நம்பினார். இதை எப்படி அவள் மனதினுள் ஊன்றினார் என்று தெரியவில்லை. ஆனால் அவளுக்குக் கணக்கு வரவில்லை. ஒரு முறை இடைப் பரீட்சையில் சிக்கலான பின்னக் கணக்கு ஒன்று தரப்பட்டது. வகுப்பில் கணக்கில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் வாங்கும் ஸ்டெல்லாவுக்குக் கூட அது போட வரவில்லை. எல்லோருக்கும் பூஜ்யம் போட்டு விட்டு, கணக்கு டீச்சர் கணக்கைப் பலகையில் போட முற்பட்டபோது, தற்செயலாக இவள் தன் விடைத்தாளைத் திறந்து பார்த்தாள். அந்தப் பின்னக் கணக்கை இவள் சரியாகப் போட்டிருந்தாள்! ஒரு முறைக்கு இரு முறை சரிபார்த்த கணக்கு டீச்சரே வியந்து போனாள். அதைச் சிவனின் சிறு அற்புதமாகவே இவள் கண்டாள். "பின்னக் கணக்கைப் போட்டு விட்டாய். நாளைக்கு விஞ்ஞான விடைத்தாள் வருகிறது. எப்படிச் செய்கிறாய் என்று பார்க்கலாம்." என்று சிவனைக் கடிந்து கொண்டாள் செல்லமாக. அந்த முறை சிவன் விஞ்ஞானத்தில் தேறவில்லை.

"வாரணமாயிரம் சூழ வலம் வந்து..." பாடலை அந்தச் சமயத்தில் பாட்டு டீச்சர் அவளுக்கும் பத்மா அக்காவுக்கும் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஒருத்தி கடவுளையே மணம் புரிய நினைப்பது இவளுக்கு சுவாரசியமான ஒன்றாக இருந்தது. அக்கமகாதேவியின் கதையையும் அப்போது கன்னட வகுப்பில் சொல்லித் தந்திருந்தார்கள். மகாதேவி அக்காவும் சிவனுக்காக எல்லாவற்றையும் துறந்தவள். இப்படிக் கடவுளையே கணவனாக வரிப்பதில் சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளதாக இவளக்குப் பட்டது. முதலாவது, சிக்கலாக இருக்கும்போதும், ரவிவர்மா படங்களிலும் அழகாகக் காணப்படுபவர்கள் நிஜமாகவே தரிசனம் தர வரும்போது எப்படி இருப்பார்களோ என்ற பயம் இருந்தது. இரண்டாவது, அப்போது ராமனாகவும், கிருஷ்ணனாகவும் கடவுள் வேடத்தில் நடித்து வந்தது என்.டி. ராமராவ் தான். சிவனை மனதால் வரித்து விட்டு நாளைக்கு அவர் என். டி. ராமராவ் உருவில் கதவைத் தட்டினால் என்ன செய்வது என்ற குழப்பம் ஏற்பட்டது. சரி. அவ்வையாராக மாறி "பாலும் தெளி தேனும்...." என்று கே.பி. சுந்தராம்பாள் குரலில் கந்தன் முன் பாடலாம் என்றால் ஒரேயடியாக முதுமை வேண்டுவது பற்றிச் சற்றுத் தயக்கம் ஏற்பட்டது. மனதின் மூலையில் நீலப் பட்டுப் பாவாடை விரிந்து தொல்லை தந்தது. வரும் தீபாவளிக்குக் கிளிப் பச்சை நிறத்தில் ஒரு பட்டுப் பாவாடை வாங்கித் தர வேண்டும் என்று ஒரு ஒப்பந்தம் வேறு அம்மாவுடன் இருந்தது.

ஆனால் இதற்காகவெல்லாம் அவள் ஞான வழியை முற்றிலும் துறக்கத் தயாராகவில்லை. கல்கியின் 'சிவகாமியின் சபதம்' வீட்டில் பைண்டு செய்யப்பட்டு இருந்தது. அதன் முடிவு அவளை வெகுவாகப் பாதித்தது. சிதம்பரம் சென்று, சிவன் முன் நடனமாடி, சிவனை மணப்பது போல் ஒரு கவிதை எழுதினாள். 'சத்தியம்' என்றதற்குத் தலைப்பிட்டாள்.

சலங்கை ஒலியின்
மந்திரங்கள்
சலியாமல் அவையில்
முழங்கிட
அசுரனைக் கொன்று
ஆடுமுந்தன்
அடைக்கலமாய் நான்
வருவேன்

என்று எழுதி முடித்த போது, கண்களில் நீர் சுரந்தது.

கவிதைகளையும், தன் இறை உணர்வையும் அவள் இருவருடன்தான் பகிர்ந்து கொண்டாள். ஒன்று, மிக்கி; அவர்கள் வீட்டுக் கறுப்பு நாய். இரண்டாவது கெம்பம்மா. கெம்பம்மா பக்கத்து வீட்டில் நடத்திய கைவேலைக் குடிசைத் தொழிலில் வேலை செய்பவள். போக்கிடம் இல்லை என்று இவர்கள் வீட்டின் பின்புறம், தோட்டத்தில் காலியாகக் கிடந்த மோட்டார் ஷெட்டில் அவளுடைய ஒரு தகரப் பெட்டியுடன் வாழ வந்தவள். அம்மாவுக்குக் கூடமாட வேலை செய்து உதவுவாள். மிக்கி இவள் தோழன். இவள் கவிதைகளைப் படித்துக் காட்டும்போது முன்னங்கால்களில் முகம் பதித்து, காதுகள் இரண்டும் தொங்க, படுத்தவாறு கேட்கும். சில சமயம் இவள் தொடைமேல் முகத்தை வைத்துப் படுத்தபடி கண் மூடியவாறு கேட்கும். இவள் குரல் தழுதழுத்தால் தலையை உயர்த்திப் பார்க்கும். இவள் கட்டிலின் கீழ்தான் அதன் குடியிருப்பு.

கெம்பம்மாவுக்கு இவள் தன் கவிதைகளைக் கன்னடத்தில் விளக்குவாள். பொறுமையுடன் கேட்டு, "சன்னாகிதே" என்று நற்சான்றிதழ் வழங்குவாள். புரந்தரதாசரின் தேவர் நாமா பாடல்களை எளிதான வழிமுறையில் பாடுவாள்.

பிறகு அது நடந்தது. அந்த இரவு நிகழ்வு. ஒரு நாள் இரவு பதினோரு மணிக்கு, "ஏ ஸீளே முண்டே..." என்றொரு அலறல் கேட்டது பின் பக்கம். அடுத்த ஐந்தாவது நிமிடம், இன்னும் அடைக்கப்படாமல் இருந்த பின் கதவைப் படீரென்று தள்ளித் திறந்து, புயல் போல் பாய்ந்து உள்ளே புகுந்து, இவள் கட்டிலின் கீழே தஞ்சம் புகுந்தாள் கெம்பம்மா.

அப்பாவும் அம்மாவும் பின்புறக் கதவருகே சென்ற போது, குடிபோதையில் ஒருவன் நின்று கொண்டிருந்தான். "லே கெம்பம்மா, ஹொரகே பாரே" (ஏ கெம்பம்மா வெளியே வா) என்று கூச்சலிட்டான். "நான் உன் புருஷன். வா வெளில" என்று கன்னடத்தில் சத்தம் போட்டான்.

அவனை வெளியேற்ற முயன்ற அப்பாவைக் கோபமாகப் பார்த்து, "ஒரு பெண்டாட்டி போறாதா உனக்கு? என் பெண்டாட்டியும் கேக்குதா?" என்று கூவினான்.

கட்டிலடியே கெம்பம்மா கோழிக் குஞ்சு போல் ஒண்டிக் கொண்டு இருந்தாள். அவள் உடல் நடுங்கிக் கொண்டு இருந்தது. அவள் புருஷன் அப்பாவை விரசமாகப் பேசியதும், கட்டிலடியேயிருந்து வெளியே வந்து, அவனை நோக்கிக் கால்கள் தொய்ய நடந்து, சற்றே நடுங்கும்



படிப்பகம்

www.padippakam.com



குரலில், "குடிச்சிட்டு வந்து கண்டதையும் பேசாதே" என்றாள் கன்னடத்தில்.

அதற்குப் பதிலாக அவள் அடிவயிற்றில் ஒரு உதை விழுந்தது. "அம்மா" என்றலறியபடி அவள் உட்கார்ந்ததும் முதுகில் ஒரு குத்து.

"தேவா, காப்பாடு..." என்று கடவுளை விளித்தாள் கெம்பம்மா. பிறகு ஒருமையில் கடவுளை அழைத்தது தவறு என்று எண்ணியோ என்னவோ, "தேவரே, காப்பாடீ..." என்று குரல் கொடுத்தாள்.

பின் பக்கத்துப் படிக்கட்டில் அவளைத் தள்ளி, அவள் கூந்தலைப் பிடித்து இழுத்தபடி படிகளில் உருட்டினான். படிகளின் கீழே போனதும் புல் வெளியில் தள்ளி, பளிச்சென்று அவள் இரு கால்களையும் பிரித்து, நடுப்பகுதியில் ஓங்கி ஒரு உதை விட்டான்.

"ஹா..." என்றலறினாள் கெம்பம்மா. கவிழ்ந்து கொண்டாள். அன்று பௌர்ணமி. பின்பக்கத் தோட்டம் முழுவதும் அரளி, துளசி, வாழை, அவரை, புடலை, பலா என்று விரிந்து கிடந்தது. எல்லாவற்றின் மேலும் நிலா ஒளி சிதறிக் கிடந்தது. புல் வெளியில் குறுகிக் குப்புறக் கிடந்த கெம்பம்மா அந்த ஒளியில் வேட்டையாடப்பட்ட மிருகம் போல் கிடந்தாள். நொடிக்கொரு முறை, "தேவரே... தேவரே..." என்று கதறினாள். அவள் விலாவில் ஒரு மிதி மிதித்து அவன் அழுத்தியதும், முதல் முறையாக, "மிக்கீ..." என்று கூவினாள்.

உள்ளேயிருந்து மிக்கி மின்னல் வேகத்தில் பாய்ந்து வந்தது. உயரே, உயரே எம்பி, துள்ளித் துள்ளிப் பாய்ந்து வந்து, பின் பக்கத்துப் படிகளை ஒரே தாவில் கடந்து, உறுமியபடியே கெம்பம்மாவின் புருஷனின் குரல்வளையைக் கவ்வ முற்பட்டது. பீதியில் அங்கும் இங்கும் ஓடிய அவன், பின் பக்கத்து வேலியைத் தாண்டி ஓடிப் போனான்.

கெம்பம்மா புல்வெளியில் குப்புறப் படுத்து விம்மியபடி கிடந்தாள். மிக்கி அவளருகில் வந்து அவள் தலையை நக்கித் தந்தபடி நின்றது. அப்பாவும் அம்மாவும் பேச்சே எழாமல், உறைந்து போய் நின்றனர். எல்லாம் பத்து நிமிடங்களில் நடந்து முடிந்து விட்டது.

பத்மா அக்காவும் இவளும் சற்றுப் பின்னால் தள்ளி நின்று கொண்டிருந்தனர்.

அம்மா இவள் பக்கம் திரும்பிப் பார்த்தபோது, இவள் தன்னை வேறு யாரோ போல் உணர்ந்தாள்.

இவளை நோக்கி, "நீ ஏன் இங்க வந்தே? இதெல்லாம் பார்த்து பயந்துடுவ" என்றாள் அம்மா மென் குரலில்.

அவள் பதில் கூறாமல் பின் பக்கத்துத் தோட்டத்தைப் பார்த்தபடி அசையாமல் நின்றாள்.

*** *** ***

சில காலம் தனிமை, ஏக்கம், கனவு, ஊமை என்று தலைப்புகளிட்டு, 'சாகும் வரை தனிமை, உடல் வேகும் வரை தனிமை' என்ற ரீதியில் சில கவிதைகளை எழுதினாள். அதன் பிறகு, நீல டயரியில் எந்தக் கவிதையும் பதிவு செய்யப் படவில்லை. ❑

AKILAN ENTERPRISES LTD.
Importers, Exporters, Distributors, Wholesalers & Retailers
Handicrafts, Ever Silver & Fancy Goods, Tamil Audio, Video, CD's and CD-Videos
Indian Musical Instruments
274 High Street North, Manor Park, London E12 6SA
Tel: 0181-548 0033 Fax: 0181-548 0300
☞திருமணப் பொருட்கள் ☞பட்டுச் சேலை ☞பட்டு வேட்டி ☞சமய நூல்கள் ☞இலக்கிய நூல்கள் ☞சஞ்சிகைகள் ☞மிருதங்கம் ☞வீணை, ☞வயலின் ☞ஆர்மோனியம் ☞இசைக்கருவிகள் ☞தமிழ்த் திரைப்படங்கள் ☞தரமான ஓடியோக்கள் ☞வீடியோக்கள் ☞தெய்வ அலங்காரப் பொருட்கள் ☞பட்டுத் துணிகள் ☞பீடங்கள் மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள்
அனைத்துக்கும் நாடுங்கள்
AE
அகிலன் எண்டர்பிரைஸ்
AE
வாரத்தில் ஏழு நாட்களும் காலை 10.00 மணியிலிருந்து மாலை 10.00 மணி வரை திறந்திருக்கும்
Proprietor: R SELIYAN



படிப்பகம்

www.padippakam.com

# விருந்து

லெ. முருகபூபதி

தருமலிங்கம் வீட்டின் போர்டிகோவில் நான்கு கார்களுக்கு மேல் நிறுத்தமுடியாது. அங்கு அவரது காரும், அவர் மனைவி ராஜேஸ்வரியினதும் கார்கள் நிற்கின்றன.

எஞ்சியிருந்த இடத்தை குலநாயகம், ரகுநாதனின் குடும்பத்தினர் வந்திறங்கிய கார்கள் பிடித்துக்கொண்டன.

மற்றவர்கள் வீதியோரத்தில் தத்தமது கார்களை நிறுத்திவிட்டு வந்தனர்.

தருமலிங்கம் தம்பதியர், அனைவரையும் முகம் மலர வரவேற்றனர்.

திருமதி குலநாயகம் ராஜேஸ்வரியை கட்டி அணைத்து முத்தம் பொழிந்தாள். மற்றவர்கள் ரசித்து சிரித்தனர்.

குலநாயகமும் ரகுநாதனும் தருமலிங்கத்தை கைகுலுக்கி வாழ்த்தினர்.

"ஐம்பதாவது வருட நிறைவுக்கும் இப்படி ஒரு விருந்துக்கு எங்களுக்கு அழைப்பு வர வேண்டும்" - கண்சிமிட்டிச் சொன்னார் ரகுநாதன்.

"அப்போது இங்கு 'நம்பர்கள்' கூடியிருக்கும்" - என்ற குலநாயகம், குலுங்கிச் சிரித்தார்.

"ஏன்?" - ஏககுரலில் சிலர்.

"மிஸ்டர் அன்ட் மிஸிஸ் தருமலிங்கத்திற்கு பேரன் பேத்திகள் இருப்பினம் .... என்ன ....அப்படித்தானே ....?" - தருமலிங்கத்தின் தோளில் இடித்தார் குலநாயகம்.

அங்கு சிரிப்பு கரைபுரண்டது. தருமலிங்கத்தின் பிள்ளைகள் மூவரும் சுறுசுறுப்பாக இயங்கினர்.

இடநெருக்கடியை தவிர்க்க தத்தம் அறைகளிலிருந்தும் கதிரைகளை எடுத்து வந்தனர்.

ஹோலின் ஒரு மூலையில் - மேசையில் பியர் - விஷ்கி - ஷம்பெயின் - வைன் போத்தல்கள், அவற்றுக்கு தகுந்தவாறு வெவ்வேறு வடிவங்களில் கண்ணாடி தம்ளர்கள்.

வறுத்த கஜு, கட்லட், சிப்ஸ் - சீஸ் - முதலானவற்றுடன் அவித்துப் பிளந்த முட்டைகள் உப்பும் - மிளகு தூளும் தூவப்பட்டு பிளேட்டுகளில் தயாராயிருந்தன.

Family Room இல் பகல் போசன விருந்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியிருந்தன.

"சமையல் வாசம் மூக்கைத் துளைத்து பசி வயிற்றை கிள்ளுது அக்கா" - என்றாள் ரகுநாதனின் மனைவி நளினி.

நளினி உரிமையோடு ராஜேஸ்வரியுடன் பழகுபவள். சமைத்த கறிவகைகளை பாத்திரங்கள் திறந்து ஒருமுறை நோட்டம் விட்ட பின்பே அவளது மூக்கை வாசனை துளைத்தது.

தருமலிங்கம் அவரவர்க்கு விரும்பியவாறு கிளாஸ்களில் மதுபானங்களை கலந்தார்.

"ரகு..... நீர் ..... விஷ்கிக்கு 'கோக்' கலக்க மாட்டீர் என்ன .... லெமனேட் .... or சோடா"

"தேங்ஸ் தருமு.... லெமனேட் விடும்".

ஆண்கள் 'சியர்ஸ்' சொல்லும்போது பெண்கள் Family Room பக்கம் கலைந்தனர்.

வருகைதந்த குடும்பத் தலைவிகள் ரஜேஸ்வரியிடம் வாழ்த்துக் கூறி பரிசுப் பார்சல்களை கொடுத்தனர்.

"இதெல்லாம் என்னத்துக்கு ..... சும்மா .... உங்களை சாப்பிட வரச் சொன்னால் இதெல்லாம் காவிக் கொண்டு வரவேணுமே ....

"என்னக்கா அப்படிச் சொல்லிப் போட்டியள் .... இது உங்கட இருபத்திஐந்தாவது வெடிங் எனிவசரியல்லோ.... சும்மா வாயால் வாழ்த்துச் சொன்னால் மட்டும் போதுமே.... எங்கட ஞாபகமாக ஏதும் உங்களுக்கு தர விரும்பிறோம் ... அவ்வளவுதான். - சொல்லிவிட்டு ராஜேஸ்வரியை கட்டி அணைத்தாள் நளினி.

"சரிதான் போடி ...." - என்றாள் ராஜேஸ்வரி. அவள் குரலில் 'செல்லம்' தொனித்தது.

Family Room/ T.V. இல் எஸ்.பி. பாலசுப்பிரமணியமும் சித்திராவும் இசைக்கலைஞர்கள் புடைசூழ பாடிக்கொண்டிருந்தனர்.

"இது எங்க நடந்த புரோகிராம் ராஜேஸ் ...." திருமதி குலநாயகம் கேட்டாள்.

"எஸ்.பி. மெல்பனுக்கு வந்தசமயம் எடுத்தது அன்ரி ..." - ராஜேஸ்வரியின் மகள் சுமித்திரா சொன்னாள்.

இயந்திரமயமான வாழ்வோட்டத்தில் வாராந்த விடுமுறை நாட்கள் இப்படி ஏதாவது ஒரு விருந்தில் கழிந்துவிடுவதுண்டு.

இன்று இவர்களுக்கு தருமலிங்கத்தின் வீட்டில், அவரது இருபத்தைந்தாவது ஆண்டு திருமண நிறைவு தின விருந்து.

தருமலிங்கம் - ராஜேஸ்வரி தம்பதியராகி முதல் நாள் வெள்ளிக்கிழமையுடன் இருபத்தி ஐந்து ஆண்டுகளாகிவிட்டன.

வெள்ளிக்கிழமை இருவரும் லீவு போட்டுவிட்டு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு கோயிலுக்குப் போய் அர்ச்சனையும் செய்துவிட்டு வரும் வழியில் 'ஷொப்பிங்' முடித்துக் கொண்டனர்.

சனிக்கிழமை விருந்துக்கு என்ன கறி வைக்கலாம் என்பதை ஏற்கனவே நளினியுடன் ரெலிபோனில் கதைத்து ஒழுங்கு செய்து கொண்டாள் ராஜேஸ்வரி.

நளினி, விருந்துக்கு அணி சேர்க்க Dessert ஆக 'வட்டில் அப்பம்' செய்து கொண்டு வருவதாக உறுதியளித்தபடி இரண்டு பாத்திரங்களில் கொண்டு வந்தாள்.

"கண்டறியாத ஒரு 'அனிவஸரி' வந்ததும் போதும் ... நான் இங்க படுறபாடும் போதும்" - வெள்ளியன்று மாலை ராஜேஸ்வரி, நளினியிடம் அலுத்துக் கொண்டபோது "பிள்ளையை பார்த்துக் கொள்ளுங்க ஒருக்கா ராஜேஸ் அக்காவுக்கு ஹெல்ப் பண்ணிட்டு வாரன்" - என்று ரகுநாதனுக்கு சொல்லிவிட்டு காரில் ஓடிவந்து இறைச்சி வெட்டுவது முதல் காய்கறி நறுக்குவது வரையில் பல வேலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினாள்



படிப்பகம்

www.padippakam.com



நளினி.

"நளபாகத்திற்கு ஒரு நளினி" என்றாள் ராஜேஸ்வரி.

"அதென்னம்மா நளபாகம் ...." - தாயிடம் கேட்டாள் சுமி.

அவளுக்கு நளன் - தமயந்தி கதை சொன்னாள் ராஜேஸ்வரி.

நளினியால் சமையலுக்கு கிட்டிய ஒத்துழைப்பை திருமதி குலநாயகத்திடம் விதந்தாள் ராஜேஸ்வரி.

"உடன் பிறந்த அக்கா - தங்கைமார் கூட இப்படி இருக்க மாட்டினம்."- இந்த வாக்குமூலம் திருமதி குலநாயகத்திடமிருந்து மட்டுமல்ல, ஊரில் தருமலிங்கம் குடும்பத்தை நன்கு தெரிந்தவர்களாலும் சொல்லப்பட்டதுதான்.

"ரகு.... ஊர்ல ஏதும் லேட்டஸ்ட் நியூஸ் ...."- ஹோலில் தருமலிங்கத்தின் குரல் கேட்டு, இங்கு - T.V.இல் சித்ராவின் 'மரி மரி நின்னே' கேட்கும் அவரது மகள் சுமி, "அப்பாக்கு பொலிடிக்ஸை விட்டால் கதைக்க வேற ஒன்றும் இல்லை அன்ரி"- என்று நளினியைப் பார்த்து கன்னத்தில் குழி விழ சிரித்தாள்.

"பொத்தடி வாயை .... அந்த மனுஷனுக்கு கேட்டால் கத்தப் போகுது ..." - ராஜேஸ்வரி சன்னமான குரலில் மகளை அடக்கினாள்.

"வேற என்ன அன்ரி..... அங்கே 'புரப்ளம்' எண்டு இந்தப் பக்கம் வந்திட்டம். அம்மா - அப்பா இங்கே சிட்டிஷனும் எடுத்திட்டினம். வேலை - வீடு - கார் - எல்லாம் இருக்குது. நாங்களும் 'தரப்படுத்தல்' அது இது என்று எந்தப் பிரச்சினையும் இல்லாமல் யுனிவர்சிட்டியில படிக்கிறோம். இங்கே - எலக்ஷன் வந்தால் லேபருக்கும் - லிபரலுக்கும் மாறி மாறி வோட்டும் போடுகிறார்கள். நாம் இப்போது ... அவுஸ்திரேலியாவில் என்ன நடக்குது என்பதைத்தான் பார்க்க வேணும் ... எப்பொழுது பார்த்தாலும் ஸ்ரீலங்கா பொலிடிக்ஸ்தான் அப்பா பேசுகிறார்; கேட்டுக் கேட்டு அலுத்துப் போச்சுது அன்ரி."

சுமி பேசிக் கொண்டிருக்கும்போது Family Room யன்னல் கண்ணாடியின் வெளிப்புறமாக - டென்னிஸ் பந்து அடிபட்டு விழுந்தது.

"இவங்கள்..... கண்ணாடியை உடைக்கப் போறான்கள்" - வீட்டின் பின் வளவில் கிரிக்கட் விளையாடும் தனதும் - விருந்தினர்களினதும் பிள்ளைகளை எச்சரிக்க எழுந்து போனாள் ராஜேஸ்வரி.

"இங்கே.... பாருங்க அன்ரி ..... என்ர தம்பிமாருக்கோ - உங்கட பிள்ளைகளுக்கோ ஸ்ரீலங்காவைப் பற்றி ஏதும் கவலை இருக்கா.... இங்கே இவங்கட வாயில எப்போதும் கிரிக்கட் தான். ஸ்ரீலங்கா டீம் இங்க விளையாட வந்தாலும் இவர்கள் அவுஸ்திரேலியாவுக்குத்தான் சப்போர்ட். முரளிதரன் சிக்ஸர் அடித்தால், போலிங்கில் விக்கட்டுக்கள் எடுத்தால் Well Done முரளி Come on முரளி என்று கத்துவான்கள்."

"அது அவன் தமிழன் எண்டதுக்காக சுமி...." என்றாள் நளினி.

யன்னல் கண்ணாடியில் அடிபடும் விதமாக பந்தை அடிக்க வேண்டாம் என்று அன்பாக பிள்ளைகளை எச்சரித்துவிட்டு திரும்பிய ராஜேஸ்வரி... Family Room இல் இருந்த பெண்களுக்கு 'வைன்' பரிமாறினாள்.

நளினியின் தாய் மட்டும் தனக்கு Fanta கேட்டு வாங்கி அருந்தினார்.

"சுமி... அங்க அவங்கள் சிக்ஸர் அடிச்சு - கண்ணாடி உடைக்க முடியாமல் களைச்சுப் போயிருப்பான்கள், ஏதும் Soft Drinks கொண்டுபோய்க் கொடும்" - என்றாள் திருமதி ரகுநாதன்.

ஹோலில் குடும்பத் தலைவர்கள் மத்தியில் 'ஈழத்து அரசியல்' சரளமாக பேசப்பட்டது. பண்டா - செல்வா ஒப்பந்தம் முதல் முல்லைத்தீவு தாக்குதல் வரை அவரவர்க்கு தெரிந்ததை சொன்னார்கள்.

"இப்ப.... மேல் லோகத்தில் அவுங்கள் எல்லோரும் சேர்ந்து மகாநாடு கூடுவார்கள் - என்றார் தருமலிங்கம்.

"யார்... தருமு...." - ரகு.

"அவங்கள்தான் - பண்டாரநாயக்கா, ஜே.ஆர். - காமினி - முதலி - பிரேமதாஸ - அமிர் - செல்வா - திருச்செல்வம் - பொன்னம்பலம் - ராஜீவ் - இந்திரா.... இப்ப இவையள் எல்லாம் மேல் லோகத்திலதானே... கூடிக்கதைப்பினம், உன்னால நான் கெட்டன் என்னால நீ கெட்டாய் எண்டு..." தருமலிங்கத்துடன் இணைந்து அனைவரும் சிரித்தனர்.

"உவங்கள் மட்டுமே.... யுத்தத்தில் கொல்லப்பட்ட இலங்கை, இந்திய ஆர்மிக்காரங்களும் எங்கட பொதுமக்களும் போராளிகளும் கூட உவங்களைப் பார்த்து திட்டித் தீர்ப்பார்கள், அட பாவிகளே.... உங்களால்தானே.... இன்றைக்கு நாங்களும் எங்கட குடும்பம், இனம், சனம் நாட்டை விட்டுப்போட்டு இங்கே வந்திருக்கிறோம் என்று சபிப்பார்கள்". - தருமலிங்கத்தின் பேச்சைக் கேட்டு Family Room இல் இருந்து பெண்களும் சிரித்தனர்.

"நான் ஒரு 'ஜோக்' சொல்லட்டுமா..... ஒரு 'மகஸின்'ல படிச்சது....."- என்ற ரகுநாதனின் முகத்தை போதையுடன் பார்த்தனர் தருமலிங்கமும் நண்பர்களும்.

"மேல் உலகத்தில பிரேமதாஸா இருக்கிறார். அவருக்கு முன்பும் பின்பும் அங்கு போன அவரது அரசியல் எதிரிகள் முதலியும் காமினியும் கூடி நின்று கதைக்கிறார்கள்.

"முதலி அங்கே பார்.... எங்கட எதிரி பிரேமா நிற்கிறான்.... 'வேலை' யை கொடுப்போமா?"

"அட சும்மா இரு காமினி.... அந்த ஆள் தனியாக வர இல்லை.... தன்னுடைய Bodyguard களையும் தன்னுடன் அழைத்து வந்திருக்கிறார். கவனம்".

ரகுநாதனின் 'ஜோக்கை' கேட்டு அனைவரும் அட்டகாசமாக சிரித்தனர்.

"அதுவும் சரிதான் பிரேமதாஸ போகும்போது அவங்களிலும் சிலர் அநியாயமாக செத்துப்போனாங்கள்.... உண்மைதான்...." என்றார் தருமலிங்கம்.

வீட்டின் கலகலப்பான சூழ்நிலைக்கு மத்தியில் அழைப்பு மணி கேட்டது.

'அழைப்பு விடுத்த அனைவரும் வந்துவிட்ட பிறகு... இனி யார் வரப்போகிறார்கள்' - புருவம் உயர்த்தினாள் ராஜேஸ்வரி.

"யாரெண்டு பாருங்கப்பா..."- கணவனிடம் சொன்னாள் ராஜேஸ்வரி.

"நீரே போய்ப் பாருமன்..."



படிப்பகம்

www.padippakam.com



தருமலிங்கம் மேலும் சில கிளாஸ்களில் நிரப்பிக் கொண்டிருந்தார்.

வாசல் கதவருகின் கண்ணாடியை மறைத்த 'கேர்டினை' விலக்கிப் பார்த்தாள்.

வெளியே இரண்டு இளைஞர்கள் File உம் கையுமாக நிற்கின்றார். கதவைத் திறவாமல் திரும்பி வந்து, "என்னப்பா.... உங்களைத்தான்.... யாரும் பெடியளை வரச் சொல்லியிருந்தனீங்களே" கேட்டாள்.

மூன்றாவது கிளாஸை நிரப்பிக் கொண்டிருந்த தருமலிங்கம் கண்கள் சிவந்த நிலையில் மனைவியை ஏறிட்டுப் பார்த்து தலை சொறிந்தார்.

"யாரோ இரண்டு பெடியள்... File உடன் நிற்கிறான்கள்... ஏதும் டொனேஷனோ தெரியவில்லை.... இந்த நேரத்தில கழுத்தறுக்க வந்திருக்கிறான்கள்." - ராஜேஸ்வரி முணுமுணுத்தாள்.

"ஏன் அவசரப்படுறீர்.... யார் எண்டு பார்த்தால் போச்சுது.... சில வேளை சுமியோடு யுனிவர்சிட்டியில் படிக்கிற பெடியன்களாகவும் இருக்கும்.... பொறும் நான் போய் பார்க்கிறன்.

தருமலிங்கம் கதவைத் திறந்தார்.

"அண்ணே.... எப்படி இருக்கிறீர்கள்.... இன்றைக்கு வரச் சொன்னீர்கள்.... அது தான்" - ஒரு இளைஞன் முகம்மலர சிரித்தான்.

"விசிட்டர்ஸ் இருக்கினம் போலத் தெரியுது. வெரி சொறி அண்ணர். நாங்கள் போயிட்டு... அடுத்த வீக்கெண்டில் வாரம்..."- மற்ற இளைஞன் திரும்ப எத்தனித்தான்.

"அடடே... மறந்தே போனேன் தம்பிமாரே... இவ்வளவு தூரம் வந்திட்டு திரும்பிப் போறதே... இன்றைக்கு எங்கட வீட்டில.... ஒரு சின்ன பார்ட்டி, அதனால்.... உங்களை வரச் சொன்னதையும் மறந்து போனேன். வெரி வெரி சொறி தம்பி...." - என்றார் பவ்வியமாக.

"சிவபூசையில் கரடிகள்" - உள்ளே யாரோ சன்னமான குரலில் முணுமுணுத்தது - வெளியே நிற்கும் அந்த இளைஞர்களுக்கும் கேட்டது.

"இங்கே பூசையா நடக்குது?" - வந்தவர்கள் நினைத்தார்கள்; முணுமுணுக்கவில்லை.

வந்த இளைஞர்களும் அரை மனதுடன் தருமலிங்கத்தை பின் தொடர்ந்து உள்ளே வந்தனர்.

"தம்பி.... இது மிஸ்டர் ரகுநாதன். இது குலநாயகம்... சொறி.... தம்பி உம்மட பெயரை மறந்து போனேன்..." - அறிமுகப்படலத்தில் தருமலிங்கம்.

"நான் குமாரவேல்... குமார் என்று அழைப்பார்கள். இது என்ர ஃபிரண்ட் சந்திரபோஸ்... சந்திரன் என்று கூப்பிடலாம்."

ரகுநாதன் எழுந்து இருவருக்கும் கைகுலுக்கினார்.

குலநாயகம் எழும்ப சிரமப்பட்டார்.

"இருங்கோ... இருங்கோ... என்ன குடிக்கிறியள்... விஷ்கி.... பியர்...." - தருமலிங்கம் போத்தல்களைப் பார்த்துக்கொண்டு கேட்டார்.

"இல்லையண்ணர்... நாங்கள்... வந்தவிடயத்தை கதைச்சுப் போட்டு போக வேணும், இன்னும் சில வீடுகளுக்கும் வாரதெண்டு சொல்லி இருக்கிறம்..." - சந்திரன் மதுபானம் அருந்த மறுத்தான்.

"நாங்கள் கார் ஓட வேண்டும் அண்ணர் என்றான் குமார்.

"அதனாலென்ன... சாப்பிட்டு போறது... எல்லாம் செமிச்சுப் போகும் தம்பி" - தருமலிங்கம் வற்புறுத்தினார்.

குமாரும் சந்திரனும் Fanta எடுத்துக் கொண்டனர்.

உள்ளே ராஜேஸ்வரி உணவு பரிமாற தயாராகிக் கொண்டிருந்தாள். மனதிற்குள் - "இவங்கள்... ஏன் இப்ப.... வந்தான்கள்" - என்ற குமைச்சல். கணவனை திட்டிக் கொண்டாள்.

"என்ன விசேடம்.... File உம் கையுமா வந்திருக்கிறீர்கள்... மெல்பனில் ஏதும் புரோகிராம் வருகிறதா..." - ரகுநாதன் கேட்டார்.

"இலங்கையில் - கிழக்கு மாகாணத்தில சம்பூர் கிராமத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சில ஏழைக் குடும்பங்களுக்கு தையல் மெஷின் வாங்கிக் கொடுக்கவும் அந்தக் குடும்பத்து பிள்ளைகளுக்கு படிக்கிறதுக்கு உதவி செய்யிறத்துக்கும் விரும்பியிருக்கிறம்." - வந்ததன் நோக்கத்தை சந்திரன் விளக்கினான்.

"நீங்கள் ஏதும்... சங்கம்... மன்றங்களில் இருந்து வந்தனீங்களோ...?" ரகு புருவம் உயர்த்தியவாறு கேட்டார்.

"இல்லையண்ண... அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. நாங்கள் சில நண்பர்கள் சேர்ந்து இப்படி ஏதும் வழியில் அங்கே கஷ்டப்படும் எங்கள் மக்களுக்கு உதவலாம் என்று விரும்புகிறோம். அதற்கு உங்களைப் போன்ற பெரிய ஆட்களிடம் ஆதரவு கேட்கிறோம் அவ்வளவு தான்." கொண்டுவந்திருந்த File ஐ ரகுநாதனிடம் கொடுத்தான் குமார்.

Family Room இல் வைன், Fanta வுடன் T.V. யில் பாலசுப்பிரமணியத்தின் பாடல்களை ரசித்துக் கொண்டிருந்த பெண்களும் இந்த எதிர்பாராத 'சந்திப்பை' தரிசிக்க ஹோல் பக்கம் வந்தனர்.

சந்திரனும் குமாரும் அவர்களைப் பார்த்து புன்னகைத்தனர்.

File இல் இருந்து சில பத்திரிகை நறுக்குகளையும் - சம்பூர் கிராமத்து பாதிப்பு விவரங்களையும் - உதவ முன்வந்து பணம் கொடுத்தவர்களின் பெயர் முகவரி பட்டியலையும் தனித்தனியாக எடுத்துக் காட்டினான் குமார்.

குலநாயகம் வெகு சிரமப்பட்டு ஆசனத்தின் முனைக்கு வந்து வாங்கிப் பார்த்துவிட்டு அபிப்பிராயம் ஏதும் சொல்லாமல் திருப்பிக் கொடுத்தார்.

ரகுநாதன் அமைதியாக யாவற்றையும் படித்தார்.

"பாதிக்கப்பட்ட குடும்பங்களின் விபரங்களை எப்படி எடுத்தனீங்கள் தம்பிமாரே..." - தருமலிங்கம் கேட்டார்.

"திருகோணமலையில் ஒழுங்காக - நேர்மையாக செயல்படுகிற ஒரு சங்கம் ஊடாக இந்த விபரங்களை எடுத்தோம். சம்பூர் கிராமத்தில் மட்டும் ஐம்பதுக்கும் அதிகமான விதவைகள். அனைவரும் அநியாயமாக கொல்லப்பட்டவர்களின் மனைவிமார். பிள்ளைகளும் படிக்க வழி - வருமானம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள்." - சந்திரன் விபரித்தான்.

"எல்லோருக்கும் தையல் மெஷின் வாங்கிக் கொடுத்தால் ... அந்த கிராமத்தில்... யார் கூலி



படிப்பகம்

www.padippakam.com



க்கு தைக்கப் போகினம்... எப்படி வருமானம் வரப்போகுது... அவரவர் வீட்டு தையல் வேலைகளைப் பார்க்கத்தான் இது உதவும்... என்ன... நான் சொல்றது சரிதானே... " - எனச் சொல்லிவிட்டு ஏதோ ஆழ்ந்த நகைச்சுவையை உதிர்த்த பெருமிதத்தில் சிரித்தார் குலநாயகம்.

"நல்ல விடயம்தான் தம்பி... மாஓ சேதுங் சொன்ன மாதிரி... பசித்தவனுக்கு மீனைக் கொடுக்காதே.... தூண்டிலைக் கொடு என்பது போல், இப்படி ஒரு புனர்வாழ்வுக்கு உதவமுன் வந்திருக்கிறீர்கள்" - என்றார் ரகுநாதன்.

"யார்... ஐஸே... மா சேதுங்?" சிவந்த கண்களை அகல விரித்து கேட்டார் குலநாயகம்.

"அது Uncle சீனாவின் முன்னாள் அதிபர்... பெரிய தலைவர்...." - என்றாள் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானம் படிக்கும் சுமித்திரா.

"ஓ... ஓ... அப்படியா?"

"அதே சமயம்... தம்பிமாரே... இன்னொன்றையும் சொல்ல வேண்டும். ஊரில் இந்த விதானைமாருக்கு ஐம்பது, நூறு கொடுத்தால் மரணச்சான்றிதழ் போலியாக எழுதி எடுக்கமுடியும். நான் முன்பு - A.G.A. Office ஒன்றிலதான் வேலை செய்தனான். இங்க இப்ப.... ஒரு ஃபக்டரியில் 'டயர்' உருட்டுறன்... என்ர தலை விதி..."

குமாருக்கு கோபம் பொங்கியது. அடக்கிக் கொண்டான். "இந்தாளும் அங்கே நன்றாக லஞ்சம் வாங்கிய பேர்வழியாக இருக்க வேண்டும்". நினைத்ததை சொல்ல வழியின்றி மனதில் சுமந்தான்.

"உள்ளே போனால் உண்மைகள் வெளியே வரும்" விந்தையை வியந்தான்.

A.G.A. Office இல் ரகுநாதன் எப்படி இருந்திருப்பார்... இங்கு டயர் உற்பத்தி செய்யும் தெரிழிற்சாலையில் சீருடையுடன் எப்படி இயங்குவார்... ? - குமார் கற்பனையிலும் சஞ்சரித்தான்.

"நேரம் போகுதப்பா... வாங்க சாப்பிடுவோம்." - ராஜேஸ்வரி Family Room இல் இருந்து அனைவருக்கும் பொதுவாக குரல் கொடுத்தாள்.

தருமலிங்கம் தட்டுத்தடுமாறி எழுந்து அனைவரையும் அழைத்தார்.

"தம்பிமார்... நீங்களும் வாங்க... சாப்பிடுவோம்.... சாப்பிட்டுக் கொண்டே பேசுவோம்".

"இல்லையண்ணர்... இன்னும் சில வீடுகளுக்கும் போகவேண்டும். இன்றைக்கு விட்டால் இனி அடுத்த வீக்கெண்ட்தான் வசதிப்படும். நாங்க புறப்படுறம்... " - வந்த காரியம் 'சூழ்நிலை' யால் சாத்தியப்படாது என்பதை தீர்மானித்துக் கொண்டான் சந்திரன்.

எனினும் புறப்படு முன்னர் நல்ல பதிலை - உதவியைப் பெற்றுக் கொள்வதற்கும் இச்சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிடக் கூடாது என்பதிலும் சந்திரன் அக்கறையாக இருந்தான்.

"உங்களால் ஏதும் உதவமுடியுமா அண்ணர்?" - தருமலிங்கத்தைப் பார்த்துக் கேட்டான் சந்திரன்.

"நல்ல விடயம்தான் தம்பி... ஆனால் எனக்கு கொஞ்சம் அவகாசம் தேவை. இப்ப... சில 'கொமிட்மன்ட்ஸ்' வீட்டு 'மோட்கேஜ்' - சில பில்லுகள் செட்டில் பண்ண வேண்டும். ஊரில் இருக்கின்ற என்ர தம்பியின் குடும்பத்தையும் இங்கே அழைப்பதற்கு 'ஸ்பொன்ஸர்' செய்து போட்டேன். அவையளுக்கு பிளேன் டிக்கட்டுக்கும் நான்தான் அனுப்ப வேண்டும். என்னைத்தான் நம்பியிருக்குதுகள். Any way .. இந்த விடயத்தை என்ர "-பிரண்ட்ஸ் மாருக்கும் சொல்லி ஏதும் நன்கொடை எடுத்துத்தரப் பார்க்கிறன்" - ஆனால்.... இப்ப... எதற்கும் புரொமிஸ் பண்ணமாட்டேன். வெரி சொறி." - தருமலிங்கத்தின் 'நழுவல்' - வந்த இளைஞர்களுக்கு மட்டுமல்ல மற்றவர்களுக்கும் புரிந்ததுதான்.

சந்திரன் பெருமூச்சுவிட்டான்.

ரகுநாதன், குமாரின் தோளில் கை வைத்து... "தம்பி... உம்மட பெயர் குமார்தானே.... தம்பி குமார்... இந்த சம்பூர் கிராமத்து விதவைகளைப் பற்றிய விபரம் அடங்கிய பட்டியலை... அதில் ஒரு 'ஃபோட்டோ கொப்பி' எடுத்துத் தர முடியுமா.... அடுத்த மாதம் கன்பராவில் மனித உரிமைகள் மகாநாடு நடக்கப் போகுது... ஈழப் படுகொலைகள் பற்றிய புள்ளிவிபர சேகரிப்புக்கு இந்தப் பட்டியலும் உதவும்... எப்படி என்ர ஐடியா தம்பி... " - கண்ணைச் சிமிட்டினார்.

குமாருக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது... அடக்கிக் கொண்டான்.

ரகுநாதனுக்கு பதில் ஒன்றும் சொல்லாமல், "சந்திரன், புறப்படுவோம்... சும்மா நேரம் வீணாகிக் கொண்டிருக்குது... மற்ற இடங்களுக்கும் போக வேண்டும்." - குமார் சந்திரனின் கையைப் பிடித்து இழுத்தான்.

"வன் மினிட் பிளீஸ்..." சுமித்திரா அவர்களை தடுத்து நிறுத்திவிட்டு உள்ளே போய் இரண்டு நிமிடங்களில் திரும்பினாள்.

வரும்போது அவள் கையில் மூன்று ஐம்பது டொலர் நோட்டுகள்.

"இந்தாருங்க... உங்க 'சரிட்டி' வேலைக்கு எங்கட சிறிய உதவி." - சந்திரனிடம் நீட்டினாள்.

இருவரும் அவளை ஏறிட்டுப் பார்த்து நன்றி கலந்த புன்னகையை உதிர்த்தனர்.

"ஏய்.... சுமி... இதென்ன.... உனக்கு எங்கால 150 டொலர்.... " - ராஜேஸ்வரி மகளை உற்றுப் பார்த்தாள்.

அந்தப் பார்வையில் பல அர்த்தங்கள்.

``Books வாங்க வைச்சிருந்தன் அம்மா.... அடுத்த மாதம் கிடைக்கும் Aust Study காசில் பிறகு வாங்கலாம் அம்மா..." - தாயைப் பார்க்காமலேயே சொன்னாள் சுமி.

ரகுநாதன் - குலநாயகம் குடும்பத்தினர் பிளேட்டுகளில் உணவுகளை பரிமாறிக் கொண்டிருந்தனர்.

"உங்கட பெயர்...." - லிஸ்டில் எழுதுவதற்காக சந்திரன் கேட்டான்.

"நான் சுமித்திரா... என்ர பெயர் எழுத வேண்டாம். தருமலிங்கம் அன்ட் - பெமிலி என்று எழுதலாம். எழுதாவிட்டாலும் பரவாயில்லை. யாரோ ஒரு குடும்பத்துக்கு உதவினால் போதும்."

குமாரும் சந்திரனும், சுமித்திராவுக்கு ஏக குரலில் நன்றி கூறினர். மறுகணம் அங்கிருந்து விடை பெற்றனர்.

தருமலிங்கம் கதவை மூடினார். ❑



படிப்பகம்

www.padippakam.com



# இயேசுவுக்கு பொலிஸ் காவல்

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

வானத்திற்கும் பூமிக்கும் என்ன சண்டையாம்? விடிந்த நேரத்திலிருந்து பூமித்தாயை நனைத்துக்கொண்டிருந்த வருணபகவானுக்கு உதவி செய்ய வாயு பகவானும் துணையா என்ன?

காற்றடித்து மழையைச் சீறி வாரிக்கொண்டு பெரிய அல்லோலகல்லோலம்.

நடந்து செல்வோர் குடைபிடித்தும் நனைந்தும் தங்கள் காரியத்தைச் செய்ய விரைகிறார்கள். காரில் விரை



பவர்கள் யார் நனைந்தால் என்ன என்ற அக்கறையில்லாமல் மற்றவர்களை நனைத்துக் கொண்டு ஏதோ அவசரத்தில் ஓடிக்கொண்டிருந்தார்கள்.

அந்த இரட்டைத் தட்டுச் சிவப்பு பஸ், நகர மத்தியில் உள்ள பஸ் தரிப்பில் கர்ப்பிணிப் பெண்போல் தன்னில் நிறைந்து தள்ளும் பிரயாணிகளுடன் நின்று கொண்டிருந்தது.

முதியோர், இளையோர், பெண்கள், குழந்தைகள், கறுப்பர், வெள்ளையர், இரண்டும் கலந்த நிறத்துடன் என்று எத்தனை சாதி, அந்த இரட்டைத் தட்டு பஸ்ஸில்? அவசரப்படும் மனிதர்கள் அடக்கமாக உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் மனத்திரையில் எத்தனை நாடகங்களோ? கடைசியில் ஒரு இளம் சோடி ஆங்கிலேயர் காதல் மயக்கத்தில் முத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கு முன்னிருந்த சீட்டில் ஒரு ஆசியக் குடும்பம் - வங்காள தேசத்தவர்களாக இருக்கலாம். மூன்று குழந்தைகளுடன் நெருக்கியடித்துக் கொண்டிருந்தார்கள். மற்றவர்களிடமிருந்து ஒதுங்கியிருக்கும் பாவம். குல்லா போட்ட தகப்பன், முக்காடிட்டு மூடி மறைத்த தாய் - அவர்கள் ஒரு முஸ்லிம் குடும்பம்.



படிப்பகம்

www.padippakam.com



கொண்டக்டரில்லாத பஸ் அது. ட்ரைவர் ரிக்கட் விநியோகம் செய்து கொண்டிருந்தான். மழையில் நனைந்த கியூ பொறுமையுடன் நின்றிருந்தது. ட்ரைவருக்குப் பின்னாலிருந்த சீட்டிலமர்ந்திருந்த ஒரு ஆசிய - முதிய தம்பதி அடிக்கடி ஒருத்தரையொருத்தர் பார்த்து தங்களுக்குள் ஏதோ முணு முணுத்துக் கொண்டிருந்தார்கள். ஆசிய முதியவர் அடிக்கடி தன் கடிகாரத்தையும் பார்த்துக் கொண்டார். அவர்கள் அமைதியான தோற்ற முடையவர்கள். குஜராத்தித் தம்பதி போலும். இருவரும் தங்கள் சுருங்கிப் பழுப்பேறிய நெற்றியில் குங்குமம் வைத்திருந்தார்கள்.

வெளியிற் பெய்த மழையால் உள்ளுக்கிருப்போர் விடும் மூச்சு ஆவியாகி பஸ் கண்ணாடிகளைப் புகார் மாதிரி மூடியிருந்தது.

வங்காளக் குடும்பத்தினரின் பெரிய குழந்தை - யன்னலோரமாக இருந்த குழந்தை - கண்ணாடியிற் படிந்திருக்கும் புகாரில் தன் இளம் சிறு விரலாற் சித்திரம் தீட்டிக் கொண்டிருந்தது. பெரிய முகத்தில் இரு சிறு கண்களும், ஒரு பெரிய சிரித்த வாயுமான சித்திரம்.

அவர்களுக்கு முன்னால் ஒரு பெரிய ஆங்கிலேயன் (?) தன் பெரிய வயிற்றைத் தடவி விட்டபடி அடிக்கடி உஸ் உஸ் என்று மூச்சு விட்டுக் கொண்டிருந்தான். ஆஸ்த்மாக்காரன் போலும். கழுத்து புடைத்து நரம்பு தெரிந்தது.

கொஞ்சிக் கொண்டிருக்கும் ஆங்கிலேயர்களுக்குப் பக்கத்தில் இன்னும் இரண்டு பிரயாணிகள் வந்து உட்கார்ந்தார்கள்.

ஒரு வெள்ளைக்காரன் தோய்ந்து நனைந்துபோய், நனைந்த கோழிபோல் வந்திருந்தான். அவனைத் தொடர்ந்து வந்த ஆசிய மாது மிகக் கவனமாகத் தன் குடையை மடித்து அருகில் வைத்துக் கொண்டாள். மிகவும் நாகரீகமாக உடை அணிந்திருந்தாள். பஸ்ஸில் உள்ள சீட்டுக்களில் இருப்பவர்களை விடக் கூட மனிதர் நெருக்கியடித்துக் கொண்டு பஸ்ஸில் நிறைந்திருந்தார்கள்.

ஆஸ்த்மாக்காரன் பொறுமையின்றி அங்குமிங்கும் பார்த்துக் கொண்டான். அவன் பக்கத்தில் ஒரு ஆபிரிக்கக் கிழவன் இருமியபடி வந்து உட்கார்ந்தான். ஆஸ்த்மாக்கார வெள்ளைக்காரன் இருமிக் கொண்டிருக்கும் ஆபிரிக்கக் கிழவனை அருவருப்புடன் பார்த்தான்.

வங்காளக் குழந்தைக்குப் பசியோ என்னவோ ஆலாபரணம் செய்யத் தொடங்கிவிட்டது. வெளியில் மழை, உள்ளே அழுகை, இருமல் ஆஸ்மா இழுப்பு இன்னும் எத்தனையோ சத்தங்கள். பின்னாலிருக்கும் சோடியின் முத்தத்தின் சத்தம் வேறு.

பஸ் இன்னும் புறப்படவில்லை. தெப்பமாய் வந்திருந்த வெள்ளைக்காரன் தனது கையிலிருந்த "வேர்க்கஸ் பார்ட்டி" பத்திரிகையைத் திறந்து வாசிக்கத் தொடங்கினான்.

அவனுக்குப் பக்கத்திலிருந்த பெண் சல்மன் ருஷ்டியின் 'சற்றனிக் வேர்ஸஸ்' புத்தகத்தில் பார்வையைப் பதித்தாள்.

"ஏய் ஏன் இன்னும் பஸ் கிளம்பவில்லை?" உயர்ந்து வளர்ந்திருந்த ஒரு கறுப்பு இளைஞன் ட்ரைவரை பார்த்துச் சத்தம் போட்டான்.

ட்ரைவருக்கும் சில பிரயாணிகளுக்கும் ஏதோ தகராறு நடப்பதற்கான சத்தங்கள் கேட்டன. பின்னிருந்த பிரயாணிகளுக்குச் சத்தங்கள் கேட்டுக் கொண் டிருந்ததே தவிர என்ன நடக்கிறது என்று தெரியவில்லை.

நின்றிருந்த கூட்டத்தை விலக்கிக் கொண்டு மூன்று இளம் பெண்கள் பஸ்ஸில் நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

பிரயாணிகளுக்குக் காலை வணக்கம் சொல்லிக் கொண்டு "யேசுவிடம் உங்களை ஒப்படையுங்கள்" என்று உரத்து சொன்னார்கள்.

ஒரு பெண் வட ஆபிரிக்க அல்லது கிழக்கு ஆபிரிக்கப் பெண்ணாக இருக்கலாம். கிளியோபாத்ரா மாதிரி நீண்ட கண்களும் ஒடுங்கிய முகமும். முல்லை மொட்டுக்கள் போன்ற உதடுகளும். பார்வையில் ஒரு ஒளி. கருணையும் குழந்தைத்தனமும் நிறைந்த ஒரு குழப்பமான சஞ்சலம். மெல்லிய உடலைச் சுற்றி கம்பளியாலான கருப்புக் கோர்ட். கையில் பைபிள்.

"உங்களை ரட்சிப்பதற்காக யேசுபிறந்தார், உங்களுக்காகத் தன்னைத் தியாகம் செய்தார். உங்கள் துன்பங்களை அவரிடம் ஒப்படையுங்கள், அவர் உங்கள் துன்பத்தைத் துடைத்துப் பாவங்களை பெருமனதுடன் மன்னிப்பார்."

ஆபிரிக்கப் பெண் பிரசங்கம் செய்யத் தொடங்கினாள். அடக்கமாக இருந்து ஒரு சிலர் அவள் சொற்பொழிவைக் கேட்டனர்.

"ஓய், உமது யேசுவிடம் சொல்லி உனது முட்டாள் வாயை மூடச் சொல்."

ஆஸ்த்மாக்காரன் சத்தம் போட்டான். போட்ட சத்தத்தில் அவன் மூச்சு இழுக்கத் தொடங்கி விட்டான்.

அவனுக்குத் துணையாக ஆபிரிக்கக் கிழவன் இருமல் தொடர்ந்தது. வங்காளக் குழந்தை நீலாம்பரி வாசித்தது. முத்தம் தந்து கொண்டிருந்த காதலர்கள் தங்கள் கந்தர்வ உலகத்திலிருந்து கீழே இறங்கி வந்தார்கள்.

பைபிளுடன் வந்த பெண்களில் உயர்ந்திருந்தவள் ஆசிய இனம். அவள் முகம் மழையில் நனைந்தெழுந்த மல்லிகைப் பூப்போல் பளிச்சென்றிருந்தது. வண்டிரண்டைக் கண்களாக வளைய விட்ட குறு குறுப்பு. இளமைக் கவர்ச்சியைக் கலையாக்கும் இதழ்கள்.

"நான் ஒரு சீக்கியப் பெண்ணாகப் பிறந்தேன். யேசுவின் அருளால் இப்போது உண்மைகளை உணரத் தொடங்கி விட்டேன்." அந்த அழகி உருக்கத்துடன் பேசத் தொடங்கினாள்.

"ஏன் உன் தாய் தகப்பன் பொய்களையே சொல்லித் தந்து கொண்டிருந்தார்களா?" - நின்று கொண்டிருந்த ஒரு வெள்ளைக்காரி விண்ணாணமாகக் கேட்டாள்.

"அப்படி அபத்தமாகச் சொல்ல வேண்டாம்... என் தாய் கூட இப்போது கிறிஸ்தவப் பெண்ணாக மாறி விட்டாள்... ஒரு நாள் யேசுபிரான் என் தாயிடம் வந்தார்...."

அவள் பேச்சை முடிக்கவில்லை. அந்த வெள்ளைக்காரப் பெண் கொல்லெனச் சிரித்தாள்.

"உனது அப்பன் அப்போது எங்கேயிருந்தான். நீங்கள் சீக்கியர்கள்; கையில் வாளும் வளையலும் கொண்டு திரிவீர்களே. யேசு வரும்போது வாளைக் காட்டிப் பயம் காட்டவில்லையா?" அந்த வெள்ளைக்காரப் பெண்ணின் கிண்டலுக்குப் பலியானாள் அந்த இளம் சீக்கியப் பெண்.

பைபிளை வைத்துக் கொண்டிருந்த மூன்றாவது இளம் பெண் சல்மன் ருஷ்டியின் 'சற்றானிக் வேர்ஸஸ்' நாவலை வைத்துக் கொண்ருந்த ஆசிய மாதுவிடம் சிரித்தபடி போனாள்.

"உங்களைப் பார்த்தால் இந்துப் பெண் போல இருக்கிறது." பைபிளை வைத்துக் கொண்டிருந்த இளம் பெண் தனது அகன்ற விழிகளால் அந்த மாதை ஏற



படிப்பகம்

www.padippakam.com



இறங்கப் பார்த்தாள்.

"நான் ஒரு இந்துப் பெண் என்று கண்டுபிடித்ததற்கு கைதட்டிப் பாராட்டவா?" - நறுக்கென்று கேட்டாள் அந்த நாகரீக மாது.

"நாங்கள் முட்டாள்களாக ஆக்கப் பட்டிருந்தோம். மூளையற்ற அறிவிலிகள்போல் மாட்டையும் பாம்பையும் எலும்புக் கூடு போட்ட உருவங்களையும் வணங்கப் பழக்கப் பட்டிருந்தோம். ஆயிரம் உருவங்களை நம்பி வாழ்நாளை வீணாக்குவதைவிட ஒருத்தனை, கடவுளின் தூதனான யேசுவை நம்புங்கள்."

உயர்ந்து வளர்ந்துபோய் பஸ் கம்பியொன்றில் தொங்கிக் கொண்டு நின்றிருக்கும் ஒரு கறுப்பனின் ரேடியோவிலிருந்து ஆபிரிக்க இசையொன்று தாள கதியுடன் மற்றவர்கள் காதையும் துளைத்தது. பஸ்ஸிலிருந்த பிரயாணிகள் கூட்டம் ஒரு நாடகத்தைப் பார்ப்பதுபோல் அமர்ந்திருந்தார்கள். "உங்கள் பிரசங்கத்தை நிறுத்திக் கொண்டு பஸ்ஸை விட்டு வெளியேறுங்கள். நீங்கள் வெளியேறுமட்டும் நான் பஸ்ஸை எடுக்கமாட்டேன்." ட்ரைவர் பொறுமையான குரலில் உத்தரவிட்டான்.

"ஆமாம் உங்கள் பிதற்றல்களைக் கொண்டு தெருவில் கொட்டுங்கள்." ஒரு ஆங்கிலேயப் பெண் - மிக மிக மூதாட்டி தன் நடுங்கும் குரலில் சத்தம் போட்டாள்.

"உங்கள் பாதிரிகள் எங்கள் நாடுகளுக்கு வரும்போது நாங்கள் பட்டாடை விரித்துப் பாதிரிகளை வரவேற்றோமே" கறுப்பு வாலிபன் கிழவியிற் சீறி விழுந்தான்.

"இதெல்லாம் உலக யுத்தத்தால் வந்த வினை" கிழவி கறுப்பு வாலிபனிற் பாய்ந்தாள்.

"என்ன வினை?"

"நீங்கள் எல்லாம் எங்கள் நாட்டுக்கு வந்த வினை." கிழவியின் முகம் கோபத்தில் சிவந்து விட்டது. சுருக்கம் விழுந்த முகம் பௌடரால் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

"நாங்கள் வேலைக்காரர்களாக அழைக்கப்பட்டு வந்திருந்தோம்." கறுப்பு வாலிபன் கிழவியை வெறுப்புடன் பார்த்துச் சொன்னான்.

"நீங்கள் என்ன வேலையா செய்கிறீர்கள்? இரவு பகலாகக் காட்டுமிராண்டி மாதிரிப் பாட்டுக்களைப் போட்டு அக்கம் பக்கத்தாருக்குப் பைத்தியம் உண்டாக்குகிறீர்கள்."

"உங்களுக்கு ஏற்கனவே பைத்தியம். இல்லாவிட்டால் உலகமெல்லாம் போய் உலகத்தையே சின்னாபின்னம் செய்திருப்பீர்களா?"

கறுப்பனின் கிண்டலுக்கு "வேர்க்கஸ் பார்ட்டி" பத்திரிகை வைத்திருந்தவன் கல கலவென்று சிரித்தான்.

யார் சிரிக்கிறார்கள் என்று தலையைத் திருப்பிய பங்காள முஸ்லிம் மனிதன் சல்மன் ருஷ்டியின் புத்தகம் வைத்திருந்த பெண்ணை எரித்து விடுவதுபோற் பார்த்தான்.

அந்த ஆத்திரத்தில் கண்களைத் தவிர மற்ற எல்லாப் பாகத்தையும் மூடிக் கொண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டிருந்த மனைவியை ஏதோ சத்தம் போட்டான்.

"கடவுளின் குழந்தைகளே அமைதியாக இருங்கள். நிறத்தையும், மொழியையும், சமயத்தையும் காரணம் வைத்துக் கொண்டு ஒருத்தரை ஒருத்தர் பகைத்துக் கொள்ளாதீர்கள். நாங்கள் எல்லோரும் யேசுவின் குழந்தைகள், எங்கள் குறைகளை யேசுவிடம் சொல்வோம். அவரின் அன்புக்கு எங்களை ஆட்படுத்திக்கொள்வோம்." வட ஆபிரிக்க அழகி கணீரென்ற குரலிற் சொன்னாள்.

"சட அப் அன்ட் கெற் அவுட்." ட்ரைவர் கத்தினான்.

"ஏய் பிளடி இடியட்ஸ் கெற் அவுட் எனக்கு ஆஸ்பத்திரி அப்பொயின்ட்மென்ட்டுக்கு நேரமாகிவிட்டது." ஆஸ்த்மாக்காரன் எழுந்து நின்று கூக்குரல் போட்டான்.

நோயும் முதுமையுமான அந்த இந்தியத் தம்பதிகளில் அந்த மனைவி அழத் தொடங்கி விட்டாள்.

பஸ் இன்னும் நின்று கொண்டிருந்தது. மழை 'சோ' வென்று கொட்டிக் கொண்டிருந்தது. காற்று பேய்த்தனமாகச் சுழன்று வீசியது.

"இன்று இந்த உலகத்தில் மனிதர்கள் மதுவாலும், மயக்க மருந்துகளாலும் அறிவைக் கெடுக்கும் ஆபாசக் கலைகளாலும் மிகவும் பெலவீனப் பட்டிருக்கிறார்கள். எங்கள் சமுதாயம் உய்ய நாங்கள் இறைவனைத் துதிப்போம்." பைபிள் வைத்திருந்த சீக்கியப் பெண்ணின் குரலில் பரிவு.

"பேராசை பிடித்த மனிதர்களால் இன்று ஆகாயத்தில் ஓட்டையும், இயற்கையில் அழிவும், காற்றில் நஞ்சும் பரந்து விட்டது. இவற்றையெல்லாம் உணர நீங்கள் யேசுவை நம்புங்கள்." கடவுளுக்காக வட ஆபிரிக்கப் பெண் உருகினாள்.

"பழைமையான மூட நம்பிக்கையால் சாதி, சமயம், ஏழை, பணக்காரர் என்று மனித குலம் ஒருத்தரை ஒருத்தர் அடித்துக்கொள்வதை விட்டு விட்டு ஒருத்தரில் ஒருத்தர் அன்பாய் இருப்போம்." யேசுவின் பிரதிநிதியான அடுத்த ஆசியப் பெண் முழங்கினாள்.

"ஆமாம் இந்த மாதிரிப் போதனைகளுடன் எங்கள் நாடுகளுக்க உங்கள் மதபோதகர்கள் வந்துதானே எங்கள் நாட்டைக் கொள்ளையடித்தார்கள். ஒரு கையில் பைபிளும் மறு கையில் துப்பாக்கியுடனும் வந்து எங்கள் நாட்டைக் கொள்ளையடித்தபோது நிறம், மொழி, சமயம் என்றெல்லாம் பார்த்துத்தானே எங்கள் நாட்டை நிர்மூலமாக்கினீர்கள்." கறுப்பு வாலிபன் அந்தப் பெண்ணிடமிருந்து பைபிளைப் பறிக்க எத்தனித்தான்.

"ஆமாம், கப்பிட்டலிஸமும் இம்பீரியலிஸமும் உலகத்தைக் கூறு போட்டு அழித்துக் கொண்டிருக்கின்றன." தோய்ந்து நனைந்து போய் வந்திருந்த ஆங்கிலேயன் கறுப்பு வாலிபனுக்கு ஒத்துப் பாடினான்.

சல்மன் ருஷ்டி வாசித்துக் கொண்டிருந்த பெண் சுவாரஸ்யமாக இந்தப் புரட்சிகர வாக்குவாதத்தை ரசித்துக் கொண்டிருந்தாள்.

இதுவரைக்கும் மேற்கட்டில் அமர்ந்திருந்த ஒரு சிலர் படிக்கட்டில் இறங்கி வந்து வேடிக்கை பார்க்கத் தொடங்கினர். பஸ்ஸில் பலவிதமான சத்தங்கள் ஒன்றுடன் ஒன்று மோதின.

மொட்டைத் தலையும் முரட்டுத் தோற்றமுமான வெள்ளைக்காரர் இருவர் கறுப்பு வாலிபனைப் பார்த்து எக்காளமாகச் சிரித்தனர்.

"ஒய் நிகர், உம்முடைய வாயைப் பொத்தும், நீங்கள் வந்து புனிதமான நாட்டைக் குப்பையாக்கி விட்டீர்கள். உங்கள் அழுகல் நிறமும் அசிங்கமான பழக்க வழக்கங்களும் எங்கள் நாட்டை நாற்றமெடுக்கப் பண்ணுகின்றன. உங்களை எல்லாம் உயிருடன் கொழுத்த வேண்டும்." வெள்ளைக்காரனின் இந்த சொல்லடி கறுப்பனுக்குச் சாட்டையடியாகப் பட்டதோ, அவன் துள்ளி எழும்பினான். அவன் தோற்றம் சீற்றம் கொண்ட புலி போலிருந்தது. ஆசிய மூதாட்டியின் குரல் பெரிதாகக் கேட்டது. காதுக்குள் ரேடியோவைப்



படிப்பகம்

www.padippakam.com



பொருத்திப் பாட்டை ரசித்து உடம்பை வளைத்தாடிக் கொண்டிருந்த மற்றக் கறுப்பு வாலிபனும் சண்டைக்குத் தயாரானான்.

"கடவுளின் குழந்தைகளே அவசரத்தில் உண்டான உங்கள் உணர்ச்சியைக் கட்டுப் படுத்துங்கள். உங்கள் பேதங்களை மறந்து யேசுவின் காலடியில் விழுங்கள்" முரட்டுத்தனமான வெள்ளைக்கார வாலிபர்களுக்கு நடுவிலும், கோபத்தினுச்சத்தில் திமிறும் கறுப்பு வாலிபர்களுக்கும் நடுவில் அந்த அழகிய சீக்கியப் பெண் அகப்பட்டுக் கொண்டாள்.

ஒரு முரட்டு வெள்ளைக்காரன் ஆபிரிக்க இளம் பெண்ணின் பைபிளைப் பறித்தான்.

"நாற்றமெடுக்கும் கறுப்பு வேசிகளே நீங்கள் எங்களுக்குக் கடவுளைப் பற்றிச் சொல்ல வந்துவிட்டீர்களா?"

ட்ரைவர் ஓடிவந்தான். கோபத்தில் கத்தினான். "இந்தக் கரைச்சல் வருமென்றுதானே நான் உங்களை பஸ்ஸிலிருந்து இறங்கச் சொன்னேன்."

வங்காளக் குழந்தைகள் இப்போது உச்சஸ்தாயில் ஓலம் வைத்தார்கள். அவர்களின் தகப்பன் அவர்களை ஆதரிப்பதை விட்டு விட்டு சல்மன் ருஷ்டியின் புத்தகமொன்றை வாசித்திருந்த பெண்ணைத் தன் பாஷையில் ஏதோ சொல்லித் திட்டிக் கொண்டிருந்தான்.

காதலர்கள் இருவரும் பஸ்ஸை விட்டு வெளியேற முயன்றார்கள். வெள்ளைக்கார மூதாட்டி முக்கி முனகிக் கொண்டு தானும் வெளியேற முயன்றாள். கறுப்பு வாலிபர்களும் ஆங்கிலேய இனவாதிகளும் ஒருத்தரை ஒருத்தர் கண்டபாட்டுக்குத் திட்டிக் கொண்டார்கள். "இது மிகவும் அபத்தம், காட்டுமிராண்டிகள் வந்து கடவுளைப் பற்றி எங்களுக்கு சொல்வதாவது, நாங்கள் அவர்களைக் கேட்பதாவது." கிழவி காறித்துப்பிக் கொண்டு வெளியேறினாள்.

பஸ் ட்ரைவர் தன் ரேடியோவில் பொலிஸாரை உதவிக்கு வரும்படி கேட்டுக் கொண்டிருந்தான்.

கண்மூடித் திறப்பதற்கிடையில் நான்கு பொலிஸ் கார்கள் அலறிப் புடைத்துக் கொண்டு வந்தன.

ஒரு பொலிஸ் கார் பஸ்சுக்கு முன்னாலும் மற்றது பின்னாலும் மற்ற இரண்டும் இரு பக்கங்களிலும் நிறுத்தப்பட்டன. எதிரியை முற்றுகையிடும் ஒரு படையின் ஆரவாரம்.

"ஹோலி ஸிட், இந்தப் பொலிஸ் நாய்களின் கூட்டத்தைப் பாருங்கள்." கறுப்பு வாலிபன் பயத்துடன் ஒதுங்கினான். இனவாத முரடர்கள் இருவரும் மேற்தட்டுக்குப் போய் நல்ல பிள்ளைகள் மாதிரி உட்கார்ந்தார்கள். வங்காளக் குழந்தைகள் பொலிஸாரைக் கண்டதும் கப்சிப் என்று வாயைப் பொத்திக் கொண்டார்கள்.

சீக்கியப் பெண்ணைக் கிண்டலடித்த ஆங்கிலேயப் பெண், பஸ்சுக்குள் ஏறி வரும் ஒரு வாட்டசாட்டமான பொலிஸ்காரனைப் பார்த்து "அடடா என்ன ஆண்மை" என்று வாய் விட்டுச் சொல்லிப் பெருமூச்சு விட்டாள். ``Hey handsome, you look magnificient' என்று சொல்லிப் போலிஸ்காரனைத் தடவினாள். வந்த பொலிஸ்காரன் ஆவேசத்துடன் கறுப்பு வாலிபர்களை நெருங்கினார்கள். பைபிளுடன் நின்றிருந்த பெண்கள் பொலிஸாரைப் பார்த்துக் கருணையுடன் புன்முறுவல் செய்தனர். "இதோ இருக்கிறார்கள் குழப்படிக்குக் காரணமாக இருந்தவர்கள்." பஸ் ட்ரைவர்



ஆத்திரத்துடன் பைபிளுடன் நின்றிருந்த மூன்று பெண்களையும் காட்டினான்.

திடு திடுவென்று பஸ்சுக்குள் நுழைந்த மற்றப் பொலிஸார் அந்த இளம் பெண்களைத் தாறுமாறாகத் தள்ளி இழுத்தார்கள் "ஒய் அந்தப் பெண்கள் என்ன துப்பாக்கியா வைத்திருக்கிறார்கள். ஏன் இப்படி முரட்டுத் தனமாகத் தாக்குகிறாய்?" 'வேக்கர்ஸ் பார்ட்டி' பத்திரிகைக்காரன் சத்தம் போட்டான். புரட்சித் தொனி பயத்துடன் வெளிவந்தது.

``you keep your bloody mouth shut' ஒரு பொலிஸ்காரன் கை வேர்க்ஸ் பார்ட்டியின் பிடரியைப் பிடித்தது.

பஸ் நிறையப் பொலிஸ்காரர் குழுமி விட்டார்கள்.

ஒரு பெண்ணுக்கு இரு பொலிஸார் வீதம் மூன்று பெண்களும் கொக்கு சுமந்து சென்ற ஆமை மாதிரி காவி எடுக்கப்பட்டார்கள். அழகிய மலர்கள் அடைமழையில் இழுபட்டன.

"கடவுள் உங்களைக் காப்பாற்றட்டும். உங்கள் பாவங்களை அவர் மன்னிப்பார்." பெண்கள் ஓதிக் கொண்டே இழுபட்டார்கள். அவர்கள் குரல் மிகவும் பலவீனமாக இருந்தது.

வெளியில் பல பொலிஸார் மிகவும் கவனமாக (சிலர் துப்பாக்கியும் வைத்திருக்கலாம்) இந்தக் குழப்படிக்காரர்களை அவதானித்தார்கள்.

மழை மிகவும் பயங்கரமாகப் பெய்தது. ஒருத்தியின் பைபிள் சாக்கடையில் விழுந்தது. அடுத்தவளின் பைபிள் பறிக்கப்பட்டு மிகவும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது. இன்னொருத்தி தன் பைபிளைத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டு முகத்தை வானத்துக்கு உயர்த்தி பர மண்டலத்திலிருக்கும் பிதாவை உத விக்குக் கூப்பிட்டாள். பார்த்துக் கொண்டிருந்த பொலிஸார் கிண்டலாகச் சிரித்தார்கள்.

மூன்று பெண்களும் மூன்று பொலிஸ் காரில் ஏற்றப்பட்டார்கள்.

அவர்கள் - யேசுவைத் துணைக்குக் கூப்பிட்டபடி மிகவும் பாதுகாப்பான பொலிஸ் காவலுடன் கைதிகளாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

பெரிய பெருமூச்சுடன் பஸ் புறப்பட்டது. ❑



படிப்பகம்



அ. பாலமனோகரன்

ரமணி கடிகாரத்தைப் பார்த்தாள். மாலை ஏழு முப்பது. இன்னமும் சரியாக இருபது நிமிடத்தில் அவன் அழைப்பான்.

அடுப்பில் கோழிக்குழம்பு கொதித்துக் கொண்டிருந்தது. இன்னும் ஒரு ஐந்து நிமிடத்தில், இறைச்சிச் சரக்குத் தூளைப் போட்டு, எலுமிச்சம்பழத்தை வெட்டிப் பிழிந்து விட்டு, இறக்க வேண்டியது தான். இறைச்சிக் குழம்புக்கு, போத்தலில் வரும் புளிச்சாற்றை விடுவது அவனுக்குப் பிடிக்காது. மற்றைய நாட்களில் பரவாயில்லை. ஆனால் சனிக்கிழமை இரவுச் சாப்பாட்டில் அவன் மிகவும் கவனமாக இருப்பான். எல்லாம் அவன் சொல்லும் பக்குவப் பிரகாரம் இருக்க வேண்டும்.

இல்லாவிட்டால்.....? இல்லாவிட்டால் அவன் நிச்சயம் கோபிப்பான் என்பது ரமணிக்குத் தெரிந்தது. ஆனாலும், அவனுடன் வாழ்ந்த இந்த மூன்று மாதங்களில் அவன் எதற்குமே ரமணியைக் கோபித்தது கிடையாது. தொட்டதுக்கெல்லாம் எரிந்து விழும் அவளுடைய அண்ணனுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இவன் மிகவும் வித்தியாசம். நிதானமானவன். எந்த விஷயத்தையும் ஒரு ஒழுங்கோடும், ஒரு அளவோடும் செய்யவேண்டும் என்பதில் கவனமாக இருப்பவன் என்பதை, ஜெர்மனிக்கு வந்த சில நாட்களுக்குள்ளாகவே ரமணி புரிந்து கொண்டிருந்தாள்.

ஆனால்... , சில விஷயங்களில் அவனுடைய போக்கை அவளால் சரிவரப் புரிந்துகொள்ள முடியாமல் இருந்தது. உதாரணமாக இந்தச் சனி இரவுச் சாப்பாட்டு விஷயம். அதற்கான ஆர்வமும் அக்கறையும், அசாதாரணமானதாக, விசேடமானதாகத் தெரிவதற்குக் காரணம் அதற்கு முதல்நாளான வெள்ளிக்கிழமை விஷயந்தான்.

வெள்ளிக்கிழமைகளில் அவன் விரதம். விரதம் என்றால் சும்மா பெயருக்குக் காலையில் மட்டும் சாப்பிடாமல் இருந்துவிட்டு, மத்தியானம் பன்னிரண்டு மணிக்கே, நாலுவிதமான மரக்கறி, தயிர், பச்சடி வகைகள் என்றெல்லாம் மூக்குமுட்ட ஒரு பிடி பிடித்துவிட்டு, பின்னர் இரவு ஒரு இலேசான சாப்பாடு என்று ஒரு தட்டு நிறையக் கோதுமை மாப் புட்டும், கப்பல் வாழைப்பழமும், அதற்குப் பின் ஒரு பெரிய கோப்பை நிறையச் சுண்டக் காய்ச்சிய பசுப்பாலும் சாப்பிடும் விரதமல்ல.

வெள்ளி அதிகாலையிலேயே எழுந்து, தலை முழுகி, சாமி படங்களுக்குப் பூ வைத்து, கற்பூரம்



படிப்பகம்

www.padippakam.com



கொளுத்திச் சாம்பிராணி காட்டி வீட்டை ஒரு குட்டிக் கோவிலாகவே ஆக்கிவிடுவான். பகல் முழுவதும் பச்சைத் தண்ணீர்கூட வாயில் படக்கூடாது. வேலைக்குப் போய் வந்து மறுபடியும் முழுகி, சீர்காழியின் பக்திப் பாடல்களை இலேசாக வீடு முழுவதும் ஒலிக்க வைத்து, சாமி படங்களுக்கு முன் அரைமணி நேரம் நின்று வணங்கிவிட்டு, அதற்குப் பின்புதான் சாப்பிடுவதற்கு உட்காருவான். வெள்ளிக்கிழமை சமையலுக்கெனப் பிரத்தியேகமான எவர்சில்வர் பாத்திரங்கள். அதற்கென்று விசேடமாக பிராங்போட்டுக்கு ஒரு தடவை போய் வாங்கி வந்தவை. அவற்றை மறந்தும் மச்சம் மாமிசத்துக்கு உபயோகப்படுத்தக் கூடாது.

இவற்றிலும், இன்னும் வேறு பல விஷயங்களிலும் அவனுடைய விருப்பத்தை அனுசரித்து நடந்துகொள்வது ரமணிக்கு கஷ்டமாக இருக்கவில்லை. முன்பின் தெரியாத ஒருவருடன் காலமெல்லாம் வாழ்வதற்கென வருகின்றேனே என, ஆரம்பத்தில் அவளுக்கிருந்த பயம், இந்த மூன்று மாதங்களில் முக்கால் வீதம் மறைந்துவிட்டிருந்தது. அவளுக்கு மனம் முழுவதும் இலேசாக, ஏன் சந்தோஷமாகக்கூட இருந்தது.

ஆனால், வெள்ளிக்கிழமைகளில், சைவப்பழமாக, ஆசாரமாக விரதம் பிடிப்பவன், சனி இரவுச் சாப்பாடு நல்ல இறைச்சி, மீன் பொரியல், முட்டை என்ற விருந்து ரீதியில் இருக்கவேண்டும் என்பதில் ஏன் இவ்வளவு விஷேச கவனம் எடுக்கிறான் என்பது ரமணிக்கு புரியவில்லை. அன்று மட்டுமே அவன் குடிப்பதனாலா? ரமணி ஜெர்மனிக்கு வந்து இரண்டாவது சனிக்கிழமை, அவன் வீடு, சுற்றுப்புறம் யாவற்றையும் கச்சிதமாகத் துப்பரயவாக்கி, காரையும் கழுவி ஷெட்டுக்குள் விட்டு, குளித்துவிட்டு வந்து, கூடத்து அலுமாரியினுள் இருந்த ஒரு போத்தலையும் கிளாசையும் எடுத்து வைத்துக் கொண்டு, ரமணியை ஐஸ் கட்டிகள் எடுத்துவரச் சொல்லியபோதுதான் அவன் குடிக்கும் விஷயம் ரமணிக்குத் தெரிய வந்தது.

அவன் ஒரு மரத் தொழிற்சாலையில் வேலை செய்பவன். அது இலேசான வேலை அல்ல என்பது, அவன் மாலையில் களைத்து வீடு திரும்பும் நிலையைக் கொண்டு அவள் உணர்ந்திருந்தாள். இப்படியான வேலை செய்பவர்கள் உடல் அலுப்புக்காகக் கொஞ்சம் குடிப்பது அவள் அறியாத ஒன்றல்ல. கொழும்பில் கந்தோர் ஒன்றில் வேலை செய்யும் அவளுடைய அண்ணன்கூட, சனி, ஞாயிறில் தேகசுகத்துக்காக மது அருந்துவது அவளுக்குத் தெரியும். எவருடைய மதுப்பழக்கத்தின் காரணமாகவும் அவள் இதுவரை இடைஞ்சலை அனுபவித்ததில்லை. எனவே குடிக்கும் விஷயத்தை அவள் ஒருபோதுமே தயவறானதாகக் கணிக்கவில்லை. அதனால் அவள் அதை வெறுக்கவோ, அருவருக்கவோ செய்யவில்லை.

இப்போதுங்கூட, அவன் குடிப்பது ரமணிக்கு ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. ஆனால், அவன் குடிக்க ஆரம்பித்து, ஒரு அரைமணி நேரம் கழிந்தபின் சொல்லும் விஷயங்களைத்தான் அவளால் பூரணமாக புரிந்துகொள்ள முடியவில்லை. புரிந்து கொள்வது என்று சொல்வதில் பார்க்க, அவன் சொல்லும் அந்த விஷயங்கள் அவளுடைய நிம்மதியை, சந்தோஷத்தை, அவனைப் பற்றிப் படர ஆரம்பித்துள்ள தனது உறவை, ஏதோ ஒரு விளக்கமுடியாத வகையில், பாதிப்பதாக ஒரு உணர்வு இப்போ சில நாட்களாக ஏற்பட்டிருந்தது.

தனது சந்தேகத்தை, அந்தக் கதைகளைக் கேட்கையில் தனது மனதில் இயல்பாக எழும் வினாக்களை, அவனிடம் கேட்கவேண்டும் போல அவளுக்குள் அந்தச் சமயங்களில் ஒரு உந்துதல் ஏற்படுவதுண்டு. ஆனால் அவள் இதுவரை அந்த வினாக்களைத் தனது மனதுக்குள்ளாகவே வைத்திருந்தாள்.

அந்த அளவுக்கு அவர்களுக்குள் இன்னமும் அன்னியோன்னியம் ஏற்படவில்லை என்பதனால்தான் அவனிடம் அந்தக் கதைகளையிட்டு எதுவும் கேட்க முடியவில்லை என்பதையும் ரமணி உணர்ந்தாள்.

அவன் சொல்லும் முதலாவது சம்பவம் 1983 ஜூலையில், அவன் ஜெர்மனிக்கு வருவதற்காகக் கொழும்பு வந்தபோது நடந்திருந்தது. இதற்குள் எட்டுப் பத்துத் தடவைகள் அதைக் கேட்டு, அதை நினைக்கையில் அது நேரில் நடப்பதுபோலவே இருக்கும்.

ஏஜென்சிக்காரன் அவனைச் செக்கடித் தெருவில் ஒரு அறையில் தங்க வைத்திருந்தான். அப்போதுதான் கொழும்பில் தமிழ்ரைச் சிங்களவர் அடித்தும், வெட்டியும், எரித்தும் கொன்ற வன்செயல் வெடித்திருந்தது. புறக்கோட்டைப் பகுதியில் ஏதோ பொருள் வாங்குவதற்காகச் சென்றிருந்த அவன் பஸ்நிலையம் அருகில் வசமாக மாட்டிக் கொண்டான்.

ஐந்தாம் குறுக்குத் தெருவில் இருந்த தமிழ்க் கடைகள் தீப்பற்றி எரிய ஆரம்பித்த சமயம். குண்டர்கள் கூட்டம் ஒருபுறம் தமிழ்க் கடைகளைத் தேடிச் சூறையாட, கொலைவெறி கொண்ட சிங்களக் காடையர் குழுக்கள் கண்ணில்பட்ட தமிழர்களையெல்லாம் இரக்கமில்லாமல் கண்ட துண்டமாக வெட்டிக் கொன்றுகொண்டிருந்த நேரம். அப்படிப்பட்ட தொரு குழுவிடம் அவன் சிக்கிக்கொள்ளவிருந்த சமயத்தில்தான் அந்த முஸ்லிம் மனிதர் அவனைத் தன்னுடைய சொந்தக்காரன், மட்டக்களப்பிலிருந்து நேற்றுத்தான் வந்தவன் என்று சிங்களத்தில் கூறி, அவனைப் பாதுகாத்து, தன்னுடைய வீட்டுக்குக் கூட்டிச்சென்றிருந்தார்.

அதுமட்டுமல்ல, கலவரங்கள் பூரணமாக அடங்கி, கொழும்பு சகஜ நிலைக்குத் திரும்பும்வரை அவனைத் தன் வீட்டிலேயே வைத்திருந்து, பின்பு அவனைச் செக்கடித் தெரு அறைக்கு அழைத்துச் சென்று, ஏஜென்சிக்காரனிடம் ஒப்படைத்திருந்தார்.

'அன்று அவர், அதுதான் இப்ராகீம், மட்டும் என்னைக் காப்பாற்றியிருக்காவிட்டால்' என்று சொல்லி அவன் கண் கலங்குவான். 'அந்த நல்ல மனிதரின் பெயரை மட்டும் கேட்ட நான் அவருடைய விலாசத்தை வாங்கி வைக்க மறந்து போனேன்!.... இன்று நான் ஆண்டவனே என்று ஜெர்மனியில் வசதியாக இருக்கின்றேன்..... இப்ராகீமுக்கு ஏழெட்டுப் பிள்ளைகள். அவற்றில் பல பெண் குழந்தைகள். அந்தச் சிறிய, இரண்டறை ஒண்டுக் குடித்தனத்தில், அந்தக் குடும்பம் என்னை



படிப்பகம்

www.padippakam.com


# SKY WINGS LTD

## TRAVEL AGENTS

**Instant Ticketing**
**We are holding July & August Tickets**

**"WE ARE ATOL BONDED FOR THE PROTECTION OF OUR CLIENTS"**

**119 Tooting High Street, London SW17 0SY**

TOOTING BROADWAY

**MAIN AGENT FOR**

AIRLANKA

ROYAL JORDANIAN الملكية الأردنية

*Call: Bala, Shankar or Dash*

ATOL 73782


**Tel: 0181-672 9111 (6ines),**
**0181-682 4747**
**Mobile: 0850 876921**
**Fax: 0181-672 0951**

**Open 7 days a week from 09. 30 till 21. 30hrs**


படிப்பகம்

www.padippakam.com





ஓவியம்: போஸ்



படிப்பகம்

www.padippakam.com



கின்றனரோ, எப்படி வாழ்கின்றனரோ?

அவளுக்கு துக்கம் நெஞ்சை அடைத்தது. கூடவே அவன் சொல்லும் இன்னமொரு கதையும் நினைவுக்கு வந்தது. ஏனெனில் அதுவும் நெஞ்சைப் பிழியும் ஒரு கிராமத்துக் க்தைதான்.

அவனுக்கு ஊரில் ஒரு நண்பன். ஒரேயொரு நண்பன். சின்ன வயதிலிருந்தே ஒன்றாகத் திரிபவர்கள். ஒன்றாகப் படித்தவர்கள். இவன் ஜெர்மனிக்கு வரும்போது அவனுக்கும் கூடவர ஆசை. இவனுக்கும் அதுதான் விருப்பம். ஆனால் அந்த நண்பனுடைய குடும்பமும் ஒரு வசதியற்ற குடும்பமே. அவர்களால் எவ்வளவு முயன்றும் பத்தாயிரம் புரட்ட முடியவில்லை. இவர் ஜெர்மனிக்கு வந்து சம்பாதிக்க ஆரம்பித்ததும், தான் பணம் அனுப்பிக் கூப்பிடுவதாக வாக்குக் கொடுத்துவிட்டு வந்திருந்தான். இங்கு வந்தபின்னும் அவர்களிருவருக்கும் கொஞ்சக் காலம் கடிதத் தொடர்பு இருந்தது. ஆனால் என்ன செய்வது! முதலில் இவன் தன் சகோதரங்கள் மூவரையும் வெளிநாட்டுக்கு அழைக்க வேண்டியிருந்தது. அதுதானே முறை! அவர்கள் மூவரையும் அழைப்பதற்கு மூன்று வருடங்களாகி விட்டது! அதற்குள் அந்த நண்பன் தான் விரும்பியவளை மணமுடிக்க வேண்டியிருந்தது. இவன் ஜெர்மனிக்கு வந்த நாலாம் வருடத்தில் அவன் ஷெல் விழுந்து செத்துப் போனான். அவனை இங்கே அழைத்து என்னுடன் வைத்திருக்க எவ்வளவு ஆசைப்பட்டேன்! என்று சொல்லி இவன் கண் கலங்குவான்.

இப்போது அந்த நண்பனின் மனைவியும், இரண்டு குழந்தைகளும் இருக்கும் இடம் தெரியாதாம். தெரிந்தால் அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யலாமே, அவர்களை நினைத்தாலே எனக்கு மிகவுங் கவலையாக இருக்கின்றது எனச் சொல்லிச் சொல்லி மறுகுவான்.

கடிகாரத்தை மறுபடியும் க்வனித்த ரமணி சன்னலை இறுகச் சாத்தி அடைத்துவிட்டு, முட்டைத் தட்டையும் கையில் எடுத்துக்கொண்டு, கூடத்தினுள் இருந்த அவனிடம் சென்றாள்.

கூடத்தின் கதவைத் திறந்ததுமே மெல்லிய சோகமான இசை கேட்டது. மங்கலான, நிலவுபோன்ற வெளிச்சத்தில் அமர்ந்திருந்த அவன் எழுந்து, அவளிடம் தட்டை வாங்கி யைவத்துவிட்டு, 'இரும் ரமணி! நான் ஒருக்கா ரொய்லற்றுக்குப் போட்டு வாறன்' எனச் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

ரமணி அவனுடைய சாய்மனைக் கதிரைக்கு அருகில், தான் அந்நேரம் வழமையாக அமரும் சோபாவில் உட்கார்ந்தாள். அப்போதுதான் தனது கதிரையில் சாய்ந்திருக்கும் அவனுடைய முகத்துக்கு அவள் அருகாமையில் இருக்க முடியும்.

உயர்ந்த வகைத் தோலினாலான அந்தச் சாய்மனைக் கதிரை அவன் மிகவும் விலை கொடுத்து வாங்கியது. அதன் விலைக்கு, உலுவிந்தங்குளத்தில் ஒரு ஏக்கர் வயலை வாங்கிவிடலாம். உடல் ஆயாசம் தீர அவன் அந்தக் கதிரையில்தான் தனது உடலைக் கிடத்தி ஓய்வு எடுப்பது வழக்கம். அதில் படுத்திருந்தபடியேதான் அவன் தன் சோகக் கதைகளை ரமணிக்கு கூறுவான்.

அவனுடைய வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த ரமணி, கூடத்தின் ஒரு பக்கச் சுவரின் அரைப் பகுதியைப் பிடித்துக் கொண்டிருந்த பெரிய கண்ணாடி சன்னலின் ஊடாக வெளியே பார்த்தாள். வீட்டின் பின்புறம் இருந்த வயல்வெளி இங்கிருந்தும் தெரிந்தது. இந்த வயல்களுக்கு ஏன் வரம்புகள் இல்லை என்று சிந்தித்தவளுக்கு மறுபடியும் தங்கள் கிராமத்து வயல்வெளியும், குளமும் ஞாபகத்துக்கு வந்தன.

தைமாதத்தில் குளக்கட்டில் நடந்து செல்லும்போது, குளக்கட்டின் கீழே வயல்கள் தங்கப் பாளங்களாக விளைந்து கிடக்கும். கட்டின் மறுபுறத்தில் குளத்தினுள் தேங்கி நிற்கும் தண்ணீர் மெல்லலை எறியும். தண்ணீரின் ஓரத்தில் உள்ள திட்டுக்களில், நீட்டி நிமிர்ந்து, வாயைப் பிளந்துகொண்டு சுகமாக வெய்யில் காய்கின்ற முதலைகளை அவள் காண்பதுண்டு. சிலசமயம் அவற்றின் கண்களிலிருந்து நீர் வடிந்துகொண்டே இருப்பதையும் அவள் கண்டிருக்கிறாள்.

அதை நினைத்த ரமணிக்கு இப்போ நெஞ்சுக்குள் திக்கென்று இருந்தது.

ஏனெனில், அவன் சனிக்கிழமை இரவுகளில் சொல்கின்ற அத்தனை உருக்கமான கதைகளிலும், இவன் நன்றிக்கடன் செலுத்த வேண்டிய யாவருமே, ஏதோ ஒரு வகையில் இப்போது தொடர்பு கொள்ள முடியாமல் உள்ளவர்களாகவே இருப்பது ஒரு விசித்திரமான ஒற்றுமையாக இப்போது ரமணிக்கு தோன்றியது. ஒன்றில் அவர்களுடைய விலாசம் இவனுக்குத் தெரியவில்லை. அல்லது அவர்கள் இறந்து விட்டிருந்தார்கள்!

இதற்குள் அவன் ரொய்லற் அலுவலை முடித்துக் கொண்டு கூடத்துக்கு வந்துவிட்டான்.

ரமணியைப் பார்த்து ஒரு சோகமான புன்னகையுடன், அவன் தனது சாய்மனைக் கதிரையில் வசதியாக நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொண்டு, விஸ்கி கிளாசைக் கையில் எடுத்து ஒரு சிறிய மிடறு பருகிக்கொண்டான். அதன்பின் பேச ஆரம்பித்தான்.

"ரமணி! உமக்கு ஞாபகம் இருக்குதே?.... 83 லை நான் கொழும்பிலை ஜெர்மனிக்கு வாறதுக்கு செக்கடித் தெருவிலை நிண்டபோது...."

ரமணி, அந்தக் கரிய தோலினாலான சாய்மனைக் கதிரையில் நீண்டு கிடக்கும் அவனுடைய உருவத்தை இப்போதுதான் முதல் முதலாகப் பார்ப்பதுபோல் பார்த்தாள். அவளுக்கு மீண்டும் மீண்டும் தனது கிராமத்தின் குளக்கட்டின்கீழ், சொகுசாகப் படுத்திருந்து இளவெய்யில் காய்கின்ற முதலைகளின் ஞாபகம் வந்துகொண்டே இருந்தது.


அந்த மங்கலான, நிலவுபோன்ற வெளிச்சத்தில் ரமணியின் முகத்தில் தெரிந்த திகைப்பும், இலேசான திகிலையும் அவனால் பார்க்க முடியவில்லை.


மௌனமாகத் தன்னருகில் அமர்ந்து, தான் சொல்லும் கதையை, கேள்விகள் எதுவும் கேட்காமல், கேட்டுக்கொண்டிருக்கும் ரமணியைத்தான் அவன் கண்டான்.

மனதைத் தொடும் சோகமான இசை பின்னணியில் ஒலிக்க, அவன் விஸ்கியைப் பருகிக் கொண்டே, இப்ராகீம் என்ற அந்த நல்ல மனிதரைப் பற்றியும், அவருடைய ஏழ்மையான, பெரிய குடும்பத்தைப்பற்றியும், மிகவும் உணர்ச்சி பொங்க விஸ்தாரமாகச் சொல்லிக் கொண்டிருந்தான். ❑



படிப்பகம்




குருவி இறந்து நாளாயிற்று!
இருப்பது
நிழல் மட்டும்தான்.

கிணற்றில் நீர் அள்ளும்
சத்தம்
நிரந்தரமானது... உயிர் விலகும் சத்தம்போல்...
பிரமைதான்.

குந்தியிருந்து மணல் அளைந்து
பல கதைகள் பேசிய நினைவுகள்...
வெறுமையாய்...
இறந்து வீழ்ந்த நட்சத்திரங்கள் போல்

நீ என்பது மருவி,
அவள் என்பதாகிவிட்டது.

கவலையுடன் காத்திருந்த
அக்காளின் விதவைமுகம்
கலங்கலாய்...

நடந்து பார்த்தேன்
உட்கார் என்றன கால்கள்!
உட்கார்ந்தேன்.
எழுந்து நட என்றன காலங்கள்!!

யாருக்கு யார்
இங்கு
ஆணையிடுவது?


இன்னும் இரவு அகலாத நிலையில்...
பகல் வருவதாய் நினைப்பு! □

எல்லாமே பழகிப் போய்விடுகிறது
நாலுபேர் நாலுவார்த்தை கூறினாலேயே
அடிக்கடி
அடக்கித்தேக்கி வைத்திருக்கும்
சிறுநீரைக் கூட
இயல்பாக கழிக்க முடியும்.

இருந்தாலும்
சிலரது வார்த்தைகள் மட்டும்
முள்ளாய் குத்திவிடும்.

சிறுநீர்கழிக்க
முன்தயாரிப்புகள் செய்தாலும்
முடியாத தவிப்புகளாய் நீண்டும்
முக்கல்
முனகல்கள்தான்
அதிகம்
அதிகம்
என்பேன்.


எவ்வாறாயினும்
எல்லாமே பழகிப்போய்
விடுகிறது
என்பேன். □



www.padippakam.com



நா. கண்ணன்




S F T Kunalan

அவனால் நம்ப முடியவில்லை. இவ்வளவு பசுமை யையும், வண்ணத்தையும் இவ்வளவு நாள் எங்கு ஒளித்து வைத்திருந்தது இந்த கருத்த பூமி. பனிக் காலம் முழுமையும் வெண்பனி மூடி விதவைக் கோலம் போட்டிருந்த சூழல் மீண்டும் சின்ன கன்னிகை போல் பூத்துக் குலுங்கி நகைத்துக் கொண்டிருந்தது. அள்ளிவாரிக் கொட்டிய பனியும், மணலும், உப்பும் கலந்து அசிங்கமாக கிடக்கும் வீதிகள் பழைய அழகைப் பெற்றன. தெருவிலே படுத்துக் கொள்ளலாம் போல் சுத்தமாக இருந்தது. பசும்புல் கிராப்பு வாரப்பட்ட பள்ளி சிறுவன் போல் சோபையாக இருந்தது. வயல்களெல்லாம் ராப்ஸ் மலர்கள் மண்டிக்கிடக்க மஞ்சள் புடவை உடுத்திய கருப்பு விக்ரகம் போல் நிலம் கிடந்தது. செர்ரி மலர்கள் பூத்து உண்மையிலேயே குலுங்கி தெருவுக்கு புடவை சார்த்தி கன்னி கழித்தது போன வாரம் தான். பேரியும், ஆப்பிளும் பூப்பித்து அந்த மாலைக்கு மேலும் அழகூட்டின. கோடை வர, வர மாலையில் சூரியன் மறைய ஒன்பதரை பத்தாகிவிடுகிறது. பறவைகள் சூரியன் மறையும்வரை சப்த மிட்டுக் கொண்டேயிருக்கின்றன.

அமுதன் அமைதியாக நடந்து கொண்டிருந்தான். வீடுகளெல்லாம் மிக சுத்தமாக பராமரிக்கப்பட்டு, கண்ணாடி ஜன்னல்களில் விரல் ரேகை கூட படியாத வண்ணம் சுத்தப்படுத்தப்பட்டு நின்றன. தெருவில் நிறைய ஆள் நடமாட்டம் இருந்தது. கால் சட்டையுடன் ஓடி வருவோர், காலாற நடந்து வருவோர், ஐஸ்கிரீம் உதட்டில் வழியே தெருவிலேயே மாலை சாப்பாட்டை முடித்துக் கொள்வோர், நாய்க்கு நடை காட்ட நடந்தும், ஓடியும், சைக்கிளிலும் வருவோர், காலில் சக்கரத்தை மாட்டிக் கொண்டு விர், விர்ரென்று விரைவோர் என வீதி நிரம்பியிருந்தது. எல்லோருக்கும் கதிரவனின் இதம் வேண்டியிருந்தது. வானத்தில் சூரியன் கிழக்கு, மேற்காக பயணிக்கும் வீதி தலைக்கு உச்சிக்கு இல்லாமல் தொடுவானத்தின் மேலே சாய்வாக அமைந்திருந்தது. மாலைக்கதிர்வீச்சு பளிச்சென்று கண்ணைப் பறிக்கும் பிரகாசத்துடன் பொன் நிறத்தில் இருந்தது.

இன்னும் ஒரு கிலோமீட்டர் நடந்தால் நார்டுப்ரீடுகாப் வந்து விடும். பீகின்ஸ்கி சொல்லியிருந்தார் சதுக்கம் 27 என்று பார்த்து செல் என் மாலுமி போடும் முடிச்சு போல் வயளைந்து, நெளிந்து நின்றது விரைவுப் பேருந்து சாலையொன்று பின்னால். இவர் நார்டுப்ரீடுகாப் வந்து சேரும் போது



படிப்பகம்

www.padippakam.com



மாலை இன்னும் சோபையுடன் பொன்னைக் கொட்டிக் கொண்டிருந்தது. பெரிய அகண்ட சாலைத் தடுப்பு திறந்தே கிடந்தது. சின்னதாக ஒரு சர்ச் இடப்புறத்தில். இதுவரை நிரம்பியிருந்த சாலையோர மனிதர்கள் இந்த இடம் வந்தவுடன் காற்றில் கலந்து விட்டிருந்தனர். பெரிய, பெரிய மரங்கள் தனியாக சோகம் காத்துக் கொண்டிருந்தன. வாகனங்கள் போகக் கூடிய அளவு தெரு பெரிதாக இருந்தாலும் வாகனப் போக்குவரத்து உள்ளே தடை செய்யப்பட்டிருந்தது. காலாற நடக்கத் தோதாக, தனிமையில் நிற்கும் மரத்துடன் பேசத்தோதாக, அமைதியில் தவழ்ந்து சிரிக்கும் மலர்களை கைகளில் கோதத் தோதாக, அந்த அமைதியும், அழகும் அமானுஷ்ய வசீகரிப்புடன் இதயத்தை அழுத்தியது.

ஜெர்மனியில் எங்கும் நிறைந்து நிற்கும் ஒழுங்கும், அழகும் அங்கும் இருந்தது. கன்னியமான உடைகளுடன் ஒரிருவர் கண்ணில் பட்டனர். சிலர் கைகளில் மலர் கொத்துகள் இருந்தன. சிலர் சின்ன பூவாளிகளில் நீரை எடுத்து பூச்செடிகளுக்கு நீர் விட்டுக் கொண்டிருந்தனர். சிலர் நடைபாதை பெஞ்சுகளில் உட்கார்ந்திருந்தனர். அமுதன் இருபத்து ஏழாம் சதுக்கத்தைத் தேடிக் கொண்டிருந்தான். அந்தப் பகுதியின் மையத்திற்கு வந்து விட்டான். பெரிய சிலுவையொன்று கருங்கலலில் நின்று கொண்டிருந்தது. பக்கத்தில் ஒரு கல் தொட்டி. வாடிய மலர்களும், இலைகளும் அதில் நிரம்பியிருந்தன. பூச்செடிகளுக்கு நீர் ஊற்றதோதாக இருநூறு மீட்டருக்கு ஒரு குழாய். செம்மையான கல்லாகியிருந்தது நீரெடுக்கும் குழாயடி. இருபத்தி நாலாம் இலக்கம் வேறொரு கல்லில் செதுக்கியிருந்தது. இருபத்தி ஏழு அதிக தூரம் இருக்காதுதான்.

அமுதன் இருபத்தி ஏழாம் சதுக்கத்தில் நின்ற போது அவனது உள்ளமும் பாறையாக உறைந்திருந்தது. கெல்லிங் கிளவுஸ், ஆர்ன கோர்ட் ஸிங்கர் பீட்டர் வைட்ஸ், மார்க்கரெட் டிடன்ஸ்... அமுதனின் கண்கள் ஒவ்வொன்றாய் தேடின. அன்ன மரியா பீகின்ஸ்கி! கண்களின் தேடுதல் நின்றது. தூங்கும் குழந்தையை நெருங்கும் ஜாக்கிரதையுடன் நெருங்கினான் அமுதன். சின்னதாக ஒரு ரோஜாச் செடி. சமீபத்தில் நட்டது. சின்ன, சின்ன மலர்கள் செம்மைப்படுத்தப் பட்ட மண்ணில் புல் இன்னும் வளரவில்லை. கன்னங்கரிய, மழமழ, மழு பளிங்கு கல் நட்சத்திரக் குறி. அதையடுத்து தேதி செதுக்கப்பட்டிருந்தது. **1.1.1977.** கீழே சின்ன சிலுவைக் குறி, அதையடுத்து **26.2. 1995.** பதினெட்டு வயது வாலைக்குமரி பூத்துக்குலுங்கும் இந்த பூமி போல். நீ சேர்ந்ததால்தான் இந்த பூமிக்கு இவ்வளவு அழகு வந்தது. உனக்க இது தெரியுமோடி என் சின்ன மரியா? அமுதனின் குரல் மெதுவாக ஒலித்தது. உடல் மெல்லியதாக நடுங்க, கண்கள் பூக்களுக்கு நீர் வார்த்தன.

அமுதன் பக்கத்தில நின்றிருந்த மரத்தில் சாய்ந்து கொண்டான். தோளில் தொங்கிய பையிலிருந்து பேனாவையும், பேப்பரையும் எடுத்தான். அரவிந்தர் ஆச்சிரமத்தில் வாங்கிய வேலைப் பாடமைந்த தாள். அமுதன் எழுதினான்.

என் அன்புக்குரிய அன்னமரியா! நான் தமிழகம் சென்றவுடன் உனக்கொரு நீண்ட கடிதம் எழுதுவதாய் சொல்லியிருந்தேன். நீ வேடிக்கையாக சிரித்தாய். எந்த மொழியில் எனக்கு எழுதுவாய்? உனக்கோ போலந்து மொழி தெரியாது. நீண்ட கடிதம் எழுதுமளவுக்கு ஜெர்மன் மொழியில் பரிச்சயம் போதாது, பின் எந்த மொழியில் எழுதுவாய் என்றாய்? எனக்கு இதில் வேடிக்கையேயில்லை. என் தமிழில்தான் எழுதுவேன், நீண்டதாக ஒரு கடிதம். மொழிகள் தாண்டிய நம் காதலை, எல்லைகள் தாவிய நம் அன்பை, கலாச்சாரங்களை ஒரங்கட்டிய அதன் சமர்த்தை வடிவாக்க என் உணர்வுக்கு நெருங்கிய மொழியில் முதலில் எழுதி, என் பாண்டித்தியம் வளர்ந்த பின் உனக்கு மொழி பெயர்த்து சொல்லி, மீண்டும் காதலின் தொடக்க நிலைக்கு சேர்ந்து செல்லலாமென்று நினைத்திருந்தேன். வாழ்வு எவ்வளவு பெரியது தெரியுமா? உன் பக்கத்தில் படுத்திருக்கிறாரே கிறிஸ்டியன் ஃபாக், அவருக்கு வயதென்ன தெரியுமா? தொன்னூற்றியெட்டு. இரண்டு உலகப் போர்களைப் பார்த்து விட்டு, பேரன், பேத்தி எடுத்துவிட்டு, குனூப்பர் தெருவிலுள்ள ஐ பாரடைஸ்ஸில் ஐஸ்கிரீம் சாப்பிட்டுவிட்டு மெதுவாக மூச்சு விட்டிருக்கிறார் உனக்கென்னடி அவ்வளவு அவசரம்? பதினெட்டு வயசு, சாகற வயசா? மானுடத்தின் வக்கிரம் வெளிப்பட்ட பொழுதில் நீ அகப்பட்டுக் கொண்டாய். நான் இந்த கடிதத்தை உனக்கு எழுதி, வாசித்துக் காட்ட எவ்வளவு துடித்துக் கொண்டிருந்தேன் தெரியுமா? அடி மரியா... அடி மரியா....

மரியாக்குட்டி! உன்னை நான் முதன் முதல் பார்த்தவுடன் இந்த அழகி ரஷ்ய தேசத்தவள்தான் என்று உறுதியாக இருந்தேன். அந்த தேச பெண்களுக்கென்ற ஒரு வெண்மை. கோலிக் குண்டு போல் தளிர் பச்சை விழிகள். எங்கள் பகுதியில் செம்பட்டை முடி என்பார்கள். ஆனால் அதையும் மீறிய ஒரு பொன்னிறம். மாலை வெய்யிலில் பார்த்தால் பொன் முடியாகவே தோன்றும் அப்புறம் இந்த சின்ன உதடு. இந்த ஐரோப்பியப் பெண்களுக்கு என்று விசேஷமாக கடவுள் தந்த பரிசு அது. பனங்கிழங்கின் உதடுபோல், அதில் தெரியும் எச்சல் ஊறிய பள, பளப்பு. என்னைக் கிறங்கடிக்கவொன்று கங்கணம் கட்டிக் கொண்டு வந்திருக்கிறாள் இந்த ரஷ்ய யுவதி என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தேன். நீ உன் தோழிகளுடன் பேசிய போதுதான் அது போலந்து மொழி என்று உணர்ந்தேன். மல்லிகை பிறக்கும் போது, தான் மல்லிகை என்றா சொல்லிக் கொண்டு பிறக்கிறது. எல்லையும், அளவும் அற்ற இயற்கையை கணக்குப் போட பெயர்களாக வைத்தான் மனிதன். அழக தேவதைகளுக்க பெயர் இல்லாவிட்டாலும் அழகென்ன குறைந்தா போய்விடப் போகிறது. நீ போலந்துக்காரி என்றவுடன் உன் அழகு மங்கிப்போய் விட்டதா என்ன?

ஆனாலும் ஒண்ணு சொல்றேன் மரியா, இந்த ஜெர்மன்களுக்கு அழகை ஆராதிக்க தெரியவில்லை. எப்படி இவ்வளவு அழகுள்ள சனங்களை கான்சன்ரேசன் காம்ப்பில் போட்டு வதைத்தான் ஹிட்லர்? ஒங்கிட்ட இதெல்லாம் சொன்னதில்லை. எனக்கு ஃபிராவ் குளோச அப்படின்னு ஒரு அம்மாவைத் தெரியும். ஒரு நா அவ கூட போயிட்டு



படிப்பகம்

www.padippakam.com



இருக்கிறப்ப சொன்னா, இந்த போலந்து ஆட்க ளுக்கே மூளை போதாது, ஜெர்மன் ஆட்சியிலே போலந்து இருந்தப்போ ஐரோப்பாவின் தானியக் களஞ்சியமாக அது இருந்தது. இப்போ பார் அமுதா, ரொட்டிக்கு திண்டாடிக்கிட்டு இருக் காங்க. ஒழுங்கும், உழைப்பும் இல்லை. அதான் கஞ் சிக்கு அலையறான்கள் அப்படின்னு. எவ்வளவு திமிர் இருந்தா அப்படி பேச முடியும்? வாலு போன பிறகும், துள்ளற பல்லிமாதிரி, இவர்களுக்கு ஏழை நாடுகள் எல்லாமே இளப்பமாத்தான் இருக் குது.

அன்னக்கு ஒரு நா படகிலே காயலைக் கடந்து போய்கிட்டு இருந்தேன். ஒரு வயசான பாட்டி, மெதுவா பேச்சுக் கொடுத்தா. பாகிஸ்தானா அப்ப டின்னு கேட்டா. இல்லை இந்தியான்னேன். என்ன இவ்வளவு தூரம்னா. படிக்க வந்திருக் கேன்னேன். ஆமா, நாங்க நல்லா படிப்பு சொல் லித்தரோம், வசதி பண்ணித்தரோம். ஆனா, இந்த வெளிநாட்டுக் காரங்க எல்லாருமா சேர்ந்திக்கிட்டு ஜெர்மனியை கொள்ளை அடிக்கிறாங்க. தெரு விலே தைரியமா நடமாட முடியலை. நான் கொழுந்தயா இருந்தப்போ வீட்டுக் கதவை மூடி னதே கிடையாது. இப்போ தாள்பாளுக்கு மேலே தாள்பாளை போட வேண்டியிருக்கு அப்படீன்னு சொன்னா. நான் உணர்ச்சி வசப்பட்டா, தமிழே சரியா பேச வராது. அப்பறம் எப்படி ஜெர்மன்லே பதில் சொல்ல முடியும்?

இவங்களுக்கெல்லாம் வேத்து மனுசங்களைக் கண்டாலே ஆகலே கருமைக்கம் களவுக்கும் என்ன சம்மந்தம்? நிறத்தவர்கள் எல்லோருமே காவாலி அப்படின்னு பாக்கறாங்க. இதெல்லாம் இப்ப எது க்கு எழுதறேன்? நான் ரொம்ப நா அப்படித்தான் நம்பிட்டு இருந்தேன். வெள்ளைக் காரங்க எல்லோ ருக்கும் நிறத்தவர்களக் கண்டா ஒரு இளக்காரம் அப்படீன்னு. உன்னோட பழகும் வரை. உங்கிட்ட கிஞ்சித்தும் அந்தமாதிரி ஒரு சாயலைக்கூட பாக் கலே நான். உனக்கு கருப்பான டூலிப்பும் ஒண் ணு தான். வெள்ளையான ரோஜாவும் ஒண்ணுதான். எந்தச் சட்டையுமில்லாம, என்னை மனிசனா பாத்த முதல் ஜீவன் நீதான். அது ஒரு கேள்வியாகவே உனக்கு படல.

என்னோட உள்ளத்திலே நிறைய அன்பு இருக் குன்னு நீ சொன்ன. குளிருக்கு இதமான போர் வைபோல நான் நல்ல நண்பர்களுக்கு அப்ப டீன்னு சொன்ன. ஒரு நாள் சாயந்தரம் நாம ஐஸ் கிரீமும், காபியும் சாப்பிட்டு கிளம்பறத்துக்கு முன் னாடி என்னோட ஜாக்கெட்டை போட்டுப பாத்த. அதுல என்னோட அன்பின் இதம் இருப்பதாக சொன்னே. எவ்வளவு அழகான பார்வை ஏன் உன்னைய மாதிரி பார்வை இங்க நிறயப் பேருக்க இல்லை?

மாலை வகுப்பு முடிந்தவுடன் உன்னோட சேர்ந்து போறதிலே எனக்கு ரொம்ப ஈடுபாடு வந் தது. உன்னோட சின்ன டப்பா பியட்டிலே (மன் னிச்சுக்கோ, ஜெர்மன் மெர்சிடஸ்ஸையும், பி.எம். விலையப் பார்கறச்சே அப்படித்தான் தோணுது) எனக்கு தினம் லிப்ட் கொடுப்பே. என்ன என் பண்பிற்காக நேசித்தாய் உன்னோட எளிமை என க்க பிடிச்சது. அழகு மயக்கியது. இளமை காந்த மாக கவர்ந்தது. தத்து, பித்தின்னு பேசும் குழந்தை யின் மழலை மொழிபோல் நமக்கிருந்த ஐம்பது ஜெர்மன் வார்த்தைகளுக்குள் காதலை உணர்த்திச் சொல்ல ஆசைப்படுவோம். பூடகமான பரி பாஷைகளும், ஜெண்டில்மேன் தனமான காவிய மொழிகளும் இல்லாமலே நாம் காதல் பேசினோம். உனக்கு அது ரொம்ப ரொம்ப வேடிக்கையாக இருந்தது. இங்கிதமே இல்லாமல் ஏதாவது சொல்லி விடுவேன் மொழி வழி நடப்பாக இருந்தால் கன் னத்தில் அறை விழும். நான் சொல்லும் போது எனக்கு நீ முத்தம்தான் தந்திருக்கிறாய். நம் இருவரில் உனது ஜெர்மன் என்னை விட ரொம்ப தேவலை!

எவ்வளவுதான் எனக்கு ஒம்மேல ஆசை இருந் தாலும் உங்க சனங்க போல் தெருவிலே பாத் தவுடன் கட்டிப் பிடிச்ச உதட்டிலே முத்தம் குடுக்க கூச்சம் இடம் கொடுக்கலே. எனக்கு உள்ளுக்குள்ள பயம். நான் மத்தவங்க மாதிரி அப்படி செய்யாத தாலே உனக்கு என்ன பிடிக்காம போயிடு மோன்னு. இருந்தாலும் நீ ரொம்ப வெகுளி. ஜெர் மன் காரங்க ஒத்தருக்கு ஒர்த்தர் கன்னத்திலே முத்தம் கொடுத்தா, உனக்கு உதட்டிலே கொடுக்கனும். உதட்டிலே முத்தம் குடுத்தா அர்த்தம் தெரியுமோ? ரொம்ப நெருக்கம் அப்படீன்னு அர்த்தம். நீ சில நேரம் ஹைன்ரிக்குக்கு குடுப்ப பாரு அப்ப எனக்கு பத்திகிட்டு வரும். அவன் என்ன என்ன விட ஒசத் தியோ? அவனுக்கு நீ எங்கூட பழகறதில்லே இஷ்ட மேயில்லை அவனுக்கு என்மேல பொறாமை. உங் கிட்ட இதப் பத்தி சொல்ல வாய்ப்பே கிடைக்கலே. உன்னோட பழைய நண்பர்களை அறுத்து விட்டுட்டுத்தான் உன் நட்பு எனக்கு கிடைக்க னும்னு நான் எப்போதும் விரும்பினது இல்லை. அவன் இருந்தா என்ன, போனா என்ன? என் னோட மனசு உனக்கு புரிஞ்சு, என்னை எனக்காக நேசிச்சா போதும். தாமரைக் குளத்து தாமரையை, பாசியை விலக்கி பாசி படியாமல் எந்தக் கால த்திலே புடுங்க? அவன்தான் உங்கிட்டே ஒட்ட றான்னு எனக்கு தெரியும். நம் காதல் வளர்ந்த வேக த்திலே இதெல்லாம் பத்தி விஸ்தாரம பேச வாய் ப்பே கிடைக்காமல போச்சு.


அழகான கஸ்டானியா மரங்கள் சூழ்ந்த தெரு விலே உன் வீடு. என்னமோ ராஜா வரச்சே, இர ண்டு மருங்கிலும் நிக்கும் காவல்காரங்க போல அந்த மரங்கள் நிற்கம். ஒன்னய அணைத்துக் கொண்டே அந்த தெருவிலே நடக்க எனக்கு ரொம்ப பிடிக்கும். ஒருநா இப்படித்தான் போய் கிட்டு இருக்கிறயச்சே, மரத்து மறைவிலேர்ந்து உங்கவீட்டு நாயோட உங்க அப்பா வந்துவிட்டார். எனக்க கொஞ்சம் கூச்சமா போச்சு. அவர் ஒண் ணும் கண்டு கொள்ளவில்லை. "குட்டன் ஆபெ ன்ட்" என்று வாழ்த்திவிட்டு புன்சிரிப்புடன் போய் விட்டார். உன்னை பெத்த அப்பா பின் எப்படி இருப்பார்? நல்ல மனிதர். உன்னைப் போலவே வசீகரமான முகம். ஐரோப்பாவில் எல்லோருமே காயகல்பம் சாப்பிடுகிறார்களா என்று தெரி யவில்லை. யாருக்கும் வயது ஏறுவதேயில்லை. விசேஷமாக உன் அம்மாவுக்கு. நீ ஒரு நாள் அறிமு கப்படுத்தியபோது, இவள்தான் என் அக்கா என்று சொல்வாய் என்று எதிர்பார்த்தேன், நீ அம்மா என்றாய்!



படிப்பகம்

www.padippakam.com








படிப்பகம்

www.padippakam.com



என் அழகு மரியாக் குட்டி! உன்னை நான் எப்படி மறப்பேன். ஈஸ்டர் விடுமுறையில் உன் பெற்றோர் போலந்து போயிருந்தபோது ஒரு மாலை உன் விருந்தாளியாக அழைத்தாய். கேச டோர்டயும் காபியும் தந்தாய். மூலைக்கு மூலை சாக்லெட் பல வடிவங்களில், பல சுவைகளில். உனக்க சாக்லெட் என்றால் கொள்ளை ஆசை. வால்நட் விதையை சுவைக்கம் அணில்போல் இந்த ஊர் அணிலும்தான் எவ்வளவு அழகு. பொசு, பொசுவென்று பெரிதாக, அடர்த்தியான சிவப்பு முடியுடன். ராமர் தடவிய எங்க ஊர் அணில் ரொம்ப வித்தியாசம். நான் ஆசையாக உன்னை விவியூர்கா என்றேன். ஆம், அந்த அணில் போல் கொஞ்சத் தூண்டும் அழகு உன்னடையது. எனக்குத் தெரிந்த ஒரே போலந்து பெயர் அதுதான். உனக்கு ரொம்யப குஷியாகிவிட்டது. என்னை ஆசையுடன் முத்தமிட்டாய். உன் மெல்லிய உதடுகளின் ஈரம் என் உதடுகளில் பள, பளத்தது. என் நாட்டுக் கவி எழுதுவான், குளத்தை விட்டு அகலாத ஒடம்போல் உன்னைப் பிரிய மனமின்றி சுத்தி, சுத்தி வந்து முத்தமிட்டு பல முத்தமிட்டு உன்னைச் சேர்ந்திட வந்தேன். நீ காதல் என்பது காவியமென்றும் சின்னக் குறள் இல்லையென்றும் அன்று காண்பித்தாய். சின்னச் சின்னதாய் உன் உடலெங்கும் மச்சங்கள். வெள்ளை வானில் சிவப்பு நட்சத்திரங்கள். உன் காதல் காவியம் பல காண்டங்களைக் கொண்டிருந்தது. நான் உன்னுடன் சேர்ந்து நீயாகவே மாறிவிட துடித்தேன். உனது கத்தோலிக்க வளர்ப்பு உன் எல்லையை உனக்கு தெளிவாக சொல்லியிருந்தது. என் மனம் நோகாத வண்ணம் உன்னால் இல்லையென்று சொல்ல முடிந்தது. "அது" இல்லையென்று உணர்ச்சி பூர்வமாக உணரவேயில்லை நான். பதினெட்டு வயதிற்குள் இவ்வளவு சுதந்திரமும், தேர்ச்சியும், மனோதிடமும் எப்படி வந்தது உனக்கு? உனக்கு வேண்டியது எது என்று எவ்வளவு தெளிவாக உனக்கு தெரிந்திருந்தது.

நான் சில நாள்களில் இந்தியா சென்றுவிட்டேன். எனக்க இருப்பு கொள்ளவேயில்லை. ஒரு மாதம் எப்படி போனது என்றே தெரியவில்லை. நான் மீண்டும் வந்த போது நம்ம வகுப்பில் நீ இல்லை. தேவி இல்லாத கோவில் போல் வெறுமையாக இருந்தது. உன்னை தொலைபேசியிலும் பிடிக்க முடியவில்லை. ஈடுபடாத மனதிற்கு ஏற்றவாறு பாடம் யுங்கன் கிரிமினிலாடிடேட்! ஜெர்மன் இளவயதினரிடையே வளர்ந்து வரும் குற்றம் பற்றி. ஆரோக்கியமாக இருக்க வேண்டிய மனது அசிங்கமாகப் போவது எதனால்? சோலிங்கனில் இரண்டு துருகியர் குடும்பங்களை எரித்துக் கொன்றது நியோ நாட்சி இளைஞர்கள் எங்கிருந்து வந்தது இவ்வளவு வெறுப்பு? பாடம் சொன்னது, வளர்ப்பு, சேர்க்கை, தகாத தோழமை, மருந்து (தூள்), செக்ஸ், சினிமா, டி.வி. இயந்திரம் போல் இயங்கும் நகர வாழ்க்கை. என்னைக் கேட்டால் போதிய அன்பு இல்லாமை என்பேன். அன்பு செய்ய ஆள் இருக்கும் போது உலகம் பொருள் உள்ளதாக படுகிறது. நீ இருக்கும் உலகம் எவ்வளவு அழகாக இருக்கிறது பார்! ஆமாம் நீ எங்கே போய் விட்டாய்? உன்னைப் பார்க்காமல் ஒரு வாரம் ஓடி விட்டது. ஒரு நாள் சுற்றி வளைத்து ஆசிரியையிடம் கேட்டேன் நீ ஏன் வகுப்பிற்கு வருவதில்லையென்று.

அவள் ரொம்ப ஆச்சர்யமாக என்னைப் பார்த்தாள். அந்த செய்தி இன்னும் உன்னை எட்டவில்லையா என்பது போல். நம் நட்பின் இடுக்கம் நம்மைத் தவிர வேறு யாருக்குத் தெரியும்? யாரும் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. ஆசிரியை மெதுவாக தினசரியின் வந்த ஒன்றை பத்தி செய்தியைக் காட்டினாள். இதை உலகில் யாராவது நம்புவார்களா? உன்னை உன் வீட்டிலே வைத்தே கொன்றிருக்கிறான். உங்கள் வீட்டு அடுப்படியில் கிடக்கம் கத்தியால் எப்படி அவனுக்கு மனது வந்தது? உனது இள முறுவலே கைகளை சிறையிட்டு காலைக் கட்டிப் போடுமே. நீ எப்படி இதை அனுமதித்தாய்? வெளுத்ததெல்லாம் பாலாக நம்பி ஏன் அவனை உன் வீட்டில் அனுமதித்தாய்? உன்னைக் காக்கும் என்னை ஊருக்கு அனுப்பிவிட்டு உன்னை அம்போ என்று விட்டுவிட்டனவே உன் கத்தோலிக்க தேவதைகள்! அவன் பழிதீர்க்க நான் பார்த்திருந்திருக்கிறாள். உன் தந்தை சொன்னார் அவர் மடியில்தான் நீ கடேசியாக உயிர் விட்டாயாமே. உயிர் பிரியும் முன் உன் தாய், தந்தைக்கு நன்றி சொன்னாயாமே. எடுத்து, வளர்த்து, உச்சி முகர்ந்ததிற்க. எல்லார் ஆசையிலும் மண்ணைப் போட்டுவிட்டு நீ மண்ணாகி விட்டாய். பனி கிரகத்து எரி மலைகள் போல் கனன்று கொண்டிருந்தன எங்கள் எரிமலைகள். இந்த ஊரில் சத்தம் போட்டு கத்தி கூட அழ முடியவில்லை. எல்லாமே ஒழுங்காக இருக்கிறது. இதோ பார், உன் கல்லறைக்க முன் நின்று கொண்டு கண்ணே மரியா என்று கத்த முடியவில்லை. இங்கு எல்லாமே அமைதியாக நடக்கிறது. சத்தம் இல்லாமல், கொலைகள் கூட!

பிரிய மரியா! நான் இத்துடன் என் கடிதத்தை முடிக்கிறேன். நான் உனக்கு வாக்களித்த படி ஒரு நீண்ட கடிதம் (காவியம்) எழுதுவேன். அதை மொழி பெயர்க்கும் பாண்டித்தியம் இனி எனக்கு அவசியமில்லை. எங்கள் மானுட மொழிகள் மூலமாக இனி நீ புரிந்து கொள்ள அவசியமில்லை. அடுத்த முறை வரும் போது என் நீண்ட கடிதத்துடன் வருகிறேன்.

அன்புடன், அமுதன்.

அமுதனின் தொண்டை அடைத்துக் கொண்டிருந்தது. மெதுவாக தனக்குள்ளே பேசிக் கொண்டான். நீ பதினெட்டு வயதில் மண்ணுடன் சேர்ந்தால் தான் எப்போதும் இல்லாத அழகுடன் பூமி பூத்து குலுங்குகிறது. என்னால் இனி உன்னைக் கட்டி முத்தமிட முடியாது. உன் ஆகிருதி ரொம்ப, ரொம்பப் பெரிதாகிவிட்டது. நீ மலர்களாய் வானைப் பார்த்து சிரிக்கிறாய் காற்றுடன் உறவாடி மகரந்தங்களைச் சேர்க்கிறாய். எங்கள் துக்கங்களை எங்களுக்கு விட்டு, விட்டு நீ கவிதையாய், காவியமாய், மண்ணாய், வின்னாய்....


மேலே பேச முடியவில்லை. அமுதன் மெதுவாய் கீழே தவழ்ந்து அவள் கல்லறை மண்ணை முத்தமிட்டான். மரத்தூள் ஒன்று சரெக்கென்று அவன் உதட்டில் பாய்ந்து... ஒரு துளி ரத்தம் மண்ணில் விழுந்து மறைந்தது. ❑



படிப்பகம்

www.padippakam.com






சிவா என்கிற சிவநாதன் அவ்விமானத்தில் தன் குளிர்காலக் கோட்டைக் கழட்டிப் பெட்டிகள் வைக்கும் இடத்தில் வைத்து, 'டை'யைத் தளர்த்திவிட்டு, தன்னுடைய சீட்டில் இருந்தான். சின்ன சூட்கேசைக் காலடியில் வைத்துக்கொண்டான். யன்னலோரமான சீட். வெளியே விமானத்தின் இறக்கையும் ஜெட் இயந்திரமுமே, விமானத்தளத்தில் விழுந்திருந்த பனிப்படலங்களின் பின்னணியில் யன்னலுக்கூடாகத் தெரிந்தன. விமானம் கிளம்ப இன்னும் அரைமணியிருக்கும். இரவு படுக்கப்போகும்போது 2 மணியாகிவிட்டது. வேலைகளை முடித்து பிரயாணத்துக்குத் தேவையானவற்றையெல்லாம் ஆயத்தப்படுத்தி டிவிஷன் மனேஜரிடம் சொல்லிவிட்டு விமானத்திற்கு வரும்போது 4 மணி ஆகிவிட்டது. பீனிக்சில் (Phonenix) குளிராது. அதிர்ஷ்டமிருந்தால் வெப்பநிலை 75 ஐயும் எட்டக்கூடும்.

விமானம் நிரம்பிக்கொண்டிருந்தது. பக்கத்து சீட்டிற்கு வருகை தந்தவரும் தன் கோட்டைக் கழட்டி வைத்து, உட்கார்ந்து சீட் பெல்ட்டை மாட்டிக் கொண்டார். சிவநாதனுக்கு அப்போதுதான் ஞாபகம் வந்தது; தன்னுடைய சீட் பெல்ட்டை மாட்டிக்கொண்டான்.

'ஹாய்' என்றார் பக்கத்து சீட். சிவநாதனும் அதையே எதிரொலித்தான். ஒரு ரான்ச்சர் (rancher) போலிருந்தது. ஜீன்ஸ், பெரிய பெல்ட், வெஸ்டர்ன் பூட்ஸ், ஒரு பெரிய தொப்பி; கடின வேலைக்கு அஞ்சாத ஒரு அரிசோனா ரான்ச்சர். "நான் இந்த சிகாகோவுக்குச் செய்யப்பட்டவனில்லை" என்றார்.

"சிலருக்கு இங்கேதான் பிழைப்பு நடக்கவேண்டியிருக்கிறதே" என்று சிவா மறுபதில் சொன் னான்.

"ஓ யா" என்றுவிட்டு "உன் ஊர் எது" என்று கேட்டார்.

"ஸ்ரீலங்கா" என்றான் சிவா. யாழ்ப்பாணம் எங்கே தெரியப்போகிறது?

"எந்த நகரத்தில் அது இருக்கிறது?"

"இந்தியாவுக்குக் கீழே சிலோன் என்னு முன்னர் சொல்வார்கள்."

"ஓ செய்லோன்! எனக்குத்தெரியும்."

"அரைப்பூமி தொலைவில்"

"இங்கே என்ன செய்கிறாய்?"

"கெமிக்கல் எஞ்சினியர்" கம்பெனி பெயரையும் சிவா சொன்னான்.

"ம்ம்ம்..."

பிளைட் அட்டெண்டன்ட் பெண் தர, சிவநாதன் கோப்பியும், ரான்ச்சர் வைனும் எடுத்துக் கொண்டார்கள். தொலைவான பயணம். விமானம் கிளம்ப ஆயத்தமானது. சிவநாதன் தன் சின்ன சூட்கேசைத் திற ந்து த ா ன் போய்கொண்டிருக்கும்கூட்டத்தில் வாசிக்க வேண்டிய கட்டுரையை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டான். பாதுகாப்பு விபரங்களை அறிவித்தபடி விமானம் கிளம்பியது. இருட்டத் தொடங்கிவிட்டிருந் தது. வெள்ளையாகக் கீழே பனிப்படலங்கள். தன்னுடைய கட்டுரையை கையிலெடுத்துப் பார்த்தவுடன் அசதி மேலிட்டுக் கண் சொருகியது. அதைத் திரும்பவும் பெட்டியில் போட்டு விட்டு, சீட்டைச் சரித்துத் தூங்க ஆரம்பித்தான்.

"அரைப் பூமி தொலைவில்...." பச்சைப் புகையி லைத்தோட்டங்கள், நாசியைத் தாக்கும் சுருட்டு வாசனைகள், துலாவுடன் கூடிய கிணறுகள், ஓணான்கள் வசிக்கும் கிடுகு வேலிகள், பல் வேறு நிலையிலிருக்கும் மதிற் சுவர்கள், சனங்கள் நிறைந்த பஸ்கள், மாட்டு வண்டிகள், வாழைத்தோட்டங்கள், பனை மரங்கள் யாவும் மாறிமாறி மன த்திரையில் வர ஆரம்பித்தன. நினைவுகள் - பழைய நினைவு களும் பழையன அல்லாத நினைவுகளும் கலந்து கலந்து வந்தாலும், சுருட்டு வாசனை கனவிலும் அடித்தது. ஆனால் காலத்தொடர்ச்சி கனவு களுக்கேது?

யாழ்ப்பாணம்...

மிகவும் நிரந்தரமான இடம் என்பதில்



படிப்பகம்

www.padippakam.com



சந்தேகமில்லாதிருந்த ஊர். எங்கு போனாலும் திரும்பத் திரும்பக் கவரக்கூடிய காந்த மண். சிவா பிறந்த இடத்தில் செம்மண். கொழும்பு விமானத் தளத்தில் கடைசியாகப் பார்த்தபோது வரிசையாக தந்தை, தாய், இரு சகோதரிகள், தம்பி சண்முகநாதன், நண்பன் பாலகுமாரன் எல்லோரும் கவலையுடன்தான் அனுப்பி வைத்தார்கள். ரஞ்சனியால் வரமுடியாது போய்விட்டது. ரஞ்சனியைப் பற்றிய நினைவுகளும் தேயத் தொடங்கியிருக்கின்றன. இருந்திருந்து தாக்கும் நினைவுகள் முற்றாகப் போகுமா? அவள் நினைவுகள் உலகின் எந்த மூலைக்குப் போனாலும் முற்றாகப் போகாது. அவள் விமானத்தளத்திற்கு வருவாள் என்று நம்பியிருந்தான். அவள் வராதுபோனபோதே தெரிந்திருக்க வேண்டும். பாலகுமாரனுக்கு சிவாவின் ஏமாற்றம் தெரிந்தாலும் சொல்ல வழியில்லை. ரஞ்சனி வந்திருக்க முடியுமா?

பல்கலைக்கழக வாழ்க்கையில் மூன்றாவது வருடம். கோவிலுக்குப் போய் வரும் நெடுவழியில் அவள் செருப்பு அறுந்து போகப் பின்னால் வந்த சிவா அதில் இடறத் தொடங்கியதான கதை அது. சிவா எடுத்து அவளிடம் கொடுத்தான். நண்பிகளிடம் வாங்கின ஊசியால் செருப்பை அதே இடத்தில் கல்லாயுதங்களால் திருத்திக் கொடுத்துத் தொடங்கின கதை. பாலகுமாரன் கல்லெடுத்துக் கொடுத்தவன். அவனுக்குத் தெரியும். தெரிய வேண்டியவர்கள் பலருக்குச் சரியாக ஒன்றும் தெரியவரவில்லை.

ஒருத்தருக்கும் வருங்காலத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. சாதிகள் சனங்கள் இந்த மாதிரியான நம்பிக்கைகளுடன் வருங்காலத்தைச் சமாளிக்கிற முயற்சி. "நல்ல பரவணி" என்று பார்த்துப் பார்த்துத் தேடுகிற ஒரு தகப்பன், சிவாவை எப்படி மருமகனாய் ஏற்றிருக்க முடியும்?

ரஞ்சனி "தாங்க்ஸ்" என்று பார்த்தது இன்னும் ஞாபகமிருக்கிறது. அவள் கூட்டத்தைத் தாண்டிக் கொண்டு சிவாவும் நண்பர்களும் போய்ச் சேர்ந்தார்கள். அவள் நினைவு சிவாவை விட்டுப்போகாது போனபோது, அவள் நினைப்பு என்ன என்று மட்டுக்கட்ட வேண்டும் என்று முயன்றான். யாழ்ப்பாணச் சுருட்டுக்கும் கொழும்பின் நாகரீகத்துக்கும் இயற்கையான தொடர்பு ஏதாவது இருந்தால் ரஞ்சனி இப்படித் தேய்கிற கனவாக அமைந்து போயிருப்பாளா?

கொழும்பா? ரஞ்சனியின் வீடும் அழகானது. முன் போர்டிகோவில் பூந்தொட்டிகளுக்கு நடுவே முளைத்தமாதிரி கார் நிற்பாட்டியிருக்கும் மருத்துவர் பத்மநாதன் - ரஞ்சனியின் தந்தை - பிரபல மருத்துவ நிபுணர்; அறுவைச் சிகிச்சையில் புகழும் பெரிது, அகந்தையும் பெரிது. எதற்கும் நேரம் வராத மனிதர். சிவா அவரை நெருங்கவும் முடியாது. ரஞ்சனி கோவிலுக்குப் போய் வருவது அவள் தாயின் பழக்கக் கட்டுப்பாட்டினால். பூந்தொட்டிகள் வாசம் புகையிலை வாசத்துடன் ஒத்துப்போக முடியாது போலிருந்தது. சுற்றுவதற்காகத் தயாராக இருக்கிற புகையிலையை எத்தனை நுணுக்கமாக ஆராய்கிறார்கள்?

ரஞ்சனி கொழும்புப் பெட்டை. செருப்பறுந்து போன விவகாரத்துக்குப் பிறகு, சிவா, பாலகுமாரன் துணையுடன் அவளிருந்த ஹொஸ்டலில் போய்ச் சந்திக்க முயன்றான். ஒழுங்கு முறையாக நடந்த தேடல். அவள் சிநேகிதிகளை விசாரித்து, எங்கிருக்கிறாள் என்று அறிந்து போனபோதுதான், கொழும்புப் பெட்டை என்ற விபரம் தெரிந்தது. மலைக்கோவில் முருகன் அருள் ரஞ்சனி விஷயத்தில் கிட்டும் என்று நம்பியிருந்தான். ரஞ்சனி பல்கலைக்கழகத்தில் நன்றாகக் கதைப்பாள். ரசாயனம் படித்துக் கொண்டிருந்தாள். பாலகுமாரன், தன் இன்னொரு நண்பன் நடராஜசிவத்தின் பெட்டை சுந்தரியிடம் சொல்லி விசாரித்தான். சுந்தரி, சிவநாதனின் பூர்வீகத்தை ஆராய்ந்தாள்.

"உது சரி வராது" என்று முதலிலேயே தீர்க்கமாகச் சொன்னாள். சுந்தரி கலகலப்பானவள். எதையும் சமாளிக்கும் ஆற்றலும் அவளுக்கிருந்தது. பாலகுமாரன் "ஏன்?" என்று கேட்டான்.

"சிவநாதன் கறுவல்" என்று சொல்லுவாள் என்று எதிர்பார்த்தான். பாலகுமாரனுக்கு சிவநாதன் நண்பன். சிவநாதனை வேறு ஒரு கோணத்திலும் பார்த்ததில்லை. சுந்தரி சொன்னாள்.

"உங்கட நண்பருக்கு அவள் புளியங்கொம்பு..." பாலகுமாரனுக்கு இது சரியாக விளங்கவில்லை.

அப்படியே தென்டிப்பதை விடவும் மனமில்லை. "உண்மையாய், சிவா அருமையான பெடியன். நீங்கள் தயவுசெய்து கேட்டுப்பாருங்களேன்'' என்றான். நடராஜசிவமும் சுந்தரியிடம் சொன்னான். "ஒருக்கால் கேட்டுப்பாருமென்"

தான் சொல்லுகிறேன் என்றுதான் சுந்தரி சொன்னாள்.

பாலகுமாரன் சிவாவிடம் வந்து சுந்தரி சொன்ன மறுமொழியைச் சொன்னபோது சிவாவுக்கு அது மனத்தில் வருத்தத்தை உண்டாக்கியது. "இன்னொரு பிறப்புக் கிடைக்குமா?'' சாதிக் கூறலும் ஆயிரங் கூறுகள் போட்டு கவனப்பிழைப்பு நடத்துகிற சமுதாயம். சிவாவுக்குப் படிக்கவேண்டும்; இந்த இனத்தையுந் தாண்டி, சாதிக் கடல்களைத் தாண்டி ரஞ்சனியை எட்ட வேண்டும்.

சிவநாதன் கதிரையை மேசைக்கு அருகில் போட்டுக் கவனமாகப் படிக்க ஆரம்பித்தான்.

ஓர் இரவு.

எங்கேயோ கண்ணாடிகள் நொருங்கிற சப்தமும், சிங்களத்தில் பலரிடமிருந்தான ஆவேச மொழிகளும் கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாகக் கேட்க ஆரம்பித்தன. "பற தெமலோ (பற தமிழர்களே)" என்பதுங் கேட்டு அடிதடிச் சத்தமும் கேட்க ஆரம்பித்தன. சிவநாதனும் பாலகுமாரனும் தங்கள் அறைக்கு வெளியே வந்து ஹொஸ்டலின் நடுப்பகுதிக்கு வந்து பார்த்தபோது, சுந்தரமூர்த்தி ஓடி வந்து கொண்டிருந்தான். இரைக்க இரைக்க "தமிழ்ப்பெடியளை எல்லாரும் அடிக்கிறார்கள் - வெளிக்கிடுங்கோடாப்பா" என்று சொல்லித் தமிழ்ப் பெடியன்கள் இருந்த கதவுகளைத் தட்டிச் சொல்லிக்கொண்டே ஓடிக் கொண்டிருந்தார்கள்.

சிவா பக்கத்திலிருந்த குணவர்தனாவின் கதவைத் தட்டினான். அவன் அங்கு இல்லை. பாலகுமாரன் "இவங்கள் ஏதோ பிளான் போட்டிருக்கிறாங்கள்" என்றான். பெட்டிகளில் கிடைத்த புத்தகங்கள் உடுப்புகளை எடுத்துக்கொண்டு ஓட ஆரம்பித்தார்கள். அந்த ஹொஸ்டலின் இரண்டாவது மட்டத்திலிருந்த தமிழ் மாணவர்கள் யாவரும் ஓட ஆரம்பித்திருந்தார்கள். ஓடின திசையில் எதிரே கையில் தடிகளுடன் சிங்கள மாணவர் கூட்டம் ஓடி வந்து கொண்டிருந்தது. "பற கொட்டியோ (பறப்புலிகளே!) என்று ஆவேசமாகத் தமிழ் மாணவர்களைத் தாக்க ஆரம்பித்தார்கள். கம்புகளும் கல்லும், மனிதச் சதைகளைச் சோதிக்கும் நேரம். சிவாவும் பாலகுமாரனும் எதிர்ப்பக்கமாக ஓட



படிப்பகம்

www.padippakam.com



ஆரம்பித்து, மறு எல்லை மாடிப்படிகளை நெருங்கிய போது அங்கும் 'பறத் தமிழர்களையும் புலிகளையும் கொல்லத் தீர்மானித்திருந்த இன்னொரு கூட்டம் வந்து கொண்டிருந்தது. சுந்தரமூர்த்தி இடையில் ஒரறையில் ஒளிந்திருந்தான். இவர்களைப் பார்த்தவுடன் அவர் களை இழுத்துக் கதவை மூடினான். "உந்தச் சன்னலால குதிச்சு ஓடுங்கோடா" என்று கட்டளையிட்டான். கையி லிருந்த பெட்டியால் சன்னலை உடைத்துக் கீழே பார்த் தால் 20 அடிகளாவது இருக்கும்.

"குதியுங்கோடா" என்றான் சுந்தரமூர்த்தி. சுந்தர மூர்த்தி அறைக் கதவைச் சிங்கள மாணவர் கூட்டம் உடைக்க ஆரம்பித்தார்கள். "போகவேண்டாம்" என்று கத்தினான் சுந்தரமூர்த்தி. ஓர் அலவாங்கு மரக் கதவைப் பிளந்து கொண்டிருந்தது. மூன்று பேரும் பெட்டி களுடன் குதித்தார்கள். சிவாவும் பாலகுமாரனும் நிலத்தையடைந்திருந்தார்கள். பெருங் கால்வலியுடன் ஓட ஆரம்பிக்கு முன் சுந்தரமூர்த்திக்கு என்னவாயிற் றென்று திரும்பிப் பார்த்தால், குதித்த சுந்தரமூர்த்தியின் கால்களைப் பிடித்து அவனை உள்ளே இழுக்கத் தெண் டித்துக் கொண்டிருந்தது வெறிக்கூட்டம். பாலகுமார னும் சிவாவும் ஒருகணம் தாமதித்து என்ன செய்வது என்று யோசிக்கையில் "பற தெமலோ" என்று இன் னொரு கூட்டம் ஆவேசமாக இவர்களை நோக்கி வர ஆரம்பித்தது. பாலகுமாரனும் சிவாவும் பெட்டிகளை எறிந்துவிட்டு வேகமாக ஓட ஆரம்பித்தார்கள். வெறிக் கூட்டம் இவர்கள் பெட்டிகளில் இருந்தவற்றைப் பங்கு போட ஆரம்பித்தது, வசதியாகப் போயிற்று. ஒரு கழிவு வாய்க்காலின் கரையில் ஒதுங்கி சுந்தரமூர்த்திக்கு என்ன ஆயிற்றென்று பார்க்க ஆரம்பித்தார்கள். நெஞ் சுப் படபடப்பு காதுச்சவ்வு வரை அடித்துக் கொண் டிருந்தது. மண்டையும் பிளக்கும் போல இருந்தது. சுந்தர மூர்த்தி நொண்டிக் கொண்டே வந்து சேர்ந்தான். நன் றாக அடித்துவிட்டிருந்தார்கள். சிவா, பாலகுமாரனின் கையைப் பற்றி இழுத்துக்கொண்டு "பெட்டைகளின் பாடு என்ன மாதிரி என்று நான் பாத்திட்டு வாறன். நீ சுந்தரமூர்த்தியைக் கூட்டிக் கொண்டு போ...." என்று பதிலுக்கும் காத்திராமல் பெண்கள் ஹொஸ்டல் பக்க மாக ஓட ஆரம்பித்தான்...

"சீட் பெல்ட்களைப் பூட்டிக் கொள்ளுங்கள்" என்ற வேண்டுகோளுடன் விமானம் தள்ளாடிக் கொண்டி ருந்தது. சிவநாதன் விழித்துப் பார்த்தான். சீட்டை நிமி ர்த்தி ரான்ச்சரிடம் "என்ன நடக்கிறது?" என்று கேட் டான். செயின்ட் லூயிஸில் இறங்கிப்போக வேண்டிய விமானம் பனிப்புயலால் வேறெங்காவது திருப்பப் பட லாமாம். தான் எப்படியாவது பீனிக்சுக்குப் போய்விட வேண்டுமென்று சிவா சொன்னான். "அது நடக்கும் என்று தீர்மானமாகச் சொல்ல முடியாது" என்றார் ரான்ச்சர். சிவா மறுக்கவில்லை. வாழ்க்கையே இந்தத் திசைமாறல்களும் தள்ளாட்டங்களும் நிறைந்ததாகத் தானே அமைந்து போயிருக்கிறது?

ரான்ச்சர் வேகமாக வந்துகொண்டிருந்த பிளைட் அட்டென்டன்டிடம் செயின்ட் லூயிஸில் விமானம் இறங்குமா என்று கேட்டார். அதைத்தான் முயற்சி செய் கிறார்கள் என்று பதிலளித்து விமானத்தின் பின் பகுதி க்கு ஓடினான். திரும்பவும் விமானம் குலுங்கியது.

"இந்த மாதிரியான சொகுசான (rodeo) ரோடி யோவை நான் பார்த்ததில்லை" என்றார் ரான்ச்சர். "நிலத்தில் விழாமல் இருந்தால் சரி" என்றான் சிவா.

இதுவெல்லாம் என்ன பயம்? என்ன கஷ்டம்? சிங்கள வெறிக்கூட்டங்கள் துரத்தியபோது வந்த மரண பயத்தை விடவா?

பாலகுமாரன் சுந்தரமூர்த்தியைப் பத்திரமாய் ஒரு இடத்தில் விட்டுவர, தான் அவனுடன் போய் ரஞ்சனி யையும் சுந்தரியையும் தேடிப்பிடித்து, கொழும்பில் பத்ம நாதன் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்த போது அடுத்த நாள் மத்தியானமாகிவிட்டது. நடராஜசிவத்தைக் காணவி ல்லை. சுந்தரி அழுதபடி இருந்தாள். பத்மநாதன் வீட்டில் போலீஸ் ஜீப் நிறுத்தியிருந்தது. பத்மநாதன் ஒரு போலீஸ் அதிகாரியுடன் பேசிக் கொண்டிருந்தார். இவர்களைப் பார்த்தவுடன் "இதோ இங்கே வருகிறார் களே!" என்று முழு வீட்டிலும் கேட்கிறமாதிரி பெல த்தே சொன்னார். "வினோ" என்று மனைவியையும் கூப்பிட்டார். பொலிஸ் அதிகாரிக்குத் தனக்கு இனித் தலையிடி இல்லை என்று தெரிந்து சந்தோசம் வந்தது. பத்மநாதனிடம் விடை சொல்லிக்கொண்டு புறப் பட்டார்.

பத்மநாதன் ஏற இறங்க பாலகுமாரனையும் சிவா வையும் பார்த்தார். பாலகுமாரனைத்தான் முதலில் விசா ரித்தார். தன் தந்தை எஞ்சினியர் என்பதையும் அவர் பெயரையும் ஊரையும் சொன்னான். "அவரைத் தெரி யும்" என்று பத்மநாதன் சொன்னார். பாலகுமாரனை அவர் விசாரித்துக் கொண்டிருந்தபோது சிவாவுக்கு எரிச்சலும் கவலையுமாக இருந்தது. தன் முறை வருகி றபோது இந்த விபரங்களுக்கு என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது பாலகுமாரனே பதில் சொன்னான், "இது என் நண்பன் சிவநாதன். என்னு டைய ஊர்." போன் மணி அடிக்க, அவர் நன்றி சொல் லிவிட்டு உள்ளே போய்விட்டார், பாலகுமாரனைப் பற்றி நல்ல அபிப்பிராயங்களுடன்.

ரஞ்சனி, இவர்களை உள்ளே அழைத்து தப்பி வந்த விபரங்களைக் கேட்டாள். சிவாவும் பாலகுமாரனும் சொன்னபோது சுந்தரி, நடராஜசிவத்தை நினைத்து அழுதபடி இருந்தாள். ரஞ்சனி தன் தாயிடம் சுந்தரியின் கவலையை விளக்கினாள். சுந்தரி யாழ்ப்பாணம் போக வேண்டும் என்றாள். நடராஜசிவத்தைத் தேடிக் கண்டுபிடிக்கும் பொறுப்பை பாலகுமாரனும் சிவாவும் ஏற்றுக்கொண்டார்கள். புறப்பட்டுப்போகும்போது....

விமான காப்டன், செயின்ட் லூயிஸில் விமானம் இறங்கப்போவதாகவும் தொடர்ந்து பீனிக்சுக்கு எத் தனை மணிக்குத் தொடரும் என்பது காலநிலையைப் பொறுத்தது என்றும் அறிவித்தார்.

ரான்ச்சர், டார்ன் (Darn), என் மனைவி திட்டப்போ கிறாள் என்று சொல்லிவிட்டு," உனக்குக் கலியாணம் ஆகிவிட்டதா" என்று சிவாவைக் கேட்டார்.

இல்லை என்றான் சிவா.

"அதிர்ஷ்டக்காரன்" என்று ரான்ச்சர் சிரித்தார்.

"அதிர்ஷ்டம் செயின்ட் லூயிஸில் எப்படிப் போகுது என்று பார்க்கலாம்" என்றான் சிவா. ரான் ச்சர் "பை" சொல்லிவிட்டுப் போய்விட்டார். பீனிக் சுக்குப் போகவேண்டிய விமானம் இன்னும் மூன்று மணிகள் தாமதமாகலாம் என்று சொன்னார்கள்.

சிவா விமானத்தளத்தில் கடை தேடி, இரவுச் சாப் பாட்டை முடித்துத் தான் போகவேண்டிய விமான வாசலுக்கு வந்து இடந்தேடி, தான் கொண்டு வந்திருந்த கட்டுரையை வாசிக்கலானான். தூக்கமும் வந்தது. அடுத்த நாள் நேரத்துக்குப் போய்விடலாமா என்பது சந் தேகமாக இருந்தது. ஊர் நினைவுகள் வந்தால் வேறெ துவும் மனத்தில் நிலவுவதாக இல்லை....



படிப்பகம்

www.padippakam.com



நடராஜசிவத்தை பாலகுமாரனும் தானும் தேடிக் கொண்டுபோன விபரங்கள் மனத்தில் எழுந்தன. எங் கெல்லாமோ விசாரித்துக் கடைசியாகத் தெரியவந்தது, நடராஜசிவத்தை வெறிக்கூட்டங்கள் கொன்று விட்டிருந்தார்கள். அதை வந்து சுந்தரியிடம் சொல்ல எவ்வளவு கஷ்டமாயிற்று?....

சுந்தரி இப்போது எங்கே?

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் போவதற்குள் எத் தனை பிரச்சினைகள்? யாழ்ப்பாணம் போகும் வரை சுந்தரி அதேபடியே இருந்தாள். கொழும்பில் இருந் தவரைக்கும் சிவா, ரஞ்சனியைப் பார்க்க முயன்றான். மருத்துவர் பத்மநாதன் வீட்டில் இல்லாத நேரம் போக வேண்டியதாயிற்று. ரஞ்சனி என்ன நினைக்கிறாள்? அவளைப் பற்றிய தன் நினைவுதான் சிவாவுக்கு நிச்சய மாகத் தெரிந்திருந்தது. சுந்தரியின் நிலையும் உதவுவதாக இல்லை. கொழும்பை விட்டு பத்மநாதன் குடும்பம் அசையாது இருந்தது. பல்கலைக்கழகம் திரும்பத் தொட ங்கும் வரையில் சிவாவும் பாலகுமாரனும் ஊரில் இருக் கவேண்டியதாகிவிட்டது. தம்பி சண்முகநாதன் இரா ணுவத் தொல்லைகளினால் எப்போதும் "உது சரிவ ராது" என்று வெடித்துக்கொண்டே இருந்தான். அவன் பேச்சு சுந்தரியின் "உது சரிவராது" என்ற தீர்ப்பை எதி ரொலித்தது.

"எது எப்போது சரிவரப் போகிறது?" என்று சிவா நினைத்தது உண்டு. செம்மண்ணின் வாசனையே தன்னை பதப்படுத்துவதாக அமைந்தது. 'பூமிப் பந்தின்' மூலைகளில் வெவ்வேறாக ஒதுங்குவோம் என்று யார் எதிர்பார்த்தார்கள்.

பல்கலைக்கழகப் படிப்பை சிவா முடித்துவிட்டு மேல் படிப்புக்காக நியூயோர்க்கிற்குக் கிளம்பும்போது ரஞ்சனியிடம் சொல்லப்போனதும் ஞாபத்துக்கு வந்தது. மருத்துவர் பத்மநாதனுக்கு அப்போதுதான் "இவன் யார்?" என்று விசாரிக்கத் தோன்றியது. ரஞ்சனி அப் போதும் முடிவாக ஒன்றும் சொல்லவில்லை. அமெ ரிக்கா வந்த பின்னர் எத்தனையோ கடிதங்கள் போட் டும், இரண்டே பதில் கடிதங்கள் போட்டிருந்தாள். இரு தயக் கசிவு கடவுளுக்கு மட்டுந்தான் கேட்குமோ?

நண்பன் பாலகுமாரன் ஒரு வருட இடைவெளிக்குப் பின் ரெக்ஸாஸ் வந்து சேர்ந்தான். பாலகுமாரனுக்கும் நம்பிக்கை விட்டுப்போயிருந்தது. போனில் எத்தனை தரம் அவளை மறந்துவிட்டு வாழ்க்கையில் போகும்படி சொல்லியிருக்கிறான்? கொழும்பே நிலை என்றிருந்த பத்மநாதன் குடும்பம் அவுஸ்திரேலியா கிளம்ப வேண டியதாகி விட்டது. அவர்கள் போகும்போது ரஞ்சனி எழுதியிருந்தார்கள். அதுதான் அவளிடமிருந்தான கடைசிக் கடிதம்..

சிவாவின் நித்திரை கலைந்தது. ஒரு தரம் நடந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. சூடாக ஏதென் அருந்தினால் நல்லது என்று தோன்றியது. 'பாரி'ல் ரான் ச்சரைப் பார்க்கக் கிடைத்தது. "நீ நாளைக்கு பீனிக் சுக்குப் போக முடியாது" என்று சிரித்தார். பெரிய கண் ணாடிக் கோப்பையில் பியர் நுரை பாதிவரைக்கும் இரு ந்தது.

"எப்படியும் நாளை கூட்டத்துக்குப் போக வேண்டும்" என்றான் சிவா.

"நீ அடைய முடியாத கனவுகளைத் துரத்துகிறாய்" என்று ரான்ச்சர் சிரித்துவிட்டு மறுபடியும் பியரைக் குடிக்க ஆயத்தமானார்.

"அடைய முடியாத கனவுகள் எத்தனை!" என்று மூச்சு விட்டபடி கோப்பியைக் குடிக்கலானான்.

போர்க்களமாகிவிட்ட ஊரில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கிற தாய் தங்கையர், ஊரை விட்டு வெளியேறத் துடிக்கிற சகோதரிகள் குடும் பங்கள்; இயக்கத்தில் சேர்ந்துவிட்டிருந்த சகோதரன் எல் லாரைப் பற்றியும் கனவுகள் இருந்தன. வெளிச்சம் மிக இல்லாத வீட்டில் கள்ளின் ஆதிக்கத்தில் இருக்கும் தந் தையைப் பற்றிய நையாண்டிகள் இல்லாது போய் விடும் என்றும் எதிர்பார்த்திருந்தான். இந்த நையா ண்டிகளும், குலப் பெருமைகளெதுவுமில்லாததும் இவ் வளவு தூரம் பரந்திருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. ரஞ்சனியைச் சூழ்ந்திருந்த பெண் கூட்டங்களக்குத் தெரிந்திருந்த விபரங்கள்தான் எத்தனை?

இப்போது நையாண்டிகளுக்குள்ளானவர்கள் மட் டுந்தான் மிகுந்து விட்டிருக்கிறார்களோ தெரி யவில்லை. நையாண்டி செய்கிறவர்கள் எல்லாரும் தங் கள் அளவுகோல்களுடன் வெளியேறி விட்டிருந்த மாதிரி இருக்கிறது. சகோதரிகளுக்குக் கல்யாணமும் நடந்து, அவர்கள் குடும்பங்களைப் படங்களில் மட்டுமே பார்க்க முடிந்தது. தம்பி சண்முகநாதனின் சிறு உருவ மும் கனவில் வந்து கொண்டேயிருந்தது...

"இது வேறு பிறப்பு!" என்று நினைத்துக்கொண்டு பீனிக்ஸ் போகும் விமானம் எத்தனை மணிக்கு என்று விசாரித்தான். தன் அவசரத்தையும் சொன்னான். அவ ரைப்போல இன்னும் பலபேர் இருந்தார்கள்.

"அநேகமாகக் காலையில்தான்" என்று பதில் வந் தது.

'கூட்டத்திற்குப் போகமுடியாது' என்று தனக்குள் முணுமுணுத்துக்கொண்டே மறுபடியும் தங்குமிடத்தை நோக்கிப் போனான். பாலகுமாரனுடன் தொலை பேசியில் பேசலாம் என்று போனான். பாலகுமாரன் டென்வரில் வேலைபார்க்க ஆரம்பித்திருந்தான். கல் யாணமாகி, அவன் மனைவி கர்ப்பமாகவும் இருந்தாள். யாழ்ப்பாணத்தில் பாரம்பரியந் தவறி எதுவும் நடக்கமு டியாது.

'இங்கே எதைக் கேட்க யார் இருக்கிறார்கள்' என்று நினைத்தால் ... தொலைபேசியில் பாலகுமாரனைத் தொடர்புகொண்டு தன் நெருக்கடியைச் சொன்ன போது செயின்ட் லூயிஸில் கணேசுவரநாதன் இருக் கும் விபரம் தெரிந்தது. கணேசுவரநாதன் சிவாவுடன் ஊரில் கல்லூரியில் படித்த ஒரு நண்பன். கலகலப்பான கணேசுவரநாதனின் தொலைபேசி எண்ணை வாங் கிக்கொண்டு போனில் தொடர்புகொண்டான்.

"கணேஷ் .." என்று சிவா தொடங்குமுன்னரே, "ஏ சிவா" என்று உற்சாகமாகப் பதில் வந்தது. கணேசு வரநாதன் தன்னுடன் அன்றிரவு தங்கிவிட்டு அடுத்த நாள் காலை போகலாம் என்று சொன்னான். சிவா வுக்கு இது பரவாயில்லை என்று தோன்றியது.

"சரியடாப்பா. ஆனால் பயங்கர ஸ்நோ, வெளியில் வர ஏலுமா?" என்றான் சிவா.

"அதை என்னட்ட விடு. ஒரு அரை மணித்தியாலமா கும். ரிடபிள்யூஏ வாசலில் நில், வாறன்" என்றான்.

அவன் வருவதற்கு முக்கால் மணி ஆகிவிட்டது. வெளியில் பனி பெய்துகொண்டே இருந்தது.

பேசிக்கொண்டே அவன் இருப்பிடத்துக்குப் போனார்கள். கணேசுவரநாதன் ஒரு இன்சூரன்ஸ் கம்பனியில் வேலை செய்துகொண்டிருந்தான். அவன் குடும்பத்தில் மற்றவர்கள் எல்லோரும் அவுஸ் திரேலியாவில். அவனும் சிவாவைப்போல தனியாக



படிப்பகம்

www.padippakam.com



இருந்தான். ஆனால் வாழ்க்கைக் குழப்பம் எதுவும் கிடையாது. அவனுக்கும் சிவாவின் விபரங்கள் தெரியும். கணேஷின் அபார்ட்மென்ட்டுக்கு போகும்போது பத்து மணியாகிவிட்டது. கம்பியூட்டர் வேலை செய்துகொண்டிருந்தது. அங்குமிங்குமாக கடுதாசிகள், பத்திரிகைகள் பரந்துகிடந்தன.

"ஏதேன் சாப்பிடப் போறியோ?" என்று கேட்டான்.

"கோப்பி தந்தாக் காணும்" என்றான் சிவா.

"சொல்லடாப்பா..." என்று கணேஷ் கோப்பி வைக்கப் போனான். பேசத் தொடங்கினார்கள். பேசிக்கொண்டிருக்கும்போது டெலிபோன் மணி அடித்தது. கணேஷ் டெலிபோனில் பேசும்போது சிவாவுக்கு விளங்கியது - கிளிநொச்சியைத் தாக்குகிறார்கள் என்று.

"இது எதிர்பார்த்ததுதான்" என்று கணேஷ் பதிலளித்துப் பேசிக்கொண்டிருந்தான். அவன் முகத்தில் கவலை தெரிந்தது. பேசி முடித்துவிட்டு, "கொஞ்சம் இரு சிவா" என்று தொலைபேசியில் இன்னும் யாருடனோ பேச ஆரம்பித்தான். சிவா அங்கிருந்த தமிழ்ப் பத்திரிகைகளைப் பார்க்க ஆரம்பித்தான். ஊரின் யுத்த நிலைகள், அகதிகளின் அவலங்கள் எல்லாவற்றைப் பற்றியும் நிறையவே செய்திகள் இருந்தன. யாழ்ப்பாணம் என்ன நிலையோ தெரியவில்லை. குடும்பத்தில் யார் உயிருடன் இருக்கிறார்கள் என்பதே தெரியவில்லை.

யாழ் மண்ணைவிட்டு நகரமாட்டேன் என்று பிடிவாதமாக இருக்கும் தாய் தந்தையரின் கடூரம் விளங்குவதாக இல்லை. இருந்த சமூக நெருக்குவாரங்களைவிட எதுவும் கொடூரமாக இருக்கமுடியாது என்ற நினைப்பா?

"கள்ளுக்கு கொப்பர் என்ன செய்யிறார்?" என்று தெரிந்தவன் ஒருவன் கேட்டு எரிச்சல் அடைந்தது ஞாபகத்துக்கு வந்தது. நக்கல்களுக்கு எங்களிடம் குறை எப்போது இருந்தது? சகோதரிகளின் கல்யாண வீடுகளுக்கும் போகமுடியவில்லை.

படங்கள் ... படங்கள் ... எதற்கு உயிர் இருக்கிறது?

கணேஷ் "சிவா ஒரு நிமிடம்" என்று சொல்லிவிட்டு போனில் எண்களை அமுக்கலானான்.

"அகதிகள் முகாம் ..." என்று பேசத் தொடங்கினான். ஊருக்கும் போகாமல் அவுஸ்திரேலியா போய் ரஞ்சனியைப் பார்க்க முயன்ற தன் கதை ஞாபகத்துக்கு வந்தது.

'இது என்னுடைய யுத்தம்' என்று சிவா பெருமூச்சு விட்டுக்கொண்டான். இந்த கணேசுவரநாதனின் சகோதரிகளில் ஒருத்தி மெல்போர்னில் இருந்தாள். பாலகுமாரன் விபரங்கள் எடுத்துத் தந்து, பத்து நாட்கள் அங்கே போயிருந்து ரஞ்சனியைப் பார்க்க முயன்றதும் ஒரு யுத்தந்தான். மருத்துவர் பத்மநாதன் எரிந்து விழுந்தது பரவாயில்லை. ரஞ்சனி பேசவும் மறுத்துவிட்டாள். அதுவே மனத்தை வருத்தியது.

'என் பரவணியைப் பற்றித் தெரியுமா?' என்று பத்மநாதன் வெடித்த சிறுமையும் வருத்தமாயிருந்தது. பாலகுமாரனும் எத்தனை தரம் தொலைபேசியில் ரஞ்சனியின் தாயிடம் சொல்லியிருப்பான்... "சிவா ஒரு நல்ல பெடியன்." எதையும் கேட்க பத்மநாதன் தயாராக இல்லை. திரும்பியபோது மன வெறுமை இதயத்தைத் தாக்கியது. வேலையே மனதுக்குத் திருப்தி தருவதாக அமைந்திருந்தது.

"சிவா" என்று சக வேலையாளர்கள் அழைப்பது ஒன்றுதான் உணர்வு நரம்புகளைத் தொட்டன. கணேஷ் போனில் " ... அகதிகள் முகாமுக்கு என்ன நடந்தது?" என்று கேட்டது சிவாவை சூழலுக்குத் திருப்பியது.

அகதிகள்!

ஊர் நிலவரம்தான் என்ன? புகையிலைத் தோட்டங்களுக்கு என்ன நடந்திருக்கும்? சிவா தலையைச் சிலிர்த்துக்கொண்டான். கணேஷ் " ... நான் பிறகு கதைக்கிறேன்" என்று போனை வைத்துவிட்டு,

"மன்னிக்க வேணுமடாப்பா ... சொல்லு உன்ர கதையளை.." என்று சொல்லிக்கொண்டே கோப்பிக் கிண்ணங்களைக் கொண்டுவந்து வைத்தான். வேலையைப் பற்றிப் பேச்சு முதலில்.

"ரஞ்சனி அலுவல் எப்படி முடஞ்சுது?" கணேஷ் கேட்ட விதத்திலேயே அவனுக்கு நிறையத் தெரிந்திருக்கலாம் என்று தெரிந்தது.

சிவாவின் முகம் வருத்தத்தில் தோய்ந்தது. "சரிவந்திருந்தால் உனக்குத் தெரியாமல் போகுமா? எப்ப எங்கட சமூகம் திருந்துமோ தெரியாது... " என்று தொடங்கினான் சிவா.

"நாங்கள் அழியிறது எங்கட சின்னத்தனத்தினால" என்று தன் கொதிப்பை கணேசுடன் பகிர்ந்துகொள்ள முயன்றான்.

கணேஷுக்குக் கோபம் வரப்போகிற மாதிரி இருந்தது. "நாங்கள் அழியிறது பிக்குகளின் சின்னத்தனத்தினாலயடாப்பா.. சும்மா விட்டிட்டா நாங்கள் எங்களுக்குள்ள அடிபட்டுச் செத்துப்போய் விடுவமா?"

"நாங்களாகவே திருந்திக் கொள்றதுக்கு ஒரு சூழல் வேணுமடாப்பா. இரண்டையும் தேவையில்லாமல் தொடர்பு படுத்தாதே .சிவா பொறுமையாகக் கேட்டுக்கொண்டான்.

"கணேஷ், இங்கே இருக்கிற தமிழர்களுக்கு யுத்தமா நடக்குது? என்ர நிலையில் இருந்தால் உனக்குத் தெரியும். உன்ர கொப்பரைக் கியூபாவுக்கு அனுப்பன். சுருட்டுக்கு அங்குதான் நல்லை வேலை என்று சொன்னதையும் கேட்டிருக்கிறேன். உனக்கு இதெல்லாம் என்னண்டு தெரியப்போகுது? சொந்தப் பிரச்சினை இல்லாதவர்களுக்கு சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க நேரமும் இருக்குது வசதியும் இருக்குது என்று சிவா சொல்லி முடிக்க டெலிபோன் அடித்தது. கணேஷ் மறுபடியும் தன் உலகில் ஆழ்ந்தான்.

"கிளிநொச்சி ... அகதிகள்...."

கணேஷ் போனை வைத்துவிட்டு வந்தான்.

"பாத்தியா சிவா, சனங்கள் அங்கே அல்லல் படுகினம். இதைவிட அவலம் இருக்கமுடியாது. என்னைக் கேட்டால் உதுக்குத்தான் உதவி செய்தால் உதவியாய் இருக்கும்... உண்மையான உதவியாய் இருக்கும்.

"கணேஷ், என்ர குடும்பத்து ஆட்கள் எல்லாரும் இந்த அவலத்தில்தான் இருக்கினம். ஊரைவிட்டு வெளிக்கிடுகிற யோசனையும் என்ர பெற்றோருக்கு இல்லை. ஆர் உயிரோட இருக்கினம், ஆர் உயிரோட இல்லை எண்டதும் தெரியாது. எனக்கு இந்த அவலங்கள் விளங்கும் ... "

கணேஷ் மௌனத்தில் ஆழ்ந்தான்.

சிவா தொடர்ந்தான். " ... சொந்தப் பிரச்சினையைப் பற்றியே யோசிக்கிறவன் மாதிரித் தெரியுது எண்டால், என்னால ஒண்டும் சொல்ல முடியாது. அநீதி நடந்தால் ஒன்றென்ன, ஒரு லட்சமென்ன எல்லாம் ஒண்டுதான்."

கணேஷ் ஏதோ சொல்ல வாயெடுத்தான். போன் மறுபடியும் அடித்தது. கணேஷ் எடுத்தான். "ஹலோ .. " என்று கேட்டுவிட்டு "சிவா உனக்குத்தான்.. பால



படிப்பகம்

www.padippakam.com



குமாரன்" என்று சொல்லி போனைக் கையில் கொடுத்தான்.

சிவா போனை வாங்கிக்கொண்டான்.

"பீனிக்ஸ் போக ஏலாதுபோலக் கிடக்கு" என்று பாலகுமாரன் தொடங்கினான்.

"பயங்கர ஸ்நோ" என்றான் சிவா.

"கொன்பரன்ஸைக் கான்சல் பண்ணிப்போட்டு போகவேண்டியதுதான்."

"இல்லை பாலா, காலமை தெண்டிக்கப் போறேன். ஒண்டரைக்கு நிண்டால் காணும். போயிடலாம், பாப்பம்."

ஒருகணம் பாலகுமாரன் ஒன்றும் சொல்லவில்லை.

".. செந்தில் மெல்போர்னிலிருந்து இப்ப போன் எடுத்துக் கதைச்சான் ..."

ஓ, இது ரஞ்சனியைப் பற்றிய செய்திதான். "சொல்லு" என்றான் சிவா.

ரஞ்சனிக்குக் கலியாணமாம்.

"பொடியன் டொக்டர்."

"எப்பவாம் கலியாணம்?"

"ஏப்ரலில்..."

சிவநாதனால் மேல் எதுவும் செய்யமுடியவில்லை.

"நான் சிக்காகோ போனதன் பிறகு கோல் எடுக்கிறன்" என்று போனை வைத்தான் சிவா.

இவ்வளவு நாட்கள் பின்னரா?

கணேஷிடம் விபரத்தைச் சொன்னான். 'உந்தப் பேச்சுக்கள் நானுங் கேள்விப்பட்டதுதான்' என்று கணேஷ் மெல்லச் சொன்னான்.

அவளும் உறுதியாயிருப்பாள் என்று நினைத்ததும் வீணாகிப்போன மாதிரியிருந்தது.

"கவலைப்படாதேயடாப்பா..." என்று கணேஷ் ஆறுதல் சொன்னான்.

"ஏயர் லைனைக் கேட்டுப் பாப்பம் எப்ப பிளைட் எண்டு ..." சிவா அவசரப்படுகிறவன் மாதிரித் தோன்றினான்.

அடுத்தநாள் காலை 8 மணிக்கு என்ற விபரம் தெரிந்தது. கணேஷ் "நான் வேலைக்குப் போறதுக்கு முன்னால் ஏயர் போர்ட்டில் விட்டுட்டுப் போறன்" என்றான்.

சிவா மறுபடியும் மௌனமானான். கணேஷ், சிவா தோளைத் தட்டினான். "வாழ்க்கையில் உன்னுடன் எப்பவும் வாறதுக்கு உயிர்த்துணைதான் வேணுமெண்டதில்லையடாப்பா." கணேஷ் நிறுத்திக் கொண்டான்...

"சாகிறதுக்கு நான் இப்பவும் ஆயத்தந்தான். ஊருக்குப் போகவும் விருப்பந்தான். பாப்பம், கெதியில் போகத்தான் வேணும்..."

கணேஷ் தலையில் கையை வைத்துக்கொண்டான்.

"இந்த அகதிகள் உதவிக்கு நீ என்ன செய்யிறாய்? ..." சிவா விபரங்களைக் கேட்க ஆரம்பித்தான். கணேஷ் சொல்ல ஆரம்பித்தான்....

அடுத்த நாள் காலை விமானத்தளத்தில், சிவா விமானத்துக்குக் காத்திருந்தபோது, ரான்ச்சர் சந்தோஷமாகவே வருவதைக் கண்டான்.

"எப்படி உன் இரவு கழிந்தது?" என்று கேட்டார்.

"நன்றாகப் போனது. ஒரு துணையகதியுடன் பேசிக் கொண்டேயிருந்தேன்.

"உன் கூட்டத்துக்குப் போய்விடலாம்" என்றார்.

"நிச்சயமாக" என்றான் சிவா. பனி நின்றுவிட்டிருந்தது. ❑

KUMARAN'S PROPERTY SERVICES

1A Sibley Grove, Manor ParkLondon E12 6SD

Tel: 0181-552 2613 Fax: 0181-548 1122

TENANTS

For all your accommodation needs, we are there to sort it out.

Call Us Now

NO COMMISSION, D.S.S. WELCOME

LANDLORDS

a new rent guaranteed scheme

Good landlords, Good properties, Good tenants and Good rents

Please contact us for friendly services.




படிப்பகம்

www.padippakam.com



# வீழ்ச்சி

மு, புஷ்பராஜன்



ரி.வி.யில் வனவிலங்குகள் பற்றிய செய்திப் படம் போய்க்கொண்டிருந்தது.

சிறிது திறந்த வெளி. இடையிடையே சடைத்த பெருமரங்கள். உலர்ந்த புற்கள். காய்ந்த நிலம். யானைகளின் ஆறுதலான நடை. காட்டெருமைகள் உரசிச் சென்றுகொண்டிருந்தன. ஒன்றின் முதுகில் வெள்ளைக் கொக்கு. சிங்கங்கள் பெருமரத்தினடியில் படுத்திருந்தன. சில தலையைப் பிரட்டிப் புற்களில் உரசின. புலிகள் படுத்திருந்தன. மான்கள் புற்களைக் கடிப்பதும் திடுமென தலையை நிமிர்த்துவதுமாய் இருந்தன. மிரட்சி அவற்றின்கண்களில். இன்னும், பெயர் தெரியா வனத்து உயிர்கள். இயற்கையோடு இசைந்த வாழ்வு. கவலை இல்லாத வாழ்வு. கவலை இல்லாத வாழ்வா....? அதனதன் கவலைகள் யாருக்குப் புரியப் போகிறது...?

இப்போது அமைதியான நதி. மெல்லிய அலை. கரைகளை உரசும் அலையின் மெல்லிய ஓசை. கரையோரம் அலை அசைவில் ஆடும் பூந்தண்டுகள். ஆறு, கடல், வானம் ஏன் வனங்கள் கூட அழகானவைகள்தாம்.

'எமது கடல், வள்ளங்கள் எல்லாம் அனாதரவாய்....'

பெருமூச்செறிந்தபடி ரி.வி யைப் பார்த்துக் கொண்டிருந்தான். அழைப்பு மணியின் ஒலி.

'யாராய் இருக்கும். கீழுக்கு இருப்பவர்களுக்காக இருக்கலாம். அவங்க திறப்பாங்க....'

மீண்டும் அவன் ரி.வி யில், சூரிய ஒளி ஆற்று நீரில் ஒளி சுடரப் படர்ந்து அசைந்தன.

மீண்டும் அழைப்பு மணியின் ஒலி.

'கீழுக்கு யாரும் இல்லையோ....'

கட்டிலை விட்டு எழுந்து யன்னலால் கீழே நோக்கினான்.

யாரும் தெரியவில்லை. பனி, பஞ்சுப் பொதிகளாய்ப் பறந்து கொண்டிருந்தன. வீதிக் கரைகளில் நிறுத்தப்பட்டிருந்த கார்களை பனி மூடிக்கொண்டிருந்தது. வீதியையும்தான். யன்னலுக்கு நேருள்ள விளக்குக் கம்பமும் அதன் செம்மின் ஒளியும் சோகத்தில் கசிந்தது. இலைகளற்ற மரக் கொப்புகளில் பனித்திரள்கள். இடையிடை அவற்றிலிருந்து கசியும் பனிநீர்த்துளிகள். எங்கும் ஒரே வெள்ளை.

இப்பனிச்சொரிவை அறையுள் நின்று பார்க்க, லயிக்க முடிகிறது. வீதியில் நின்றால் எல்லா அழகும் ஓடி மறைந்துவிடும். மறைகிறதா...? நாம்தான் ரசிக்கும் நிலையில் இருப்பதில்லை. மழையில் தலையைக் கவிழ்த்துச் செல்லும் ஆடுகள்போல் வீடு சேர்ந்துவிடும் விரைவு.

யன்னலைத் திறந்து வெளியில் எட்டிப்பார்க்கப் பயமாக இருந்தது. கண்ணாடி வழியாக மீண்டும் கீழே பார்த்தான். யாரும் தெரியவில்லை.

'கதவுடன் ஒட்டியபடி நிக்கிறார்களோ...'

சிலிப்பரை மாட்டிக்கொண்டு தடதடவென படிகளில் இறங்கிச் சென்று கதவைத் திறந்தான்.

குளிர் காற்று குப்பென முகத்தில் அடித்தது. யாரெனப் புரியவில்லை. மூடிக் கட்டியிருந்தார். குளிரில் இவனது உடல் உதறல் எடுத்தது. பனிப் பஞ்சுகள் இவன் முகத்தில் விழுந்து கரைந்தன. தமிழரா, ஆங்கிலேயரா புரியவில்லை. தெரு விளக்கின் ஒளியை அவர் முதுகு மறைத்துக் கொண்டிருந்தது. முகம் தெரியவில்லை. தலையை வேறு குனிந்து கொண்டிருந்தார்.

"யார் வேணும் உங்களுக்கு" - ஆங்கிலத்தில்.

"நான் சுவர்ணா"

பதிலை எதிர்பாராமல் உள்நுழைந்தாள். கத



படிப்பகம்

www.padippakam.com



வைத் திறந்தபடி வைத்து உறைந்து போனான். பனிப்பஞ்சுகள் முகத்தில் விழுந்தவண்ணமாயி ருந்தன. குளிர்காற்று வேறு உடலை உலுக்கி எடுத்தது. கதவைச் சாத்திவிட்டுத் திரும்பினான்.

அவள் படிகளில் ஏறிக்கொண்டிருந்தாள்.

இப்ப எதுக்கு வந்திருக்கிறாள் - மனம் முணுமுணுத்தது.

அறைக்குள் நுழைந்தபொழுது அவள் ஜக்கற்றைக் கழற்றி பனியை உதறிக்கொண்டிருந்தாள். பனி நீங்கிய ஜக்கற் மினுமினுத்தது. மப்ளர், கையுறைகள் எனக் கழற்றி மேசையில் போட்டாள். பின் ஜம்பரைக் கழற்றியவள் தலையை உதறிக்கொண்டாள். டெனிம் ரவுசருடனும் கருப்பு சேட்டுடனும் நின்றிருந்த அவள், மேசை அருகிலுள்ள ஈசிச் செயரில் அமர்ந்தாள்.

"மகே தெய்யனே..."

இவன் எதுவும் பேசாமல் கட்டிலில் அமர்ந்தான்.

கைகளை ஹீற்றர்முன் நீட்டி, சூடாக்கி, முகத்தில் அப்பிக்கொண்டிருந்த அவள், அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

"எனக்க ரீ குடிக்கவேணும். போடப்போறன் உங்களுக்கு" - ஆங்கிலத்தில் கேட்டாள்.

"எனக்கு நான் போடுவேன்."

"ஓ.கே." - எழுந்து கீழே இறங்கிச் சென்றாள்.

அந்த உரிமை இவனுக்கு எரிச்சலாக இருந்தது.

"என்ன அதிகாரம் இவளுக்கு இப்படி நடந்து கொள்ள. பழைய உறவும் அன்பும் அப்பிடியே இருக்குமெண்ட நினைப்பா... கடைசியாக எள்ளும் கொள்ளுமாக வெடித்துவிட்டு போனாளே... அந்த சீ பக்ஸ்.... அந்த ரசீது என்ன மாதிரி காளியானாள்...' இப்ப ஏன் வந்திருக்கிறாள்...? எமது வீழ்ச்சியை தன் மூலம் ஞாபகப்படுத்தவா...

யாழ்நகர் வீழ்ச்சிக்குப் பின் அவனுள் ஒரு குறுக்கம். நெஞ்சு நிமிர்த்தி நடந்த நினைவுகள் காலடியில் சரிந்துபோன உணர்வு. யுத்தத்தில் பின்னடைவுகள் சகஜம் என்றாலும் அடி மனதில் ஒரு குறுக்கம்.

இரு ரீகிளாஸ்களுடன் அறைக்குள் நுழைந்தாள். அவன் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தான். அருகில் உள்ள சிறிய ஸ்ரூலில் அவற்றை வைத்தவள் றிமோட் கொண்றோல மூலம் ரி.வி. சத்தத்தைக் குறைத்தாள்.

"ரீயைக் குடியுங்க..."

"எனக்கு வேணாம்"

"குடிப்பதாய் சொன்னீங்களே...."

அவள் தன் ரீயுடன் ஈசிச்செயரில் அமர்ந்து கொண்டு இரு மிடறு குடித்தாள். அவனைப் பார்த்தாள். அவன் ரி.வி யைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவளது இருப்பை உணராதவன் போல் அந்த மௌன இறுக்கத்தை அவள் கலைத்தாள்.

"அம்மா தங்கச்சியைப் பற்றி ஏதும்...."

எரிப்பதுபோல் பார்த்தான். ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு நிதானமாகவே கேட்டான்.

"நக்கலா"

"என்ன நக்கல்" - சற்று எரிச்சலுடன் கேட்டாள். சற்று நேர மௌனத்தின் பின்

"அவங்களைப் பற்றிய அக்கறை எனக்கு இருக்கு"


'கூரடடளாவை' - மனதுள் முணுமுணுத்தபடி தலையைத் திருப்பிக் கொண்டான்.

"இப்ப எதுக்கு நீ வந்தாய்"

அவள் எதுவும் கூறாமல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனில் எதையோ தேடுவது போல்...

"ஏன் வரக்கூடாதா..."

மெல்ல தலையை ஆட்டினான், பதில் கூறிப் பிர






படிப்பகம்

www.padippakam.com



யோசனம் இல்லை என்பதுபோல். வாய்மட்டும் முணுமுணுத்தது.

"என்ன முணுமுணுக்கிறீங்க"

"வரமாட்டன் எண்டுதானே போனனி"

"அது அப்ப..."

"இப்ப..."

யாழ்நகர் வீழ்ச்சியின் பின் அவள் கவலையெல்லாம் இவன்மீதுதான். மனமுடைந்து போயிருப்பான் என உணர முடிந்தது. அவனருகில் இருந்து ஆறுதல் கூறவேண்டும்போல் இருந்தது. பழைய சம்பவங்களையெல்லாம் மறந்தாள். ஞாயிறு வந்ததும் பனியையும் பொருட்படுத்தாது புறப்பட்டு விட்டாள்.

'இப்ப' என்ற அவன் கேள்வி தன் நோக்கின் எதிர்நிலையில் நிற்பதை உணர்ந்தாள். எல்லாம் தலைகீழாகிவிடுமோ எனப் பயந்தாள்.

"அங்க நடக்கிறதுக்கு நானென்ன செய்ய..."

அவள் குரல் இரக்கத்தைக் கோரியது. அவன் அருகில் வந்து அமர்ந்தாள். அவன் எதுவும் பேச வில்லை. மெல்ல அவன் கையை எடுத்து தன் மடி மீது வைத்தாள். வெடுக்கென விடுவித்துக் கொண்டான்.

"என்னில கோவமா..."

அவன் எதுவும் பேசவில்லை. யானைகள் அதே ஆறுதலான நடையுடன்... சூரிய ஒளி மிகப் பிரகாசமாக... காற்று இப்போது வேகமாக வீசுகிறது என்பதை ஆற்றின் அலையிலும் பூந்தண்டுகளின் விரைவான நடுக்கத்திலும் புரிந்தது. மான் கூட்டங்களை நோக்கியபடி பற்றை ஒன்றிலிருந்து புலி ஒன்று பதுங்கிப் பதுங்கி வந்து கொண்டிருந்தது.

"கொட்டியா"

திடுக்கிட்டுத் திரும்பினான். எதைச் சொல்கிறாள் எனப் புரியவில்லை.

"என்ன சொன்னாய்"

"ஒண்டுமில்ல..."

கொடுப்புள் சிரித்தபடி ரி.வி. யைக் காட்டினாள். ரி.வியைப் பார்த்தபின் மௌனமானான்.

"இண்டைக்கு இங்கதான் தங்கப்போறன்"

குரூரமான வார்த்தைகள் தொண்டைவரை வந்தது. அடக்கிக் கொண்டான்.

அவள் கட்டிலில் சாய்ந்து அவன் தலையை வருடுவதும், காது நுனியை மெல்லக் கிள்ளுவதுமாக...

"அம்மா தங்கச்சி பற்றி..."

"அம்மா தங்கச்சி..."

மூட்டை முடிச்சுக்களுடன் லட்சக்கணக்கான வெளியேற்றம். காடுகளுள்ளும் வீதியோரங்களிலும் படுக்கை. மழை. வேரோடு பிடுங்கி வீசப்பட்ட நிலை. அறியப்பட்ட செய்திகளில் அவன் மனம்.... பொஸ்னிய அகதிகளைவிட கேவலமாக... இனி எத்தியோப்பிய அகதிகளைப் போல... ஊற்றிலிருந்து கொடு கொடுவென நீர் பீரிடுவது போல் கொதிப்பாக அவனுள் பெருகியது.

திடீரென அவளை உதறி எழுந்தான். திடுக்கிட்ட அவள், என்ன என்று கேட்பதற்குமுன், அவளை இழுத்து நிறுத்தினான். இரு கைகளாலும் அவள் சேட்டைப் பிடித்து இரு பக்கமாக இழுத்தான். பட்டன்கள் தெறித்து விழுந்தன. வெறித்து நோக்கினான். நடுங்கியபடி மார்பின் குறுக்காக வைத்திருந்த அவள் கைகளை இறுகப் பிடித்து இழுத்து பின் கட்டிலில் தள்ளினான்.

புலி, மானைத் துரத்திக் கொண்டிருந்தது. அதன் ஒவ்வொரு பாய்ச்சலிலும் வேகம், மூர்க்கம். மான் களைத்ததோ என்னவோ புலிக்கு அகப்படும் நிலைக்கு இடைவெளி குறுக மான் வளைந்து திரும்பியது. புலி முன்னம் காலால் ஓங்கி அறைந்தது. முதுகு கீறப்பட்ட மான் பின்னங்கால்கள் சறுக சற்றுச் சரிந்து மீண்டும் ஓடியது. புலி திரும்பிய வேகத்தில் புழுதி சிறு புகையாய் எழுந்தது. பறவைகள் சடசடத்துப் பறந்தன. குரங்குகள் கீச்சிட்டபடி மரங்களுக்கு மரங்கள் தாவிக் கொண்டிருந்தன. புலியின் இறுதிப் பாய்ச்சல் மானின் கழுத்து வளையில். புலியின் வேகத்திற்கு மான் இழுபட்டுப் பிரண்டு அதன் காலடிக்குள் சிக்கிச் சிதைந்தது. மானின் கால்கள் மேல் நோக்கியபடி புலி குரல்வளைப் பிடியுடன் சிலுப்பியது சிதைந்து குலுங்கிய மானின் கால்களில் மெல்லிய நடுக்கம். மீண்டும் ஒரு சிலுப்பல். மான் அசைவற்றுக் கிடந்தது. முன்னம் கால்களால் மானை அழுத்தியபடி கடியை விடுத்த புலி அங்குமிங்கும் திரும்பிப் பார்த்தது. வேகத்தின் களைப்பு அதன் இரைப்பில் தெரிந்தது.

கட்டிலை விட்டு வேகமாக எழுந்தான். இளைப்பில் நெஞ்சு விம்மி விம்மித் தணிந்தது. சிறிது நேரம் அப்படியே இருந்த அவன் களைப்பு அடங்க, எழுந்து சிகரட்டைப் பற்றி யன்னலால் நோக்கினான்.

பனிப் பஞ்சுகள். ரசிக்கும் நிலையில் இல்லை. குற்ற உணர்வு. அவன் நடந்த விதம். அவளை நடத்திய விதம் எல்லாம் அவனுக்குப் புதிதாக இருந்தது. இந்த வெறித்தனத்தை அவள் கற்பனை செய்துகூட பார்த்திருக்கமாட்டாள் என நினைத்தபோது அவளைப் பார்க்கப் பயந்தான். பின் கடைக்கண்ணால் மெல்ல நோக்கினான்.

அவள் அப்படியே குப்புறப் படுத்திருந்தாள். அவள் உடல் மெல்லக் குலுங்குவதுபோல் ஒரு பிரமை.

'அழுகிறாளோ...?'

அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். ரி.வி.யில் கடல் அலைகளில் பறவைகள் குளிப்பதும் பறப்பதுமாய் இருந்தன. இடைக்கிடை பெரிய அலைகள் இரைச்சலுடன் பாறைகளில் மோதிச் சிதறி நுரையாய் வழிந்தன.

எரிச்சலுடன் ரி.வி. யை நிறுத்தினான். கட்டிலில் வந்து அவள் அருகில் அமர்ந்தான். முதுகு குலுங்குகிறதாவென உற்றுப் பார்த்தான். எதுவும் தெரியவில்லை. ஏதாவது கேட்டால் வெடித்துவிடுவாளோ எனப் பயந்தான். அது இதுவரை மேலோங்கியிருந்த தன் ஆதிக்கத்தை சிதைத்துவிடுமென அஞ்சினான். அவள் கிடந்த கோலம் அவனைச் சங்கடப்படுத்தியது. தீர்மானித்தவனாய் மெல்ல அவளைத் திருப்பினான்.

கன்னம், உதடு, மார்புகளில் வெறித்தனத்தின் அடையாளங்கள்.

உற்று நோக்கினான்.

கசங்கிய நிலையில் ஒரு பெண்ணாய் கண்களை மூடிக்கிடந்தாள். ஈரம் அவள் கண்களின் ஓரம். ❑




படிப்பகம்

www.padippakam.com



குளிர்ந்து கிடக்கிற மாலைப் பொழுதொன்றில் நான் சஞ்சலமுற்றுக் காணப்பட்டேன். ஓம், ஐந்து நிமிடத்திற்கு முன்னும் நான் மிகச் சோர்ந்து காணப்பட்டேன்.

எனது நாரியில் சிறுவலி காண்கிறது. இன்னும் சிறிது நேரத்தில் குத்திக் குத்தி அது வலிக்கப் போகிறது. பின்னேரத்தில் நான் உலாத்தப் போனதால் அந்த வலி பிடித்தது என்பது எனக்குத் தெரியும். அதனை உலாத்தப் போவது என்றும் சொல்லக் கூடாது.



மனைவிக்கு ஒரு காவியம் எழுதி அதனை அனுப்பப் போஸ்ற் ஒவ்வீசுக்குப் போனேன். சிறிது தூரம் தான் நடந்து போனேன். கடிதம் கொஞ்சம் நிறைகூடி இருந்தது. ஆனால் போஸ்ற் ஒவ்வீசில் இருக்கும் அந்தப் பெண்(என் மனைவி போலவே இருக்கிறாள்) வழமை போலவே மூன்ஹறு மார்க்கிற்கு முத்திரை ஒட்டித்தான் அனுப்புகிறேன் என்றாள். மூன்று மார்க்கைக் கொடுத்தேன். அந்தக் காவியத்தைக் காவ மூன்று மார்க் பெருங்காசு அல்ல.

காவியம் இதுதான்: கிழமைக்கு வழமையாக ஒரு கடிதம் வரும். இக்கிழமையில் மூன்று கடிதங்கள் வந்தன. என் பிறந்த நாள் என்று அன்பு செலுத்தி மனைவியும், குழந்தைகளும் வாழ்த்தை அனுப்பியிருந்தனர். ஊரிலென்றால் புரட்டாதி மாதத்தில் வரும் மூல நட்சத்திரத்திற்கு (ஆண் மூலம் அரசாளும் என்று அம்மா அடிக்கடி கூறுவாள். நான் இங்கு காடு மேய்கிறேன்) அம்மாள் கோயிலுக்குப் 'பெட்டி' கொடுத்து அர்ச்சனையும் செய்வார்கள். என் மனைவி எனக்கென்று வந்தபின் நான் பிறந்த நாளை அந்த நாட் காலையில் ஞாபகப் படுத்தினாள். விடியற் புறத்தில் முத்தமிட்டு நினைவூட்டினாள். பிற்காலங்களில் என் பிள்ளைகளும் அவ்வாறு செய்தார்கள்.

**அ. இரவி**



ஆனால் இவ்வருடம் மூன்று நாட்களின் பின்னரே பிறந்து கழிந்த நாளை ஞாபகப்படுத்தும் மடல் வந்தது.

அவர்கள் அந்த நாளை மறக்க மாட்டார்கள் காலம் மறந்தது!

மற்றைய கடிதத்தில் கடனை நினைவூட்டினாள். கடன் காசும், வட்டியும், வட்டியின் குட்டியும் ஆட்கள் நெருக்கினம். அதற்காகக் குளிருக்குள் வேலை செய்ய வேண்டாம். நான் எப்படியோ சமாளிக்கிறேன் என்று கடிதம் வந்தது. நான் மகிழ்வதற்கென்று அக்கடிதத்தில் ஒரு வார்த்தை இல்லை.

பிரிவின் துயரைப் பிறகு மற்றைய கடிதத்தில் பதித்து இருந்தாள். அது கொஞ்சம் அந்தரங்கமானது. ஆனால் மிகத் துயரெழுப்புவது அது! மேலும் குழந்தைகளின் படத்துடன் தன் படத்தையும் அக்கடிதத்துடன் இணைத்திருந்தாள்.

நான் ஒரு வேலை செய்தேன். நான் கதவைப் பூட்டினேன். கதிரையில் அமர்ந்தேன். படத்தைப் பார்த்து நெஞ்சு வலிக்க விக்கி அழுதேன். விக்கி விக்கி அழுதேன். அதைச் சொல்ல எனக்கு என்ன வெட்கம்?

யாவற்றிற்கும் சேர்த்து நான் எழுதியது கடிதம் அல்ல; காவியம் என்றுதான் அதனைச் சொல்ல வேண்டும். அது எப்போது அவள் கையில் போய்ச் சேர்கிறதோ?

ஊரில் தபால் பெட்டி வாயைப் பிளந்து காத்திருக்கிறது. எத்தனையோ கடிதங்களை அது தன் வயிற்றில் சேகரித்துக் கொள்கிறது. பிறகு அது துப்புகிற நாட்கள் அதிகமானாலும் சந்தேகத்தைத் தருகின்ற நாட்களாக அவை நகர்கின்றன.

அவள் வீட்டிற்கு சற்று அப்பால், முடக்கில் இலந்தை மரம் நின்றது. இலவம் பஞ்சு காய்ந்த மரம் நின்றது. கறுத்துப் பாழடைந்த சமாதி வைரவர் கோயில் இருந்தது. அதக் பக்கத்தில், தனித்துப் போய், மூச்சடங்கி, வாயைப் பிளந்து காத்துக் கிடந்தது சிவப்புத் தபால் பெட்டி. தான் காதலிக்கிறபோதுகளில் "நெஞ்சின் ஓரத்தில் இருக்கையிலே இந்தத் தூரம் என்ன செய்யும்?" என்று எழுதி அவள் கடிதம் போட்டிருந்தாள்...

நான் நடந்து வருகிறபோதே நாரியில் சிறுவலி



படிப்பகம்

www.padippakam.com



கண்டியிருந்தது. போய்ப் படுக்கையில் புரளச் சரிவரும் எனும் நினைப்பு அப்போது குறுக்கிட்டது. நகரத்தில் புகார் படிந்து கிடக்கிறது. வண்ணத்தில் மாற்றம் இல்லை.

சாம்பல் கலந்த வெண்மேகமாகப் பூமி பொங்கிக் கிடந்தது.

அப்போது மரங்கள் இலைகளை உதிர்க்கத் தொடங்கின. மரங்களில் இலைகள் பழுத்து மஞ்சள் கூடாரமாகக் காட்சி தந்தது. இலைகள் நிலத்தை நோக்கி ஒவ்வொரு கணமும் அசைந்தன. கூட்டிப் பெருக்குவாரற்று வீதியின் மருங்கில் சருகுகள் மண்டிக் கிடந்தன. நகரம் குப்பையால் நிரம்பி அழுக்கேறிக் காணப்பட்டது. மழைச் சிணுங்கலில் இலைகள் இளகிப்போய் கால்களில் நசிந்து கிடந்தன.

அது அப்போது வேப்பிலைச் சருகுகளைப் புழுதி பறக்க அம்மா கூட்டுவார். ஒழுங்கையிலும் ஒரு கஞ்சல் இராது. வெள்ளிக்கிழமைகளிலும், அம்மாள் கோயில் திருவிழா நாட்களிலும் கூட்டி முடித்து அம்மா சாணி தெளிப்பார். ரோஸ்கத்தின் பிற் கூற்றில் இலை உதிர்க்கத் தொடங்கும்.

மரங்கள் இலைகளை உதிர்க்கின்றன. என் மண்டையிலிருந்து மயிர்கள் கொட்டுண்ணுகின்றன. அரைக்கிழவனாகி விட்டேன். நாரியில் வலி குத்துகிறது.

சண்டைகள் தொடங்கி அப்போது சாப்பாட்டுக்குச் சரிப்பட்டு வராத காலம். எஞ்சியிருந்த நெல்மணிகளைப் பொறுக்கி, பின்னேரத்தில் குற்றி, இரவில் கஞ்சி குடித்தோம். அவ்வாறு ஒரு காலம் இருந்தது.

கடினமான வாழ்வையே அப்போது நான் கடந்தேன்.

பகலில் பொம்பர்கள் சுற்றின. பின்னேரத்தில் ஹெலி ரவுண்ட் அடித்தது. இரவில் ஷெல் விண் கூவின. நான் வியாபாரம் செய்தேன். கிளிநொச்சியில் இருந்து நான் மூட்டை அரிசி கட்டி இரவில் சைக்கிள் உழக்கினேன். சோளகம் பெயர்ந்த காலம். டைனமோவில் வெளிச்சம் எரியும். ஆனால் சைக்கிள் உருளாது. எனவே வெளிச்சம் தெரிந்த சைக்கிள் பின்னே என் சைக்கிளை ஓட்டினேன். றோட்டு அவ்வாறு தான் இருந்தது. அதாவது குண்டும் குழியுமாகி இருந்தது. இடைக்கிடை பெரும் பள்ளங்களும் தோன்றின. கவனமாகத்தான் ஓட்டினேன். கவனத்திற்கும் அப்பாலான பிசகல்களுக்கு யார் பொறுப்பு? எனவே மூன்று நான்கு தரம் இடறி நான் வீழ்ந்தேன். நாரி அப்போது வலி கண்டதா?

சங்குப்பிட்டிக் கடல் கரையில் காத்து நின்றேன் நான். வாடை, கடல் நீரில் தன்னைக் கரைத்து குளிர்ந்து குளிர்ந்து அப்போது வீசியது. காத்து நின்றது ஆறு மணித்தியாலம். லாம்பு காட்டி வள்ளக் காரன் சைக்கிளையும், மூட்டையையும், என்னையும் ஏற்றினான். மூட்டையைத் தூக்கி வள்ளத்தில் எறிந்தேன். குந்தினேன். அப்போதுதான் வலி கண்டதா?

விடிகிற வெளிச்சம் பனையில் பட்டபோது நான் கேரதீவின் அக்கரையில் ஒதுங்கினேன்.

காலைச் சாப்பாடு கொடுக்க விமானம் வரும். விமானத்திற்குப் பயம் விலக்கி, பாதை வகுத்துக் காட்ட ஹெலி வரும். வரும் ஹெலி ஏன் சும்மா போவான்? சும்மா போவதால் யாருக்குத்தான் இலாபம்? பத்துப் பனை உயரத்தில் நின்று சுட்டுப் பார்க்கும். குண்டுகளைப் பொழிந்து தள்ளும். அவன் விளையாட்டினுள் நான் ஏன் அகப்படுவான்? அடிபடுவான்?

மூட்டை கட்டி விரைந்தேன். விரையத்தான் வாடைக்காற்று விட்டதா? எத்தி எத்தி, தள்ளி,தள்ளி, வீசியது. என் பலத்தை நாரிக்குக் கொடுத்தேன். நாரியிலிருந்து திமிறிக் காலுக்குச் செலுத்தினேன். முக்கினேன். முயன்றேன்.

அப்போதுதான் நாரி வலி கண்டதா? இல்லையென்று கூட எனக்குத் தெரியும்.

வீட்டில் கைக்குழந்தையைத் தூக்கிக் கொஞ்சினேன். மனைவி எனக்குப் புட்டும் கத்தரிக்காய்ப் பொரியலும் தந்தாள். படுத்து எழும்பி மதியம் சோறும் மீன் குழம்பும் சாப்பிட்டேன். பின்னேரம் கோயிலுக்குப் போவம் என்றாள். மருத நிலத்துப் பிள்ளையாரிடம் போனோம். மணல் தான், என்றாலும் சைக்கிள் போகிறபோது இறக்கம். கஷ்டமில்லை. அரசமரத்தின் கீழ் பிள்ளையாருக்கு விளக்கு வைத்துக் கும்பிட்டாள். ஐயருக்குக் காசு கொடுத்து கற்பூரம் கண்ணில் ஏற்றிக் கொண்டாள். விபூதியும், சந்தனமும் நெற்றியில் மின்னியது. மனதில் கமழ்ந்தது.

மூத்தவன் முன்னால் இருந்தான். இளையயவனை இடுக்கில் செருகி மனைவி கரியரில் குந்தினாள். ஏற்றமும் மணலும் சைக்கிளுக்கு இழுப்பைக் காட்டியது. முக்கி, முதுகுத் தண்டால் சைக்கிளை உழக்கினேன். உழக்கியதுதான் 'டக்' கென முதுகந்தண்டில் சிறு சத்தம்.

எனக்குச் சரியாகத் தெரியும் அப்போதுதான் வலி கண்டது. சரிதான். நாரியில் சிறு வெடிப்புச் சத்தம்!

அதுதான். இப்போது குத்திக் குத்தி, சிறிதுதான் என்றாலும் வலிக்கிறது.

பரவ ஆரம்பிக்கிறது. முதுகந்தண்டின் அடியிலிருந்து மேலெழும்புகிறது. 'அப்பாடா' என்று நிமிர்ந்தேன்.

பெருங்கப்பல் அப்புறமாகச் சாமான்களை இறக்கிக் கொண்டிருந்தது. எனக்கு முதுகைக் காட்டியபடி பிறகு ஊதல் ஒலி எழுப்பி மூச்சு விட்டது. பிரமாண்டமாய் ஒரு புறத்தே மேற்கே சிவப்புப் பின்னணியில் பயம் காட்டியது. எந்தப் பெரிய யானை அது! எந்தப் பெரிய சருவம் அது! அசுர பலம் கொண்டு கடல் முழுவதும் ஆக்கிரமித்து, அது நின்றது. அது இரவு துறைமுகத்தினுள் நுழையும் போதே கடல் ஒரு முறை அலை அடித்து அதனை எதிர்த்து ஆர்ப்பரித்தது. அதன் பாரம் தாங்க முடியாமல் துடித்துப் போனது கடல். பிறகு அடங்கிப் போனது.

இராத்திரி பெருங்கடல் ஆர்ப்பரித்த போது நான் படுத்திருந்தேன். சிறு கப்பலில் எனது முகாம். 96 அறைகளும் அறைக்கு நால்வரான பல நாட்டுக் காரர்களும் கொண்ட முகாம். ஆர்ப்பரித்த போது 96 அறைகளும் குலுங்கின. துடித்த போது நான் கட்டிலிலிருந்து அசைபட்டேன். ஊதல் ஒலி எழுப்ப சிவா, "கப்பல் வந்திருக்குது" என்றான்.

அசைந்த போது சாமம் 2.00 மணியிலிருக்கும். 1.00 மணிக்கு எனது அறையில் சிறு சச்சரவு நடந்தது. "கட்டிலை ஆட்டாமல் படு..." என்று ராஜன் கத்தினான். கட்டில் கிரீச்சிட்டது. பிறகும் கத்தினான்! "நாங்கள் நித்திரை கொள்ளுறேல்லையா?"

"பேசாமல் படுங்கோடாப்பா..." என்று சொன்னேன். சிவா கட்டிலை ஆட்டாமல் பிறகு படுத்தான்.

தலையணையுடன் தாம்பத்தியம் நடாத்துகிற காலம் ஆகிவிட்டது.!

அப்படிச் செய்திருக்கக் கூடாதுதான். விட்டிட்டு



படிப்பகம்

www.padippakam.com



வந்திருக்கக் கூடாது. நாரி வலிக்கு உகந்தது குடும்பம் தான். நாரிப்பக்கம் எண்ணெய் பூசி, ஒத்தடம் கொடுத்து, மனைவி தன் கையால் அழுத்தத் தேய்ப்பாள். குப்புறப் படுத்து குழந்தைகள் பிஞ்சுக் கால்களால் முதுகில் ஏறி அமத்துவார்கள். வலி எவ்வளவு குறையும்! அப்போது எங்கேபோயிற்று அந்த வலி?

குறைந்து தான் இருந்தது அப்போது. இல்லை, இல்லாமலே போனது. இது என்ன ஆச்சரியம்? கோடை வெயிலுக்கு அப்போது வலி கண்டிருக்கவில்லை.

என் மனைவி காத்திருந்தாள். ஒரு மகன் அம்மாவைத் தெரிந்து பார்த்திருந்தான். மற்றவன் கக் குழந்தையாகி சிரித்திருந்தான். உழைத்துக் களைத்து வந்த பொழுதுக்கு அப்போது அது ஆனந்தம். வலி தெரியவேயில்லை!

உழைப்பது இலகுவான விசயமேயல்ல. கிழமைக்கு இருநூறு மைல்களுக்கு மேலாக ஓடினேன். இருநூறு கிலோ பாரம் கட்டி முதுகு தெண்டினேன். வவுனியாவிலிருந்து மண்ணெண்ணெய் கொண்டு வந்தேன். பளையில் தேங்காய் கட்டினேன். கிளிநொச்சியில் அரிசி மலிவாக இருந்தது. முழங்காவிலில் செத்தல் ஏற்றினேன். வலைப்பாட்டில் கருவாடு காவினேன். அப்படித்தான் போனது பொழுது. எழுது மட்டுவாளில் பொச்சு மட்டை கூடக் கட்னேன் அப்படித்தான் பொழுது போனது.

ஆனால் இலகுவான விசயமாக இருந்தது. மனைவி காத்திருந்தாள். மகன்கள் பார்த்திருந்தனர். இலகுவான விசயமாக இருந்தது உழைப்பு.

மூன்று பாதைகளை நான் கடந்தேன். கடந்த கதை நான் சொல்வேன்.

சுலபமான பாதை என்று முதலில் நான் கேரதீவில் நின்று சங்குப் பிட்டி கடந்தேன். தீவின் கரையில் நான் ஏழெட்டு மணித்தியாலம் காத்திருந்து வள்ளத்தில் தாவியிருக்கிறேன். வள்ளக் காரன் எங்களை வள்ளத்தில் தள்ளி வலித்துக் கடப்பது நூறு யார் தான் இருக்கும். அதற்காக நான் இரண்டு பொழுதுகளை வீணாக்கி இருக்கிறேன்.

அப்படித்தான் கொம்படிப் பயணமும். யார் என்ன சொன்னாலும் நான் சொல்வேன், அது கடினமானது தானென்று. பகலில் அதற்குள்ளால் சைக்கிள் உழக்க ஏலாது. ஆனையிறவுக்கு வருகிற ஹெலி , ஒரு ரவுண்ட் கொம்படியைச் சுற்றும்.

ஒருமுறை வெளியில் இறக்கி சிலரைப் பிடித்துக் கொண்டு போனதென்று விந்தன் சொன்னான். இரவில் கொம்படிப் பாதை வெளியில் பறக்கலாம். ஒரு மழை தூறினால் ஆச்சு! சைக்கிளில் சேறு அப்பி செருகுடபய பட்டு நிற்கும். பிறகு வள்ளம் வலிக்க வேண்டிய காலமாக மழைக்காலம் ஆகிவிடும். வெள்ளம் வற்றிப் போகிற காலங்களில் ரஷ்யாவிலிருந்து நூதனப் பறவைகள் வந்து இரை தேடித்திரியும். அப்போது ஊரின் பாதையும் புதிதாக முளைக்கும். பிறகு காத்து நிற்பது கேரதீவாகய இருந்தாலென்ன, கொம்படியாக இருந்தாலென்ன?

எல்லாம் பிறகு இல்லாமல் போய் விட்டது. சங்குப் பிட்டியை இராணுவம் எட்டிப் பிடித்தது. ஓடிப் பிடித்த பகுதி கொம்படியாக இருந்தது. தஞ்சமாக இருந் தது பிறகு கிளாலிதான்.

ஆனால் இரத்தம் இரத்தமாகக் குடிக்கத்தொடங்கியது. பிறகு கிளாலியின் உப்புக் கடல்.

பன்றிக்கெய்த குளத்திலும், தாண்டிக்குளத்திலும் பொம்மர் துரத்தியது ஒரு முறை. என் உயிர் ஓமந்தை தாண்டி, புளியங்குளம் வந்த ஒரு மணித்தியாலத்தின் பின்னரே நான் ஓடிவந்தேன். பற்றைக்குள் சையக் கிறைளப் புரட், மூத்திரம் பெய்தேன். கடலெனப் பாய்ந்தது அது.

அன்றுதான் அன்றேதான்! பிறகு யார்தான் போனார்கள் தாண்டிக்குளம்?

அப்படித்தான் காலம் போனது. ஓடுகிற காலத்தை யார்தான் எட்டிப் பிடித்தார்? ஆனால் ஓடுகிறகாலத்துடன் ஓடி, ஓடி, பிறகு வந்தாயிற்று நான்.

இருண்டுகொண்டு வருகிறது பொழுது. புகார்களுக்குள்ளால் மஞ்சளும், வெள்ளையுமாக லைற்றுகள் மின்னுகின்றன.

குத்திக் குத்தி நாரியில் வலிக்கிறது. குளிர் தொடங்கினால் வலி கூடும். என் தேசத்தில், என் வீட்டில் நான் இருந்திருக்க வேண்டும். அப்படிச் சொல்லத்தான் முடியுமா? இருந்து எதைக் கண்டிருப்பேன்? மர ணத்தையா? அகதியாகி அல்லல்படுவதையா? அனாதைகளாக நிற்கிற என் பிள்ளை களையா?

இருண்டே விட்டது. நட்சத்திரம் என் கண்களுக்குத் தெரியவில்லை. பகலில் கூட சூரியனை நான் பார்க்கவில்லை.

சூரியனை அப்போது நான் கோபித்தேன். என்னைச் சுட்டெரிக்காதே என்றேன். அப்போதே ஒற்றைக்கண்ணைச் சிமிட்டி என்னைப் பயமுறுத்துகிற நட்சத்திரத்தை நான் வெறுத்தேன். இருட்டு வழிக்குத் துணைவராத நட்சத்திரம் என் வெறுப்புக்கு உட்பட்டது. விரும்பிபேன். நான் அப்போது சந்திரன் மேல் காதல் கொண்டேன். என் பாதையில் நல்ல துணைவன் அவன். வானத்தில் அவன் உலாப்வோந்த காலங்களில், நான் ஒருபோதும் தட்டுத் தடுமாறி வீழ்ந்ததில்லை. இன்னும் சொல்லப்போனால் அவன் எப்போது வானில் உலாவருவான் என்று நேரங்குறித்து என் உழைப்புக்கு நான் புறப்படுவேன். மேலாக என் குழந்தைகளின் இன்னொரு அப்பன் அவன்! நான் இல்லாத இராக்களில் அவன் குழந்தை களை அரவணைத்தான். வானம் எங்கும் நட்சத்திரங்கள் பரந்து, மிக்க இருண்டு, என் குழந்தைகளை அரவணைக்க அவன் வர அஞ்சிய இரவுகளில் நான் என் மனை வியுடன் அங்கிருந்தேன். வண்ணம் கொண்ட சந்திரனை, அதன் கள்ளு மயக்கம் தரும் ஒளிக்காக என் மனைவி விரும்பினாள். மிக விரும்பினாள்.

இப்போது நான் அதிகம் உணர்கிறேன். அப்போது சூரியனை நான் கோபித்திருக்கக் கூடாது. இப்போது யோசிக்கிறபோது நான் கவலையில் ஆழ்கிறேன். என்னைச் சுட்டெரித்தாலும், கொன்று போட்டாலும், ஆயிரம் கரங்கள் நீட் என்னை வாழவைக்கிற அப்பன் அல்லவா அவன்? ஆனால் வண்ணாத்திப் பாலத்தில் நான் சைக்கிள் உழக்கியபோது எந்த இரக்கமு மில்லாமல் சுட்டெரித்தானே அவன்? நாவற்குழி வெளி யில் நான் முகத்தை நிமிர்த்தி அவனைத் திட்டினேன். நன்றாகத் திட்டினேன். எனது தோல் எரிந்தது. கறுத்துக் கறுத்து நான் மெலிந்தேன்.வற்றிப்போனேனே நான்! யாரால் அதுவெல்லாம் நடந்தது?


அனாதையாக நிற்கிற நட்சத்திரத்தையும் நான் வெறுத்திருக்கக் கூடாது தான். என்ன பாவம் செய்தது அது? ஒற்றைக் கண்ணால் ஓரளவுக்கு அது உதவத்தானே முயன்றது? இயலாமல் போனதற்கு நட்சத்திரம் என்ன செய்ய முடியும்?



படிப்பகம்

www.padippakam.com





ஓவியம்: போஸ்



படிப்பகம்

www.padippakam.com



சூரியனை நான் தொலைத்தேன். இப்போது நான் சூரியனை இழந்தேன். நட்சத்திரத்தை இழந்தேன். சந்தி ரனையும் இழந்தேன். இன்னும் சொல்லப் போனால் வாடையை இழந்தேன். சோளத்தை இழந்தேன். வரும் வாழ்க்கையைய, அது தந்த வசந்தத்தை இழந்தேன் நான்.

வலிக்கின்றது. குத்திக் குத்தி வலிக்கிறது. தெண்டி இருக்கிறேன் நான்.

இந்த இராப் பொழுதில் நான் நகரத்தை வெறித்துப் பார்க்கிறேன். புகார்களுக்குள்ளால் தூரத்தில் நகரத் தின் ஒளிப்பொட்டுகள் மின்னுகின்றன. என் இருப் பைக் குலைத்தபடி, என் தலைக்கு மேலாக விமானங்கள் அடிக்கடி பறக்கின்றன. புகார்களுக்குள்ளால் அந்த அலுமினியப் பறவையின் சிவப்பு வண்ணம் மின்னி மின்னி மறைகிறது. அருகிலேயே ட்ராம் வண்டிக ளின் சடசடப்புக் கேட்கிறது. வளி அடர்த்தி நிறைந் ததாகக் காணப்படுவதால் ட்ராம் வண்டிகளின் சடச டப் பொலிகள் வெகு அருகாமையில் கேட்கிறது.

நான் நகரத்தின் ஒரு புறத்தே இருக்கிறேன். சூழ ஐந் தாறு புகை போக்கிகள் என் கண் முன்னே தெரி கின்றன. புகார்களை மிஞ்சுகிற புகைகளை அவை கக்கு கின்றன. ஒரு புகைபோக்கியிலிருந்து நெருப்பு எழு கின்றது. அதன் அயலில் மேகம் செம்மஞ்சள் படிந்து கிடக்கிறது. இரண்டாவது சூரியன்!

என் முன் கட்டிடத்தின் பெருஞ்சுவரில் இரண்டாம் உலகயுத்தத்தின் காயங்கள் தெரிகின்றன. காயங்களின் பின்னுள்ள காலங்களை நான் யோசிக்கிறேன். எவ்வ ளவு உயிர்கள் சிதைந்தன! எவ்வளவு ஆத்மாக்கள் இம் சைப்பட்டன! இரவோடிரவாக மூட்டை கட்டி ஒடிய குடும்பங்கள் எத்தனை? குழந்தையின் குருதியைக் குடித் திருக்கலாம் ஒரு குண்டு. கண்தெரியாக் கும்மிருட்டில், லாம்பு கொண்டு தன் கண்மணியைத் தேடித் திரிந் திருப்பாள் ஒரு கிழவி. கை விளக்கை நூர்க்கிற காற்றில் வாசலைப் பார்த்திருப்பாள் ஒரு அன்னை. வானைப் பார்த்து நிலைத்த விழிகளில், இலையான் ஒன்று இரத்தம் நக்கியிருக்கலாம்...

இரண்டாம் யுத்தத்தின் வடுக்களை ஜேர்மனில் நான் அவ்வப்போது கண்டேன். ஜேர்மனியின் வரலாறு துயர் நிறைந்தது என்று என் ஆசிரியை, கண் கலங்கி ஒரு முறை எனக்குக் கூறினார்.

என் தாய்த் தேசத்தின் துயர் நிறை வரலாறை என் மைந்தனா, அல்லது என் மைந்தனின் மகனா, மகளா கண் கலங்க ஒரு முறை கூறுவார்கள்....

சற்று முன் கடற்பரப்பில் வெள்ளைப் பறவைகள் தாழப் பறந்தன. குஞ்சு மீன்களை அவை கவ்வின. தாராக்கள் காம்பைச் சுற்றி மிதந்து கொண்டிருந்தன. மிஞ்சிய பாணை நாங்கள் தாராக்களுக்கு எறிந்தோம். கடல் தளம்பி தளம்பி மின்னியது.

மிக இருண்டே போய் விட்டது. நான் நினைக்கத் தொடங்கினேன். இன்னும் எனக்கு வேலை ஆக வில்லை.

ஒவ்வொருநாளும் காலையிலிருந்தே நான் வேலை க்கு அலைகிறேன்.

ரெஸ்ரோறண்டுகள் இந்த நகரில் குவிந்து கிடந்தன. கோப்பை கழுவுகிற வேலையாவது அங்கு கிடைக் கலாம். முதலாளியிடம் ஏச்சு வாங்காமல் சுத்தமாகக் கோப்பை கழுவ வேண்டும். ஆனால் சொன்னார்கள்; விரைந்து வருகிற கோப்பைகளை அதிலும் விரைவாக, மிகச் சுத்தமாக கழுவி, துடைத்து, அடுக்குவது லேசான வேலையல்ல. கோப்பை கழுவுகிற மிஷின் தங்களையும் விழுங்கக் காத்திருக்கும். அதையும், துக்கத்துடன் சொன் னார்கள். நான் ஒரு புன்னகையால் அதை மறுக்க முயன்றேன். வவுனியாவிலிருந்து சரியச் சரிய மண் ணெண்ணெயும், வெஜிரயிள் ஒயிலும், வேறும் நிறை ந்த சாமான்களும் கட்டி ஓடிய எனக்கு கோப்பை கழுவு வது ஒரு வேலையா?

ஆனால் அவர்கள் மேலும் அழுத்தினார்கள். ஒரு கோப்பையில் ஒருவர் முழுவதும் சாப்பிடுவதில்ல .கொறித்துப் பார்த்து விட்டு விடுவார். மற்றும் ஒருவர் சாப்பிட ஐந்து கோப்பைகளாவது செலவழிப்பார். கோப்பையிலுள்ள உணவைக் கழிவுக் கூடைக்யகுள் கொட்டுவதற்கே நேரம் போதாது என்றார்கள். அத்து டன் அவர்கள் விடவில்லை. என் முன் மண்டை வழுக் கையாகிறது. வயதைக் கூட்டிக் காட்டும். கிழவனால் விரைவாகக் கோப்பை கழுவமுயாது. அது இங்குள் ளவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே தொப் பியைப் போட்டுக்கொண்டு போ என்றார்கள். வளர் ந்த தாடியை ஒரு நாள் காலையில் நான் இரக்கமில் லாமல் வெட்டினேன். மீசையைச் சரிக்கட்டினேன். பிறகு கொஞ்ச இளமை இன்னும் இருந்தது. ஊரில் பஞ்ச த்தில் அடிபட்ட முகம் இன்னும் மாறவில்லை.

எனவே வேலை இல்லை என்றார்கள். அதாவது பாசை தெரியாததால் வேலை தர முடியாது என்று சொன்னார்கள். எனக்கு வேலை ஆகவில்லை.

வேலை தேடி நடந்து நகரத்து வீதிகளை நான் தேய்த் தேன். ரெஸ்ரோறண்டின் வாசலில் அழுக்குகளைச் சேர்த்தேன்.

என் கடன்களை நான் அடைக்க வேண்டும். அதி லும் மேலாக சாப்பிடத்திண்டாடுகிற என் குழந்தை களுக்கு, நான் சாப்பாடு ஊட்டியாக வேண்டும்.

அப்போது நான் துயரடைந்தேன். என் குழந்தை கைக் குழந்தையாகி இருந்த காலத்தில் நான் ஏதோ ஒரு விதத்தில் பால்மா வாங்கினேன். நான் என் நாட்டின் அரசுக்கு அப்போது சவால் விட்டேன்.என்னை உன் னால் அழிக்க முடியாது. என் குழந்தைகளை உன்னால் வதைக்க முடியாது. நான் வாழ்வேன். நீ கொன்று போடு. நூறு நூறாயிரம் தலைகளுடன்ள நான் எழு வேன்.

அப்போது எனக்கு ஓர்மம் இருந்தது. என்னூரில் என் வேர்களை நான் இறுக வைத்திருந்தேன். பூவரசும், கிளுவையும், முள் முருங்கையும் படர்ந்திருக்கிற என் ஒழுங்கையில் நான் உலாவினேன். என் தோட்டத்தில் நான் என் பொழுதைக் கழித்தேன். அப்போது நான் மகிழ்ச்சியாக இருந்தேன். என் வாழ்வில் சங்கடங்கள் அப்போது எனக்கு நேரவில்லை.

இப்போது நான் பிடுங்கி எறியப்பட்டு விட்டேன். வேருடனும், வேரடி மண்ணுடனும் நான் அப்புறப் படுத்தப்பட்டுவிட்டேன். இப்போது எஞ்சியிருப்பது துயர் சூழ்ந்த வாழ்வுதான். ஆயினும் வாழ நான் அஞ்ச வில்லை.

அப்படியே இருண்டு கொண்டு போய்விட்டது. நாரி இப்போது அதிகம் குத்திக் குத்தி வலிக்கிறது. இன்று அதிகம் வலிப்பதற்கு என்ன காரணம்?


நான் நேற்றும் இன்று காலையிலும் குளிருக்குள் மினைக்கெட்டு இருந்தேன். ஆயிரம் வீட்டிற்கு இத்தாலி ரெஸ்ரோறண்டின் விளம்பரத்துண்டை ஏறி ஏறி வீசினேன். பல வீடுகளில் "துண்டை இப்பெட்டியில் போடாதே!" என்றிருந்தது. எனவே மேலதிகமாக ஐந் நூறு வீடாவது ஏறி இறங்கியிருப்பேன். **35** மார்க் தந்



படிப்பகம்

www.padippakam.com





தார்கள். கடிதம் போட அது இப்போதைக்குப் போதும். ஆனால் நாரிதன் வெறுப்பைக் காட்டி விட்டது.

என் முதுகந்தண்டு நன்றாகத்தான் இளகி விட்டது. நேராக, நிமிர்ந்து நான் உட்கார வேண்டும். நாரிப் பாகத்தைத் தெண்டி நான் இருக்க வேண்டும். முகம் குப்புறப்படுத்துக் கழுத்திற்குள் தலையணையை வைக்க வேண்டும். அப்படித்தான் டொக்ரர் சொன்னார். நான் முகம் குப்புறப்படுத்தாக வேண்டும்.

நான் உலகிற்கு என் வணக்கத்தைத் தெரிவித்து விட்டுப் படுத்தேன்.

அப்படி முகம் குப்புற நான் படுத்திருக்கக் கூடாது. நான் பிழை விட்டேன். அவ்வாறு நான் படுத்திருக்கக் கூடாது தான்.

என் மனைவி என்னுடன் இல்லை எனும் உண்மை அப்போது மிகவும் உறைத்தது. என் ஆசையைப் பகிர, அன்பைச் சொரிய என் துணை அப்போது என்னுடன் இல்லை. அரவணைக்கப்பட நான் விரும்பினேன். முயங்க விரும்பினேன். மயங்க விரும்பினேன் நான்.

என் மனைவி மீது நான் மையல் கொண்டிருந்தேன். இதைப் புரிய வைக்க எனக்கு வார்த்தை கிட்டவில்லை.

தலையணையுடன் தாம்பத்தியம் நடாத்துகிற காலம் ஆகிவிட்டது.

என் மனைவி அங்கு எப்படி இருப்பாள்? தூங்கா இரவுகள் அவளுடையவை என்பது எனக்குத் தெரியும். என் மக்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பாள். கதை சொல்லுவாள் படுக்க வைப்பாள். இந்த மாநிலத்தில் பெரியண அவர்களை வளர்ப்பாள். அதுவும் எனக்குத் தெரியும். அவளுடைய தூங்கா இரவுகள் தொடர்ந்த கதை...

எங்களை மீறி ஒரு 'உயிர்' உருவானது. ஒரு மாதத்தின் பிறகு அதை நாங்கள் அறிந்தோம். கடவுளே. அதை நினைத்தால் நான் இப்போது அழுவேன். என் தேசத்தில் தன் வயிற்றில் அதனை வளர்க்க என் மனைவி அஞ்சினாள். பொம்மர் அடியும், ஹெலிச் சூடும், ஷெல் பாய்ச்சலும் அகதியாகி ஓடுவதும் அல்லல் பட்டுத் திரிவதும் என்று வயிற்றில்உயிர் சிதைந்து விடுமோ என்றே பெரிதும் அஞ்சினாள். அந்தக் குழந்தை பூரணமாகாதோ என்று அழுதாள். பிள்ளையார் கோயிலில் ஷெல் பாய்ந்து தேர் முட்டி சிதறி அச்சம் தந்த இரவொன்றில் அவள் உறுதியாக முடிவெடுத்தாள். மூத்தவனை முன்னால் ஏற்றினேன். சின்னவனை மடியில் வைத்து கரியரில் குந்தினாள் பத்து மைல் தாண்டிப்போனோம்.

500 ரூபா கொடுத்து, இரண்டு மணித்தியாலம் உள்ளே இருந்தாள். என் இரு குழந்தைகளுடனும் வெளியில் நான் காத்திருந்தேன். சின்னவனை மடியில் இருத்தி நெஞ்சைத் தடவினேன். பெரியவனின் முதுகை நான் ஆறுதலாகத் தடவினேன். அவர்களுக்கு வர இருந்த தம்பியை அல்லது தங்கையை உள்ளே கொன்று போடுகிறார்கள். அவர்களுக்கு அது தெரியாது. இன்னும் இன்னுமென நான் என் குழந்தைகளைத் தடவிக் கொடுத்துத் தீர்க்கக் கூடிய துயரா அது? தங்கச்சிப் பாப்பா வேணும் என்று சின்னவன் முன்னர் சொல்லியிருந்தான். அம்மா மாதிரி ஒரு பெட்டைக் குட்டி வேணும் என மூதவனும் சொன்னான்...

வந்தாள் முகம் சோர்ந்து, வேர்த்து, கறுத்து, துவண்ட உடலுடன், கண் கலங்கி நடக்க முடியாமல் அரக்கி, அரக்கி வந்தாள்...

"அம்மா.." என்று சின்னவன் ஓடினான். இழுத்துப் பிடிததேன். பெரியவன் என் முகத்தை, அம்மா முகத்தை ஆராய்ந்து பார்த்தான்.

அவள் கண் கலங்கியது. நான் கொடுமை செய்து விட்டேன். எனக்கு அது நன்றாகப் புரிந்தது. அவள் பக்கத்தில் வந்து இருந்து என் கையைப் பிடித்து அழுதாள். எனக்குத் தெரியும் - வலித்தது. அவளுக்கு மாத்திரம் இல்லை. தனக்கு வலித்ததற்காகவும் அவள் அழவில்லை. எனக்கு நன்றாகத் தெரியும். அந்த வலி எதற்கு என்று எனக்கு நன்றாக தெரியும். நான் பிறகு அதைப் பற்றி ஒன்றும் பேசவில்லை.

நான் அரக்கன்! நான் அசுரன்! சைக்கிளின் பின் கரியரில் சின்னவனை வைத்துக் கொண்டு எப்படி அவள் இருந்தாளோ? பத்து மைலும் எப்படி அவள் பயணம் செய்தாளோ?

ஒரு சொல் பேசவில்லை அவள். ஒரு வார்த்தை மூச்சு விடவில்லை. என்னைக் கொன்று போட்டது அது.

"என்னடா பேசாமல் வாறாய்? நோகுதா?..." கரியரில் இருந்து என் முதுகில் தலை வைத்தாள் அவள்.

விம்மினாள். வெம்பினாள். வெடித்துச் சிதறினாள். உடல் குலுங்கியது. மெதுவாக, மென்மையாகச் சைக்கிளை ஓட்டினேன்.

நானென்ன செய்தேன்? வண்ணாத்திப்பாலம் தாண்டி வந்த ஆலமர நிழலில் சைக்கிளை ஒதுக்கினேன். ஆலமரத்தின் வேர்க்குற்றியில் என்னில் சாய்ந்து இருந்தாள். கண் மூடிச் சரிந்தாள். என் பையன்கள் ஆலம்பழம் பொறுக்கினார்கள். அவள் தலையைத் தடவி, கன்னத்தை வருடி, அவள் கைகளுள் கை கோர்த்தேன் நான். நான் குலுங்கி அழச்செய்தேன். கோடையோ கொளுத்தியது. அவ்வாண்டு மிக நீண்ட கோடை!

நான் படுக்கையில் புரண்டேன். இனி நித்திரை வராது. அது பெண் குழந்தையா? ஆண் குழந்தையா?

இந்தச் சாமப் பொழுதிலும் நான் சஞ்சல முற்றுக் காணப்படுகிறேன். நாரியில் குத்திக் குத்தி உச்சத்திற்கு அது வலிக்கிறது. மண்டையிலிருந்து மயிர்கள் கொட்டுண்ணுகின்றன.

எனக்கோ பெரும் வலி!. ❑



படிப்பகம்

www.padippakam.com



# கருவினுள் உயிராய்

சு. வில்வரெத்தினம்

அகால வேளையில்
திடீர் விழித்து அழுகிறது
என்னுள் துயில்கின்ற குழந்தமை.
எங்கேனும் பிரயாணிக்கையில்
ஓயாமல் அழுகிற குழந்தை போல்
பெயர்வுற்று அலைகின்ற இடமெல்லாம்
பிறந்தகத்தைச் சுட்டி
அழத் தொடங்கி விடுகிறது.

இன்றிரவேனும்
அமைதியாய் துயில்வோமென
பாயை விரித்துப் படுக்கின்றேன்
ராணுவ முகாமின்
பாய்ச்சொளி படுகிற
வேம்பின் உச்சியைப் பிடித்து
உலுப்புலுப்பெண்டுலுப்பிய காற்று
என்னுள் தொட்டிலாடிய குழந்தமையை
கிள்ளிவிட
வீரிட்டு அழத் தொடங்கி விட்டது

குழந்தை போலழுதது
போகப் போக
வேப்பிலை அடிக்கு
உச்சிக் குடுமி கலைய
அனுமார் உருவெழும்பி ஆடுவதாய்
மூசி மூசி
மண்ணின் மணம் முகர அலைவதென

என் செய்வேன்?

மெதுவாகக் கேட்டேன்
சாமிக்கு என்ன வேணும்?
சாமி சொல்கிறது
“வேண்டுமாம் தனது
வீடும் வெளியும்.”

என்ன செய்யட்டும்?
நீங்கள் சொல்லுங்கள்
நூற்றியோராவது தடவையும்
திணித்த றப்பர் சூப்பியை
வீசிவிட்டு
தாய்முலைக்கழுகின்ற குழந்தைமையை
ஆற்றிட என்ன செய்யலாம்?
மறுபடியும் சூப்பியை
திணிக்கலாம் என்பீரா?
இயலாது
ஆயினும்
பிடுங்கிக் கொணர்ந்த பிள்ளைமை
கலங்கித் தவித்தழுகிறதே



என்ன செய்யலாம்?
சற்று அதட்டிப் பார்க்கலாமா?

அட பேதை மடப்பிள்ளாய்
உன் பிறந்தகம் சிறையுண்டிருக்கிறது
தெரியுமா?
எல்லை வேலிக்கட்டைகள் ஒவ்வொன்றும்
தொப்பியணிந்து துப்பாக்கியேந்தியபடிக்கு
ராணுவவேலிகளாய் மாறியது அறிவையா?
காவல் வேலிகள் நகம் நீண்டு
பால் கட்டும் குடலைப் பருவத்தை
உருவியுண்ண
நியாயம் கேட்டவர்
செம்மணிச் சுடலையில் புதையுண்டமை
தெரிவாயா?

மழலைமொழி மட்டுமே தெரிந்த உனக்கு
நிணமும் குருதியும் நிறைந்த
வன்முறை ஆட்சி மொழியை
எங்ஙனம் விரித்துரைப்பேன்.

இது கேட்டதும்
எழுந்தாடிய
தலையைத் தாழப் போடுமென்றிருந்தேன்
“விழித்தழல்” “நாகமாயிற்றே” பார்க்கலாம்.

“பொண்டினாலும் என் மண்ணில்தான்
பொண்டுவேன்
பிறந்த போதளைந்த காற்று
இறந்து போகையிலும்
எனைத் தீண்டட்டும்” என்றது.

இதற்கு என்ன பதிலிறுத்தல் கூடும்?
இதன் அடம்பிடித்தலுக்குப் பிடித்தமாகவும்.

சரிதான்!
உனது காற்று வெளியில்
சூறை கருவுற்றுச் சுழல்வுற்று வீசி
முற்றுகை வேலிகளைப் பிடுங்கி எறிகின்ற
நாள் வரையிலேனும்
காத்திருக்கலாகாதா? என்றேனா?
கணநேரம்
காற்றொடுங்குவது போல
அதன் கதறல் சற்றொடுங்கிற்று
கால்களை மட்டும் உள்ளுதைத்தபடி

கருவினுள் உயிராய்
தான் கலந்ததுவோ!

□




படிப்பகம்

www.padippakam.com



பார்த்திபன்

# இடையுக்கும் தொழிலுக்கும் வ.எச!



1997 சனவரி, வெள்ளிக்கிழமை, மொறட்டுவ...

செனவிரத்ன வந்த போது வழக்கமான காலை நேரத் தூங்கலில் பொலிஸ் நிலையம் இருந்தது. இரண்டொரு பொலிஸ்காரர்கள் தமதிடங்களிலிருந்து "திவயின", "வக்பிம" படித்துக் கொண்டிருந்தார்கள். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இலங்கை மக்களின் உடம்புக்குத் தரமான சவர்க்காரத்தை சிபாரிசு செய்துகொண்டிருந்தது. தடுப்புக் காவலிலிருந்த ஒரே ஒரு கைதி இன்னும் படுத்தேயிருந்தான். எழும்புவதால் எதுவும் ஆகப்போவதில்லை என அவனுக்கு நன்கு தெரிந்தேயிருக்கும்.

தனது மேசைக்கு வந்ததும் செனவிரத்ன மேலோட்டமாகப் பத்திரிகைகளைப் பார்த்தார். யுத்தம் குறித்த தலைப்புச் செய்திகள். மேசையிலிருந்த கோப்புகளைப் பார்த்தார். இன்னும் மூடப்படாத நிறையப் பழைய சம்பவங்கள். எப்போதாவது நேரம் இருந்தால், மூட் இருந்தால் மூடிக்கொள்ளலாம்!

மேசைக்குக் கோப்பியும், பனிசும் வந்தன. கடித்தார். குடித்தார்.

தொலைபேசி அழைத்தது. எடுத்தார். மறுமுனையில் விக்கிரமசிங்க.

"எப்போது தருவதாக உத்தேசம்?"

"உன்னை இங்கு தொலை பேசியில் தொடர்புகொள்ள வேண்டாமென்று பல



படிப்பகம்

www.padippakam.com



தடவைகள் கூறியிருக்கிறேன்."

"நீ வீட்டிலிருந்து கொண்டே இல்லையென்று கூறச்சொல்லி மனைவி, பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறாய்."

"நான் இப்போது வேலையிலிருக்கின்றேன்."

"அது உன்னுடைய பிரச்சினை. எனக்கு என்னுடைய பணம் வேண்டும்."

"தரலாம் என்று சொல்லியிருக்கின்றேன்."

"மாதக் கணக்காக."

"எப்படியும் தந்துவிடுவேன்."

"அது உனது நம்பிக்கையாக இருக்கலாம். எனக்குப் பொறுமை போய்விட்டது. இனியும் இப்படி தொலைபேசியில் மட்டும் கதைத்துக் கொண்டிருக்கமாட்டேன். வீட்டுக்கும், பொலிஸ் நிலையத்திற்கும் ஆட்களுடன் வருவேன்." விக்கிரமசிங்க வைத்து விட்டான்.

செனவிரத்னவுக்கு மிச்சமாயிருந்த தூக்கமும் போய்விட்டது. கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டே பார்த்தார். பத்திரிகைக்கு மேலால் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்த தலைகள் மறுபடி குனிந்தன.

பணம் வேண்டும். மிக விரைவாக. விக்கிரமசிங்க பொல்லாதவன். பொலிஸ் பதவியை மட்டும் வைத்துக்கொண்டு அவனை ஒன்றும் செய்துவிட முடியாது. அரசியல் பலம் வைத்திருக்கிறான். சொன்னமாதிரியே வந்துவிடுவான்.

பணம்!

பணம்!!

இளைய மகனுக்கு "ஹொண்டா" வாங்கிக் கொடுக்க என்ன செய்தேன்?

அதுதான்.

அதையேதான் இப்போதும் செய்யலாம்.

பணம் கிடைப்பதற்கான இலகுவான, உத்தியோகபூர்வமான, சட்டரீதியான, அரச அங்கீகாரம் பெற்ற வழி அது ஒன்றேதான்.

"ராஜபக்ஷ"

வந்தான்.

"பக்கத்தில் எங்காவது தமிழர்கள் புதிதாக வந்திருக்கிறார்களா?"

"வெளிநாடு போவதற்காக ஒருவன் வந்து விடுதியில் தங்கியிருக்கிறான். வடக்கிலிருந்துதான் வந்திருக்கிறான். இரண்டு நாளாகிறது."

"ஜீப்பை எடு."

விடுதிக்கு ஜீப் விரைந்தது.

கதவைத் தட்டினார்கள்.

திறந்தவன் இவர்களைக் கண்டு மிரண்டான். கையில் மனைவி, பிள்ளைகளுடன் எடுத்த குடும்பப் படம்.

"உன்னைக் கைது செய்கின்றோம்."

அவன் எதுவும் புரியாமல் தமிழில் அழ, அவர்கள் சிங்களத்தில் ஏசியபடி, கைகளில் விலங்கு பூட்டி, இழுத்துக் கொண்டுபோய் ஜீப்பில் ஏற்றினார்கள். விடுதியில் இருந்தோர்க்கு இப்படி தொடர்ந்து பார்த்துப் பழகிப் போய்விட்டதால் தங்கள் அலுவல்களைக் கவனித்தார்கள்.

பொலிஸ் நிலையம் வந்ததும் தடுப்புக் காவலில் அவனைத் தள்ளிப் பூட்டினார்கள்.

வியர்த்துப் போயிருந்த அவன் பேந்தப் பேந்த முழித்தான். பயங்கரம் புரிந்தது போலும். அழுதான்.

யாரும் அலட்டிக் கொள்ளவில்லை. பக்கத்து அறைக் கைதி வந்து புதினம் பார்த்தான்.

மதிய உணவு முடிந்த பின்னர் தனது மேசையிலிருந்தபடியே விசாரணையை ஆரம்பித்தார் செனவிரத்ன. ராஜபக்ஷ எழுதினான்.

அவனுக்குச் சிங்களம் தெரிந்திருக்கவில்லை.

பின்னர் ஆங்கிலம். அதுவும் அவனுக்குத் தெரியிவ்லை.

கடைசியாக ராஜபக்ஷ தனது கொச்சைத் தமிழில் மொழியைப் பெயர்த்தான்.

"நீ தமிழ்தானே?"

"ஓம்"

"கொழும்பில் குண்டு வைக்கத்தானே உன்னை இங்கு அனுப்பியிருக்கிறார்கள்?"

"ஐயோ... நான் ஒரு பிரச்சினைக்கும் போகதவனையா..." அழுதான்.

"எங்கே குண்டு வைக்கத் திட்டம்?"

"நான் ஜேர்மனி போறதுக்காண்டி வந்திருக்கிறன். அடையாள அட்டையெல்லாம் இருக்கு."

"உன்னுடைய அறையில் ஆயுதங்கள் எடுத்திருக்கின்றோம்."

அவன் பயந்துபோய் சத்தமாக அழுதான்.

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் உன்னைக் கைது செய்திருக்கின்றோம். தகுந்த ஆதாரங்கள் கைவசம் இருக்கின்றன. தப்ப முடியாது"

விசாரணை அத்துடன் முடிந்தது.

அவன் தொடர்ந்து அழுதுகொண்டேயிருந்தான். கதவுக் கம்பிகளைப் பிடித்துக் கெஞ்சினான்.

மாலை பொலிஸ்காரர்கள் குறைந்தார்கள்.போகாதிருந்தவர்களுக்கு செனவிரத்ன வேலை கொடுத்து அனுப்பினார் ராஜபக்ஷ மட்டும் மிச்சம்.

இருவரும் அவனிடம் வந்தார்கள். செனவிரத்ன ஆரம்பித்தார்.

"நன்றாகக் கேள். இன்று வெள்ளிக்கிழமை. தற்செயலாக எந்த சட்டத்தரணியாவது வந்தாலும் திங்கட்கிழமைதான் உன்னை நீதிமன்றத்தில் நிறுத்த முடியும். இடையில் இரண்டு நாட்கள் இங்குதான் இருக்கப் போகிறாய். இந்த இரண்டு நாட்களிலும் எதுவும் நடக்கலாம். நீ தப்பியோடும்போது சுடப்படலாம். அல்லது அதோ பார் உன்னையே கோபமாகப் பார்த்து கொண்டிருக்கும் சக கைதி உன்னை அடித்தே கொல்லலாம். இல்லையென்றால் தலையில்லாமல் மொறட்டுவ கடற்கரையில் கண்டெடுக்கப்படலாம். இரண்டு நாட்கள் என்பது அதிகம். எதுவும் நடக்கலாம்."

அவன் இப்போது பெரிய சத்தமாக அழுதான். நிலத்தில் போட்டு தலையை அடித்தான். கம்பிகளுக்குள்ளால் கைகளை நீட்டி அவர்களது சப்பாத்துகளைக் கும்பிட்டான்.

"நான் இன்னும் முடிக்கவில்லை. உனக்கு ஒரு சந்தர்ப்பம் தரப்படுகிறது. வெளிநாட்டிலிருக்கின்ற உனது உறவினர்களிடமிருந்து நான் கேட்கின்ற தொகையைப் பெற்றுத் தா. பத்திரமாக வெளியில் போகலாம். இப்படிப் பல தமிழருக்கு நான் உதவி செய்து அவர்கள் இப்போது வெளிநாடுகளில் மகிழ்வாக இருக்கிறார்கள்."

அவன் தொடர்ந்து அழுதான். கண்ணீர் வற்றக் கூடியதாக அழுதான். குரல் கமறியது. உடம்பு நடுங்கிக் கொண்டிந்தது. எல்லாம் போய் கடைசி நம்பிக்கையாக அவனை வெளிநாடு அனுப்பத் துணிந்த மனைவி, எப்போதுமே பயத்தை கண்களில் வைத்திருக்கும் பிள்ளைகள், உதவியை எதிர்பார்த்திருக்கும் பெரிய சுற்றம், வட்டிக்கு வாங்கி அனுப்பிய ஜேர்மனி மைத்துனன்... எல்லாவற்றிற்குமாய் அழுதான்.

"இப்படி நிறையப் பார்த்திருக்கின்றேன். உனக்கு அரை மணித்தியாலம் தரப்படுகிறது. புத்திசாலித்தனமாக முடிவு எடுத்தால் அதோ மேசையிலிருக்கும் தொலைபேசியில் உனது உறவினருடன் தொடர்பு கொள்ளலாம்."

செனவிரத்ன திரும்ப மேசைக்கு வந்து பத்திரிகை பார்த்தார். கோப்பி குடித்தார்.

தனக்கு எவ்வளவு கிடைக்குமென்று ராஜபக்ஷ கணக்குப் பார்க்க ஆரம்பித்துவிட்டான்.

அவன் அழுதபடியே சிறைச் சுவர்களைப் பார்த்தான். எங்கும் இரத்தம்.

அரை மணித்தியாலத்தின் பின் -

ஜேர்மனியில், உணவு விடுதியொன்றுக்கு கோப்பை கழுவுவதற்காகப் புறப்பட்டுக்கொண்டிருந்தவன் அறையில் தொலைபேசி ஒலித்தது.

பின்னர் அதே நகரத்திலிருந்த வட்டிக்காரன் வீட்டில் ஒலித்தது.

கொஞ்ச நேரம் கழித்து உண்டியல் காரர் ஜேர்மனியிலிருந்து கொழும்புக்குத் தொலைபேசியில் கதைத்தார்.

கொழும்பிலிருந்து ரக்சி ஒன்று மொறட்டுவ பொலிஸ் நிலையத்திற்கு வந்தது.

செனவிரத்ன விக்கிரமசிங்கவுடன்



படிப்பகம்

www.padippakam.com



தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

1997 பெப்ரவரி, புதன்கிழமை, பிராங் பேர்ட்...

உக்ரெய்ன்காரன் போய்விட்டான். சிங்கம் சிகரெட் புகைத்தவாறு யோசித்தான்.

விலை பறவாயில்லை. முன்னூறு, நானூறு பேரையாவது அடக்கலாம். அவ்வளவும் வெளிக்கிட்டா லாவோஸிலை இடம் வெளிக்கும். பிறகு கொழும்பிலையிருந்து மிச்சச் சனத்தைக் கொண்டந்து இறக்கிப்போட்டுக் கொஞ்சக் காலத்துக்குச் சமாளிக்கலாம். எப்பிடியும் தாராளமாய் தேறும்.

"நான் சொல்லுறனெண்டு கோவியாதை. உந்தப் பிளானைக் கைவிடு" என்றான், அதே அறையிலிருந்த மகேந்திரன். அவன் முன்னால் இருந்த மேசையில் ஏகப்பட்ட தாள்கள் சிதறிக் கிடந்தன.கணக்குகளும், உலகத்து தொலைபேசி எண்களும், சின்ன ஏஜென்சிகளின் பெயர்களும்...

"ஏனப்பிடிச் சொல்லுறாய்..?" புகை வந்தது.

"இல்லை. இப்பதான் ஒரு கிறீக் கப்பல் வந்து நாறிப்போய் நிக்குது. எக்கச்சக்கமான சனம் செத்திருக்கு. இன்ரபோல் தீவிரமாய் விசாரிக்குது. செத்த சனங்களுக்கு அந்திரட்டி கூட முடிஞ்சிருக்காது. நீ அடுத்த கப்பலுக்குப் பேரம் பேசுறாய்."

"விலை சரி வந்திருக்கு. இதை முடிச் சமெண்டால் ஞாயமாய் தேறும். ஒரு கப்பல் தாண்டாப் போல எல்லாக் கப்ப லும் கவிழும் எண்டுறது விசர்க் கதை."

"உக்ரெய்ன் கப்பலைப் பற்றி உனக்கென்ன தெரியும்? உவங்கள் சிலோன் கவுண்மேந்துக்கு வித்த 'வோர் பிளேன்' களே தன்ரைபாட்டிலை காணாமப் போகுதாம். உள்ள கழிவுச் சாமான்கள் முழுக்க வித்துத் தள்ளுறாங்கள். அதிலை ஒண்டாயத்தான் உந்தக் கப்பலும் இருக்கும்."

"இருக்கும். இல்லாமலும் இருக்கும். நீ ஏன் தனிய நெகற்றிவாய் மட்டும் யோசிக்கிறாய்..?"

"இது முன்னூறு, நானூறு சனத்தோடை விளையாடுற விளையாட்டு."

"இஞ்சை பார் மகேந்திரன். இது தொழில். பாவ, புண்ணியம் பாக்கிறதெண்டா நீ றெட்குறோசிலை சேந்திருக்க வேணும்."

அந்தப் பதிலுடன் மகேந்திரன் தடுமாறித்தான் போனான். என்றாலும் அண்மையில் தொலைக்காட்சியில் பார்த்த கடலில் மிதந்த பிரேதங்கள் ஒருகணம் வந்து போயின. வியர்த்தது.

சிங்கம் சொல்லுறதிலையும் பிழையில்லை. இது தொழில். இதிலையெல்லாம் சகசம். எண்டாலும் எங்கடை சனம்



தானே... இன உணர்வு ஒரே ஒரு செக்கன் கவலைப்பட வைத்தது. பிறகு லாபம் பற்றி யோசித்தான்.

சிங்கம் மகேந்திரனைப் பார்த்து மெலிதாகச் சிரித்தபடி குறுக்கு மறுக்காக நடந்தான். எட்டு வருடங்களாய் தொழில் செய்கின்றான். புகை விட்டான். முடிந்தது. அடுத்ததைப் பற்ற வைத்துக் கொண்டான்.

எதுக்கும் ஒரு ரண்டு நாள் ரைம் எடுத்து யோசிப்பம். சிலவேளை இன்னும் நல்ல 'றூட்' ஏதேன் அம்பிடலாம். என்று இழுத்தான் மகேந்திரன். குரலில் முன்னைய உறுதி இல்லை.

சிங்கம் ஒரு கதிரையை இழுத்துக் கொண்டு வந்து மகேந்திரன் அருகில் அமர்ந்தான்.

இஞ்சை பார். இதெல்லாம் நாள் பாக்கிற விசயமில்லை. முந்தி மாதிரியில்லை இப்ப. ஊருப்பட்ட ஏஜென்சியள். 'சாட்டற் பிளைற்'றிலை அள்ளிக் கொண்டு வந்து கொலண்டிலை இறக்கிறளவுக்கு தொழில் முன்னேறியிட்டுது. ஒவ்வொரு 'றூட்'டும் நாற நாற எங்களுக்குத்தான் நட்டம். அதாலை நாங்கள் முந்த வேணும். சொன்னபடி மகேந்திரனுக்கு ஒரு சிகரெட் கொடுத்து, பற்ற வைத்தான்.

நீயே யோசிச்சுப் பார். எங்கடையாக்கள் கூட்டியந்ததிலை எத்தினை சனம் யூகோ காட்டுக்கை காணாமப் போயிருக்குது? போலந்து ஆத்துக்கை தாண்டிருக்குது? ஒஸ்ரியா 'சினோ'வுக்கை புதைஞ்சிருக்கு. இதுக்கெல்லாம் நீ பதில் வைச்சிருக்கிறியே? நாங்கள் சனத்தைக் கரை சேக்கிற நல்லதைத்தான் செய்யிறம். ஆனா வாற சனத்தின்ரை விதி நல்லாயில்லாம அதுகள் மண்டையைப் போடுறதுக்கு நாங்கள் என்ன செய்யிறது?

எப்ப கப்பல் சரிவருமாம்?

பொறு. முதல் லாவோசுக்கடிச்சு நிலமையை விசாரிப்பம். சிங்கம் தொலைபேசியைத் தொடப் போக, அதுவாக முந்திக்கொண்டு சத்தம் போட்டது.

ஆர்..?

அது நான் சிவா கதைக்கிறன்.

எந்தச் சிவா?

ராங்கி சிவா. இஞ்சை மொஸ்கோவிலை நிக்கிறன்.

என்ன புதினம்?

கேட்ட காசு தராததாலை புனிதாவை கோட்டல்லை விட்டிட்டு வந்தனாங்களெல்லே

அவளுக்கென்ன? றெட்லைற் ஏரியாவிலை கொண்டுபோய் விட்டிட்டாங்களே?

அவள் செத்துப் போனாள். ஒரு குறுக்கு றோட்டிலை கிடந்து பொலிஸ் சவத்தை கண்டெடுத்திருக்கு.

ஏதென் டொக்குமென்ற்ஸ் அம்பிட்டிட்டுதே? இப்போது சிங்கம் பதறினான். மகேந்திரனும் விசயம் புரியாமல் பதட்டமடைந்தான்.

என்னெண்டு. அதுதான் ஐடென்ரிகாட்டிலையிருந்து எல்லாத்தையும் வாங்கி வேறை ஆளுக்கு வித்தாச்சே. ஆள் ஆர், எந்த நாடு எண்டு கண்டுபிடிக்கக்கூடிய எந்த டொக்குமென்ற்சும் இல்லை. இதைவிட மினைக்கெடுறளவுக்கு ரஷ்யப் பொலிசும் இல்லை

அப்பாடா. அது சரி. இப்ப என்னத்துக்கு எடுத்தனி?

இல்லை. என்ன இருந்தாலும் அவள் எங்கடை ஊர்க்காரி. கடைசி நாங்கள் ஆரெண்டு சொல்லாமல் அவளின்ரை சொந்தக்காறறுக்கெண்டாலும் அடிச்சுச் சொல்லுவமே?

பேப்.... மண்டைக்கை ஒரு கொட்டையும் இல்லை. ஒண்டையும் நாத்தாம உன்ரை அலுவலைப் பார். சிங்கம் கோபத்துடன் அடித்து வைத்தான்.

என்னவாம்? அடி, நுனி தெரியாமல் கேட்டான் மகேந்திரன்.

ஊர், பேர் தெரியாதவனுக்கெல்லாம் இரக்கம் பாத்து ஒரு தொழில் போட்டுக் குடுத்தா அதுகள் இப்ப எனக்கு சமயம் படிப்பிக்குதுகள். அதுகளை விடு. நீ ஒருக்கா லாவோசுக்கடிச்சு கதை. நான் கொழும்புக்கு கதைக்கிறன்.

இரண்டு கைத் தொலைபேசிகள் உயிர்த்தன.

அடுத்து வந்த நாட்களில் லாவோஸிலிருந்து புறப்பட்ட ஆதிகால உக்ரெய்ன் கப்பல் ஒன்றில் பிள்ளை, குட்டிகளுடன் இருந்த முன்னூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் வண்ணக் கனவு கண்டுகொண்டிருந்தார்கள்.

கொழும்பிலிருந்து பலர் லாவோசுக் குக் கொண்டு வந்து இறக்கப்பட்டனர்.

(இன்னும் என்னவெல்லாம் தொடருமோ?)



படிப்பகம்

www.padippakam.com



# காலம்

சோதியா



குரும்பட்டித் தேர்கட்டி
பூவரசு இலைவிரித்து
மண்சோறாக்கி மகிழ்ந்த காலம் -
காலிமுகத்திடலில்
காந்தீயம் ம(மி)திக்கப்பட்டு
கனவான்கள் கல்லடிபட்டனராம்

எதுவானால் என்ன - எனக்கு
ஏதும் நடக்கவில்லை.

விசர்வேலுவுக்கு விசிலடித்து
பின்வீட்டுப் பெட்டையின்
பின்னலைப் பிடித்திழுத்த காலம் -
எல்லைகளில் இருப்பிழந்தோர்
எடுத்த பொருள் கையோடு
ஏதிலிகள் ஆனதாய் சேதி

எதுவானால் என்ன - எனக்கு
ஏதும் நடக்கவில்லை.

வகிடில்லா தலைவாரி
கணநேரப் பார்வைக்காய்
கனநேரம் காத்திருந்த காலம் -
இனவாதம் எரித்து எஞ்சிய
கண்ணீர் விழிகள்
கப்பலில் காங்கேசன் கரையில்

எதுவானால் என்ன - எனக்கு
ஏதும் நடக்கலில்லை

அளவெட்டித் தோட்டக்காணி
அமெரிக்கன் 'பசன்' வீடுமென
கறாராய் நின்ற கலியாணகாலம் -
பள்ளிச் சகாக்களில்,
குப்பி கடித்தான் ஒருவன்
குண்டணைத்தான் வேறொருவன்

எதுவானால் என்ன - எனக்கு
ஏதும் நடக்கவில்லை.

பிரான்ஸில் பிடிபட்டு
விடாது முயன்ற விக்ரமாதித்தனாய்
இங்கிலாந்தில் இறங்கிய காலம் -
குருநகரில் குமுதினிப் படகு
குருதி குரித்திப் போனது.
ஊரூராய் முற்றுகை.

எதுவானால் என்ன - எனக்கு
ஏதும் நடக்கவில்லை.

காரோடு காசும்
கலர்கலராய் கனவுகளும்
கடவுச்சீட்டும் கைவந்த காலம் -
தொடராய் நவாலி நரபலிகள்
தொப்பிள் கொடியறுந்து
வேரும்விழுதும் இன்னும் இருப்பிற்காய்

எதுவானால் என்ன - எனக்கு
ஏதும் நடக்கவில்லை.

நேற்று!
நெஞ்சை நிமிர்த்தி
நேர்வந்தான் என்மகன்.
கறுப்பிலும் ஒட்டாது
சிவப்பிலும் ஒட்டாது
நான் யார் என்றான்
நாணிப் போனான். □



படிப்பகம்

www.padippakam.com





ஜெயமோகன்



குழந்தையின் சிணுங்கல் சாவித்ரியை எழுப்பியது. கண்களைத் திறக்காமலேயே கையை நீட்டினாள். துணிச் சுருள்கள்தான் சிக்கின. திடுக்கிட்டு கண் விழித்தாள். நிலவொளியின் வெண் கதிர்மீது குழந்தை மிதந்து கொண்டிருந்தது. மூடிய இமைகள் துடிக்க, உதடுகளைக் குவித்து வேகமாக சப்பிக் கொண்டிருந்தது. சாவித்ரி குழந்தையை நோக்கி கைநீட்டினாள். அது மிதந்து விலகியது. சட்டென்று மனதில் நிரம்பிய அச்சம் அவளை வீரிட வைத்தது. பாய்ந்து குழந்தையை எடுத்தாள். அறை மங்கலடைந்தது. குழந்தையின் மென்மையான தசையின் வெப்பத்தை தன் கரங்களால் அறிந்தாள். அது முகத்தைச் சிணுக்கியபடி அழ ஆரம்பித்தது.

"ஜோ ஜோ ஜோ" என்றபடி சாவித்ரி அதை கட்டிலின் நடுவே படுக்க வைத்தாள். மார்புக் கட்டைப் பிரித்து, முலையை வெளியே எடுத்து, நுனியை அதன் வாய்க்குள் செருகினாள். அது ஆவலுடன் உதடுகளால் தேடி ,பிடித்துக் கொண்டு, ஓசையுடன் சப்பியது. உறுதியான ஈறுகள் அழுந்தியபோது விருப்பத்திற்குரிய வலி ஏற்பட்டது. வீங்கி இறுகியிருந்த முலைப்பரப்பின் உள்ளே விரிசல்கள் விழுந்து தசைகள் உருகும் உளைச்சல். கண்களை மூடிக்கொண்டாள். பிறந்து இரண்டு நாட்கள்தான் ஆகியுள்ளன. அதை வெகுகாலமாகவே அவள் அறிவாள் என்று தோன்றியது. அதன் சிறு மண்டையை விரல்களால் வருடினாள். குனிந்து முகர்ந்து பார்த்தாள். அதன் மீது கருவறையின் மணம் இருந்தது. மனதின் மிக அந்தரங்கமான அறைகளுக்குள்ளும் ஊடுருவி நிறையும் வினோதமான மணம். சிறு வயதில் கண்திறக்காத புது நாய்க்குட்டியை எடுத்து முகர்ந்ததுண்டு. ஒருமுறை மச்சில், கருப்பட்டிப் பானையின் உள்ளே, கட்டைவிரல் அளவில் நான்கு எலிக்குஞ்சுகள் இருந்ததை பார்த்ததுண்டு. அவற்றுக்கும் இதே மணம்தான். குட்டிகளுக்கெல்லாம் பொதுவான மணமா இது? பாட்டி சொற்கத்தின் தூப மணம் அது என்பாள். குழந்தையின் முதுகை மெல்லத் தடவினாள். அது இலேசாக "ங்கு" என்றது. குட்டி நாயின் முனகலுக்கும் இதே ஒலிதான்.

அவள் அரை வெளிச்சத்தில் குழந்தையைப் பார்த்தாள். வீங்கி



படிப்பகம்

www.padippakam.com



யவை போலக் கண்கள். சிறு பிளவாக வாய். கைகள் முஷ்டியாக மடங்கியிருந்தன. முலையூட்டும்போதெல்லாம் அவளில் ஏற்படும் மனநெகிழ்வு அப்போதும் ஏற்பட்டது. தன்னுணர்வும் உடலும் நெக்குவிட்டு உருகியுருகிச் செல்வது போலிருந்தது. இத்தனை நாள் எங்கிருந்தது அது? அவளுக்குள்ளா? அது பிறந்த கணம் முதல்அவளுக்குள் சுழன்று வரும் தீராத வியப்பு அது. அதன் சிணுங்கலும் அழுகையும் பலசமயம் அவள் உடலுக்குள் இருந்தே வருபவை போலிருக்கும். அது சிரமப்பட்டு கண்களைத் திறக்கும்போது மஞ்சள் பரவிய விழிகள் ஏதோ தெய்வீகமான போதையிலிருந்து மனமின்றி விழித்தெழுபவை போலிருக்கின்றன. அந்த மென்மையான சிறு உடலுக்குள்தான் எத்தனை தீவிரமும் பிடிவாதமும்! அது முஷ்டியை ஆட்டியபடி, காலால் அவள் வயிற்றை உதைத்தபடி, உதடோரம் கசிய, குடித்துக் கொண்டிருந்தது. அப்படியே அணைத்து தன் உடலுக்குள் அதை செலுத்தி விட வேண்டும் போலிருந்தது. உடலும் மனமும் வினோதமான போதாமையால் பரிதவித்தன. அதை முத்தமிட்டபடி, கண்கள் கண்ணீரால் நிறைய, "கண்ணுக்குட்டீ என் கண் ணுக்குட்டீ" என்று அரற்றியபடி, அவள் நெளிந்தாள். அவ்விரவின் அபூர்வமான மெளனத்தின் குளிரில், மிக ரகசியமாக, அவளும் அக்குழந்தையும் ஏதோ உரையாடுவது போலிருந்தது. மரமல்லி மலருவது போல. இருளின் மறைவுக்குள் மிக ரகசியமாகத்தான் அது மலரும். அவள் மார்புகளிலும் வயிற்றிலும் மலர்கள் விரிகின்றன. அறைமுழுக்க தன் எண்ணங்கள் வாசனையாக மாறி நிறையும் உணர்வு ஏற்பட்டது.

சுகமானதோர் அலுப்பில் அவள் தூக்கத்தை தொடர்ந்தாள். மெல்லிய நறுமணம் காற்றில் மிதந்து பரவிக் கொண்டிருந்தது. எல்லா பொருட்களிலும் அது ஊடுருவியது. எல்லா பொருட்களும் தங்கள் இறுக்கமிக்க வடிவத்தின் பிடியிலிருந்து தப்பி காற்றாகவும் ஒளியாகவும் ஆயின. ஊடே அவள் உடலற்று பரவிச் சென்று கொண்டிருந்தாள். சிறுகுழந்தையாக இருந்தபோது அவள் நடந்த ஏதோ கோயில் நந்தவனம். கோபுர நிழல் விழுந்து கிடந்த செம்மணல் முற்றம். மிகப் பழைய நினைவுகள். மிகமிக இளம் வயது. அல்லது அதற்கும் முன்பு. அல்லது முந்தைய பிறவி. வெய்யிலில் பிரகாசிக்கும் புற்கள் அடர்ந்த சிறுகோபுரத்தின் கீழே, மூடாத சிறு வாசல் கொண்ட சிறு உபசன்னதி. பலிக்கல் மீது இரு செம்பருத்தி மலர்கள் இருந்தன. உள்ளே இருட்டாக இருந்தது. எண்ணைமணமும், ஈரமணமும், கர்ப்பூரமணமும், மலர்மணமும் கலந்து உருவான இருட்டு அது. பார்வை மூலம் அதன் திரையை விலக்கியபோது உள்ளே தேவிமுகம் தெரிந்தது. விரிந்த கருணைமிக்க கண்கள் அவளைப் பார்த்தபோது கண்டாமணியின் நாதம் ஒருமுறை அதிர்ந்து கார்வையாக நீண்டு அகன்றது. மிகக் கூர்மையான மெளனத்தை வெகுநேரம் உணர்ந்தபடியே இருந்தாள். பின்பு சரிந்த கருங்கல் படிக்கட்டுகளில் பாவாடை அலைபாய இறங்கியபடியிருப்பதை உணர்ந்தாள். இருபுறமும் செடிகள் அடர்ந்து, புதர்களாக இறுகி, மேலெழுந்து வானை மூடின. பாதையில் செம்மண்ணின் ஈரம் மிதிபட்டது. பச்சை நிற இருள் அலையலையாகப் படிந்த மலைச்சரிவின் மீது காற்றும் மெளனமும் சரிந்து சென்றபடியே இருந்தன. தொலைவில் சாம்பல்நிறத்தின் பல்வேறு அழுத்தங்களில் மலைமடிப்புகள். எல்லாப்பக்கமிருந்தும் கூரிய பார்வையொன்று அவள் மீது பதிந்து தொடர்ந்து வந்தது. எந்த இடம் இது? ஒருபோதும் அவள் பார்த்திராத இடம். திரும்பத் திரும்ப கனவில் இது வருகிறது. மிகப் பரிச்சயமான மரங்கள், புதர்கள், மலைகள். தரையின் சேறு உப்பு வீச்சமாக நாசியை அடைந்தது. வெப்பமான மணம். ரத்த மணம் அது என்று எண்ணியபோது அவள் அச்சத்துடன் அப்படியே நின்று விட்டாள். கைகால்கள் குளிர்ந்து விட்டன. உறுமல் ஒலி கேட்டது. எதிரே புதரின் கீழே ஈரச் சொத சொதப்பில் ஒரு கரிய காட்டுப் பன்றி உட்கார்ந்திருந்தது. அதன் வயிற்றுக்கு கீழே முண்டியடித்தபடி மென்மையான பன்றிக்குழவிகள் பால்குடித்தன. அதன் வால் சேற்றில் பாம்புபோல நெளிந்தது. அதன் வாய் சிவப்பாக இருந்தது. அது தன் குட்டிகளிலொன்றை மென்று தின்று கொண்டிருந்தது.

அவள் பாய்ந்து எழுந்து அமர்ந்தாள். விழித்தபிறகும் பன்றியின் தந்தப் பற்களையும், மின்னும் கரிய கண்களின் அர்த்தமற்ற வெறிப்பையும் காண்பதாக உணர்ந்தாள். உடம்பு நடுங்கியது. வியர்வை வழிந்து மெல்லக் குளிர்ந்தது. தன்னை ஒருங்கிணைத்துக் கொள்ள முயன்றபடி அவள் அப்படியே சிறிது நேரம் அமர்ந்திருந்தாள். என்ன நடந்தது? கண் விழித்தபோது குழந்தை நிலவொளியில் கிடப்பதைப் பார்த்தாள். அந்த அசாதாரணமான காட்சி அவள் கற்பனைகளை தூண்டிவிட்டது அவ்வளவுதான். எல்லாம் நாணிப் பாட்டி சொன்ன கதைகளின் விளைவு. கிழவியின் வாய் அலப்பிக் கொண்டிருந்தபோது அவள் எதையும் கவனிக்கவில்லை என்றுதான் எண்ணியிருந்தாள். ஆனால் மூன்றாவது காது ஒன்று கவனித்திருக்கிறது. என்னென்ன பிரமைகள்! அவள் தலையை உதறிக் கொண்டாள்.

சன்னலுக்கு வெளியே தோட்டத்துக் குறும்பலா மரம் இலைகள் சலசலக்க நிழல்போல நிற்பது தெரிந்தது. சிறிது நேரத்தில் அதைப் பார்க்க முடியாதபடி அவளுக்கு பதற்றம் ஏற்பட்டது. அவள் எழுந்து சென்று அதை மூடினாள். அறை இருண்டபோது மனம் சற்று அடங்கியது. தலைமயிரை இருகைகளாலும் வாரி கொண்டையாக முடிந்து கொண்டாள். சன்னல் பீடம் மீது அமர்ந்தாள். மார்புகள் கனமாக குலுங்கின. அவற்றை கச்சுக்குள் நுழைத்து இறுக கட்டிக் கொண்டாள். மார்புகளின் தெறிப்பை உணர முடிந்தது. அவற்றுக்குள் அவளறியாத புது உயிர் ஒன்று வந்து குடியேறியிருப்பதாகப் பட்டது. அவற்றின் அந்தரங்கத் தன்மை முழுக்க இந்த இரு நாட்களில் அழிந்து போய் விட்டது என்று தோன்றியது. தொடும்போது அவற்றில் கூச்சம் இல்லை. பிறர் பார்வை படுவதுகூட பொருட்டாகப் படவில்லை. அவை விம்மி உருண்டு திரள்கின்றன. மெளனமாகச் சுரந்து நிற்கின்றன. இருகைகளாலும் மார்புகளை அள்ளிப் பார்த்தாள். மென்மையாகவும், வெம்மையாகவும், கனமாகவும் இருந்தன. அவள் கனவில் கண்டது திற்பரப்பு மகாதேவர் கோயிலுக்குள் உள்ள பகவதி ஆலயம். பகவதியின் முலைகளை ஒவ்வொரு முறையும் அவள் உற்று பார்ப்பாள். அவை கரிய பளபளப்புடன் உருண் டிருக்கும். நுனியை மெல்லத் தொட்டால் வெண்ணிறப் பால் வெடித்து வழியும் என்று தோன்றும். ஒருமுறை கீழைக் குடியில் அவளெதிரே ஒரு பன்றி வந்தது. கனத்த முலைகள் பெரிய தோற்பைபோல தரையில் உரசி அசைந்தன.

அச்சத்துடன் அவள் மார்பைப் பற்றிக் கொண்டாள்.



படிப்பகம்

www.padippakam.com



மீண்டும் அந்தப் பன்றியின் பார்வை ஞாபகம் வந்தது. எழுந்து போய் எதிர்ப்புற வாசலை அணுகி, தாழை இழுத்தாள். "அம்மா அம்மா" என்று கூப்பிட்டாள். நல்ல குரட்டை ஒலிகள் கேட்டன. மறுபக்கம் கூடத்தில்தான் எல்லாரும் படுத்திருந்தார்கள். அவர்கள் அங்கிருக்கிறார்கள் என்பது அச்சத்தை குறைத்தது. மீண்டும் வந்து கட்டி லில் அமர்ந்து கொண்டாள். ஜன்னலுக்கு வெளியே பனித்துளிகள் சொட்டும் ஒலி கேட்டது. யாரோ நட மாடுவது போல சருகுகள் சரசரத்தன. குறும்பலா மரம் சலசலத்தது. யாரோ சன்னலுக்கு வெளியே அமர்ந்திருப்பது போலவும், மூச்சின் ஒலி கேட்பது போலவும் இருந்தது. சுவரை ஊடுருவும் பார்வையொன்றை உணர்ந்தாள். காற்றில் கள்ளிப் பாலை மலர்களின் மணம் நிரம்பியிருந்தது. மெது வாக அறை ஒளிர ஆரம்பித்தது. ஒளிச்சட்டம் நீண்டு குழந்தையைத் தொட்டது. அது கைகால்களை தைத்து அசைத் தபடி வாய்திறந்தது. முலைகசியும் மணம் எழுந்தது.

அவள் ஓடிப்போய் குழந்தையை வாரி மார் போடணைத்துக் கொண்டாள். கதவை நோக்கி ஓடி தாழை இழுத்தாள். "அம்மா அம்மா" என்று அழைத் தாள். கூடத்தில் அசைவில்லை. கதவை இழுத்துத் திறந் தாள். குளிர்ந்த காற்று உடலை அறைந்தது. நேர் எதிரே குறும்பலா மரம் நின்றிருந்தது. அதன் மீது நிலவொளி துளிகளாக சொட்டிக் கொண்டிருந்தது. எப்படி இது நடந்தது என்று பிரமித்தவளாக அவள் ஒரு அடி பின் னால் நடந்தாள். நிலவொளி கண்களை நிறைத்தபடி விரிந்தது. அதில் கள்ளிப்பாலை மலர்களின் போதை யேற்றும் மணம் மிதந்தது. மெல்லப் படியிறங்கினாள். அச்சம் கொண்ட ஒரு மனமூலை வேண்டாம் என்று பரிதவித்தது. உடைகள் காற்றில் புடைத்தெழுந்தன. அவளுக்குப் பின்னால் அவை சிறகுகள் போல எழுந்து படபடத்தன. குளிர் தோலை ஊடுருவி, மனதில் பர வியது. நிலவொளிமீது கால்வைத்து நடந்தாள். பாதங் கள் ஜில்லிடும் குளிர் அதற்கு இருந்தது. மனதில் எக்க ளிப்பும் வெறியும் பெருகின. திரும்பிவிடலாம் என எண்ணினாள். ஆனால் முன்னோக்கி நடந்த படியேயிருந்தாள்.

உடைகள் படபடத்து, அவிழ்ந்து விடுபட்டுப் பறந் தன. அவளுடைய பூரண உடல் நிலவொளியில் பளப ளத்தது. திரண்ட முலைகள் மீது நிலவொளி வழிந்தது. முலைக்காம்புகளின் கூர்ந்த கருமையில் இரு விழிகள் என பார்வையொன்று துலங்கியது. தலைமயிர் கட் டவிழ்ந்து பறந்தது. நீண்டு சென்று இருட்டின் ஆழங் களுக்குள் இறங்கியது. குழந்தை அவள் உடலின் ஓர் உறுப்புப் போல ஒட்டியிருந்தது. அவள் நடந்து கொண் டேயிருந்தாள். முலைகள் விம்மித் திரண்டன. காம் புகள் புடைத்து உயர்ந்தன. அவற்றின் உத்வேகமே தன்னை முன்னெடுத்துச் செல்கிறது என்று அவள் அறிந்தாள். இரு கைகளையும் விரித்துக் கொண்டாள். மார்பின் சுனைகள் விழித்துக் கொண்டன. வெம் மையான பால் பீச்சியடித்தது. கள்ளிப்பாலை மலர் களின் இதழ்க்குவளைகளில் அது நிரம்பியது. இலைக ளில் சொட்டியது. நிலவொளியில் வெண்ணிற ஒளி பெற்று காற்றில் பரவிச் சென்றது. சாளரங்களைத் தள் ளித் திறந்து, தூங்கும் குழந்தைகளின் உதடுகளைத் தொட்டது. அவை கண்களைத் திறக்காமல் புன் னகைத்தன. சப்பியபடி நிலவொளி நோக்கி நகர்ந்தன.

அவள் காற்று போல சென்றாள். தூங்கும் கிரா மங்கள் மீது படர்ந்த கனத்த பனிப்படலத்தை கிழித்தபடி, செம்மண் சிலிர்த்துக் கிடந்த சாலைகளைக் கடந்து சென்றாள். காற்று வருடிச் சலசலத்த வயல்வெளிக ளையும், யானைச் சருமம் போல உடல்சிலிர்த்த பாறைகள் பரவிய புற வெளியையும், தாண்டிச் சென்றாள். மலையடிவாரத்துக் குறும்புதர்கள் அவள் பாதம்பட்டு குலுங்கி பனித்துளிகளை உதிர்த்தன. சரிவில் ஏறி மறுபுறம் சென்றாள். அங்கு கருநீல நெளி வுகளாக வானை விளிம்பிட்டிருந்த மலைகளுக்கு மேலே, ஒளிப்பெட்டகங்கள் போல விளிம்புகள் கசிந்த மேகங்களின் நடுவே, வெறும் வெளியில் நிலவு மெல்ல அதிர்ந்து கொண்டிருந்தது. அவள் மனம் அடங்கி வேகம் குறைந்தது. அவள் கரங்கள் இருபுறமும் நீண் டன. அவள் மெல்ல விம்மினாள். பெரியதொரு நீர் வீழ்ச்சி போல, புதர்கள் ஓலமிட, மலைச்சரிவில் சரிந் திறங்கினாள். அவள் விரைந்த ஒலி காட்டின் இருண்ட ஆழங்களுக்குள் பரவி பாறைகள் தோறும் எதி ரொலித்து வனநகைப்பு என பிரமை தந்தது.


மலைச்சரிவு துண்டுபட்டு அதல பாதாளமாகியது. அங்கு கீழே சதுப்பிலிருந்து எழுந்து உயர்ந்த மரங்களின் மண்டைகள் மீது நிலவும் பனியும் கொட்டிக் கொண் டிருந்தன. மலைவிளிம்பில் இருட்குவியல்போல சில மரங்கள் அடர்ந்து நின்றன. அவற்றின் அணைப்பிற் குள் சிதிலமான, புராதனமான, கற்கோயில் இருந்தது. அதன் கூரை மீதும், கல்லிடுக்குகளிலும் புதர்கள் பரவி யிருந்தன. உரிக்கப்பட்ட பாம்புச் சட்டைகள் மெல் லத்திரும்பின. கண்ணீர் வழிந்து அவள் மார்புகள் மீது கொட்டியது. விம்மல்களால் தோள்களும் மார்புகளும் அடிவயிறும் குலுங்கின. சிதிலமான படிகளில் ஏறும் போது அவள் அலறினாள். அதன் கார்வை காட்டை நடுங்க வைத்தது. மரங்களும் பாறைகளும் ஸ்தம்பித்து உறையும் பேரலறலுடன் அவள் இருட்டுபசையென அப்பிய கருவறைக்குள் பாய்ந்து நுழைந்தாள். காலி யான கற்பீடத்தின் மீது ஏறி நின்றாள். அவள் கண்கள் வெறித்து விரிந்தன. அவற்றில் ஆழம் மிகுந்த மலைச்சுனைகளின் கரிய ஒளி நிரம்பியது. வெகுதொ லைவில், ஒளிரும் குறும்பலா மரத்தின் அடியில், திறந்த சன்னலுக்கு அப்பால், மரக்கட்டிலில், குழந்தை யொன்றை மார்போடணைத்தபடி போதையேறியவள் போல பிதற்றியபடி முத்தமிடும் அந்தப் பெண்ணைப் பார்த்தாள். அவள் முகம் விகாரமடைந்தது. தலைமயிர் சிலிர்த்து, சிங்கப்பிடரியென எழுந்துபரவியது. கண் களில் கொலைவெறி நிறைந்தது. உதடுகள் இழுபட்டுப் பிளந்த வாய்க்குள் இருந்து இரு வெண்ணிறக் கோரை ப்பற்கள் வெளிவந்தன. உக்கிரச் சிரிப்பு ஒன்று எழுந் தது. அவள் உடலிலிருந்து காட்டு மரக்கிளைகள் போல பற்பல கரங்கள் முளைத்தெழுந்து, கொலை ஆயுதங்கள் அசைய, விரிந்தன. அவளது வெறிச்சிரிப்பின் எக் காளம் பரவியது. தன் இடுப்பிலிருந்த குழந்தையை எடு த்து வாய்க்குள் செருகி, குருத்தெலும்புகளும் மென்த சைகளும் உடைந்து உதிரம் தன் மார்புகள் மீது வழிய, கடித்தாள். ❑




படிப்பகம்

www.padippakam.com





S Shanthagunam



S Shanthagunam



படிப்பகம்

www.padippakam.com



# திரும்புதல்



*மனுஷ்ய புத்திரன்*

நீண்ட நாளைக்குப் பின்
என் வீட்டிற்குப் போகிறேன்.

நண்பா,
இன்று நீ
என்னோடு வர வேண்டாம்.

நானிப்படி
திரும்புகிற போதெல்லாம்
என் முதல் கவனிப்பை
பெறாத பொருட்கள்
எவ்வளவு வருத்தமடைகின்றனவென்று
சொல்லவே முடியாது.

திசை மாறி விடும்
உறவுகளின் வழித்தடங்கள் மேல்
நிச்சயமற்று நுழைகின்றேன்.
ஒவ்வொரு முறையும்
என் அறையை ஒழுங்கமைக்கும் போது
ஒழுங்கமைக்கவே முடியாத
ஏதோவொன்று
அங்கே நுழைந்து விட்டிருக்கிறது.

என் வீட்டின் குழந்தைகளை
வழியெல்லாம் நினைத்துக்கொண்டே வந்தேன்.
வீடு வந்த பிறகு
அவர்களைப் போய்ச் சேர
எவ்வளவோ தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது.

நீண்ட காலம்
இங்கிருந்து விட்டேன்.

எத்தனையோ முறை
பிரிந்து மீண்டு விட்டேன்.

வீட்டை அறிய முடியவில்லை.

இந்த மேஜையை
கொஞ்சம் சரி செய்து கொள்கிறேன்.

இந்தக் கண்ணீருக்கு
மீண்டும் ஒருமுறை
பழகிக் கொள்கிறேன்.

எனக்கொரு இடத்தை உருவாக்கி
பின் உருவாக்குவேன்
உனக்கொரு இடத்தை.

நீ நாளை வா. □



படிப்பகம்

# பானுக்குட்டி



புவனன்

சிவதாஸனுக்குத் தலை கனத்தது. கைகால்கள் சோர்ந்தன. வேலைக்களைப்பு. இரண்டு கைகளிலும் வீட்டுக்குத் தேவையான சாமான்கள் வேறு. சோர்வோடு படியேறி வீட்டு சோபா வுக்குள் அவன் "தொப்"பென விழுந்தபோது மணி ஒன்பதரை ஆகி விட்டது.

"என்னப்பா சாப்பிர்றீங்களோ...?" மனைவி மேகலா கனிந்தாள். "இப்ப வேண்டாம் தலை யிடிக்குது." "அப்ப அஸ்பிறீன் எடுங்களேன்."

குரல்கேட்ட பானுக்குட்டி "அப்பா. . ." என்றபடி ஓடி வந்து தாவினாள். தலையிடி, உடல் அலுப்பு இருந்த இடம் தெரியவில்லை. "பிள்ள இண்டைக்கு என்னடா செஞ்சுது. அம்மாஒட விளாடினதோ?" ரெலிபோன் மணி அடித்தது.

சிவதாஸன் றிஸீவரைக் கையிலெடுத்தான். பானுக்குட்டி தோளுக்குமேல் ஏறி தலை யைப்பிய்த்துப் பின் றிஸீவரைப் பிடுங்கினாள்.

"மேகலா! மேக். இஞ்ச பிள்ளையை ஒருக்கால் பிடிக் கிறீரே?" "வந்தஉடன ரெலிபோன். பிள்ள காலமது டக்கம் அப்பா அப்பா எண்டு தேடித்திரிஞ்சுபோட்டு... எவ்வளவு ஆசையா..." வார்த்தைகள முடிக்கமாட்டாது முட்டிவந்த கண்ணீரோடு பானுக்குட்டியைப் பிடுங் கிக்கொண்டு போனாள் மேகலா.

பானுக்குட்டி திமிறினாள். மேகலா அவளுக்கு ஒரு அடி போட்டாள். சிவதாஸன் றிஸீவரைப் படக் கென்று வைத்தான். "என்னத்துக்கு இப்ப பிள்ளைக்கு அடிச்ச னீர்?"

மேகலா அஸ்பிறீனோடு வந்தாள். சிவதாஸன் ரிவி யைப்போட்டான்.

"இஞ்ச பாருமப்பா, சென் மிசல்லை ஆறம்பதுக்கு குண்டு வெடிச்சிருச்சு."

"கடவுளே, நல்லவேளை! நீங்கள் இப்ப அந்தறெ யினயல்லே வாறியள்." "அட, கொஞ்சம் தவறியிட்டன். அதிலேயேவந்திருக்கலாம்." மேகலா தலையைத் தொங் கப்போட்டாள்.

சிவதாஸன் "சனலை" மாற்றினான் .பிறேஸி லியன் இசைக்குழுவின் பாட்டு ஒன்று போய்க்கொண் டிருந்தது. பானுக்குட்டி ஆடினாள். துள்ளித் துள்ளி ஆடினாள். இடுப்பை வளைத்து வளைத்து நெளித் தெல்லாம் ஆடினாள். எங்கதான் இதெல்லாம் கற்றுக் கொள்கிறாளோ? எல்லாம் ரீவிதான். ஆர் சொன்னது? பிள்ள அப்பன்ர பிள்ள. சிவதாஸன் அதற்குள்ளும் ஒரு பெருமையடித்துக் கொண்டான். "ம்..ம்...கீழ்வீட்டு மாமா தட்டப் போகுது... தட்டப்போகுது..". என்ற சொல்ல மேகலா வாயெடுக்கவும் மொத்து விழவும் சரியாக இருந்தது. கீழ்வீட்டிலிருந்த போர்த்துக்கல் நாட்டவன் "தொப்... தொப்" பென்று இடித்தான்.

பானுக்குட்டி வெருண்டோடி வந்து சிவதாஸனுக் குள் ஒழிந்தாள். மனைவி தறுதறுவென்று முழுசினாள். வயிற்றிலிருக்கும் இரண்டாவது பிள்ளை அவளுக்கு இறங்கிவிடும்போலிருந்தது. "அப்பா...ம்.. அப்பா.... கீழு ட்டுமாமா...ம்..." பானுக்குட்டி கரகரத்த குரலில் அமைதி யைக் குலைத்துப் பயத்தைக் கலைக்க முயன்றாள். சிவதாஸன் குடும்பம் இந்த வீட்டுக்கு குடிவந்த இரண்டு வருடத்துள் மூன்றாவது தடவையாக இந்தத் தட்டு விழுந்தது. இந்த மூன்று தட்டுக்களும் சிவ தாஸனின் மனதுக்குள் தாங்கமுடியாத பெரும் குடை யலைக்கொடுத்தன. அயலவனை தொந்தரவு செய் கிறேனே என்ற குற்ற உணர்வு வதைத்தெடுத்தது. மேல்வீட்டுக் குடியிருப்பாளனின் சத்தத்துக்கு தானே சகிக்கமுடியாது சுவரில் இடித்தும் நேரில் சென்று சத் தம் போட்டும் இருக்கும்போது கீழ்வீட்டுக்காரன் தனக் குத் தட்டுவதை .எப்படி அவனால் ஜீரணித்துக்கொள் ளமுடியும்?

"இப்பிடி பிள்ள வளக்கேலாதப்பா! "மேகலா செற் றியில் சலிப்போடு அமர்ந்தாள். "அப்பென்ன சிலோ னுக்குப்போறதா" "நீங்கள் ஒவ்வொண்டுக்கும் ஒவ் வொண்டு சொல்லுவியள். யோசிச்சுப் பாருங்கோ! பிள்ள ரி.வி.யில முட்டக்குடாது. டெக்கில முட் டக்குடாது. வீட்டுக்க ஓடக்குடாது. வீட்டுக்க சத்தம்போ டக்குடாது. எல்லாவிதத்திலயும் பிள்ளய அடக்கினா அதீன்ர மனநிலை எப்பிடி ஆகும்! சும்மா பிள்ள வளப் புப்பற்றி புத்தகம் வாசிச்சா காணுமே?" மேகலா பானுக்குட்டியைத் தூக்கி கன்னத்தோடு ஒத்திக் கொண்டாள். நடுவீட்டுக்க நான் நிண்டு கத்தினா மூண்டு வீடு தள்ளி செல்லம்மாக்கா வீட்டை கேக்குமெண்டு அம்மா அடிக்கடி சொல்லுவா. நான் பெலத்துக் கத்திறதிலயும் ,பெலத்துச் சிரிக்கிறதிலயும் அப்பாவுக்குத்தான் எவ்வளவு பெருமை. 'டேய்! சத்தம் போடதயடா" எண்டு அப்பா சொல்லேக்ககூட கொடு ப்புக்க சிரிச்சுக் கொண்டுதான் சொல்லுவார். இப்ப நான் முழுசிக் கொண்டு சொல்றன். சிவதாஸன் நொந்துகொண்டான்.

ரெலிபோன் மணி அடித்தது. சிவதாஸன் எழுந் திருக்கமுன்பே பானுக்குட்டி ஓடிப்போய் ரெலி போனுக்கு முன்னால் கிளிக்கோடு மறித்தாள். மேகலா முறைப்பதுபோலவும் முழுசுவதுபோலவும் இரண்டுக்கும் இடைப்பட்ட பார்வையொன்றை சிவதாஸன் மேல் எறிந்தாள். இவற்றையும் தாண்டி அடி எடுக்க முற்பட்டபோது பானுக்குட்டி காலைக் கெட்டியாகக்கட்டிப்பிடித்துக்கொண்டாள். இதற்கு மேலும் சிவதாஸன் ரெலிபோன் கதைக்கத்தான் வேண்டுமா? திரும்பவும் வந்து செற்றியில் அமர்ந்து கொண்டான் .கிடைக்கிற அந்த சொற்ப நேரத்துக்

www.padippakam.com



குள்தான் அவன் நண்பர்களுடன் இலக்கியம் கதைத்தாலென்ன அரசியல் கதைத்தா லென்ன? மன ஆறுதல் தரக்கூடிய அந்த உரையாடல்களுக்கும் அவனுக்கு இப்படித் தடைவந்தது. எட்டுத் தடவைகள்வரை அடித்தபின் ரெலிபோன் ஓய்ந்தது.

"நேற்று வசந்தி வீட்டை பெரிய பிரச்சினையாம். கீழ்வீட்டுக்காரன் தட்டிப்போட்டு மேலவர, சாந்தன் அண்ணன் ஏதோ விசரில நிண்டவர், நாங்கள் இப்பிடித்தான் பிள்ளயள வளப்பம். செய்யிறதச் செய் எண்டு கீழ்வீட்டுக்காரனுக்கு அடிக்கப்போயிட்டாராம். பிறகு பொலிஸெல்லாம் வந்ததாம்."

"ஏன்! உமாக்காவைக்கும் கீழ்வீடு பிரச்சினைதான். பகிடி என்னடாண்டா கோபாலண்ணயவைக்கு இவே போடுற சத்தத்தால மேல்வீட்டில இருக்கிற கிழவனும் கிழவியும் பிரச்சினையாம்"

"குமாராக்கள்கூட இந்தப் பிரச்சினையாலதானே தனி வீடு எடுத்துப்போய் இப்ப பில்லுகள் கட்டமாட்டாம கஷ்டப்படுகுதுகள்."

நிப்பாட்டும்! நிப்பாட்டும்!! போதும்!! மற்றவேன்ர பிரச்சினேக்க தலையை நீட்டி எங்கட பிரச்சினையை ஏன் மறைப்பான்? எங்கட பிரச்சினையைப் பாப்பம்! இப்ப பத்து மணியாகுது! நாங்கள் சத்தம் போட்டால் அடுத்தவைக்குத் தொந்தரவுதானே! எங்களுக்க மேல் வீடு சத்தம் போடுறது எவ்வளவு அரியெண்டமாயிருக்கு!

"அதுக்கு அப்ப நீங்கள் வெள்ளெண வாறது!" "ஓ! நான் சும்மா ஊர் மேஞ்சுபோட்டுத்தானே வாறன்!"

காலையில் போகும்போது குசினி தண்ணித் தொட்டி அடைத்துப் போயிருந்தது நினைவுக்கு வர சிவதாஸன் எழுந்துபோனான். "இதென்னப்பா நெருப்புக்குச்சியளெல்லாம் வருகுது! ஷிங்குக்க என்ன செய்து வைச்சிருக்கிறீர்?"

நீண்டநேரமாக, ஏது! பானுக்குட்டியின் சத்தம் ஒன்றையும் காணவில்லையே என்று தேடியபோது, சிவதாஸன் குழாயைக் கழற்றி தேக்கி வைத்திருந்த அழுக்குத் தண்ணீரையும் அழுக்குகளையும் எடுத்து தலையில் தப்பிக்கொண்டிருந்தாள்.

"அடடடடடடா என்னடி இது?" "சம்போ தலேல... ஓ...."

அடிக்கிறதா! சிரிக்கிறதா அழுகிறதா!மேகலா பானுக்குட்டியை கத்தக்கத்த தூக்கிக்கொண்டு ஓடினாள் குளிக்க வார்ப்பதற்காக.

பாத்துறூமுக்குள் தாயும் மகளும் அல்லோல கல்லோலப்படுவது கேட்டது. சிவதாஸன் குழாயைச் சுத்தம் செய்து முடித்து நிமிர்ந்தான். கண் மின்னியது.

மேகலா அனுங்குவது கேட்டது. ஓடிப்போய்ப் பார்த்தான். அவள்அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு கத்தினாள். பானுக்குட்டியைத் தூக்கி எடுத்தான். மேகலாவைத் தூக்க முயன்றான்.அவளால் முடியவில்லை. "ஐயோ" என்றாள். அலறலாக... "அம்புலன்ஸுக்கு அடியுங்கோப்பா" "என்னப்பா! என்ன செய்யுது?" "பிள்ள பிறக்கப்போகுது... ஐயோ கெதியில அடியுங்கோ" மேகலா கெஞ்சினாள். சிவதாஸன் பதட்டப்பட்டான். பானுக்குட்டி கெக்கட்டம் விட்டுச் சிரித்தாள். அவள் பயம்கொள்ளும் போதெல்லாம் கெக் கட்டம் விட்டுச்சிரித்துச் சமாளிப்பதுதான் வழக்கம்.

மேகலா கத்தினாள். வேதனையால் துடித்தாள்.பானுக்குட்டிக்குப் பயம் கூடிவிட்டது. சிரித்துச் சமாளிக்கவும் முடியவில்லை. தாவிப்போய் தாயின் வாயைப் பொத்தினாள்.அம்மா கீழூட்டுமாமா தட்டப்போது என்றபடி.

சிவதாஸன் அம்புலன்ஸுக்குப் போன்பண்ணிவிட்டு மேகலாவைஅணைத் துத்தூக்கியபடி, இப்போ பானுக்குட்டியை என்னசெய்வதென்ற யோசனையில் குழம்பிக்கொண்டிருந்தான்... ❑


உங்கள் பாவனைக்கு உகந்த பாத்திரங்கள், வீட்டுத் தேவைகளுக்கான மின் பொருட்கள், பலதரப்பட்ட அலங்கார, பரிசுப் பொருட்கள், நங்கையர் விரும்பும் நாகரீகப் பொருட்கள் அனைத்துக்கும் மறுசீரமைக்கப்பட்ட ஒரே விற்பனை ஸ்தாபனம்.

SHAMA'S CENTRE

212 High Street North, East Ham,
London E6 2JA


TEL:0181- 548 8466




படிப்பகம்

www.padippakam.com





ஓவியம்: மகா



படிப்பகம்

# SHAN & CO.

## SOLICITORS & ADMINISTRATORS OF OATHS

"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?
என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்து
பொய்யாகும்?..."

- பாரதி

*With Compliments*

K Shanmugarajah
**SOLICITOR**

189 Northolt Road, South Harrow,
Middlesex HA2 0LY

**Tel: 0181-864 5839 (5 lines)**
**Fax: 0181-423 8130**
**Moblie: 0976 439 141**

**24 Hour Service Aavailable**

www.padippakam.com



பொ. கருணாஹரமூர்த்தி



# போதிமரம்

ஒரு பருவத்தில் எங்கள் வீட்டுப் பெரிய வளவின் வடக்காகவுள்ள வாதரவத்தை மேய்ச்சல் தரவையில் ஒரு பிளேனாவது விழாதா நான் அதன் சில்லை எடுத்து உருட்டி விளையாட ... என்று அங்கலாய்த்ததுண்டு.

பூனை தூங்குவதை எங்கேயாவது கண்டாற் போதும்... தாத்தாவின் மூக்குப்பொடிச் சிட்டி கையை அசுக்கிடாமல் நகர்த்திக்கொண்டு வந்து ஒரு தபாலட்டையில் கொட்டி அதைப் பூனையின் மூக்கில் பிடிப்பேன், பொடி சிரசில் ஏறியதும் அச்சு அச்சு என்று தும்மிக்கொண்டு வீட்டைச் சுற்றிச் சுற்றி ஓடும். மூக்குப்பொடிக்குப் பதிலாக பரிசோதனையை புதுமிளாகய்பொடியிலும் மேற்கொண்டு பார்த்ததுண்டு.

அனேகமாக மதியம் போசனமான பின்னால் வீட்டில் எல்லோரும் ஒரு குட்டித் தூக்கம் போடுவார்கள். அதுவே என் கிரியாம்சைகளுக்கு அனுகூலமான நேரமாகும்.

ஏனோ ஊரிலுள்ள நாய்களெல்லாம் தத்தமது பணிகளெல்லாம் முடித்த பின்னால் எங்கள் வீட்டுக்கே சாப்பிட வரும். அம்மாவின் ஜீவகாருண்யத்தை அவைகளளவிற்கு உணர்ந்தவர் எவருமிலர்.

வேப்பமரத்தின் கீழோ மாமரத்தின் கீழோ சுகமாகத் தூங்கும், தூங்குகின்ற நாய்களைப் பார்த்தால் எனக்கு கைகள் பரபரக்கத் தொடங்கும். கல்லைத் தேடித்தேடிப் போகும். லொட்டோவில் சில மில்



படிப்பகம்

www.padippakam.com



லியன் டொலர்கள் விழுந்தாலும் விழுமே தவிர விழிப்பாயிருக்கிற நாயொன்றைக் கல்லால் அடிப்பதென்பது நம்மால் ஆகாத காரியம்.

அடிபட்ட நாயின் அலறல் எனக்குப் பொருட்டேயில்லை....... நான் ஒரு பத்தடி றேஞ்சுக்குள்ளாக நின்று வைக்கும் குறி மட்டும் பிசகப்படாது. நான் அடித்த கற்களின் பருமனைச் சொன்னால் நீங்கள் வீடு தேடிவந்து உதைப்பீர்கள்.

இவ்வாறு ஒரு நாள் எனது கல்லடி பட்டுத் துடித்துப் பதைத்து ஜெட் வேகத்தில் ஓடிய வெள்ளை உடம்பும் கண்ணைச் சுற்றி கருவளையமும் கொண்ட மறையன் நாயொன்றுக்கு (சற்றே பழக்கமானதும் கூட) என் நட்டணையின் உக்கிரத்தில் பாதிவழியில் ரோஷம் வரவும் திரும்பிவந்து என் கெண்டைக்கால் தசையை ஈய்த்துவிட்டு ஓடியது.

மாலையானதும் வண்டில் குடப்பூண் வளையமொன்றை பென்ஸ் காரின் ஸ்டியறிங் ஆகக் கற்பனை பண்ணிப் பிடித்துக் கொண்டு மாமா வீட்டுக்கும் எங்கள் வீட்டுக்கும் பொழுதுபோக்கு டிரைவிங் பண்ணிக்கொண்டிருப்பேன்.

டிர்ர் டிர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர் என்பதிலும் அடிக்கடி ஹார்ணை முழக்குவதிலும் வாயும் தொண்டையும் வலி எடுக்கத் தொடங்கிய பின்னாலேயே காரை நிறுத்திவைப்பேன்.

இந்த மெர்செடெஸ் பென்ஸ் கார் எப்போது இலங்கையில் பிரபலமானது என்ற விடயம் முப்பத்தைந்தைக் கடந்துவிட்ட அனேகமான கார் அபிமானிகளுக்குத் தெரியும். அறுபதுகளின் ஆரம்பத்தில் தேசிய லொத்தர் சபை ஆரம்பிக்கப்பட்டபோது முதன்முதலாக இலங்கரத்தினா என்றோர் மாண்புமிகுவின் உத்தியோகபூர்வ பாவனையிலிருந்த பென்ஸ் கார் ஒன்றையே முதற் பரிசாகக் கொடுத்தார்கள். மேற்படி காரின் வழுவழுப்பான படம் எல்லாப் பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்தப்பட்டது. பார்த்துப் பார்த்து ரசிப்பேன்.

பின்னாளில் உத்தியோகம் பண்ண கொழும்பு வந்து டார்லி வீதியில் குடியிருந்தபோது அதே வீதியில்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைச் செயலகமும் இருந்தது. அதன் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வெண்ணைக் கட்டி மாதிரி வழுக்கிக்கொண்டு ஒரு கிளாசிக்கல் டைப் மெர்செடஸ் பென்ஸ் காரில் அங்கே அடிக்கடி வந்து போய்க்கொண்டிருப்பார், முதன் முதலாக பென்ஸின் நேரடித் திவ்ய தரிசனம் கிட்டியதும் அங்கேதான்! பார்த்துப் பரவசங்கொண்டேன்....... கம்பீரமும், ராஜகளையும் நிறைந்த பென்ஸ் காரைப் போலவே அடிக்கடி என் பால்ய வயதுக் கனவுகளில் கலந்துவிட்ட இன்னோர் பொருளுமுண்டு. அது எக்கோடியன் என்பதாகும்.

புத்தூர் சிவன் கோவிலின் பிரசித்தமான பூங்காவனத் திருவிழாவில் கண்ணன் கோஷ்டியின் இசைநிகழ்ச்சியின்போதே அதை முதன்முதலாகக் கண்டேன், காதலுற்றேன். அதில் ஸோலோவாக அப்போது பிரபலமாக இருந்த நௌஷத்தின் இசையமைப்பிலான 'தேரே பியார்' என்ற பாடலை அபாரமாக வாசித்தவர் ஆங்கே ஆங்காங்கிருந்து இரசித்த வாலைப் பெண்கள் பக்கம் தன் பார்வையை எறிந்து விட்டு, அதன் வெள்ளி முகத்தில் தந்தத்தினை ஒப்ப அமைந்திருந்த 'கீ'களில் விரல்களை அனாயாசமாக விளையாடவிட்டு, குரோம் சிவப்பு நிற பெல்லோவைப் பற்றி நூற்றியெட்டு விதமான ஸ்டைலில் இழுத்தும் அழுத்தியும் வாசித்து என் மனதைக்கொள்ளை கொண்டிருந்தார்.

விஷயம் விளங்கிய ஒருவரிடம் அதன் நாமம், அது கிடைக்கும் ஆரூர் என்பன பற்றி உசாவினேன். அவரோ அது ஜேர்மனியில் மாத்திரம் கிடைக்குமென்று செப்பினார். ஜேர்மனி என்ன 'அன்டார்டிக்காவுக்குப்' போயாவது ஒரு எக்கோடியன் வாங்கிவிடுவது என்று எண்ணிக்கொண்டேன்.

பின்னால் 'பென்ஸ் கார்கள்கூட ஜேர்மனியில் தான் தயாராகின்றன' என்ற விஷயத்தையும் நானாகவே தெரிந்துகொண்டேன்.

என் கனவுகள் எல்லாமே மறுக்க முடியாதபடி நிறைவேறின. ஆனால் அவை ஒவ்வொன்றிற்குள்ளும் ஹைக்ஹூ கவிதையின் முடிச்சுக்கள் போலச் சில மர்மமுடிச்சுக்களும் பொதிந்தேயிருக்கம். முடிச்சு அவிழ்க்கப்படும்போது மத்தளம் அவிழ்த்த அனுபவமே ஏற்படும்.

பென்ஸ் கார் கனவுள் இருந்த முடிச்சை அவிழ்க்கிறேனே..........

புலம் பெயர்ந்து..... புயலில் அகப்பட்ட பஞ்சுப் பொதியாய் அலைந்து அலைந்து ஜேர்மனியில் வந்து தரையிறங்க நேர்ந்ததா........

கலர் கலராய் தினுசு தினுசாய் எல்லா பென்ஸ் கார்களையும் நல்லாய் ஜொள்ளுடன் பார்க்க முடிந்தது. சில காலம் கழிய.....இந்தா நல்லாய் ஆசை தீர நாளொன்றுக்க 8 மணித்தியாலம் வைச்சு அளைஞ்சு அளைஞ்சு ஓட்டித்தொலை என்று நிஜமாலும் பென்ஸ் காரே கிடைத்தது.

ஆனால் அதன் தலையில் 4 எழுத்துக்களுடன்.... பல கோணங்களில் நின்றும் வாசித்து வாசித்துப் பார்த்தேன்.....அஃது....-T..A..X..I - !!!

வாலிபம் வந்த பின்னால் புதிதாய் வந்த ஆசைகள் நீங்கலாக நான் விஷேச ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருந்த இன்னொரு விஷயம் என்னவென்றால்..... அது மாமிச உணவு வகைகள்தான்!!

ஊர்வனவற்றுள் வண்டிச்சில்லும், பறப்பன வற்றுள் விமானமும் நீங்கலாக எல்லாமே சாப்பிடுவேன்!!!!!!!!. இவ்வதீத ஈடுபாடு என் தாத்தாவின் ஜீன்ஸ் வழி வந்திருக்கவேண்டும்.

அவர் மீன் வாங்கிய உமலுக்கான பணத்தைச் சேமித்திருந்தாலே இன்னுமொரு வீடு கட்டியிருக்கலாம், என்பாள் பாட்டி. அவர் மிலிரறியில் கட்டளை பிறப்பிக்கும் உத்தியோகத்தருக்கும் மேலாக பெரிய பதவி வகித்தவர்; சொல்லப்பட்ட மாமிச பட்சிணி.

திங்கள், வெள்ளிகளில் தாத்தாவைச் சாப்பிடக் கூப்பிடுவதெனில் நிறைய ஓடிப்பிடிக்க வேண்டியிருக்கும். வந்தாலும் முனகிக்கொண்டுதான் வேறுயாருக்காகவோ சாப்பிட நேர்ந்ததைப்போல வைத்து நன்னிக்கொண்டிருப்பார்.

தாத்தாவுக்கு அவர் டேஸ்டையொத்த நண்பர்களும் அதிகம். பிரதி சனிக்கிழமையும் பெரிய கிடாய் வாங்கி அடித்து பங்குபோடுவார்கள்.

மற்ற நாட்களிலும் அவருக்க விறைத்துக் கொண்டு நிற்கும் ஃப்ரஷான மீன் வேணும். நாங்



படிப்பகம்

www.padippakam.com



கள் அச்சுவேலி புத்தூர்ச் சந்தைகளில் வாங்கிவரு பவை சற்றுத்துவண்டால் போதும்........தூக்கி நாய்க் குக்கடாசிவிட்டு இரும்புக்கடை போல் தோற்றம் தரும் தன் பழையசொக் அப்சோபர்களே இல்லாத மொடல் பி.எஸ்.ஏ மோட்டார்ச்சைக்கிளை ஸ்டார்ட் பண்ணி 'புடும்' 'புடும்' என்று வெடித்துய்க கொண்டுபோய் பண்ணையிலோ, பாலைதீ விலோ விளையோ, பாலையோ, கணவாயோ, நண்டோ எதுவானாலும் பெரிய உருப்படியாய் கொண்டுவந்து சேர்ப்பார்.

தேர்ந்த மிளகாயில் கூட்டு அரைத்து, உள்ளி, தாளிதம் சேர்த்து மணங்கமழ குழம்பு, பொரியல், மாங்காய்சேர்த்து சொதியென அம்மா அமர்க்க ளப்படுத்துவார்.

மீனோ, இறாலோ சந்தையில் அவர் மனம் தொடாமற்போயிற்றென்றால்..........

இரண்டு கோழிகள் வாங்கி வருவார்.

மாமி அதிலாக்கும் கறிகளும், எலும்புகளைக் கூட்டி வைக்கம் ரசமும் நாளாவட்டத்தில் எந்நாக் கையுந்தான் அபரிமிதமாக கூராக்கிவிட்டிருந்தன.

வெள்ளிக்கிழமைகளில் ஆரதக்கறிகளுடன் சோறுதொண்டையால் இறங்காமல் தவிக்கும் கொடுமையைப்பார்த்து அம்மா வெளியில் அடுப் புமூட்டி ஒம்லெட் போடடுத்தருவார்.

தாத்தா அடிக்கடி நண்பர்களுடன் தன் - வெபிலி அன்ட் ஸ்கொற்ச்-இரட்டைக்குழல் துவ க்கை எடுத்துக்கொண்டு வன்னிக்க வேட்டைக்கக் கிளம்பிவிடுவார். மானும், மரையும், காட்டுப் பன்றியும் அடிக்கடி நம் வீட்டில் அறுபடும்.

தாத்தா மகா உல்லாசி....... அடிக்கடி நண் பர்களுடன் வெளியூர்ப்பயணங்கள் வேறு செய் வார். ஒரு முறை திருகோணமலைக்கு புறப்பட் டார்கள். கூட்டாளிகளில் ஒருவர் 12 வயதில் ஒரு மகனையும் கூடவே அழைத்து வரவும் தாத்தா என் னையும் வெளிக்கிடச்சொன்னார்.

திருகோணமலை டவுணை அடையவும் இரவா கியது. கடற்கரையோரமாக அமைந்த ஒரு வாடி வீட்டினுள் கார் நுழைந்தது. வாசல்முகப்பில் இர ண்டு பெரிய வெள்ளை அன்னங்கள் கழுத்தை ஒன்றுடன் ஒன்று பின்னியவாறு இருக்கும் பெரிய போட்டோவும், முன் விறாந்தை நீளத்திற்கு வெளி நாட்டு குடிவகைகளில் கலர்ப்படங்கள் இருந்ததும் ஞாபகத்தில் இன்னும் இருக்கிறது.

தாத்தா எனக்கும் மற்றப் பையனுக்கும் சான்ட் விட்சுகள் வாங்கித்தந்தார். அவர்களுக்கு பெரிய லயன் லாகர், ஸ்ரவுட் போத்தல்கள் நுரைத்துக் கொண்டு வந்தன. பெரிய இறைச்சிறோஸ்ட் துண்டங்களை பன்றிமுட்களால் குத்தி கடித் துக்கொண்டு பியர் குடித்தார்கள். சாதாரணமாக வீட்டில் கோழி இறைச்சியுடன் சாப்பிடுகையில் கூட ஈரல், மற்றும் நெஞ்சின் இதமான பகுதிகளை என்னிடம் தந்துவிடும் தாத்தா அன்று என்னையே கண்டுகொள்ளாதது வியப்பாயிருந்தது.

பிறகு அம்மாதான் சொன்னா................ : 'அடேய் அது மாடடா;'

அச்சுவேலிவரை தனியே சைக்கிளில் போய் வர வீட்டில் பேர்மிஷன் கிடைத்தபோது முதன் முதலாக அப்பேரூரின் பேமஸ் தயாரிப்பாம் கொத்துரொட்டிக்கடைக்கே முதல் விஜயம் புரிந் தேன். அதன் சுவை நாவின் சுகை அரும்புகளின் ஜீன்களுள் கலந்துவிட ஒவ்வொரு சனியும் டியூ ஷன் முடிந்த பின்னால் சைக்கிள் தானாகவே கொத்துரொட்டிக்கடைக்கேகியது! கொத்து சுவை த்த விஷயம் தெரியவரின் வீட்டில் தலைவாச லுக்குள் புகவே அனுமதிக்க மாட்டார்கள். (தாத்தா மிலிடரிக்காரன் என்று விதிவிலக்கு).

எனக்கு பன்னிரண்டு வயது இருக்கும்...........

ஒரு மாரிக்காலம ஊர்க்குளங்கள் எல்லாம் நிரம் பியிருந்த நேரம்..........

நுணுவில் குளத்தில் போய் நீந்தலாம் என்று நண்பர்கள் ஆசைகாட்டினார்கள்.

வீட்டில் எப்படியோ ஒரு டிமிக்கி கொடுத்து விட்டு குளத்தில் போய்க் குதித்தோம். மேய்ச்சல் மாடுகள் இறங்கி தண்ணீர் குடிக்கும்படியாக குளத் தின் அடிமட்டம் சாய்வானது. மறுகரை மகா ஆழம்!

எம் பகுதியில் மாரியில் பூக்கும் ஒரு ஜாதி வெள்ளை 'ஓர்கிட் பூ' வொன்று தனியாக மறு கரையில் பூத்திருக்கவும் ஒரு சோப்ளாங்கி குளத் தின் குறுக்காக நீந்திப்போய் அதைக்கொய்து வரு பவனுக்கு 5 ரூபாய்கள் பரிசளிப்பதாக அறிவித் தான்.

பிருஷ்டத்தில் 3 தபாற்பெட்டிகள் உள்ள களி சானை வரிந்து கட்டியிருக்கும் பயலிடம் ஏது ரூபாய் என்ற சிந்தனையில்லை. குதித்துவிட்டேன், பணம் கிடைக்குமா கிடையாதா எனக்குப் பொருட் டேயல்ல.........எனது நீச்சல் திறமையை இந்த சர்வ தேச மத்தியஸ்தரிடையே காட்டிப் பெருமை பெற வேண்டுமென்பதே என் அவா!

நீந்திப் பாதிக்குளம் தாண்டமுன்னே மூச்சிரைத் தது, பண்ணியது மூடத்தனமென்பது நன்கு புரிந்தது...........

கையைக்காலை மேற்கொண்டு அடிக்கமுடி யவில்லை. ஆழ்கடலில் இறகு ஓய்ந்த பறவையா னேன். அமிழப்போகிறோமென்ற பயத்தில் உடல் சோரவும், பாய்மரக்கப்பலாக புற்கள் குவிந்து சிறிய போர்த்திண்டு ஒன்று காலில் தட்டுப் பட்டது. 'அப்பாடா!......பிழைத்தேன்'. அதில் நின்று இளைப்பாறிக்கொண்டு தகரம் பிள்ளையாருக்கு நன்றி சொன்னேன்.

பின்னொரு விசையில் மீண்டும் புறப்பட்டுப் பூவைப்பறித்துவிட்டேன்! நண்பர்கள் ஆரவாரித்த னர். இனி திரும்பவேண்டும்........பயமாயிருந்தா லும் நடுவில்

புற்போர்த்திண்டு கை கொடுக்கும் என்ற நம் பிக்கை இருந்தது. திரும்பினேன். மையப்பகுதியை அடைந்ததும் மூச்சிரைக்கவும் திண்டைத்தேடி னேன். அது பிய்ந்தோ நகர்ந்தோ போயிருக்க வேண்டும்............காணவில்லை......!

அவயவங்கள் சேர்ந்து முக்குளிக்கத்தொடங்க வும் நண்பர்கள் சும்மா நான் தமாஷ் பண்ணுகி றேன் என்று எண்ணிவிட்டார்கள். நீந்திப்யபோ னவன் திரும்பி வரமாட்டானா என்ன?

கத்தவென்று வாய் திறந்தால் வாய்க்குள் தண் ணீர் போனது.

மூக்கு வழியாகவும் தண்ணீர் உள்ளே போய் சுவாசக்குழாய்களில் சுட்டது. கைகள் என்னதான் நாலாங்காலத்தில் தவில் வாசித்தாலும் உடல் கீழே



படிப்பகம்

www.padippakam.com



கீழே போய்க்கொண்டிருந்தது.

தண்ணீருக்குள் அமுங்கும்போது அத்திண்டு எங்காவது தென்படுகிறதா என்று பார்த்திருக்கலாம். மூளை நிதானித்து சிந்திக்கும் நேரமா அது? மரணாவஸ்த்தையை அனுபவிக்கத்தொடங்கினேன். நான் அமிழ்ந்து கொண்டிருக்கவும் பயந்து பெடியள் கூச்சல் போட்டிருக்க வேண்டும்......

அருகில் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த இளைஞனொருவன் பாய்ந்தோடி வந்து குதித்து என்னைக் கரையேற்றினான்.

நுணுவில குளம் பல பேரைப் பலிகொண்டதிருக்குளம்.

நான் அங்கு போன, நீந்திய, தவில் வாசிச்ச விஷயம் ஏதாவது அப்பருக்கு மட்டிலும் தெரியவந்துதோ முதுகுத்தோலை உரித்து இன்னொரு தவில் கட்டிவிடுவார்.

மறு நாள் யாழ்ப்பாணம் போன தாத்தா மோட்டார்சைக்கிளின் பின்னமைந்த வலைப்பெட்டியில் கால்கள் பிணைத்துக் கட்டியபடி இரண்டு ஆமான கோழிகளுடன் வந்து இறங்கினார்.

எங்கள் வீட்டு இறைச்சியுடனான ஒரு வேளை சாப்பாட்டுக்காகவும், தாத்தா கொடுக்கும் அரைக் கிளாஸ் மென்டிஸ் ஸ்பெஷல் சாராயத்திற்காகவும் கோழி உரித்துத்தரும் குடியானவன் சுந்தரனுக்கு அன்று ஏதோ பிற சோலி. வரவில்லை தாத்தா களத்தில் இறங்கிவிட்டார். மிலிட்டரிக்காரனாச்சே விடுவாரா?

பழைய நெஸ்ரோமோல்ட் பேணியொன்றில் நிறையத் தண்ணீர் கொண்டுவரச் சொன்னார். கோழியை கால்கள் பிணைத்தபடியே இருக்க இறகையடிக்க விடாமல் அமுக்கிப்பிடித்தபடி அதன் தலையை தண்ணீருக்குள் முங்கினார்.

கோழி முக்குளித்துத் திமிறியது, கால்களை உதறியது, தாத்தாவின் இடுக்கிப்பிடியிலிருந்தும் வழுக்கி விட்டு இறகுகளை மின்விசிறியைப் போலும் அடித்தது. சூழவிருந்த தூசும், புழுதியும் காற்றில் பறந்தன. தாத்தா இறகுகளுக்குள்ளாக அதன் இடுப்பைப்பற்றி விரல்களால் சிறுநீரகங்களை நசுக்கினார். இறகடிப்பின் வேகம் படிப்படியாக குறைந்தது.

இக்கோழி இப்போது அனுபவிக்கும் ஒவ்வொரு மரணாவஸ்த்தைக் கணங்களும் நேற்று நான் அனுபவித்தது............ எனக்கு ஒரு ஆபத்பாந்தவன் கிடைத்தான். பாவம் கோழிக்கு............?

உலகத்தில் உள்ள துன்பத்துள் எல்லாம் தலையாயது மரணவஸ்தைதான்! 'கோழி அனுபவிக்கும் அவஸ்த்தையை' எண்ணி எனக்குள் அழுதேன்.

கோழியின் சிவப்பாயிருந்த கொண்டைப் பூக்கள் கறுப்பாய் மாறவும் அதைத்தரையில் வைத்துவிட்டு மற்றக்கோழியையும் முங்கினார்.

நாவுக்கு ருசியாய் ஒரு வேளை சாப்பாடு தருவதற்காய் தன் உயிரையே தரும் அவலம்........அச்சிறு பறவைக்கு ஏன் நேர்ந்தது?

எமக்கு பழக்கதோஷத்தால் எமக்காக மரணிக்கும் உயிர்களின் அவஸ்தை புரிவதில்லை.... ..பொருட்படுத்துவதில்லை......தொடர்ந்தும் கொன்று கொண்டிருக்க முடிகிறது.

நான்தான் பாதியாக அதை அனுபவித்தவனாயிற்றே.............

இனி எனக்காக ஒரு உயிரும் மரிக்க வேண்டாம்..........

இனி எனக்காக ஒரு உயிரும் மரிக்க வேண்டாம்..........

தீர்மானித்துக் கொண்டேன். அம்மாவிடமும் சொல்லிக்கொண்டேன். அம்மாவுக்கு என் திடீர் ஞானோதயத்தின் 'அடி முடி' ஒன்றும் புரியவில்லை. சொன்னார்:'அதொன்றும் யஉன்னால முடியிற காரியமில்லை போடா..........!'

நான் பிடிவாதமாக இருந்தேன். 'பாதகமில்லை.....ஒம்லெட் ஆவது சாப்பிர்றா'....... என்று எவ்வளவோ வற்புறுத்தியும் நான் மசியவேயில்லை. அம்மாவும் பாட்டுக்கு விட்டுவிட்டார்.

இரண்டு கிழமைகள் போயிருக்கும்.

உறவில் மைத்துனர் ஒருவருக்கு திருமணமாகியது. வீட்டில் தம்பதிகளை விருந்துக்கு அழைத்தார்கள். விருந்தென்றால் கேட்கவும் வேணுமா? அம்மாவும், மாமியும் போட்டி போட்டுக்கொண்டு அமர்க்களப்படுத்தினார்கள். மாமிசவகைகள் ஆடு, கோழி, நண்டு, கணவாய், இறால் என அனைத்துமே குசினியுடன் அணிவகுத்தன.

இறைச்சிவகைகள் சமைப்பதை அம்மா பொறுப்பெடுத்துக்கொண்டா. அவருக்கத்தான் அதில் விஷேஷ நிபுணத்துவம் உண்டு.

மாமி கொழும்பில் படித்தபோது ஒரு முஸ்லிம் தோழியின் சினேகிதத்தால் குசினிவரை புகுந்து அவர்கள் பாணிச்சமையலைப் பண்ணப் பழகிக் கொண்டா.

பாலை மீனையும், அறக்குளா மீனையும் ஒரு மைக்கூட்டுப் பெட்டியின் பருமனுக்கு திண்மத் துண்டங்களாக வெட்டி, பின் ஏதோ மசாலைகள், வியஞ்சனங்கள், பொடிசெய்த உள்ளி, மிளகு, கறுவா எனப் புரட்டி, சிறிது கொத்தமல்லி, ரம்பைக்குழை எல்லாம் போட்டு ஒரு வதக்கல் புரட்டல் பண்ணி மேசையில் பரிமாறுவதற்காய் ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் இளமஞ்சள், பிறவுண் துண்டங்கள் என மாறிமாறி அழகாக அடுக்கப் பட்டபோது அவை என்னைப்பார்த்து ஒரு மோகினிச் சிரிப்பை வீசின!

மேலும் சாண் நீளமிருந்த, சிவப்புக் கூந்தல் களையப்பெற்ற பண்ணைக்கடல் இறால்கள், சின்னவெங்காயத்துடன் சேர்த்து பொன் நிறத்தில் தீய்ந்தபோது சுழன்று எழுந்து வந்த நறுமணம் என் நாசியில் மொத்தி மொத்தி என்னை நிராயுதபாணியாக்கி நிலைகுலையப் பண்ணியது!

இந்த மணமே வராத ஓரிடத்தில் போய் இருப்போமென்று தாத்தாவின் கார் செட்டினுள் போயிருந்தால் விக்ரமாதித்தன் பூதம் போல் அங்கேயும் மணம் துரத்திக்கொண்டு வந்து தாக்கியது!

எனது அவஸ்த்தை யாருக்கும் புரிவதாயில்லை. தாத்தா ஒரு கிளாஸ் மென்டிஸ் ஸ்பெஷலை உள்ளே இறக்கிவிட்டு, கூட்டத்தில் விருந்தினருடன் எதோ இங்கிலீஷில் விளாசிக்கொண்டிருந்தார். அக்காவை புதுப்பெண்ணைத் தனியாகத் தங்கள் அறைக்கு அழைத்துப்போய் 'எஸ் கொண்டை' பிடிக்குமா இல்லை 'பொனிரெயில்' பிடிக்குமா என்று செவ்வி கண்டுகொண்டிருந்தனர்.

சமையல் முடிவடைந்து சாப்பாடுகள் அனைத்



படிப்பகம்

www.padippakam.com



தும் மேசைக்கு எடுத்துவரப்பட்டு எல்லாருமே சாப்பிடத் தயாரானபோது, "அட .......சமையல் அவசரத்தில் இவன் தம்பியின்ரை மரக்கறியை மறந்து போனன்........" என்றபடி குசினிக்குள் ஓடிய மாமி "எங்கே மச்சாள் முழு நீளத்தில கத்தரியொன்று வைச்சன் காணேல்ல......" என்று கையில ஒரு முழம் போட்டுக்காட்டிய படி வாசலில் நின்று அம்மாவிடம் கேட்டா. "காணாட்டாப்போகுது......... அந்தப் புடலங்காயைக் காய்ச்சுங்கோவன்..........." என்று இவ பதில் டயலொக் பேசினா. இரண்டுமே நமக்கச் சத்துராதியான காய்கள்!!!!

"இதென்ன புதிசாய் ..........?" எல்லாமே ஒரு 'செட் அப்' நாடகமென்று அப்போது விளங்கவில்லை. முக்காற்பங்கு மனசு பலவீனப்பட்டுப் போயிருந்தது, காற்பங்கு மனசுக்கு ஏற்கெனவே சமைத்துக் களைத்துப் போயிருந்தவர்களை இன்னும் சிரமப்படுத்த இஷ்டமில்லை. தலையைக் கவிழ்ந்தபடி சொன்னேன்: "-மாமி உங்களுக்கேன் வீண் சிரமம்..........? நீங்கள் சமைச்சதையே நான் சாப்பிடுகிறேன்............!"

மாமியும், அம்மாவும் ஒருவரையொருவர் மேற்கண்ணாற் பார்த்து நமுட்டுச்சிரிப்பை உதிர்த்ததை நான் காணவேயில்லை!

ஆரம்ப ஜெர்மனி வாசத்திலும் என்னதான் விறைத்துப்போயிருந்த கோழியானாலும் நானே அதன் அவயவங்களை முறித்தும், நெஞ்சை வகுத்தும் துண்டு பண்ணி சமைத்த பின்னால் சாப்பிட மனசு மிகவும் கஷ்டப்பட்டது. சைவனோ, பௌத்தனோ, பௌராணிகனோ மாமிசமே புசியாதவர்கள் மீது மிகுந்த மரியாதை ஏற்பட்டது. ஒருமுறை சில நண்பர்களுடன் ஹம்பேர்க்கில் வெளிநாட்டவர் வதியும் இல்லமொன்றிற்கு 'தமிழர்களும் நிறையப்பேர் இருக்கிறார்கள்' என்று கேள்விப்பட்டுப் போனோம். எதேச்சையாக அவர்கள் குசினிக்குள் நுழைந்த எனக்குப் பேரதிர்ச்சி! எங்களூர்ப்பள்ளிக்கூடத்தில் என்னைவிட 2 வகுப்புக்கள் ஜூனியராகப்படித்த ஐயர்பெடியன் ஒருவன் பெரிய கோழியொன்றை மல்லாக்கப்போட்டு வகிர்ந்து கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் அசடு வழிந்து கொண்டே சொன்னான்: "——என்ன செய்யிறது இஞ்சை வந்து எல்லாத்தையும் மாத்த வேண்டிய தாய்ப்போச்சு-----

நீங்களெப்ப வந்தனீங்கள்........?"

"---------மாமிச உணவுகள் மரக்கறியைவிட சுவையானவைதான் நானும் ஒத்துக்கொள்றன் ----- ஆனால் பிறப்பிலிருந்தே அதன் சுவையை என்னவென்றே அறியாமல், உயிர்ப்பழி சேராமல் வாழ்ந்து விடுவதும் ஒருவகைத் தவம்------ஒரு வகைப் பாக்கியம்---- மாமிச உணவுப் பழக்கத்துக்கு நொடியில மாறலாம்-—ஆனா அதைத் துறப்பதென்பதுதான் வல்லை!" ஐயர் ஏன் துறக்க வேணும்? என்பது போல் என்னைப்பார்க்க வேறொருவர் சொன்னார்:---" ஐயர் பாவம்------- இரண்டு முட்டையெண்டாலும் பொரிக்காட்டில் அவர் துண்டாய்ச் சாப்பிடமாட்டார் -----!"

ஒரு வாரம் கழித்து எனக்கு ஒரு கடிதம் வந்திருந்தது.

அன்பான சகோதரனுக்கு:

உங்கள் வார்த்தைகள் எந்தன் ஆழ்மனதில் தைத்து விட்டன.

இஸ்லாமிய ஷரி ஆ விலோ, குர் ஆனிலோ ஒரு புனித வசனம் வருகிறதாம்---- "நீ தப்பானபாதையில் எவ்வளவு தூரந்தான் சென்றிருந்தாலும் பரவாயில்லை....... ஆனால் திரும்பி வந்து விடு!---" என்று.

நீங்கள் நான் திரும்ப வேண்டிய எல்லையை எனக்குக்காட்டி விட்டீர்கள். நான் திரும்பிவிட்டேன். உங்களுக்கு என் நன்றிகள் என்றும் உரியது.

இப்படிக்கு,

இ. சங்கரநாராயண சர்மா

ஹம்பேர்க்

கடிதம் வந்த நாள் முதலாய் "ஊருக்குத்தான்டி உபதேசம் உனக்கில்லையடி..." என்ற இருக்க முடியவில்லை.

எனது பிரியமான 'ஹம்பூகர்'கூட தொண்டையால் நகர மறுத்தது!!

ஐந்துபேர் கொண்ட எமது சமறியில் எனக்கு சமையற்கலை பூஜ்ஜியமாதலால் நான் கொள்வனபுப் பணிகளை கவனித்து வந்தேன்.

ஓரிடத்தின் அட்ரசைத்தந்து அங்கே "இறைச்சி அடித்து விற்பார்கள் விலையோ நல்ல மலிவு போய் வாங்கி வா", என்ற அனுப்பினார்கள்.

அங்கோ ஆறு மாசயக்கன்றுகளைக்கூட அறுப்பதற்காக கூண்டில் அடைத்திருந்தது நெஞ்சை உலுப்புவதாக இருந்தது!

"இத்தனை பிஞ்சுக்கன்றுகளைக்கூடவா அறுப்பீர்கள்?" என்று கேட்டதற்கு "கேள்விப்படவில்லையா கால்ஃப் ஸ்ரேக் என்று........அதற்குத்தேவையான மென்மையான இறைச்சி கன்றுகளிலேதான் கிடைக்கும்" என்று பதில் தந்தார்கள்.

என் பகுத்தறிவுக்கு எட்டாதன சில: இந்த மிருகங்கள் பலிக்களத்திற்கென்று வந்துவிட்டால் எத்தனை நாட்கள்தான் குடலைக் காயப்போட்டாலும் ஒன்றுமே தின்னாதாம்!

ஊரிலும் மாடடிக்கும் ஆசாமியொருவன் எங்கள் தெருவுக்கு வந்தாலே போதும்.......மாடுகள் சிவப்புத்துணி கட்டியது போல மிரளும்!

ஒரு முறை மாடுகள் கூட்டமாக மேய்ச்சல் தரவையிலிருந்து திரும்பிக் கொண்டிருக்கையில் இவன் சைக்கிளில் வந்து அவற்றிடையே புகுரவும் அவை சிதறித்தறிகெட்டு ஓடத்தொடங்கின. அவற்றை ஒட்டி வந்த அம்மணியோ அகராதிகள் எதிலும் அடங்காத அரும்பொருள் வார்த்தைகள் சேர்ந்தாற்போல தொடர்ந்து அணிவகுத்துவர அரைமணிக்கும் மேலாக அவனைத் திட்டித் தீர்த்தாள்!.

அயலூர்களிலும் மாடுகள் அவனைக் கண்டால் மிரளும்!


இப்போதெல்லாம் அசைவமுள்ள மேசை அருகே போனாலோ பிளேட்டில் நான் முன்பு ஆசையாய் வளர்த்துப் பின் நாயோ, பேயோ கொண்டு போய்விட்ட அழகான வெள்ளைச் சீமை முயல் சிவப்புக்கண்களுடன் என்னைப் பாந்தமாய்ப் பார்த்தபடி லேசாக நடுங்கியபடி படுத்திருக்கிறது......... ஆவலாய் தூக்கினால் அதன் வயிறு பிளந்து கிடக்கிறது! கை இரத்தத்தில் தோய்ந்து சொட்டுகிறது.......!




படிப்பகம்

www.padippakam.com







காயத்ரி கொன்ஸ்ரன்ரைன்



படிப்பகம்

www.padippakam.com



சில வேளைகளில் இன்று புதிதாய்ப் பிறந்த குஞ்சுகள் வெள்ளையும், மஞ்சளும், சிவப்புமாய்.......நிறைந்திருக்கின்றன.

சாணே உயரம் வரும், பால் மணக்கம் ஆட்டுக் குட்டிகள். அலங்க மலங்க விழிக்கம் பார்வையில் உயிர்வழிய, அலை அலையாய்ச் சுழித்தோடும் ரோமம் நெஞ்சோடு நெருக்கிக்கட்டிக்கொள்ள வேண்டும்போலிருக்க......கை நீட்டித்தொட பயமாயுள்ளது.............. மறுபடி விரல்கள் குருதியில் தோயுமோ......?

இதை யாரிடமும் சொல்லவும் முடியாது. சொன்னால் குண்டுக்கட்டாகத் தூக்கிக்கொண்டு போய் சைக்கியாட்டிஸ்ட் முன்னால் போட்டுவிடுவார்கள்.

படுத்தாலும் தூக்கம் முன்பு போல் வந்துவிடுவதில்லை.............

மான்குட்டிகளும், வாத்துக்களும், பெங்குயின் தவ்வல்களும் உடம்பை என்னில் தேய்த்துக் கொண்டு வந்து ஏதேதோ பேசுகின்றன!

அவை என்மனச்சாட்சியிடம் என்ன பேசுகின்றன என்று தெளிவாக புரிகின்றது. நான் ப்ாசாங்கு பண்ணமுடியாது!

நான் அவற்றிடம் வாக்குறுதி பண்ணியதை என் டயறியில் எழுதிப்பார்க்கிறேன்:

எனவே இனி.
எனக்காக ஒரு கன்றும் அலறவேண்டாம்
நடு நசியின் பின்னிரவில் ஒரு ஆடும்
தலை அறுந்து துடிக்க வேண்டாம்----இனி
ஒரு குஞ்சும் மூச்சடங்கிப் பதைக்கவேண்டாம்!
வெள்ளிச்சிறுமீன்களே சுறாக்களே
நண்டுக்கனவான்களே ........இம்சிக்கேன்
இனி நும்மை நானே!
நான் விழையும் சுதந்திரம் உம்மையும்
சேர்த்து தான்!
போராளியே சுதந்திரத்தைப் பறிப்பதா?

வெட்கம்.....! வெட்கமிஃது........!
இளமார்பாய் விளைமீன்கள் தருமோகம்
வான்கொண்டு தூள்செய்தேன் சத்தியம்!
ஓ! என் பட்டு வெள்ளாட்டுப் பூங்குட்டியே......
நீயும் நானம் இந்தப்பக்கம் வருவது.........
இம்முறை மட்டிலுமாய் இருக்கலாம்!
ஆதலால் கை கொடு.........
விளையாடி நாம் ஒய்ந்த பின்பு
நட்புடன் நாம் விடைபெறுவோம்!
எனவே இனி...... எனக்காக......

எழுதி முடித்த உடன் உள்ளூர்ப் பத்திரிகை ஒன்றுக்கு அனுப்பிவைத்தேன். மறுவாரமே பிரசுரமாகியது.

சில நாட்கள் செல்ல.......லண்டனில் இருந்து உறவும், நண்பனும், மார்க்சிஸ்ட்டுமான விசாகன் ஒரு வாரம் ஈஸ்டர்விடுமுறையென்று பெர்லின் வந்தான்.

"ஆமாங்.... கவிதை பார்த்தேனே.....'சிறகு' ...லே! எல்லாம் நிஜமா......?" என்றான்.

"ஓம்" என்றேன்.

"நீதான் பூனையாச்சே..... எப்பிடிச் சாத்தியமாயிற்று......?"

"எல்லாம் மனதில் வந்துவிட்ட ஒரு மாற்றந்தான்........."

"அப்போ முன்பெல்லாம் ஏன் மாற்றம் வரவில்லை......?"

"மனதில் பாவம் பண்ணுகிறோம் என்ற சிந்தனை இல்லாத நாளே இல்லை. இருந்தும் சுவை உணர்வுகளுக்கு அடிமைப்பட்டு அதை வெல்லமுடியாதவனாக இருந்துவிட்டேன் தோழரே!!!"

"உலகத்தில பயோலொஜிக்கல் பலன்ஸ், ஃபுட் செயின் என்று சில விஷயங்களிருக்கு..... அதில வெஜ், நொன் வெஜ் என்கிற விஷயங்களுக்கே இடமில்ல........ மனிஷங்கிற லாஸ்ட் லிங்..... விலங்குகள் சில பெர்செண்ட் வெஜிடேரியன்ஸா மாறிடதால உலகத்தில் எதுவுமே புதிசாய் ஆகிடப்போறதில்லே...... அத்தோட ஆத்மீகிகளுக்கு....... ஐ..... மீன்.... அத்வைதிகளுக்குகூட பாவம், புண்ணியங்கிறது இருவேறு சங்கதியளில்லைத் தெரியுமோ.....?"

"தெரியும்...... என் எளிமையான சிந்தனை எப்பிடியென்றால்.....ஜீவகாருண்யம் என்கிற உணர்வு மனிதன் என்கிற விலங்கிலதான் வேறெந்த விலங்கையும் விட சிறப்பாய் வளர்ந்து விட்டிருக்கு.....! நீ சொன்ன விஷயங்களும் இதே மனுஷன் அறிவில பட்ட விஷயங்கள்தான்...... ஆனால்.... அறிவாலயோ புத்திசாலித்தனத்தாலோ இல்லை தர்க்கத்தாலேயோ விளக்கப்பட முடியாதது ஜீவகாருண்யம்!.... நீ தியறிடிகலாய் சரி என்று சாதிக்கிற ஒரு காரியத்தை ஒரு சமயத்தில உன்னாலகூட பண்ணமுடியாமல் போகும் பார்.......!"

"நான் அப்பிடியில்லை..... எனக்குச் சரியென்று பட்டதை எந்தக்கட்டத்திலும் செய்யத்தயங்கிற ஆள் நானில்லை....."

"இல்லைத்தோழரே.... உன்னாலும் இயலாமப் போகலாம்..... !"

என் மறுப்பு அவன் தன்மானத்தை மிகவும் சுட்டிருக்கவேணும்.......

எழுந்து "1000 டொய்ச் மார்க்ஸ் பெட்....." என்றான்.

"விஷயத்தைக் கேளாமலே......பெரிய்ய பெட்.....லாம் பிடிக்கிறியே......"

"சரி.....சொல்லு....."

"கண்ணா நீ காஃப் (கன்று இறைச்சி) சாப்பிடுவாயில்ல......?"

"யெஸ்......வை.......நொட்..........?"

"அப்படியென்றால்......சரிதான்.....நீ வந்த களைப் புத்தீர முதல்ல குளிச்சு சாப்பிடு..... நம்ம விஷயத்தைப் பின்னேரம் வைச்சுக்கொள்ளலாம்......."

சாப்பாடானதும் அவன் சற்றே தூங்கினான். நானும் அவன் அங்கிருந்து எனக்காக வாங்கிவந்த சி.டி.டி ரோமில் இருந்த கொம்பியூட்டர் புரோக்கிராம்களைப் போட்டு பார்த்துக்கொண்டிருந்தேன்.

தூக்கம் கலைந்து கண்விழித்தும் சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டு...... "என்னாச்சு....பெட்....?" என்றான்.

நான் மறந்தாலும் அவன் விடுகிறமாதிரியில்லை....!

அவனை நேராக குசினிக்குள் அழைத்துப் போனேன். அங்கு ஷெல்ஃப் ஒன்றைத் திறந்து அங்கிருந்த ஆறேழு தினுசான கத்திகளில் ஒன்றை



படிப்பகம்

www.padippakam.com



எடுத்துக்கொள்ளச் சொன்னேன்.

"ஒரு மாதிரி முழித்துப் பார்த்தபடி என்ன சொல்றே நீ.....?" என்றான்.

"வேறொன்றுமில்ல..... பேர்லின் புற எல்லையில ஒரு பெரிய ஃபார்ம் ஒன்று இருக்கு..... இப்ப போனமெண்டால்.... நல்ல மலிவில கன்றோ, ஆடோ, இல்லை பன்றியோ எது வேணுமென்றாலும் உயிரோட வாங்கலாம்...... நான் ஸ்பெஷல் பெமிஷன் எடுத்துத்தாறன், நீ என்ன பண்ணிறாய்.... அதை வெட்டித்தாறே....... மேலே நான் றோஸ்டோ, குழம்போ, ஸ்ரேக்கோ எதுவேணுமென்றாலும் உன் இஷ்டம்போல பண்ணித்தாறனே.....!"

"நீ என்ன விளையார்றயா....... நானென்ன புட்சரா.......?"

"ஒரு நாளைக்கு புட்சராத்தான் இருந்து பாரன்.... கன்று சாப்பிர்றத உனக்கு உடன்பாடுதானே கண்ணா.......?"

"எனக்குப் பழக்கமில்லாத ஒன்றைப் பண்ணச்சொன்னால்.....?"

"உன்னை இதைப்பழகி பேர்லினில இறைச்சிக்கடையொன்றா வைக்கச்சொல்றன்.....? கொள்கையில சரியென்று நீ ஒத்துக்கொள்ற ஒரு காரியத்தை ஒரு நாளைக்க ஒரேயொருதடவை செய்கையில பண்ணிக்காட்டு என்கிறதுதான் என் கட்சி...!"

"நீ என்னை அதிகமாய்த்தான் சோதிக்கிறாய்...!"

அவன் முழிசலையும், அசடு வழிந்ததையும் பார்க்க சங்கடமாயிருந்தது.

"கொலையை நாம தூர இருந்து பார்க்கிறதாலே...... அல்லது பார்க்காமலே விடுகிறதாலே தான் அந்த வலி அவஸ்தை எம்மை அவ்வளவாய் பாதிக்கிறதில்லை... ஒரு ருவண்டா படுகொலைகள் மாதிரி..... நேர்ல மகா கொடுமைடா...... நீ இஷ்டப்பட்டா நாளைக்கு உன்னை ஒரு இடத்துக்கு கூட்டிப்போறன் வாறியா....?"

"ஏன் ஜெர்மனியில இப்பவும் மரணதண்டனை கொடுக்கிறவழக்கம் எல்லாமிருக்கா....?"

"மனுஷருக்கில்லை...."

இப்படியே நாம் பேசிக்கொண்டிருக்க மற்றைய அறைவாசிகளும்- ஒவ்வொருத்தராக வந்து சேரவும் எல்லோருக்கும் இது....விசாகன்..... பயோ கெமிஸ்ட் என்று அறிமுகப்படுத்தினேன்.

இரவு முழுக்க நண்பர்களுடன் தினவுதீர 'பிக் பாங் தியறி', ஒளி வருடங்கள், றிலேட்டிவிட்டி தியறி என்று பிரபஞ்சவெளியில் அகப்பட்ட எல்லாவற்றையுந்தான் ஆராய்ந்தார்கள்!

மறுநாள் ஒரு சனிக்கிழமை. இறைச்சி வாங்கலாமென்று (எம் வாடிக்கையான இடத்திற்கு) இருவரும் புறப்பட்டோம்.

அப்போது பார்த்து பெரிய லொறியொன்றில் மாடுகள் வந்து இறங்கிக்கொண்டிருந்தன. மாடடிக்கும் கூட்டங்களை அவர்கள் என்னதான் தண்ணீர் பீய்ச்சிக்கழுவிக் கொண்டிருந்தாலும் காற்று ஒருவித இரத்த வெடுக்கைக்கொண்டிருந்தது.

மாடுகள் மிரண்டன! லொறியால் இறங்கவே மறுத்தன!! விட்டுவிடுவார்களா?

கண்கள் தெரியாதபடிக்கு மாட்டின் கண்ணை ஈரத்துணியால் மூடிவிட்டு, கழுத்தில் இரும்புச்சங்கிலியை பிணைத்து மின்மோட்டார் இணைக்கப்பட்ட கப்பியால் இழுத்து இறக்கினார்கள்.

எந்த ஆபத்பாந்தவனுமே வரமுடியாத சூனியத்தில் இருமருங்கிலும் இரும்புக்கழாய்க்கிராதிகளின் வழிகாட்டலில் அவை பரிதாபமாக உள்ளே சென்றன.

ஒவ்வொரு மாடும் உள்ளே சென்று மறையவும் 'ஷுக்' என்றொரு சத்தம் மட்டிலும் கேட்கும்..... பின் அக்வட்டத்தின் கூரைவழியே பொருத்தப்பட்ட குழாய்களில் வழுக்கிக்கொண்டு வரும் கொக்கிகளில் இறைச்சியாக தொங்கிக்கொண்டு குறிரூட்டப்பட்ட அறைகளுள் நுழைந்தன.

நாங்கள் வந்த நோக்கம் மறந்து இதையே பார்த்துக் கொண்டிருக்கவும்....... கரட்டி ஓணான் போல சிவந்து பார்த்தவுடனேயே யாரும் போலாந்துக்காரர் என்று சொல்லிவிடக்கூடிய தடிமனான ஆசாமிகள் இருவர் கையில் கொண்டுவந்த சிறிய றொக்கட் லோஞ்சர்கள் போலிருந்த கொலைக்கருவிகளை ஓரமாக இருந்த மரக்குற்றியொன்றில் சாய்த்துவைத்துவிட்டு சிகரெட் பிடித்தார்கள்.

அவர்களிடம் போய் பவ்யமாகவே..... "எப்படி இவ்வளவு சீக்கிரத்தில் இறைச்சி வெட்டுகிறீர்கள் என்பதை நாங்கள் பார்க்கலாமா.......?" என்றோம்.

"முடியாது...... தடுக்கப்பட்டுள்ளது.....!" என்றனர் இருகுரலில்!

தமிழராய்ச்சே.....விட்டுவிடுவோமா....? 'ஒரு பியர்க்குலைக்க ஆனதை' கையுள் வைத்து அமுக்கினோம்...... காவிப்பற்களை ஒரு தரம் முழுமையாகக் காட்டிவிட்டு உள்ளே கூட்டிப்போயினர்.

காங்கேயன்காளை மாதிரி பெரிய கொம்புடன் ஒரு எருது வந்தது. ஒருத்தன் அக்கருவியை மாட்டின் நெற்றிப்பொட்டில் வைத்துக்கொண்டு அதன் விசையை அழுத்தவும்.......'ஷுக்' என்று ஒரு சத்தம் வந்தது..... அவ்வளவுதான்!

அந்த் லோஞ்சருள்ளிருந்து ஒரு மாட்டுவண்டியின் அச்சு அளவுக்கு இருக்கக்கூடிய உலோகக் கதிர் உரு ஒன்று புல்லட் மாதிரிப்புறப்பட்டு நெற்றிப்பொட்டைத் தொளைத்துக்கொண்டு பிடரிவரைபோய் மூளையைச்சிதைத்து விட்டுத் தேமே என்று திரும்பவும்...... மாடு தொபுகடீர் என்று பாட்டில் சாய்கிறது.....!

ஒரு சிறு துடிப்போ...... அசைவோ இருக்க வேணுமே.....ஊகூம்......!

ஒரு மரக்குற்றியைப் போல மாடு இன்னொரு பட்டறைக்கு தானுயர்த்திகளால் மாற்றப்படுகின்றது...... தோலுரித்தலும், இரைந்து கொண்டுவரும் மின்வாள்களால் துண்டாடலும் கண்முன்னே கணத்தில் நிகழ..... இறைச்சியாக குளிரூட்டல் அறைக்குள் நுழைகிறது.......!

இந்த ஒரு வாரம் பேர்லினில் இருக்குமட்டும் உனக்கு சப்போட்டாக நானும் மரக்கறியே சாப்பிடுறன்..... என்றான் விசாகன்.

இலண்டன் போன பின்னால் எழுதினான்.

"அது என்னவோ தெரியவில்லை சாப்பிடவென்று அமர்ந்தால்..... அந்த வெள்ளை எருதும், கன்றுகளுந்தான் மேசையில படுத்துக்கொண்டு என்னைப் பரிதாபமாய்ப்பார்க்குதுகள்.... இனி மேல் என்னால ஜென்மத்தில மாமிசம் சாப்பிடலாமென்று தோன்றேல்ல....." ❑



படிப்பகம்

www.padippakam.com



# புலம்பெயர்ந்து வந்ததினால்

வேலணையூர் பொன்னண்ணா

புலம்பெயர்ந்து வந்ததினால் - இது
பொன்னான நல்லகரு...
புலம்பெயர்ந்த தமிழருக்கு
புதுக்கருத்தை சொல்வதற்கு..!

தந்தையவர் குருதி புலம்பெயர்ந்து
தாய்வயிற்றில் வந்ததினால்...
தாய்க்கு நீ மகனனாய்...!
தாய்வயிற்றில் தானிருந்து புலம்பெயர்ந்து
பிள்ளையும் நீ வந்ததினால்
தாய்மண்ணை மீட்கும்
படைக்குத் துணையானாய்.

முள்கொண்ட பெருங்காட்டு
மூங்கிலும் புலம்பெயர்ந்து வந்ததினால்..
புல்லாங்குழலாகி, புட்டுக்கு கருவியாகி -
வில்லுவண்டிக் கூடார வில்லாச்சு...!
பூமியடியிருந்த தங்கம் -
புலம் பெயர்ந்து வந்ததினால்
பூவுலக மாந்தருக்கு பூணும் பொருளாச்சு
முல்லை, மல்லி, ரோஜாவும்
புலம்பெயர்ந்து வந்ததினால்....
மணமக்கள் சூடும் மணமாலை தானாச்சு..!

அந்தோ..!
எம் தமிழும், எம்மினமும்
புலம்பெயர்ந்து வந்ததினால்...
என்னாச்சு...?
முதுகெலும்பு தான் முறிந்த
முதியவர் நிலையாச்சு...!

புல்லுக்காய் பசுவும் மறுகாடு
புலம்பெயர்ந்து வந்ததினால் -
மறந்துவா தன் வீடு...!
நெல்லுக்காய் பறவையினம் புலம்பெயர்ந்து
நெடுந்தூரம் வந்ததினால்
மறந்ததுவா தன் கூடு - இதுபோல
பணத்தாலும் பயத்தாலும்
தாய்மண்ணை விட்டகன்ற..
எம்மினிய உறவுகளோ..!
எம் மண்ணை மறப்பாரோ..!
மறந்திட்டால்..! எம்
மண்மகிமை என்னாகும்...!?

அன்றொருநாள் அடிமைகொண்டான்
வெள்ளையெம்மை
அவனை விரட்டிடவே நாம் தொடுத்தொம்
தொல்லை:
இன்று நாம் அகதியானோம் அவன் எல்லை.
என்றுமவன் விரட்டிடவே நமக்கு தருவான்
தொல்லை.
அன்றுநாம் மிதிக்கவரும் நம் மண்ணை
அதனாலே காத்திடுவோம், மீட்டிடுவோம்,
எம் மண்ணை.

□

# சொற்களும் பொருளும்

மு. புஷ்பராஜன்

எல்லாம்
இடம் மாறிப் போயின
சொற்களும்
பொருள் மாறிப் போயின.

வல்லிருள்
நிலவொளி ஆயிற்று
வல்லூறோ
வெண் புறா வாயிற்று.

குண்டுகளால்
குடிகள் சிதைந்து குவிதல்
வெண்புறா
நிழல் விழுத்தும் நியமங்களாம்.

சுற்றி யிருந்த
பிணை அறுக்க முனைந்த பற்று
பயங்கர வாதமாம்.
முற்றத்தில்
முள்வேலிச் சுற்று வழி மறிக்க
அந்திமுன் அடங்கும் வாழ்வு
விடுதலை வாழ்வாம்.

பேய்கள் இருந்து
கூழ் குடித்து மகிழும்
பிணம் புதை பூமி
புதிய பூமியாம்.

யாரொப்புவீர்...?

ஆயினும்
ஆணவச் செங்கோல் முன்
சாமரம் வீசுவோர்
இருப்பார் காண்.

□



படிப்பகம்

www.padippakam.com







குமார்மூர்த்தி

Help Wanted என்ற போர்டு ஒரு ஓரத்தில் தொங்கவிடப்பட்டிருந்ததை தற்செயலாகத்தான் பார்த்தான் நவநீதன். தந்துவிடவா போகிறார்கள்! சும்மா கேட்டுவைப்போம். சோசல்காரிக்கு சொல்லுவதற்காகவாவது உதவும் என்று கணக்குப் போட்டுக் கொண்டுதான் உள்ளே நுழைந்தான். அது ஒரு பிரமாண்டமான தளபாடக் கடையாக இருந்தது. முன்னுக்கு வண்ண வண்ண அட்டைகளில் மலிவு பற்றியும், அதிக கழிவு பற்றியும் பெரிய எழுத்துக்களில் தொங்கவிடப்பட்டிருந்தது. அதனாலோ என்னவோ சனக்கூட்டமும் அதிகமாக இருந்தது. உள்ளே நுழைந்து வலப்பக்கமாக திரும்பியதும் விதம் விதமான சோபாக்கள் கண்ணில் பட்டது. என்ன வேலைக்கு ஆள் தேவைப்படுவதாய் இருக் கும் என்று தலையை ஒரு முறை குடைந்து கொண்டான். Help என்று கேட்டிருக்கிறான்கள், தூக்கிறது, அடுக்கிறது, சுத்தம் பண்ணுறது இப்படி ஏதாவது ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். நினைத்தவுடன் மனது கொஞ்சம் சஞ்சலப்பட்டது. சரி எதுவென்றாலும் பரவாயில்லை என்ற எண்ணமும், கூடவே பின்னுக்கு ஏதோ ஒரு கண்ணுக்குத் தெரியாத சக்தி தள்ளவிடுவது மாதிரியும் இருந்தது. சரி, வரும் போது வாங்கிவந்த கடனுக்கு வட்டிக்காகவாவது உதவுமே என்றதும் மனம் சாந்தமடைந்தது.

கொழும்பில் இருந்து புறப்படும்போதே கனடாவைப்பற்றி பல விஷயங்கள் கேள்விப்பட்டிருந்தான் நவநீதன். அதில் ஒன்று வேலை இல்லாதது பற்றியது, வேலை கிடைப்பது கடினம், சம்பளமும் குறைவாகத்தான் கொடுப்பார்கள், நிரந்தரமும் இல்லை, எப்போது வேண்டுமானாலும் நிற்கச் சொல்லிவிடுவார்கள். அது இது என்று கேள்விப்பட்டாலும் அவனுக்கு அவன் மேல் அசைக்க முடியாத நம்பிக்கையானபடியால் எனக்கு வேலை தேடுவது அவ்வளவு சிரமமாயிருக்காது என்ற நம்பிக்கை மலை போல் இருந்தது. அதற்கேற்றாற் போல் பட்டப்படிப்பு முடிந்ததும் ஒரு தனியார் நிறுவனத்தில் உடனே வேலை கிடைத்து விட்டது. ஒரு வருடத்திலேயே பொறுப்பான பதவியும் கொடுத்துவிட்டார்கள். உண்மையில் அவனின் திறமைக்கு கிடைத்தவைகள்தான் அவைகள். அதைவிட அவனுக்கு கொழும்பு வாழ்க்கையில் எந்த கஸ்டமும் இருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் பிறந்தாலும் நான்கு வயதிலேயே அப்பாவின் வேலை மாற்றத்தோடு கொழும்புக்கு குடிவந்துவிட்டான், யாழ்ப்பாணம் சுமுகமாக இருந்த காலத்தில் வருடத்தில் ஓரிரு தடவைகள் போய்வந்திருக்கிறான், பிரச்சினைகள் தொடங்கியபின் அதுவும் நின்று விட்டது.

உண்மையில் அவனுக்கு கனடா போக வேண்டும் என்ற எண்ணம், அவனின் ஒன்றுவிட்ட அண்ணன் கனடாவில் இருந்து வந்து போன பின்தான் ஏற்பட்டது. அவன் கொழும்பில்



படிப்பகம்

www.padippakam.com



நின்ற பொழுது காசை கடதாசி மாதிரித்தான் விசிறி எறிந்தான், என்னுடைய ஒரு கிழமைச் சம்பளம் உன்னுடைய இரண்டு மாத சம்பளத்துக்கு சரி என்று கஸ்டப்பட்டு பெருக்கிக்காட்டினான், தப்புத்தப்பாய் ஆங்கிலம் கதைத்துப் புழுகித்தள்ளினான், சே! இதென்ன நரகம் என்று கொழும்பைத் திட்டித்தீர்த்துவிட்டான், எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்துத்தான் நவநீதன் கனடா போவதற்கு முடிவெடுத்தான். ஆனால் அவன் நண்பர்கள் அங்கெல்லாம் இப்பொழுது அவளவு சுலபமில்லை என்ற பொழுது, அது படிப்புக் குறைந்தவர்களுக்கத்தான் அந்த கஸ்டமெல்லாம் எனக்கு எல்லாம் தூசி என்று முந்திக்கொள்வான்.

கனடா வந்து ஒன்றரை வருடமாகிவிட்டது. இன்னும் ஒரு வேலை கிடைத்தபாடில்லை, எத்தனையோ பக்ரறிகளும் ரெஸ்ரோறன்களும் ஏறி இறங்கியாகிவிட்டது. இப்போதெல்லாம் தெரிந்தவர்கள் யாராவது இருந்தால்தான் அந்த இடத்தில் வேலைக்கு சேரலாம் என்று பலரும் சொன்ன படியால் தெரிந்த நண்பர்களிடம் எல்லாம் சொல்லி வைத்திருக்கிறான். யாரைப் பார்த்தாலும் இப்போது பிசி குறைவு, எப்போது நிப்பாட்டுவாங்களோ தெரியாது, என்று அழாக்கறையாக சொல்லுவார்கள். வேலைவாய்ப்பு அலுவலகம், பத்திரிகை வேலை விளம்பரம் என்று எல்லாவற்றையும் முயற்சி பண்ணிக் கொண்டு இருந்தும் எல்லாம் அவனை ஏமாற்றிக் கொண்டே இருந்தன.

தன்னையுமறியாமல் விதம் விதமான சோபாக்களில் லயித்திக்கொண்டு நின்றவனை, May I help you, Sir என்ற பெண் குரல் திடுக்கிட வைத்தது. ஒரு கணம் தடுமாறிப் போனான். அந்தப் பெண் அழகாக சிரித்தாள். பொன் நிற கேசத்தை ஒரு கையால் ஒதுக்கிக் கொண்டு தன் பெயரையும் தான் விற்பனைப் பிரதிநிதி என்பதையும் கூறி கையை நீட்டினாள். அவளின் வெதவெதப்பான கை குலுக்கல் அவனுக்கு சற்று இதமாக இருந்தது. என்ன வகையான சோபாவை எதிர்பார்க்கிறாய் என்று அவள் மறுபடியும் கேட்டதும் தான் அவனுக்கு உறைத்தது. ஓ! இவள் நான் தளபாடம் வாங்க வந்தவன் என்று நினைத்துக் கொண்டுவிட்டாள் என்று. அவனுக்கு வெட்கமாகவும் இருந்தது. சொல்லுவதா வேண்டாமா என்றொரு தயக்கம். பின் ஒருவழியாக தான் வந்ததை சிரமப்பட்டுக் கூறி முடித்தான். அவள், I am sorry என்று அழகாக சிரித்து விட்டு கடைசியில் இருக்கும் அலுவலகத்தைக் காட்டினாள். விதம் விதமான மேசைகள் கதிரைகள், அலமாரிகளைப் பார்த்துக்கொண்டே அலுவலக வாசலை அடைந்தான், வாசலில் ஒரு பெண் இவனை விசாரித்தாள், பின் சற்று இருக்க சொல்லிவிட்டு உள்ளே போய் விட்டு வெளியே வந்து இவனை உள்ளே போகும் படி கூறினாள்.

இவன் உள்ளே போனதும் அந்த வயதான மனிதர் இவனை உட்காரும்படி கூறி எதிரே இருந்த கதிரையைக் காட்டினார். இவன் உட்கார்ந்ததும் தன் பெயரை அறிமுகப்படுத்திக் கொண்டு, இவன் பெயர், படிப்பு, முன் வேலைசெய்த இடம், அனுபவம் போன்றவற்றை கேட்டார். இவனும் ஒன்றிரண்டை அதிகப்படுத்திப் பதில் சொன்னான். சொன்ன கணத்தில் இவனுக்கு மனது நல்ல திருப்தியாக இருந்தது. அவரின் முகத்தையும் ஒரு முறை கூர்ந்து கவனித்தான், அவரும் யோசிப்பது தெரிந்தது. ஏதோ தனது தகுதிக்கு ஏற்ற வேலை தான் யோசிக்கிறார் போலகிடக்கு என்று மனம் ஒரு கணம் துள்ளியது. கோர்ட் போட்டு ரை கட்டி பைலைப் புரட்டுவது மாதிரியும் ஒரு கற்பனை ஓடி மறைந்தது. அதற்குள் வயதானவர் கதிரையை விட்டு எழுந்து கொண்டார். தன் கோட்டைச் சரி செய்து கொண்டே எங்களுக்கு ஒரு பகுதி நேர வேலையாள் தேவைப்படுகிறார். எதற்கென்றால் இந்த கடையின் வியாபார குறியீடான (trade mark) கோமாளி வேஷம் போட்டுக்கொண்டு வீதியில் நின்று வழிப்போக்கரை கடைக்குள் வரச்சொல்லி கைகாட்ட வேண்டும், என்று கூறி விட்டு கொஞ்சம் நிறுத்தி அவன் முகத்தைப் பார்த்தார். பின் அவரே தொடர்ந்தார். கடந்த பத்து வருடமாக நான் தான் இதைச் செய்து வருகிறேன் இப்போது என்னால் அதிக நேரம் நிற்க முடிவதில்லை கால் வலிக்கிறது. அதைவிட வயதும் போய்விட்டதுதானே. நிறுத்தி லேசாக சிரித்தார். அவரின் சிரிப்பு அழகாக இயற்கையாய் இருந்தது. சனியும் ஞாயிறும்தான் வேலை செய்ய வேண்டும் கால் வலித்தால் பின்பக்கத்தில் உள்ள அறையில் வந்து ஓய்வெடுத்துக்கொள்ளலாம் கோப்பி குடிக்கலாம். உனக்கு பிரியமாக இருந்தால் சனி காலை வந்து என்னைப் பார். நான்தான் இந்த கடையின் முதலாளி என்று அவனுக்கு கை கொடுத்து விடை கொடுத்தார்.

வெளியே வந்த நவநீதனுக்கு எங்கேயாவது உட்கார்ந்து ஆசைதீர அழவேண்டும் போல் இருந்தது. கனடாவுக்கு புறப்பட தொடங்கிய நேரம் போடத் தொடங்கிய வேஷம் இன்னும் முடிந்தபாடில்லை. எத்தனையோ வேஷம் போட்டு வந்திறங்கி, அகதியாக வேஷம் போட்டது, இயக்கம் பிடித்து பங்கர் வெட்ட வைத்தது, தங்களோடு சேரச் சொல்லி வற்புறுத்தியது என்று கதையளந்தது, ஆமி அடித்த ஷெல்லால்தான் இந்த காயம் வந்தது என மோட்டார் சயிக்கிளால் விழுந்த காயத்தைக் காட்டி அதிகாரிகளைத் திணறடித்தது, எல்லாம் அவன் விரும்பாத வேஷங்கள்தான். ஆனால் கேஸ் எழுதினவர் கொஞ்சமும் விட்டுக்கொடுக்க மறுத்து விட்டார். கேஸ் வெல்ல வேணுமெண்டால் இயக்கத்தால்தான் அதிக துன்புறுத்தல் இருந்ததென்று சொல்லவேண்டும் என்றுவிட்டார். அதுமட்டுமில்லைத் தம்பி விசாரணை நடக்கும் போது நீர் உணர்ச்சி வசப்பட்டு கண்கலங்க வேண்டும், இங்க உண்மையான அகதிகளுக்கு ஒருநாளும் அங்கீகாரம் கிடைக்காது. அகதி மாதிரி வேஷம் போடுகிறவர்களுக்குத்தான் அங்கீகாரம் கிடைக்கும், என்று அவனை அடியோடு பயமுறுத்தி விட்டார். அது மட்டுமா கனடா வந்ததும் விதம் விதமான போட்டோக்கள் எடுத்து நண்பர்களுக்கும் நண்பிகளுக்கும் அனுப்பி தனக்கு ஒரு குறையுமில்லை என்று தம்பட்டம் அடித்தாயிற்று. எது எப்படியோ எல்லாமே முகத்தை மாற்றாமல் போட்ட வேஷங்கள். இது முகத்தை மறைத்துப் போடும் வேஷம் எவளவோ பரவாயில்லை, என்று மனத்தை சமாதானப்படுத்திக் கொண்டு சனிக்கிழமைக்கு தயார்படுத்திக் கொண்டான் நவநீதன். ❑



படிப்பகம்

www.padippakam.com



# பயணம்

ரவீந்திரன்

சுவரின்மீது அவன் சாய்ந்தபடி நின்றான். இரு கால்களும் நிலத்தில் குத்தியபடி நின்றன. அவன் இந்த உலகில் இல்லை. தலை இடுப்பு மட்டம் வரை கவிழ்வதும், பின்... ஒருவாறு நிமிர்வதும் என இடைவிடாது இயங்கியது.

அழுக்கடைந்த துணி. பரட்டைத் தலை. நடுவழியில் முகத்தை விட்டு விட்டு எங்கோ ஓடிவிட்டன அதன் நளினங்கள்.

அவன் நிச்சயமாக இந்த உலகில் இல்லை.

மனித விழுமியங்கள் புதையுண்டு போன இந்த இடத்தில் தன் உடலை மட்டும் விட்டு போதையேறி பயணம் செய்தான் அவன்.

விலகிச் சென்றனர் நாகரிக மனிதர்கள். விதவிதமான உடை. விதவிதமான தேவைகள். ரயில் நிலையத்துக்கே உரித்தான விரைவுகள்.

அவன்மீது அசிங்கமான பார்வைகள் குவிந்துகொண்டிருந்தன. அவன்தான் யாரையும் கண்டுகொள்வதாக இல்லை.

வேடிக்கையாச் சிரித்தனர். கடந்து சென்றனர். பேசிக்கொண்டனர்.

பொலிசும் வந்தாயிற்று. அவன் பொது இடத்திற்கு பங்கம் விளைவித்து விட்டானாம். விலங்கிடாத குறை. இழுத்துச் சென்றனர் - ஒரு கிரிமினல் கைதி போல.

"காயைப் பார். தூளடிச்சிட்டு நிக்கிறார்... ஊத்தையள்." தமிழ்க் குரல் கேட்டு திரும்பிப் பார்த்தேன். எனது நண்பர்கள்தான்.

இப்படித்தான் நானும் நினைத்தவை இன்று தவிடுபொடியாகிவிட்டன.

எனது நண்பனின் விலாசத்துடன் அலைந்தேன் - வீடு கண்டுபிடிக்க. இறுதியில்... அந்த பஸ் தரிப்பிடத்தில் அவள் நின்றாள். அவள் மட்டும் என்பதால் அவளையே கேட்டேன்.

மனதில் ஒருவித பயம். கட்டுக்காயள் ஊத்தையள் என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

எளிமையை அள்ளி தன்மேல் ஆசை தீர கொட்டியிருந்தாள், புழுதிக்குள் புரண்டெழுந்த ஒரு குழந்தைபோல. தலைமயிர் காற்றோடு இசைந்தது. அவளது முகம் கேள்விகளை கிளறிக் கொண்டிருந்தது, ஒரு சோக பாவத்துடன்.

விலாசத்தை கையில் வாங்கினாள். மெல்லியதாய் புன்னகைத்தாள். "வா என்னுடன், காட்டுகிறேன்" என்றபடி எதிர்ப்பாதையில் இறங்கி நடந்தாள்.

நான் எதிர்பார்க்கவில்லை.

நானும் நடந்தேன். மெல்லியதாய் சந்தேகம் நெளிந்தது. அப்படி ஏதுமென்றால் ஓடியாவது தப்பிவிடலாம் என்ற நம்பிக்கை. சிறு முற்தயாரிப்புகள் மனதில்.

நூறு மீற்றர் கடந்ததும் எல்லாம்



படிப்பகம்

www.padippakam.com



கொட்டுண்டு போனது. அவள் என் நண்பனின் வீட்டின் முன்னால் என்னை விட்டு விட்டு மீண்டும் ஒரு புன்னகையோடு விடைபெற்றுக் கொண்டாள்.

என்னை நினைக்க எனக்கே வெறுப்பாக இருந்தது. என்ன மனிசன் நான். கேவலமாகப் பட்டது. அவள் தான் பஸ்க்கு காத்திருந்ததையும் விட்டுவிட்டு இவ்வளவு தூரம் வந்து வழிகாட்டிவிட வந்திருக்கிறாள்.

என்னிடமிருந்த அவளது பிம்பங்களை பறித்தெடுத்து அவள் எனது காலடியிலேயே போட்டுவிட்டுப் போய் விட்டாள். தயக்கத்துடன் நொருக்கி எறிந்தேன்.

இந்தத் தூளை அடிச்சு, நாயள் வாழவேண்டிய வயசிலை செத்துப் போகுதுகள். எனது நண்பர் விசாலமாக கவலைப்பட்டார்.

அவன் யாரையும் வருத்தி தன் சந்தோசத்தை அனுபவிக்கவில்லையே. அவனை ஏன் தடுக்க வேண்டும். இந்த உலகு அவனுக்கு கொடுக்கத் தவறிய சந்தோசத்தை திருப்தியை அவன் கற்பனையில் அனுபவிச்சிட்டுப் போறான்.

விசர்க்கதை கதைக்கிறாய். இவங்களைப் பார்த்து நாளைக்கு எங்கடை பிள்ளையளும் பழகினாப் பிறகுதான் நீ கவலைப்படுவாய்போல இருக்கு.

அதுசரி! எல்லாம் ஏதோ...

இடையில் குறுக்கிட்டேன்.

நண்பர்கள் இருவரும் என்ன என்பது போல் பார்த்தார்கள்.

நேற்று ரீவியிலை சிறீலங்காவிலை கிண்டர் செக்ஸ் பற்றிய ஒரு டொக்குமென்றி போட்டாங்கள்.

இந்த ஐரோப்பியன் எங்கட நாடுகளை எப்பிடி ஆக்கிறான் பார்த்தியா.

பௌமானைப் போல கெட்ட சாமானுகளை சுட்டுத் தள்ளவேண்டும். நண்பர் தீர்ப்பு வழங்கினார், ஒரு கொதிப்பில்.

எட்டு வயசுக் குழந்தையையும்... சீ நாயள்.

ஒரு கிண்டர் செக்ஸ் போர்ணோ கசற்றின் விலை என்ன தெரியுமா? சுமார் 500 பிராங் வரை.

இதையெல்லாம் வாங்கிறதுக்கு சனம் இருக்குது பார்.

எனக்கு நேற்று வேலை இடத்து சம்பாசணை ஞாபகத்துக்கு வந்தது.

'கூவர மா.'.பியோஸ்' அக்கறையோடு திட்டினான் மைஸ்ரர். அவனும் சுவிஸ் காரன்தான்.

பார்த்தியா பௌமானை என்றேன்.

யா யா!.

அவன் கதையின் அந்தத் திட்டிலிருந்து அகன்றுவிட எத்தனித்தான். நான் சொல்லி ஒரு சுவிஸ்காரனின் குற்றத்தை எதிர்கொள்வதிலிருந்து அவன் நழுவியாக வேண்டும்.

மற்ற ஜேர்மன்காரனின் பெயர் என்ன? கதையை இடம்மாற்றினான்.

தெரியவில்லை. அந்த பதினாறு வருசமாக இலங்கையில் இருக்கிறானே, அவன்தானே.

யா யா அவனேதான். கூவர மா.'. பியோஸ்! மீண்டும் திட்டினான்.

ஆனாலும் இவனது அக்கறை போலியானதாகவே எனக்குப் படுவதை தவிர்க்கமுடியவில்லை. இவனும் நாளை இலங்கைக்குப் போனால்... எப்படி நடந்து கொள்வான்? என்ற கேள்விகளை முடக்கிக் கொண்டேன்.

இவன் இப்படித்தான்.

நாசியளின்ரை தங்கம் சுவிஸ் பாங்கிலை கிடந்தது வெளிவந்தபோதும், சுவீடன் பாங்கும்தான் என்றான்.

பொஸ்னியாவுக்கு 'உதவி' லேபல் ஒட்டி அனுப்பிய மருந்து வகைகள் பல காலாவதியாகிப் போனவை (expired) என்ற உண்மை கிளறி எடுக்கப்பட்ட போதும் கேட்டேன்.

சுவிஸ் மட்டுமில்லை, மற்ற ஐரோப்பிய நாடுகளும்தான் என்றான்.

சுவிஸ் ஒரு நடுநிலை நாடு. அதனால்தான் அது எல்லா நாடுகளுக்கும் ஆயுதம் வழங்குகிறது. என்று நான் கூறியதும் அதுக்கு மைஸ்ரரின் பாவனையையும் செய்துகாட்டி நாம் சிரித்துக் கொண்டிருந்தோம். இடையில் சொருகிக் கொண்ட இன்னொரு நண்பர், நாம வந்தா வந்த வேலையைப் பார்த்துக் கொண்டு போக வேண்டியதுதானே; எங்களுக்கெல்லாம் ஏனிந்தக் கதையள் என்றபடி அடுத்த ஸ்ரேசனில் இறங்கிக் கொண்டார்.

இரண்டு வருடத்துக்கு முன்னரும் ஒருமுறை, ஊர்வலத்துக்கு வந்தனியா? என்று கேட்டபோதும் இதே பதிலையே சொன்னான்.

எம்மைத் திருப்பியனுப்புவதற்கு எதிராக அந்த ஊர்வலம் நடத்தப்பட்டது. எம்மவர்களில் கணிசமானவர்கள் கணிசமான முயற்சியின்பின் வந்திருந்தார்கள்.

கட்டுக் காயளும் கனபேர் வந்திருக்கிறாங்கள். எம்மவர் மட்டுமல்ல, சுவிஸ் காரர்கள் சிலரும் வாயைப் பிளந்தனர்.

ஊர்வலம் முடிவுற்றபின் அவர்களின் 'அரண்மனையில்' (Reithal) சாப்பாடு. இலவசம்.

இந்த 'மாளிகை' நகரின் புனிதத்தில் விழுந்த கறைபோல. பழைய கட்டடம். வர்ணங்கள் வெளிச்சுவர் முழுவதும் குருத்துவிடுவதும் முற்றிப் போவதும் சருகாய் அழிந்து போவதுமாக படர்ந்திருந்தது. கோசங்கள் வேறு. நாசிசத்துக்கு எதிராக... வெளிநாட்டவருக்கு ஆதரவாக... பொலிசுக்கு எதிராக... பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக... அமெரிக்காவுக்கு எதிராக... நிறவெறிக்கு எதிராக... இப்படியே. கிழிந்த துணிகளும் அரைகுறையாய்ப் போனாலும் கோசங்களின் பிடியை விடாமல் மரணித்துக் கொண்டிருந்தன.

உள்ளே பழைய வாங்கில் மேசைகள் சமாளிக்கப்பட்டிருந்தன.

ஊர்வலத்துக்கு வந்த எம்மவரில் பலருக்கே இந்த 'அரண்மனையுள்' வர கூச்சம், அல்லது பயம். பசியில்லை; வேலைக்குப் போக வேணும்; அவசர அலுவல்... என்று வெட்டிக் கொண்டார்கள்.

உள்ளே பலர் இருந்தோம். தங்கள் வலுவுக்கு எட்டியவரை கவனித்தார்கள். சாப்பாடு முடித்து... சம்பாசிப்புகள் தொடர..

ஒழுங்கற்ற சனசந்தடி. திறந்த பேச்சுக்கள்..

வீதியிலென்ன மரத்தின் கீழும் சருகுகளைக்கூட அனுமதிக்காத துப்பரவு... இயற்கையையும் மினுக்கிவிட்டு இயற்கையை ரசிக்கும் முரண்கள்...

'அரண்மனையுள்' எல்லாம் தலைகீழ். எமது ஊர் திருவிழா சந்தடிபோல.

எனது மனைவியையும் குழந்தையையும் அங்கேயே விட்டுவிட்டு அருகிலுள்ள ஸ்ரேசனுக்கு விரைந்தேன். லொக்கருக்குள் போட்டிருந்த எனது தோள்பையை எடுத்துவர வேண்டும்.

பையும் எடுத்தாயிற்று. அப்போது தான் அது நடந்தது.

சற்று பரபரப்பு. புரியாத பார்வைகளை வீசிக்கொண்டு மனிதர்கள் குறுக்கும் நெடுக்குமாக விரைந்தார்கள்.

எனக்கு என்னென்னு புரியவில்லை. நடை என்னை வீசியது.

அரண்மனைக்கு முன்னே வெளியில் ஒரே புகை. மறு கரையில் பொலிசார். முன்னேறவிடாமல் தடுத்து தம்மை நோக்கி வரும் போத்தல்கள் தடிகள் கம்பிகளை அவர்கள் சமாளித்துக் கொண்டிருந்தார்கள்.

எனது குழந்தை, மனைவி பற்றிய ஏக்கம் மனசை பிசைந்தது. அவர்கள் உள்ளே. கண்கள் எரிய ஒரு மூலையால் புகைமண்டலத்துள் நுழைந்தேன். சிறுதூரம்தான் முடிந்தது. சுவாசிக்க கஸ்டமாக... சுவாசப்பையுள் ஏதோ நடந்தது. முடியாமலிருந்தது. திரும்பிவிட்டேன்.

குழந்தை பற்றிய ஏக்கம் இன்னும் அதிகமாக... மனசு படபடத்தது.

நடப்பது நடக்கட்டும். துணியால் மூக்கையும் வாயையும் பொத்திக் கொண்டு ஓடினேன். கால்கள் பலமிழப்பதுபோல் தெரியவும் உள்ளே வந்துமாயிற்று. மனைவி குழந்தையைக் கண்டதும் ஒரு துருவப் பாய்ச்சலில் வென்ற சந்தோசம். மனைவி ஒப்புவித்தாள், அவர்கள் (கட்டுக் காயள்) குழந்தைகளை புகைபுகாத இன்னொரு அறைக்குள் பாதுகாப்பாய் விட்டிருந்தார்களாம்.

நிம்மதியாய் இருந்தது.

புகை கட்டடத்துள் மோசமாக பரவ ஆரம்பித்தது. நாம் ஒரு மூலையால் ஒருவாறு வெளியேறினோம், அவர்களின்



படிப்பகம்

www.padippakam.com



உதவியுடன்.

நானும் நண்பர்களும் பேசிக்கொண்டிருந்தோம். ரயிலில் சீற் எல்லாம் நிறைந்திருந்தது. காதில் தோடு. டெனிம் யக்கற். முகத்தில் சற்று முரட்டுத்தனம் முளைத்த தாடி. சுருட்டை மயிர். அதி பரிச்சயமான பாவனையுடன் அவர் சீற் தேடி நடந்து கொண்டிருந்தார். தமிழர் தான். முகம் உரிச்சுப் போட்டிருந்தது. இவரின் கோலத்தை தலைகீழாக்கியபடி பின்னே ஒரு இளைஞன் அப்பாவித்துக் கொண்டு வந்தான். அவன் இப்போதான் நாட்டிலிருந்து வந்திருக்கவேண்டும்.

கோலம் எனது ஊகத்தை செல்லமாகக் கிள்ளிச் சென்றது.

முன்னே சென்றவர் திரும்பிப் பார்த்தபடி அதட்டினார், - Was machst du? Komm schnell!|.

அவன் விரைந்தான், சகோதர உத்தரவினை மென்றபடி.

ரயினுக்குள் முன்னவரை எல்லோரும் பார்த்துக்கொண்டனர். அவரின் செயற்கைத்தனம் எனது மூஞ்சையைப் பிடிச்சு யன்னல் பக்கம் திருப்பிவிட்டது.

பேசாமல் போய் ஊரிலையே இருந்திடலாம் எண்டிருக்கு.

என்ன நடந்தது?

வீட்டாருக்கு என்ரை நிலைமை விளங்குதில்லை. வெளிநாடு என்றால் சும்மா ஏதோ காசு வருதெண்டு நினைக்கிதுகள். எனக்கு எல்லாம் வெறுத்திட்டுது. வேலை என்னை தின்னுது. ஒழுங்கா நித்திரை கொண்டே எத்தினை நாளாச்சு.

நண்பன் குடும்பச் சுமைகளில் நசிந்து முனகினான்.

அங்கையிருக்கிறவங்களுக்கு இங்கை வரவேணும்போல இருக்கு. இங்கையிருக்கிறவங்களுக்கு என்ன இருந்தாலும்... என்றபடி பழைய ஊர் நினைப்புகளை வாயூற கதைத்துக் கொண்டிருப்பதிலும் ஒரு சுகம். இந்த இடைவெளியில் நமது இனம் தனித்துவிடப்பட்டிருக்கிறது. அதன் தவிப்புகள் ஏக்கங்கள் குழப்பங்கள் கேள்விகள் எல்லாவற்றையும் புரிந்துகொள்ள பொதுப்புத்தி போதாமலாகியிருக்கிறது.

சுவிஸ் என்றாலே அவங்கள் காசுக்காரர்தான். எங்கடை ஆக்கள் மட்டுமில்லை. மற்ற நாடுகளிலுமுள்ள எங்கடையளும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறன். மற்ற நண்பர் சிரித்தபடி சொன்னார்.

எங்கடையளுக்கு மட்டுமில்லை...

அன்றுதான் லண்டனுக்கு முதன்முதல் பயணம் செய்தேன். கற்விக் விமான நிலையம். விமானத்திலிருந்து இறங்கி நடந்து செல்கிறேன். மற்றைய பயணிகளின் நெரிசலுக்குள் எனது இனம் அவனுக்கு முழிப்பாய் தெரிந்திருக்க வேண்டும். அவன் விமான நிலைய பொலிஸ்காரன். எதிரில் வந்துகொண்டிருந்தவன் என்னை மட்டும் மறித்தான். எல்லோரும் கடந்து சென்றுகொண்டிருந்தனர். நான் மட்டும் இடைவழியில்... பாஸ்போட் என்றான்.

நான் சுவிஸிலிருந்து வருகிறேன்

பாஸ்போட் என்றான் மீண்டும்.

எரிச்சலாக இருந்தது. காட்டித்தானே ஆகவேண்டும். காட்டினேன்.

புரட்டிப் புரட்டிப் பார்த்தான்.

ஓ.கே.

தொடர்ந்து நடக்கிறேன். சற்று நெருடலுடன் கோபம் வேறு. கடைசி என்னை வழியில் வைத்து மறித்ததிற்கு வாயளவிலாவது ஒரு வருத்தம் சொன்னானா. நாய்.

மீண்டும் விமானநிலையத்திலிருந்து வெளியே செல்லத் தடங்கல். எனது சுவிஸ் இருப்பிட அத்தாட்சியான பி அவுஸ்வைஸ் (B Ausweiss) டொச் மொழியில் மட்டும் இருக்கிறது. அவர்களுக்கு அது விளங்கவில்லையாம்.

அதற்கு நான் ஒரு மணி நேரம் தாமதிக்கப்பட்டேன்.

சந்தேகம் தீர்க்கப்பட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டபோது, அந்த அதிகாரி கேட்டான், சுவிஸில் எவ்வளவு காலம் இருக்கிறாய்?

எட்டு வருசம்

சிரித்தான். நீ பணக்காரனாக இருப்பியே!

நான் எதிர்பார்க்கவில்லை.

காலனித்துவ உறவுக்காரன். வெள்ளைத்தோல். என்னைப் பார்த்து இப்படிச் சொன்னதில் சற்று வியப்பு.

மெல்லியதாய் புன்னகையை மட்டும் சொன்னேன்.

நண்பர்கள் இறங்கிவிட்டார்கள். நான் எனது ஜக்கற்றுக்குள்ளிருந்து பேப்பரை எடுத்து வாசித்துக் கொண்டிருந்தேன். முன்சீற் பிரீயாக இருந்தது.

மொட்டைத் தலை. நாசியோ? இவன் ஏன் என்முன் வந்து அமர்ந்தான். எனக்கு வாசிப்பு ஓடவில்லை. பத்திரிகையுள் ஒளிந்துகொண்டேன். திரும்பத் திரும்ப ஒரே வரிகளை கண்கள் தேய்த்துக் கொண்டிருந்தன.

மன்னிக்க வேண்டும்! நீ சிறீலங்காவிலிருந்து வந்தனியா?

ஆம்.

மென்மையான தொனியில் ‘ஏன்’ என்றேன்.

இல்லை. சும்மா கேட்டேன். உங்களுடைய ஆட்கள் இப்பிடி ஆர்வமா ஏதாவது வாசிக்கிறதை நான் காணவில்லை. அதுதான்.

எனக்கு சற்று வெட்கமாக இருந்தது. நியாயப்படுத்த என்னால் முடியாது. பேசாமல் இருந்தேன்.

நான் அகதிகளுக்கு பொறுப்பாயிருக்கிற முகாமில் பணிபுரிபவன். தன்னை அறிமுகம் செய்தான்.

இதற்கு மேல் நான் அவனுக்கு எதுவும் சொல்ல வேண்டிய தேவை எழவில்லை.

அவன் பையுள்ளிருந்து புத்தகமொன்றை எடுத்தான். அதற்குள் லாவகமாக குதித்து நீந்தினான்.

எனது மிகப் பெரிய சந்தேகம் தீர்ந்து போயிற்று.

அவன் மொட்டையில்லை (நாசியில்லை).

இருந்தாலும் அவனது வார்த்தைகள் எனது வாசிப்பின்மேல் கொட்டுண்டு போனது.

வாசிப்பு கிறுக்குப் பட்டுக்கொண்டிருந்தது.

இது போனகிழமை என்ரை றூம் மேற் வாங்கிக் கொணர்ந்தவன்.

இல்லை, அப்பிடியிருக்காது. இண்டைக்குத்தான் press இலிருந்தே எடுத்தம். நீங்கள் வேண்டாமென்றால் வேண்டாம் என்று சொல்லுங்க. பிரச்சினையேதுமில்லை. தேவையில்லாமல் ஏன் பொய் சொல்லுறியள்.

அவர்கள் நாலைந்துபேர் ஒரு குழாமாக நின்றனர்.

சூரிச் ரயில் நிலையம்.

எமது கையில் மனிதம் புத்தகம். குளிரில் நான்கைந்து மணி நேரமாக புத்தகங்களுடன் அலைந்த சோர்வு வேறு.

அசட்டுத்தனமாக சிரித்துக்கொண்டனர்.

எங்களுக்கு பொது அறிவு இருக்கு. எங்களுக்கு இதெல்லாம் தேவையில்லை.

பதிலொன்று தயாரித்துத் தந்தார் ஒருவர்.

குள்ளமான உயரம். படியேறும் முகப்பிலுள்ள கம்பியைப் பிடித்தபடி... சுழன்றவாறு மேலேறிச் சென்றார்.

எங்களுக்கு இன்னும் பொது அறிவு வராததால் புத்தகம் விட வேண்டியிருக்கு.

பதில் அவர்களுக்கு கேட்டிருக்க வேண்டும்.

அவர்கள் திரும்பிப் பார்க்காமல் தானியங்கிப் படியால் வழிந்து போயினர்.

அவன் சொன்னதில் பிழை என்ன இருக்கு. எப்பிடி எங்களை மதிப்பிட்டிருக்கிறான்.

எனது வாசிப்பு குழம்பிப் போனது. இருந்தாலும் நான் பேப்பரை மூடி வைக்கவில்லை. நடித்துக் கொண்டிருந்தேன்.

இடையிடையே வாசித்தேன்.

‘புலம் பெயர்ந்த தமிழர்கள் நிறவெறி, அந்நியமாதல் போன்றவற்றிற்கெதிராக தமது கலாச்சார அடையாளங்களை பேண முற்படுகிறார்கள்.’

நிறவெறி கூடிய நாடொன்றில்தான் நான் வாழ்கிறேன். எமது சுய அடையாளங்களை பேண நாம் வைத்த அல்லது தோண்டியெடுத்த கலாச்சார அம்சங்கள் தான் என்ன?



படிப்பகம்

www.padippakam.com



இந்தக் கேள்வி என்னை உலுக்கி யது.

எந்தெந்த அம்சங்களை நிராகரிப்பது எதையெதை முன்வைப்பது?

குழப்பமாகவே இருந்தது.

நான்கு கரையும் சுவரால் பூட்டி விட்டே நடுவில் கையால் பிசைந்து சாப் பிடுகிறோம். எத்தனை வருடங்களாக...

கையால் சாப்பிடுவதில் தவறென்ன? ஏன் அதை பகிரங்கமாக பேணமுடியா மல் இருக்கிறது.

ஒளிச்சு ஒளிச்சு பேணும் அவலத் தில் எமது சுயஅடையாளங்களை எதற் கெதிராக முன்வைக்கிறோம் என் றெல்லாம் பேசிக் கொண்டிருக்க என்ன இருக்கிறது. மனம் சலித்துக் கொண் டது.

பூப்புனித நீராட்டு விழாவை இங்குள் ளவனுக்கு வேறுவிழாவாக பொய் சொல்லி நடத்துவதே பெரும்பாலும் நடக்கிறது.

எனது சுவிஸ் நண்பிக்கு இதுபற்றி நான் விளக்கமளிக்கப் போய்... வாங்கிக் கட்டிக் கொண்டேன்.

பெண்களை என்ன கேவலப்படுத்து கிறீர்களா? Komische Kultur என்றாள்.

இது இந்த சந்ததியோடு முடிந்து போய்விடும் என்பது மட்டும் எனக்கு நிச்சயமாகத் தெரிந்தது.

லீவு நாளும் இப்பிடியே கழிந்து விட்டது. சாப்பாடு, அரட்டை... போதா ததிற்கு வீடியோ படம்... இப்படியே.

நாளைய நாள் அலுவல்கள் காலை அலாரம் அடிப்பதிலிருந்து தொடங்கி அப்படியே பட்டியலாக நீண்டது. வேலை... முடிய விழுந்தடித்து Gemeinde (கச்சேரி) க்குப் போக வேண்டும்.

உனக்கு தெரியுமா சுவிஸ்காரனே எத்தனைபேர் வீடு (வாடகைக்கு) கிடை க்காமல் அலையுறாங்கள் என்று?

அது என்ரை பிரச்சினையில்லை. நான் உங்களுக்கு ரக்ஸ் கட்டுறன். ஒரு சுவிஸ்காரன் போலவே எல்லாவற் றுக்கும் காசு கட்டுறன். வேலை செய்து உழைக்கிறன்.

அவனது முகம் சிவந்துகொண்டது. அவன் தனது பீரோ ஸ்ரூலில் இருக்கை கொள்ளாமல் அவதிப்பட்டான்.

நான்கு மாதங்களாக வீடுதேடி ஒருதொகை ரெலிபொன் அடித்து விசா ரித்தபோ தெல்லாம்...


நீ எந்த நாட்டுக்காரன்?

சிறீலங்கா.

Tut mir leid! (sorry). வீடு ஏற்கனவே கொடுத்தாயிற்று.

கேட்டு கேட்டு அலுத்துப்போன நிலையில்தான் உதவி கேட்டு போயிருந் தேன்.

என்ரை றூமிலை இன்னும் ஒருவர் இருக்க அனுமதி கேட்டாலே மறுத்துவி டுவியள். சட்டதிட்டங்கள் எல்லாம் எடுத் துப் போடுவியள். எனக்கு றூம் இல்லா விட்டால் அதுபற்றி அக்கறைப்பட மாட்டி யள்.



அவன் உரத்த குரலில் சொன்னான், Keine mehr Diskussion! (no discussion). நீ muss என்று எங்களுக்கு சொல்ல முடியாது. நாங்கள் விரும்பி னால்தான் (வீடு விசயத்தில்) உதவ முடியும்.

என்னால் இதற்கு மேலும் அங்கு இருக்க முடியவில்லை.

இது நடந்து அரை வருடமாகிறது.

தமீலன், அசீலாந்தன், அவுஸ்லாண் டர், ஸ்வாற்ஸ்...* (அதாவது தமிழன், அகதி, வெளிநாட்டான், கறுப்பன்) என்றெல்லாம் என்னை மாற்றி மாற்றி பார்த்துக் கொண்டேன்.

நாட்டில் கையில் காசில்லாமலே எப்பிடி வாழ்ந்தோம். அந்த வாழ்க்கை எவ்வளவு இனிமையாக இருந்தது.

மாலைப் பொழுதின் சுவாரசியங்கள் எல்லாம் நினைவுக்கு வந்துபோனது.

ரயின் அட்டவணை பிசகாமல் 19-02 க்கு வந்து சேர்ந்தது. எனது இடம்.

வீட்டிற்கு விரைவிலேயே போய்ச் சேர்ந்தால்தான் பயணம் முடிவுற்றது மாதிரி. ஒரு நிம்மதி வரும்.

சனியன். சிக்னல் விழுந்துவிட்டது.

அவனை முந்திவந்த அவனது நாய் கூட சிவப்பு சிக்னலைக் கண்டதும் பிரேக் அடித்ததுபோல் நின்றுவிட்டது. பிறகு அவனும்.

நான் இந்தக் கரையில்.

வீதியிலோ தூரத்தே வாகனம் தெரிந்தது. நடந்தென்ன, உருண்டு போனால்கூட வீதியைக் கடந்துவிட முடி யும்.

நானும் கடக்கவில்லை. மனித ஜீவிக்குரிய சுயத்தை இழந்துபோய் நின்றேன்.

எதற்கெடுத்தாலும் ஒழுங்கு!

இப்படித்தான் முன்பொருமுறை நடந்தது. வீதியை ஆபத்தின்றி கடக்க லாம் என்பது எமக்கு உறுதியாய்த் தெரிய... நானும் நண்பர் ஒருவரும் கை கோர்த்தபடி கடந்தோம். மறுகரையில் நின்ற கிழடு சிவப்பு சிக்னல் தெரிய வில்லையா என்று கேட்டது.

எங்கடை நாட்டிலை சிவப்பு சிக்ன லிலைதான் போகலாம். நையாண்டி சொல்லிவிட்டு அகன்றோம்.

Nicht Normal;! கிழடு திட்டியது.

நோர்மால், நிக்ற் நோர்மால் (normal/ nicht normal). நாளாந்தம் இந்த வார்த் தைகள் காதில் எத்துப்படும்.

ஆனாலும் எனக்கு இந்த வார்த் தைகள் விசனமூட்டும்.

அதென்ன நோர்மால், நிக்ற் நோர் மால்? அட்டவணை ஏதும் வைச்சி ருக்கிறியா?

எனது வேலைஇடத்தில் சக வேலை யாளான சுவிஸ்காரன் ஒருவனுடன் உரசல்.

நீ நோர்மால் என்றால் நான் நிக்ற் நோர்மால்தான் என்றேன்.

நாங்கள் கையாலை சாப்பிடுறது எங்களுக்கு நோர்மால். உனக்கு அது நிக்ற் நோர்மால்.

எங்கடை நாட்டிலை snow கொட் டாது; அது நோர்மால். உன்ரை நாட் டிலை கொட்டாமல் விட்டால் அது நிக்ற் நோர்மால்.

இதெல்லாம் கலாச்சாரம், மதம், வாழ்க்கைமுறை, காலநிலை... இதுக ளின்ரை பன்முகத் தன்மையை அங்கீகரி க்காத மனோபாவம்தான் காரணம். இதி லெல்லாம் உங்களைத்தான் standard form இல் வைத்துப் பார்க்கிற அகங் காரம்தான்.

அவனுக்கு அது விளங்க நியாய மில்லை.

Warum (ஏன்) என்று கேட்டால் Darum (அப்பிடித்தான்) என்று பதில ளித்துப் பழகிப்போனவன் அவன்.

நீ ஒரு அசல் சுவிஸ்காரன். அறைந் தாற்போல் சொன்னேன்.

கூவர அவுஸ்லாண்டர் என்று திட்டி யபடி சென்றான்.

நானும் இரவும் அறையும் உறவு கொண்டோம்.

இன்றைய பொழுதும் விரைவாய் மறைந்தது. இரவு பத்து மணிக்கு முன் னரான சுதந்திரமும் காலாவதியாயிற்று. இனி றூமில் சத்தம் போட முடியாது.

இப்போ நேரம் பன்னிரண்டு மணி.

நாளைய அலுவல்களின் முந்த யாரிப்பாய் நான் இனியாவது தூங்க வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com





காயத்ரி கொன்ஸ்ரன்ரைன்



படிப்பகம்

www.padippakam.com






இராஜமோகனா

விடிந்தும் விடியாததுமான, விடியலின் கருகலில் விழி எறிந்தாள். வெறுமையாய் விடிந்த நேற்றுக் காலையும், வெண்மையாய் நிறைந்த இன்று காலையும். நேற்றைக்கும் இன்றைக்குமாய் எத்தனை மாறுதல்கள். காலத்தின் நகர்வில் எத்தனை முத்திரைகள்.

நேற்றைய வெய்யிலில், தெரிந்த வசந்தத்தில் கொஞ்சத்தூரம் நடந்து போய் வரலாம் போல் இருந்தது. ஆனால் இன்றைக்கோ கொட்டிய பனியை, அழகழகாய் அது சிந்திய முத்துக்களை, மரங்களில் தொங்கிய சின்னச் சின்னச் சிற்பங்களை அப்படியே பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் போலிருந்தது.

கொள்ளை கொள்ளையாய் பனிமலர்கள்; அமைதியாய்த் தூங்கும் வானம்; பத்திரிகை போட்டுச் செல்லும் ஆபிரிக்க இளைஞன்; நாயுடன் நடந்து போகும் கீழ்வீட்டுக் கிழவி.

சற்றுத் தள்ளி இலையுதிர்கால மொட்டை மரமொன்று தன்னில் வந்து குந்திய இரு சின்னக் குருவிகளைத் தாலாட்டிக் கொண்டிருந்தது.

இந்த நாள் காதலர்க்கான நாளாம். கருத்தொருமித்த காதலர் இருவர் களிப்புறும் நாளாம். அழகான, அற்புதமான, ஆழமான, ஆனந்தமான காதல். அந்தக் காதல் கொண்ட குருவிகளைப் பார்க்க ஜன்னலைத் திறந்தாள். அவை அச்சம் கொண்டு சிறகடித்துப் பறந்தன. பார்! அதோ பார்! சின்னக்குருவிகளைத் தாலாட்டிய மொட்டை மரம் சீறியது. பார்! உன் மானிடப் புத்தியைப் பார்! வானம் வாயைப் பிளந்தபடி இறங்கியது. அவள் கூனிக் குறுகினாள்.

குருவிகள்! சின்னஞ்சிறு குஞ்சுகள்! ஒன்றையொன்று கொஞ்சியும் கொத்தியும் கோலமிடும் குருவிகள்! அவள் நீண்டதொரு பெருமூச்சோடு மரத்தைப் பார்த்தாள். குருவிகள்! மீண்டும் அதே குருவிகள்! மனம் சிரித்தது, தனை மறந்து ஆடியது. இப்போது மொட்டை மரம் மௌனமாக நின்றது. வானமும் வாயைப் பொத்தியபடி மௌனமானது.

ஒரு சின்ன ரோஜா! கண் விழித்துப் பார்க்காத ஒரு குழந்தையைப் போன்று மெல்ல இதழ் விரிக்கும் ஒரு சிவப்பு ரோஜா! கூடவே நேசத்தைக் கோடிட்டபடி ஒரு வாழ்த்து மடல் அவளிடம் இருந்தது. அது அவனுக்காகத்தான். அவன் எப்போது வருவான்?

மீண்டும் ஒரு சங்கப்புலவர் எழுந்து வந்து "யானும் நீயும் எவ்வழியறிதும் செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சந்தாங்கலந்தனவே" என்று பாடி அழைக்கும்போதா? அல்லது அதே பாரதி முறுக்கிய மீசையுடன் வந்து "முண்டமே! இது காதலடா" என்று சொல்லி பாயுமொளி பொழியும் போதா?

அவளுக்கு அவனைப் பிடித்திருந்தது. அவனது கிறுக்குத்தனம், குட்டிச் சண்டித்தனம், கொஞ்சத் தலைக்கணம். பட்டியலை நிறுத்திக் கொண்டாள். அப்புறம் வரிந்து கட்டிக் கொண்டு வந்து விடுவான். அவனுக்குச் சண்டை போடத்தக்க ஞானம். இதுதான் கேள்வி ஞானமோ. அவ்வப்போது தலைக்காட்டும் ஆம்பிளைப் புத்தி, அதுதான் அந்த ஆணாதிக்கம், அதை முளையிலேயே கிள்ளி விட அவள் முயல்வாள். "அடியே! ஏன்டி என்னோட வாராய், சனத்தைப் பார், சமூகத்தைப் பார்." அவன் ஒலிபெருக்கியோடு நிற்பான். "சனத்தையும் சமூகத்தையும் விட்டுட்டு என்னையும் உன்னையும் பார்." அவளும் விட மாட்டாள். பெட்டை ஒன்று கத்துவதாக அவன் அலட்சியமாகச் சிரிக்க மாட்டான்; ஆக்க பூர்வமாய் கதைப்பான்; சிந்திப்பான்; விவாதிப்பான். அவனுடன் பதித்த தடங்களின் மீது மீளவும் மீளவும் அவள் நடந்தாள்.

அவர்கள் முதன்முதலாகச் சந்தித்த வகுப்பறை அவளுக்குள் ஓவியமாகத் தீட்டப்பட்டிருந்தது. நோர்வேஜிய நாடகம் ஒன்றிற்காக இருவரும் எழுதிய இரு வேறுபட்ட முரண்பட்ட பார்வைகளில், அவர்கள் இணைந்தனர். சின்னச் சின்னக் கவிதைகளைத் தத்தெடுத்துக் கொண்டனர். அந்நியமாகத் தொலைந்து அலைந்த புலம்பெயர் வாழ்விலும் சில தரிப்புகள் ஏற்பட்டன.

ஆனால் வீடுகளில் முணுமுணுப்புகள் ஆரம்பித்தன. ஆயிரமாயிரம் சாட்டைகளுடன் அவர்கள் எழுந்தனர். அவசர அவசரமாகப் பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் கீழ் கண்காணிப்புகள் தொடர்ந்தன. தொலைபேசிகள் கிசுகிசுத்தன. தபாற்காரனுக்கும் சுமை கூடியது.

கல்யாணச் சந்தையில் அவள் நிறுத்தி அளக்கப்பட்டாள். பேச்சுவார்த்தைகள் நடந்தேறின.

டென்மார்க்கில் இருந்து ஐயர். இந்தியாவில் இருந்து கூறை. பிரான்ஸில் இருந்து தாலி. அவள் சிரித்தாள்.

நினைவுகளில் பூப்புனித நீராட்டு விழா. அலங்காரப் பதுமையாய் அவள். கைகளில் ஏந்திய மலர்கள் வேப்பிலைகளாய் மாறின. மேளம் கொட்டியது. தன்னை அடக்கிய அவர்களை நோக்கினாள். மழுங்கிய சிந்தனை கொண்ட பேய்களை ஓட்டிட அவளது வேப்பிலை போதவில்லை. வாருங்கள்! இன்னமும் இன்னமும் வேப்பிலை வேண்டும்.

அம்மியை ஒரு பெண் உடைத்து நொறுக்கினாள். தாலியை மறுபெண் வீசி எறிந்தாள். அருந்ததி கூட அணியுடன் இணைந்தாள்.

அவனைக் காணவில்லை. ஆயினும் அவளுக்கு நிச்சயம் தெரியும், அவன் வருவான். ❑



படிப்பகம்

www.padippakam.com




# இரண்டு கவிதைகள்

கிருபா

கள்ளிச் செடியிடை
சென்ற காற்றும்
காயம் பட்டதாம்
காதோரம் கூறிற்று.
□

பாசத்துடன் பார்த்தான்
பரிசாக கிடைத்தன முத்துக்கள்
கைகளில் அல்ல
அவன் கண்களில் கண்ணீர்.
□



# நாளை அது விலைபோகும்

ராஜன் வரதராஜா

நாளை அது விலை போகும்
நாலு பேர் நடுவினில்
நயமாய் இவர் பேச
நாலு பொய் தரகர் கூற
நாளை அது விலை போகும்.

தரைதனில் கால் நகம் கீற
நானித் தலை கவிழ்ந்து
தன் நாயகன் யாரென்றே அறியாமல்
நாளை அது விலை போகும்.

நங்கை உடல்தனில்
நாயகன் கண் இருக்க
நகை நட்டின் மேல்
அவனை ஈன்றோரின் கண் இருக்க
நாளை அது விலை போகும்.

வரப்போவது வாழ்க்கையா வஞ்சனையா
என்றேதும் அறியாமல், அறிவதற்கு
அவகாசமே இல்லாமல்,
நாளை அது விலை போகும்.


தன் வாழ்வு தனக்கின்றி
தனக்கென்றோர் ஆசையும் இன்றி
அடங்கியே அறைக்குள் வளர்ந்து
இனி அடக்கி ஆளும் சமுதாயத்தில்
நாளை அது விலை போகும். □



படிப்பகம்

www.padippakam.com







படிப்பகம்

www.padippakam.com



# தீக்குளிப்பு

தா. பாலகணேசன்

எங்கட கிராமத்தைச் சுற்றிவரக் கடல். தினமும் கரையில் சேருகின்ற ஊத்தைகளையெல்லாம் அள்ளிப் போறதால் அது தினமும் வெள்ளைக் கடலாகவே இருந்தது. கல்லுக் கடல், சேற்று மணம் கிடையாது. நல்ல சமுத்திரக் காற்று வந்து இருக்கிற துர்நாற்றங் களையெல்லாம் அள்ளிப்போய் விடு கின்றதால் எந்நேரமும் சுகந்தக் காற்றுத் திரியும், மனம் வெளுக்கிறதுக்கென்று ஊரில் ஏராளமான கோயில்கள்; கிராமம் பல பகீரத முயற்சிகளை எடுத்துக் கொண்டுதான் இருக்கின்றது என்பதற் கான சாட்சியங்கள் இவை.

காலையிலேயே முத்தனின் பறை முழக்கக் குழு பேச்சியம்மனின் வாயில் கோபுர வெளியில் பல கட்டுக்களை, தடைகளை உடைத்து தன் காதலியைச் சந்திக்க முடியாதுபோன காதலனின் ஏக்கத்தோட வெளியில் நின்று கொண்டிருந்தது.

மூலஸ்தானத்திலிருந்த பேச்சியின் திருவுருவை அவர்கள் மனதில் இருத்தியபடி பறையின் முழக்கொலி அதிர ஆன்மா சிலிர்த்து நின்றார்கள்.

முத்தன், பறைமுழக்கக் குழுவில் பெரியவன். அவனருகே புதிதாய்ப் பறையைப் பயின்று கொண்டிருக்கின்ற அவனது இளைய மகன் சுருதி. அவன் பாடசாலைக்கு ஒழுங்கா வருகிறதில்லை. அதனால எந்நாளும் வகுப்பாசிரியரிடமும் தண்டனை பெறுவான். தகப்பனாரோட இப்படிக் கோயில் குளம் என்று போகிறதனாலதான் அவன் அடிக்கடி பள்ளிக்கும் "கட்" அடிக்கிறவன் போல.

முத்தன்ர பறைமுழக்கத்தை கேட்கக் கேட்க எனக்கு எழும்பி ஆடோணும் போல ஒரு உந்துதல். ஆனால் வெட்கம் விடுவதாயில்லை. அது தாயின் சேலையைப் பிடிச்சுக் கொண்டு வெட்கத்தில் மறைகிற பெண்பிள்ளை போல என்னையும் பாடாய்ப் படுத்தியது.

என் நண்பர்கள் ஒதுக்குப்புறமான தெருவில் நின்று சூறாவளிக்கு மரங்கள் ஆடுவது போல ஆடினார்கள். எனக்குப் பிடித்துக் கொண்டது. முத்தனைப் பார்த்தேன். ஊருக்கு சூறாவளியைக் கொண்டு வருவான் என நினைத்தேன்.

முத்தனின் மகனைப் பார்; வட்டு, ஆளின்ர வேகத்தையும் தாளக்கட்டையும்; ஊறிப்போயிற்றான்; ஊருப் பெரியதுகள் பேசிக்கொண்டு போனார்கள். எனக்கும் பறைமுழக்க வேண்டுமென்று ஆசை வந்தது. அவர்கள் அருகில் போய் இருந்தேன்.

அந்த ஆச்சி என்னை விடாது; ஏதோ பராக்கில இருந்ததால தப்பினேன். முத்தனின் முகத்தைப் பார்க்க முடியாதிருந்தது. பக்தியின் பரவசவொளி படருகின்ற சீவ முக்த நிலையெய்திய நிலையில் அவனிருந்தான்.

கொழும்பில் இருந்தெல்லாம் ஊர்ப் பிரமுகர்கள் பேச்சியம்மன் கோவிலுக்கு வந்திருப்பதாக பேசிக்கொண்டார்கள். திருவிழா உபயகாரர்கள் என நினைக்கிறேன். நல்ல ஞாபகமில்லை. அந்தக் கதை சொன்ன தோரணையை வைத்து அவராகத்தான் இருக்கும் என்பதை உறுதியாகச் சொல்லமுடியும்.

துறைமுகத்தடியை நாங்க "ஜெற்றி" என்றுதான் சொல்லுகிறனாங்கள். ஜெற்றியடியை நோக்கி சற்று முன்னதாக போன காரிலதான் அவை போயிருக்கினம்; பேச்சியம்மன் வாயிற் கோபுரத்தடியில சாரதி பிறேக்கை அழுத்த 'இராணுவ மேலதிகாரிக்கு சலுயூட் மரியாதை செலுத்துகின்ற சிப்பாயின்ர தோரணையில் தலையைச் சற்றுத் தாழ்த்தி, நெஞ்சில் கையை வைத்துச் சென்றவர்கள் அவர்களாகத்தான் இருக்க வேண்டும். அவையள் சற்று முந்திச் சொன்ன கொழும்பில் இருந்தெல்லாம் வந்திருக்கினம்' என்ற கூற்றையும் பொருத்திப் பார்த்தபோது; அவர்கள்தான் என்று எனக்கு விளங்கிவிட்டது.

முத்தனின் பறை முழக்கொலி சுருதி நடை மாறியது. ஒரு வித வேகம்! அவர்கள் மீது வைத்த கண் வாங்காது இருந்தான்; அவர்களைக் காணக் காண எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போலிருந்தான். காருக்குப் பின்னால் ஆரவாரமாக கூச்சலிட்டபடி எனது நண்பர்கள் தார்வீதியில் நீட்டுக்கு ஓடி ஜெற்றியடியில் நின்ற காரைச் சூழ்ந்தார்கள். யாரும் அவர்கள் கொடுத்த மரியாதையை வாங்கிக் கொள்ளவில்லை. அதனால் அவர்கள் முகத்தில் ஏமாற்றம் படர, ஆரவாரமின்றி ஒருவரோடு ஒருவர் மீளவும் கோயிலடியை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

எல்லாவற்றுக்கும் எங்கட குழு முன்னிலையில் நின்றதாக எனக்குப் பட்டது.

ஆட்களை வரவேற்கப் போவதில்,
அடிபட்டு பிரசாதம் வாங்குவதில்,
அம்மனுக்கு தீவட்டி பிடிப்பதில்,
மணியடிப்பதில், இப்படியாக எங்களுக்குள் சண்டை நிகழும். நான் முந்தி நீ; நீ முந்தி நான் என்று.

சில மணி நேர இடைவேளை ஒன்றில் கோயில் புறவீதியில் சண்டைக் கோழிகளைப் போல கோயில் உபயகாரரின் மகன் சுதனுக்கும், தினமும் கோயிலுக்கு விளக்கேற்றி வைக்கின்ற கண்ணுச்சாமியற்ற மகன் ராசனுக்கும் நீயா? நானா? என்று மணிக்கட்டுக் கோபுரத்தடியில தொடங்கின சண்டை கோயில் புறவீதியடியில வந்து நின்றது. கோஷ்டியாகப் பிரிந்து போய் உருண்டார்கள். முகத்தில் குத்தி கால்தடம் போட்டு வீழ்த்தினான் ராசன். வெண்மணல், குத்துச்சண்டைக்களம் மாதிரி இருந்தது.

அவர்களின் சண்டையை ரசிக்கிறத்துக்கென்று நின்ற ஒரு ரசிகர் கூட்டம் ஆரவாரத்துடன் கைதட்டி விசிலடித்தது. மேலதிக பார்வையாளர்களை ரசிப்பதற்கென்றே கையுடன் இழுத்து வந்தது ஒரு குழு.

ஆனால் சண்டை சற்று விநோதமாகவே நடந்து முடிந்தது. வேலிமரங்களிலிருந்து பிடுங்கி, குழை நீக்கி கொண்டு வரப்பட்ட பூவரசம் கம்புகளோடு ஊர்ப் பெரியவர் சிலரின் படையெடுப்போடு



படிப்பகம்

www.padippakam.com



அது முடிவிற்கு வந்தது. எனினும் ஒருவருக்கொருவர் முஷ்டியை உயர்த்திக் காட்டியபடியே கடற்கரைப் பக்கமாக ஓடி மறைந்தார்கள்.

முத்தனின் இளைய மகன் சுருதி துடியாட்டம், மோதல், குதிப்பு, கும்மாளம் ஏதுமற்றவனாக முன் வீதியில் நின்று பேச்சியின் துயிலைக் கலைக்கிற வண்ணமாக பறை வாசித்தான். எல்லாரும் கும்மாளமடிக்கிறபொழுது சுருதி மட்டும் விளையாடப் போகமாட்டான். தகப்பன் விடமாட்டார். இவன் விளையாடப்போக, பெடியள் அடிக்க, இவன் திருப்பி அடிக்க வருகிற வம்பு தும்புகளைத் தீர்க்க என்னால முடியாது என்று முத்தன் சொல்லுவான்.

ஊரில சம்பிரதாயங்கள், சடங்குகள், மண்ணாங்கட்டி என்று நிறைய இருக்கு. அதுகளுக்கு நின்று மல்லுக் கட்டுகிற வயதில்லை எனக்கு. சின்னக் கண் கொண்ட ஒரு பார்வையாளன் மட்டும்தான்.

"வருகினம்"

ஈசவுக்குப் பக்கத்தில் நின்ற பரிமளம் சொல்லிக் கொண்டே திரும்பவும்

"எடியேய் அவைதான் வருகினம்" என்றாள். உனக்கு எப்பவும் விடுப்பும் விண்ணாளமும் தான் வேலை.

ஓ! விடன் வந்தா வந்திற்றுப் போகினம் என ஈசுவைத்தாள் பவளம்.

பரிமளத்துக்கு ஏன் பவளத்திட்ட சொன்னன் என்கிறமாதிரிப் போயிற்று. பவளம் இப்படி ஒரு நாளும் கதைக்கிறதில்லை. இண்ணைக்கு இப்படிக் கதைச்சுப்போட்டு சரி.. பரவாயில்லை.

கதை தாவித் தாவி மூலஸ்தானத்தில் நின்ற பசுவையருக்கு போயிற்று. தீபத்தோட ஒரு திரும்புத் திம்பினார் தமிழ்ப் படக் கதாநாயன் மாதிரி.

அடுக்குத் தீபத்தை இரு கைகளாலும் ஏந்தியபடி வெளியில் வந்தவர் கொழும்பிலிருந்து வந்த பிரமுகர்களிடமே போனார். அவர்கள் கைகளால் தீயை மூடித்தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டார்கள். அவர்களின் கடையில் வேலைபார்க்கிற சீலனுக்கு ஏனோ தெரியாது பொத்துக் கொண்டு சிரிப்பு வந்தது.

ஏன்ரா மச்சான் சிரிச்சனி என அவனது நண்பர்கள் வலுக்கட்டாயமாக வெளியே இழுத்துக் கொண்டு போய்க் காரணம் கேட்டார்கள்.

'இல்லை செய்த பாவம் இப்படித் தொலையாது. கொள்ளுப்பிட்டியில ஒரு சிங்களத்திக்கு...' உள் வீட்டு விவகாரம் அல்லாவிடில் ஏதாவது சம்பளக் கொடுப்பனவில பிரச்சினை அது இது என்று ஆயிரம் இருக்கும். நான் நிற்காமல் போயிற்றேன். முத்தனின் முகம் சிவந்து கிடந்தது. என்னைப் போல இப்பவும் ஞாபகம் வைச்சிருக்குமென்று நினைக்கிறன். எனக்க அது பசுமரத்தாணியில அடிச்சமாதிரி நிகழ்வு தான். முத்தனுக்குக் கோபம் இருக்குமென்று எனக்குத் தெரியும். அந்த பிரமுகரும் கூட்டமும் கோயில் படியடியில ஏறேக்க ஒரு தாளக்கட்டில பறை முழங்கினது. முத்தனால சூறாவளியைக் கூட கொண்டு வரமுடியும் என்று சொன்னேனே அப்படித்தான் இது, ஒரு உக்ர நடையின் ஆரம்ப கட்டத்தைத்தான் முழக்கினான்.

கடற் காற்று அருமையாக வீசியது. சமைத்துக் கிளைத்திருந்த மருதமரங்கள், ஆலமரங்கள் காற்றுக்கு ஆடி அசைந்தன. கோயிலின் உட்புறமும், வெளிப்புறமும் பச்சை, சிகப்பு, மஞ்சள் போன்ற வண்ண மின் விளக்குகளின் ஒளியில் ஜொலித்தன. கண்ணம்மா மாமியின் சாறியில் இருந்து மண மணம் வீசியது. கண்ணையா மாமாவின் வெள்ளை வேட்டி பழுப்பேறியிருந்தது. ஈரம் உலராத அவருடைய வேட்டியிலிருந்து நீர் கசிந்தது.

பரிமளம் யாரையோ காட்டி "அந்தா நிற்கினம்" என்றாள்.

யாரடி? என ஆச்சரியத்தோடு ஈசு கேட்டாள். "அவையளத்தான் சந்தணப் பூச்சும், பெரிய வடச் சங்கிலியுமா நிற்கினம். பெரிய பணக்காரர், கொழுத்த பணக்காரர். பெடியள் முதலை என்று கத்திக் கூப்பிட்டது அவையத்தான்" என்றாள் பரிமளம்.

அப்போது கட்டுக்களையும், தடைகளையும் தாண்டி தன் காதலியை காண முடியாத ஏக்கத்தோடு முத்தன் மூலஸ்தானத்தில் இருந்த பேச்சியைப் பார்த்தவாறு ஒரு முழக்கு முழக்கினான். அண்ட சராசரங்களெல்லாம் அதிர்ந்திருக்க வேண்டும். எல்லோரும் பேச்சியின் உரித்துச் சொந்தக்காரர்கள் போல, ஏதோ வைச்சிருக்கிறதை எடுக்கப் போகிறவர்கள் மாதிரியும், கொடுத்ததைக் கேட்கப் போகிறவர்கள் மாதிரியும் போய்ப் போய் வந்தார்கள். ஆனால் முத்தன் மட்டும் அப்படியொரு தொடர்பே தனக்கு இல்லாதது மாதிரி நின்று கொண்டிருந்தான்.

சமுத்திரம் பேரலைகளோடு எழுந்து வந்து கரையில் மோதியது. எந்த நேரமும் ஏதோ ஒரு தீரா ததாகத்தோடு கோபாவேசமாக எங்கள் ஊரை விரட்டும். இரவில் கடலுக்குள் பெரிய போர் நடந்து கொண்டிருக்கும்; பெரிய கரும் சடையை விரித்து விட்டு இருந்து குமுறுவது போல் இருப்பதால் பார்க்கப் பயமாக இருக்கும்.

பெரிய நீள அகலமான குளியில் மூட்டிய நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. தீச் சுவாலையில் முகங்கள் பிரகாசித்தன. காதலின் பரவசத்தில் காணாமற்போய் விடுகிறவர்களைப் பற்றிய பேச்சுக்கள் களைகட்டின. இருட்டில எங்க போய்க் கண்டுபிடிக்கிறது. ஆச்சி, "வரட்டும், வரட்டும்" என்று முணுமுணுத்தாள்.

யாரும் ஆச்சி மந்திரம் செபித்துக் கொள்ளுவதாக நினைத்துக் கொள்ளுவதற்குப் பக்திப் பரவசத்தில் நிற்க வேண்டும். அங்கு நடப்பவைகளை கண்டு கொள்ளாதது மாதிரி எல்லாம் நடக்க வேண்டும். ஆச்சி அளந்தாள்; தெய்வ காரியம், குற்றம் வந்து விழும். கண்மணியாத்தை பயத்தோட கேட்டாள். குற்றம் விழுந்தால்... குற்றம் விழுந்தால் தே....வி கோபமாகி விடுவாள். தே... வி கோபமாகினால்... கண்மணியாத்தை தெரியாதது மாதிரி கதை விட்டது ஊர் நோய் காணும். ஆச்சிக் கிழவி வெருட்டினாள். வேற... மாரி பொய்க்கும் என்றாள் ஆச்சி. ஆ... ஆ... ஆ... என்று வாயைப் பிளந்த கண்மணியாத்தை அதையேன் கேட்கிற அந்தப் பெடியனும் அவள் பெடிச்சியும் அந்த சந்துக்குள்ளால ஓடிப்போயினம் என்று சொன்னாள். ஊரில பேப்பர் மாதிரித்தான் கண்மணியாத்தை விடுப்பு அறிகிற குணத்தில இருந்த ஆச்சி விபரத்தை அறிய முயன்றாள். என்னைக் கடைக்கண்



படிப்பகம்

www.padippakam.com



ணால் பார்த்திருக்க வேண்டும். நான் தீக்குளிப்பில் லயித்திருப்பதாக அவள் உணர்ந்து கொண்டாள் போலும்.

ஊர் அப்புக்காத்து மாதிரி யார் பெடியன்? ஆச்சி கேள்வியோட தொடங்கினா. முத்தனுக்குத் தூரத்துச் சொந்தமாம் கண்மணியாத்தை நடக்கக் கூடாதது நடந்தது மாதிரி இழுத்தாள்.

பெடிச்சி யாரடி? ஆச்சி அடுத்த கேள்வியைச் சற்றுப் பதட்டமாகவே கேட்டாள்.

திருவிழா உபயகாரருக்கு மருமகள் முறையாம் என்று கண்மணியாத்தை சொல்லி முடிக்கேல்ல "இடிவிழுந்து போக இதென்னடா ஊழிக்காலம் அம்பாள் ஆச்சியே" என்று தலையில கைவைத்த முதாள் ஆச்சி.

ஆச்சி பக்திப் பரவசத்தில இருக்குது என்று நினைத்துக் கொண்டோ என்னவோ தூரத்தில நின்ற சனத்தில யாரோ ஒருசிலர் ஆச்சியை "ஞானக் கிழவி" என்றார்கள்.

பக்தியின் பரவசத்தை ஆத்மா பருகிவிடும் வண்ணமாய் முத்தனின் பறைமுழக்கத்தின் பேரொலி ஒலித்துக் கொண்டேயிருந்தது.

கிராமத்தின் காளைகள் போன்ற இளைஞர்கள் மெருகுடன் தீயில் குதித்து நடந்தனர். ஆகா! அற்புதம்!

'கைகளைத் தட்டக் கூடாது' என்று ஆச்சி சத்தம் போட்டுத் தடுத்து விட்டது.

இந்தக் கிழவியோட வந்திருக்கக் கூடாது.

தனிய விடுகினமே?

பிள்ளை பிடிகாரங்கள் திரியிறாங்கள் என்று என்று ஊரெல்லாம்கதை. அது இந்த கண்மணியாத்தை பூமணியாத்தை ஆட்களின்ர பேப்பர் கதை தான். தீக்குளிப்பில் பக்திப்பரவசத்தில் திரிகின்ற நாயன்மார்களைப் போன்ற சிலர் தீயில் நடந்து போகிறார்கள். தென்றலில் நடப்பதான நளினத்துடன். பித்த வெடிப்பேறின கால்கள் கரடுமுரடான தரைகளில் கூட பதிவை ஏற்படுத்தக் கூடிய வலிய பாதங்கள். நெருப்பை லாவகமாகக் கடந்தன.

நானும் இறங்க யோசித்தேன். ஏற்கனவே நெருப்புச் சுடும் என்கிற அறிவு என்னை விடுவதாய் இல்லை. விட்டவர்கள் குதித்து எழுந்தார்கள் போலும் அதோட இது தேவார திருவாசகப் பாடல்களோடு உபவாசம் இருந்து பயபக்தியா செய்ய வேணும் என்றும் ஆச்சி சொல்லிக் கூட்டியந்தது.

பறை முழக்கின் ஒலியின் பண்களுக்கேற்ப தீ நடனம் நிகழ்ந்து கொண்டிருந்தது. கொழும்பில் இருந்து வந்த பிரமுகரைச் சுற்றி அவரோட சேர்ந்து வாசிக்கிற ஆட்களும் நின்று கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் நின்ற அவரது சில ஏவல்காரர்களால்தான். ஒரு முறை காயப்படுத்தப்பட்ட நினைவு முத்தனுக்குள் கிளர்ந்திருக்க வேண்டும்.

கள்ளையும் சாராயத்தையும் கலந்து குடித்து விட்டு நின்ற அவர்களின் ஆட்டத்திற்கு ஏற்ப பறை முழக்கச் சொல்லி அவர்கள் முத்தனை வழி மறித்தது அவனது உளத்துக்குள் இரத்தக் கசிவை கொடுத்து கொண்டேயிருந்திருக்க வேண்டும் கிராமத்தின் முதுகெலும்பாக கிடக்கின்ற நீண்ட பெருவீதியில் நின்று அவர்களை அவர்கள் வாசிக்கச் சொன்னபோது அவனுக்கு ஏற்பட்ட காயத்தின் வலி நிறைந்த பாடலைத்தான் கடல் பாடிக்கொண்டிருந்தது. சடைத்துக் கிளைத்து நின்ற பூவரச மரங்கள் அடி பெயர்ந்து வீழ்ந்து விடும் வண்ணமாய் ஆடின. சுருதி கெட்டுப்போன உயிரற்ற பறையின் முழக்கத்தை அன்றொருநாள் கேட்டது எனக்குள் இன்றும் பசுமையாக இருக்கின்றது.

வெறிபோதையில் நடந்த அந்த நிகழ்வின் போது அவர்களின் வெறியாட்டத்திற்கு முத்தன் பறை முழக்கவில்லை என்கிற விதமாய் பறையை வாங்கி அடித்து உடைத்தது முத்தனுக்குள் என்றுமே தீராத கோபமாய் இருந்தது.

அவர்களைக் காணக் காண அவன் விழிகள் சிவந்தன. தாயிடம் முறையிடும் சேயைப் போல பேச்சியம்மன் வாயில் கோபுரத்தின் முன் நின்றதையும் எண்ணியபோது எனக்குக் கவலையாயிருந்தது. பறையை முழக்கியபடி முத்தன் தீக்குண்டத்தை நோக்கி வந்தான், எல்லோரது விழிகளும் அவன் விழிகளை அபூர்வமாக நோக்கின. எங்கிருந்தோ சில குரல்கள் அபத்தமாய் ஒலித்தன. "தீயில் இறங்காதே சுட்டுப் போடும்." வயதான குரல் ஒன்று, "தீட்டுப் பட்டுவிடும்" என்றலறியது. "அம்பாள் ஆச்சியே" இது கலியுகம் தானடி என்ற முதாள். தீக்குளித்து எழும் கிராமத்துக் காளைகள் சில "முத்தனை இந்த நெருப்பா சுடவேணும்" என்று ஆவேசமாகக் கத்தினார்கள். நான் சிரித்தேன்.

தெய்வகுற்றம் வந்து விடும் என்ற விதமாய் ஆச்சி என் வாயைத் தன் கைகளால் பொத்தினாள்.

பறையுடன் தீயில் குளித்து எழுந்து வந்து மீளக் குளித்து எழுந்து வந்து முத்தன் சன்னதமாடினான்.

அந்த மக்களும் சேர்ந்து
ஓம் சக்தி! ஓம் சக்தி!
சகலமும் காப்பவள் சக்தியே
சக்தி! சக்தி! சக்தியே!
யாவும் நின் வடிவேயம்மா சக்தி! சக்தி! சக்தி!

முத்தன் தீக்குளித்து விட்டான் ஊரில் உள்ள சனங்கள் பேசிக் கொண்டே போனார்கள். முத்தன் 'தீக்குளித்து விட்டான்' கண்மணியாத்தை கதை கதையாய் ஊரெல்லாம் தலைப்புச் செய்தியாய்க் காதில் போட்டாள்.

'இருக்காதா இவ்வளவு காலமும் அவன் பேச்சியின் முன்னுக்கு நின்று சும்மாவா பறை முழக்கினான்' என்று எங்கட ஊர் வாத்தியார் வகுப்பில் இருந்த எங்களை நோக்கிக் கேட்டார்.

கேட்டு விட்டு படிப்பிக்கத் தொடங்கும்போது கரும்பலகையில் திகதி மாதத்தை எழுதி விட்டு ஆண்டை மட்டும் தடிப்பாக **1975** என்று சொல்லிக் கொண்டே எழுதினார். சற்றுக் கோபம் அடைந்தவராக எங்களை நோக்கிச் சொன்னார். "முத்தன் தீக்குளிக்கக் கூடாது! இந்த ஊர்தான் தீக்குளிக்க வேணும்" என்று கூறிவிட்டு வேகமாக வகுப்பறையை விட்டு வெளியேறிச் சென்றார்.

வகுப்பறையை விட்டு நாங்களும் வெளியே ஓடினோம். எல்லைகள் அற்ற எங்கட ஆகாச வெளியில் பட்சிக் கூட்டம் பேதங்களற்ற பாடலைப் பாடியபடி பறந்து கொண்டிருந்தது. கூடவே நாங்களும் வருவதாகக் கூறி கைகளை அசைத்தோம். ❑



படிப்பகம்

www.padippakam.com

# நாளேடுகள்

கி. பி. அரவிந்தன்

நேற்றென்று ஒருநாள் காலமாகிப்போக இன் றென்று ஒருநாள் விடிந்தது.

அது ஒரு சனிக்கிழமை.

ஐந்தரை மணிக்கெல்லாம் விழித்துவிட்டேன். படுக்கையில் புரள்கின்றேன். எண்ணங்களும் பல்வேறாய் உருள்கின்றன.

உடல் வெளிப்படுத்தும் இளஞ்சூட்டில் குளிர் காய்ந்தபடி அணைந்து உறங்கும் நானும் மனைவியும் உறக்கம் கலைந்த புரளலில் விலகினோம் போலும்.

விலகலிடையே குளிர் நிரவுகின்றது.

இருவரும் மீள மெல்ல அணைந்து கொள்கிறோம். இதமாக இருக்கின்றது.

குளிர் இறங்கிச் செல்கின்ற இளவேனிற் காலந்தானானாலும் காலை நேரக் குளிரின் இறுக்கப்பிடி இன்னமும் தளரவில்லை. "மாசிப்பனி மூசிப் பெய்யும்" என ஊரில் சொல்வதுண்டுதான். பனியா இது? மூச்சையே உறையச் செய்யும் இக் குளிரின் வீச்சத்தை எப்படி அழைப்பது?

போர்வையை அகற்றாதே, அணைப்பை தளர்த்தாதே எனக் குளிர் எச்சரித்தாலும், அணைப்பில் சுகம் காணும் நாளல்ல சனிக்கிழமை.

"சந்தைக்குபோக எவளவு நேரம் கிடக்கு.... இப்பவே முளிச்சுக்கொண்டு..... என்னையும் உறங்கவிடாமல்...." உறக்கக் கலக்கத்துடன் மனைவியின் சிணுக்கம்.

சனிக்கிழமை சந்தை கூடும் நாள். சந்தை கூடும் இடமும் எங்கள் குடிமனையில் இருந்து ஒரு நடை எட்டும் தூரந்தான். இந்த ஊர் மையமிட்ட பிராந்தியமெங்கனும் இந்தச் சனிக்கிழமைச் சந்தை பிரசித்தமானது.

சந்தை கூடும் சனிக்கிழமைக்காகவே மற்ற நாள்களில் பலரும் உயிர் வாழ்கின்றனரோ எனும் சந்தேகம் இங்க வந்து சேர்ந்த இரண்டரை ஆண்டுகளில் பல தடவை என்னுள் ஏற்பட்டிருக்கின்றது.

ஏனெனில் சனிக்கிழமை எப்போ வரும் என்னும் தவிப்பு இப்போதெல்லாம் எனக்கு ஒரு வெறியாகவே மாறிவிட்டது. என்னை போல்தானே மற்றவர்களுக்கும் இருக்கும்.

வேலையற்றோரையும், சமூக உதவியில் வாழ்வோரையும் அதிகமாய் கொண்ட இந்த ஊரில் சனிக்கிழமைச் சந்தை நாள் கொண்டாட்டமாய் அமைந்து போனது. இதுவும் இல்லையானால்? நான் எழுந்துவிட்டேன். முகச்சவரம் செய்து, இளஞ்சூட்டு நீரில் உடல் நனைத்து பசுமையாகி, வாசனைத்திரவியம் பூசி மலர்ச்சியுறத் தொடங்கினேன்.

உற்சாகம் புரண்டெழத் தொடங்கியது.

மனைவியும் தன்னாயத்தங்களை தொடங்கி இருந்தாள். இருவரும் அணியமாகும் அவசரம் எங்களிடையே சிறு உரசலையும் தோற்றுவித்திருந்தது.

யார் தேநீர் தயாரிப்பது என்பது இன்னமும் இழுபறியாகவே இருந்தது. குழந்தைகள் துயிலெழும் நேரமும் நெருங்கிவிட்டது. முழிக்கும்போது பால் தேநீர் தயாராக இருக்கவில்லையானால் காலை ஆலாபனையை தொடங்கிவிடும் கடைக்குட்டியை சாந்தப்படுத்த அன்றைய நாள் போதாமல் இருக்கும். அதுவும் சனிக்கிழமை நாட்களில் இப்படி ஏதும் நிகழ்ந்து விடாதபடி மிகக் கவனமாக இருவரும் இருப்போம். வேலைப் பங்கீட்டில் சனிக்கிழமை நாளில் தேநீர் தயாரிப்பது என் முறையாக வரும்பொழுது இவ்வகை இழுபறி நிலை தோன்றிவிடும். சந்தைக்கு சென்று மீளும்வரை ஒரு வித பதட்டம் என்னை ஆட்கொள்வதால் பல தடவைகளில் பால் பொங்கி பால் பாத்திரம் எரிந்து, அடுப்பெல்லாம் அணைந்து ஒரு வேலைக்கு இரு வேலையாகி, எனக்கும் மனைவிக்கும் முறுகல் நிலை தோன்றி, சனிக்கிழமை நாளின் உற்சாகத்தையே கெடுத்துக் கொண்டதுண்டு. ஆதலால், இதனை நான் தவிர்ப்பதுண்டு. தெரிந்தும் மனைவி இன்றைக்கு முரண்டு பிடிக்கிறாளா?

நான் சந்தைக்கு எடுத்துச்செல்லும் பண்டமாற்றுப் பொருட்களை தேடிச் சேகரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். பத்திரிகையை காணவில்லை. தமிழ்ப் படஒளி நாடாப் பிரதிகள் நான்கில் ஒன்று குறைந்திருந்தது. முடிந்தவரை தேடிவிட்டேன். மனைவியைத்தான் துணைக்கழைக்க வேண்டும்.

சமையலறையில் அவன் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தான். பத்திரிகை, ஒளிநாடா பிரதி தேடியும் கிடையாத விடயத்தை மெதுவாக தொடக்கினேன்.

"எந்த அவசரமெண்டாலும் காலையில் வாசிக்கிற ஏதோ ஒன்றுடன் போவீங்களே அங்க பார்த்தீங்களா?" என்றாள் வெடுக்குடன் மனைவி.

அப்போதுதான் எனக்க உறைத்தது.

ஓடிச்சென்று கழிப்பறையை பார்த்தேன் அங்கு இருந்தது. ஒளி நாடாவையும் நான் தேடிய இடத்தில் இருந்தே எடுத்துத் தந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com



இப்படித்தான் நான் தேடும் நேரத்தில் அப்பொருட்கள் என் கண்ணில் தட்டுப்படாது. இதற்காய் மனைவியிடம் வார்த்தைகளால் குட்டுப்பட்டிருக்கிறேன். அதுவும் சனிக்கிழமை காலை நேரத்தில் எல்லாப் பொருளுமே எனக்கு உச்சுக் காட்டிவிடும். சந்தை கூடும் நாளான சனிக்கிழமையின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்று பண்டமாற்று. அதாவது கலாசார கொடுக்கல் வாங்கல்.

பல்வேறு தேசத்தார் வந்துறையும் அந்த ஊரில் நாங்கள் ஓர் ஆறு குடும்பத்தாரும் வெளிநாட்டாராய் வசித்து வருகிறோம். எனது குடும்பந்தான் இந்த ஊருக்கு வந்து சேர்ந்த கடைசித் தமிழ்க் குடும்பம். நான் இங்கு வந்து இரண்டு வருடமும் மூன்று மாதமுமாகின்றது. எங்களுக்குப் பின் புதிய வரவாய் தமிழ்க் குடும்பத்தார் எவரும் வந்து சேரவில்லை. ஆனால் வேறு தேசத்தார் அவ்வப்போது வந்து சேர்ந்த வண்ணமே இருக்கின்றனர்.

எனக்கு முன்வந்த ஐந்து குடும்பங்களுள்ளும் மூத்தகுடி எனக் கூறிக்கொள்ளும் குடும்பம் வந்து சேர்ந்து ஆறு வருடமாகின்றது. ஆறுவருட வரலாறு கொண்ட இந்தக் குடும்பங்கள் எவர்க்கும் வேலைவெட்டி கிடையாது. வேலையற்றிருப்பது இந்த ஊரில் பெரிய விடயமுமில்லை.

ஆதலால் எங்களது அக்கறைக்கும் பொழுது போக்கிற்கும் உரிய விடயமாய் கலாசாரத்தை பேணுதல், அதற்கு மெருகேற்றுதல், அச்சொட்டுத் தவறாமல் அதனை கைக்கொள்ளுதல் என்பன அமைந்து போனது. தொலைதூரத்தில் இருந்து தமிழ்ப்பட ஒளிநாடாக்களை வரவழைத்து அதனை பரிமாற்றம் செய்து கண்டுகளிப்பது முக்கியமான கலாசார கடமையாக எங்களுக்கு இருந்துவந்தது. இதில் இரு குடும்பத்தார் ஆளுக்கொரு தமிழ்ப் பத்திரிகையை வருவித்து தங்களுக்குள் பரிமாற்றம் செய்து கொள்வதுமுண்டு. நான் தமிழ்ப் பத்திரிகையுடன் சஞ்சிகைகளையும் வரவழைத்து படிப்பதன் மூலம் ஆறு குடும்பத்தாருள்ளும் ஓரங்குலம் உயரமாக என்னைக் காட்டிக்கொண்டேன்.

கடந்தவார சந்தைச் சந்திப்பில் வாங்கிவந்த பண்டமாற்று பொருட்கள் அனைத்தையும் எடுத்து சந்தைக்கு கொண்டு செல்லும் உருளும் சில்லுப் பொருத்திய இழுவைப் பைக்குள் வைத்துக் கொண்டேன்.

முதல் சுற்றுப் பயணம் என்னுடையது. இரண்டாவது சுற்றில்தான் குடும்பத்தார் வந்து சேர்வர். அதற்கு நேரமிருக்கின்றது. நான் இழுவைப் பையுடன் இறங்கினேன்.

காலை எட்டு மணிதான் நான் வழமையாக இறங்கும் நேரம். வெளியில் வந்துவிட்டேன்.

வெளியை நிறைத்திருந்தது கைத்தட்டுத் தாளத்துடன் கூடிய கூட்டிசைப்பாடல். இசையின் அடிநாதம் கூக்குரல் என்றாலும் பொருந்தும். எனக்கு இப்போதெல்லாம் மிகப் பரிச்சயமாகிவிட்ட பாடல் இது.

"நாங்கள் பறவையை போன்றவர். எல்லைகள் இன்றியே பறப்பவர் நாங்கள்"

அவர்கள் பாடுவது இந்தப் பாடலாகவும் இருக்கலாம். அவர்களின் பல பாடல்களின் மெட்டு ஒத்த தன்மை கொண்டவை. தெருவோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனம் ஒன்றைச் சுற்றி நின்றபடி அவர்கள் இசைக்கின்றார்கள்.

அவர்களில் பலர் எனக்கு பரிச்சயமானவர்கள். அடிக்கடி சந்தித்து மரியாதை வணக்கம் தெரிவித்துக் கொள்பவர்கள். என் அயலவர்கள், இவர்களின் அறிமுகத்திலும் ஒரு கதை உண்டு. நான் எனது குடும்பத்துடன் மத்தியதரைக் கடலோரமுள்ள இந்த அகதிகள் பராமரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்பட்டபோது ஒரு வகை அச்சம் மனதில் பரவி இருந்தது. ஆனாலும் வதிவிடமில்லா அலைச்சலுக்கு ஒரு தாவாரம் கிடைத்ததே என்ற திருப்தியும் பயத்துடன் கூடவே இணைந்திருந்தது. காணும் மனிதரெல்லாம் கரடுமுரடானவர்கள் போல் தென்பட்டனர். சமூக உதவிப் பணியாளர்கள்தான் நம்பிக்கைக்கு உரியவர்களாகப்பட்டனர்.

எங்களுக்கான நிர்வாகப் பதிவு வேலைகள் நடைபெற்ற போதில்தான், வங்கி கணக்கை திறப்பதற்காக வங்கிக் கிளையொன்றுக்கு சமூக உதவிப் பணியாளர்கள் எங்களை அழைத்துச் சென்றனர்.

இந்நாட்டின் மொழியை தெளிவுற அறியாதிருந்த எனக்கு, வங்கியாளருக்கும் சமூக உதவியாளருக்கும் இடையே நடந்த உரையாடலை புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனாலும் வங்கியாளர் மறுப்பு தெரிவித்ததும், உரையாடல் சூடாக மாறியதும், பின்னர் சம நிலையை அடைந்ததும் உய்த்துணரமுடிந்தது. ஒருவாறாய் வங்கி வேலைகள் முடிந்து திரும்பிக் கொண்டிருக்கையில்தான் சமூக உதவி பணியாளர் நடந்தவை பற்றி விபரித்தார். அவரது குரலில் பாவனையில் கவலை தொனித்தது.

"உங்களுக்கும், இங்குள்ள நாடோடிகளுக்கும் தோற்ற ஒற்றுமை இருக்குத்தானே. வங்கியாளன் உங்களையும் நாடோடிகள்தான் என நினைத்து கணக்குத் திறக்க மறுத்துவிட்டார். நீங்கள் அகதி இலங்கையர் என்று விளக்கமளித்தபின்தான் சம்மதித்தான். ஆனால் நாடோடிகள் இந்நாட்டு சமூகப் பிரிவினராக அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டனர். பாருங்கள் இந்த வங்கியாளனை...? நாடோடிகள் இங்கு வந்து பல நூற்றாண்டுகளாகின்றன. எங்கள் சமூகம் அவர்களை தீண்டாதவராய் ஒதுக்கித்தான் வைத்துள்ளது."

சட்டென பாறாங்கல்லொன்றில் முகம் மோதி சிதறியது. நான் சமாளித்துக் கொண்டேன்.

அன்றைக்கே என் மூதாதையரை இவர்களில் அடையாளம் காணலாமோ என்னும் உணர்வு என்னுள் உறுத்தத் தொடங்கியது.

இப்போது இதோ என்முன் பாடிக்கொண்டிருக்கின்றார்களே அவர்களின் தோள்வரை புரளும் சுருள் சுருளான தலைமயிரை பின்னிருந்து பார்க்கையில் ஊரில் நாட்டுக் கூத்து அண்ணாவிதான் கண்முன் வருகின்றார்.

எனது தாய்மாமனும் ஒரு அண்ணாவிதான். பனையில் இருந்து இறக்கிய புதுக் கள்ளை பருகியபடியே 'ஞான சவுந்தரி' கூத்தில் துயர்மிகு பாடலொன்றை இசைக்கும் இழுப்பில் என் நெஞ்சு பதறும். நிசப்தம் சூழும் சாமப்பொழுதினில் விவிலியத்திலுள்ள புலம்பல் பகுதியை பெருங்குரலெடுத்து ஓதும் பொழுதினில் அயலெங்கும் நெகிழ்ந்து கண்ணீர் உகுக்கும். இந்த நாடோடிகளின் பாடலிலும் அதே சாயல்தான். சாயலல்ல; அது ஆறா



படிப்பகம்

www.padippakam.com



காயம், சொல்லி மாளாத துன்பம்.

ஊரூராய், நாடு நாடாய், கண்டம் கண்டமாய் துரத்தியடிக்கப்பட்ட முடிவுறாத அலைச்சலின் கதைகள் அவை. உலகத்தாரால் கைவிடப்பட்டோ ரின் அபயக்குரல் அது. ஏரோது மன்னனின் ஆணைக்கு பயந்து, வயிற்றில் நிறைமாத குழந்தை யுடன் கன்னி மேரி அலைந்தபோது, இன்று நாடோடிகளென அறியப்பட்டோரின் மூதாதைய ரிடம் அடைக்கலம் கேட்கிறாள். அவர்கள் மறுத் துவிடுகின்றனர். "அலைந்து திரிவீர்" என அவள் சாபமிடுகின்றாள். சாபம் பலவிதமாகி முடிவில் லாமல் நீள்கின்றது. அப்படியென நம்புகிறார்கள். அவர்கள் பாடுகின்றார்கள்.

நானும் நாடோடியாகினேனாகில் எனக்கிடப் பட்ட சாபம் யாதெனில்....?

சொந்த மொழி பேசியோனுக்கே 'கள்ளத் தோணி' எனப் பட்டம் சூட்டி காட்டிக்கொடுத்த சாபம் சூளுதோ?

"வணக்கம் நலமா...?" றொட்டிசோ கை கொடுக் கின்றார். என் சுற்றாடலில் வதியும் நாடோடிக ளின் பிரதிநிதி அவர். "வணக்கம்..... வணக்கம்.... யாரேனும் புதிதாக வந்துள்ளார்களா" என்கிறேன் நான்.

"எங்கள் குடும்ப உறுப்பினர் சிலர் கடந்த கோடையில் புறப்பட்டவர்கள். இந்த இளவேனில் தொடக்கத்தில் நலமே திரும்பி இருக்கின்றனர்.." என்கிறார் றொட்டிசோ.

பயணமாகி யார் வரும் போதும், புறப்படும் போதும் இப்படித்தான் பாடல் இசையுடன் உரு குகின்றார்கள். இதற்கு கால நேரம் எதுவும் கிடை யாது.

எப்போதும் கூட்டமாகவே தென்படும் இவர் கள் எப்போது சாப்பிடுவர், எப்போது உறங்குவர் என்பது விநோதமாகவே எனக்கு இருக்கும். றொட் டிசோ என்னை விடவும் பல வயதுகள் மூத்தவர். ஆனால் உற்சாகமும், உல்லாசமும் கொண்டவர். வசீகரக் கிழவன். றொட்டிசோ தன் சகாக்களுக்கு என்னை அறிமுகம் செய்யும்போது நம்ம சகோ தரர் என்றே எப்போதும் கூறுவார். என்னிடம் பேசும் போது நகைச் சுவையாக கூறுவார் "நீங்கள் இந்தியாவின் காலில் இருந்து வந்தவர்கள், நாங்கள் இந்தியாவின் தலையில் இருந்து வந்தவர்கள். நாங்கள் முந்தியவர்கள் - நீங்கள் பிந்தியவர்கள்."

முதல் தடவை இதனை அவர் கூறியபோது என் னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

"எகிப்து வரைக்கும்தான் சிலர் எங்கள் வர லாற்றை தேடுகின்றார்கள். ஆனால் இப்போதெல் லாம் எங்கள் வரலாறுதான் பாலைவனம் வரைக் கும் நீள்கின்றது. அதுவும் இந்திய நாட்டுக்காரர் தான் கண்டுபிடித்தார்கள். அங்கு உள்ள பாட்டும், இசையும், எங்க மாதிரியே இருக்கும். படிம்பிடித் துக் கொண்டுவந்து காட்டினார்கள். பின்பு எங்கள் பாட்டையும் படமபிடித்து இணைத்துள்ளார்கள். எந்த வித்தியாசமும் இல்லை.

எங்களை 'கலே' என்றும் அழைப்பதுண்டு, 'கல் தேஷ்' என்று எங்களில் ஒரு பிரிவுண்டு. சில வேளை சிந்து நதிக்குள்ளாக புதையுண்டது உங்க ளதும், எங்களதும் தேசமாக இருக்கலாம். ஆனால் இன்றைக்கு தேசம் என்று ஒன்று எங்களுக்கு இல்லை. நாங்கள் எங்கேயும் இருக்கலாம். ஆனால் உலகில் நாங்கள் ஒரு தனிச் சமூகம்"

என அவர் உணர்ச்சிபடக் கூறியது அவர்களை காணும்போதெல்லாம் என் காதுள் மீள ஒலிக்கும்.

றொட்டிசோவிடமும், மற்றவர்களிடமும் விடை பெற்றுக் கொண்டு சந்தையை நோக்கி திரும்புகின் றேன்.

இளவேனிற்கால வனப்பிற்கு தன்னை ஆரவா ரமின்றி தயார்ப்படுத்துகிறது இயற்கை.

கோடை நெருங்கிவர பெரும்பான்மையினர் பயணமாகிவிடுவர். அதிலும் இந்த நாடோடிகள் ஒருவர் கூட இரார். இந்த ஊரே வெறிச்சோடி விடும். கூடும் சந்தையிலும் பொலிவிருக்காது. ஏனோ தானோவென சிலர் கடைகளை விரிப்பர். முதன் முதல் இந்த சனிக்கிழமை சந்தையை காண நேர்ந்தபோது அதன் அமர்க்களம் என்னை ஈர்த் துக்கொண்டது. ஒரு திருவிழாக்கால கடைத்தெரு வின் சாயல் அதில் இருந்தது.

நாங்கள் வருவதற்கும் ஒரு ஒன்றரை வருட இடைவெளியில் முன்வந்து சேர்ந்த இளந்தம்பதியி னர்தான் இவ்வூர் நிலவரங்களை எமக்கு அறியத் தந்தனர்.

தங்களது ஒருவயது நிறையாத குழந்தையை தள்ளு வண்டியில் வைத்து உருட்டிய படியே இச் சந்தைக்கு அழைத்து வந்தனர். அவர்கள் இத்தா லியில் வசித்த பின் அங்குள்ள அகதிகள் பரா மரிப்பு சரிவராதது என உணர்ந்ததால் வயிற்றில் குழந்தையுடன் எல்லை கடந்து வந்து சேர்ந்தவர்கள்.

அவர்கள் தான் இங்குள்ள மலிவுவிலைக் கடை கள், சமூக சேவை நிலையங்கள் என்பவற்றை இடம் காட்டி விட்டவர்கள். அந்த வகையில்தான் இந்த சந்தைக்கும் அழைத்து வந்தனர்.

எனது மனைவி பொட்டு வைத்திருந்தாள். சந் தையை நெருங்கி கொண்டிருந்தபோது சிறுவர்க ளும், பெண்களுமான ஒரு கும்பல் எங்களை மொய்த்தது. எதிர்பாராத சுற்றி வளைப்பினால் நாங்கள் சற்று மிரண்டுபோனோம். ஆனால் அவர்கள் ஒருவகை நேசத்துடன்தான் விசாரித்தார் கள். நானும் மனைவியும் எதுவும் பேசவில்லை. அழைத்து வந்த இளம் தம்பதியினர்தான் பதிலளித் தனர். "பொட்டு வைத்திருக்கிறீர்களே நீங்கள் இந் தியரா? ஒரு பாட்டுப் பாடுங்களேன்...?" என்பது தான் அவர்களது வேண்டுகோள். இவ்வளவு தானா என்பது போல் ஆகிவிட்டது எங்களுக்கு. நாங்கள் இலங்கையர் என்றதும் அவர்களும் ஏமாற்றத்துடன் திரும்பிவிட்டனர். "இதுகளோட சகவாசம் வைக் கக் கூடாது. இதுகள் இந்நாட்டினரில்லை. இதுகள் நாடோடிகள்."

எங்களை அழைத்து வந்தவர் இந்த விளக்கத்தை கூறியபோது அவர்களுக்காய் ஒரு பாட்டுப் பாடி இருக்கலாம் போல்பட்டது. நான் சந்தையை அடைந்து விட்டேன். சத்த சந்தடியில் சந்தை மூழ் கிக் கிடந்தது.

ஒவ்வொரு காய்கறியின் மீதும், அதன் பூர்வீகம், அதன் விலை எழுதப்பட்டிருந்தது.

பெரு ஆலைக் கழிவுகளான துணிமணிகள், பாத்திரங்கள் மலிவு விலையில் குவிக்கப்பட்டிருந் தன. பாவித்த பழைய ஆடைகள் குப்பையாய் இறைத்து கிடந்தன. றேகே, ராய், ராக், ஷாப், ஒலி



படிப்பகம்

www.padippakam.com



நாடாக்கள் விற்பனைக்காய் கூவி இரைந்து கொண்டிருந்தன.

மொறோக் - அல்ஜீரி போன்ற வட ஆபிரிக்க அரேபியரின் விருப்பங்கள், தேவைகளுக்கேற்ற கடைகள், ஆபிரிக்க நீக்ரோக்களின் விருப்பங்கள், தேவைகளுக்கேற்ற கடைகள் என நிறைந்திருந்தன.

சரிகையும், மினுக்கு முலாமும் கொண்ட துணி வகைகளை முக்காடாக அரேபிய பெண்கள் அள்ளிக்கொண்டிருந்தனர்.

சந்தைக் காற்றை ஆவல் தீர இழுத்துக் கொள்கிறேன். எதிரே 'பாயிக்' தம்பதியினர் வந்து கொண்டிருந்தனர் மலர்ந்த முகத்துடன். காலை வணக்கம் தெரிவித்த அவர்கள் வேலை கிடைத்ததா?" என்ற மரபான கேள்வியை கேட்டனர். வழமையான 'இல்லை' பதிலையே நானும் சொன்னேன். பொஸ்னியா முஸ்லிம்கள், அவர்கள் மொஸ்ரார் கிராமத்தை இனத் தூய்மையாளர் மொய்த்தபோது இரண்டு குழந்தைகளுடன் தப்பித்து வந்தவர்கள். இவர்கள் கிராமத்தை சேர்ந்த நான்கு குடும்பத்தார் இங்கு வாழ்கின்றனர்.

பாயிக் குடும்பத்தாரும் நாங்களும் ஏறத்தாழ ஒரே கால நேரத்திலே இங்கு வந்து சேர்ந்தவர்கள். நட்பானவர்கள். எங்கள் நன்றிக்குரியவர்கள். இவர்களால் எனது ஏழு வயது மகன் பலத்த அடி காயங்களில் இருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறான்.

பாடசாலை வார விடுமுறை நாளான ஒரு புதன் கிழமை மதிய உணவின் பின் குழந்தைகளுடன் நானும் மனைவியும் கண்ணயர்ந்து விட்டோம். ஏழு வயதான மகன் உறங்க மறுத்துவிட்டான். முன்னறையில் விளையாடிக் கொண்டிருந்தான். பல நாட்களில் இப்படித்தான். கதவு தட்டப்படும் ஓசை கேட்டு திடுக்கிட்டெழுந்தோம். முன்னறையில் மகன் இல்லை. மகனின் விசும்பும் ஒலி வெளியே கேட்டுக் கொண்டிருந்தது. மகனின் கையை பிடித்தபடி பாயிக் நின்றிருந்தார். மகனின் முகம் வீங்கி இருந்தது. எனக்குப் பதட்டம், நாங்கள் தூங்கி விட்ட குற்றம். மனம் குறுகுறுத்தது. பாயிக் உள் வந்தபோதும் உட்கார மறுத்துவிட்டார்.

"தனியே ஏன் விளையாட விட்டீர்கள், விட்டாலும் கவனித்து இருக்க வேண்டாமா? என் வீட்டிற்கு அருகே நடந்ததால் தற்செயலாக காணமுடிந்தது. எனக்கு அந்தப் பையன்களை தெரியும் மோசமானவர்கள். நல்லா அடித்துவிட்டார்கள் போல் தெரிகின்றது பாருங்கள்..."

அவர் சென்றுவிட்டார். எங்கள் மீது இலேசான எரிச்சல். இது எங்கள் பிழைதான்.

பாயிக் சென்றதும் மகன் சத்தமிட்டு விக்கிவிக்கி அழத் தொடங்கினான். அவனது தொடையில் காயங்கள் இருந்தன. "என்னைப் பன்றி என்றார்கள். என் கால்சட்டையை கழற்றி குஞ்சாமணியை பார்த்தார்கள். பின்பு என்னை கம்புகளால் அடித்தார்கள். அவங்க நாலு பேர். பெரிய பையன்கள் நான் ஓட அவர்கள் விரட்டி பிடித்தார்கள். நாடோடி நாயே எங்களிடத்தில் ஏன் விளையாட வந்தாய் என்று ஏசினார்கள். முகத்தில் துப்பினார்கள். பாயிக் மாமா சத்தம் போடவே ஓடிவிட்டான்கள்" என்றான் மகன். அவனின் குரலில் நடுக்கம் இருந்தது. அவனைத் தேற்றி முகமெல்லாம் கழுவி கீறல் காயங்களுக்கு மருந்திட்டோம். எனக்கு ஆத்திரமும் அழுகையுமாக வந்தது. மனைவி மகனைக் கட்டியணைத்து கண்ணீர் உகுத்தபடி இருந்தாள்.

என் சகநாட்டவர் யாரையும் காணவில்லை. சந்தை சற்று விரிவானது. பெரிய திடல் அது. மற்ற நாட்களில் வாகனங்கள் நிறுத்துமிடமாகவும், வயதானவர்களின் குண்டுருட்டு விளையாட்டு மைதானமாகவும் உள்ள அப்பகுதி சனிக்கிழமைகளில் சந்தை கூடும் இடமாக மாறிவிடுகின்றது. சல்மான் வணக்கம் சொன்னார். ஏழு பிள்ளைகள் புடைசூழ மனைவியுடன் வந்திருந்தார். கத்தோலிக்க துருக்கியர்கள் இவர்கள். துருக்கியில் கத்தோலிக்கர்கள் விரட்டப்படுகின்றார்கள். தாங்கள் தங்கள் பூர்வீகமான இரு வீட்டையும், பழத்தோட்டத்தையும் விட்டு விட்டு வந்ததாக எந்தக் கதையிலும் ஒரு தடவை கூறுவார். இவரது குடும்பக் கிளையொன்றே இங்கே வதிகின்றது. அவர்தான் கூறினார். "உங்கள் உறவினரெல்லாம் பஸ்தரிப்பிடத்திற்கு அருகே கூடியுள்ளார்கள். ராணி அழுதுகொண்டிருக்கிறாள். ஏதும் துக்க செய்தியாக இருக்கலாம். நான் அங்கே செல்லவில்லை நீங்கள் சந்திக்கவில்லையா?" என்றார்.

நான் சல்மானுக்கு நன்றி சொல்லிவிட்டு புறப்பட்டேன். அட என்ன இந்த சனிக்கிழமை இப்படி.

பிரேம் - ராணி இளம் தம்பதியினர். நாங்கள் முதலாக இங்கே வந்தபோது அகதிகள் பராமரிப்பு நிலையத்தில் எங்களை வரவேற்று, உபசரித்தார்கள். நாங்கள் வரும்போது ஒரு குழந்தை. தற்போது இன்னொன்று வயிற்றில் உருவாகி இருந்தது. பிரேம் - ராணி குடும்பத்தினர் இன்னமும் அகதியாக ஏற்கப்படவில்லை. அவர்களது விண்ணப்பம் பரிசீலணையில்தான் உள்ளது. முதல் விசாரணையில் இவர்களின் நியாயங்கள் ஏற்கப்படவில்லை. தற்போது மேன் முறையீடு செய்துவிட்டு முடிவிற்காக காத்திருந்தார்கள். இது இறுதியானது. அவர்கள் முடிவை நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தார்கள்.

என்னைத் தவிர்த்து மற்றைய குடும்பத்தார் அனைவரும் குழுமி நின்றனர். ராணி தலையை கவிழ்த்தபடி ஒரு இருக்கையில் அமர்ந்திருந்தாள். பிரேம் கையை கட்டியபடி கவலையுடன் நின்று கொண்டிருந்தார். குழந்தை சற்றுத் தள்ளி மற்றக் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தது.

என்னைக் கண்டதும் ராணி சற்று உரமாக கேவிக் கேவி அழத்தொடங்கினாள். எனக்கு மனசைப் பிசைந்தது. இழவு வீட்டிற்கு செல்லும் போது ஒவ்வொருவரைக் காணும் போதும் ஒப்பாரி சொல்லி அழுகை கூடுமே அப்படி இருந்தது நிலைமை. "நேற்று ராத்திரிதான் வந்து சொன்னார்கள் எங்கள் மேன் முறையீடு நிராகரிக்கப்பட்டு விட்டதாம். வரும் திங்களுக்குப் பின் இங்கு இருக்க இயலாதாம். இரா முழுதும் தூக்கமில்லை. செய்தி கேட்டதில் இருந்து ராணி அழுதபடிதான். தொலைபேசியிலும் யாருடனும் தொடர்பு கொள்ள முடியவில்லை. இன்றைக்கு இந்த சந்தையில சந்திப்பம் தானே என்று...."

பிரேமின் குரல் தளதளத்து வார்த்தைகள் வெளியே வராமல் தடைப்பட்டன.

"இதுதான் எங்கட கடைசிச் சந்தையோ....?"



படிப்பகம்

www.padippakam.com



ராணி தலையை நிமிர்த்தி கேட்கிறாள்.

எல்லோரும் சந்தைப் பக்கம் பார்வையை ஓடவிடுகின்றோம். எங்க வீடுகளில் நிக்கலாம் தானே.... சமாதானம் கூற முயன்றார்.

"திங்கள்கிழமையின் பின்னால் இவர்கள் சட்டவிரோத குடியிருப்பாளர்கள். பொலிஸ் வந்து கைதுசெய்ய வாய்ப்புண்டு..." அந்தோனி பரமானந்திற்கு பதில் சொன்னாரா, உள்ளதைத் தெரிவித்தாரா தெரியவில்லை.

"இப்ப உங்கட வீட்டில நிக்கப்போறமெண்டே சொன்னனாங்க...." ராணி வெடித்தாள்.

பிரேம் ராணியை கடிந்து கொண்டான். உள்ள நிலைமைதானே போன வாரம் நம்மட கண்ணுக்கு முன்னாலதானே சோமாலி குடும்பத்தை பொலிஸ் கொண்டுபோனது.

"எல்லாம் சரிவரும், வீடுதரப் போறாங்கள் என்று ஒரு வீட்டிற்கு தேவையான சாமான்கள் எல்லாத்தையுமல்லோ வாங்கிப்போட்டு அந்த நம்பிக்கையிலதானே வயிற்றில குழந்தையை வளரவிட்டனான்." ராணி கேவிக் கேவிப் புலம்பினாள்.

எனக்கு இருப்புக் கொள்ளவில்லை.

"ஊர் உறவையே விட்டு தொலைச்ச நாங்கள் இங்க இல்லையெண்டால் இன்னொரு இடம் மாறுறது பிரச்சினையே எல்லாத்துக்கும் தயாராய் இருக்கோணும். நடக்கிறதைப் பாருங்கள் என்றேன் நான்.

"நாடோடிகள் மாதிரியல்லோ ஆகிப்போச்சு. இது இத்தாலியில் உண்டாகியது; இங்கு பிறந்தது. இப்ப ஒன்று இங்க உருவாகி இருக்கு, எங்க பிறக்க போகுதோ?" பிரேமின் கண்களில் இருந்தும் நீர் வழிந்தது. துடைத்துக் கொண்டார்.

"அம்மா.... சந்தை.... அப்பா..." குழந்தை சிணுங்கிக் கொண்டிருந்தாள். எங்களுடன் பழக்கமுள்ள ஏனைய நாட்டவரும் செய்தி அறிந்து எங்களை குழுமி நிற்கின்றனர்.

கவலை எல்லோரையும் சூழ்ந்திருக்கின்றது. எல்லோருக்கும் தெரியும் பிரேமும், ராணியும் இந்த ஊரை விட்டும் நாட்டை விட்டும் வெளியேறி ஆக வேண்டியவர்கள் என்பது.

சந்தை தன்பாட்டில் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

இன்றைய நாள் குதூகலத்தை நாங்கள் இழந்து விட்டோம். இன்னும் சில மணி நேரத்தில் கடைகள் கட்டப்பட்டுவிடும். சந்தையும் கலைந்துவிடும்.

பின்னர் அவர்கள் இருப்பிடத்திற்கு வந்து சந்திப்பதாய் கூறி ஒவ்வொருவராய் கழரத் தொடங்குகின்றனர். பிரேமும், ராணியும் தம் குழந்தைகளுடன் சுமக்கக்கூடிய பாரங்களை மூட்டை முடிச்சுக்களாக்க கிளம்புகின்றனர். நான் சந்தைக் கடமைகள் எதையும் நிறைவேற்றாமலேயே வீட்டிற்குத் திரும்புகின்றேன்.

இன்னமும் நாடோடிகள் சிலர் பாடிக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் பயணங்கள் பாடல்களாகி பலநூறு ஆண்டுகள் ஆகிவிட்டன.

இனி எங்களின் பயணங்களும் பாடல்களாகும். ❑

THANA & CO

SOLICITORS

ADMINISTRATORS OF OATHS

T T Singham Attorney-at-Law

We specilise in

■ IMMIGRATION ■ CRIME ■ CONVEYANCING
■ MATRIMONIAL■ STATE BENEFITS ■ TRAFFIC OFFENCES
■ ADVICE & ASSISTANTANCE AT POLICE STATION

Legal Aid Work Undertaken

140 Park Lane, Tottenham, London N17 0JP
Tel: 0181-808 1218 Fax: 0181-808 1240
Emergency Mobile 0976 660 635



படிப்பகம்

www.padippakam.com





# வேலை இழந்து...

அமுதன்

சைசே! மரணப்பசி! விடிய கபேயும் குடிக்காமல் 'ஆர்பைற்சம்றக்கு' (Arbeitsamt) ஓடினேன், நான்தான் இன்று முதல் ஆள் என்ற நினைப்புடன். ஏற்கனவே கூட்டம். பெண்கள் அதிகம்! நீண்ட காலமாய் வேலையிழந்து Stempleக்கு வருகிறார்கள் போலும். அவர்களின் பேச்சில் தெரிந்தது.

எதுக்கும் றூமுக்குப் போவம். கடிதம் ஏதாயினும் வந்திருக்கா பார்ப்பம். பிறகு பேப்பர் எடுத்து வேலை தேடுவம். வேலை தேடுறது என்ன இண்டைக்குதான் முதல் நாளே. இரண்டு மாதமாக இதுதான் வேலை. வேலை கிடைக்குமோ இல்லையோ ஆர்பைற்சம்றகாரன் தாற வேலை தேடினது எண்ட அத்தாட்சிக்கான போமாவது நிரம்பும்.

மீண்டும் புதிதாய் இளவேனில். வின்ரர் காலத்தில் உறங்கிக் கிடந்த ஓடை என்னவாய் துள்ளி ஓடுகிறது. இயற்கை



படிப்பகம்

www.padippakam.com



கொஞ்சமும் வஞ்சகம் செய்யாமல் அழகைக் கொட்டி வைத்திருக்கிறது இந்தக் குறிஞ்சியில். எதையும் ரசிப்பதற்கு ஒரு மனநிலை தேவை. வேலை இழந்து விசரன் மாதிரி அலைகிற எனக்கு??

'தூணர் சே'இல் (Thuner See) குளித்து எழும் சூரியன் எப்போதும் தூங்கி வழியும் அல்ப்சின் சிகரங்களைப் பார்த்து நகைத்தான். இந்த நகைப்பு எனக்கும்தானோ?

சூரியன் பிள்ள நித்திரையால எழும்ப முதலே நான் ஆர்பைற்சம்ற்க்குப் போனனான். அந்த ஆர்பைற்சம்ற்காரன் என்னைக் கேட்ட மாதிரி ஒரு சுவிஸ்காரனை கேட்டிருப்பானோ. அவன் கத்துற கத்தில வேர்த்துக் கொட்ட 'இன்சூல்டிக்கம்' சொல்லியிருப்பான்.

வங்கியில் கொஞ்சக் காசும் இல்லையோ! இதுவரை உழைத்த காசு எல்லாவற்றையும் என்ன செய்துவிட்டாய்?

அது உனக்கு அவசியமற்றது. வேலையிழந்தால் உதவி - சம்பளம் - பெறுவதற்காக நான் காப்புறுதி செய்துள்ளேன். நீ உன்னுடைய பணத்தை எனக்குத் தரவில்லை. இப்படி நீ என்னிடம் கேட்க உனக்கு எந்த உரிமையுமில்லை.

ஒரு சுவிஸ்காரன் சொல்லும் அதே பதிலைத்தான் நானும் சொல்ல நினைத்தேன். விட்டானா ஆர்பைற்சம்ற காரன். நான் கேட்டது, கேட்க நினைத்தது எல்லாவற்றுக்கும் அவனிடம் பதில் ஏற்கனவே தயாராக இருந்தது. 'ஆத்தியோ' சொல்லி வழியனுப்பிவிட்டான் என்னை.

இந்தச் சமூகத்தில் வேலையற்று இருப்பதும் விசர் ஆஸ்பத்திரியில் இருப்பதும் ஒன்று. சமூகம் அந்தளவு வேகமாய் இயங்கிக் கொண்டிருக்கிறது. கண்மூடித் திறக்க இரவு பகல் புரண்டு எழும்; பருவங்கள் பாய்ந்து பாய்ந்து போகும்.

இண்டைய பொழுதும் சைசே! கைச்செலவுக்கும் காசில்லை என்று சொல்லப் போய், அந்தப் பேய் விசர்க் கதை கதைத்தது. உண்மையில் இந்தக் கிழமைக்கு பொதுவாக என்னிடம் இருப்பது 17Fr 60Rp. - Migros இல் அப்பிள் கேக்கும், ஐஸ் ரீயும் (Ice Tee) வாங்கியது போக.

ஆர்பைற்சம்ற்க்கு போனது ஒருவகையில் மனசுக்கு ஆறுதல். அங்கே Kurt Mullerஐக் கண்டேன். அதே இனிமையான பேச்சு. எளிமையான தோற்றம். இரண்டு வருடமாய் அவரும் வேலை இல்லாமல் நிற்கிறாராம். அவரும் நீண்ட காலத்தின் பின்பு என்னைச் சந்திப்பதால் ஆசுவாசமாய் கதைத்துக் கொண்டார்.

நீங்கள் இந்த நாட்டவர்! வேலையில்லாமல் சந்திக்கும் பிரச்சினைகளோடு ஒப்பிடும்போது Auslander ஆகிய எங்களுக்கு மிகவும் கஸ்டம்.

உண்மைதான்! இருந்தாலும் இன்றைய பொருளாதார அமைப்பு உனக்கும் எனக்குமிடையில் இன்னும் நெருக்கத்தை உருவாக்குகிறது. ஏன்! இன்றைய சந்தைப் பொருளாதார நாயகர்களின் கனவுக்கன்னியே ஆசியாதானே. நீ மிகையாக பயப்பிடாதே - Kurt தனக்கே உரிய பாணியில்.

போன வருடத்தில் வெளிநாட்டவர்களின் சுவிசிற்கான படையெடுப்பு 1995ஐ விட அதிகமாமே.

எத்தனை பேர்? 38 பேர் மட்டும்.

சமூகத்தில் எழும் பிரச்சினைகளை ஆழமாகப் பார்க்க முடியாதவர்கள் தங்களின் அரசியலுக்காய் போடும் கூச்சல்கள் இவை.

எனக்கு மண்டை கனத்தது. ஏன்ராப்பா வாயைக் குடுத்தன்.

Kurt தன்னுடைய கருத்தை நான் எந்தளவு புரிந்து கொண்டேன் என்பதை என் 'தலை சொறியலில்' விளங்கினாரோ என்னவோ. எமது நாட்டு நிலைமைகள் பற்றி கதைக்கத் தொடங்கினார். நாட்டில் உள்ள அகதிகள் படும் துன்பங்களுக்காய் வருந்துவதாகக் கூறினார்.

அந்தாள் சொல்லியே கடலிலே அகதிகள் செத்த விசயத்தையும் நான் அறிஞ்சன். மீண்டும் சந்திப்பதாக விடைபெற்ற Kurt, மறக்காமல் தனது 'விசிற்றிங் கார்ட்டை' தந்து போனார்.

Migros இல் வாங்கிய அப்பிள் கேக் என் பசிக்கு தேன்! அஸ்ரே பால்!! ஒரே மூச்சில் இழுத்தாயிற்று. வீதியில் வாகனங்கள் முண்டியடித்தன. அவன் அவனுக்கு அவனது அலுவல் முக்கியம். எனக்கு வேலை தேடுவது முக்கியம். இந்த சமூகத்தில் வேலையில்லாத மனிதன் ஊனமுற்றவன். நான்.?

நான் என்றால் கணபதிப்பிள்ளை புவனேந்திரன். ஐயா அம்மா ஆசையுடன் சூட்டிய நாமம் எங்கே? இன்று நான் கார்த்திகேசு பூலோகநாதன். பிறந்த ஆண்டு திகதி எல்லாம் இங்கே எனக்காக நானே தேர்வுசெய்தேன். இந்த நாட்டில் எனக்கான அடையாளம் 'தமீலன்'.

இந்த இரண்டு மாதத்தில் எத்தனை வேலைக்கு எழுதிப் போட்டேன். எத்தனை இடங்களில் ஏறி இறங்கியாயிற்று, வேலை கேட்டு. 'சைசே' அந்தரத்துக்கு 'றெஸ்ரோறன்ரில்' கபே குடிக்கக் கூட போகேலாமக் கிடக்குது. வாசல்ல வைச்சு Keine Arbeit என்கிறார்கள்.

நொருங்கிப் போன ஒரு மனிதன் தன்னை மீண்டும் ஒழுங்குபடுத்த தன் நேசிப்புக்குரியவர்களைத் தேடுவது ஒன்றும் வியப்பல்ல. இந்தக் கிழமை பூராவும்... என் சிந்தனைப் பரப்பில் இரண்டு முகங்கள். ஒன்று பரம். அவன் செத்தே போனான். இன்னொன்று, ஊர்சுலா. அவளுக்கும் எனக்குமான உறவை நான்தான் முறித்தேன்.

அங்கோலா நாட்டிலிருந்து வந்தவனாம் ரகீம். ரகீமும் என் நண்பன்! என்னைப்போல அரசியல் அகதியாய் இங்கே வந்தவன். ஊர்சுலா அறிமுகப்படுத்தியிருந்தால் பரவாயில்லை. எனக்கு முன்னாலே வைத்து அவனுக்கு முத்தமிட்டாள். எனக்குத் தெரியும், இவள் இந்த சமூகத்துப் பெண். ஆனால் எனக்கு...

ஊர்சுலா. அவள் என்னோடு எவ்வளவோ கதைத்தாள். மூன்று முறை வேலைத்தலத்துக்குக் கூட வந்தாள். தனக்கும் எனக்குமான உறவில் கறை இல்லை என்று அழுதாள். இனி உறவு வேண்டாம் என்ற பதிலைத் தவிர வேறொன்றும் பேச தயாராக இருக்கவில்லை நான். கடைசியாக சந்தித்த நாளில் ஆத்திரத்தோடு கத்தினாள். நீ ஒரு சரியான மாடு. ஊத்தை. மிகப் பெரிய முட்டாள்.

எனக்கு வந்த ஆத்திரத்துக்கு எங்கட பெட்டையளா இருந்திருக்க வேணும்...

இந்தக் கிழமை முழுவதும் வீதியில் நீண்ட பரட்டை கூந்தலுடன் யாரையாவது கண்டால்... அது ஊர்சுலாவாக இருக்காதா. கால்கள் விரையும். ஏன், இப்போது கூட சிக்னலைக் கடக்கும் போது... வீணாய் அந்த பெட்டையிட்ட தேவையில்லாமல் மன்னிப்புக் கேட்டேன்.

வேலையில்லாமல் சும்மா இப்படியே காலம் கழிப்போமானால் நிச்சயம் எனக்கு விசர் பிடிக்கும். நீ வந்த காலத்துக்கு ஒழுங்காய் டொச்சை படிச்சிருந்தாலும் பறவாயில்லை. இப்ப Hilfsarbeiterக்கு வேலை எடுப்பதே கஸ்டம். மூர்த்தி இந்த வார்த்தையை என்னைச் சந்திக்கும் போதெல்லாம் குறைந்தது ஒருமுறையாவது சொல்வான்.

நான் வந்த காலத்துக்கு....

பொலிஸில் விசா கிடைத்த மறுநாளே வேலையும் கிடைத்தது, என் குடும்ப நிலமையை அறிந்த நண்பர் உதவியுடன். பிற்பாடு ஒன்றுக்கு இரண்டு வேலை. 'லீவென்றால் எங்கட சாப்பாடு சாப்பிட, எங்கட பெடியள் இருந்த 'காம்ப்'க்கு - காம்ப் Chefக்கு தெரியாம - களவாய்ப் போய் சாப்பிட்டு, படுத்து... றெட் குறஸில், புறோக்கிண் கவுசில் உடுப்பு வாங்கிப் போட்டு...' இந்தக் கதை எல்லாவற்றையும் மூர்த்தியை இழுத்துப் பிடித்து, இருத்திச் சொல்லவா முடியும்?

பரம்! செத்துப் போன பரம்! அவனை நினைத்தால் இப்போதும் மனசு பாரம். சாப்பிட போய்வந்த காம்பிலதான் அவனைச் சந்தித்தேன். நான் போகும் போதெல்லாம் எந்தவித பிரதி உபகாரமும் எதிர்பாராமல் சாப்பாடு போட்டான். ஒன்றரை



படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்